உ

கணபதி துணை.

# சிவஞானசித்தியார்

சுவபக்கத்துக்குத்

திருக்கைலாசபரம்பரைத்

திருவண்ணாமலையாதீனத்து

## ஞானப்பிரகாசமுனிவர்

இயற்றியருளிய

**வியாக்கியானம்.**

யாழ்ப்பாணம் இணுவில்

## நடராஜஐயரால்

பரிசோதித்து,

## சி - பெருமாள்நாடாரால்

திருப்பற்றூர்:

"சின்னையநாடார் யந்திரசாலை"யில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வஜித்து௵ மகர௴

( Registered CopyRight. )

சிவமயம்.

# உரையாசிரியர் வரலாறு.

சிவரகசியத்தினும், பெரியபுராண முதலிய நூல்களினும் பிரதிபாதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராகிய திருமூலநாயனார் திருவாய்மலர்ந்தருளிய,

மேருநடுநாடி மிக்கிடைபிங்கலை, கூருமிவ்வானினிலங்கைக்குறியுறுஞ்
சாருந்தில்லைவனத்தண்மாமலயத்தூ, ரேறுஞ்சுழுனையிவைசிவபூமியே.

என்னும் திருச்செய்யுளானும், உமாபதிசிவாசாரியர் திருவாய்மலர்ந்தருளிய,

வலங்கைமான்மழுவேந்தான்போற்றும்வாளரவரசைநோக்கி
யலைந்திடும்பிண்டமண்டமவைசமமாதலாலே
யிலங்கைநேரிடைபோமற்றையிலங்குபிங்கலையாநாடி
நலங்கிளரிமயநேர்போநடுவுபோஞ்சுழுனைநாடி.

என்னும் திருச்செய்யுளானும், பிரமாண்டத்தின் இடைநாடியாயும் சிவபூமியாயும், சுந்தரமூர்த்திநாயனார் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிய திராவிட வேதமாகிய தேவாரமேறப்பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணமலை எனப்படும் தக்ஷிணகைலாசம் முதலிய பலபுண்ணிய ஸ்தலங்களையுடையதாயுமுள்ள ஈழமண்டலத்தின் உத்தரபாகத்துள்ள வீணாகானபுரத்திலே, ஸ்ரீ சாலிவாடிநகரத்திலே, கார்காத்த வேளாளருள்ளே முடிதொட்ட வேளாளராய பாண்டிமழவர் குலத்திலே முந்நூறு வருஷங்களுக்கு முன்னே ஓர் சற்புத்திரர் அவதாரமாயினர்.

ஞானப்பிரகாசர் என்னும் நாமதேயமுடைய இவர் பாலிய தசையிலே பூருவ ஜன்ம சிவபூஜா புண்ணிய பலத்தினாலே சிவநேசரோடிணங்கி, தமதுதேசம் விடுத்து, திருப்புகலூரை அடைந்து, ஆங்கெழுந்தருளியிருந்த ஆதிசைவராகிய ஸ்ரீபெரியண்ணசுவாமிக் குருக்களிடத்திலே தீக்ஷாசம்ஸ்காரம்பெற்று, பூலோக கைலாசமாகிய சிதம்பர தலத்தைச் சார்ந்து, திருவருள் வடிவினதாகிய சிவகங்கையிலே படிந்து, நித்திய கன்ம முடித்து, சிவகாமித்தாயார் சன்னிதியிலிருந்து, ஏகாக்கிர சித்தத்தோடு ஸ்ரீ பஞ்சதசாக்ஷரியை நியமமாக நிர்ஜலோப வாசத்தோடு ஜபித்து உபாசித்து, திருவருட் பிரசாதம்பெற்று ஆங்கிருந்து கௌடதேசத்தை எய்தினர்.

அங்கே சம்ஸ்கிருத வித்துவப் பிராமண சந்நியாசி ஒருவர் மாணாக்கர் பலருக்குத் தர்க்க மீமாஞ்ச வேதாந்த சாஸ்திரங்கள் கற்பிப்பது கண்டு, அங்கே அவர் படிக்குந்தோறும் அவற்றைச்

சிரவணஞ் செய்து வருவாராயினர். அங்ஙனம் சிரவணஞ்செய்து வருங்காலத்தில் ஓர் நாள் ஆசிரியர் அவரை விளித்து, "நும் நாமம் யாது? நும் தேயம் யாது? ஈண்டுக் கற்பிப்பன நுமக்கு மனனப்படுகின்றனவா?" என்று வினவியபோது, அவர் உத்தரஞ் செப்பியது கேட்ட ஆசிரியர் அத்தியந்த ஆச்சரியங் கொண்டு, அவர் திறமை அறிந்து அவரைத் தமது மாணாக்கருள்ளே பிரதமமாணாக்கராக்கிக் கற்பித்து வருவாராயினர்.

ஒரு ஸம்வற்சரத்தினுள்ளே எல்லாங் கற்று வல்லராயினமை கண்ட ஆசிரியர் "நீவிர் சாஸ்திரஞ் செய்ய வல்லராயினீர்" என்று சொல்ல, அவரிடத்தில் அநுமதி பெற்றுக்கொண்டு, திருக்கைலாச பரம்பரையிலுள்ள திருவண்ணாமலையாதீனத்தை யடைந்து, ஆங்கே அப்போது எழுந்தருளியிருந்த ஞானதேசிகரிடத்திலே மந்திர காஷாயம்பெற்றுச் சிவாகமப் பொருள்களையெல்லாம் அறிந்தார்.

இந்த ஞானப்பிரகாசமுனிவர் பௌஷ்கராகமவிருத்தி, சிவஞானபோதவிருத்தி, சித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை, பிராசாததீபிகை, அஞ்ஞானவிவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்நம், சிவாகமாதி மாஹாத்மிய சங்கிரகம் என்பவைகளை வடமொழியி லியற்றினர்; தீக்ஷாலக்ஷணம், தத்துவ வியபார விவரணம், அவஸ்தாநிரூபணம், மகாவாக்கிய சங்கிரகணம் முதலியவைகளைச் செய்யுள்களிலே ஒருபிரகாரம் விரித்துச் சிவஞான சித்தியாருக்கு இந்த உரையையும் இயற்றினர்.

அவர் அங்கு நின்றும் சிதம்பர ஸ்தலத்தை அடைந்து வசித்துவருங்காலத்திலே, ஓர்நாள் தமது அன்பருள் ஒருவர் தாம் இருந்த மடத்துக்கடுத்த நிலத்திலே பெருந்தொகைப் பொருளிருப்பது கண்டு தமக்குத் தெரிவிக்க, அவர் அப்பொருள்கொண்டு அவ்விடத்திலே ஓர் பெரிய * திருக்குளமும் அதன்சமீபத்திலே சில மடங்களும் அமைப்பித்துச் சிவ சமாதி நிலையில் இருந்து, ஓர் பங்குனிமாசம் பூசநக்ஷத்திரத்திலே பரிபூரணதசை அடைந்தார்.

☞ சத்தசாட்குண்ணிய பரமபதி சிவபெருமானே எனக்கொண்டு கொலை முதலிய பாவங்களை விடுத்து, இரக்கம் முதலிய புண்ணியங்கள் பூண்டு, குருலக்கணங் குறைவின்றி நிறைந்த சைவாசாரியரை அடைந்து, சமய விசேஷ நிர்வாண தீக்ஷைபெற்று, அவருக்கு அன்பராய்த் தொண்டுபூண் டொழுகும் சைவர்களே இந்தச் சாஸ்திரத்தை அவரிடத்திற் கற்று உய்யு நெறி நாடும் இயல்பினையுடைய ராவார்.

* ஞானப்பிரகாசகுளம்.

திருச்சிற்றம்பலம்.

## உரையாசிரியர் செய்த துதி.

சிவமுறநமக்குமுந்தித் தந்திவத்திரனைச்சிந்தித்
துவமையில்சிவனொப்பில்லா வுமைகுருகுலங்கண்மற்றென்
னிவர்களைவணங்கியின்பச் சிவஞானசித்திக்கேற்ப
நவமுறுமுரையுரைப்பா முன்னுரைநலங்கொளார்க்கே.

திருமறைஞானதேசிகர் ஸ்ரீசிவக்கொழுந்தாசாரியரென்னுமிவர்கள் சிவஞானசித்திக்குச்செய்த உரைகள் விரிந்தபடியினாலே எழுவாய் பயனிலை பொருட்புணர்ச்சி பொள்ளெனத் தோன்றாவாயினுந் தீவிர தீவிரதர புத்திமான்கள் தங்கள் தங்கள் சம்பிரதாயத்துக்கு மாறிச் சில விரோதித்தன் மாத்திரம்நீக்கி நீர்நீக்கிப் பால்கொளும் அன்னம்போலப் பொருள் கொள்வார்களாதலானும் மற்றையோருரைத்த உரைகள் தூரம்போய்ச் சுட்கதர்க்கமாய் முடியுமாதலானும் மந்தமதிகட்கு மயக்கம்போக்கும்பொருட்டுச் சுருக்கமாக ஒருரை சொல்வாமென்பதி தன் பொருள்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சிவஞான சித்தியார்

# சுபக்கம்.

## மூலமும் உரையும்.

---

### பாயிரம்.

இந்நூல் தடையின்றிப் பூரணமாகும் பொருட்டுக் கடவுள்வாழ்த்துச் சொல்லுவாராய் முந்தி விநாயக வணக்கஞ்செய்கின்றார்.

---

### விநாயகர்வணக்கம்.

ஒருகோட்டனிருசெவியன்மும்மதத்த
 னால்வாயைங்கரத்தனாறு
தருகோட்டம்பிறையிதழித்தாழ்சடையான்
 றருமொருவாரணத்தின்றாள்க
ளுருகோட்டன்பொடுவணங்கியோவாதே
 யிரவுபகலுணர்வோர்சிந்தைத்
திருகோட்டுமயன்றிருமால்செல்வமுமொன்
 றோவென்னச்செய்யுந்தேவே.

(இ-ள்). ஒருகோட்டன் = ஒற்றைக் கொம்பினையுடையனும்; இருசெவியன் = இரண்டுகன்னங்களையுடையனும்; மும்மதத்தன் = மூன்று மதசலங்களை யுடையனுமிருக்கின்ற; நால்வாயைங்கரத்தன் = நான்ற வாயினையும் ஐந்துகரங்களையுமுடைய விநாயகனாகிய ; ஆறு தரு கோட்டம்பிறையிதழித் தாழ்சடையான் தருமொரு வாரணத்தின் = (கோட்டந்தருபிறை என்று கூட்டுக) கங்காதேவியையுங் குனிப்பாகிய சந்திரகலையையுங் கொன்றைமாலையையுஞ் சூட்டாசவுடைய பின்றூங்காநின்ற சடையையுடைய சிவனுற்பவிப்பித்த குஞ்சரத்தினது; தாள்கள் = பாதாரவிந்தங்களை; உருகோட்டன்பொடுவணங்கி = மிகுந்த பத்தியோடும்

தாழ்ந்து வணங்குதலாலே அடையப்பட்ட சிவதீக்ஷாவான்களாய்; ஓவாதே=நீங்காதே; இரவுபகல்=அகோராத்திரம்; உணர்வோர்= அந்தப்பாதத் தியான முன்னாகச் சிவத்தியானம் பண்ணுவோருக்கு; சிந்தைத் திருகோட்டும் = (அந்தச் சிவத்தியானத் துவாரத்தினாலே அவருடைய சிற்சத்தியினது விரிந்த அறிவு தொழில்களை மறைத்த மலசத்தியினது வியாபாரத்தைத் தடுத்து அதனாற் பண்ணப்பட்ட) அஞ்ஞானத்தைத் துரத்தும்; அயன் திருமால் செல்வமுமொன்றோ வென்ன=பிரமத்துவம் விஷ்ணுத்துவம் என்னும் ஐசுவரியமும் ஒரு பொருளோ என்ன; செய்யுந்தேவே=(தேவே செய்யுமென்று மாறுக) தேவாந்தன்மையைச்செய்யும் (=முன்னிருந்த சிவத்துவத்தைத்தானே விளக்கித் தனித்தனியவர்களைச் சிவமாகத்தானேபண்ணும்)

முத்திவியத்தி இரண்டு மோக்ஷமென்கையால், திருகோட்டு மென்றதனாற் பாசமுத்தியுஞ், செய்யுந்தேவேயென்றதனாற் சிவத்துவாபி வியத்தியுஞ் சொல்லப்பட்டமையறிக. ஒருகோட்டன் வாரண மென விசேடித்தல் கூடாமையால், ஐங்கரத்தனென்றதனோடு விசேடித்து, ஐங்கரத்தனாகிய வாரணமென்று ரூபகம்பண்ணுக தாள்களென்பது-எழுவாய்; ஓட்டுமென்பதுஞ் செய்யுமென்பதும் பயனிலை. (க)

## சிவவணக்கம்.

ஆதிநடுவந்தமிலா வளவில்சோதி
யருண்ஞானமூர்த்தியா யகிலமீன்ற
மாதினையுமொருபாகத் தடக்கிவானோர்
மகுடசூடாமணியாய் வையம்போற்றப்
பாதிமதியணிபவளச் சடைகடாழப்
படரொளியம்பலத்தாடும் பரனார்பாதத்
தாதுமலிதாமரைகள் சிரத்தேவைத்துத்
தளராதபேரன்பு வளராநிற்பாம்.

(இ-ள்). ஆதி நடு அந்தமிலாவளவில் சோதி யருண்ஞான மூர்த்தியாய்=[ஆய் என்பதைப் பிரித்துச் சோதியாய், அருண்மூர்த்தியாய், ஞானமூர்த்தியாய் என்று மூன்றிடத்துங் கூட்டுக.]

ஆதிநடுவந்த மிலாவளவில்சோதியாய்=(ஆகு பெயராதலால்) உற்பத்தி திதி நாசங்களினுபசாரத்துக்குத் தூரமாய் மனோவாகதீதமாகிய சுத்தசிவசோதியாகிய தனதுமத்திய நிஷ்கள நிருத்தசோதியாய்;

ஆகையால், சகளாதிகாரரென்னுஞ் சதாசிவன் சகளநிஷ்கள போகரென்னும் அநாகதசிவன், நிஷ்கள இலயரென்னும் பரசிவனென்பவர்கட்கதீதமாய்; ஆகையால், மகாப்பிரளயத்திலேதான், யோகவிவேக பாவனையிலேதான், அணுபக்ஷமாகிய பிரமாதி பரசிவாந்தமாகிய அதிட்டானங்களைவிட்டுச் சிவனிடத்திலுன்முகமாய்த் திரும்பிய சம்புபக்ஷமாகிய பிரமா விஷ்ணு ருத்திரன் மகேஸ்வரன் சதாசிவன் பரவிந்து பரநாதம் பராசத்தி பரசிவமென்கிற நவ தத்துவ இலயத்தானமாய், திரும்பச் சகள நிர்த்தம்பண்ணும்படி;

அருண்மூர்த்தியாய்=[மகாமாயா மய மகா சபாபித்தியில் மாந்திரிகனெழுதிய பூதாகாச வடிவாகிய மந்திரலிபியென்னுமிலக்கில் மாந்திரிகனுச்சரிக்கு மந்திரக்கரிவழியால் வந்தக்கினிபோலாவிர்ப்பவித்துத் திவ்வியமந்திரமாகிப் பலன்கொடுக்கும்படி சிவனது சங்கற்பத்தாலுண்டாய்ச் சத்திய சுத்த சம்மேளனமாகிச் சுத்தமாயா புவனவாசிகளாகிய சாரூபிகளுக்குச் சத்தியவடிவாயும், மாந்திரிகனது சங்கற்பத்தாற் கற்பிதசம்மேளனமாகிச் சிவனுக்குக் கற்பிதவடிவாயுமிருக்கும் வாசகமந்திரமாகிய பஞ்சதசாக்ஷரி பஞ்சாக்ஷரமாகித் தனது பரிக்கிரகசத்தியாயிருக்கின்ற வாசகசத்திமய சரீரத்திலாவிர்ப்பவித்து அவினாபூதமாயிருக்கின்ற வாச்சிய மந்திரமாகிய பஞ்சதசாக்ஷரி பஞ்சாக்ஷரமாகித் தனது] சமவேத சத்தியாயிருக்கின்ற வாச்சியசத்திமய சரீரியாய்;

(ஆகையால்) ஞானமூர்த்தியாய்=(சலையாயிருக்கின்ற சடமூர்த்திகட்கு வேருய்) அசலையாயிருக்கின்ற சித்தனுவாய்;

(இப்படிக் கற்பிதமூர்த்திக்குக் கரசரணுதிகளினதசைவுகூடாதாகையால்), அகிலமீன்றமாதினையுமொருபாகத்தடக்கி=(அகிலமீன்ற=) பாரம்பரியமாகப் பராசத்தியாலதிட்டிக்கப்பட்டந்தப்பராசத்தித்துவாரத்தினுலேயும், தன்னுலே சாக்ஷாததிட்டிக்கப்பட்ட பிரமாதித்துவாரத்தினுலேயும், தனுகரணபுவன போகங்களாகிய சகலத்தையுமுற்பவிப்பித்த (ஒருபாகத்து=) வாமபாகத்து (மாதினையும்=)நிர்த்தசாட்சியாய் நிற்கும் உமாதேவியையும் (அடக்கி=) நிர்த்தசாட்சியாய்த் தனது சத்திசானித்தியத் தானமாய் நின்ற நிலை நிற்கவும் ஓரம்சத்தினுலே அடக்கிச் சமுத்திரத்துதித்த முத்துப்போலஅநந்தத் துவாரத்தினுலே மாயையினுற்பவிப்பித்துத் தனது சம்மேளன சக்கிர விக்கிரகத்திலாவிர்ப்பவிப்பித்த ஸ்ரீகண்டமூர்த்தியிற் பிரவேசிப்பித்துச் சம்மேளன மாக்கித் திரும்ப அதிற்ருனுஞ்சானித்தியமாய்;

வானோர்மகுட சூடாமணியாய்=பிரமாதிதேவர்க்கும் அதிதேவராகிய ஸ்ரீகண்டாதிதேவர் தேவராகிய அநந்தாதிகட்குந்தேவனாய்; வையம்போற்ற = உலகங்களெல்லாந் துதிப்ப; பாதிமதி அணிபவளச்சடைகடாழ (பாதியென்றது சமபாகமன்று, ஓர் அம்சமாகையால்) சந்திரகலையைத் தரித்த விரித்த பவளக் கொடிபோன்ற சடைகள் பின்றூங்க; படரொளி அம்பலத்து=பராசத்தியால் அதிட்டிக்கப்பட்டுப் பரம்பாநின்ற பிரகாசத்தையுடைய சுத்தமாயாமயமாகிய சபையின்கண்ணே; ஆடும்= நடிக்கும்; பரனர்=சுத்தசிவனரது; பாதத் தாதுமலிதாமரைகள்= பாதாரவிந்தங்களை; சிரத்தேவைத்து=சென்னியிற்றரித்து; தளராத பேரன்பு வளரா நிற்பாம்=யாம் நீங்காத மிகுந்தபத்திநிறைவாக்காநிற்பாம். (யாமென்பது தோன்றா எழுவாய்.) (உ)

## சிவசத்திவணக்கம்.

ஈசனருளிச்சையறி வியற்றலின்ப
 மிலயமொடுபோகமதிகாரமாகித்
தேசருவமருவுருவ முருவமாகித்
 தேவியுமாய்த்தேசமொடுசெல்வமாகிப்
பேசரியவுயிரையெல்லாம்பெற்றுநோக்கிப்
 பெரும்போகமவையளித்துப்பிறப்பினையுமொழித்திட்
டாசகலுமடியருளத்தப்பனுடனிருக்கு
 மன்னையருட்பாதமலர்சென்னிவைப்பாம்.

(இ. ள்.) ஓதனத்தினது பாகம் சாத்தனது பாகமென்றாற்போல, கர்த்தாவாகிய சிவனாற் கன்மமாகிய சடசித்துக்களிலே கிரியையாகப் பண்ணப்படுதலாற் சிவனது சிருஷ்டி திதி சங்காரம் திரோபாவம் அநுக்கிரகம் சடசித்துக்களது சிருஷ்ட்டி திதி சங்காரம் திரோபாவம் அநுக்கிரகமென்றுஞ் சொல்லப்படுமென்றறிக; ஆகியென்பதனைப் பிரித்தெங்குங் கூட்டுக.

ஈசன்=ஈசனுக்கு; அருளாகி= (அருளென்பதாகுபெயராதலால், சித்தாகிய ஆன்மாவினிடத்திலே சிவனுக்கொப்பாகும் முத்தி சித்திக்கும் பொருட்டு மலநீங்குமுன் றடைப்பட்டிருந்த பேரறிவு பெருந்தொழிலாகிய சிவத்துவவிர்த்தி விளக்கமென்னும் அநுக்கிரகத்தைப்பண்ணும்) பராசத்தியாகி;

இன்பமாகி = (கிரமத்திலே பேரின்பமாவதாய் அந்தப் பேரின்பத்துக்குக் காரணமாகும் சிற்றின்பத்துக்கு நிமித்தமாகிய சிருட்டி திதி சங்காரம் திரோபாவம் என்கிற நாலு கிருத்தியங்களை ஆரணி ஜனனி ரோதயித்திரி ரூபமாயிருந்து பண்ணுந் திரோதான சத்தியென்னும்)ஆதிசத்தியாகி(=பரசிவாதீதமாகிய சிவனுக்கின்பத்தைப்பண்ணும் பராசத்தியதீதமாகிய இன்பசத்தியாகியென்று தொனிப்பொருளுமாம்);

(இப்படிப் பஞ்சகிருத்தியம் பண்ணுமிடத்து நியமித்துஅறிந்து உத்தியோகித்துச் சங்கற்பித்துப் பண்ணவேண்டுகையால்) இச்சையாகி=(இந்தப்பொருளிப்படியாகும் இந்தப்பொருளிப்படியாகாதென்னும் நியமத்தைப்பண்ணும்), இச்சாசத்தியாகி;

அறிவாகி=(இதுகாரணம் இதுகரணம் இதுகாரியம் இதுபிரயோசனம் என்னுஞ் சாத்தசவிகற்ப ஞானத்தைப்பண்ணும் ஞானசத்தியாகி;

இயற்றலாகி=(கிரியாசத்தியாயிருந்து இதை நான் பண்ணுகிற்பேனென் றுத்தியோகித்தலாகிய சாத்த சவிகற்பக் கிரியை பண்ணித் திரும்ப இச்சாசத்தி ரூபமாயிருந்திந்தவஸ்து இப்படியாகக் கடவதென்று சங்கற்பத்தைப் பண்ணுங்) கிரியாசத்தியாகி;

(அந்தத்தூலபஞ்சகிர்த்தியங்களையும் அந்தத்தூல பஞ்சகிர்த்தியங்களுக்கு யோக்கியதையைப் பண்ணுவனவாகிய சூக்கும பஞ்ச கிர்த்தியங்களையும் பண்ணுமிடத்தில், இலயபோகஅதிகார காலங்களிலே பண்ணவேண்டுமாகையால்) இலயமொடு போக மதிகாரமாகி= (இலயபோகவதிகாரங்களுள்)

இலயத்தைச் சொல்லுவாம்;—அர்த்தமாத்திர யோசன நிர்விகற்பக் காட்சி பிரத்தியர்த்தக்காட்சிமாத்திர சவிகற்பப்பார்வை பார்க்குஞ் சுத்தசிவன்போலிருந்தாலும் போகரையும் அதிகாரரையும் அனுக்கிரக கிர்த்திய மாத்திரங் குறித்து அதிசூக்குமிப்பித்துள்வைத் ததிசூக்கும யோசன சாத்தசவிகற்பஞானக்கிரியா சங்கற்பவானாயிருக்கின்ற விந்துவை நீங்காத இலயருக்கு முத்திபண்ணும் அனுக்கிரக கிர்த்தியமும் அப்படியிருக்கும் விந்துவை நீங்கிய இலயருக்கு வியத்தி பண்ணும் அனுக்கிரக கிர்த்தியமும் எப்போதும் இயற்கையாயிருப்பனவாயினும், தூல பஞ்சகிர்த்தியத்திற்கு யோக்கியத்தைப் பண்ணுவனவாகிய சூக்கும பஞ்ச கிர்த்தியத்தைப் பண்ணும்படி இலயகாலத்திலே போகரையு மதிகாரரையும் சூக்குமிப்பித்துள்வைத்துச் சிருட்டிகாலத்திலே தாமவருள்ளுமாயிருப்பர் இலயராதலால், அந்த முத்திவியத்திகிர்த்தியமு

முடித்துத் தூலபஞ்சகிர்த்திய நிமித்தமாகிய சூக்கும பஞ்சகிர்த்தியத்தையும் பண்ணுவர், ஆகையால், மகாப்பிரளயத்திலே தூலபஞ்சகிர்த்தியங்களைவிட்டிருக்குங் கிரியாசத்திக்குச் சூக்கும பஞ்சகிர்த்திய நிமித்தஞ் சூக்குமித்து நியமித்தல் சற்றே சவிகற்பித்தறிதல் அப்படி உத்தியோகித்தல் நிர்விகற்ப சவிகற்பவேற்றுமைதோற்றச் சங்கற்பித்தல் என்னுந்தொழில்களைப் பண்ணும் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி அந்தக்கிரியாசத்திபேதமாகிய இச்சாசத்திகளை அன்னியமின்றித் தன்னுள்வைத்து நிர்விகற்ப அறிவுமாத்திரத்தைப் பண்ணும் ஞானசத்தி மாத்திரமாயிருத்தல்: இலயம்,

போகத்தைச்சொல்லுவாம்:—அந்தக்கிரியாசத்திக்குச் சிருட்டியாதிதூலபஞ்சகிர்த்தியங்களைப் பண்ணும்படி நியமித்தல் அறிதல் உத்தியோகித்தலென்னுந் தூலயோசன பவுத்த சவிகற்ப வேற்றுமை தோற்றும் சூக்கும யோசன சாத்த சவிகற்பத் தொழில்களினதுள்ளுத்திரேகத்தைப்பண்ணி இச்சாசத்தியாயும் ஞானசத்தியாயுங் கிரியாசத்தியாயுமிருத்தல் போகம்,

அதிகாரத்தைச் சொல்லுவாம்:—அந்தக் கிரியாசத்திக்குச் சொல்லிய சாத்த சவிகற்ப நிர்விகற்ப வேற்றுமை தோற்றுஞ் சூக்கும யோசன சாத்த சவிகற்ப சங்கற்பத்தினது அந்தருத்திரேகத்தைப் பண்ணிக் கிரியாசத்திபேதமாகிய இச்சாசத்தியாயிருத்தல் அதிகாரம்.

ஆகையால், தன்னைக்குறித்துப் பிரபஞ்சம் பிரயோசனமாகத் தோற்றாதாதலால், தன்னைக்குறியாமற் பிரபஞ்சத்தைச் சொரூப மாத்திரமாகப் பார்த்தலைப்பண்ணுவது ஆதிநடு அந்தமிலாவளவில் சோதியென்று முன்சொல்லிய சுத்தசிவஸ்வபாவம் பிறர் பிரயோசனத்தைக் குறித்துப்பார்த்தல் பண்ணுதலைச்செய்வது, இப்போது சொல்லிய இலயபோக அதிகார சிவ ஸ்வபாவம் இந்த இலய போக அதிகார ஸ்வபாவமுஞ்சர்வ கர்த்திருத்துவத்துட் சிறப்புக் கர்த்திருத்துவமாதலால், ஔடாதிகந் தடத்தலக்ஷணமன்று, நிருபாதிகம் இருவகை ஒருவகைச்சுவபாவமுஞ் சுவரூபலக்ஷணமேயாதலால், இந்த இலய போகாதிகாரங்கள் விருத்தி பரிணதி விவர்த்தாரம்பங்களினென்றாகி அநித்தியங்கள் சோபாதிகங்கள் அசத்தியங்களல்ல. பகிரங்கத்தபேதமாய்ப் பிரித்தற்கரிதாகி அந்தரங்கபேதமாயிருக்கின்ற சிவபேதமாயும் சிவசத்திபேதமாயும் சிவசத்திவியாபார பேதமாயும் இருத்தலால், வியாபாரங்கட்கு இலய போகாதிகாரமென்னும் அந்தரங்கபேதமுண்டு; சிவனுக்கும் சிவசத்திக்கும் இல்லையென்று சொல்லலாகாது; காரணபேதமில்லா

திருந்தால் காரியபேதமில்லையாதலால், சிவ சிவசத்தி சிவசத்தியியா பாரங்கள் மூன்றிற்குந் தனித்தனி இலய போகாதிகாரங்கள் பிரித்தலில்லாத அந்தரங்க பேதமாயும் பகிரங்கத் தபேதமாயும் நித்தியங்களாயுஞ் சத்தியங்களாயுமிருக்கும்; கற்பிதமூர்த்தி வடிவுமாத்திரத்தாற் கற்பித வநித்தியங்களாயும் அசத்தியங்களாயுமிருக்குமென்றறிக; விந்துவுக்கும் வயிந்தவசரீரிகட்குமாத்திரம் இலய போகாதிகாரங்கள் பிரித்தற்கெளிதாகிய பகிரங்க பேதமாய்ச் சற்காரியத்தால் நித்தியங்களாயும் அணுமூர்த்திவடிவுமுதற்காரியமாத்திரத்தால் அநித்தியங்களாயும் அசத்தியங்களாயும் இருக்குமென வறிக.

(திரும்ப இலய போகஅதிகாரக்கிரமங்களிலே); தேசருவமருவுருவமுருவமாகி=சோதியாம் நிஷ்கள சகளநிஷ்கள சகளமாகிப் பின்னும் அதிகாரத்துக்குப் புறம்புமுள்ளுமாயிருக்கும் பரசிவனும் அநாத சிவனும் ஓர்கலை ஈரிருகலைக் கிரமத்தினால் அதிட்டிக்கப்பட்ட சாந்தியதீதை சாந்தி வித்தை பிரதிட்டை நிவிர்த்தி என்னுங்கலைகளில் விழுந்து பஞ்ச சாதாக்கியங்களையும் பஞ்சமூர்த்திகளையும் அந்த இருகலப்பினுள்ள பஞ்சப் பிரமங்களையும் உற்பவிக்கும் மூலகாரிய பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்திகளுமாகிப் பின்னும் ஈசானியாதி மூர்த்தியந்தமாகிய பஞ்சசத்திகளுமாகி, வாமாதி சர்வபூத தமனியந்தமாகிய அட்டசத்திகளுமாகி, பின்னும் மனோன்மனியாதி சரஸ்வதியந்தமாகிய பஞ்சசத்திகளுமாகி;

தேவியுமாய்=போகசத்தியுமாய்; தேசமொடு செல்வமாகி=யோக சத்தியொடு வீரசத்தியுமாகி; பின் பேசரிய உயிரையெல்லாம் பெற்று= எண்ணிறந்தவான்மாக்களுக்குப் பரதேகமென்றும் சூக்குமதேகமென்றும் தூலதேகமென்றும் சொல்லப்படும் திரிதேகங்களோடுங் கூடி. அறிவுவிளங்கச் சிருட்டித்து; நோக்கி=இரக்ஷித்து; பெரும்போகம் அவையளித்து=புவனபதிகளாயிருத்தலாகிய பரபோகங்களையும் புவன வாசிகளாயிருத்தலாகிய அபரபோகங்களையுங் கொடுத்துத் திரோபவித்து; பிறப்பினையு மொழித்திட்டு=சங்கரித்து(=சிவனுக்கொப்பாயிருத்தலாகிய பரமுத்தியையும் சுத்தமாயாபுவனப் பிராப்தியாகிய அபரமுத்தியையுங் கொடுத்தனுக்கிரகித்து); ஆசகலும் அடியருளத்து= தீக்ஷாசுத்தராகிய சாதகர் இருதயகமலத்திலே அவரவர் யோக்கிய தானுகுணமாகச் சகள நிஷ்களசகள நிட்கள நிட்களநிருத்தமத்திய இலக நிட்களாதீதமென்று முன்சொன்ன ஸ்வரூபங்களாய்; அப்பனுடனிருக்கும்=சிவனோடு கூடத் தியானம்பண்ணப்படும்; அன்னையருட்

பாதமலர்=உலகமாதாவினது பாதாரவிந்தங்களை; சென்னிவைப் பாம்=சிரசிலே சூட்டிக்கொள்வாம். (௬)

## குமரகுருவணக்கம்.

அருமறையாகம மங்கமருங்கலை நூறெரிந்த
வகத்தியனுக்கோத் துரைக்குமருட்குரு வாங்குருவை
திருமறைமாமுனிவர் முனிதேவர் கடந்தேவன்
சிவனருள்சேர்திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொருமறையார் கழல்வீரர் வீரன்கையிற்
பூநீர்கொண்டோவாது போற்று மடியார்கள்
கருமறையா வகையருளிக் கதிவழங்குங்கந்தன்
கழலிணைக ளெஞ்சிரத்திற் கருத்தில்வைப்பாம்.

(இ-ள்.) அருமறையாகமமங்கம்=தனதிடத்திற் சிவதீட்சைபெற்ற பின்னுகமம், (அதற்குமுன்) வேத வேதாங்கங்கள் (அதற்குமுன்தான் பின்தான்); அருங்கலை=அருமையாகிய அறுபத்துநான்கு கலைஞானங் கள்; நூல்=சத்த தர்க்க மீமாஞ்சை வேதாந்தமென்கின்ற சாத்திரம்; (இவைகளைத் தான்போதிக்க) தெரிந்த=அவைகளிலே சொல்லப்பட்ட பதார்த்தங்களை உத்தேச லட்சண பரீட்சைகளோடும் அறிந்த; அகத்திய னுக்கு=அகத்தியமாமுனிக்கு; ஓத்துரைக்கும்=பிரணவத்தை உபதே சம்பண்ணி, அதன்முடிவிற் சித்தாந்தமகாவாக்கியோபதேசஞ் செய்யும்; அருட்குருவாங் குருவை=அனுக்கிரக விச்கிரக குருவாகிய குமாரன்; தி ருமறை மாமுனிவர் முனி=வேதவித்துக்களாகிய முனீசுவரர்களுக்கு முனீசுவரன்; தேவர்கடந்தேவன்=தேவர்க்குத்தேவன்; சிவனருள் சேர் திருமதலை = சிவனது கிருபை பொருந்திய புத்திரன்; தவநிலை யோர் தெய்வம்=தவசைப்பண்ணுவோர்க்குப் பலங் கொடுக்குந் தே வன்; பொருமறையார் கழல் வீரர்வீரன்=பொராநின்றறைந்தாரவாரி யாநின்ற வீரவெண்டயத்தையுடைய வீரர்க்கும்வீரன்; கையிற்பூநீர்கொ ண்டோவாது போற்றும் அடியார்கள்=கரத்திற்புஷ்பந் தீர்த்தங்கொ ண்டு இடைவிடாது பூசிக்கும் பத்தர்களுக்கு; கருமறையாவகையருளி =சனன மரணங்களுக்குக் காரணமாகிய மலமறையாதபடி கிருபைப ண்ணி; கதி வழங்கும்=சிவஸ்வரூபவிளக்கமாகிய மோக்ஷத்தைக் கொ டுக்கும்; கந்தன்=நமது குமாரசுவாமியினது; கழலிணைகள்=இருபா

தங்களை; எஞ்சிரத்திற் கருத்தில் வைப்பாம்=எமது சென்னியில் வைத்து வணங்கி மனசில்வைத்துத் தியானம்பண்ணுவாம். (ச)

## சுவபக்க சிவஸ்தோத்திரம்.

அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாய்வேறுங்
குறியதுவுடைத்தாய் வேதாகமங்களின்குறியிறந்தங்
கறிவினிலருளான்மன்னி யம்மையோடப்பனுகிச்
செறிவொழியாதுநின்ற சிவனடிசென்னிவைப்பாம்.

(இ. ள்.) அறுவகைச் சமயத்தோர்க்கும்=புறச்சமயிகளறுவருள், உலோகாயதன்:—பிருதிவி அப்புத் தேயு வாயுவென்னு நான்கும் பூதங்களுமே கர்த்தாவென்பன்,

அருகன்:—உலகமெல்லாம் இந்தப்படி நித்தியமாயிருக்குந்தானே, அருகேசுவரன் குருத்துவமாத்திரத்திலே கர்த்தாவாயிருப்பனென்பன்;

பௌத்தனும்:—அப்படித்தானே சுகதன் கர்த்தாவென்பன்,

மீமாஞ்சகன்:—உலகமெல்லாம் இக்தப்படிதானே நித்தியமாயிருக்கும் சரீராதி உற்பத்தியிலே கன்மந்தானே கர்த்தாவென்பன்,

பாஞ்சராத்திரி:—ஸ்ரீமந்நாராயணர் அபின்ன நிமித்தோபாதானராய் ஜகத்கர்த்தாவாயிருப்பரென்பன்,

மாயாவாதி:—பிரமந்தானே தன்னிடத்திலே பரிணுமத்திறைலே தான் விவர்த்தத்திறைலே தான் சகத்கர்த்தாவாயிருக்குமென்பன்,

[இப்படிச் சொல்லாநின்ற] அறுவகைச்சமயத் தோர்க்கும்;

அவ்வவர்பொருளாய்=அவரவர்களாலே சொல்லப்பட்ட கர்த்திருகரணங்களை அதிட்டித்துக்கொண்டு அந்தக் கர்த்திரு காரணசொரூபியாய்;[ பின்னும் உட்சமயிகளறுவர்:—அவர்கட்குச்சிவனே தேவதையாகையால், சைவர்க்குத் தாண்டவபூஷணனென்னு மூர்த்தியாய்,; பாசுபதர்க்குத் திருநீறுஞ் சடையுந் தரித்தமூர்த்தியாய்; மகாவிரதர்க்கு என்புமாலை தரித்த மூர்த்தியாய்; காளாமுகர்க்குப் படிகம் புத்திரதீபமணி கடரித்த மூர்த்தியாய்; வாமருக்கு அக்கினியும் உபவீதமுந் தரித்த மூர்த்தியாய்; பைரவருக்குத் தமருகமுஞ்சிலம்புந்தரித்தமூர்த்தியாய்]

வேறுங்குறியதுவுடைத்தாய்=வைதிகசைவர்க்கு ருத்ராகாரமாய் சைவசித்தாந்திகட்குச் சதாசிவாதியாகாரமாய், (அதின் மிகுந்தபக்குவர்க்கு) வேதாகமங்களின் குறி இறந்து=வேதாகமங்களிற் கற்பிக்கப்பட்ட மூர்த்திகளைக் கடந்து; அங்கு=அவ்விடத்தில்; அறிவினில் அரு

ளான்மன்னி=(அருளால்) சிவசத்தியால் விளக்கப்படும் மனோவாகதீதமாயிருக்கின்ற (அறிவினில்=) தீக்ஷாவான்களுடைய சித்தத்திலே (மன்னி=)தோன்றி; அம்மையோடப்பனாகி=சிவசத்திமாத்திரசொரூபமாகி; செறிவொழியாது நின்ற=எங்கும் வியாபகமாயிராநின்ற; சிவனடி=சிவனதுஞானக்கிரியா சொரூபமாகியிராநின்ற சத்திரூப சாமர்த்தியத்தை; சென்னி வைப்பாம்=உன்மனாகலைக்குமேலே தியானம் பண்ணுமற் றியானம்பண்ணுவாம். (=நிருவிகற்பமாகச் சிந்திப்பாம்.)

## குருவணக்கம்; நூற்சிறப்பு.

என்னையிப்பவத்திற்சேரா வகையெடுத்தென்சித்தத்தே
தன்னைவைத்தருளினாலே தாளிணைதலைமேற்சூட்டி. [னூல்
பின்னமர்பொழில்சூழ்வெண்ணெய் மேவிவாழ்மெய்கண்டா
சென்னியிற்கொண்டுசைவத் திறத்தினைத்தெரிக்கலுற்றாம்.

(இ-ள்). செவ்வரத்தைப் பூநிறமாய் ஒருமுகமும் இருபுயமுமுடையராகிச் செம்பட்டுச் செஞ்சந்தனஞ் சிவந்தமாலை தரித்தவராகிய குருமூர்த்தியாலதிட்டிக்கப்பட்டந்த ரூபியாயிருந்து,

அருளினாலே=தனது தீக்ஷாகன்மத்திலே விளங்காநின்று தீக்ஷையென்று மியற்கைப் பெயரையுடைய சிவசத்தியால்; என்னை=அநாதியே பசுத்துவத்தினாலே அஞ்ஞானியாயிருக்கின்ற என்னை; இப்பவத்திற் சேராவகை=இந்தச் சனனமரணங்கட் கேதுவாகிய மலமாயாகன்மங்களோடு பொருந்தாமலிருக்கும்படி சடத்துவ சோதனை செய்து; எடுத்து=சமனாந்த பாசக்கூட்டங் கூடாவகை சின்மாத்திர சுத்தகேவலமாய்ச் சேஷிக்கப்பண்ணி; (சேஷித்து நின்ற) என்சித்தத்தே=வித்தியாதத்துவமென்றிசைக்கப்படும் உன்மனாமூலத்துச் சின்மாத்திரமாய் ஆன்மாவென்று செப்பப்படுமென தான்ம தத்துவத்திலே; தன்னைவைத்து=உன்மனாகார வித்தியாதத்துவத்துபரியுறுந் தனது பரசிவ ஸ்வரூபத்துக்கொத்து விரிதன் முதலாகிய குணங்களோடுகூடிப் பரமென்றுரைக்கப்படு மெனது வித்தியாதத்துவத்தை விளக்கி; (திரும்ப) அருளினாலே=தனது சத்திசங்கற்பத்தினாலே; தாளிணை=ஒவ்வொன்று முப்மூன்றாய்ச் சுத்தசிவசாட்குண்ணிய ரூபமாகிய ஞானசத்தி கிரியாசத்தி இருசத்தியாகிய ஒருசத்திக் கொத்து, அப்படிச் சாட்குண்ணிய பரிபூரணமாகிய சிவத்துவத்தோடு கூட்டிச் சுத்தசிவ

மென்று செப்பப்படுமெனது சிவத்துவத்தை; தலைமேற் சூட்டும்=முன்சொன்ன பரமாகிய வித்தியாதத்துவத்துக்குப்பரிமுடிபோலச் சிறப்பித்துப் பிரகாசிப்பிக்கும்; மின்னமர்பொழில் சூழ் வெண்ணெய்=மின்பொருந்திய மேகங்கள் படியாநின்றசோலை சுற்றிய=திருவெண்ணெய்நல்லூரின்கண்ணே; மேவிவாழ் மெய்கண்டான் = பொருந்திவாசம்பண்ணுநின்ற சத்தியதரிசியென்னும்பெயரையுடைய பரமாசாரியனது; நூல்=வடமொழிச் சிவஞானபோதத்தைத் திரித்த தென்மொழிச்சிவஞானபோதத்தைச் சென்னியிற்கொண்டு=(சென்னியிற் கொண்டென்பது பூச்சிய வசனம்) செவிக்கேறக் கேட்டு மனசிலுட்படுத்திச் சிந்தித்துத் தெளிந்து; சைவத்திறத்தினை=சைவாகமத்திற் சொல்லும் திரிபதார்த்த லக்ஷணத்தை; தெரிக்கலுற்றும்=விரித்துச்சொல்லுவாம்.

இந்த விருத்தத்துக் கிதுவே கருத்தென்பது காண்பிப்பாம்:—என்னையிப்பவத்திற் சேராவகையெடுத்தென்பதனால், சமனாந்த பாசமுத்தி சொல்லப்பட்டது; என்சித்தத்தே தன்னைவைத்தென்பதனால், உன்மனாவழியுள்ள சிகாச்சேதமுள்ளாக நிட்கள சர்வாதிக்கிராந்த விந்துக பரசிவத்தில் யோசனை சொல்லப்பட்டது; தாளிணை தலைமேற்சூட்டுமென்பதனாற் சிவத்துவாபிவியத்தி லக்ஷண நிஷ்களாதித சுத்தசிவமாதல் சொல்லப்பட்டது; இதுவன்றி, என்சித்தத்தே தன்னை வைத்தருளினாலே என்பதற்கு இருதயத்திற் சிவரூப ஸ்வரூப குருத்தியானஞ் செய்வித்தென்று பொருளுரைத்தாற் சமனாந்த முத்திப்பொருள் கொடுக்குமெடுத்தன்றதனோடு மாறுபடும்;

தாளிணை தலைமேற் சூட்டு மென்பதற்குத் தனது பாதங்களைச் சிரசில் வைக்குமென்று பொருளுரைத்தாலும் அப்படிப்பொருள் பகைத்து மாறுபடும்; அதனாற் பொருள் பகைத்தவிடத்திலக்ஷணையினாற் பொருளுரைப்பதேயியல்பு; அதுவன்றிப் பொருள் பகைத்தவிடத்துஞ் சொற்பொருளிருந்தபடி பொருளுரைக்கில், கட்டில் கூப்பிட்டதென்றவிடத்து முக்கியப்பொருளுரைத்தாற் பொருள் பகைக்குமாதலால், அப்பொருள் விட்டு, ஆதார லக்ஷணையினாற் கட்டிலிலிருக்கும் புருஷனென்று கௌணப்பொருளுரைக்கவேண்டுமிடத்தும், அப்பொருள்விட்டுக் கட்டிருனே கூப்பிட்டதென்று முக்கியப்பொருளுரைக்கவேண்டும்;

ஆயுக்கிருதமென்றவிடத்தும் காரணலக்ஷணையினாலே ஆயுவுக்குக் காரணமானகிருதமென்று பொருளுரையாது ஆயுத்தானே கிருதமென்று பொருளுரைக்கவேண்டும்;

நூலுடுப்புடையானென்றவிடத்துங் காரியலக்ஷணையினாலே நூலா லுண்டாகிய புடைவை யென்று பொருளுரையாது நூறுனே உடுப் பென்று பொருளுரைக்கவேண்டும்;

கங்கையிலே வேடச்சேரியென்றவிடத்துஞ் சமீபலக்ஷணையினாலே கங்காதீரத்தில் வேடச்சேரியென்று பொருளுரையாது, கங்காசலப்பிர வாகத்தில் வேடச்சேரியென்று பொருளுரைக்கவேண்டும்;

பிச்சை சிதம்பரத்தில் வசிப்பிக்கின்றதென்றவிடத்தும், உபகார லக்ஷணையினாலே பிச்சை வாசோபகாரமாயிருக்கின்றதென்று பொரு ளுரையாது, பிச்சை பிடித்திருத்திற்றென்று பொருளுரைக்கவேண்டும்;

சிங்கந்தானே புருடனென்றவிடத்தும் சாமர்த்திய சாதிருசிய லக்ஷணையினாலே, சிங்கத்துக்கொத்த சாமர்த்தியவானென்று பொருளு ரையாது, சிங்கந்தானே புருடனென்று பொருளுரைக்கவேண்டும்;

இதுவுமன்றி, விடத்தைப் புசி இவன் வீட்டிற்புசியாதே யென்பது முதல் அர்த்தவாதத்தும், மலைதலையினுற் பிளப்பன் என்பது முதற் றுதிவாதத்தும் சொற்பொருளிருந்தபடி பொருளுரைக்கவேண்டும்; அப்படி யுரைத்தால்-எல்லா நியமமுறைமை தப்பும்;

ஆதலால், தாளிணை தலைமேற் சூட்டுமென்றவிடத்துஞ் சாம்பவி தீக்ஷையிற் றிருவடி சிரசிற் சூட்டுமிடத்துச் சிவசத்தி குருபாதத்திற் பூசிக்கப்படுமாதலால், குருபாதமாகிய ஆதாரலக்ஷணையிற் சிவசத்தி யென்றே பொருளுரைக்கவேண்டும்; அப்படிப் பொருளுரைத்தாலுஞ் சிவசத்தி சங்கிராந்தி சொல்லும் பாசுபதமதமாம், சிவனைக்குறித் தெ ன்றுலுஞ் சிவாவேசஞ் சொல்லுங் காபாலமதமாம்;

ஆதலாற் காரியலக்ஷணையினாலே சிவசத்தியால் விளக்கப்பட்ட சிவத்துவரூப ஆன்மசிற்சத்தியைச் சூட்டுமென்று முன்னுரைத்தபடி யே பொருளுரைக்க. (கூ)

இந்நூல்கொள்ளு மதிகாரி யிவனென்றிசைக்கின்றார்.

பண்டைநற்றவத்தாற்றேன்றிப் பரமனைப்பத்திபண்ணுந்
தொண்டரைத்தானேதூய கதியினிற்சேருப்பன்மார்க்கர்
கண்டநூலோதிவீடு காதலிப்பவர்கட்கீசன்
புண்டரீகத்தாள்சேரும் பரிசினைப்புகலலுற்றும்.

(இ-ள்). பண்டைநற்றவத்தால்=மாயாதேக போகசம்பந்தத்தி னாலே முந்தியசன்மத்தின்மலபரிபாகமானது சற்றேதோன்ற நின்ற

வில் அதற்கருகமாகிய தீக்ஷைமுன்னாகத்தான், அஃதில்லாமற்றான், சைவப்பிரகாரமாகத்தான், வைதிகப்பிரகாரமாகத்தான், பூசாவிரத முதலிய தவத்தினாலே சிவலோகமுதலிய தானங்களிலே போகம்புசித்துத் திரும்பத்தோன்றிப் பூலோகத்திலே வந்து சன்மித்துத் தீவிர தீவிரதர மலபரிபாகத்தினாலே; பரமனைப் பத்திபண்ணும்=சிவனைக் குறித்துத் தியானம்பண்ணும்; தொண்டரை=அடியார்களை; தானே=குருவதிட்டானமின்றி நிரதிகரணமாகத்தானே; (சத்திசங்கற்பமாத்திரமாயிருக்கின்ற நிரதிகரணதீக்ஷையினாலே "தீக்ஷித்துச் சுத்தபுவனத்திருத்தியு மிருத்தாமலும்) ஆயத்தியினில்=சிவசமானரூப ஸ்வரூப வியத்த சிற்சத்திரூப சிவத்துவத்திலே; தொகுப்பன்=கூட்டுவன்:

(சாத்திரம் வேண்டுவதில்லை, தீவிர தீவிரதர மந்த மந்ததர மலபரிபாகத்தினாலே, சாதிகரண சத்தியோ நிருவாண தீக்ஷையினாலேதான், சத்தியோபோகதீக்ஷையினாலேதான், தீக்ஷிதர்கட்கு ஒன்றும் வேண்டுவதில்லை; ஆதலால் சாதிகரணவசத்தியோநிருவாண தீக்ஷையினாலே தீக்ஷிப்பித்துக்கொண்டு, ஆரியபாஷை தெரியாமையால்)

மார்க்கர்=சைவசித்தாந்த மார்க்க தரிசிகளாயிருக்கின்ற தேசிகர்; கண்டநூலோதி=தமிழ்ப்பாஷையிற் பண்ணின சாத்திரத்தைப் படித்து;

அதனாற் பதிபசுபாச லக்ஷணங்களையறிந்துதான், ஒரு பிரதேசங்களையறிந்துதான், அவரவர் மரியாதையில் வந்த அந்தந்த ஞானங்கொண்டந்தந்த ஞானஞ் சாக்ஷாத்கார ரூபமாய்ப் பலத்துக்கு வரும்பொருட்டு ஒன்றுக்கொன்று சககாரியாயிருக்கின்ற சரியை கிரியை சாலம்ப நிராலம்ப சிவயோகங்களை அனுஷ்டித்து;

வீடுகாதலிப்பவர்கட்கு=முத்தியைவிரும்புமவர்களுக்குச் (சாக்ஷாத்தான, பதமுத்தியிலிருந்து பாரம்பரியத்தினாலேதான்); ஈசன் புண்டரீசத்தாள்=(ஓதனத்தினதுபாகந் தேவதத்தனது பாகமென்றாற்போல ஈசன் புண்டரீகத்தாளென்றுஞ் சொல்லப்படுமாதலால், இருளினாற் குவிந்து சூரியனது கிரணத்தாலலர்ந்த தாமரைப்பூப்போன்று மலசத்தியினாற் குவிந்தீசனது சத்தியாலலர்ந்த ஞானக்கிரியாரூப ஸ்வரூப சிற்சத்திரூப வியத்த சிவத்துவத்தை; சேரும்பரிசினை=பொருந்து முறைமையை; புகலலுற்றும்=சொல்லுவாம்;

ஆகையாலன்றோ சத்தியோநிர்வாண தீக்ஷையிலே தேசிகனுக்கன்றிச் சாதனுக்கு ஞானம் வேண்டுவதில்லை யாதலாற் றேசிகனுக்கு ஞானம் பிரதானம்; சாதனுக்குத் தீக்ஷை பிரதானமென்று சுவாயம்

புவ வியாக்கியானத்திற் சத்தியோஜ்யோதி பாதங்களால் விஸ்தரிக்கப்பட்டிருக்கையால் ஞானந் தீக்ஷாகன்மத்துக்கங்கம்; தீக்ஷாகன்மம் அங்கியென்பதும் மலந்திரவியமாதலால், நேத்திர படலம்போல ஞான கோடிகளாலும் போகாதென்பதும் மேல் உரைக்குமிடத்து விஸ்தரித்துச் சொல்லுவாம். (எ)

அவையடக்கங்கூறுகின்றார்.

மறையினாலயனான்மாலான் மனத்தினால்வாக்கான்மற்றுங்
குறைவிலாவளவினாலுங் கூறொணாதாகிநின்ற
விறைவனார்கமலபாத மின்றியானியம்புமாறை
நிறையினார்குணத்தோர்க்கெல்லா நகையினையிறுந்துமன்றே.

(இ-ள்). மறையினால்=பதியினாற் பாரம்பரியமாக அதிஷ்டிக்கப்பட்டுத்தனதவதி சர்வஞ்ஞனாயிருக்கின்ற பசுவினாற் பண்ணப்பட்டபடியாற் சிலவிடத்துப் பதிஞானமென்றும் பசுஞானமென்றும் பதிப் பிரமாணமென்றும் பசுப் பிரமாணமென்றும் சொல்லப்பட்டிருந்தாலும் இயற்கையானதரூப பாசரூபமாதலாலும், ஆன்மஞானத்தை விளக்குதலால் ஞானமென்றுபசரிக்கப்படுதலாலும், பாசஞானமென்றும் பாசப் பிரமாணமென்றுஞ் சொல்லப்பட்டியல்பினாலான்ம சிற்சத்தியைப் பொருந்திப் பசுபாச பதார்த்த மாத்திரத்தையே படிக்கும் வேதங்களால்; கூறொணாதாகி=(சிலவிடத்தொரு பிரகாரத்துப் பதிபதார்த்தத்தைக் குறிவேறாகவுங் கூறுமாயினும் இயல்பாகியவிலக்கணத்தாற் சொல்லப்படாதாகி; அயனான்மாலால்=சிவானுக்கிரகம் பெற்ற நிரஞ்சன விதிவிஷ்ணுக்களுக்கு வேறாகிச் சாஞ்சனராயிருக்கின்ற விதி விஷ்ணுக்களுக்குப் பசுத்துவம் நீங்காதபடியினாலே பாசஞானத்தால் விளங்கிப் பசுஞான பசுப்பிரமாணமாகிக் காண்டன் முதலிய திரிப்பிரமாணமாகி அவரவர்களது சிற்சத்திமானங்களாலவரவர்களால் (அறியப்படாதாகி);மனத்தினால்=பாசஞானம் பாசப்பிரமாணமென்கின்ற மன முதலிய உட்கருவிப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும், நேத்திரமுதலிய புறக்கருவிப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும், பாசயோகப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும், பசுயோகப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலும், (அறியப்படாதாகி); வாக்கால்=உலோகவாதஞ் சத்தியமும் அசத்தியமுமாயிருக்குமாதலால் அவற்றுள் அசத்தியமாகமப்பிரமாணத்திலடங்குமாதலால், பொதுவாகுமந்த உலோகவாதத்தினால் (அறியப்படாதாகி); மற்றுங்குறைவிலாவளவினாலும்=பசுசாத்திரங்களிற் படி

க்கப்பட்டுப் பசுப்பிரமாணங்களாகிப் புத்திப்பிரகாசமாகிய லிங்க பராமரிச சித்த விர்த்திமுதலாகிய பஞ்சாவயவங்களினால் நிறைந்த பாசானுமானங்களினாலும்;கூறொணாதாகி—அறியப்படாதாகி; நின்ற—நிலைபெற்ற; இறைவனார்—சிவனாரது; கமலபாதம்=தாமரைபோல் விரிந்த சத்தியெனும் சிவத்துவலக்ஷணத்தை;இன்றியாணியம்புமாசை=இப்போது நான் சொல்லவேண்டுமென்ற விருப்பம்; நிறையினார் குணத்தோர்க்கெல்லாம்—சமத்தினானிறைந்த நீர்மையராகிய சகலர்க்கும்; நகையினை—சிரிப்பினை; நிறுத்துமன்றே—நீங்காதுண்டாக்குந் தானே. (அ)

சிவனிப்படிப் பிரமாணாதீதரானாற் சூனியப்பொருளோ
வென்னஅன்று; பதிப்பிரமாணத்தாற் பார்க்கப்
படும் பொருளென்று கூறுகின்றார்.

அருளினாலாகமத்தே யறியலாமளவினாலுந்
தெருளலாஞ்சிவனைஞானச் செய்தியாற்சிந்தையுள்ளே
மருளெலாநீங்கக்கண்டு வாழலாம்பிறவிமாயா
விருளெலாமிரிக்கலாகு மடியரோடிருக்கலாமே.

(இ-ள்). ஆகமத்தே—(பரன் படிக்கும் வன்னபத வாக்கியங்களைக் கேட்கும் வியோம பௌதிகாகம வெழுத்தைப் பார்க்கும் நினைக்கும் தீக்ஷாவான்களாகிய நமது மனச் சங்கற்பத்தினால் வியோமபௌதிகத் தொனியோடுகிளம்பிப் புத்தியினாற் பொருந்தப்பட்ட வன்னபத வாக்கியமயமா யுள்ளுணரோசையாகிய மத்திமை வாக்கு ரூப மாயிருதயத்துத்தோன்றும் அத்தியான்மிக சடாகமத்திற் கரியிலக்கினிபோல வந்து வன்ன பத வாக்கியக் கிரமத்திலாவிர்ப்பவித்துப் பொருள் போதிப்பதாய், மகாப்பிரளயபரியந்தம் நாசமில்லாமற் சுத்தவித்தையி லிருக்கும்) ஆதிதைவிகதிவ்வியாகமத்திலே (வந்து சாநித்தியமாகிய);

அருளினால்—சிவசத்தியாகிய வாதிதைவிகதிவ்வியசிதாகமத்தினால்; (திரும்ப விதுகாரிய லக்ஷணையாதலால் அதனால் விளக்கப்பட்ட நமது சிற்சத்தியாகிய ஆத்தியான்மிக சிதாகமத்தினால்) சிவனை யறியலாம்=சிவனைப் பரோக்ஷமாக நிச்சயிக்கலாம்; அளவினாலும்=திவ்விய சிவாகமத்திற் சிவனாற் காண்பிக்கப்பட்டுச் சிவசத்தி யதிஷ்டித புத்திப் பிரகாசகலுஷித லிங்கபராமரிச வியாபார சீலமான நமது சிற்சத்தியனுமானத்தினாலும்; தெருளலாஞ்சிவனை—சிவனைப் பரோக்ஷமாக அறியலாம் (தியானசமாதியென்னு மங்கயோகவாசனையில் வந்து பதிந்த சிவசத்தியினால் அந்தச் சமாதி சமயமாத்திரத்தில்.)

மருளெலாநீங்க=மல மூலாஞ்ஞானங்களெல்லாம் போக; சிந்தையுள்ளே=திரும்ப அந்தச் சிவசத்தியால் விளங்கிய நமது சிற்சத்தியிலே; ஞானச்செய்தியால்=அந்த நமது சிற்சத்தி விருத்தி லக்ஷண சதேக சீவன்முத்தி சாக்ஷாத்காரத்தினால்; கண்டு = சாக்ஷாத்கரித்த பரோக்ஷமாகப் பார்த்து; வாழலாம்=நமதந்தச் சிற்சத்தி வியாபார சாக்ஷாத் காராகார சிவானுபூதியினது பூரித்தலாகிய நமது சிவானந்தத்தினது அனுபூதி லக்ஷண ஸ்வானுபூதிமான்களாயிருக்கலாம்;

(சரீராந்த சமயத்திலே அந்தச் சீவன்முத்தி சாக்ஷாத்கார சாமர்த்தியத்தினாலே சேஷித்துத் திரும்பத் திரும்ப வாராதபடி), பிறவி மாயாவிருளெலாம்=(பிறவியென்பதாகு பெயராதலால்) பிறவிக்கேதுவாகிய கன்மமலம், (மாயாவிருள்) மாயாமலம், (திரும்பமாயாவிருளென்றெடுத்துக்கொண்டு, மாயா=)கெடாத அநாதிசித்த ஆணவமலம் என்னு மிவைகளெல்லாம்; இரிக்கலாகும்=நம்மைப் பந்தியாமற் பொருளுண்மை மாத்திரமாயிருக்கப்பண்ணலாம்; அடியரோடிருக்கலாமே=(நிரதிசயவிதேக பரமுத்தி பல சர்வார்த்த விஷய சிவ சாக்ஷாத்கார வியாபாராகாரமாயிருக்கின்ற நமது சிற்சத்தி சமவேத சிவானுபூதியினது பூரித்தலாகிய சிவானந்தானுபூதியாகிய சுவானுபூதி மான்களாகிச் சிவசத்தி சமான சுவசிற்சத்தியை யுடையராகிய) முத்தான்மாக்களோடொத்தும் நாம்வியாபிக்கலாமே; முன்சொன்ன சீவன்முத்தியவத்தையிலேயாயிற் சிவபத்தர்களோடுங் கூடியிருக்கலாம்.

பரமுத்தியிலே "பாரதந்திரியங்களைகழிபந்தம்" என்று ஞானுமிர்தத்தி லிருத்தலினால், சிவமென்றல்லாதடியர்களென்று சிவசமான முத்தான்மாக்களைச் சொல்லலாகாதென்ப தறிக. (கூ)

பாயிர முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூ.

---

## அளவை.

பதிபசுபாசத் திரிபதார்த்தமாகிய பிரமேயசித்தி பிரமாணமன்றி இல்லை என்பதனாற் பிரமாணங்கூறுகின்றார்.

அளவைகாண்டல்கருதலுரையபாவம்பொருளொப்பாறென்ப
ரளவைமேலுமொழிபுண்மையையிகத்தோடியல்பெனநான்
களவைகாண்பாரவைபிற்றின்மேலுமறைவரவையெல்லா
மளவைகாண்டல்கருதலுரையென்றிம்மூன்றினடங்கிடுமே.

(இ-ள்). அளவை=பிரமாணங்கள்; காண்டல்=பிரத்தியக்ஷம்; கருதல்=அநுமானம்; உரை=ஆகமம்; அபாவம்=அநுபலப்தி; பொருள்=அர்த்தாபத்தி; ஒப்பு=உவமானம்; என ஆறென்பர்=ஆறென்று கூறுவர்;

இப்படிப்பாட்டனும், வேதாந்தியும், பிரமாணமாறென்பர்கள்.

ஆருகதனும் பிரபாகரனும் அவற்றுளபாவப்பிரமாண மொன்றையுந்தள்ளிப் பிரமாணமைந்தென்பர்கள்.

நையாயிகன் அவற்றுள் அர்த்தாபத்திப் பிரமாணமொன்றையுந் தள்ளி நான்கென்பன்.

சாங்கியன் அவற்றுள் உபமானப் பிரமாண மொன்றையுந்தள்ளி மூன்றென்பன்.

பௌத்தனும் வைசேஷிகனும் ஆகமப்பிரமாண மொன்றையுந்தள்ளிப் பிரமாணமிரண்டென்பார்கள்.

உலோகாயதன் அவற்றுள் அநுமானப்பிரமாணமொன்றையுந்தள்ளிப் பிரமாணமொன்றென்பன்.

அளவைமேலும்=சொல்லியவாறு பிரமாணங்களுக்கு மேலும்; ஒழிபு=பாரிசேஷியம்; உண்மை=சம்பவம்; ஐதிகம்=உலோகவாதம்; (அவற்றோடு) இயல்பு=சுவபாவம்; என நான்களவைகாண்பர்=என நான்கு பிரமாணங்களை அறிந்து சொல்லுவர்; அவையிற்றின்மேலும் அறைவர்=சொல்லிய இந்தப் பத்துப் பிரமாணங்களுக்குமேலும் பிரமாணங்களைச்சொல்லுவார்கள்; அவையெல்லாமளவை=அந்த எல்லாப்பிரமாணங்களும்; (சாங்கியத்திலேபோலச்சைவசித்தாந்தத்திலே) காண்டல் கருதல் உரையென்றிம்மூன்றின்=பிரத்தியக்ஷமநுமானமாகமமென்கிற மூன்று பிரமாணங்களின்; அடங்கிடுமே=அந்தர்ப்பவிக்குந்தானே; இந்தப்பிரமாணங்களினது பகுப்பி லட்சணமடக்கம் உதாரணங்கள் விரித்துச் சுருங்கிய உரையிலுரைக்கில் விபரீதமாக விரியுமாதலான் முன்சொல்லிய முன்னோருரையில் முதிர்ந்தாருரைக்க ஒரு நெறியாலறிக. (க)

மேனிறுத்த முறையானே காண்டன் முதலிய பிரமாண மூன்றினையும் வகுத்துணர்த்துகின்றார்.

மாசறுகாட்சியையந் திரிபின்றிவிகற்பமுன்னு
வாசறவறிவதாகு மநுமானமவிநாபாவம்
பேசுறுமேதுக்கொண்டு மறைபொருள்பெறுவதாகுங்
காசறுமுரையிம்மானத் தடங்கிடாப்பொருளைக்காட்டும்.

(இ-ள்). மாசறுகாட்சி—குற்றமில்லாத பொறி புணர்ந்த சிற்சத்திக்குறிப் பிரத்தியட்சமாவது; ஐயந் திரிபின்றி—சந்தேகவிபரீத ஸ்மிருதிகளின்றி; விகற்ப முன்னு—நிருவிகற்பத்திற்குமேற் சவிகற்பமாக; ஆசற—குற்றமின்றி; அறிவதாகும்—பொருளைப்போதிப்பதாகும்; அனுமானம்—தூமமுதற் சாதனம்புணர்நத சிற்சத்திக்குறி அனுமானமாவது; அவினுபாவம்பேசுறுமேதுக்கொண்டு—வியாத்தியோடு சொல்லப்படும் அந்தத் தூமமுதற் சாதனங்கொண்டு; மறை பொருள் பெறுவதாகும்—பிரத்தியட்சத்திற்கு யோக்கியமுமயோக்கியமுமாயொளித்த வஸ்துவையறிவிப்பதாகும்; காசறுமுறை—குற்றமற்றவாப்தவாக்கியம் புணர்ந்த சிற்சத்திக் குறிச் சிவாகமமாவது; இம்மானத் தடங்கிடாப் பொருளைக் காட்டும்—பிரத்தியட்சத்தைக்கடந்து அனுமானு தீதமாகிய பதார்த்தத்தையும் போதிக்கும்.

ஈண்டு அறிவிப்பது பெறுவிப்பது எனற்பாலன பிறவினைப்பொருளுணர்த்தும் விவ்விகுதிதொக்கு அறிவது பெறுவது எனநின்றன. (௨)

ஐயந்திரிபுகளினதிலக்கணமும் நிருவிகற்பஞானமென்றுஞ்
சவிகற்பஞானமென்றும் ஞானம் இருவிதமென்று
பண்ணி அவற்றினிலக்கணமு முணர்த்துகின்றார்.

கண்டபொருளையிரட்டுறவேகருதலையந்திரியவே [ந்
கொண்டறிரிவாம்பெயர்சாதிகுணமேகன்மம்பொருளெனவை
துண்டவ்விகற்பவுணர்வினுக்குப்பொருளினுண்மைமாத்திரத்
விண்டவில்லாவறிவாகும்விகற்பமில்லாக்காட்சியே. [தின்

(இ-ள்). ஐயம்—சந்தேகமாவது; கண்டபொருளை—பொது விலக்கணமாகப்பார்த்த பதார்த்தத்தை; இரட்டுறவே கருதல்—குற்றிகொல்லோ மகன் கொல்லோவென்று இருதன்மையுறும்படி குறித்தல்; திரிபு—விபரீதமாவது; திரியவேகொண்டலாம்—சிப்பியை வெள்ளி என்று வேறுபடக்கிரகித்தலாம்; அவ்விகற்பவுணர்வினுக்கு—அந்தச் சவிகற்ப ஞானத்திற்கு; பெயர்சாதிகுணமேகன்மம் பொருளெனவைந் துண்டு—(தாண்டவனென்னும்) பெயர், (பிராமணனென்னுஞ்) சாதி, (சிவப்பனென்னுங்)குணம், (தேவபூசகனென்னுங்) கன்மம், (இவனென்னும்) பொருள் என ஐந்துண்டு; விகற்பமில்லாக்காட்சியே—நிருவிகற்பஞானமாவது; பொருளினுண்மைமாத்திரத்தின்—ஒன்றிதுவென்று வஸ்துவினது சத்துவமாத்திரத்திலே; விண்டவில்லாவறிவாகும்—(முன்னிருவிகற்பகாரணத்திலே சவிகற்பகாரியந் தோன்றுதாகில் உத்தரகாலஞ்

சவிகற்பமுண்டாகாதெனுஞ் சற்காரியவாதவார்த்தையினலே நாமசாதி குணக் கிரியைகட்குத் தன்னிடத்திற் சற்றே தோற்றுத லுண்டாயிருந் தாலும்) வசனித்தலுக்கேது வல்லாதஞானமாகும். (௩)

நிருவிகற்ப சவிகற்ப ஞானமென்னும் பிரமிதி பலவத்தாகிய பிரத்தியட்சப் பிரமாண முதலாகிய பிரமாணத்தினது பேதங்களைக் கூறுகின்றார்.

காண்டல்வாயின்மனந்தன்வேதனைக்காட்சியோடியோகக்
காட்சியென, வீண்டுநான்காமனுமானந்தனக்கும்பிறர்க்கு
மென்றிரண்டா, மாண்டவுரைதந்திரமந்திரமுபதேசச்சொல்
லெனமூன்றும்,பூண்டவளவைக்கெதிர்புலன்றன்னியல்புபொ
துவென்றிரண்டாமே.

(இ-ள்). காண்டல்=பிரத்தியட்சப் பிரமாணமானது; வாயில்= இந்திரியப்பிரத்தியட்சம்; மனம்=மானதப்பிரத்தியட்சம்; தன்வேதனை யோடு=ஸ்வஸம்வேதனப்பிரத்தியட்சம், அந்தஸ்வஸம்வேதனப்பிரத் தியட்சத்தோடு;யோகக்காட்சியென=யோகப்பிரத்தியட்சமென; ஈண் டு=இந்தச்சைவத்தில்; நான்காம்=நான்குவிதமாம்; அனுமானம்=அனு மானப்பிரமாணமானது; தனக்கும்பிறர்க்குமென்றிரண்டாம்=தன்ன னுமானமென்றும் பிறரனுமானமென்று மிருவிதமாம்; மாண்டவுரை= மாட்சிமைபொருந்திய ஆகமப்பிரமாணம்; தந்திரமந்திர முபதேசச் சொல்லென=தந்திரகலை மந்திரகலை உபதேசகலை என்று; மூன்றும்= மூன்றுவிதமாம்; பூண்டவளவைக்கெதிர்புலன்=பொருளோடுபொருந் திய பிரமாணங்கட்கு முன்னாகியபிரமேயம்; தன்னியல்புபொதுவென் று=அசாதாரண லட்சணத்தை யுடையது சாதாரண லட்சணத்தை யுடையதென்று; இரண்டாமே=இரண்டுவிதமேயாம். (௪)

தன்னியல்பு பொதுவியல்பென்று சொல்லிய பிரமேயப் பொருளினதியற்கையைக் கூறுகின்றார்.

அன்னியசாதியுந்தன் சாதியுமகன்றுநிற்ற
றன்னியல்பன்னியத்தைத் தவிர்ந்துதன்சாதிக்கொத்த
றன்னியபொதுவியற்கை சொன்னவிவ்விரண்டினுள்ளே
மன்னியபொருளியாவு மடங்கிடுமானமுற்றால்.

(இ-ள்). (பதிபதார்த்தத்துள், அநாதிமுத்தசிவனுக்கு) அன்னிய சாதியும்—பசுபாசங்களையும்; தன்சாதியும்—ஆதிமுத்தசிவன் அபர

முத்தசிவன் இவர்களையும; அகன்று—நீங்கி; (அநாதிமுத்தனென்று) நிற்றல்—இருத்தல்; தன்னியல்பு—தனதசாதாரணலட்சணம்; அன்னியத்தை—பசுபாசங்களைமாத்திரம்; தவிர்ந்து—நீங்கி; தன்சாதிக்கொத்தல்—ஆதிமுத்தசிவன் அபரமுத்தசிவன் இவர்களுக்குச் சமமாகிச் சிவனென்று; நிற்றல்—இருத்தல்; துன்னியபொதுவியற்கை—பொருந்தியசாதாரணலட்சணம்,

(ஆதிமுத்தசிவனுக்கு) அன்னியசாதியும்—பசுபாசங்களையும், தன்சாதியும்—அநாதிமுத்தசிவன் அபரமுத்தசிவன் இவர்களையும், அகன்று நீங்கி; (ஆதிமுத்தசிவனென்று) நிற்றல்—இருத்தல், தன்னியல்பு—தனதசாதாரணலட்சணம், அன்னியத்தை—பசுபாசங்களைமாத்திரம், தவிர்ந்து—நீங்கி, தன்சாதிக்கொத்தல்—அநாதிமுத்தசிவன் அபரமுத்தசிவனிவர்களுக்குச் சமமாகிச்சிவனென்று, நிற்றல்—இருத்தல், துன்னியபொதுவியற்கை—பொருந்தியசாதாரணலட்சணம்,

(அபரமுத்தசிவனுக்கு) அன்னியசாதியும்—பசுபாசங்களையும், தன்சாதியும்—அநாதிமுத்தசிவன் ஆதிமுத்தசிவனிவர்களையும், அகன்று—நீங்கி (அபரமுத்தசிவனென்று) நிற்றல்—இருத்தல், தன்னியல்பு—தனதசாதாரணலட்சணம், அன்னியத்தை—பசுபாசங்களைமாத்திரம், தவிர்ந்து—நீங்கி, தன்சாதிக்கொத்தல்—அநாதிமுத்த சிவன் ஆதிமுத்த சிவனிவர்களுக்குச் சமமாகிச்சிவனென்று, நிற்றல்—இருத்தல், துன்னியபொதுவியற்கை—பொருந்திய சாதாரணலட்சணம்;

(பசுபதார்த்தத்துள், விஞ்ஞானகலனுக்கு) அன்னியசாதியும்...பதிபாசங்களையும், தன்சாதியும்—பிரளயாகலன்சகலனிவர்களையும், அகன்று—நீங்கி, (விஞ்ஞானகலனென்று) நிற்றல்—இருத்தல், தன்னியல்பு—தனதசாதாரணலட்சணம், அன்னியத்தை—பதிபாசங்களை மாத்திரம் தவிர்ந்து—நீங்கி, தன்சாதிக்கொத்தல்—பிரளயாகலன் சகலனிவர்களுக்குச் சமமாகிப் பசுவென்று, நிற்றல்—இருத்தல், துன்னியபொதுவியற்கை—பொருந்திய சாதாரணலட்சணம்,

(பிரளயாகலனுக்கு) அன்னியசாதியும்—பதிபாசங்களையும், தன்சாதியும்—விஞ்ஞானகலன்சகலன் இவர்களையும், அகன்று—நீங்கி, (பிரளயாகலனென்று) நிற்றல்—இருத்தல், தன்னியல்ப—தனதசாதாரணலட்சணம், அன்னியத்தை—பதிபாசங்களைமாத்திரம், தவிர்ந்து—நீங்கி, தன் சாதிக்கொத்தல்—விஞ்ஞானகலன் சகலனிவர்களுக்குச் சமமாகிப் (பசுவென்று) நிற்றல்—இருத்தல், துன்னியபொதுவியற்கை—பொருந்திய சாதாரணலட்சணம்,

(சகலனுக்கு) அன்னியசாதியும்—பதிபாசங்களையும், தன்சாதியும்—விஞ்ஞானகலன் பிரளயாகலன் இவர்களையும், அகன்று—நீங்கி, (சகலனென்று) நிற்றல்—இருத்தல், தன்னியல்பு—தனதசாதாரண லட்சணம், அன்னியத்தை—பதிபாசங்களை மாத்திரம், தவிர்ந்து—நீங்கி, தன்சாதிக்கொத்தல்—விஞ்ஞானகலன் பிரளயாகலனிவர்களுக்குச் சமமாகி, (பசுவென்றுநிற்றல்)—இருத்தல், துன்னியபொதுவியற்கை—பொருந்திய சாதாரணலட்சணம்,

(பாசபதார்த்தத்துள், மலத்துக்கு) அன்னியசாதியும்—பதி பசுக்களையும், தன்சாதியும்—மாயாகன்மங்களையும், அகன்று—நீங்கி, (மலமென்று) நிற்றல்—இருத்தல்; தன்னியல்பு—தனதசாதாரணலக்ஷணம்; அன்னியத்தை—பதிபசுக்களைமாத்திரம், தவிர்ந்து—நீங்கி, தன்சாதிக்கொத்தல்—மாயாகன்மங்கட்குச் சமமாகிப் பாசமென்று நிற்றல்—இருத்தல், துன்னியபொதுவியற்கை—பொருந்தியசாதாரணலட்சணம்,

(மாயைக்கு) அன்னியசாதியும்—பதிபசுக்களையும், தன்சாதியும்—மலகன்மங்களையும், அகன்று—நீங்கி, (மாயையென்று) நிற்றல்—இருத்தல், தன்னியல்பு—தனதசாதாரணலட்சணம், அன்னியத்தை—பதிபசுக்களைமாத்திரம், தவிர்ந்து—நீங்கி, தன்சாதிக்கொத்தல்—மலகன்மங்கட்குச்சமமாகிப்பாசமென்று, நிற்றல்—இருத்தல், துன்னிய பொதுவியற்கை—பொருந்தியசாதாரணலக்ஷணம்,

(கன்மத்துக்கு) அன்னியசாதியும்—பதிபசுக்களையும், தன்சாதியும்—மலமாயைகளையும், அகன்று—நீங்கி, (கன்மமென்று) நிற்றல்—இருத்தல், தன்னியல்பு—தனதசாதாரண லட்சணம், அன்னியத்தை—பதிபசுக்களைமாத்திரம், தவிர்ந்து—நீங்கி, தன்சாதிக்கொத்தல்—மலமாயைகட்குச்சமமாகிப் பாசமென்று நிற்றல்—இருத்தல், துன்னிய பொதுவியற்கை—பொருந்திய சாதாரணலட்சணமாம்,

சொன்னவிவ்விரண்டினுள்ளே = கூறிய பொதுச் சிறப்பென்கிற இந்த விரண்டினுள்ளே; மன்னியபொருளியாவும் = நிலைபெற்ற பதார்த்தங்களெல்லாம்; மானமுற்றுல் = அளவையைப்பொருந்தில்; அடங்கிடும் = அந்தர்ப்பவிக்கும். (ரு)

பிரத்தியட்சம்நான்கினதிலட்சணம் இரண்டு திருவிருத்தத்தாற் கூறுகின்றார்.

உயிரினோடுணர்வுவாயிலொளியுருவாதிபற்றிச்
செயிரொடுவிகற்பமின்றித்தெரிவதிந்திரியக்காட்சி

யயர்விலிந்திரியஞானமைம்புலன்சார்ந்துயிர்க்கண்
மயர்வறவந்தஞானமானதக்காண்டலாமே.

(இ-ள்). உயிரினேடு=ஆன்மாவாகிய பிரமாதாவோடு; உணர்வு= சிற்சத்தியாகிய பிரமாணம்; வாயில்=(மலத்தைச் சற்றேநீக்கி அந்தச் சிற்சத்தியைச் சற்றேவிளக்காநின்று தனக்குப் பிரேரகமாயிராநிற்குங் கலை வித்தைஇராகங்களோடுகூடிய மனசினலே செலுத்தப்பட்ட) இந்திரியம்; ஒளி=காட்டாகிய சோமசூரியாக்கினிப்பிரகாசம்; உருவாதி= உருவ சத்தப் பரிசரச கந்தங்களிவைகளை; பற்றி=பொருந்தி; செயிரொடு விகற்ப மின்றி=குற்றமாகிய ஐயந்திரிபொடுவிகற்பமின்றி, தெரிவது=நிருவிகற்பமாகக் காண்பது; இந்திரியக்காட்சி=வாயிற் பிரத்தியட்சம்;

அயர்விலிந்திரியஞானம்=முன்சொன்ன சோர்வில்லாத வாயிற் பிரத்தியக்ஷமாகிய நிருவிகற்ப ஞானம்; ஐம்புலன் சார்ந்து=சத்தப் பரிச ரூப ரச கந்தங்களாகிய பஞ்ச விடயங்களைப்பொருந்தி; மயர்வற= மயக்கமாகிய ஐயந்திரிபுகளின்றி; உயிர்க்கண்=ஆன்மாவினது புத்தி கலுஷித சிற்சத்தியினிடத்ததுவிதுவாக; வந்தஞானம்=விளங்கிய சவிகற்பஞானம்; (பௌத்தப்பிரமிதிப் பிரத்தியக்ஷமாயிருந்தாலு மிஃதின்னரூபமாகவேண்டுமெனும் மனசினது சங்கற்பசந்தேக ஞானமுன்னகை உண்டாதலினுல்) மானதக்காண்டலாமே = மானசப்பிரத்தியக்ஷமுமாமே;

புத்திக்கு மனசென்னும் பெயர் பொது, பௌத்தமென்றே செம்மைப்பொருள்,

தத்துவவியாபாரமுறைமை சற்றே சாற்றுகின்றோம். ஒரு சிற்சத்தி ரூபமாகிய ஓர்ஞானந்தானே தற்பொருளறிவென்றும் பிறப்பொருளறிவென்றும் இருவிதமாயிருக்கும்,

அப்படியிருந்தாலும், பிறப்பொருளறிவாயிருந்த தான்றனே தற்பொருளறிவாயிருந்து பசுப்பற்றிருதன்மையாயிருக்கும்,

பிறப்பொருளை அறியுமிடத்துத் தற்பொருளறிவானது தற்பொருளறியுஞ் சமுதாய சித்துரூப மாதிருரூப முண்மணந்த கர்த்திருரூப சிவரூப ஆன்மரூப பிரத்தியக்குரூப சிற்சத்தியென்கின்ற பிரமாதா,

பிறப்பொருளறிவானது கரணரூப சிவசத்திரூப ஆன்மசத்திரூப பராக்குரூப சிற்சத்தியென்கிற பிரமாணம்,

பிரமாணத்தினதறிதற்றொழிலானது கிரியை என்கிற பிரமிதி,

பிறப்பொருளானது கர்த்திரு கரணக்கிரியைகட் கன்னியமாகிய கன்மமென்கிற பிரமேயம்;

தற்பொருளறியுமிடத்து, தற்பொருளறிவு பிறப்பொருளறிவென்கிற விரண்டிற்கும் பொதுநடுச்சித்துருப மாத்திர அந்தரான்மப் பிரேரகவறிவானது கர்த்திருரூபமாத்திர சிவரூபான்மரூப சிற்சத்தியென்கிற பிமாதா,

இப்பிரமாதாவொடு மணந்து பிறப்பொருட் பிரமாதாவாயிருந்த தற்பொருளறிவானது கரணரூப சிவசத்திரூப ஆன்மசத்திருப் பிரத்தியக்ஷருப சிற்சத்தியென்கிற பிரமாணம்,

பிரமாணத்தின தறிதற்றொழிலானது கிரியை என்கிற பிரமிதி,

பிறப்பொருளறிவானது பராக்ருப சிற்சத்தியென்கிற பிறப்பொருட் பிரமேயம்போலாது, பிறப்பொருட்பிரமாணரூபமாக அறியப்படும் பிரமேயம்.

சிவன் முத்தசிவன் அபரமுத்தசிவன் சீவன்முத்தசிவன் சீவான்மாவென்றுமைவர்க்கும் அவரவர்க்கன்னியமாகிய அவரவர் பிறப்பொருட் சிதசித்பிரமேயம் ஸ்வரூபமன்று, பின்னப்பொருள்; அவரவர் பிரமாதிருருபமும் பிரமாணரூபமுமாகியவிரண்டும், சீவான்மாவுக்கும் சீவன்முத்தசிவனுக்கும் அபரமுத்தசிவனுக்குமாத்திரஞ் செப்பப்படாநின்ற தடத்த பௌத்த சவிகற்ப ஞானமென்பது ஔபாதிகமாதலால், பௌத்த தூல விகற்பமாத்திரத்தைத் தள்ளி நீங்காமல்நிற்கும் உள்ளற்ப சாத்தசவிகற்ப நிருவிகற்ப ஞானப்பிரமிதிருபமும் பிறப்பொருட் பிரமாணமாகிய தற்பொருட் சிற்பிரமேயரூபமுமாக நான்கும், பகுப்பற்று வேறு வேறாய் அவரவர்க்கு நான்கு நான்காய்த் தடத்தலட்சணமன்றி ஸ்வரூபலட்சணமாய்த் தானேயிருக்கும்.

ஆகையாற் கலாதத்துவஞ் சிற்சத்திவிருத்தியிற் சிறிதுமலத்தைநீக்கிப் பிறப்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்துப் பகுப்பற்று ஞானசத்தி தன்மேலிச்சாசத்தி கோத்தகிரியாசத்திருப் ஈரொருகரண ரூபியாயிருக்கின்ற பராக்ருபிப் பெயரெய்திய எதிர்முகியாகிய சிற்சத்தியைப் பொருந்தி அதினிடத்திருள்ளற்ப சவிகற்ப நிருவிகற்ப ஞானமாய்;

இனிமேல் இந்திரியத்துவாரத்தால் வித்தியாதத்துவத்தினால் மலவாசனையைமாற்றிப் பிறப்பொருளை இதுவென் றறியும்படிக்கும் மேலிராகதத்துவங்கோத்த கலாதத்துவமென்கின்ற தன்னால் மலவாசனையை மாற்றி இதுகாரியமென் றறிந்து பிரகாசித்து இதினைநாசக்கடவ

தென்று சங்கற்பித்துப்பண்ணும் படிக்கும் அறிதல் பண்ணுதற் ருெழில்களை மலவாசனை மணக்கச் சற்றேவிளக்கி அப்போதுமாத்திரம் கரணகாரகமாயிருந்தது;

பின்னுடனுன்முகமாய்த் திரும்பிப் பிறப்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்துப் பகுப்பற்று ஞாதிரு கர்த்திருரூப ஈரொருகர்த்திரு ரூபியாயிருக்கின்ற பிரத்தியக்குரூபிப் பெயரெய்திய திரும்பிய முகசிற்சத்தியைப் பொருந்தி அதனெதிர்முக சிற்சத்திக்கரணங்கொண் டறிதல் பண்ணுதற்ருெழில்களைப் பண்ணுவிக்கும் சாமர்த்தியத்தையும் அச்சிற்சத்திப் பிறப்பொருள் காட்ட வச்சிற்சத்திகொண்டு பிறப்பொருளறியும் சாமர்த்தியத்தையும் விளக்கி அக்கலைகர்த்திருகராகமாயிருந்தது;

தற்பொருளறிதல்பண்ணுதலைக் குறித்துப் பகுப்பற்று ஞானசத்தி தன்மேலிச்சாசத்திகோத்த கிரியாசத்திரூப ஈரொருகரண ரூபியாயிருக்கின்ற பிரத்தியக்குரூபிப் பெயரெய்திய திரும்பிய முகியாகிய சிற்சத்தியைப் பொருந்தி அதிலறிதல் பண்ணுதற்ருெழில்களைச் சற்றே விளக்கிக் கரணகாரகமாயிருந்தது;

பின்னந்த எதிர்முக சிற்சத்தி திரும்பியமுக சிற்சத்திகளிரண்டிற்கும் பொதுஉடுச்சித்துரூப மாத்திர அந்தரான்ம கர்த்திருரூப மாத்திர சிற்சத்தியைப்பொருந்தி யதிற்றிரும்பியமுக சிற்சத்திக் கரணங்கொண் டறிதல் பண்ணுதற்ருெழில்களைப் பண்ணுவிக்குஞ் சாமர்த்தியத்தையும் அச்சிற்சத்தி தற்பொருள்காட்ட அச்சிற்சத்திகொண்டுதற்பொருளறியுஞ் சாமர்த்தியத்தையும் விளக்கி அக்கலைகர்த்திருகாரகமாயிருந்தது; அப்படியிருந்து நானறிவேன் நானறியாநிற்கின்றேன், நான் பண்ணுவேன், நான்பண்ணுநிற்கின்றேன் என்றும், அறிந்தபின்னும், பண்ணினபின்னும் நானறிந்தேன் நான் பண்ணினேனென்றும், உள்ளற்ப சவிகற்ப நிருவிகற்ப ஞானமாய் அகங்கார தூல விகற்பாஸ்பதமாய் அறிதல் பண்ணுதற் கிரமத்திற் கெர்வித்துச் சம்ரம்பித்து நிற்கும்; ஆதலால் கலைகர்த்திரு காரகமென்பதே முக்கியம்.

பிறப்பொருட் பிரமாணமென்கிற தற்பொருட் பிரமேயந்தான் ருனே பிரத்தியக்குரூப தற்பொருட் பிரமாதிருரூப பிரமாணரூபமாய் அதிலதிருக்குமித்து மேயவிலக்கணமாய் ஸ்புரித்து ஸ்வயம் பிரகாசமாய் நிரந்தரமாய்ச் சடிதிவிளங்கிவிடுதலால், அநவஸ்தையின்றித் தற்பொருட் பிரமேயவிஷயத்திற் பிரமாதாமுதலிய நான்குஞ் சுவரூபமாயிருந்தாலும் பிரமாதாவல்லாப் பிரமாதா, பிரமாணமல்லாப்பிரமாணம், பிரமிதியல்லாப்பிரமிதி, பிரமேயமல்லாப்பிரமேய மெனஅறிக.

பிறப்பொருட் சிற்பிரமேயவிஷயத்திலுஞ் சற்றே சிறப்பொப்பிருத்தலால் அப்படி யொருபடியறிக.

பின்பு வித்தியாதத்துவம் கலையினுலொருபடி விளங்கிய கரணரூப பராக்குரூப ஞானசத்திரூப சிற்சத்தியைப் பொருந்தி மலவாசனையை நீக்கித் தெளிவு பண்ணிக் கரணகாரகமென்று பெயர்பெற்றுநிற்கும்.

இராகதத்துவம் கரணரூப பராக்குரூப இச்சாசத்திரூப சிற்சத்தியைப்பொருந்திப் போக்கியப் பொருளில் உபரஞ்சிப் பித்துக் கரணகாரகமென்று பெயர் பெற்று நிற்கும்.

காலதத்துவம் நியதிதத்துவத்தாற் போக்கியப் பொருளி னியமித்த புருஷனையேவி நியதியோடு கரணகாரகம் காத்திரு காரகமுமன்றிக் காரணமாத்திரமாயிருந்தாலும் ஒருபிரகாரத்தாற் கர்த்திரு காரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

புருஷதத்துவம் அவிவேகப் பிரதிபத்திவிபரீத சுகதுக்கமோக வேதனபோகக்கிரியையைப்பண்ணும் போக்தாவாய் கலையோடுகூடிக் கர்த்திருகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்.

பிரகிருதி தத்துவம் சாதாரணசாதாரணமுமாய்ப் பிரகாசப்பிரவிர்த்தி நியமவியாபார சீலகுண காரியத் துவாரத்திலுலே தனக்குக்கீழுள்ள போக்கிய போசகப் பொருள்களையுண்டாக்கிக் குணதத்துவத்தோடு கூடக்காரண மாத்திரமாய் நிற்கும்.

தன்மாத்திரைகளும் பூதங்களுமாகிய தேரிற்றேராழிபோலிருக்கும் சக்ஷு தத்துவமுதலிய ஞானேந்திரியம் இச்சாசத்திரூப சிற்சத்தியைப்பொருந்திய விராகதத்துவத்தாற் செலுத்தப்பட்டு, அந்தச்சிற்சத்தியைப்பொருந்திய விராகத்துவ மணந்த மனசினு லேவப்பட்டு பராக்குரூபஞானசத்திரூப சிற்சத்தியைப்பொருந்தி முன்சொல்லிய புறப்போக்கியப்பொருளைக் காண்பித்து,அந்தச் சிற்சத்திபொருந்திய வித்தியா தத்துவத்தினுற் புருஷனுன்றிது வென்றறியும்படி பண்ணிக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்; அந்த அறிவு நிருவிகற்ப ஞானமென்றும் இந்திரியப் பிரத்தியக்ஷமென்றுஞ் சொல்லப்படும்; அவ்வறிவை அவ்விராகதத்துவங் கலக்கும்;

திரும்பராகதத்துவத்தோடு சோத்துநிற்கு மனதத்துவம் அந்த நிருவிகற்பஞானத்திற் ருேற்றும் பொருள்களிலொன்றை விகற்பித்துத் தூக்கி, இது வனிதையினது ரூபமாக வேண்டுமென்றிதுமுத லுரூபங்களைச் சந்தேகமாகச் சங்கற்பித்தகங்காரபுத்திப் பிரேரகமாய்க் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்;

கலாதத்துவத்தோடு கோத்துநிற்கு மகங்காரதத்துவம் பிறப்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்து ஞாதிருகர்த்திருருபிமாத்திரமாய்த் தற்பொருளறிதல் பண்ணுதலைக்குறித்து ஞானசத்திமேலிச்சாசத்திகோத்த கிரியாசத்திரூப கரணரூபியாயும் இருக்கின்ற பிரத்தியக்ருரூபிப்பெயரெய்திய திரும்பிய முகியாகிய சிற்சத்தியையும் எதிர்முக சிற்சத்தி திரும்பிய முகசிற்சத்திக ளிரண்டிற்கு மந்தரான்ம சிற்கர்த்திருரூபமாத்திர சிற்சத்தியையும் கலாதத்துவத் துவாரத்தாற்பொருந்தி அதனதனிடத் தறிதல் பண்ணுதற்றொழில்களையும், அந்தத்தொழில்களைப் பண்ணுவிக்குஞ் சாமர்த்தியத்தையும் முறைமையிற் சமர்ப்பித்து இந்த இந்திரிய நிருவிகற்பஞானமெதைப் பற்றி வந்ததோ அதை நிச்சயமாக, நானறிவேன், நானறியாநிற்கின்றேன், நான்பண்ணுவேன், நான் பண்ணுநிற்கின்றேனென்றும், அறிந்தபின்னும் பண்ணினபின்னும், நானறிந்தேன், நான் பண்ணினேனென்றும், அந்தக் கலையினு லுற்பவித்த தற்பொருள் விஷய நிருவிகற்ப ஞானத்தைப் பற்றிப் பிறக்குஞ் சவிகற்பஞானமாய்ப் பிறப்பொருள் விஷய வித்தியாசலக்ஷித பராக்ருரூப ஞானக்கிரியாசத்தியை விஷயீகரித்துக் செர்வித்து சம்ரம்பித்து நிற்கும், ஆதலால், ஒரு பிரகாரத்தாற் கரணகாரகமென்றும் பிரதானமாகக் கர்த்திருகாரகமென்றும் பெயர்பெற்று நிற்கும்.

பின்பு வித்தியாதத்துவத்தோடு கோத்துநிற்கும் புத்திதத்துவம் கரணரூப பராக்ருரூப ஞானசத்திரூப சிற்சத்தியைப் பொருந்தி இவள் வனிதை, இதுமாலை, இதுசந்தனம், இது சர்ப்பம், இது முள், இதுவிடம் இது பிற்காரத மென்றிவை முதற் பொருள்களை நிச்சயித்துக் கரணகாரகமென்று பெயர்பெற்று நிற்கும்; அந்த நிச்சயிக்கப்பட்ட பொருள் ஞேயமாத்திரத்தினாலேதான், போகத்துக்குப் பொருந்திய கன்மேந்திரியங்களினாற் காரியப்பட்டுத் தான், புத்தியிற் பிரதிவிம்பிக்கும்; புத்தியசனுற் சுகரூபையாயுந் துக்க ரூபையாயும் மோகரூபையாயும் இருக்கும்; அந்தச் சுகமுதலாகிய மூன்றையும் ஒவ்வொன்றாகப் பராக்குருப ஞானசத்தி பொருந்திய வித்தியாதத்துவமொன் றிதுவென்று நிருவிகற்பமாகப் பார்க்கும்; அந்தப் பார்வையைப் பராக்குருப விச்சாசத்தியைப் பொருந்திய விராகதத்துவ முபரஞ்சிப்பித்துக் கலக்கும்; அந்த விராக தத்துவத்தோடு கோத்த அந்த விச்சாசத்தி பொருந்திய மனத்தத்துவ மிது சுகரூபமாகவேண்டும், இது துக்கரூபமாகவேண்டும், இது மோகரூபமாகவேண்டும் என்று விகற்பித்து ஒவ்வொன்றைத் தாக்கிச் சங்கற்பிக்கும்; கலாதத்துவத்தோடு கோத்துப் பிரத்தியக்ருப ஞான

சத்திபொருந்திய அகங்காரதத்துவம் வித்தியாதத்துவத்தினாற் றோற்றும் நிருவிகற்பஞானமெதை விஷயீகரித்து வந்ததோ, அந்த வஸ்துவை நானிச்சயிப்பேனென்று கொர்விக்கும்; பின்பு தற்பிரகாசப்பிறப்பிரகாசமாயிருக்கின்ற புத்தி தத்துவத்தினது முன் பிரபஞ்சித்த பராக்குருபசிற்சத்தி விர்த்திக்குறி நிருவிகற்பப் பிறப்பிரகாசத்தோடு கோத்த தற்பிரகாசத்தி லந்தச் சுகதுக்க மோகங்கள் இதுசுகம், இது துக்கம், இது மோகமென்று தோற்றும்; அந்தச் சுகதுக்க மோகங்களோடு பகுப்பற்றிருக்கும் அந்தப் புத்தியத்தியவசாய சவிகற்பஞானத்தினின்றுமந்தப்புத்திப் பிரகாசத்தோடு கலந்து நின்றதனறிதற்றொழில்களோடும் வித்தியா தத்துவத்தோடு கோத்துக் கிளம்பி யந்தப் புத்திப்பிரகாசாம்ச மாத்திரபோக்கியத்தின் மேல் விழுந்த வெதிர்முக ஞானசத்தியி லந்தப் புத்திப் பிரகாசத்தினது விகற்பந்தோய்ந்து, சற்றே சவிகற்ப ஞானமாய் வரும் புத்தியத்தியவசாய முற்றும் பொருந்திய பௌத்த சுகதுக்கமோகபோக மென்கிற வேதனையினது சுபூர்த்தி அட்பூர்த்தி ஸ்வரூப சுபானந்த துரானந்தமாய்த் தோற்றும் போகத்தை யகங்காரத்தோடு கோத்துத் திரும்பிய முகசிற்சத்தி கலையினாற் றன்னிடத்தின் முன்றோன்றிய உள்ளற்ப சவிகற்ப நிருவிகற்ப ஞானமான சுவசம்வேதனைப் பிரத்தியக்ஷத்தை யகங்கார விகற்ப சவிகற்பமாக்கி நான்சுகி, நான்றுக்கி, நான்மோகி என்று போகோப போகமாய்ப்புசிக்கும் அனுபவிக்கும்;.

பராக்குருபி என்றும் பரோன்முகி என்றும் பரசம்வித்தென்றும் சத்தி என்றும் எதிர்முக சிற்சத்திக்குப் பெயரொன்றறிக; பிரத்தியக்குருபியென்றும் ஸ்வயோன்முகி என்றும் சுவசம்வித்தென்றும் சத்திமானென்றும் சிவனென்றும் ஆன்மாவென்றும் திரும்பிய முகசிற்சத்திக்குப்பெயரொன்றறிக.

அந்த எதிர்முக சிற்சத்தி திரும்பிய முகசிற்சத்திக ளிரண்டினதந்தரான்மாசிதான்மாவுக்கு மவரவரீருசத்திக்குள்ளாகுஞ் சிதந்தரான்மாவென்பதைக்குறித்துச் சிவனென்றுமான்மாவென்றும் பெயரென்றறிக; பின்னுமொரு சிற்சத்தியினுடைய வெதிர்முகரூபந் திரும்பிய முகரூபமே சத்தி என்றுஞ் சிவனென்றுஞ் சொல்லப்படுமாதலாற் றனது சத்தியைத் தவிரச் சிவன்றானென்பதில்லை என்பதுமப்படி யாதலாற் றனது சத்தியைத் தவிர ஆன்மாத்தானென்ப தில்லை யென்பது மறிக. திரும்பவந்த அகங்காரங் கலையினால் விளங்கிய கிரியாசத்தியைப் பொருந்தி

மனோசங்கற்பமுன்னாகப் பிராணவாயுக் கன்மேந்திரியங்களைச்செலுத்தி ஞானசத்தியாலறிந்த கடமுதற்காரிய பதார்த்தங்களைப்பண்ணும். (ரு)

அருந்தின்பதுன்பமுள்ளத்தறிவினுக்கராகமாதி
தருந்தவேதனையாங்காட்சிசமாதியான்மலங்கள்வாட்டிப்
பொருந்தியதேசகாலவியல்பகல்பொருள்களெல்லா
மிருந்துணர்கின்றஞானம்யோகநற்காண்டலாமே.

(இ-ள்). முன் சொன்ன முறைமையிற் புறம்பே பராக்குருப சிற்சத்தியைப் பொருந்தி நிருவிகற்பமாகப் பார்க்கும் வித்தியாதத்துவத்திற் பின் கோத்த விராகமுதற்புத்தி தத்துவமுடிவாகிய தத்துவங்களினால், முன்சொன்ன முறைமையில்வரும்; இதுமாலை, இதுசந்தனம், இவள்வனிதை, இதுபாம்பு, இதுமுள், இதுவிடம், இதுசிங்கநாதமென்று புத்தி நிச்சய புத்திப் பிரதிவிம்பங்களினாற் புத்தித்தத்துவத் துதிக்கும்,

அருந்தின்பதுன்பம்=போக்கியமாகிய சுக துக்க மோகங்களை; அராகமாதி=(திரும்பஉண்ணிருவிகற்பமாகப் பார்க்கும் வித்தியாதத்துவத்தின் பின்கோத்த) இராகதத்துவமுதற் புத்திதத்துவ ஸ்வப்பிரகாசமந்தமாகிய தத்துவங்கள்; உள்ளத்தறிவினுக்கு=ஆன்மாவினெதிர்முக சிற்சத்திக்கு; தரும்=கொடுக்கும்; திரும்பத் தன்னோடு பிரித்தற் கரிதாகிய சுகமுதலியவற்றைத் தனது சுகாதிவேதனா பூர்த்திக்குறிப் போகத்தோடெதிர்முக சிற்சத்தி முன்சொல்லியபடிக்குத் திரும்பிய முக சிற்சத்திக்குக் கொடுக்கும்;

(அது முன்சொல்லியபடி யனுபவிக்கு மந்தவனுபவம்)தன்வேதனையாங்காட்சி=ஸ்வஸம் வேதனப்பிரத்தியட்சம்; பலவிதமாயிருக்கின்ற சுத்தாவஸ்தைகளைச் சுருக்கிக் கிழாலவத்தைமுதலவத்தைகளிற் சாக்கிராவத்தை முதலைந்தையுந் தனது சாக்கிரமுதலைந்தவத்தைகளினாலே சயம்பண்ணுஞ் சுத்தாவத்தையில்,

சக்கிரமாவது—ஆசனப் பிராணாயாமங்களைப் பண்ணி இந்திரியங்களைச் சத்தாதிவிஷயங்களிலே நின்றுந் திருப்பித் தன் வசமாக நிறுத்தலாகிய பிரத்தியாகாரம்;

சொப்பனமாவது—சாலம்ப சிவயோகத்திற் சொருப சிவரூப சகள சகளாகள சாகார சிவனிடத்திற் பிராகிருத மனசைவைத்துநிறுத்தலாகிய தாரணை; திரும்ப நிராலம்ப சிவயோகத்தில் ஸ்வரூப சிவரூப நிஷ்கள நிஷ்களாதீத நிராதார நிராகார சிவனிடத்தில் முறைமையிற்

பிராகிருதமனசை நிர்விஷயமாய்ச் சுவலீனமாயிருக்கும்படி பண்ணித் தியானத்தினதெடுப்புக்குள்ளும் போய்த் தாக்குஞ் சிவசத்தியாகிய மனசினால் விளங்கிய தனது சிற்சத்தியாகிய மனசைச் சின்மாத்திரான் மாவில் வைத்துச் சிவசத்திக் கொப்ப விரித்துத் தியேய சிவத்தில் வைத்தலாகிய தாரணையுஞ் சுழுத்திக்குள்ளுந்தாக்குஞ் சொப்பனமாம்;

சுழுத்தியாவது—சவிகற்பமாயும் நிருவிகற்பமாயும் அந்தநால் வகை ஸ்வரூப சிவரூப விருசிவனை முறைமையிற் சிந்தனை பாவனை பண்ணுவனவாகிய வங்கசிவயோகமென்கிற தியானம்;

துரியமாவது தியானத்தசை வறுத்தலாகிய வங்கசிவயோகமென் கிற சமாதி;

துரியாதீதமாவது சமாதி சாமர்த்தியத்தினால் முறைமையிற் சவி கற்பமாயும் உள்ளற்பசவிகற்ப நிருவிகற்பமாயும் அந்த நால்வகைச் சுவரூப சிவரூப சிவப்பிரத்தியக்ஷமாகும் ஸ்வரூப சிவரூப சிவாபரோக்ஷமென்கின்ற ஸ்வரூப சிவரூப சிவசாக்ஷாத் காரமாகிய வங்கசிவ யோகம்.

(இப்படிச் சிவயோக முறைமை சுருக்கி இருத்தலால்) சமாதியால் மலங்கள்வாட்டி=சமாதி சாமாத்தியத்தினால் மலமாயாகன்ம சாமர்த் தியங்களைத் தடுத்து; பொருந்திய தேசகால வியல் பகல்பொருள்க ளெல்லாம்= தானிராநின்றவிடம், தானிரா நிற்குங்காலம், இந்தத் தே சகாலங்களினது முறைமையை நீங்கியும், நீங்காமலு மிருக்கின்ற சிவ முதல் நித்திய பதார்த்த முதற்பதார்த்தகளை யெல்லாம்; இருந்து=தா னிருந்த வோரிடத்திருந்து; உணர்கின்ற ஞானம்=சாலம்ப நிராலம்ப சிவயோக முறைமையிற் சவிகற்பமாயும் உள்ளற்ப சவிகற்ப நிர்விகற்ப மாயும் சாக்ஷாத்கரியா நின்ற சாக்ஷாத்காரம்; யோக நற்கண்டலாமே= யோகக் காட்சியென்கின்ற யோகப் பிரத்தியட்சமாமே.

அந்த இந்த ஸ்வஸம் வேத்தியமாம் பரானுபூதி பரியாய பரசம் வேதனாகார சிவரூப சிவானுபூதி விஷய ஊகமாகிய சுவத்தை விஷயீ சரித்துவரும் சுவசம்வேதனுருப ஸ்வரூப சிவானுபூதி ஸ்வானுபூதிப் பிரத்தியட்சமுமாகுமே. (எ)

அனுமானப் பகுப் புணர்த்துகின்றார்.

பக்கமூன்றின்மூன்றேது வுடையபொருளைப்பார்த்துணரத்
தக்கஞானந்தன்பொருட்டாம் பிறர்பொருட்டாமனுமானந்
தொக்கவிவற்றாற்பிறர்தெளியச் சொல்லலாகுமச்சொல்லு
மிக்கவன்னுவபத்தினொடுவெதிரேகசொல்லெனவிரண்டாம்

இ-ள் பக்க மூன்றின் = பக்கம் சபக்கம் விபக்கம் என்கிற மூன்றினுள்; (மலையுலகு முதலிய பக்கத்தின்) உடையபொருளை = அந்தப்பக்கத்தினது சாத்தியதன்மமாகச் சாதிக்கப்படு மக்கினி கர்த்தா முதலிய பதார்த்தங்களை; பார்த்துணர = ஊகித்தறிய;

மூன்றேது = இயல்பேது காரியவேது அனுபலத்தியேது வெனக் காரணவேது தன்மவேது! ஆகமவேது முதலியவேதுபேதங்களையுந் தோற்றுவிக்குமேது மூன்று;

(தன் பொருட்டனுமானம்பிறர்பொருட்டனுமான மெனவனுமான மிருவிதமாதலால்) தக்கஞானம் = சொல்லிய மூன்றேது வினது தகைமைபொருந்திய தனதுசிற்சத்தி; தன்பொருட்டாம் = தன் பொருட்டனுமானம்; பிறர்பொருட்டாமனுமானம் = பிறர்பொருட்டனுமானம்;

தொக்கவிவற்ருல் = மூன்றுபக்கத்தோடுகூடின மரியாதை பொருந்திய முன்சொன்ன மூன்றேதுக்களால்; பிறர்தெளிய = (பிறரது சிற்சத்தியனுமானம் பிரகாசித்துப்)பிறர்-மறைந்தவக்கினி ஈசுரன் முதலிய பொருள்களையறிய;

சொல்லலாகும் = பிரதிஞ்ஞை எது திருட்டாந்தமுபநயம் நிகமன மென்னும் பஞ்சாங்கத்தைப் படித்தலாகும்;

அச்சொல்லும் = அந்தப்படனமும்; மிக்கவன்னுவயத்திஞெடு வெதிரேகச்சொல்லென விரண்டாம் = (மிக்கவன்னுவயச்சொல்)சாதன சாத்தியங்களினது மேன்மையாகிய வுண்மையைச் செப்புதல், (வெதிரேகச்சொல் =) மாறியில்லாமையைச் சொல்லுதல் என இரண்டுவிதமாம்.

பக்கமுதன் மூன்றினது பகுப்பிலக்கண முணர்த்துகின்ருர்.

மூன்றுபககம்பக்கநிகர்பக்கநிகரில்பக்கமெனத்
தோன்றும்பக்கந்துணிபொருளுக்கிடமாமுவமைநிகர்பக்க
மான்றபொருள்சென்றடையாதவிடமாநிகரில்பக்கமுத
லேன்றவிரண்டும்பொருளுண்மைக்கிடமாமொன்றுபொருளின்ரும்

(இ-ள்). மூன்றுபக்கம் = பககமூன்ருவன; பக்கம் நிகர்பக்கம் நிகரில் பக்கம் எனத்தோன்றும் = பக்கம் சபகக்ம் விபக்கமென வெளிப்படும் மூன்றினுள்,

பக்கம் = துணிபொருளுக்கிடமாம் = சாதிக்கப்படுவதாகிய வக்கினியீசுரன் முதலிய பதார்த்தத்துக்குத் தானமாகிய மலையுலகுமுதலாகிய பொருளாம்;

நிகர்பக்கம்=சபக்கம்=உவமை=திருட்டாந்தத்தானமாகிய பாக சாலைகுடமுதலாகிய இடம்;

நிகரில் பக்கம்=விபக்கம்; ஆன்ற பொருள் சென்றடையாத விடமாம்=மேம்பட்ட அந்தச் சாத்திய சாதனங்களாகிய அக்கினிதூம முதலிய பதார்த்தங்கள் போய்ப் பொருந்தாத மடுமுதலிய தானமாம்;

முதலென்ற விரண்டும்=முன் பொருந்திய பக்கசபக்கங்களிரண்டும்; பொருளுண்மைக்கிடமாம்=சாத்திய சாதனங்களின துண்மைக்குத் தானமாம்; ஒன்று=விபக்கம்; பொருளின்றும்=சாத்திய சாதனங்களில்லாததாம். (௯)

ஏது மூன்றினது பகுப்பிலக்கண முணர்த்து கின்றார்.

ஏதுமூன்றுமியல்புகாரியத்தோடனுபலத்தியிவை
யோதினியல்புமாமரத்தைக்காட்டலுறுகாரியம்புகைதன்
னாதியானவனல்காட்டலாகுமனுபலத்தியது
சீதமின்மைபனியின்மைகாட்டல்போலுஞ்செப்பிடிலே.

(இ-ள்). ஏது மூன்றும்=ஏதுக்கள் மூன்றுவகையா யிருக்கும்; இவை=இவை; இயல்பு=இயல்பேது; காரியத்தோடு=காரிய வேதுவோடு கூட; அனுபலத்தி=அனுபலத்தியேது; கிரமத்திலேயுதாகரிக்கின்றார்:

ஓதினியல்பு=சொல்லிய வியல்பேதுவாவது; மா மரத்தைக்காட்டல்=இது மா மரமென்கின்ற வேதுவான்மனசு குதிரைமுதலிய பிறவற்றிற் செல்லாம லியற்கையாக மாமரத்திற் செல்லுதலான் மாவென்கை மரத்தைக்காண்பிக்குமேது;

உறுகாரியம்=உற்றகாரிய வேதுவாவது; (மலையிது வன்னி யுடைத்துப் புகையுடைத்தாதலா லென்னும்) தன்னாதியானவனல் காட்டலாகும்=தனக்குக்காரணமாகிய வன்னியைக் காண்பிப்பதாகும்; புகை=தூம வேது;

அனுபலத்தியேது=அனுபலத்தி யேதுவாவது; செப்பிடிலே=சொல்லுமிடத்து; (பனியில்லை பனி ஞானுபாவத்தினாலென்று) பனியின்மை காட்டல்=பனியின தில்லாமையைக் காண்பிக்கும்; சீதமின்மைபோலும்=சீதமின்மையால் வரும்பனி ஞானு பாவமாகிய வேதுப்போலும்.

(இயல்பு=இயற்கை, காரியம்=பண்ணப்படுவது, அனுபலத்தி=ஞானுபாவம்.) (௧௦)

முன்சொல்லிய வன்னுவய வெதிரேக
இலக்கணங் கூறுகின்றார்.

புகையாலனலுண்டடுக்களைபோலென்னப்புகறலன்னுவயம்
வகையாமனலில்லாவிடத்துப்புகையின்றாகுமலரிஞெடு
முகையார்நீரிற்போலென்றுமொழிதல்வெதிரேகச்சொலிவை
தொகையாருறுப்பைந்தொடுங்கூடச் சொல்லுவாருமுளர்து
[ணிந்தே.

(இ-ள்). (இந்தமலையில்)அனலுண்டு = அக்கினியுண்டு; புகையால் = தூமமுடையதாதலால், (எங்கெங்கே புகையுண் டங்கங்கே யனலுண்டு); அடுக்களைபோ லென்னப்புகறலன்னுவயம் = பாக சாலைபோல என்று சொல்லல் அன்னுவயச்சொல்;

வகையாமனலில்லாவிடத்துப் புகையின்றாகும் மலரிஞெடு முகையார் நீரிற்போலென்று மொழிதல் வெதிரேகச்சொல் = எங்கெங்கே அக்கினியில்லை யங்கங்கேபுகையில்லை மடுவிற்போல என்றுசொல்லுதல் வெதிரேகச்சொல்;

இவை = அன்னுவயச்சொல் வெதிரேகச்சொல் இவைகளை; தொகையாருறுப்பைந் தொடுங் கூடச் சொல்லுவாருமுளர் துணிந்தே = முன் சொல்லிய மூன்றுறுப்பினோ டிரண்டுறுப்புக்கூட்டி கூட்டம்நிறைந்த பஞ்சாங்கங்களோடுங்கூட நிச்சயம்பண்ணி யுரைப்பாருமுளர்;

அது வருமாறு:—மலையிது வன்னியுடைத்து இது பிரதிஞ்ஞையென்கிறவவயம். புகையுடைத்தாதலால் இது வேது வென்கிற வவயவம். எங்கெங்கே புகையுண்டங்கங்கே வன்னியுண்டு; எப்படி? அடுக்களை; இது திருட்டாந்தமென்கிறவவயவம். அப்படி இந்தமலையும் புகையுடைத்து; இது உபநயமென்கிற அவயவம். ஆகையால், அப்படி வன்னியுடைத்து, இது நிகமனமென்கிற அவயவம். இப்படி அன்னுவயத்திலைந்துறுப்புங்காண்க.

மலையிதுவன்னியுடைத்து இது பிரதிஞ்ஞை யென்கிற வங்கம்; புகையுடைத்தாதலால், இதுவேது வென்கிற அங்கம்; எங்கெங்கே வன்னியில்லை அங்கங்கே புகையில்லை; எப்படி மடு, இது திருட்டாந்தமென்கிற வங்கம்; இஃதப்படியன்று; இது உபநயமென்கிற வங்கம்; ஆகையால், அப்படியன்று, இது நிகமனவென்கிற வங்கம்; இப்படி வெதிரேகத்திற் பஞ்சாங்கமுமறிக. (௧௧)

*பின்னுங் காண்டன் முதலிய மூன்றினு
மூன்றனுமான முணர்த்துகின்றார்.*

போதுநாற்றத்தாலறிதல்பூர்வக்காட்சியனுமான
மோதுமுரையாலறிவினளவுணர்தல்கருதலனுமான
நீதியான்முற்கனமபலநிகழ்வதிப்போதிச்செய்தி
யாதியாகவரும்பயனென்றறிதலுரையாலனுமானம்.

(இ-ள்). (இவ்வழியின தொருபுறத்துத் தாழைப்பூவுண்டு, பூரு வங்கண்டு முகந்த தாழைப்பூ மணத்துக்கொத்த சாதியமணம் வீசலா லென்று) போது=புட்பத்தை; நாற்றத்தால்=மணத்தால்; அறிதல்= தெரிதல்; பூர்வக்காட்சி யனுமானம்=முன்னும் பின்னும் பிரத்தியக்ஷ யோக்கியப்பொருளை யுணர்த்துதலாற் பிரத்தியட்சானுமானம்; (இது தன்மானுமானம் திருட்டானுமானமென்றுமாம்).

நமதிடத்துச் சாத்திரப்பொருளைப் போதிக்கு முதிர்ந்த வார்த்தை மானசப்பிரத்தியக்ஷத்திற் றோற்றும் முதிர்ந்த புத்தி பூர்வமாய் வருதல் கண் டிவன்முதிர்ந்த புத்திமான்;சாத்திரப்பொருள் போதிக்கு முதிர்ந்த வார்த்தை வசனித்தலால், நம்போல்வாரி லொருவன்போ லென்று பிறன் ஓது முரையாலறிவினளவுணர்தல்.

கருதலனுமானம்=(பிறரறிவுயோகிக்கு மாத்திர மன்றி யொருவர்க்கும் பிரத்தியக்ஷமன் றுதலாற், புத்திபூர்வமாய் வார்த்தை வருமென்றனுமிதித்தறிந்த) ஓது முரையால் அறிவினதுயர்ச்சியை யனுமித்த லனுமானனுமானம்; இது காரியானுமானம் (சாமானிய) திருட்டானமான மென்றுமாம்;

இப்போது நிகழ்வது=(முன்சொன்ன முறைமையிற் புத்தியிலிருக்கும் போசக கன்ம நிமித்தமாக உண்டாகிய புறப்போக்கியப்பொருள் முன்னாகப் புத்தியில்)இப்போதுண்டாகா நிற்கின்ற சுகதுக்க மோகங்கள்; நீதியான் முற்கன்மபலம்=முறைமையின் முந்திய சன்மங்களிற் செய்த புத்தியிற் சஞ்சிதகன்மத்திலெடுத்துச் சேர்த்த பக்குவப் பிராரத்தகன்மத்திற் போசக கன்ம நிமித்தமாய் முதற்காரணமாகிய போக்கிய கன்மபரிணாமமாகிய பலம் (சுகதுக்கமோகபலங் கன்மகாரியமென்றாகமம் சொல்லுதலால்);

இச்செய்தியாதியாக=பிராரத்தம்புசிக்குமிடத்துவரும் இவ்வாகாமிய கன்மங்காரணமாக;பயன்=சுகதுக்கமோகங்கள்; வரும்=(சுவர்க்க நரகங்களிலேயும் சுவர்க்க நரகசேடமாகிய பூலோகத்திலேயும் இனி

மேல்) வந்துபொருந்தும்; (சுகதுக்கமோகபலகாரணம் கன்மமென்றுக மம் சொல்லுதலால்); என்றறிதல்=என அறிதல்; உரையா லனுமான ம்=இவ்விரண்டனுமானமுமாகமானுமானம்.

கிரமத்திலே காரியானுமானமென்றும் காரணனுமானமென்றுஞ் சொல்லப்படும்; திரும்ப விரண்டுஞ் சாமானியத்தினால் திருட்டானுமா னமென்றுஞ் சொல்லப்படும். (கஉ)

ஆகமத்தினது பகுப்பிலக்கண முணர்த்துகின்றார்.

அனாதியேயமலனாயவறிவனூலாகமந்தான்
பினாதிமாறின்றிப்பேணறந்திரமந்திரந்தான்
மனாதிகளடக்கித்தெய்வம்வழிபடும்வாய்மையாகுந்
தனாதியீறிலாதான்றன்மையுணர்த்துவதுபதேசந்தான்.

(இ-ள்). ஆகமந்தான்=சத்தப்பிரமாணந்தான்; அனாதியேயமல னாய=அநாதிமலமுத்தசிவனாகிய;அறிவனூல் சர்வஞ்ஞனது சாத்திரம்;

அந்த ஆகமந் தந்திரகலையென்றும் மந்திரகலையென்றும் உபதேச கலையென்றும் மூன்றுவிதமாம்; அம்மூன்றினுள்,

தந்திரம்=தந்திரகலை யாவது; (சரியா கிரியா பாதப் பகுப்பாத லால்) பினாதிமாறின்றிப் பேணல்=சத்தசாமர்த்தியம் அர்த்த சாமர்த் தியம் வஸ்து சாமர்த்தியங்களாற் பின் முன்னாகமாந்தர விரோத மின்றிச் சரியா கிரியா கிருத்தியம் போதிப்பது;

மந்திரந்தான்=மந்திரகலையாவது; (யோகபாதப் பகுப்பாதலான்) மனாதிகளடக்கி=ஆசன மந்திர செபத்தோடு பிராணயாமம் பிரத்தியா காரம் தாரணை யிவைகளாற் சித்தேந்திரியங்களை நிறுத்தி; தெய்வம் வழிபடும் வாய்மையாகும்=சுத்தபஞ்சாட்சர செப சிவத்தியான சிவ சமாதி சீவன் முத்த சிவசாக்ஷாத்கார அங்காங்கி யோகங்களை யுள்ள முறைமை போதிப்பதாகும்;

உபதேசந்தான்=உபதேசகலையாவது தனாதி யீறிலாதான் றன் மை யுணர்த்துவது=பசுபாச பதார்த்தங்களினதி லக்ஷணங்களோடு கூடத் தனதுற்பத்தி நாசங்கள் காணனதி லக்கணங்களைப் போதிப்பது.

காண்டன் முதலியவளவைகளினதிலக்கணங்களைக்கூறி
யனுமானப் பிரமாணத்தில் வரு மாபாசங்களைச்
சொல்கின்றார்.

ஈண்டுபக்கப்போலிநான்கேதுப்போலியொருமூன்றும்
வேண்டுமெழு மூன்று விளங்குமுவமைப்போலியீரொன்பான்

காண்டுந்தோல்வித்தானமிரண்டிருபத்திரண்டாங்கருதவிவை
யாண்டுமொழிவரிவையெல்லாமளக்கிலறுபத்தைந்தாகும்.

(இ-ள்). ஈண்டு=அனுமானப் பிரயோசம் பண்ணுமிடத்து; பக்சப் போலிநான்கு=முன்சொன்னபக்கம்போலத் தோன்றியல்லவாய்ப் போம் பக்காபாசம் நான்கு; ஏதுப்போலி யொரு மூன்றும்=முன் சொன்ன வேதுப்போலத் தோன்றி யல்லவாய்ப் போமேத்துவாபாச மூன்றும்; (அந்தமூன்றுந்தானே)எழுமூன்றுவேண்டும்=இருபத்தொன்றுக விரும்பப்படும்; விளங்கு முவமைப்போலி=முன்சொன்ன திருட்டாந்தம் போலத் தோன்றியல்லவாய்ப் போம் திருட்டாந்தாபாசம்; ஈரொன்பான்காண்டும்=பதினெட்டாகப் பார்ப்போம்; தோல்வித் தானமிரண்டு; கருதில்=விசாரிக்கில்; இவை=இந்த நிக்கிரகத்தானங்கள்; இருபத்திரண்டாம்=இருபத்திரண்டாம்; ஆண்டு மொழிவர்=இவற்றின் மேலுஞ் சொல்வார்கள்; இவையெல்லாம்=முன்சொல்லிய பக்கப்போலி முதலியவெல்லாம்; அளக்கில்=பகுப்புத் தொகை பண்ணிப் பார்க்கில்; அறுபத்தைந்தாகும்=அறுபத்தைந்தாம்.

இவற்றிற்கு தாரணங்கள் காட்டில் விரியும்; திருமறைஞான தேசிகரது விரிந்த உரையில் முதிர்ந்தோர் காண்பிக்க வொரு பிரகாரங் காண்க.

இப்படி யளவைகளினதி லக்ஷண மறிவிக்கப்பட்டபடியால், நேத்திர முதலிய விந்திரிய விளக்கு, புகைமுதலிய காரியலிங்கவிளக்கு, சிவாகம முதலிய சத்தவிளக்கு இந்த மூன்றுவிளக்கிற் பின் முன் கோத்த சிவசத்தி விளக்கு;

இந்த நான்கு விளக்குக்களோடு, விளக்கவிளங்குஞ் சம்பந்த வதியாகுஞ் சீவான்மசிற்சத்தியும், சீவன்முத்தான்மசிற்சத்தியும் தனித்தனி இந்திரியப் பிரத்தியக்ஷப் பிரமாணமென்றும், அனுமானப் பிரமாணமென்றும், சத்தப் பிரமாணமென்றும், சீவன் முத்தான்ம சிற்சத்தி மாத்திர யோகிப் பிரத்தியக்ஷப் பிரமாணமென்றும், தடத்தலட்சணமாமுபாதியா னுன்காயுள்ளொரு சுவரூபலக்ஷணப் பிரமாணமாயிருக்கும்;

ஆதலா லந்த நான்கு விளக்குந் தனது தனது சாமர்த்தியமுறைமையில் மலவிருளினது வாசனைபோகச் சீவானம சீவன் முத்தான்ம சிற்சத்திப் பிரமாணத்தை விளக்குமுபகாரத்தா லவர்களைக் குறித் துபகாரோப சாரப்பிரமாணம்; சிவசத்தி சிவனைமாத்திரங் குறித்து முக்கியப் பிரமாணம்; நிருபாதிகமாய் நிரபேக்ஷமாயிருக்கும்படி திரும்பத் திரும்பச் சிவசத்திவிளக்கு விரும்பாம லொருங்கே சிவசத்தி விளக்கி

ஞல் விளக்கப்பட்டுச் சுவயம் பிரகாசமாய் நிரதிசயமாய், சிவன் முதற் சர்வ பதார்த்தப் பிரத்தியக்ஷியாயிருக்கின்ற சிற்சத்திப் பிர மாண மொன்றுமாத்திர முடையனாய், நிரபேக்ஷனாய சிவதுல்லிய சிவனாயிருக்கின்ற முத்தான்மாவைக் குறித்துச் சிவசத்தி யுபகாரோப சாரங்களினாலும், பிரமாணமன்று, சிவனுக்கு மப்படி வேறொரு சிவ சத்தி பிரமாணமாய் வருமதனா லனவத்தை யாமாதலால்.

இப்படியிருக்கச் சிலர் ;ஆன்மாவுக்குப் பெத்தாவத்தையிற் சிற்சத் தியினது வித்தியாதத்துவ கலுஷிதாம் மிசம் பிரமாண ரூபம், வித்தியா தத்துவ கலுஷிதமல்லாத அம்மிசம் பிரமாதிரு ரூபம், அதனால் முத்தி யவத்தையிற் பிரமாதிரு ரூப மாத்திரமே பிரமாண ரூப மில்லை யாத லான், முத்தான்மாவுக்குச் சிவனைப்பார்க்குமிடத்துச் சிவசத்தியே பிர மாணமென்றும், சிலர் ஆன்ம முத்தான்மாக்க ளிருவர்க்குஞ் சிவசத்தி முக்கியப்பிரமாணமென்றும், சங்கிராந்தவாதி ஆவேசவாதி பிரயோச் சிய கர்த்திருத்துவவாதிமதமென்கிற மும்மதப் பிசாசா வேசிகளாய்ப் பிரஞ்ஞையின்றிப் பிரலாபிக்கின்றார்கள்; அவர்கள் சுத்தசிவ சித்தாந்த மந்திரவாதிகளாலந்தப் பிசாசோடப் பிரஞ்ஞை பெறுவார்கள்.

அந்த மந்திரவாதிகள் மந்திரோபதேசமாவது வித்தியாதத்துவ கலுஷித சுவரூபம் பிரமாண லக்கணமென்று பேசுதனன்றன்று; அது சிவசத்திக் கில்லாமையாற் சிவசத்திப் பிரமாணமே யில்லையாமென்று சிவனுக்கும் முத்தான்மாவுக்கும் பிரமாணக் கண்ணில்லாமையா லந்த கர்களாய் விடுவார்களாதலால், வேறொரு பிரகாரத்தினாலே சிவசத்திப் பிரமாணமுண் டென்றால், அது சிவனுக்கு முத்தசிவன் முதற்பொருள் களைப் பார்க்குமிடத்துப் பிரமாணம் முத்தான்மாவாகிய சிவனுக்குச் சிவன் முதற்பொருள்களைப் பார்க்குமிடத்துப் பிரமாணமன்று;ஆயிரம் விளக்கு வந்தாலு மந்தகனானவன் அந்த விளக்குக்கொண்டு பொருள் களைப் பார்ப்பதின்று; அந்தவிளக்கினால், விளங்கியகண்ணுள்ளவன் அந் தக் கண்கொண்டு விளக்கையும் பொருளையும் பார்ப்பன்.

பின்னு மொன்று. சிவசத்தி சிவனுக்குக்கண், அது பிறகண்ணாத லால்; முத்தான்மா அதுகொண்டு சிவன்முதற் பொருள்களைப் பாரான்; பார்ப்பானாயினும், பார்த்தற்கிரியைப் பிரமிதிப் பிரயோசனமவன தன்றாம்; சிவானன்னிய வைக்கியத்தினால், அந்தப் பிரயோசன மவ னதாமென்னில், அது கூடாது; சிவனோடைக்கியம் சிவசமான சாதியா கிய சிவசாதிருச்சியம் ;வேறென்றன்றென்று சித்தாந்த சிகாமணி பிர மாண தீபிகை முதலானவைகளிலே அநேக பிரகாரத்தாற் சாதிக்கப்

பட்டிருக்கையால், சிவனுஞ் சிவசத்தியும் சிவசத்தி விளக்கினால் விளங்கித் திரும்ப அவ்விளக்கு விரும்பாமலிருக்கின்ற முத்தான்மாவினது பிறப்பொருளறிவாகிய வெதிர்முக சிற்சத்தியாலறியப் படுந்தன்மை இன்றி யறியும் பொருளாக வறியப்படும்.

முத்தான்மாவினது தற்பொருளறிவாகிய திரும்பிய முகசிற்சத்தியால் அறியப்படாது அறியப்படுமாகில், நிருபசரிதவைக்கியம் வருமாதலால், ஏகான்மப்பிரசங்கம் வந்து, சித்தாந்தமன்றி வேதாந்தமாய் விடுமாதலால், முத்தான்மாக்களை யிரக்ஷிக்கிறார் என்னு மேகதேசவசனத்துக்கும் பரமுத்தராகிய அபரமுத்தர்களை யென்றர்த்த மாதலால் பரமுத்தான்ம சிவசிற்சத்தி திரும்பச் சிவசத்திவிளக்கு விரும்பாமற் சுவயம்பிரகாசமாய்ச் சுவதந்திரமாய் சுவரூபப் பிரமாணமாயிருக்குமென்று சித்தாந்தமாகையால், சிவன் முதற் சீவான்மா வந்தமான சிற்பொருள்களுக்கெல்லா முன்சொன்ன முறைமையிற் பிரமாதிருரூபம் பிரமாணரூபம் பிரமிதிரூபம் மூன்றும் சொரூபந்தானே தடத்தமன்று.

ஆதலால் அவரவ ரெதிர்முகியாயிருக்குங் கரணக்குறிச் சிற்சத்தியேபிரமாணம், பிரமிதிபிரமாணமன்று; அது பிரமாண வியாபாரக் குறிப் பிரமாணபலமாதலால் பிரமிதிதானே பிரமாணம்; (பலமேதென்னில்) பிரமாதிருகோடிப் பிரமிதி பிரமாணம்; பிரமேயக்குறி விஷயகோடிப் பிரமிதிதான், விஷயவியாபாரந்தான், பலமெனும் பிறர் மதமும், அதுவன்றி, நாதவிருத்தி வித்தியாராகாதிகளாற் கலக்குண்ட சவிகற்ப நிருவிகற்பப் பிரமிதிதானே பரோன்முகசிற்சத்தி; அதுதானே பிரமாணம்; ஆனோபாதானோபேக்ஷாபுத்தியே பிரமாண பலப்பிரமிதி; நாதவிருத்தி வித்தியாராகதிகளாற் கலக்குண்ணாத சுவயோன் முக சிற்சத்தியே பிரமாதிருரூபம்; பிரமாதிருரூபமாத்திரஞ்சொரூபம் முத்தியிலிருப்பது; பிரமாணப்பிரமிதிரூபமிரண்டும் தடத்தம்முத்தியிலில்லை, சம்சாரத்திலிருப்பது; முத்தான்மாவுக்குச் சிவன் முதற்பொருள்களை யறியுமிடத்துச் சிவசத்தியே பிரமாணமென்னும் பிறர்மதமும் பேசாமற்போயின.

திரும்பவூகித்துப் பார்க்குமிடத்து, சிவசத்திமுத்தான்ம சிவன் முதற் பிறபொருள்களைப் பார்க்குமிடத்துச் சிவனுக்குப்பிரமாணம், தற்பொருளாகிய தன்னைப்பார்க்குமிடத்துச் சிவனுக்குச் சிவசத்தி பிரமாணமன்று; அது பிறப்பொருளறிவாதலால், சிவன் சத்திக்குப் பின்னப் பொருளாய்ப் போவாராதலின், சிவன் தன்னறிவாகிய தனது சிவரூப சிற்சத்திப்பிரமாணத்தினாற் பிறவறிவாகிய தனது சத்திரூப மென்கிற

சிவசொரூபப் பிரமேயத்தைத் தற்பொருட் பிரமாணம் பிறப்பொருட் பிரமாணமாகும் அந்த இரண்டிற்கும் அந்தரான்ம சித்துரூப சிவரூபப் பிரமாதாவாயிருந்தறிவர்; இந்த நீதி முத்தான்ம சிவன்முதற் சிற்பொருள்களுக்குஞ் சமமாகும்.

ஆகையாற் சீவன்முத்தசித்த சிவயோகி நிருபாதிகசிவசத்தி விளக்கில் விளங்கிய தனது சிற்சத்திப் பிரத்தியக்ஷப்பிரமாண சிவப்பிரமாணத்தி லுற்பவித்த அபரோட்ச சாட்சாத்கார சிவலட்சண லக்கிய நிபதித சிவயோகப் பிரத்தியட்சப் பிரமிதியினாற் சிவனைப்பார்ப்பன்.

சீவன் முத்த சாத்திய சிவயோகி திவ்வியாதிதைவிக சிவகாம சத்தானுவித்தாத்தியான்மிக சிவாகம சத்தவிஷய வாசனாபூரித புத்திப் பிரகாசத்திரியிற்பற்றிச் சிவாகமப் பேர்பெறுஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய தனது சிற்சத்தி நேத்திரசிவாகமப் பிரமாண சிவப்பிரமாணத்தி லுற்பவித்த பரோட்ச சத்தப்பிரமிதியினாற் சிவனை யறிந்து தியான சமாதி பண்ணுவன்.

அறிந்த பின்னு மவன் வாதிப்பிரதிவாதி விப்பிரதிபத்திக் கலகங்களால் வருஞ் சந்தேகம் போம்படி காரிய லிங்கவிஷய வாசனாபூரித புத்திப் பிரகாசத் திரியிற் பற்றி யனுமானப் பேர்பெறுஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய சிற்சத்திநேத்திரானுமான சிவப்பிரமாணத்தி லுற்பவித்த பரோக்ஷானு மிதியினாற் பரீக்ஷித்துப் பரீக்ஷையினதேக கோடியில்விழுந்தறிந்து தியான சமாதி பண்ணுவன். (கச)

அளவை-முற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் - கச.

---

# முதலாஞ்சூத்திரம்.

ஆகையாற் சாத்திரத்தினா லறியு மறிவிற் சந்தேகம்
வராதபடி யனுமானத்தினாற் சிவனையறியு
முறைமையை யுணர்த்து கின்றார்.

ஒருவனோடொருத்தியொன்றென்றுரைத்திடுமுலகமெல்லாம்
வருமுறைவந்துநின்றுபோவதுமாதலாலே
தருபவனொருவன்வேணடுந்தான்முதலீறுமாகி
மருவிடுமனாதிமுத்தசித்துருமன்னிநின்றே.

(இ-ள்) உலகமெல்லாந் தருபவன் ஒருவன்வேண்டும்=சிவதத்துவமுதற் பிருதுவிதத்துவ மீருகும் தத்துவ தாத்துவிகமாகிய உலகொருகர்த்தாவையுடையது,

இது பிரதிஞ்ஞை, காரியத்தன்மையால்; இது வருவித்த ஏது; உலகிது காரியமன்று; உமதேதுச் சுவரூபா சித்தம்: நமதேதுச் சுவரூபா சித்தமன்று; உலகுகாரியம்.

ஒருவனொடொருத்தியொன்றென்றுரைத்திடு மாதலாலே=சரீரத்தைப்பற்றி யசேதனமாகவு மொருவனொடொருத்தியொன்றென் றநேகமாகவு மறையப்படுமாதலால்; வருமுறைவந்து நின்றுபோவது மாதலாலே=இலதுளதாகி உளதிலதாகி உற்பத்தி திதி நாசமுறுமாதலால்;

இப்படிக் காரியத்துவ நிச்சயமாதலால் யாதொன்றி யாதொன்று காரிய மதுகர்த்தாவையுடைத்து, எப்படி? கடம், இது திருட்டாந்தம்; அப்படி யுலகிது காரியம், இது உபநயம்; ஆகையால், அப்படியுலகிது காத்தாவையுடைத்து, இது நிகமனம்; அந்தக் கர்த்தாவினதிலக்கணமெப்படியென்னில்,

தான்=அந்தக் கர்த்தாவானவன்; முதலீறுமாகி மருவிடும்=சிவதத்துவ முதற் சுத்தவித்தியாதத்துவ மீருகுஞ் சாதாரண வசாதாரண சாதாரணசாதாரணங்களாகிய தத்துவ தாத்துவிக புவன சூக்குமதேக தூலதேக போக்கிய சுத்தாத்துவப் பொருள்களைச் சுத்தமாயை யினின்றுஞ் சிருஷ்டித்துத் திதித்து சங்கரித்து,

ஸ்ரீமத் அநந்தேசுரத் துவாரத்தினுலே மகாசிருட்டியிற் காலதத்துவமுதற் பிருதிவிதத்துவ மீருகுஞ் சாதாரண வசாதாரண சாதாரணசாதாரணங்களாகிய தத்துவ தாத்துவிக புவன சூக்குமதேக தூலதேக போக்கிய சுத்தாசுத்த வசுத்தாத்துவப் பொருள்களை அசுத்தமாயையிலே நின்றுஞ் சிருஷ்டித்துத் திதித்துச் சங்கரித்து,

குணதத்துவத்துள்ளும் மத்தியப் பிரளயத்திற் பிரகிருதியினக்கிரத்து நிலயராகிய, ஸ்ரீமத் ஸ்ரீகண்ட நாதத்துவாரத்தினுலே, மத்திய சிருஷ்டி தோறும் அசாதாரணம் மகாப்பிரளயபரியந்தம் இருக்குமென்றுகொண்டு, குணதத்துவ முதற் பிருதிவி தத்துவ மீருகுஞ் சாதாரண அசாதாரண சாதாரணசாதாரணதத்துவ தாத்துவிக புவன திவ்விய தூலதேக போக்கிய அசுத்தாத்துவப் பொருள்களையும் பின்னுங், குணதத்துவத்துள் மத்தியப் பிரளயத்திற் பிரகிருதியினதக்கிரத்து நிலயராகிய பிரம விட்டுணுத் துவாரத்தினுலேயும் பிரமாண்டத்துண்ணிலயராகிய பிரம விட்டுணுத் துவாரத்தினுலேயும் சில திவ்யா

திவ்விய தூலதேக போக்கிய வசுத்தாத்துவப் பொருள்களையும் பிரகிருதியிலே நின்றுஞ் சிருஷ்ட்டித்துத் திதித்துச் சங்கரித்து,

முதனடு வீறுமாகி மருவீடும்=சிருட்டி கர்த்தாவாயும் திதி கர்த்தாவாயும் சங்கார கர்த்தாவாயும் பொருந்திடும்.

அதுவன்றிச் சுவபாவத்தினாலேயும், அநந்தேசுவரத்துவாரத்தினாலேயுந் திரோபாவ கர்த்தாவுமாம்; சுவபாவத்தினாலேயும் அநந்த ஸ்ரீகண்டாதித் துவாரத்தினாலேயும், அனுக்கிரக கர்த்தாவுமாம்; சரீரிகளே கிர்த்தியம் பண்ணுதலால், அசரீரியாயிருக்கின்ற உமது கர்த்தாவுக்குக் கிருத்திய மெப்படிக்கூடும்? சத்தியம், மூர்த்தி யிரண்டுவிதம்:- சலையென்றும், அசலையென்றும்; சலையாயிருக்கின்ற மூர்த்தி யவர்க்கில்லாதபடியினாலே,

அனாதிமுத்த சித்துருமன்னி நின்றே=அசலையாகிய நித்தியமுத்த சிற்சத்தி மூர்த்தி பொருந்தி நின்றே.

தான் முதலீறுமாகி மருவிடுமென்று பொருட்புணர்ச்சி போதிக்க. (க)

உலகொரு கர்த்தாவையுடைத்துக் காரியமாதலால்; உலகு காரியம்; ஒருவனோடொருத்தி யொன்றென்றுரைத்திடுமாதலாலும், வருமுறைவந்து நின்று போவதாதலாலும் என்று காரியத்தைச் சாதித்ததனாற் கர்த்தாவைச் சாதித்தீர்; அதுகூடாது; பிருதிவிமுதலுலகிற் றோற்றநாசங்காணேமென்று லோகாயதனாருகதன்முதலோர் சொல்ல மறுத்துணர்த்துகின்றார்.

உதிப்பதுமீறுமுண்டென்றுரைப்பதிங்கென்னைமுன்னோர்
மதித்துலகனாதியாகமன்னியதென்பரென்னி
லிதற்கியானனுமானாதியெடேனிப்பூதாதியெல்லாம்
விதிப்படிதோற்றிமாயக்காணலான்மேதினிக்கே.

(இ—ள்) உதிப்பது மீறு முண்டென்றுரைப் பதிங்கென்னை=உலகுக்கு உற்பத்தியாதலு நாசமாதலு முள்ளன வென் றிசைப்பதேது; முன்னோர்=தர்க்க முதற்சாத்திர முணர்ந்தோர்; மதித்து=தர்க்கித்து நிச்சயம்பண்ணி; உலகு=பிரபஞ்சம்; அனாதியாக=எப்போது மிப்படியிருப்பதாய்; மன்னியதென்பர்=நிலைபெற்றதென்று நிகழ்த்துவர்; என்னில்=என்று நீ சொல்லில்; இதற்கு=நீ சொல்லு மிந்தவார்த்தைக்கு; யான்=நான்;

(நீ பிரத்தியக்ஷவாதி யாகையினாலும், இது பிரத்தியட்ச சித்தமாகையாலும், பிரத்தியக்ஷப் பிரமாணமாத்திரமன்றி) அனுமானுதி யெடேன்=அனுமானுகமப் பிரமாணங்களைத் தொடேன்;

(பின்னை யறியுமாறெப்படி யென்னில்) இப்பூதாதியெல்லாம்=பூதங்களையாதியாகக் காரணமாக வுடைத்தாய்ப் பூதபரிணாமமாகிய உடலூர்மர முதலிய உலகிற்பொருந்திய பொருள்களெல்லாம்; விதிப்படி தோற்றிமாயக் காணலான் மேதினிக்கே=பூமியின் கண்ணே கன்மமுறைமையிலீசுர சங்கற்பத்தினாலுற்பத்தி நாசமாகப் பிரத்தியட்சப் பிரமாணமாகிய சிற்சத்தி பொருந்திய நேத்திரத்தினாற் பார்த்தலால். (உ)

உலகுக் குற்பத்தி நாசமுளது; அஃதொரு கர்த்தாவை விரும்பாமலியல் பிலாமென்ன மறுத்துணர்த்து கின்றார்.

இயல்புகாண்டோற்றிமாய்கையென்றிடினியல்பினுக்குச்
செயலதின்றியல்புசெய்திசெய்தியேலியல்பதின்று
மியல்பதாம்பூதந்தானேயியற்றிடுஞ்செய்தியென்னிற் [ல்.
செயல்செய்வானொருவன்வேண்டுஞ்செயற்படுமசேதனத்தா

(இ-ள்). இயல்பு காண்டோற்றிமாய்கை யென்றிடில்=உபாதானகாரணத்திற்றோற்றி யொடுங்குவது காரியப்பொருளினது சுபாவமென்று நீ சொல்லில்; இயல்பினுக்குச் செயலதின்று=இயல்பாயிருக்கும் பொருளுக்கொருபோதுண்டாய் ஒருபோதின்றாய்க் காரியப்படுந்தன்மையின்று; இயல்புசெய்தி=அப்படிக்காரியப் படுவதப்பொருட்சுபாவமென்று நீ சொல்லில்; செய்தியேலியல்பதின்றும்=காரியப் படுமாகில் அப்பொருட் சுபாவமில்லையாம்;

(அப்படிச்சொல்லவேண்டுவதில்லை) செய்தி யியல்பதாம்=[உற்பத்திநாச யோக்கியமாகிய வியல்பில்லாதபொருள் சர்வ சாமாத்தியமுடைய கர்த்தாவினாலுந் தோற்றுவித் தொடுக்கப்படாது, ஆதலால், காரியப் பொருளுற்பத்தி நாசமாகு மோரியல்புடைய தீரியல்புடைய தன்று; அப்படியாயி னுற்பத்திகாலத்து நாசம, நாசகாலத் துற்பத்தி காணுதிருப்பதென? உள்ளது:—தற்காலத்துற்பத்திரூபமாயும் நாசரூபமாயும் நாசோற்பத்திகளோ ரியல்பாயிருக்கும். பௌத்தனுக்குப்போலத் தற்காலத் தீரியல்பாயிரா; அந்தவுற்பத்தி நாசங்கள் காரியப்பொருளிற் சாணப்படுதலாற் காரியமாய்ச்செயற்படும்பொருள் செய்பவனை விடாதாதலா லந்தவுற்பத்தி நாசங்களொருங்கே யொருகாலத்தோ ரியல்பா

யிருந்தாலுந் தனது தனது காரியவிளக்கங் காரியமறைதலாகு முருபந் தனது தனது கர்த்திருகாரக முதற்காரகங்களின்றி முதற்காரணத்தி னின்றுந்தோன்ருது, ஆதலாற் கர்த்தாவை விரும்புதல் காரியத்துக்கு ண்டு; சம்மதமே. இதெல்லா முமக்குமாதலால், செய்தி இயல்பதாம்] காரியம் இயல்பதாம்; (சிருட்டி திதி சங்காரங்களை); பூதந்தானே, (கர்த் தாவாய்), இயற்றிடுமென்னில்= (பண்ணுமென்று லோகாயத பக்ஷனு யிருக்கும் நீ சொல்லில், (அப்பூதங்கள்); செயற்படு மசேதனத்தால= காரியமாகுஞ் சடமாதலால்; செயல் செய்வாஞெருவன் வேண்டும்= பூதகாரியத்தினது தோற்றம் நிற்றல் போதற்ஞெழில்களைப் பண்ணு மொரு கர்த்தாவைவிரும்பும். (௩)

பிரத்தியக்ஷப்பிரமாணகோசரமாகப்பூதங்கடாமே பொருள்களைத் தோற்றுவித்து நிற்பித்துப்போக்கும்; சேதனனுகிய வொருகர்த் தா வேண்டுவதில்லை யென்ன மறுத்துணர்த்துகின்ருர்.

நிலம்புனலனல்கால்காணநிறுத்திடுமழிக்குமாக்கும்
பலந்தருமொருவனிங்குப்பண்ணிடவேண்டாவென்னி
லிலங்கியதோற்றநிற்றலீறிவையிசைதலாலே
நலங்கிளர்தோற்றநாசந்தனக்கிலாநாதன்வேண்டும்.

(இ-ள்). நிலம்புன லனல்கால்=பிருதிவியப்புத் தேயுவாயுக்கள்; காண=பிரத்தியட்சமாக; (சரீராதிப்பொருள்களை) நிறுத்திடுமழிக்கு மாக்கும் பலந்தரும்=(ஆக்கும்) சிருட்டிக்கும் (நிறுத்திடும்) திதிக்கும் (பலந்தரும்) அதனுற் போகத்தைக் கொடுக்கும் (அழிக்கும்) சங்கரிக் கும்; (ஒருவன் அப்பிரத்தியக்ஷனுய்ச் சேதனனு யொருகர்த்தா) இங்கு =இந்தக்காரியத்தை; பண்ணிடவேண்டாம்=செய்யத்தக்கதில்லை; என் னில்=என்று நீ சொல்லுகில்; "பூதாதியீறு முதலுந் துணையாகப் பே தாய் திதியாகு" மென்று சிவஞானபோதத் திருத்தலால் (நிற்றலாகிய திதிதோற்ற மீருகிய சிருட்டிசங்காரங்களை முன்பின் காண்பியாதிரா து, அப்படிப் பூதங்களிலிருக்குந் திதியும் அப்படியென்று) இலங்கிய தோற்ற நிற்ற லீறிவை யிசைதலாலே=மனசி லுதித்த சிருட்டி திதி சங்கார சம்பந்தத்திஞல்; (பூதங்களுங் காரியமென்றுகொண்டு அவற் றைத் தோற்றுவித்து நிறபித்துப் போக்கும்பொருட்டுத் தனக்குத்தோ ற்ற நாசமில்லா) நலங்கிளர் நாதன்=சாட்குண்ணிய பரிபூரணனு யிரு க்கின்ற கர்த்தா; வேண்டும்=விரும்பப்படுவன. (ச)

பௌத்தன்புத்ததேவதை குருவாயிருத்தன்மாத்திரமன்றி உலககர்த்தாவல்லன், பஞ்சகந்தங்களினது கூட்டத்தினுலுலகுண்டாம் கர்த்தா வேண்டுவதில்லை யென்னமறுத்துணர்த்துகின்றார்.

சார்பினிற்றோன்றுமெல்லாந்தருபவனில்லையென்னிற்
றேரினில்லதற்கோதோற்றமுள்ளதற்கோநீசெப்பா
யோரினில்லதுவுந்தோன்றுதுள்ளதேலுதிக்கவேண்டா
சோர்விலாதிரண்டுமின்றிநிற்பதுதோன்றுமன்றே.

(இ - ள்). சார்பினிற்றோன்று மெல்லாம்=பஞ்சகந்தத்தினது கூட்ட விசேடத்தாற் பூதமுதலாகிய பொருள்களெல்லா முதிக்கும்; தருபவனில்லை யென்னில்=சிருட்டிமுதற் கிருத்திய கிருத்தாய் முன்னீர் சொன்ன முறைமையனுகிய கர்த்தாவில்லை யென்று நீசொல்லில்; (கர்த்தாவுண்டில்லை யென்பது பின் பேசுவோம், இப்போது நீ நிருபாதான வாதியன்றோ) தேரினில்லதற்கோ தோற்றமுள்ளதற்கோ நீ செப்பாய்=விசாரிக்கிற்றோற்ற முள்ளபொருட்கோ இல்லாதபொருட்கோ நீ சொல்; ஓரில்=விசாரிக்கில்; இல்லதுவுந் தோன்றுதுள்ளதே லுதிக்க வேண்டா=இல்லாத முயற்கொம்பு முதலியவுமுண்டாகா,=உதித்துளதாயிருக்கின்ற கடபடாதியு முண்டாகமாட்டாவாம்; சோர்விலா திரண்டுமின்றி நிற்பது=அப்படியுள்ளது மில்லது மின்றி யுள்ளதாயிருப்பது; தோன்றுமன்றே=உண்டாகுந்தானே. (ரு)

அந்தச்சற்காரிய வார்த்தையைத்தானே சமுத்தரித்து
நிறுத்துகின்றார்.

உள்ளதுமிலதுமின்றிநின்றதொன்றுளதேலுண்டா
மில்லதேலில்லையாகுந்தோற்றமுமிசையாதாகு
முள்ளகாரணத்திலுண்டாங்காரியமுதிக்குமண்ணி
லில்லதாம்படங்கடாதியெழிறருமியற்றுவானுல்.

(இ-ள்). உள்ளதுமிலது மின்றி நின்றதொன்றுளதே லுண்டாம்=வியத்திருபமென்கிற காரியருபத்தினுலே உள்ளதுமின்றிச் சத்திருபமென்கிற காரணருபத்தினுலே யில்லது மின்றி இருப்பதொரு பொருளுண்டாமாகில் அது உற்பத்தியாம்; இல்லதேல்=இப்படி யொருபொருளின்றேல்; இல்லையாகும தோற்றமு மிசையாதாகும்=உற்பத்தியும் பொருந்தாதாகும்; (பின்னைச் சித்தாந்தமெப்படி யென்னிற்சொல்வாம்) உள்ள காரணத்தில்=காரியகாலத்தில் வியத்திருபமாய்ச் சத்தாயிருக்

கு முதற்காரணத்தில்; உண்டாங் காரியம்=காரணகாலத்திற் சத்திரூபமாய்ச் சத்தாயிருக்குங் காரியம்; உதிக்கும்=உற்பத்தியாம்; (காரியங் காரணத்தில்லாதுண்டாமென்னில்) மண்ணிலில்லதாம் படம்=சத்திரூபமாய் முன்னதில்லாமையால் நூலையெடாமல் மண்ணைக் குலாலனெடுக்கும்படி முன்சூக்குமித் திருந்து இதுகாரண மதுகாரண மல்லவென்று நியமிக்குங் காரியமாகும்; கடாதி; இயற்றுவானால்=கூலாலனால், எழிறரும்=பிரகாசித்துண்டாம். (௬)

முதற்காரணத்தின் முன்னிருந்து காரியந்தோன்றுமென்றீர்; அதுநிமித்தகாரண னின்றித்தானே பிரகிருதியிற்றோன்றுமென்று சாங்கியன்சொல்ல மறுத்துணர்த்துகின்றார்.

ஒருபொருளொருவனின்றியுளதிலதாகுமென்னிற்
றருபொருளுண்டேலின்றுந் தன்மையின்றின்றேலுண்டாய்
வருதலின்றிலதுகாரியமுதலுளதாகுமென்னிற்
கருதுகாரியமுமுண்டாய்த்தோற்றமுங்கர்த்தாவாலாம்.

(இ-ள்). ஒருபொருள்=காரியம்; ஒருவனின்றி=நிமித்த காரணனையன்றி; உளதிலதாகுமென்னில்=முதற்காரணத்திற் றோற்றி யொடுங்குமென்று நீ சொல்லில்; தருபொருள்=அந்த முதற்காரண முற்பவிப்பித்த வஸ்து; உண்டேல்=உள்ளதேல்; இன்றுந்தன்மையின்று=நாசத்திற்குக் காரண மில்லாமையால் நிலைபெற்றிருக்குந் தானே; இன்றேல்=நாசமானால்; உண்டாய் வருதலின்று=நிமித்தமில்லாமையால் காரண ரூபமா யிருப்ப தன்றிக் காரிய ரூபமாய்த் தோற்றுவ தில்லை; முதலுளதாகும்=முதற் காரண முள்ள பொருளாகும்; இலது காரியம்=அதிற் றோன்றுங் காரியம்; (சிப்பியிற் றோன்றும் வெள்ளி போல ஆபாசமாய் அசத்தியமாம்), என்னில்=என்று நீ சொல்லில்; (அதுஅசத்தியமன்று) கருது காரியமு முண்டாய்த் தோற்றமுங் கர்த்தாவாலாம்=(குற்றமற்ற பிரத்தியக்ஷப் பிரமாணமுதற் பிரமாணங்களினு லுள்ள பொருளென்று) பரீக்ஷிக்கப்பட்ட காரியம், முன் சூக்குமித்து முதற்காரணத் துள்ளதா யதினுற்பத்தியுஞ் செய்பவனாலாகும். (எ)

பட்டாசாரியன் மதமாசங்கித் திரண்டு திருவிருத்தத் தான் மறுத்துணர்த்து கின்றார்.

காயத்தினழிவுதோற்றங்கண்டனமுலகிற்காணேம்
நியித்தையுரைத்தவாறிங்கென்னெனினிகழ்த்துமுண்மை

மாயத்தவுலகம்பூநீர்தீவளிவானமாதி
யாயிற்ருேென்றிென்றுதோன்றிநின்றழிதலாலே.

(இ-ள்). காயத்தினழிவு தோற்றங் கண்டன முலகிற்காணேம் =ஒருவனேடொருத்தி யொன்றென் றுரைத்திடும் சரீரமுதலிய பொருள்களி னுற்பத்தி நாசங்கண்டோம் பூமிமுதலிய செகத்திற்காணேம்; நீ யித்தை யுரைத்தவாறிங் கென்னெனில்=உலகுகாரிய மாதலால் அதற்கொருகர்த்தா வுண்டென்று நீர் சொல்லுவ தேதென்று நீ சொல்லுகில்; மாயத்த வுலகம்=மயக்கத்தைப் பண்ணும் பிரபஞ்சம்; பூ நீர் தீ வளி வான மாதி யாயில்=பிருதிவி யப்புத் தேயு வாயு வாகாச முதற்பொருளாகில்; (சைவத்திற்குத் தன் மாத்திரையிற் ேறற்ற மொடுக்கம் அது நிற்க, நமக்குப் பொதுவு முனக்குப்பொதுவன்றிச்சிறப்பு மாகும் வைதிகமார்க்கதில்) ஒன்றி ெனன்று தோன்றி நின்றழிதலாலே=ஆன்மாவிலாகாயம், ஆகாயத்தில் வாயு, வாயுவிலக்கினி, அக்கினியி லப்பு, அப்புவிற் பிருதிவி இந்த முறைமையி லுண்டாயிருந் தந்த முறைமையிஞ லொடுங்கு மென்று சொல்லுதலாலே; (அந்தவுலகம்) உண்மை நிகழ்த்தும்=தனக்குத் தோற்றம் நிற்றல் ஈறு இது சத்தியமென்று சாற்றும். (அ)

பஞ்ச பூதங்கட்கு நாசஞ் சொல்லுஞ் சுருதிக்குத்
தாற்பரியஞ்சொல்ல மறுத்துணர்த்து நின்ருர்.

ஓரிடமழியப்பின்னுமோரிடநிற்குமொக்கப்
பாரிடமழிவதின்ருமென்றிடிற்பயில்வித்தெல்லாங்
காரிடமதனிற்காட்டுமங்குரங்கழியும்வேனிற்
சீருடைத்துலகுகாலஞ்சேர்ந்திடப்பேர்ந்துசெல்லும்.

இதன்பொருள் வெளிப்படை. (௯)

காலேசுரவாதி காலமே கர்த்தாவென்று
சொல்ல மறுத்துணர்த்துகின்ருர்.

காலமேகடவுளாகக்கண்டனந்தொழிலுக்கென்னிற்
காலமோவறிவின்ருகுமாயினுங்காரியங்கள்
காலமேதரவேகாண்டுங்காரணன்விதியினுக்குக்
காலமுங்கடவுளேவலாற்றுணைக்காரணங்காண்.

(இ-ள்). தொழிலுக்கு=சிருட்டி ஸ்திதி சங்காரங்களுக்கு; காலமே; கடவுளாக=கர்த்தாவாக; கண்டனமென்னில்; காலமோ; அறிவி

ன்றாகும்=இதுக்கிது காரணங்காரியம் கரணம் பிரயோசன மென்ற றியு மறிவில்லாததாம்; ஆயினும்= காரியங்களாயினும்; (தாத்துவிக போக்கியப் பொருள்களை) காலமேதரவேகாண்டும்=கால முற்பத்தி பண்ணக் கண்டோமாகையால்; காரணன் விதியினுக்கு= முதற்காரண மாகிய தத்துவங்களினின்று தாத்து விகமாகிய போக்கியப் பொருளி னது தோற்ற நிலையீறாகச் சொல்லப்படும் நிமித்த காரணனாகிய சிவ னது கிருத்தியத்துக்கு; காலமும் கடவுளேவலால்=கர்த்தாவினது செலுத்துதலால்; துணைக் காரணங்காண்=சககாரி காரணங்காண. ()

ஆருகதரி லொருவன் மத மறுத் துணர்த்து கின்றார்.

அழிந்தபின்னணுக்கடாமேயகிலமாய்வந்துநின்று
கழிந்திடுங்கன்மத்தென்னிற்கன்மமுமணுவுங்கூட
மொழிந்திடுஞ்சடமேயாகிமுடிதலான்முடியாசெய்தி
யொழிந்திடுமணுரூபங்களுலகெலாமொடுங்குமன்றே.

(இ-ள்). (அருகேசுரனுக் குபதேச கர்த்திருத்துவ மாத்திரஞ் சகத் கர்த்திருத்துவ மில்லையாதலால்) அழிந்தபின்=பிரளயத்துலகமொ டுங்கின பின்; (ஒடுங்காது நின்ற) அணுக்கடாமே=முதற்காரணமா கிய பரமாணுக்கடாமே; கன்மத்து=நிமித்தகர்த்தாவகிய பாப புண் ணியங்களினாலே; அகிலமாய்=எல்லாவுலகுமாய்; வந்து நின்று கழிந் திடு மென்னில்=தோற்றி யிருந்தொடுங்குமென்று நீ சொல்லுகில்; கன்மமு மணுவுங்கூட=நிமித்த காரண முதற்காரண மிரண்டு மொத் து; மொழிந்திடுஞ் சடமேயாகி முடிதலால்=சொல்லப்படும் அசேதன மாகி யநித்தியமாதலான்; முடியாசெய்தி=கிருத்தியம் நிறைவேறாது; உலகெலா மொடுங்குமன்றே; உலகமெல்லாஞ் சங்கார மாம்போதே; அணு ரூபங்கள்=பரமாணுக்கள்; (சைவத்துக்குப் பூதகாரியமாதலால்) ஒழிந்திடும்=ஒடுங்கிடும்; (பூதமுதலிய வுலகத்துக் கெப்படிக் காரண மாம் காரணமன்றுதானே). (கக)

உலோகாயதனுலகுக்குக் காரணமென்னும் பூதமும், நையாயிகன்
முதலோர் உலகுக்குக் காரணமென்னும் பரமாணுவும்
பிரளயத் தொடுங்குமென்றீர்; பின்காரண
மேதென்று வினவச் செப்புகின்றார்.

காரணவணுக்கள்கெட்டாற்காரியவுலகின்றென்னிற்
காரணமாயையாகக்காரியங்காணலாகுங்

காரணமாயையென்னைகாண்பதிங்கணுவேயென்னிற்
காரணமாயையேகாண்காரியமணுவிற்கண்டால்.

(இ-ள்). காரண வணுக்கள் கெட்டால்=நாங்காரணமாகக் கற்பித்த வணுக்கள் சங்கரிக்கப்பட்டால்; காரியவுலகின் றென்னில்=காரிமாய்த் தோற்றும் பிரபஞ்ச மில்லையாய் விடும்; (அஃதுண்டாகும் பொருட்டுக் காரணம்வேண்டு மென்னின்) காரணமாயையாக; (அதினின்றுமுற்பவிக்குங்) காரியங் காணலாகும்; காரணமாயையென்னை=மாயை காரணமென்பதேது; இங்கு; (காரியத்திற்குக் காரணமாக) அணுவே காண்பதென்னில்; அணுவில் காரியங் கண்டால்=காரியத்தன்மையறியப்பட்டால்; காரணமாயையே காண். (கஉ)

திரும்ப விகற்பித்து நிராகரிக்கின்றார்.

காரியமென்பதென்னைகாரணவணுவையென்னிற்
காரியமவயவத்தாற்கண்டனங்கடாதிபோலக்
காரியவுருவமெல்லாமழிதருங்காரணத்தாற்
காரியவுறுப்பின்மாயைதருமெனக்கருதிடாயே.

(இ-ள்). காரண வணுவை=நாங்களுலகுக்குப் பரமகாரணமாகக் கற்பித்த பரமாணுவை; காரியமென்ப தென்னை யென்னில்; அவயவத்தால்=சாம்சத்தால்; கடாதிபோலக் காரியமாக; கண்டனம்=அறிந்தோம்; (நிரவயவமாகிய பரமாணுவைச் சாவயவமாக வெந்தவேதுவினாலேகண்டீர்? திக்கொடு சம்யோகியாயும் மூர்த்தமாயுங் கேட்கப்படுதலாற் சாவயவமென்றும் அதனாற் காரியமென்றும், அதனாலதற்கு வேறொரு காரண முண்டென்றும், அறிந்தோ மாகையால், பரமாணு முதலாம்); காரியமுருவமெல்லா மழிதருங் காரணத்தால்=அந்தப் பரமாணு முதலிய காரியங்களை; காரியவுறுப்பின்மாயை=(அசேதனமாய் அனேகமா யிருத்தல், அமூர்த்தமா யிருத்தல், சாவயவமா யிருத்தல், முதலானகாரிய லக்ஷணமில்லாததா யிதற்குச் சேதன மாத்திரமின்றி விபரீத லக்ஷண முள்ளதாகிய மாயை; தருமென=உண்டாக்குமென; கருதிடாயே. (கங)

இவ்வுலகமாயையின் காரியமென் றுணர்த்துகின்றார்.

தோற்றமுநிலையுமீறுமாயையின்றொழிலதென்றே
சாற்றிடுமுலகம்வித்துச்சாகாதியணுக்களாக

வேற்றதேலீண்டிநிற்குமில்லதேலில்லையாகு
மாற்றநீமறந்தாயித்தான்மாயையைமதித்திடாயே.

(இ-ள்). (உலகினது) தோற்றமு நிலையுமீறும்=சிருட்டியுந் திதியுஞ் சங்காரமும்; மாயையின் ருெழிலதென்றே=(அன்னத்தினது பாகஞ் சாத்தனது பாக மென்ருற்போல) மயையினது கிருத்திய மீசுரனது கிருத்தியமென்றுதானே; சாற்றிடுமுலகம்=உயர்ந்தோர் சொல்லுவார்கள்; வித்து=ஆலம் விதைமுதலியன; சாகாதி=பணை கொம்பு முதலானவையை; அணுக்களாக=சூக்குமசத்தி ரூபங்களாக; ஏற்றதேல்=தன்னிடத்துத் தரித்திருந்ததானல்; ஈண்டி நிற்கும்=தன்னிடத்து நின்றுந் தூல வியத்தி ரூபமாகத் தோன்றி நிற்கும்; இல்லதேலில்லையாகும் மாற்ற நீ மறந்தாய்=முதற்காரணத்திற் காரியமுன் சூக்குமித்துச் சத்தி ரூபமாயிராதிருந்தா லுண்டாகாதென்று முன்சொன்ன வசனத்தை நினையாதிருந்தாய்; இத்தால்=வித்துச் சாகாதியென்னுந் திருட்டாந்த முறைமையால்; மாயையை மதித்திடாயே=(மாயை தனது காரியத்தை முன்சத்தி ரூபமாக ஏற்றதேல் அந்தக்காரியத்துக்குக் காரணமாம் இல்லையேற் காரணமாகாதென்று) மாயையைச் சற்காரியவாதியாகித் தானே விசாரித்துப் பார். (கச)

அப்படித்தானே மதித்தலைவெளிபண்ணிக்
காட்டுகின்ருர்.

மாயையினுள்ளவஞ்சம்வருவதுபோவதாகு
நீயதிங்கில்லையென்னினிகழ்ந்திடுமுயலிற்கோடு
போயுகுமிலைகளெல்லாமரங்களிற்புக்குப்போதி
ஞயிடுமதுவுமென்னிற்காரணங்கிடக்கவாமே.

(இ-ள்). மாயையின் உள்ளவஞ்சம்=சத்திருபமாய் முன் சூக்குமித்திருந்த பிரபஞ்சம்(வியத்திருபமாய்த் திரும்பச் சத்திருபமாய்)மாயையின்=மாயையினிடத் திருந்து; வருவது போவதாகும்=தோற்றியொடுங்குவதாகும்=நீயதிங்கில்லையென்னில்=மாயையிற் காரியமுன் சத்திருபமா யிருந்துவருவது போவதில்லையென்று நீசொல்லில்; முயலிற்கோடு=முயலின்கண்ணே கொம்பு; நிகழ்ந்திடும்=உண்டாம்; மரங்களில்; உகுமிலைகளெல்லாம்=உதிரும் பத்திரங்க ளெல்லாம், (மரங்களிலே)போய்ப்புக்குப் போதின்=சென்ருெடுங்கி வருமாகில்; அதுவும் ஆயிடுமென்னில்=மாயையிற் பிரபஞ்சம் வருவது போவதாகுமென்று

நீ சொல்லில்; மரங்களி லுதிர்ந்தவிலைகள் தங்களுக்குக் காரணமாகும் மரங்களுக்குக்காரணமாகிய பிருதிவியிலொடுங்கும்; (அப்போது மரங்களி னிலைகளினது தோற்ற மெப்படியென்னில்; உதிர்ந்த விலைகள்வந்தொடுங்காதிருந்தாலும்) காரணங்கிடக்கவாமே=அவைகளின்றிப் பின்னு மனந்த பத்திரசத்தி ரூபமாகிய மரநிற்க வேறுவே றிலைகளுண்டாகாநிற்கும். (கரு)

பிரபஞ்சம் பிரவாகாநாதி யென்பதிசைக்கின்றார்.

கருதுகாரணமுண்டாகக்காரியமுள்ளதாகி
வருதலாலநாதிவையமற்றொருகடவுளித்தைத்
தருதலாலாதியாகச்சாற்றலுமாகுமாயைக்
கொருவனாரென்னிங்கென்னிலுள்ளவாறுரைப்பக்கேணீ.

(இ-ள்). கருது காரணமுண்டாக=இந்தக்காரியத்துக் கிதுவே காரணமென்று பரீக்ஷிக்கப்பட்ட மாயை யெக்காலத்து முள்ளதாயிருக்க; காரியமுள்ளதாகி=காரியஞ் சத்தி ரூபத்தினாலேயும் வியத்தி ரூபத்தினாலேயு மெப்போது முள்ள பொருளாகி; வருதலால்=சத்திரூபந்திரிந்து வியத்தி ரூபமாதலால்; வையம்=பிரபஞ்சகாரியம்; அநாதி= நித்தியம்; (வியத்திரூபத் தினாலேயொன்று போகவொன்று பிரவாகமாய்வருதலாற் பிரவாக நித்தியமென்று சொல்லப்படும்) மற்றொருகடவுள்=நிமித்தகாரணனாகிய சர்த்தா; இத்தை=இந்தவையத்தை; தருதலால்=சத்திரூபத்தை வியத்தி ரூபமாகத் திரித்து நீக்கிவியத்தி ரூபமாக்கலால்; ஆதியாகச் சாற்றலுமாகும்=அநித்தியமாகவுஞ் சொல்லப்படும்; மாயைக் கொருவனாரென்னிங் கென்னில்=மாயை யொவ்வோரொவ்வொரு பிரதேசங்களிலே, சத்தி ரூபந்திரிந்து வியத்தி ரூபமாதலுக்கு நிமித்தகாரண னெவனென்று நீர் சொல்லுமென்று நீ சொல்லில்; உள்ளவாறுரைப்பக் கேணீ=சத்தியமாகச் சொல்லுவாம் நீ கேள். (கசு)

உள்ளமுறைமையை யுணர்த்துகின்றார்.

புத்திமற்காரியத்தாற்பூதாதிபுருடன்றானு
மத்தனுகரணம்பெற்றுலறிதலாலவற்றைமாயை
யுய்த்திடுமதனான்மாயைக்குணர்வொன்றுமில்லையென்றே
வைத்தனரதனாலெல்லாம்வருவிப்பானொருவன்வேண்டும்.

(இ-ள்). பூதாதி=(சங்காரக்கிரமத்தில்) பிருதிவி தத்துவாதி சிவதத்துவாந்தமாகியவுலகு; புத்திமற்காரியத்தால்=இலக்கணையாற் புத்தி

யென்றது ஞானமன்றிக் கிரியையுங்காட்டுதலால் சர்வ சிருட்டிஸ்திதி சங்காரத்தொழில் அறிவுடைய வொரு கர்த்தாவையுடைத்து (இது பிர திஞ்ஞை), (காரியப்படுந்தன்மையால் (இது ஏது);

காரியானுமானத்தால் முன் கர்த்தாவை விஸ்தரித்துச் சாதித்திருக் கக் கூறியது கூறலென்னுங் குற்றம் வரத் திரும்பக்கூறுவதேன்? உள் ளது. இப்போது காரியானுமானங்கோத்த பாரிசேஷியானுமானத்தாற் சாதித்துச் சிறப்பிக்கின்றார்; ஞானவான் கர்த்தாவாகவேண்டுமென்று லறிவுள்ளவனைப் பிரசித்தனை 'வான்மாத்தானே கர்த்தா; பிரசித்த னன்றியிருக்கும் வேறோரீசுரன் வேண்டியதில்லையென்று மீமாஞ்சகன் சொல்ல மறுத்துணர்த்துகின்றார். விஞ்ஞானகலர் பிரளயாகலர்களறி வின்றி யப்பிரசித்தராதலால்.

புருடன்றானும்=சகலன்றானும்; அத்தனுகரணம்பெற்றால்;=அந்த வேறொரு கர்த்தாச் சிருட்டித்துக் கொடுத்த தூலதேக சூக்குமதேகபர தேகங்களைப்பொருந்தினால்; அறிதலால்=அவனறிவுக்கு நிமித்தமாக முன்பொரு சுவதந்திர வறிவனாகிய கர்த்தாச் சித்தித்தலானும்;

(அவன் கர்த்தாவல்லன் முதற்காரணந்தானே கர்த்தாவென்று சா ங்கியன்முதலோர் சொல்ல மறுத்துணர்த்துகின்றார்);.

அவற்றை=அந்தத் தனுகரணாதிகளை; மாயை (முதற்காரணமாயி ருந்து நிமித்தகாரணனாலேவப்பட்டு); உய்த்திடும்=உண்டாக்கும்; அத னால்=முதற்காரணமாகையால்; (யாதொன்றியாதொன்று முதற்கா ரண மஃதறிவில்லது மண்போலவென்று) மாயைக்கு உணர்வொன்று மில்லையென்றே; வைத்தனர்=பெரியோர் நிச்சயித்தார்கள்; அதனால்; எல்லாம் வருவிப்பானொருவன் வேண்டும்=சகலத்தையு மறிந்துண் டாக்கு மொரு கர்த்தா விரும்பப்படுவன். (கஎ)

காரியோற்பத்தியிற்காரணம் மூன்று முறைமையா யிருக்குமென் றுரைக்கின்றார்.

காரியகாரணங்கண்முதறுணைநிமித்தங்கண்டாம்
பாரின்மண்டிரிகைபண்ணுமவன்முதறுணைநிமித்தந்
தேரின்மண்மாயையாகத்திரிகைதன்சத்தியாக
வாரியன்குலாலனாய்நின்றாக்குவனகிலமெல்லாம்.

(இ-ள்). காரியகாரணங்கள்=கடமுதற்காரியங்களினது காரணங் கள்; முதறுணை நிமித்தங்கண்டாம்=முதற்காரணமென்றுந் துணைக்கா ரணமென்றும் நிமித்த காரணமென்றும் மூன்று பகுப்பாகப் பரீக்ஷித்

துப் பார்த்தோம்; (அதெப்படி) தேரின்=பரீக்ஷிக்கின்; "மண்மாயை யாக=மண்போல முதற்காரணஞ் சுத்தமாயை யசுத்தமாயையாக; திரிகை தன் சத்தியாக=திரிகைபோலத் துணைக்காரணந் தனது சத்தியு மதனு லேவப்பட்ட வநந்தேசுர சத்தியுமாக; ஆரியன்=நிமித் காரண ஞகிய சிவன்; குலாலனுய்=மண்மகன்போல நின்று; அகிலமெல்லாம் =சகலலோகமெல்லாம்; ஆக்குவன்=உண்டாக்குவன்.

முதற்காரணம் உபாதானகாரண்மென்றும் சமவாயி காரணமெ ன்றும் துணைக்ாரணமென்றும் சககாரிகாரணமென்றும் பெயர் பெ றும். (கஅ)

சிலசைவாசாரியர்கள் சுத்த மாயை யொன்றுமே முதற்காரணத் துள் நித்தியமாகும் பரமகாரணம், அசுத்தமாயை பிரகிருதி யிரண்டும் சுத்தமாயையினின்று முறைமையிற்றோற்றி அநித்தியமாகு மவாந்தர காரணமென்று சொல்லுவார்கள்; மற்றுள்ள சைவாசாரியர்கள் சுத்த மாயைபோல் அசுத்தமாயையும் நித்தியமாகும் பரமகாரணம்; பிரகிரு திமாத்திரம் அநித்தியமாகு மவாந்தரகாரணமென்று சொல்லுவார்கள் என்று இரத்திநத்திரயத்திற் சொல்லி யிருத்தலால், அசுத்தமாயையும் நித்தியமென்பார் கருத்து இரண்டாஞ் சூத்திரத்தில் நித்தமாயருவா யென்றுந் திருவிருத்த முதல் விருத்தங்களிஞல் விஸ்தரிக்கின்முர்; அநி த்தியமென்பார் கருத்திப்போ தறிவிக்கின்றார்.

விந்துவின்மாயையாகிமாயையினவ்வியத்தம்
வந்திடும்விந்துத்தன்பால்வைகரியாதிமாயை
முந்திடுமராகமாதிமுக்குணமாதிமூலந்
தந்திடுஞ்சிவனவன்றன்சன்னிதிதன்னினின்றே.

(இ-ள்). விந்துவின்மாயையாகி=சுத்தமாயையி னின்றும் அசுத் தமாயைதோற்றி; மாயையினவ்வியத்தம் வந்திடும்=அந்தவசுத்தமா யையினின்றும் பிரகிருதி தோன்றும்; விந்துத்தன்பால்=திரும்பச் சுத் தமாயையி னின்றும்;

வைகரியாதி வந்திடும்=சங்காரக்கிரமக்கணேக்கு வைகரிமுதல் சிருட்டிக்கிரமக்கணனைக்கு அதிசூக்குமை முதலாதலால் மகாமாயையி னின்றும் மகா சிருட்டியினுண்டாய் மகாப்பிரளயபரியந்தம் அவரவர்க் கு வேறுவேறு யான்மாக்களைப் பற்றிப் பிரணவகலாசத்தி சதுஷ்டய ரூபவிருதய பங்கசத்திருக்கும் பிரணவ பஞ்சம நாதகலாசத்தி கர்ப்பப்

பிரதான நாதத்துக்குள்ளாமை யுறுப்புப்போலப்படிச் சத்திருபமா யடங்கிச் சிவதத்துவ மைந்தின திடமாயிருக்கின்ற நாதவிந்து மகார உகார அகாரப்பெயர்ப் பிரணவகலைக ளைந்தையும் பற்றிக்கொண்டதி சூக்குமை சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்கின்ற வாக்குக ளோற்றும்;

அவரவர்க்கு நான்கென்னுமிடத்து, உகார அகாரங்களிரண்டினை யும் பற்றி வைகரிவரும், அதிசூக்குமை சூக்குமையி னடங்கும்.

மாயை முந்திடுமராகமாதி=சங்காரக்கிரமக்கணக்கு ராகமுதல் சிருட்டிக் கிரமக்கணக்குக் காலமுதலாதலான் மாயையினின்றுங் காலநியதி கலை வித்தை ராகங்கள் புருடதத்துவத்தோடு மேற்சொல்லு முறைமையில்; முந்திடும்=உண்டாம்; முக்குணமாதி மூலந் தந்திடும்= பிரகிருதி, முக்குணதத்துவ முதற் பிருதிவிதத்துவ மீருகுந் தத்துவங் களை மேற்சொல்லு முறைமையிற் றோற்றுவிக்கும்; (நிமித்தமின்றியா மோ வாகாது) சிவனவன்றன் சந்நிதி தன்னினின்றே=சிவனது சங்கற் பத்திலும், சிவனதியற்றுதற் கர்த்தாவாகிய அனந்தேசுர சங்கற்பத்தி லும்; முன்னின்றே. (கக)

சங்காரக்கிரத்தின் வைகரிவாக்கின திலக்கண
முணர்த்துகின்றார்.

வைகரிசெவியிற்கேட்பதாயத்தவசனமாகி
மெய்தருமுதானவாயுமேவிடவிளைந்தவன்னம்
பொய்யறவடைவுடைத்தாய்ப்புந்திகாரணமதாகி
யையமில்பிராணவாயுவடைந்தெழுந்தடைவுடைத்தாம்.

(இ-ள்). வைகரிசெவியிற் கேட்பதாய்=வைகரிவாக்குக் கேட்ப வன் செவியிற் கேட்பதாய்; அர்த்தவசனமாகி=கேட்பவனது நாதத் திலறைந்து முறைமையின் மத்திமையாக்கி; அவனுக்குப் பின் பொரு ளைப் போதிப்பதாய், முன்சொல்பவனது கிரியாசத்தி பொருந்திய வக ங்காரப் பிரயத்திநப் பிரேரிதமாய் மெய்தரும்=உண்மைகொடுக்கும்; உதானவாயு; மேவிட=பொருந்த; (இச்சாசத்தி பொருந்திய மனச் சங்கற்பத்தால்) விளைந்தவன்னம்=பைசந்தியிற் பரிணமித்த வக்கரங் கள்; புந்தி காரணமதாகி=ஞானசத்தி பொருந்திய புத்தி போதகார ணமாகப்=பொய்யறவடை வுடைத்தாய்=விபரீத மற்றொழுங்கு பெ ற்று மத்திமையாய்; ஐயமில் பிராணவாயு வடைந்தெழுந்தடை வுடைத் தாம்=பிராண சம்சய காரக ரேசகமற்ற பிராணவாயுவைப் பொருந்தி

ப்புறம்பே புறப்பட்டு வைகரியாயுற்பவித்த முறைமையிற் கேட்பவனுக்குக் கேட்கப்படும். (௨௦)

மத்திமைவாக்கின்து லக்ஷணங்கூறுகின்றார்.

உள்ளுணர்வோசையாகிச்செவியினிலுறுதல்செய்யா
தொள்ளியபிராணவாயுவிருத்தியையுடையதன்றித்
தெள்ளியவக்கரங்கள்சிந்திடுஞ்செயலதின்றி
மெள்ளவேயெழுவதாகுமத்திமைவேறதாயே.

(இ-ள்). உள்ளுணர்வோசையாகி=சொல்பவன திருதயாதி கண்டாந்தத்துக்குள் அவனதறிவுக் கறியப்பட்டு, அவனாற் சொல்லப் படும் பொருளில் அவனறிவைவிளக்குந் தொனியாகி; செவியினிலுறுதல் செய்யாது=கேட்பவன்செவிக் கேறுததாய்; (வைகரியாய்த் திரிந்து மேலவனுக்குக் கேட்கப்படுவதாய்) ஒள்ளியபிராண வாயு விருத்தியை யுடைய தன்றி (உதானவாயு வியாபார மாத்திரமுடையதாய்) பெல்முடைய பிராணவாயு வியாபாரத்தினது விடுதலுடையதாய்; தெள்ளியவக்கரங்கள் சிந்திடுஞ்செய லதின்றி=தெளிவாகிய வன்னங்கள் சிதறுதலின்றி யொழுங்குபெற்று; மத்திமை; (வைகரிக்கும் பைசந்திக்கும்) வேறதாய்; மெள்ளவே யெழுவதாகும். (௨௧)

பைசந்திவாக்கின திலக்கணமுணர்த்து கின்றார்.

வேற்றுமைப்பட்டவன்னம்வெவ்வேறுவிபாகமாகித்
தோற்றுதலடைவொடுக்கிச்சுயம்பிரகாசமாகிச்
சாற்றியமயிலினண்டந்தரித்திடுஞ்சலமேபோன்றங்
காற்றவேயுடையதாகிப்பைசந்தியமர்ந்துநிற்கும்.

(இ-ள்). பைசந்தி=பைசந்தி வேற்றுமைப்பட்ட வன்னம்= வெவ்வேறு குறியாயிருக்கு மக்கரங்கள்; சாற்றிய மயிலி னண்டந் தரித்திடுஞ் சலமே போன்று வெவ்வேறு விபாகமாகித் தோற்றுதலடைவொடுக்கி யாற்றவே யுடையதாகி=சொல்லிய மயிலினது முட்டை தாங்கிய நீரிற் சிறகு முதலிய வுறுப்புக்கள் போல வெவ்வேறு பிரிந்தொழுங்கு பெற்று மத்திமையாய்த் திரிந்தினிமேல் வருதலையிப்போதடக்கி யந்த வன்னங்களை நிலைபெற வுடைத்தாகி; சுயம்பிரகாசமாகி =(சொல்வோர்க்குங் கேட்போர்க்கும் முறைமையில் மத்திமையும் வைகரியுமாய், புத்தி யகங்காரங்களோடு கூடிச் சவிகற்பஞான காரண

மாய், பைசந்திவித்தை யோடுங்கூடி நிருவிகற்பஞான காரணமாய்; பின் மனத்தோடுகூடிச் சவிகற்ப ஞானத் துத்தியோகிக்கும் சூக்குமை வித்தையோடுகூடி நிருவிகற்பஞான காரணமாயிருக்கும் ஆதலால், புருடப் பிரயத்தினம்பொருந்தாமற் சற்றே பொருந்தி) தானே விளங்கி அமர்ந்துநிற்கும்=நிருவிகற்ப ஞான விளக்காய்ச் சவிகற்பஞானத்துத் தியோகித்து நிலைபெற்று நிற்கும். (உஉ)

சூக்குமைவாக்கினதிலக்கணமுணர்த்துகின்றார்.

சூக்குமைவாக்கதுள்ளோர்சோதியாயழிவதின்றி
யாக்கிடுமதிகாரத்துக்கழிவினைதன்னைக்கண்டா
னீக்கமிலறிவானந்தமுதன்மைநித்தியமுடைத்தாய்ப்
போக்கொடுவரவிளைப்புவிகாரமும்புருடனின்றாம்.

(இ-ள்). சூக்குமைவாக்கது உள்ளோர் சோதியாய்=(தூலசரீரத்தின் இருதயா தாரத்திருக்கும் பார்த்திவபங்கசப் பொகுட்டினது குழியிற் பற்றி யதனது அழிவில் வேறொன்றுபற்றிப் பிரளய பரியந்த மிருக்குமுன் சொன்ன பரசரீரவிந்து சத்தி சதுஷ்டய பங்கசத் திலிருக்கும் பிரதான நாத கெர்ப்பத்திருக்கும் பிரணவ கலாநாத சத்தியைப் பற்றி யிருத்தலாலொப்பற்ற) அந்தரங்க பிரகாசமாய்; அழிவதின்றி =பிரளயபரியந்த மீறின்றி (இருக்கும்).

(அது) தன்னைக்கண்டால்=

முறைமையிற் பிரகிருதிபுருட விவேகஞானத்தாற் சாங்கியன் பாதஞ்சலன் வேதாந்தி யிவர் முதலோர்க்குப் புருடதத்துவப் பிராத்தி;

மலபரிபக்குவமின்றிக் கேவலங் கலாதத்துவாந்த தீக்ஷா சுத்தி மாயா புருஷவிவேக ஞானத்தாற் சைவைகதேசிகட்கு விஞ்ஞானகலாப்பிராத்தி,

மலர்ந்த தீக்ஷாசுத்தி மலபுருஷ விவேகஞானத்தால் மந்ததராதி தீவிராந்த மலபரிபாகமுடைய மகாவிரதர் முதலோர், சாமானியசைவர், சைவ சித்தாந்திகளிற் சிலர்க்குஞ் சுத்தாத்துவப் பிராத்தி,

மகாமாயாந்த தீக்ஷாசுத்தி மகாமாயா புருஷவிவேக ஞானத்தாற் றீவிரதர மலபரிபாகமுடைய சைவ சித்தாந்தி கட்குப் பரமோக்ஷப் பிராத்தி,

நாதபுருட விவேகஞானமே மகாமாயா புருட விவேக ஞான மாதலாலந்த நாதத்தோடு பற்றியிருக்கும் சூக்குமை வாக்கை நான் வேறிது

வேறென்று விவேகித்துத் தரிசித்தால்; அதிகாரத்துக்கழி வினையாக்கும் = மோக்ஷாதிகாரங் கொடுத்துப் போகாதிகாரத்துக்கு நாசத்தைப் பண்ணும்; (தானீங்குவதே கொடுப்பதுங் கெடுப்பதும்) அப்போது புருஷன் சர்வபாச முத்தனுய், சின்மாத்திரனுய்;

நீக்கமிலறிவானந்த முதன்மை நித்திய முடைத்தாய் = [சமுசாரத்திற் பசுத்துவ ஸ்வரூப சிற்சத்தி விளக்கமே போகாநந்தம், முத்தியிற் சிவனுக்குப் போலச் சிவத்துவ ஸ்வரூப சிற்சத்தி விளக்கமேமோக்ஷானந்த மாதலால், நீக்கமிலென்றது, மலமறைப் பினும் ஸ்வகிட்டமாய்ப் புருடனேடு சமவாய சம்பந்தமா யிருத்தலென்ருதலால்], (நீக்கமிலறிவானந்தம் =)சர்வஞ்ஞத்துவ சிவத்துவரூப சர்வஞ்ஞதா திருத்தியநாதிபோத முக்குண வடிவாகிய ஞானசத்தி யபிவியத்தி, (நீக்கமின் முதன்மை =) சர்வகர்த்திருத்துவ சிவத்துவரூப ஸ்வதந்திரதாலுத்தசத்தி யனந்தசத்தி முக்குண வடிவமாகிய கிரியாசத்தி யபிவியத்தி இப்படியறுவிதமாய், இருவிதமாய், ஒருவிதமாயிருக்கின்ற சிவத்துவரூப சிற்சத்தி யபிவியத்தி யென்கின்ற சிவத்துவ விளக்கமாகிய சிவானந்தத் தொத்த தனது சிவானந்தத்தை;

நித்திய முடைத்தாய் = சிவசத்தி விளக்கினுற் றிரும்பச் சிவசத்தி விளக்கு விருப்பின்றிச் சர்வப் பிரகாரமாய் மலமறைப்பு நீங்கி விளங்குதலாற் கெடாதிடைவிடாது அனுபவிப்பானுகி; போக்கொடுவரவிளைப்பு விகாரமுமின்ரும் = இறப்புப் பிறப்பில்வருந் தொய்விற்ருென்றும் வேற்றுமையு மில்லாதவனும்.

போக்கொடு வரவிளைப்பு விகாரமானதும் புருடனுக்கின்ருமென்று மெழுவாய் பயனிலை யிசைத்துப் பொருளுரைக்கலுமாம்.

சிவத்துவமென்கின்ற சிவகுணவிளக்கமே சிவானந்தமென்று சித்தாந்தஞ் சித்தித்திருக்கவும், சிவகுணமே சிவானந்தமென்று சிலர்சொல்லுவார்கள்; அது மாறுபடு மென்பது பிரமாணதீபிகை சித்தாந்தசிகாமணி சிவஞானபோத வியாக்கியான மிவைகளிலே காண்பித்துக் கண்டித்தனம்; இது சொல்லியதேது? சிவத்துவ சின்ன குணவிளக்கமுங் குணமாகாதோ? குணமாமே; உள்ளது. குணமானுலுங் குணியிலிருப்பதன்று; கந்தாதிகளிடத்துத் தீவிராதிதன்மம்போலே சிவத்துவ லக்ஷணங் குணத்திலிருக்கு மதனுன் மாறுபாடில்லை. (உரு)

பஞ்சகலைகளில் வாக்கிருக்கும் முறைமை
வகுத் துரைக்கின்றார்.

நிகழ்ந்திடுமேவாக்குநான்குநிவிர்த்தாதிகலையைப்பற்றித்
திகழ்ந்திடுமஞ்சதாகச்செயல்பரிணமமன்று
புகழ்ந்திடும்விருத்தியாகும்படங்குடிலானாற்போல
மகிழ்ந்திடும்பிரமமன்றுமாமாயையென்பர்நல்லோர்.

(இ-ள்). நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப்பற்றித் திகழ்ந்திடும் அஞ்சதாக =நிவிர்த்திகலா கெர்ப்ப புவன வாசிகளுக்குத் தூலதரமாயும், பிரதிஷ்டாகலா கெர்ப்ப புவன வாசிகளுத் தூலமாயும், வித்தியகலா கெர்ப்பபுவன வாசிகளுக்குச் சூக்குமமாயும், சாந்திகலா கெர்ப்பபுவன வாசிகளுக்குச் சூக்குமதரமாயும் சாந்தியதீதகலா கெர்ப்பப் புவனவாசிகளுச்குச் சூக்குமதமமாயுமிருக்கு மென் றிதன்பொருள்; செயல்=காரியப்படுதல்; பரிணமமன்று=மண்ணினின்றுங் கடகலச முதலானவைபோல மகாமாயையிலே நின்றும் வாக்குற்பத்திதூல பரிணதி ரூபமன்று; படங்குடிலானாற்போலப் புகழ்ந்திடும் விருத்தியாகும்=புடைவை கூடாரமானாற்போல விருத்திரூபமாம்; (விருத்திக்கும் பரிணமத்துக்கும் அத்தியந்தம் பேதமில்லாமையால், முற்றுவமையன்று, சூக்கும பரிணமமாகுமென் றிதன்பொருள், அந்த வாக்கு விருத்திக்குக் காரணம்); பிரமமன்று=சத்தப்பிரமவாதிசொல்லு மான் மாவன்று; நல்லோர் மாமாயை யென்பர். (உச)

இப்படி மாமாயையினின்றும் சாதாரண சத்த சிருட்டி
சொல்லிச்சாதாரண சத்தார்த்த சிருட்டியைச்
சாற்றுகின்றார்.

வித்தைகள்வித்தையீசர்சதாசிவரென்றிவர்க்கு
வைத்திடும்பதங்கள்வன்னம்புவனங்கண்மந்திரங்க
டத்துவஞ்சரீரம்போகங்கரணங்கடாமெலாமு
முய்த்திடும்வயிந்தவந்தானுபாதானமாகிநின்றே.

(இ-ள்). வித்தைகள்=சத்தகோடி மகாமந்திரங்கள்; வித்தையீசர் =அநந்தாதி மந்திர மகேசுவரர்கள்; சதாசிவர்=அணுசதாசிவர்கள்; என்றிவர்க்கு; வைத்திடும்பதங்கள்=சாதாரணங்களா யிருக்கும் பதங்கள் (எண்பத்தொன்று); வன்னம் (ஐம்பத் தொன்று); புவனங்கள் (இருநூற்றிருபத்துநான்கு); மந்திரங்கள் (பன்னிரண்டு); தத்துவம்

(அசாதாரணமா யிருக்கும் சுத்தகலாதி சுத்த பிருதிவியந்தம் முப்பத் தொன்று); சரீரம்=சாதாணு சாதாரணமாயிருக்கும் தூலதேகம்; போகம்= போக்கியப்பொருள்; கரணம்=முன் சொன்ன தத்துவங்க ளில் விசேடமாகும் இந்திரியங்கள்; தாமெலாமும்=இவைக ளெல்லா வற்றையும்; வயிந்தவந்தான்=சுத்தமாயையி லுண்டாகிய சுத்த வித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்னுஞ் சிவதத்துவமைந்து ந்தானே (தங்கள் தங்களிடத்திருப்பவர்க்கு முறைமையில்) உபதான மாகிநின்றே உய்த்திடும்=சமவாயி காரணமாய் நின்றுண்டாக்கும்.

மாயையிற்பிரபஞ்ச மாயையிற்கொத்துண்டாவதுபோல, மாமா யையிற் கொத்துண்டாகவேண்டுவதில்லை; விஞ்ஞானகலருட் பரிபவக்கு வமலர்களி லனுக்கிரகப்பட்டு மலபாகமின்றிப் பதிபதார்த்தத்துக்குட் பிரவேசித்துப் பதியாயிருக்கின்ற மந்திரர்கள் மந்திரமகேசுவரர்கள் அணுசதாசிவர்கள் என்னும் இவர்களை விஞ்ஞான கலர்களென்று வியாக் கியானம் பண்ணினார்கள்; அது முன்பின் மலையும்; ஒருமலத்தர் விஞ் ஞானகலர் என்று சொல்லியிருக்க, மலம் நீங்கி அதிகாரமலமாத்திரர்க ளாய் அபரபதிகளாய்க் கடந்துபோனவர் எப்படி விஞ்ஞானகலராவார் கள்? ஆகார்காள்; அப்படியாகிற் சில விடத்தப்படிச் சொல்லி யிருப்ப தேது? உள்ளது. பூர்வத்தி லிருப்பைநோக்கிப் புறப்பட்டவசனம். விஞ் ஞானகலர் மாயைக்கு மேற் சுத்த வித்தைக்குக் கீழ் நடுத்தானத்திலே யெண்ணிறந்திருப்பார்கள் என்றறிக. (உரு)

முன் சொல்லிய மந்திரர் முதன் மூவகை யான்மாக்களுக்குச்
சர்வஞ்ஞத்துவம் வாக்குவிருத்திமுதல் விந்துகாரிய
மின்றி உண்டாகாதென் றுணர்த்துகின்றார்.

மூவகையணுக்களுக்குமுறைமையால்விந்துஞான
மேவியதில்லையாகில்விளங்கியஞானமின்று
மோவிடவிந்துஞானமுதிப்பதோர்ஞானமுண்டேற்
சேவுயர்கொடியினுன்றன்சேவடிசேரலாமே.

(இ-ள்). (சர்வான்மாக்களுக்குஞ் சூக்குமைவாக்கு முதலிய விந் து ஞானமிருந்தாலுங் கன்மத்தினால் மாயையி லுண்டாகிய தூலசரீர சூக்குமசரீர சம்பந்தத்தினாலே சர்வஞ்ஞத்துவம் பிரகாசிக்கவில்லை யாதலால்,

மூவகையணுக்களுக்கு=மந்திரர் மந்திரமகேசுவரர் அணுசதாசி வர்களுக்கு; முறைமையால் விந்து ஞானமேவியதில்லை யாகில்=சூக்

ருமை முதல்வாக்கு விர்த்தி சம்பந்தக் கிரமத்தில் ஞானத்தை விளக்குதலான் ஞானமென்று பெயருடைய முன்னடுத்த விருத்ததிற் சொல்லிய வைந்தவ சூக்குமதேக தூலதேக புவனுதிகாரிய சம்பந்த மில்லாதிருந்தால்; விளங்கிய ஞானமின்றும்=சர்வஞ்ஞத்துவ சத்தியிற் சமுற்பன்ன சவிகற்ப சர்வவிஷய ஞானம் அவர்களிடத்திற் காணப்பட்டதில்லையாய்விடும்; விந்துஞானம்=இப்பொது சொல்லிய வயிந்தவ தத்துவ தாத்துவிக வாக்குருபவியஞ்சக ஞானமும் மவாக்குபாதி பொருந்திச் சர்வஞ்ஞத்துவ சத்தியிற் சமுற்பன்ன சர்வவிஷயவியங்கிய சவிகற்ப ஞானமும்; ஓவிட=நீங்கிட; உதிப்பதோர் ஞானமுண்டேல்=பரமுத்திக்கருகராமிவர்க்குச் சிவ நீரிடசண பாத்திர நிருவிகற்ப சமாதி சமுற்பன்ன நிருவிகற்ப சீவன்முத்தி சாட்சாத்கார ஞானமேதான், சகலர்க்கு முன்சொல்லிய மகாமாயாந்த தீக்ஷாசுத்தி மகாமாயா புருஷவிவேக ஞானசிவத்தியான சிவசமாதியினுற்பவிக்கு மொப்பற்ற சிவவிஷய சீவன்முத்தி சாக்ஷாத்கார ஞானந்தான், சமாதிஞான மாத்திரந்தான், தியானஞானமாத்திரந்தான், விவேகஞான மாத்திரந்தான்; உள்ளதேல் =அடுத்து முறைமையினும்; சேவுயர் கொடியினுன்றன் சேவடிசேரலாமே=திருவடியைப் பெறலாகுந்தானே; (காரிய லக்ஷணையினல் முன் சொல்லிய அறிவானந்த முதன்மை யென்கின்ற சிற்சத்தி லக்ஷண சிவத்துவாபி வியத்தி பெறலாகுந்தானே.)

சத்தியோநிருவாண தீட்சாசுத்தியாகில், அசத்தியோ நிருவாண தீக்ஷை மாத்திரத்துக் கங்கமாகிய விவேகஞானத் தியானசமாதி சீவன்முத்தி சாக்ஷாத்காரங்க ளின்றிப் பெறலாம்: மூவகையணுக்களாவார் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்க ளல்லர்; விதேகிகளாகும் முதலிருவர்க்கும் விந்து ஞான மில்லாமையால், விந்து ஞான மென்றது வாக்குமாத்திரமென்று பண்ணி, அஃ தெல்லார்க்கு முண்டென்று சகலர்க்குள் உத்தம மத்திம அதமர்கள் மூவகை யணுக்களென்று பொருளுரைத்தாலு மாறுபாடில்லையே? உள்ளது. ஒருபிரகாரத்தா லப்படியும் பொருளுரைக்கலாம். (உகூ)

இவ்விடத்து மகாமாயாகாரியத்தைச் சிறப்பித்தினிமேற் செப்பும்
படிக்குப் பொதுவாயுரைத்து, மாயாகாரியத்தையும்
அப்படிச்செப்பும்படிக் கப்படியுரைக்கின்ருர்.

அருவினிலுருவந்தோன்றியங்காங்கிபாவமாகி
யுருவினிலுருவமாயேயுதித்திடுமுலகமெல்லாம்

பெருகிடுஞ்சுருங்கும்பேதாபேதமொடபேதமாகு
மொருவனேயெல்லாமாகியலலனுயுடனுமாவன்.

(இ-ள்). அங்காங்கிபாவமாகி=காரியசத்தி சமூகமே மாயையாதலான் மாயை யங்கி காரியங்களங்கங்களென்னுந் தன்மையாகி; அருவினில்=காரியசத்தி ரூபமாகிய மாயையின்; உருவம்=அந்தக்காரிய சத்தி ரூபமாகிய கலாதிகாரியம்; தோன்றி=உற்பத்தியாய்; உருவினிலுருவமாயே=அந்தக் கலாதி கர்ரியத்தின்றும் பிரகிருதி முதலாகிய காரியமாகித்தானே; உலகமெல்லாம்=கலாதி பிருதிவி யந்தமாகிய தத்துவதாத்துவிகப் பொருள்க ளெல்லாம்; உதித்திடும்=உற்பத்தியாம்; பெருகிடுஞ் சுருங்கும்=சிருட்டிகாலத்தில் வியத்திருபமாயும் சங்கார காலத்திற் சத்திரூபமாயு மிருக்கும்; பேதாபேத மொடபேதமாகும்=வியத்திரூபமாய்க் காரணம் பெருகிக் காரியமான காலத்திற் கடமும் மிருத்தும் போலக் காரிய காரணங்கள் விசேஷா விசேஷமாய்த் தோற்றும்; சத்திரூபமாய்க் காரியஞ் சுருங்கிக் காரணமான காலத்திற் காரிய காரணங்கள் அவிசேஷங்களாய்த் தோற்றும்; (நிமித்த காரணனன்றி யாமோ வாகாதென் றுணர்த்துகின்முர்) ஒருவனே யெல்லாமாகி யல்லனுயுடனுமாவன்=சிவன்முனே அநந்தத்து வாரத்திஞலே மாயா காரியமெல்லாவற்றையும் பண்ணுகிறவனுய்க் (குலாலன் தண்டமுதலி யவற்றைக் கைக்கொண்டு பிடித்துப் பண்ணுவது போலப் பண்ணுதவனுமாய்த்) தனது சத்திரூப கரணசங்கற்பமாகிய சலன மற்ற தொழிலிஞற் பண்ணுநிற்பவனுமாவன்.) (உஎ)

தந்துமுதலியவுருவத்தினின்றும் படமுதலியவுருவந்தோன்றுதல்
கண்டிருந்தும் அருவினி லுருவந் தோன்று மென்ப
தடாதென்முசங்கித்து மறுத்துணர்த்துகின்முர்.

அருவுருவிஞதாகும்விகாரமுமவிகாரத்தில்
வருவதுமில்லையென்னில்வான்வளியாதிபூதந்
தருவதுதன்னின்மேகசலனசத்தங்களோடு
முருவின்மின்னுருமேறெல்லாமுதித்திடுமுணர்ந்துகொள்ளே

(இ-ள்). அரு=மாயை; உருவிஞதாகும்=கலாதிகளை யுண்டாக்க மாட்டாது; விகாரமும்=பரிணுமமும்; அவிகாரத்தில்=பரிணுமமல் லாத பொருளின்; வருவதுமில்லை யென்னில்=வாராதென்று நீசொல்

லில்; (வைதிகமதத்திஞன் மறுக்கின்ருர்) வான்=அருவாகிய ஆகாசமானது;வளியாதி பூதந்தருவது=வாயுவாதி பூதங்களை யுண்டாக்குவது; தன்னில்=அதனிடத்தில்; (அந்தப் பூதவிகாரங்களாகிய தூமதூளிபடல முதலியவற்றின்) மேகசலன சத்தங்ளோடு முருவின் மின்னுருமேறெல்லாமுதித்திடு முணர்ந்துகொள்ளே.

அந்த மேகத்தசைவு தொனிகளோடுகூடி உருவென்பது வருவித்து, உருவில் உருமின், உருமேறென்று பொருள்கள்கொண்டு இவையெல்லா முதித்திடுமென்று கூட்டுக. (உஅ)

திருஷ்டாந்தமுன்னுகச் சிவன்கிருத்தியம் பண்ணுமுறைமை யறிவிக்கின்ருர்.

மண்ணினிற்கடாதியெல்லாம்வருவதுகுலாலனாலே
யெண்ணியவுருவமெல்லாமியற்றுவனீசன்ருனுங்
கண்ணுகாரியங்களெல்லாங்காரணமதனிற்காண்பன்
பண்ணுவதெங்கேநின்றிங்கென்றிடிற்பகரக்கேணீ.

(இ-ள்). மண்ணினின்=மிருத்பிண்டத்தினின்றும்; கடாதியெல்லாம்=கும்பகலச முதலிய காரியங்களெல்லாம்;குலாலனாலே வருவது=மண்மகனாலுண்டாவது; (அப்படி) ஈசன்ருனும்=சிவனும்; எண்ணியவுருவமெல்லா மியற்றுவன்=நினைத்தகாரியங்களெல்லாம் நிருமிப்பன்; (முதற்காரணமின்றி முடிப்பானேவெனில், சர்வசாமர்த்திய மிருந்தாலுமது கூடாது, பின் எப்படி யென்னில்) கண்ணுகாரியங்களெல்லாங் காரணமதனிற்காண்பன்=நினைத்த காரியங்க ளெல்லாம் முதற்காரணமாகிய மாயையினின்று முண்டாக்குவன்; (குலாலன்பூமி யாதாரமாக நின்று கடாதிகாரியம் பண்ணக்கண்டோமே (ஈசனிங்கெங்கே நின்று பண்ணுவ தென்றிடில்); பகரக்கேணீ=சொல்லுவாம் நீகேள். (உகூ)

காத்தா நிற்கும் நிலையை நிர்வசனிக்கின்ருர்.

சீலமோவுலகம்போலத்தெரிப்பரிதனுணிற்குங்
கோலமுமறிவாரில்லையாயினுங்கூறக்கேணீ
ஞாலமேழினையுந்தந்துநிறுத்திப்பின்னுசம்பண்ணுங்
காலமேபோலக்கொண்ணீநிலைசெயல்கடவுட்கண்ணே.

(இ-ள்). சீலமோ வுலகம்போலத் தெரிப்பரிது=பரமேசுவரனுடைய சரித்திரம் உலகத்திலுண்டாகிய பிரமாதி தேவர்களுக்குப்போ

லச் சொல்லுவது துல்லபம்; (அமூர்த்தமாகையால், அதனுனிற்குங் கோலமுமறிவாரில்லை=ஆகையால், இந்தப்பரமேசுவரனுடைய சகளவிக்கிரக தடத்த லக்ஷணத்தையுங் காண்பாரில்லை(ஸ்வரூபலக்ஷணந் தூரமென்பது சொல்லவேண்டுமோ) ஆயினுங்கூறக்கேணீ=அப்படியிருந்தாலுஞ் சொல்லுகிறோம் நீ கேள்; ஞாலமேழினையுந் தந்து நிறுத்திப் பின்னுசம் பண்ணுங் காலமேபோல=தாத்துவிக சகலபிரபஞ்சத்தையுந் தோற்றுவித்து நிற்பித்துப்போக்கும், அமூர்த்தமாய், அப்பிரத்தியக்ஷமாய், நிராதாரமா யிருக்கும் காலமேபோல; கடவுட்கண்ணே=காரியம்பண்ணும் சிவனிடத்திலே; நிலைசெயல் கொண்ணீ=நிராதாரமாய் நிற்றன்முறைமையுஞ், சங்கற்பமாத்திர சன்னிதானத்தாற் கிர்த்தியம் நிகழ்தன் முறைமையுங் காண்பாயாக.

அப்போ காலத்துக்குப்போற் புத்திமற்கர்த்திருத்துவம் பொருந்துவதின்றெனின், அப்படிச்சொல்லவேண்டாம். காலமென்பது அமூர்த்தமாய் ஸ்வதேகத் தசைவுபண்ணும் ஆன்மாவைப்போலவென்று போதிப்பது. (௩௦)

சிவசங்கற்பத்தான்மாயையில் விகாரமாய்ச் சிவனுக்கு
விகாரமின்றிப் பிரபஞ்சந்தோற்று
முறைமையை விரிக்கின்றார்.

கற்றநூற்பொருளுஞ்சொல்லுங் கருத்தினிலடங்கித்தோன்று [ம்
பெற்றியுஞ்சாக்கிராதியுயிரினிற்பிறந்தொடுக்க
முற்றதும்போலவெல்லாவுலகமுமுதித்தொடுங்கப்
பற்றொடுபெற்றதின்றிநின்றனன்பரனுமன்றே.

(இ-ள்). கற்ற நூற்பொருளுஞ் சொல்லுங் கருத்தினிலடங்கித்தோன்றும் பெற்றியும்=முன் படித்துப் பழகிய சாத்திரச்சொல்லனுபூதி பொருளனுபூதிகள் புத்தியிற் சூட்டிய வாசனையொடுங்கிக் (கண்ணெழுத்தியைபு முதலிய காரணத்தினுற் திரும்ப அந்த வாசனை கிளம்பி மதியினினைவு வருவிக்க நினைத்த வருயிர்த்துணைவி மனத்தி லிச்சிக்கச் சூக்குமை வாக்கிற் சொல்முன்றோற்ற மதிமணிவிளக்கின் மலர்ந்த சிற்சத்தியிற் சொல்லனுபூதி பொருளனுபூதிகள்.) பின்றோற்றுமுறையும்(போல); சாக்கிராதி=சாக்கிரமுதலிய அவத்தை களைந்தும்; உயிரினிற்பிறந்தொடுக்க முற்றதும்போல=அருவாகி நிமித்தனுகிய வான்மாவிற் பொருந்திய கருவிகளிற் றமோகுணங் கிளம்பிக் கிளம்பி மெள்ள மெள்ள மேலிட மேலிடச் சத்துவகுணஞ் சற்றே சிற்சத்தி மனச்சங்கற்பத்தோடு

குன்றிக் குன்றிவர முறைமையிற் றோற்றித் திரும்பத் தமோகுண சத்துவ குணங்களின் தேறுதல் குறைதல் மாறிவர மறைந்ததும் போல; பரனும்=சிவனும்; எல்லாவுலகமு முதித்தொடுங்கச் சகல காரியப் பிரபஞ்ச முற்றும் மாயையிற் றோற்றி யழிய; (அந்தப் பிரபஞ்சத் தோடு) அன்றே=அநாதியே; பற்றொடு பற்றதின்றி;=தனது சத்தியாகிய சொரூப கரணத்தினது சங்கற்பத் தொழிலாகிய சன்னிதிச்சொரூப சம்பந்தியாய்; (கடத்தொடு தொட்டுக்கைகொடு பிடித்த தண்ட சக்கிராதி கடத்தின தசைதற் றொழிற் சம்பந்திபோற் சம்பந்தியன்றி); நின்றனன்=வியாபித்திருப்பன். (கூக)

சித்துக்கும் அசித்துக்கும் தோற்ற மொடுக்கஞ் சாத்திரஞ் சொல்லுமாதலான் மாயையிற் றோற்ற மொடுக்க முயிர்க்கு மதிக்கப்படாது சித்துக்குச் சடத்தன்மை வருமாதலாலே பாரிசேடத்தாற் சிவனிடத்திற் செப்பவேண்டும்; சிவனிடத் தொடுங்கினால் முத்தியடைந்து போகாமற் றிரும்பச் சித்துதிப்ப தேதென்று சங்கித்துப் பரிகரிக்கின்றார்.

உயிரவையொடுங்கிப்பின்னுமுதிப்பதெனரன்பாலென்னிற்
செயிருறுமலத்தினுகுஞ்சிதைந்ததேதென்னிற்சித்தத்
தயர்வொழிகாரியங்களழியுங்காரணங்கிட்க்கும்
பயிறருகாரியம்பின்பண்டுபோற்பண்ணுமீசன்.

(இ-ள்). உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதென ரன்பாலென்னில்=சிவனிடத்திற் சித்துக்குத்தோற்ற மொடுக்கம் (பிரமத்தில் நாராயணப் பிரகிருதியிற் பரிணத வேதாந்தி பாஞ்சராத்திரிபோலச் சித்தாந்திகள் செப்பார்கள், பின்னெப்படி?) செயிருறுமலத்தினுகும்=ஆன்மாக்களுக்குத் தோற்றமொடுக்கம் மாயையிற் கலாதிதத்துவங்கடோற்றி யொடுங்கிக் கட்டவிட மோகமுற்ற மல மொருபிரதேசத்தின் நீங்க மறைக்க, அதனால் ஞானக்கிரியைகள் விளங்க மறைய உபசரிக்கப்படும் விகாரமின்றி ஞானக்கிரியை கட்குக்கலையினால் விளங்குதல், மலத்தினான்மறைதல், சித்துக்குச் செனனமரணம், சிவன் நிமித்தனுதலால், அரன்பாலென்றுபசரிக்கப்பட்டது, சடத்துக்குச் சிவசங்கற்பத்தால் விகாரமாய்த்தனது காரணரூபத்திற் காரியரூபமறைதல் காரணரூபமறையக் காரியரூபம் விளங்குதல் நாசமுற்பத்தி; சிதைந்ததேதென்னில்=ஆணவமுதலிய மலங்களிருக்கிற் சங்கரிக்கப்பட்ட தேதெ

னில்; சித்தத்தயர்வொழி=மனசில் மயக்கத்தைவிடு; காரியங்களழியும் =காரியப்பொருளொடுங்கும்; காரணங் கிடக்கும்=முதறுணை நிமித்த மென்கின்ற காரணத்திரய மிருக்கும்; (அதனல்) பயிறருகாரியங்கள் பண்டுபோற் பண்ணுமீசன்=சிவனிமித்தகாரணனாய் நின்று போசக போக்கியங்களாக முன்பழகிய காரியப்பொருள்களை முந்திய சிருட்டி யிற் போல முதற்காரணத்தினின்று துணைக்காரணத்தினாற் றோற்று விப்பன். (சுஉ)

சிவன்கிருத்திய கிருத்தானாலும் விகாரியல்லனென்று
விளம்புகின்றார்.

தோற்றுவித்தளித்துப்பின்னுந்துடைத்தருடொழில்கண்மூன்
போற்றவேயுடையனீசன்புகுந்ததுவிகாரமென்னிற் [றும்
சாற்றியகதிரோனிற்கத்தாமரையலருங்காந்தங்
காற்றிடுங்கனலைநீருங்கரந்திடுங்காசினிக்கே.

(இ-ள்). தோற்றுவித் தளித்துப் பின்னுந் துடைத்தருள் தொழில் கள் மூன்றும்=சிருட்டி திதி சங்காரமென்கின்ற மூன்று கிருத்தியங்க ளையும், (சொல்லாமற் சித்திக்கும் திரோபாவானுக் கிரகமென்கின்ற விர ண்டு கிருத்தியங்களையும்;) ஈசன்=சிவன்; போற்றவேயுடையன்=பண் ணுதற்குரியன்; புகுந்தது விகாரமென்னில்=குலாலாதிகளுக்குப் போல முன்னிருந்த முறைமைவிட்டு வேறொரு முறைமை யாகுதலாகிய விகிர்திவந்ததென்னில்;

(அஃதில்லை) சாற்றிய கதிரோ னிற்கத்தாமரையலரும் காந்தங் காற்றிடுங்கனலை நீருங் கரந்திடுங் காசினிக்கே=உலகத்தின்கண்ணே காரணமாகக் கற்பிக்கப்பட்ட சூரியன்முன்னின்ற முறைமையினிற்கக் கமல மலரும், சூரியகாந்தக் கல்லுத்தானும் அசைவற்றிருந்து அக்கினி யைக்கக்கும், காசினிக்கேயென வின்னுமெடுத்துப் பூமிக்குள்ளே நீருஞ் சுவறும்;

நீர்சொன்ன துமக்குத் திருட்டாந்தமன்று, சூரியனுக்குக் கமலமல ரக்கடவது, காந்தங்கனலைக் கக்கக் கடவது, நீர் நிலத்திலே சுவறக்கட வது என்னுஞ் சங்கற்பமில்லை; காரியம் நிகழக்கண்டோம்; இதுகொண்டு பூதங்கர்த்தா, பிரகிருதிகர்த்தா, கன்மங்கர்த்தா, காலங்கர்த்தா என் கின்ற வாதங்கள் வந்துலாவப் புத்திமான் கர்த்தாவென்பது பொய் யாய்த் தூரம்போயிற்று; சத்தியம் நீ சொல்லியது; சூரியனுக்குக் கமன சங்கற்பத் துவாரத்தினாற் கமலவிகாசாதி சங்கற்ப காரியமாமென்று காணுதலால்) வேறு மாதில்லை.

கடகாரியம் நிருமித்தலிலே குலாலனுக்கு விகாரமுண்டென்றீர், சகற்காரிய நிருமத்தலிலே சிவனுக்கு விகாரமில்லையென்றீர், சேதனப் பொருள்க ளிரண்டி லொன்றி லுமக்கு பட்சபாதமேன்? சத்தியமே நீ சொன்னது; கட விகிர்தியிலே குலாலதூல சரீர விகிர்தி காரணம், குலாதூல சரீர விகிர்தியிலே குலாலசூக்கும சரீர விகிர்தி காரணம், குலாலசூக்கும சரீர விகிர்தியிலே விகிர்தியில்லாத குலால சிற்சத்தி யசலசங்கற்பமே காரணம்; அவ்விடத்தும் விகிர்தியில் விகிர்தியுள்ள பொருள் காரணமென்னில் அநவஸ்தைவரும். குலாலதூல சூக்கும சரீரவிகிர்தித் துவாரத்தினாலே, குலாலனுக்கு விகிர்திசொன்னோம், சாக்ஷாத்சத்தி சரீரத்தில்லையென்பதே பரமார்த்தம்.

சிருஷ்டியாவது சாத்துவிககுணுதிக்கத்தாங் கர்த்திரு சங்கற்பத்தால் முதற்காரணத்திற் காரியப்பொருள் வெளியாதல்,

திதியாவது ராசதகுணுதிக்கத்தாற் றோற்றிய அந்தந்தப்பொருள் அந்தந்தத்தொழிலி லமைந்து முதற்காரணம் பற்றாக நிற்றல்;

சங்காரமாவது தாமதகுணுதிக்கத்தாற் றனது தனதுதொழில்களை விட்டு முதற்காரணத்தில் முழுகிமறைதல்;

திரோபாவமாவது மிகுதியும் நிந்திதமாகிய போக்கியப்பொருளினுமிது நன்கென்று நழுவாதிருத்தல்;

அனுக்கிரகமாவது பாசவீடு சிவத்துவ விளக்கமென வறிக. (௩௩)

சிருட்டி முதலியகிருத்தியமேதுநிமித்திய மியற்றுவதென் னப் பலம் இரண்டு திருவிருத்தத்தா லிசைக்கின்றார்.

சொன்னவித்தொழில்களென்னகாரணந்தோற்றவென்னின்
முன்னவன்விளையாட்டென்றுமொழிதலுமாமுயிர்க்கு
மன்னியபுத்திமுத்திவழங்கவுமருளான்முன்னே
துன்னியமலங்களெல்லாந்துடைப்பதுஞ்சொல்லலாமே.

(இ-ள்). தோற்றவென்ன காரணமென்று கூட்டுக; விளையாட் டென்பது சிலர்கருத்து: வெளிப்பொருள். (௩௪)

அழிப்பிளைப்பாற்றலாக்கமவ்வவர்கன்மமெல்லாங்
கழித்திட நுகரச்செய்கைகாப்பதுகன்மவொப்பிற்
றெழித்திடமலங்களெல்லாமறைப்பருள்செய்திதானும்
பழிப்பொழிபந்தம்வீடுபார்த்திடிலருளேயெல்லாம்.

(இ-ள்). அழிப்பு=சங்கரித்தல்; இழைப்பாற்றல்=பூமியின் கண்ணே சரீரேந்திரியங்களோடே சனனமரணங்களிற் கூடுதல் பிரிதல், சுவர்க்கநரகங்களிற் போதல் வருதல் முதற்றொழில்களான் வருந்தொய்வுதீர்த்தல், சத்திகுன்றிய மாயைக்குத் திரும்பச்சாமார்த்திய முண்டாக்கலுமாம், கன்மபாக நிமித்தமுமாம்; ஆக்கம்=திரும்பச் சிருட்டித்தல்; அவ்வவர் கன்மமெல் லாங்கழித்திட=பிரளயத்திற் பக்குவப்பட்ட அவரவர் கன்மங்கள் முற்றும் மலபரிபாகத்திற்கு நிமித்தமாய்ப் புசிப்பித்துத் தொலைக்க; காப்பது=திதிசெய்வது; நுகரச்செய்கை=கன்மபலத்தைப் புசிப்பித்தல்; மறைப்பருள்செய்தி தானும்=மலபாகம் வரும்பொருட்டுக் கன்மபலபோக்கியப் பொருள்களி லமிழ்த்துதலாகிய திரோபாவகிர்த்தியமும் தீக்ஷை பண்ணுதலாகிய அனுகிரக கிர்த்தியந்தானும்; கன்மவொப்பில்=மலபரிபாகம் வரவரும் உபகாராபகாரகன்ம பலசமத்தில்; மலங்ளெல்லாந் தெழித்திட=மலமாயா கன்மங்களை நீக்கிச் சிவத்துவத்தை விளக்க; (திரோபாவ கிர்த்தியத்தாற் கன்மசமத்துவம் வருவித்தல், அனுக்கிரக கிர்த்தியத்தால் மலம் நீக்கிச் சிவத்துவம் வருவித்தல் எனப்பொருள் கொள்க) பழிப்பொழி முதற்பொருள் வெளிப்பொருள். (சுகு)

சிருட்டி திதி சங்காரங்கள் பிரம விஷ்ணு காலாக்கினிருத்திர
னிவர்களுக்குச் சொல்லியிருக்க மூன்றுதொழிலும்
ஸ்ரீகண்டமூர்த்திக்குச் சொல்லிய தென்னையென
அதற்கு உத்தரமுரைக்கின்றார்.

உரைத்தவித்தொழில்கண்மூன்றுமூவருக்குலகமோத
வரைத்தொருவனுக்கேயாக்கிவைத்ததிங்கென்னையென்னில்
விரைக்கமலத்தோன்மாலுமேவலான்மேவினோர்கள்
புரைத்ததிகாரசத்திபுண்ணியனண்ணலாலே.

(இ-ள்). உரைத்த வித்தொழில்கள் மூன்றும் மூவருக் குலகமோத=சிருட்டி திதி சங்காரமென்கிற கிர்த்திய மூன்றும் பிரமவிஷ்ணு காலாக்கினி ருத்திர னிவர்களுக்குலகஞ்சொல்ல; வரைத் தொருவனுக்கேயாக்கி வைத்த திங்கென்னை யென்னில்=குணமத்திய நிலையராயும், பிரகிருதி யக்கிர நிலையராயும், இராகாந்த நிலையராயும் இருக்கின்ற ஸ்ரீகண்டமூர்த்தி யொருவருக்கே நியமித்துச் சொல்லிய தேதென்னில்; (முறைமையிற் சொல்லுவாம்);

பிரதம மகாசிருஷ்டி காலத்திற் பரசிவன் சுத்தமாயையி னின்றும், பொருட் பிரபஞ்சஞ் சொற்பிரபஞ்சமுமாயிருக்கும் சுத்ததத்துவமஞ்சையுஞ் சுத்தாத்துவ வாசிகட்குச் சிருஷ்டித்தற் புவனங்கள் சூக்குமதேகங்கள் தூலதேகங்கள் போக்கியப்பொருள்க ளிவைகளைப் பொதுச்சிறப்பாகப் பண்ணிப்பொருத்திச் சுத்த சுத்தாசுத்த வசுத்தாத்துவ வாசிகளெல்லார்க்கும் வேறுவேறு நாதமாகிய பரதேகங்களைச் சிறப்பாகப்பண்ணிப் பொருத்தி யந்தப் பரதேகத்துக்குள் ளிருக்கும் பிரணவகலாபஞ்சக ரூபமாகியசிவதத்துவ மஞ்சையுமிருக்கப் பண்ணிக்காத்து, மகாப்பிரளயத்தின் முற்றுமவாந்தரத்துஞ் சிலதேகாதிகளையுஞ் சங்கரிப்பர்;

பின்னந்த மகாசிருட்டி காலத்தி லநந்தேசுரர் அசுத்தமாயையினின்றும் புவனக்கொத்தாயுஞ் சூக்குமதேகக்கொத்தாயும் இருவகையாயிருக்கின்ற கலாதிபிருதிவியந்த தத்துவங்களையுந் தூலசரீரங்களையும் போக்கிய பொருள்களையும் பொதுச்சிறப்பாகப் பண்ணிப் பொருத்திக் காத்து மகாப் பிரளயத்து முற்று மவாந்தரத்துச சிலதேகங்களையும் ஸ்ரீகண்டாதித்துவாரத்தினாலுந் தாமாயுஞ் சங்கரிப்பர்;

மத்தியம சிருஷ்டிகாலத்தில் ஸ்ரீமத் ஸ்ரீகண்ட ருத்திரர்பிரகிருதியினின்றும் புவனாதாரக் கொத்து மாத்திரமா யிருக்கின்ற குணாதி பிருதிவியந்த தத்துவங்களைப் பொதுவாகப் பண்ணிப் போக்கியப் பொருள்களைத் தூலதேகங்களைப் பொதுச்சிறப்பாகப் பண்ணிப் பொருத்திக் காத்து மத்தியமப் பிரளயத்தில் முற்றுஞ்சங்கரிப்பர்;

அவரேவலாற் குணநிலையர்களா யிருக்கும் பிரமவிஷ்ணுக்களும் பிரமாண்டத்துண் ணிலையர்களாயிருக்கும் பிரமவிஷ்ணுக்களும் குணாதி பிருதியந்தபுவனங்களிற்றூலதேகங்களையும்போக்கியப்பொருள்களையும் பொதுச்சிறப்பாகப்பண்ணிப் பொருத்திக்காப்பார்கள்; பிரதமப்பிரளயத்தில் ஸ்ரீகண்டரேவலாற்றம திருப்புத்தொடங்கிச் சுவர்க்கப்ரியந்தஞ்சங்கரிக்குங் காலாக்கினிருத்திரரே அவாந்தரத்தும் பிரமாண்டத்துட் லேசரீரங்களோடு போக்கியப்பொருள்களைச் சங்கரிப்பர்;

(ஆதலால்) புண்ணியன் = பரசிவானுக்கிரகம்பெற்றுப் பரிசுத்தராய்ச் சிவனாயிருக்கு முன்சொல்லிய ஸ்ரீகண்ட பரமேசுரன்; புனாத்ததிகார சத்தி நண்ணலாலே = பரசிவனிடத்தினின்றும் பரசிவனுக்கொத்திருக்கும் பிரகிருதி காரியசிருட்டியாதி கிர்த்தியஞ் செய்யுஞ் சாமர்த்தியம் பெறலாலே (அவரேவுதற்கர்த்தா);

விரைக்கமலத்தோன் மாலுமேவலான் மேவினோர்கள்=காலாக்கினிருத்திரரோடு பிரமவிஷ்ணுக்களியற்றுதற் கர்த்தாக்கள்; (ஆதலால், அவரொருவருக்கேயாகவைத்தது, அதுவன்றிப்) புண்ணியன்=ஸ்ரீமதநந்தேசுரானுக் கிரகம் பெற்றுப் பரிசுத்தராய்ச் சிவனுயிருக்கும் பிரமாண்டத்துட் சிவலோககைலாச மேரு சிகர நிலைபராகிய ஸ்ரீகண்டபரமேசுரன்; புரைத்ததிகார சத்தி நண்ணலாலே=ஸ்ரீமதநந் தேசுரரிடத்தி னின்று மநந்தேசுரருக் கொத்திருக்கும் பிரமாண்டத்துட் பிரமவிஷ்ணு முதலோர்களுக்கு நிக்கிரகானுக் கிரகம் பண்ணுஞ் சாமர்த்தியம் பெறலாலே (அவரேவுதற் கர்த்தா);

விரைக்கமலத்தோன்மாலு மேவலான் மேவினோர்கள்= பிரமாண்டத்துள் நிலையராகிய காலாக்கினி ருத்திரரோடு கூடியிருக்கும் பிரம விஷ்ணுக் களியற்றுதற் கர்த்தாக்கள்;

(அதுவன்றிப்) புண்ணியன்=பரசிவானுக் கிரகம் பெற்றுப் பரிசுத்தராய்ச் சிவனுயிருக்கும் ஈசுரதத்துவ நிலையராகிய ஸ்ரீகண்டபரமேசுரன்; புரைத்ததிகார சத்தி நண்ணலாலே=பரசிவனிடத்தினின்றும் பரசிவனுக் கொத்திருக்கு மநந்தேசுரரோடுகூடி மாயாகாரிய சிருட்டியாதி கிருத்தியஞ் செய்யுஞ் சாமர்த்தியம் பெறலாலே, அவர் சுவயமாயுங் குணநிலைய பிரமாண்ட நிலைய ஸ்ரீகண்டத் துவாரத்தினுலேயு மேவுதற் கர்த்தா;

விரைக்கமலத் தோன்மாலு மேவலான் மேவினோர்கள்=குணத்துள் பிரமாண்டத்து ளிருவகைப் பிரம விஷ்ணுக்களு மியற்றுதற் கர்த்தாக்கள்; இப்படி ஸ்ரீகண்டத்திரயம் பிரேரகம், காலாக்கினி ருத்திரரோடு பிரம விஷ்ணு சதுட்டயம் பிரேரிய மெனவறிக; பரசிவனே வுதற்கர்த்தா; அனந்தேசாதிகளோடு கூட ஸ்ரீகண்டத்திரயம், பிரம விஷ்ணு சதுஷ்டயமெல்லா மியற்றுதற் கர்த்தாவாயிருக்கும். (சுசு)

ஆகையால் மகாப்பிரளயத்திற் பரசிவமொன்றுமே
பதிகளுக்குட் பரிசேஷிக்குமென்று படிக்கின்றார்.

இறுதியாங்காலந்தன்னிலொருவனேயிருவருந்தம்
முறுதியினின்றொன்னிலிறுதிதானுண்டாகாதா
மறுதியிலரனேயெல்லாமழித்தலாலவனாலின்னும்
பெறுதுநாமாக்கநோக்கம்பேரதிகரணத்தாலே.

(இ-ள்). இறுதியாங் காலந்தன்னில்=மகாப் பிரளயத்தில்; ஒருவனே=பரசிவனொருவரே; (பதிகளிற் பரிசேடித்து நிற்பர்) இருவருந்

தம் முறுதியினின்ரு ரொன்னில்=(பிரம விஷ்ணுக்க ளிருவரும், தாமெ ன்பது பவுராணிக மதப்பழக்கத்திற் படித்தது, சிவசாஸ்திரீயத்திற்கு அநந்தாதி) அதிகாரகர்த்தாக்க ளனைவருந் தமது கிர்த்தியங்களோ டிருந் தார்களாகில்; இறுதி தானுண்டாகாதாம்=மகாப்பிரளயம் வாராதாகு மாதலால்; அறுதியில்=அத்திதி காலமுடிவில்; அரனே=பரசிவனே; எல்லா மழித்தலால்=சிவதத்துவ முதற் பிருதிவி தத்துவ பரியந்தம் பிரபஞ்சமுற்றுஞ் சங்கரிப்பித்துச் சங்கரித்தலால்; அவனுல்=அந்தப் பரசிவனுல்;

பேரதி கரணத்தாலே "அதபத்யுரதிஷ்டாநம்" என்று ஸ்ரீமன் மதங் காகமவசனத்தால் தாதான் மியத்தினுற் பரசிவனுக்குப்பெரிதா மிருப்பாகுஞ் சத்திகரணத்தினுலே தானே;

(திரும்ப வெடுத்துக் கூட்டுக) பேரதிகரணத்தாலே (பேரதிகரண த்தினின்று மெனவேற்றுமைமாறுக) 'நித்தியாதிஷ்டேயரூபிணி' என்று பவுஷ்கர வசனத்தினுற் பரிக்கிரக சத்தியாதலா லந்தப் பரசிவனுச்குப் பெரிதாமிருப்பாகுஞ் சுத்தமாயையி னின்று சிவதத்துவ மஞ்சுக்கும்; இன்னும்=இனிமேலும்; ஆக்க நோக்கம் பெறுதும்=சிருட்டி திதிகளைக் காண்போம்;

திரும்ப எடுத்துக்கூட்டுக) பேரதிகரணத்தாலே=பரிக்கிரகசத் தியினுல் அந்தப் பரசிவனுக்குப் பெரிதாயிருப்பாகு மியற்றுதற் கர்த்தா வாகும் அநந்தேசுரனுலேதான்;

(திரும்பவெடுத்துக்கூட்டுக) பேரதிசரணத்தாலே=தாதான்மியத் தினு லந்த வநந்தேசுரருக்குப் பெரிதாமிருப்பாகு மந்தவநந்தே சுர சத்தி கரணத்தினுலேதான்;

(திரும்பவெடுத்துக்கூட்டுக) பேரதிகரணத்தாலே=(பேரதிகரணத் தினின்றுமென வேற்றுமை மாறுக) பரிக்கிரகசத்தியினுல் அந்தவனந் தேசுரருக்குப் பெரிதாமிருப்பாகும் அசுத்தமாயைனின்றுதானே கால தத்துவமாதியாய்ப் பிருதிவி தத்துவ மந்தமாகுந் தத்துவங்களுக்கு; இன்னும்; ஆக்கநோக்கம் பெறுதும்=திரும்பச் சிருட்டி ஸ்திதிகளைக் காண்போம். (கஎ)

இதனுலுங் கர்த்தாச்சரீரியல்லனென்பது சொல்லப்பட்டு, சில வாதி கள் சரீரியல்லாத கர்த்தாவுக்குக் காரியகர்த்திருத்துவங் கூடா தென்று சொல்லுவார்கள்; அஃதெப்படியென்று வினுவ உத்தர முரைக்கின்ருர்.

அருவமோரூபாரூபமானதோவன்றிநின்ற
வுருவமோவுரைக்குங்கர்த்தா வடிவெனக்குணர்த்திங்கென்னி

லருவமுமுருவாரூபமானதுமன்றிநின்ற
வுருவமுமூன்றுஞ்சொன்னவொருவனுக்குள்ளதாமே.

(இ-ள்). வெளிப்பொருள்; வினவின சீஷன்கருத்து இவை:—கர்த்தாசரீரியோ, அன்றியசரீரியோ, அன்றிச்சரீரியசரீரியோ, அன்றிச்சரீரியசரீரியல்லாதவனே, இந்த நாலு பக்ஷத்துள் சரீரியசரீரி யல்லாதவனாகிற் சூனியப்பொருளாய்ப் போவன், சரீரியசரீரியாகில், விருத்த தன்மம் இரண்டுஞ் சீதமும் உஷ்ணமும்போல ஒருபொருளினிரா; அப்படியிருக்குமாகிலுஞ் சரீரிக்கும் அசரீரிக்குஞ் சொல்லப்போகிற குற்றஞ் சொல்லாமற்றானே வரும். (௬அ)

சரீரியுமாம் அசரீரியுமாம் சரீரியசரீரியுமாம் என்று நாம் சொன்னோம்; சரீரியசரீரியாகிற் சரீரிக்கும் அசரீரிக்குஞ் சொல்லுங் குற்றம் வருமென்றது ஏதென்று குருவினவச் சீஷன் கூறுகின்றதற்குக் கூறுகின்றார்.

நண்ணிடுமுருவமென்னினமக்குளவுருவம்போலப்
பண்ணிடவொருவன்வேண்டுமிச்சையேற்பலருமிச்சை
கண்ணியவுருவங்கொள்ளோம்யாம்பெருங்கடவுடானு
மெண்ணியயோகர்சித்தர்போலுருவிசைப்பன்காணே.

(இ-ள்). நண்ணிடு முருவமென்னில்=கர்த்தாவைச்சரீரம் வந்து பொருந்துமென்னில்; நமக்குள வுருவம்போல=நம்போல்வார்க்குள்ள சரீரத்துக்குப்போல; பண்ணிடவொருவன் வேண்டும்=சிருட்டிக்க வேறொரு கர்த்தா விரும்பப்படுவென்;

(அப்படியாகி லவனுக்கும் வேறொருகர்த்தா வேண்டுமென்று அநவஸ்தை வரும்) இச்சையேல்=தமது சங்கற்பத்தாற் றமக்குச் சரீரத்தைப் பண்ணிக்கொள்வாரென்று நீர் படித்துப் பேசில், தாம்சரீரியாயிருந்து தமக்குச் சரீரத்தைப்பண்ணிக் கொண்டாரோ, அன்றி யசரீரியாயிருந்து பண்ணிக்கொண்டாரோ, சரீரியாயிருந்து தம திந்தச் சரீரத்தைச் சிருட்டித்தாரானால், அந்தச்சரீரத்தையுஞ் சரீரியாயிருந்து சிருட்டிக்க வருமென் றனவஸ்தை வரும்; அசரீரியாயிருந்து சங்கற்பத்தாற் றமது சரீரத்தைப் பண்ணிக்கொண்டானென்னில், அப்படிச் சங்கற்பத்தாற் சர்வப்பிரபஞ்சத்தையும் பண்ணுவனென்று சரீரகற்பனை நிஷ்பலமாம்; அப்படி யாகிலும்,

பலரு மிச்சை; (நாமெல்லாரும் நமது சங்கற்பத்தால் நமக்கு வேண்டிய சரீரங்களைப்பண்ணிக் கொள்வோம், அப்படி நீ சொல்லவேண்டியதல்ல;) யாம்=நாமெல்லாரும்; கண்ணிய வுருவங்கொள்ளேம்=கருதிய திவ்விய சரீரங்களை மலாதி தகைந்த சாமர்த்தியர்களாதலாற் பண்ணிப்பொருத்திக் கொள்ளமாட்டோம்; பெருங்கடவுடானும்=பரமகர்த்தாத்தானும்; எண்ணிய யோகர் சித்தர்போலுரு விசைப்பன்காணே=எண்ணிக்கையாயிருக்கின்ற யோகர்கள் சித்தர்கள்போல வேண்டிய சரீரங்களை யெடுப்பன். (௩௯)

நீர்சொல்லிய திட்டாந்தஞ்செப்ப மன்றென்று
செப்புகின்றான்.

வித்தகயோகர்சித்தர்வேண்டுருக்கொள்ளுமாபோ
லுத்தமன்கொள்வனென்னினவர்களிலொருவனுவ
னத்தகையவர்களெல்லாமாக்குவதருளாலாங்கே
வைத்ததுமாயையென்னில்வடிவெலாமாயையாமே.

(இ-ள்). வித்தகயோகர் சித்தர் வேண்டுருக் கொள்ளுமாபோலுத்தமன் கொள்வ னென்னில்; அவர்களி லொருவனுவன்=அந்த வித்தகயோகர் சித்தர்களுக்குள்ளே யொருவனுவன்; (ஆனு லேது? அவர்கள் பிராகாமிய சித்தியினுலே தங்களுக்குச் செயற்கையாகிய திவ்விய சரீரங்களை யெடுத்துவிடுவார்கள், தங்களிச்சையினுற் செயற்கையாகிய சரீரங்களைவிட்டு இயற்கையாகிய திவ்விய சரீரங்களை யெடுக்கமாட்டார்கள்); அத்தகையவர்க ளெல்லா மாக்குவ தருளா லாங்கே வைத்தது மாயையென்னில்; (அதுவன்றியு மவர்கள்) ஆங்கே=அவ்விடத்து; அத்தகையெல்லாம்=பிராகாமிய சித்தியினு லெடுக்குஞ் சரீரங்க ளனைத்து முபாதான காரணமின்றி யுண்டாகாதென்ன; அருளால்=சிவாஞ்ஞையினுல்; (காரியத்து வாரத்தினுலே); மாயைவைத்த தென்னில்=மாயை யுண்டாக்கிக் கொடுத்ததென் றுத்தரஞ் சொல்லில்; (அத்திருட்டாந்தம்போல் அச்சிவனுக்கும்) வடிவெலாமாயையாமே=சரீரமுற்று மாயாமயமாமே. (௪0)

ஏகதேசவுவமையில்முற்றுவமைக்குள்ள உரை
யுரைக்கப்படாதென்றுரைக்கின்றார்.

மாயைதான்மலத்தைப்பற்றிவருவதோர்வடிவமாகு
மாயவாணவமகன்றவறிவொடுதொழிலையார்க்கு

நாயகனெல்லாஞானத்தொழின்முதனண்ணலாலே
காயமோமாயையன்றுகாண்பதுசத்திதன்னால்.

(இ-ள்). மாயைதான்; மலத்தைப்பற்றி வருவதோர் வடிவமாகும் — ஆணவமலநிமித்தமாக வாராநின்றிருக்கும் தூலசூக்குமசரீரமாகும்; (ஏதுக்காக?) ஆயவாணவம் = அந்த ஆணவமலம்; (ஆன்மாக்களுக்கு) அகன்ற வறிவொடு தொழிலையார்க்கும் = சிவனுக்குப்போல விரிந்த சர்வஞ்ஞத்துவஞ் சர்வகர்த்திருத்துவ மென்கின்ற சிவத்துவமாகியபேரறிவைக்கட்டும்; (அதனாலந்த வான்மாக்களுக்கு மல பரிபாகம் வரும்பொருட்டுப் போகம்புசிக்கச் சிற்றறி வுண்டாகச் சிவனருளால் மாயை தூல சூக்கும சரீரமாம்) நாயகன் = சிவன்; எல்லா ஞானத்தொழில் முதல் நண்ணலாலே = சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவரூப சிவத்துவத்தில் நின்று நிமித்தமன்றி விளங்குஞ் சகல ஞானக்கிரியானுக் கிரகங்களைப் பொருந்தலாலே; காயமோ மாயையன்று = அவனுக்குச் சரீரம் மாயோற்பனமன்று.

அதற்கு நிமித்தமாகு மலமில்லாமையால், மலமில்லாமலிருக்கவும் ஸ்ரீமத் ஸ்ரீகண்ட பரமேசுரன் முதலோர்க்கு மாயாசரீரம் வருவானேனென? மலவாசனையால், அதிகாரகாரணமாய் ஸ்ரீமதநந்தாதிகட்கு மகாமாயா சரீரம்போல மாயாசரீரம் அதிசுத்தமாய் வரும்.

(சிவனுக்கு மலவாசனையேற்பன்ன வதிகார மலமில்லாத படியால்) காயமோ மாயையன்று; அப்போது நீர் அவனுக்குச் சொன்ன வடிவேது? சொல்லுவாம்; காண்பது சத்திதன்னால் = சிவனது சமவேத சத்தியினாலே யவனுக்கு வடிவுண்டாக்கப்படும். (சக)

அப்போது பரிணாம தோஷம் வருமென்று
சொல்லப் பரிகரிக்கின்றார்.

சத்தியேவடிவென்றாலுந்தான்பரிணாமமாகு
நித்தமோவழியுமத்தானின்மலனருவேயென்னி
லத்துவாமார்க்கத்துள்ளானன்றிவனருமைதன்னைப்
புத்திதானுடையைபோலவிருந்தனைபுகலக்கேளி.

(இ-ள்). சத்தியே வடிவென்றாலுந் தான் = சிவனுக்குச் சத்தியே சரீரமென்று சொன்னாலும் அகண்டித மூர்த்தியாகச் சொல்லலாம்; (கண்டிதமூர்த்தியாகச் சொல்லில்) பரிணாமமாகும் = திரிவதாகும்; (அதனால்) நித்தமோ வழியும் = நித்தமென்றதுபோய் அநித்தியமாகும்;

(மாயை கலாதி காரியமாவது போல ஏக தேசத்திற் கண்டித மூர்த்தியாமென்னில், மாயைபோற் சடமாம்); அத்தால்=அந்தக்குற்றம் வருதலால்; நின்மல னருவே யென்னில்=நீர் சொன்ன வுருவமன்று நீர் சொன்னவருவே யென்னில்; அத்துவா மார்க்கத் துள்ளானன்று=சிவன் சடத்துவா மார்க்கத்தரு வுருவாயிருக்கும் பொருள் போலல்லன்;(ஆவனென்னில்) இவனருமை தன்னைப் புத்திதானுடையை போல விருந்தனை; புகலச்கேணீ=(மாறுபடுமென்பது சொல்ல) நீ கேள்(சஉ)

மாறுபடுதலை வரைந்துரைக்கின்றார்.

உலகினிற்பதார்த்தமெல்லாமுருவமோடருவமாகி
நிலவிடுமொன்றேன்றாகாநின்றவந்நிலையேபோல
வலகிலாவறிவன்றானுமருவமேயென்னிலாய்ந்து
குலவியபதார்த்தத்தொன்றாக்கூடுவன்குறித்திடாயே.

(இ-ள்). உலகினிற்பதார்த்தமெல்லாம் உருவமோடருவமாகி நிலவிடும்=மாயை முதலிய வருவமும், பூத முதலிய வுருவமுமாகி நிற்கும்; ஒன்றொன்றாகா நின்ற வந்நிலையேபோல=அருவுருவாகாது, உருவருவாகாது நிற்கும்; (அந்த முறைமைபோல) அலகிலாவறிவன் றானு மருவமேயென்னில்=ஒப்பற்ற ஞானமுடைய சிவனுமுருவில்லாப்பொருளென்று சொல்லில்; ஆய்ந்து குலவிய பதார்த்தத் தொன்றாய்க் கூடுவன்=விசாரித்துக் கொண்டாடப்பட்ட மகாமாயா மாயாகாரியப்பொகள்ருளினொன்றாய் அப்பொருள்களோடு சலப்பிலான் கலப்பன்; குறித்திட்டாயே=விசாரித்துப்பார்.

சித்தரு சடவருப் போலன்றென்று தாற்பரியம். (சங)

சாங்கரியமுண்டென் றுரைக்க வில்லையென்றும் பிரகாராந்தரத்தினாலுண்டென்று முரைக்கின்றார்.

பந்தமும்வீடுமாயபதபதார்த்தங்களல்லா
னந்தமுமாதியில்லானளப்பிலனாதலாலே
யெந்தைதானின்னனென்றுமின்னதாமின்னதாகி
வந்திடானென்றுஞ்சொல்லவழக்கொடுமாற்றமின்றே.

(இ-ள்). பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்க ளல்லான்=மோகமும் போதகமு மாயிருக்கும் மாயா மகாமாயா காரியமாகிய சொற்பொருளாகும் பொருள்க ளல்லான்; அந்தமு மாதியில்லான்=நித்தியன்; அளப்பிலன்=வியாபகன்; (ஆதலாலே) எந்தைதான்=எமது சுவாமி

தான்; இன்னனென்றும்=இக்குறியுடைய னென்றும்; இன்னதாம்= இப்படியாவதென்று சுட்டி யறியப்படும் பொருளா மென்றும்; இன்ன தாகி வந்திடான்=வியாபகத்தால் எல்லாந் தானதுவா யிருத்தலால்; இப்பொருளாய் வாரானென்றுஞ் சொல்ல; வழக்கொடுமாற்ற மின்றே; =சங்கை யுத்தரங்களில்லை; (அனுமா னாகமங்களில்லை யென்றுமாம்.)

மேல் அதற்கோரேதுக் கூறுகின்றார்.

குறித்ததொன்றாகமாட்டாக்குறைவிலனாதலானு
நெறிப்படநிறைந்தஞானத்தொழிலுடைநிலைமையாலும்
வெறுப்பொடுவிருப்புத்தன்பான்மேவுதலிலாமையானு
நிறுத்திடுநினைந்தமேனிநின்மலனருளினாலே.

(இ-ள்). நின்மலன்=சிவன்; குறித்ததொன்றாக மாட்டாக் குறைவிலனாதலானும்=ஏவுதற் கர்த்தாவா யிருக்கின்ற சிவன், இயற்றுதற் கர்த்தாக்களாயிருந்துபதேச கர்த்தாக்களுஞ் சிருட்டிமுதலிய கிர்த்திய கர்த்தாக்களுமா யிருக்கின்ற அணு சதாசிவர் அநந்தேசுரர் ஸ்ரீகண் டத்திரயம், பிரம விஷ்ணு புத்தர் அருகர் கபிலர் கணாதர் முதலிய கர்த் தாக்கள் சரீரங்களைச் சாக்ஷாத்தும் பாரம்பரியமாயு மதிட்டித்துத் தனது கிர்த்தியமாய் முடித்தலால் அந்த நமது சரீரமென்று; குறித்த =சங்கற்பித்த; (சரீரங்களுக்கு ளொரு சரீரமும் நமதல்ல வென் னுங் குறைவின்றி நிறைவாகி நிற்பவ னாதலானும்) நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்=எல்லாமார்க்கத்துஞ் செல்லப் பூரணமாகிய சிற்கிரியாச்செய்தி செய்சத்தியுடைய தன்மைய னாதலா னும்; வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதலி லாமையானும்= இராகத்து வேஷ விசைவு தன்னிடத் தில்லாமையானும்; அருளினால்= தனது சத்தி சங்கற்பத்தால்; நினைந்தமேனி=சங்கற்பித்த காரியத்திற் கேற்ற அணு சதாசிவர் முதலோர் திருமேனியை; நிறுத்திடும்=தனது திருமேனி போலத் தரிக்கும். (சரு)

இப்படிக் குருதேகங்களை அதிஷ்டித்துத் தீக்ஷாப தேசஞ் செய்யாதிருந்தால், முத்தராவது மின்று; குரு சந்தானமும் நடவாதென்று கூறுகின்றார்.

ஆரணமாகமங்களருளினாலுருவுகொண்டு
காரணனருளானாகிற்கதிப்பவரில்லையாகு

நாரணன்முதலாயுள்ளசுரர்நரர்நாகர்க்கெல்லாஞ்
சீரணிகுருசந்தானச்செயதியுஞ்சென்றிடாவே

(இ-ள்). காரணன் = சிவன்; அருளின் னுருவுகொண்டு = தனது சங்கற்ப மாத்திரத்தா லுருவு கொண்டு; (இது நமதென்று குருதேகங் களைக் குறித்துச் செலுத்தி) ஆரணமாக மங்க ளருளானாகில் = வேதாக மங்களை யுபதேசியானாகில்; கதிப்பவரில்லை = முத்தராவாரில்லை. மற்றது வெளிப்பொருள். (சுசு)

இப்படிச் சிவனுக்கு வாஸ்தவ தேக மில்லாமையாற் றியான பூசாதி நிமித்தங் காற்பநிக தேகம் அணுசதா சிவாதி தேகங்களை யொட்டிக் கற்பிக்கவேண்டும்; அதேதினாற் கற்பிக்க வேணுமென்று வினாவ அவனது சத்தியாற்றானே கற்பிக்கப் படுமென்று சாற்றுகின்றார்.

உருவருள்குணங்களோடுமுணர்வருளுருவிற்றோன்றுங்
கருமமுமருள்பரன்றன்கரசரணாதிசாங்கந்
தருமருளுபாங்கமெல்லாந்தானருடனக்கொன்றின்றி
யருளுருவுயிருக்கென்றேயாக்குவனசிந்தனன்றே.

(இ-ள்). நிரவதிகைளாய், நிரூபிகளாய், நிரம்சநிர்ப்பேதவதிகளாய், நிஷ்காடின்னியைகளாய், நிஷ்கம்பைகளாய், நிர்ச்சலைகளாயிருக்கின்ற ஈசானியாதி மூர்த்தியந்த பஞ்சசத்தி சமுற்பன்ன சசினியாதி அஷ்டத்திரிம்சத் கலைகளாயிருக்கும் முன்பின் மூலாக்கிரங்களில் முறைமையிற் கோத்தஞானேச்சாமூர்த்திமத்தாகிய கிரியாசத்தி கலைகள் விண்ட அகண்ட பிண்டாசல சிவசரீரம் சாவதிகளாய், சரூபைகளாய், சாம்சபேதவதிகளாய், சகாடின்னியைகளாய், சகம்பைகளாய், சசலைகளாயிருக்கும் மாயாகலைகள் விண்ட கண்ட பிண்ட சலபசுசரீரம்போல், அயக்காந்தம்போல் அசைவற்றிருந்துங் கிர்த்தியகிர்த்தாதலால், கடின கண்டித சலிதசரீரமாக உபசரிக்கப்பட்டது, ஆதலால், அஞ்சு பதினைந்து பத்து இரண்டு ஆகியமுகநேத்திர கரசரணாதிகளிற் காடின்னிய கண்டிப்பு சலனம் வெண்மைநிறமாதிகள், அதனால், வருஞ் சகளாதிபேதஞ் சகலமுங் கற்பிதங்கள் அசத்தியங்களாம், ஆகையால்,கிரியாசத்தி லக்ஷண சிவசரீரத்துக்கு இச்சாசத்தி சங்கற்ப ரூபப்பிரவிர்த்தி லக்கண சகளாதிகார சதாசிவநாம ஈசுரரூபமும், கிரியாசத்தி சமுத்தியோகரூபப் பிரவிர்த்தி நிவிர்த்திலக்ஷண சகள நிஷ்களபோகாளுத சிவநாம சதாசிவரூபமும், ஞானசத்திக்குறிச்சும்மா இருப்பு ரூப நிவர்த்திலக்ஷண நிஷ

களை இலய சிவநாம சாந்தரூபமும், விர்த்தி பரிணதி விவர்த்தாரம்பம ன்று, ஆதலால், அநித்தியங் கற்பித அசத்தியங்களுமன்று, ஆகையால், அந்த இலயபோகாதிகார முச்சொரூபமும், நித்திய சத்திய ஸ்வரூபல க்ஷணந்தானே, ஆதலால், அந்தச் சகளமுஞ் சத்திகலாசாகித்தியத்தி னூற் சகளம், மாயாகலாராகித்தியத்தினுல் நிஷகளமாதலாற் சகளநி ஷ்களமாம்; ஆகையால், சிவனது

உருவும் = அங்கமும்; அருள் = சத்திரூபம்; சாங்கந்தருங் குணங்க ளோடும் உருவிற்றேன்றும்; உணர்வுங் கருமமும் = சர்வத்தையும் அறி தல்பண்ணுதலும்; அருள் = சத்திவியாபார ரூபம்; அரன்றன்கரசரணுதி = சிவனது பிரத்தியங்கமும்; அருள் = சத்திரூபம்; உபாங்கமும் அருள்; எல்லாந்தானருள் = (இதுவன்றிச், சிவனுக்குச் சொல்லப்படுமது யா தொன்றுண்டேதெல்லாஞ் சத்திரூபம் (இப்படி) அகிர்தல் = சிவம்: அரு ளுரு = சத்திசரீரத்தது; தனக்கொன்றின்றி = தற்பிரயோசனங் குறியா மல்; பிரயோசனம், உயிருக்கென்றேயாக்குவன. அது வாதுளத்தில் வித்தரிக்கப்பட்டது; அதுவருமாறு

"அங்கப்ரத்யங்கஸாங்கஞ்ச, உபாங்கஞ்சதுரோபவேத்;
சிரோவக்தரஞ்ச இர்தயம், அங்கஞ்சேதிப்ரகீர்த்திதம்;
வக்ஷகண்டஸ்தநௌவாகு, நாபிகுய்யதரஸ்ததா;
நேத்ரநாஸாஸ்யகர்ணௌச, பாணிபாதௌததாங்கூலீ:
ஊருஜானுசஜங்கேச, ப்ரத்யங்கஞ்சேதிகத்யதே;
மூர்த்திநாங்குணரூபந்து, ஸாங்கஞ்சேதிப்ரகீர்த்திதம்;
குணஞ்சின்னமிதிஞ்ஞேயம், தத்குணந்தசதாபவேத்;
குணம்ஸத்யம்ப்ரதாபஞ்ச, துர்ப்பேத்யாநுக்ரஹந்ததா;
மூர்த்திமாயாவிவர்ணஞ்ச, நாதம்ஸம்ஹ்ருதிரேவச;
ஏதேதசகுணப்ரோக்தாஸ், தேஷாம்லக்ஷணமுச்யதே;
த்ரிகுணம்சூலமித்யுக்தம், சக்திஃபரசுரிஷ்யதே;
கட்கமீசப்ரதாபோயம், துர்பபேத்யம்வஜ்ரமிஷ்யதே;
ஈசஸ்யானுக்ரகம்சைவ, அபயம்சப்ரசஸ்யதே;
ரித்திஸ்யாம்நாகரூபந்து, பாசம்மாயாஸ்வரூபகம்;
விவர்ணமங்குசம்சைவ, கண்டாநாதாத்மகம்விது:;
ஸம்ஹாரம்அக்நிரூபம்ஸ்யாத், பாசாநாம்பஸ்மஸாத்கிர்தி;
ஏதேவைகுணரூபஞ்ச, ஸாங்கம்சேதிப்ரகீர்த்திதம்;
வஸ்த்ரோபவீதமாலாச, கந்தமாபரணந்ததா;
ஆஸநாவரணம்சைவ, உபாம்கஞ்சேதிகீர்த்திதம்இதி." (சஎ)

சிவன் ஸ்ரீகண்டப்பிரேரகராகும் அநந்தேசுரராகிய மூர்த்தியான்மாவிலந்தரான்மாவாய்த் திரும்ப அந்த அநந்தேசுரராகிய மூர்த்தியான்மாவைப் பிரமாண்டாதிபதியாகும் ஸ்ரீகண்டராகிய மூர்த்தியான்மாவி லந்த ரான்மாவாக்கி யந்த ஸ்ரீகண்ட சரீர சரீரியாய்ச் சத்திய காடின்னிய கண்டிப்புடையதாய்க் கரணகலேகளாற் சகளராயிருந்து பிரம விஷ்ணுமுதலோர்க்கும், சுவேதோபமன்னியப் பிரபிர்திகட்கும், கிருஷ்ணர்ச்சுனுதியர்க்கும், அறுபத்துமூவர் முதலோர்க்கும், நிக்கிரகா நிக்கிரகங்களைப்பண்ணி விளையாட்டு விளைத்துப் பின்னகம் பிரதமர்க்கும், அற்பசொற்ப அத்தியற்புதப் பிரஸாதப்பிரதராயிருந்து சரிக்குஞ் சரித்திரங்களிற் சில பவுராணிக மதம் பாஷிப்பதற்குபக்கிரமிக்கின்ருர்.

உலகினையிறந்துநின்றதரனுருவென்பதோரா
ருலகவனுருவிற்றேன்றியொடுங்கிடுமென்றுமோரா
ருலகினுக்குயிருமாகியுலகுமாய்நின்றதோரா
ருலகினிலொருவனென்பருருவினையுணராரெல்லாம்.

(இ-ள்). அரனுரு=ஸ்ரீகண்ட சரீரமாகிக் கண்டிப்புப் பொருந்திய சிவசரீரம்; உலகினை யிறந்துநின்றது=சீவான்ம கிர்த்தியவிலக்ஷண கிர்த்தியங்களை யுடைய தென்பது; ஓரார்=விசாரியார், உலகு=பிரபஞ்சம்; அவனுருவிற் றேன்றி யொடுங்கிடுமென்று மோரார்=அந்தச் சிவனது கண்டிப்பில்லாச் சமவேத சிற்சத்தி சரீராதிட்டித வகண்டித பரிக்கிரக மகாமாயாமாயாசத்தி சரீரத்தில் நின்றும் பிறந்திருக்குமென்பதும் விசாரியார்; உலகினுக்குயிருமாகி யுலகுமாய் நின்றதோரார்=சிதசித் பிரேரகராய் வியாபியாயிருப்பது முணரார்; (இப்படி யிருக்கும்) உருவினை; உணராரெல்லாம்=விவேகித்தறியா ரனைவரும்; (ஸ்ரீகண்டரூபியாயிருக்கின்ற சிவன் அதிஷ்டாகார ராதலால்) உலகினிலொருவனென்பர்=நம்மைப்போலே யொருவனென்று சொல்லுவார்கள்()

இதுவுமது.

தேவரிலொருவனென்பர்திருவுருச்சிவனைத்தேவர்
மூவராய்நின்றதோரார்முதலுருப்பாதிமாத
ராவதுமுணராராதியரியயற்கறியவொண்ணு
மேவுருநிலையுமோராரதனுருவிளைவுமோரார்.

(இ-ள்). திருவுருச்சிவனை=ஸ்ரீகண்டசரீயாயிருக்குஞ் சிவனை; தேவர் மூவர்களைச்செலுத்தி அவரவராய்த் தியானம் பண்ணப்படுவ

தென்பதறியார்; முதலுருப்பாதி=சத்தி சிவான்மகம்; மேவுருநிலை= இலிங்கத் தம்பாகிர்தி;அதனுருவிளைவு=சதாசிவரூபம்; மற்றதுவெளி.()

போகியாயிருந்துயிர்க்குப்போகத்தைப்புரிதலோரார்
யோகியாயோகமுத்தியுதவுதலதுவுமோரார்
வேகியானாற்போற்செயதவினையினைவீட்டலோரா
ரூகியாமூடரெல்லாமும்பரிலொருவனென்பர்.

(இ-ள்). போகியாய்=தேவி தேவனாயிருந்து; யோகியாய்=தக்ஷி ணாமூர்த்தியாயிருந்து; வேகியானாற்போல்=சோபியானாற்போல; ஊகி யா=விசாரியா; மற்றது வெளிப்படை. (ருo)

இதுவுமது.

ஒன்றொடொன்றொவ்வாவேடமொருவனேதரித்துக்கொண்
நின்றலாலுலகுநீங்கிநின்றனனென்றுமோரா [டு
ரன்றியவ்வேடமெல்லாமருள்புரிதொழிலென்றோரார்
கொன்றதுவினையைக்கொன்றுநின்றவக்குணமென்றோரார்.

(இ-ள்). ஒன்றொடொன் றொவ்வாவேடம்=கிராதாதி விக்கிரக பேத ஆயுதபேதங்கள்; கொன்றது=தக்ஷமதனாதி சங்காரம்;வினையைக் கொன்றது=இருவினையுட் பாவத்தைப் புசிப்பித்து நாச மாக்குவது; மற்றது வெளிப்படை. (ருக)

இதுவுமது.

நாயகன்கண்ணயப்பானாயகிபுதைப்பவெங்கும்
பாயிருளாகிமூடப்பரிந்துலகினுக்குநெற்றித்
தூயநேத்திரத்தினாலேசுடரொளிகொடுத்தபண்பிற்
றேயமாரொளிகளெல்லாஞ்சிவனுருத்தேசதென்னார்.

(இ-ள்). வெளிப்பொருள். (ருஉ)

இதுவுமது.

கண்ணுதல்யோகிருப்பக்காமனின்றிடவேட்கைக்கு
விண்ணுறுதேவராதிமெலிந்தமையோரார்மாறு
னெண்ணிவேண்மதனையேவவெரிவிழித்திமவான்பெற்ற
பெண்ணினைப்புணர்ந்துயிர்க்குப்பெரின்பமளித்ததோரார்.

(இ-ள்). வெளி. (ருரு)

சுத்தாத்துவ சிருட்டி திதி சங்காரங்கள் போற் பிரகிருதிக்குள் உள்ள அவாந்தரகிர்த்தியம் பிரமாண்டத்திலுள்ள அவாந்தர கிர்த்தியம். சாக்ஷாத் சிவகிர்த்திய மாகட்டும், சீகண்ட தேகமறைவினாற் சிவனுக்குக் கிர்த்திய மென்பது வேண்டாம்; அது நன்றன்று, சக்ரவர்த்தியா யிருக்கின்ற விராசாவுக்கு அந்தரங்க கிருத்தியம் வெகிரங்க கிர்த்தியம் போலச் சிவனுக்கு மப்பட்டி யந்தரங்க கிருத்தியம் வெகிரங்க கிருத்திய மிரண்டும் முறைமையிற் சாக்ஷாத் தன்னாலும், பிறரைச் செலுத்தியவர் தானாகி மறைவாலும் நடக்குமென்று கூறுகின்றார்.

படைப்பாதித்தொழிலும்பத்தர்க்கருளும்பாவனையுநாலு
மிடப்பாகமாதராளோடியைந்துயிர்க்கின்பமென்று
மடைப்பானுமதுவுமுத்தியளித்திடுமியோகும்பாசந்
துடைப்பானுந்தொழிலுமேனிதுடக்கானேற்சொல்லொணா [தே.

(இ - ள்). முறைமையிற் பிரதம மகாசிருஷ்டியில் சிவன் சிவதத்துவ பஞ்சக சிருட்டிபண்ணிப் பின் னனந்தேசுர சரீர சரீரியாய் அசுத்தமாயையி னின்றும் காலதத்துவ முதற் பிருதிவி தத்துவ மந்தமாகிய தத்துவ தாத்துவி கங்களை யுண்டாக்கி, யுருத்திரரை இருதயத்தினின்றும், விஷ்ணுவையும் பிரமாவையும் பாரிசங்களி னின்றுஞ், சூரிய சோமாக்கினிகளை வல திடது நெற்றி நேத்திரங்களி னின்றும், விக்கினேசுவரரையுஞ் சுப்பிரமணியரையுங் கண்டத்தினின்று மிருதயத்தினின்று மிப்படி வாதுளத்திற் சொன்னபடி மற்ற மற்ற அங்கங்களி னின்றும் தேவர்க ளிருடிகள் வேதசாஸ்திரங்கள் மற்று முள்ளன வுண்டாக்குவர்; நடுவே நடுவே வரும் அவாந்தர சிருட்டியில்;

மேனிதுடக்கானேல்=பிரகிருதிநிலைய ஸ்ரீகண்ட சரீரசரீரியாயும் பிரமாண்டநிலைய ஸ்ரீகண்டசரீரசரீரியாயும் இராதிருந்தால்; படைப்பாதித்தொழிலும்=மத்தியமப்பிரளய முடிவினிற் குணதத்துவமுதற் பிருதிவி தத்துவமீறுகுந் தத்துவதாத்துவிக சிருட்டிஸ்திதி சங்காரங்களும்; பத்தர்க்கருளும் பாவனையும்=தீக்ஷாவான்களா யிருக்கும் சிஷ்டருக்குபதேசித்துக் காண்பிக்கும் நிராலம்ப சாலம்ப சிவத்தியானமும்; நாலும்=சிவாகமோபதேசமும்; இடப்பாகமாதராளோடி யைந்துயிர்க்கின்ப மென்றும் ; அடைப்பானுமதுவும்=உண்டாக்குவதும்; முத்தியளித்திடுமியோகும்=உபதேசித்துக் காண்பிக்கும் சாலம்ப நிராலம்ப சிவத்தியானமும்; பாசந்துடைப்பானுந்தொழிலும்=தீக்ஷையைப் பண்ணுவதும்; சொல்லொணாதே=ஆமென்றறையப்படாதே;.

சூரியனைக்காசிபர் புத்திரனென்பதும், சந்திரனை அத்திரிபுத்திரனென்பதும், இருஷிகளைப் பிரமா முதலோர் புத்திரர்களென்பதும், வேத சாஸ்திரங்களைப் பிரமா முதலோர் சொன்னதென்பதும் சுப்பிர மண்ணியன் விக்கினேசுரனிவர்களை ஸ்ரீகண்ட புத்திரர்களென்பதும், இவை முதலிய பலவும், அவாந்தர சிருஷ்டியில் முன் சொல்லியபடி மகா சிருஷ்டியில் மகேசுரர் புத்திரர்களே; மாந்திரசாத்திரம் சதாசிவமாதலால் லௌகிகாதி அதிமார்க்காந்த சாஸ்திரங்கள்சாக்ஷாத்தும் பிராகாராந்தரத்தினாலும் வந்தாலும் மாகேசுர சாத்திரங்களே. (ருச)

இப்படி மூன்று திருமேனியு மூகிக்கப்பட்டதென் றுணர்த்துகின்றார்.

உருமேனிதரித்துக்கொண்டதென்றலுமுருவிறந்த
வருமேனியதுவுங்கண்டோமருவுருவானபோது
திருமேனியுபயம்பெற்றேஞ்செப்பியமூன்றுநந்தங்
கருமேனிகழிக்கவந்தகருணையின்வடிவுகாணே.

(இ-ள்). உருமேனிதரித்துக்கொண்டதென்றலும் = ஸ்ரீகண்ட சகளசரீரத்தைத் தனது சரீரமாய்ப் பரித்திருக்குமென்று படித்தமாத்திரத்தில்; (தரிக்கப்படுவது உரு, தரிப்பது அரு என்று இரண்டுபொருள் சித்தித்தலால்) உருவிறந்த அருமேனியதுவுங் கண்டோம் = உருவாதீதமாய் அருவாயிருக்கும் நிட்கள சரீரமனுமிதித்தறிந்தோம்; (அருவுமுருவுமாயிருக்கு மீசுரசரீரமென்று) திருமேனியுபயம் பெற்றேம் = சகளநிஷ்கள சரீரமுந்தியானிப்போம்; செப்பிய மூன்று நந்தங் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுகாணே = அசலம் சலாசலம் சலம் என்றும் பரம் சூக்குமம் தூலமென்றும் சாற்றிய மூனறு சரீரமும் பர சரீர சூக்கும சரீரத்தோடுகூடப் பிதிர் மாதிரு சுக்கில சுரோணிதங்களினுண்டாகிய ஸ்தூல சரீர சம்சாரத்தை நீக்கவந்த = சிவசத்தி வடிவாயும் சிவசத்தி அபிவியத்தித்தான வடிவாயு மிருக்கின்றது தானே. (ருரு)

செப்பியது நன்றுதான்; அவ்வளவிவ்வளவில் ஈசானி பூரணி ஆர்த்தி-வாமை மூர்த்தி என்னும் பஞ்சசத்தி புறவுரு உடைத்தாய், ஆரணி சனனி ரோதயித்திரி என்னுந் த்ரிசத்தி உள்ளுரு வுடைத்தா யிருக்குங் கிரியாசத்தி சரீரப் புறவுருவிலுதித்த சசினியாதி யஷ்டத்திரிம்சற் கலைகளினது பிரவிர்த்தி நிவிர்த்திபிரவிர்த்தி நிவிர்த்தி

வடிவாயிருக்குஞ் சகள வுருச்சரீரம், சகள நிஷ்கள வருவுருச் சரீரம் நிஷ்களவருச் சரீரஞ் சொரூப மென்று முன் சொன்னீர்; திரும்ப அதுவன்றி மூன்றுள் சகள சரீரமாத்திரஞ் சத்தி கலா சாகித்தியத்தினாலே சகளம் மாயா கலாராகித் தியத்தினாலே நிஷ்களமாதலாற், சகள நிஷ்கள மென்று முன் சொன்னீர், திரும்ப வதுவன்றி யிப்போது ஸ்ரீகண்ட தேகதேகிடா யிருக்கின்ற சிவனுக்கு ஸ்வரூப தடத்தங்களிலே, நிஷ்களம் சகளநிஷ்களம் சகளமாயும் சரீரஞ் சொன்னீர்; திரும்ப அதுவன்றி அத்துவா மூர்த்தியாக ஆகமங்கள் சொல்லுவதேதென்றுசங்கிக்க உத்தரஞ்சொல்லுகின்றார்.

அத்துவா மூர்த்தியாக வறைகுவ தென்னை யென்னி
னித்தனாய்நிறைந்தவற்றிநீங்கிடாநிலைமையானுஞ்
சித்துடனசித்துக்கெல்லாஞ்சேட்டிதனாகலானும்
வைத்ததாமத்துவாவும்வடிவெனமறைகளெல்லாம்.

(இ-ள்). அத்துவாமூர்த்தியாகவறைகுவது; என்னையென்னில் = ஏதென்று நீ வினாவினால்;நித்தனாய் நிறைந்தவற்றி னீங்கிடாநிலைமையானும் = நித்தியனாய் இடைவிடாது வியாபித்துப் பிரியாதிருத்தலானும்; சித்துடன சித்துக் கெல்லாஞ் சேட்டித னாதலானும் = சேதன சடபதார்த்தங்களனைத்திற்கும் பிரேரகனாதலானும்; அத்துவாவும் = ஆறுமார்க்கமுஞ் சிவனுக்கு; வடிவென = சரீரமாக; மறைகள் = சிவாகமங்கள்; வைத்தாம் = சொன்னதாம்.

அப்படி யன்றோ ஆன்மாக்களுக்குச் சலையென்றும், அசலையென்றும் மூர்த்தி யிரண்டுவிதம்;

அவற்றுள் அசலையாவது முன் பிரபஞ்சித்திருக்கின்ற ஞானக்கிரியாரூப சிற்சத்தி மூர்த்தி, அது தனது சங்கற்பத்தால் தானசைவின்றி அசைவினாற் சடகாரிய நிகழப்பண்ணும்; அதனால்மூர்த்தியென்றுபசரிக்கப்பட்டது. சலையாவது முன் பிரபஞ்சித் திருக்கின்ற பிரணவகலாபஞ்சக ரூபமாய், நாதத் துளஞ்சா யிருக்கும் சிவதத்துவ தாத்துவிக பரதேக மூர்த்தியாயும், ஏழு இருபத்து நாலாயிருக்கும் வித்தியாதத்துவ ஆன்மதத்துவ தாத்துவிக சூக்கும தேக மூர்த்தியாயும், பௌவனதூலதேக மூர்த்தியாயும் இருக்கும் அசலையென்று முன்சொன்ன ஞானக்கிரியா ரூப சிற் சத்தி மூர்த்தி சங்கற்பத்தால்

அசைந்து சஞ்சரித்துக் காரியப்படும், அதனால், இஃதொன்றுமே நிருப சரிதவாஸ்தவ மூர்த்தி, கரசரணுதியாயும் கரசரணுதி சம்பந்த மாயுங் காணப்படுதலால், அப்படிச் சிவன திரண்டுமூர்த்திகளில், அசலையாவது ஞானக் கிரியாரூபசிற் சத்தி மூர்த்தி அது தனது சங்கற்பத்தாற் றுன சைவன்றி அசைவினுற் சடகாரியம் நிகழப்பண்ணும், அதனுல் மூர்த்தி யென்று உபசரிக்கப்பட்டது;

சலையாவது சுத்தாத்துவ பரதேகமூர்த்தியாயும், சுத்தா சுத்தாத் துவ சூக்குமதேக மூர்த்தியாயும், அசுத்தாத்துவ தூலதேக மூர்த்தியா யும் இருக்கும்; அசலையென்று முன் சொன்ன ஞானக்கிரியா ரூப சிற் சத்திமூர்த்திசங்கற்பத்தால் அசைந்துசஞ்சரித்துக் காரியப்படும், அதனு லும், லிங்கத்திற் கலாதி சடத்துவ நியாசம்பண்ணுதலானும், வாஸ்தவ பந்த மூர்த்தி யல்லா திருந்தாலும், கற்பித மூர்த்தியென் றுபசரிக்கப் பட்டது. (ருசு)

வாச்சிய மந்திரமும், அந்தச் சத்தி சரீர மென்று சாதித்ததனுல், சங்கிக் கப்படுவ தன்றென்று வாசகமந்திரத்தை மனசில் வைத்துச் சங்கி த் துத்தர முரைக்கின்ருர்.

மந்திரமத்துவாவின்மிகுத்தொருவடிவமாகத்
தந்ததென்னரனுக்கென்னிற்சகத்தினுக்குபாதானங்கள்
விந்துமோகினிமான்மூன்ருமிவற்றின்மேலாகிவிந்துச்
சிந்தையாரதீதமானசிவசத்திசேர்ந்துநிற்கும்.

(இ-ள்). அத்துவாவில் = ஆறத்துவாவுக்குள்; மந்திரம் = மந்திராத் துவா; அரனுக்கு = சிவனுக்கு; மிகுத்தொருவடிவமாக = மிகுதியும் ஒப் பற்றமூர்த்தியாக; தந்ததென்னெனில் = சொன்னதேதென்று நீசொல் லில்; சகத்தினுக் குபாதானங்கள் = உலகத்துக்கு முதற்காரணங்கள்; விந்துமோகினிமான்மூன்றும் = மகாமாயை, மாயை, பிரகிருதியென்று மூன்றுவகையாம்; இவற்றில் = இம்முதற்காரண மூன்றனுள்; விந்து = மகாமாயையானது; சிந்தையாரதீதமான சிவசத்திசேர்ந்து நிற்கும் = சித்தத்தை வியாபித்துக் கடந்திருக்கும் சிவசத்திசாட்சாத் சன்னிதிப் பட்டிருக்கும். (ருஎ)

அதனுல் ஏதென்னச் சம்பந்தஞ் சாதிக்கின்ருர்.

சுத்தமாம் விந்துதன்னிற் ருேன்றிய வாதலாலுஞ்
சத்திதான்பிரேரித்துப்பின்ருனதிட்டித்துக்கொண்டே

யத்தினாற்புத்திமுத்தி யளித்தலாலரனுக்கென்றே
வைத்ததாமந்திரங்கள்வடிவென மறைகளெல்லாம்.

(இ-ள்) சுத்தமாம்விந்து தன்னிற்றோன்றிய வாதலானும் — சுத்த மாயையினின்றுஞ்சிவசத்தி சங்கற்பத்தாற்றோற்றிய காரணத்தினாலும்; சத்திதான்பிரேரித்துப்பின் றானதிட்டித்துக்கொண்டே — அந்தச்சிவசத்திதான் தனது சங்கற்பத்தினாலுண்டாக்கச சுத்தவித்தையிலிருக்கும் அந்த ஆதிதைவிக திவ்வியாக்கினிசமமந்திரங்களைப்பிரேரித்து மாந்திரிகனுச்சரிக்குங் கரிக்கொத்த ஆத்தியான்மிக மந்திரங்களிலே செலுத்திப்பற்றுவித்து அவைகளிற்சாநித்தியமாய்த்தானே; அத்தினால் — மாந்திரிகனாலே செபிக்கப் பூசிக்கப்பட்ட அந்தமந்திரங்களினாலே; புத்திமுத்தியளித்தலால் — சித்திமோக்ஷங்களைக் கொடுத்தலால்; அரனுக்கன்றே வைத்ததாமந்திரங்கள் வடிவெனமறைகளெல்லாம் — சிவனுக்குமந்திரங்கள் சரீரமென்று சிவாகமங்களனைத்துஞ் செப்பியதாம். (ருஅ)

மேற்சிறப்புணர்த்துகின்றார்.

மந்திரமதனிற்பஞ்சமந்திரம்வடிவமாகத்
தந்திரஞ்சொன்னவாறிங்கென்னெனிற்சாற்றக்கேணீ
முந்தியதோற்றத்தாலுமந்திரமூலத்தானு
மந்தமில்சத்தியாதிக்கிசைத்தலுமாகுமன்றே.

(இ-ள்). மந்திர மதனிற்பஞ்ச மந்திரம் வடிவமாக — மந்திரங்களுக்குள்ளே விசேஷித்து ஈசானமுத லைஞ்சு மந்திரமும் சரீரமாக; தந்திரஞ்சொன்னவாறிங்கென்னெனில் — சிவாகமஞ் செப்பியதே தெனில்; சாற்றக்கேணீ — சொல்ல நீ கேள்; முந்திய தோற்றத்தாலும் — பிரதம சிருட்டியாதலாலும்; மந்திர மூலத்தானும் — மந்திரங்களிற் பிரதானங்களாத லானும் (விசேஷித்த வடிவென்று செப்பியது மநநத்திராணதன்மித்துவம் சிவசத்திக்கும் சிவனுக்குமே நாதாகிருதி வாசகங்கள் மந்திரங்களென் றெப்படிச் சொல்லப்படும்) அந்தமில் சத்தியாதிக்கிசைத்தலு மாகுமன்றே — நித்தியாஷ்டத்திரிம்சத் கலாபேத ஈசானியாதி — மூர்த்தியந்த சத்திபேத சிவசத்திக்கும் ஆதியென்னும் ஈசானியாதி சத்தியோ சாதாந்த சிவபேத சிவனுக்கும் மந்திரமென்பது முக்கியமாய்ச் சொல்லலாகும்; மநநத்திராண தன்மித்துவஞ் சாட்சாதிருக்கையால், சிவம் சத்தியாகிய வாச்சிய மந்திரங்களுக்கு நாமமாதலால்; வாசக மந்திரங்களுக்கு மந்திரமென்பதுபசாரம். (ருக)

பிரமாதிசாஞ்சன நிரஞ்சனனு மந்திரங்களை நிரஞ்சன
சாம்பவமந்திரரூபங்களாகச் செப்புவதே
தென்றுசங்கிக்க வுத்தரமுரைக்கின்றார்.

அயன்றனையாதியாகவரனுருவென்பதென்னை
பயந்திடுஞ்சத்தியாதிபதிதலாற்படைப்புமூல
முயன்றனரிவரோயாயின்முன்னவனென்னைமுற்று
நயந்திடுமவனிவர்க்குநண்ணுவதோரோவொன்றுமே.

(இ-ள்). அயன்றனை யாதியாக வரனுருவென்ப தென்னை = விதிமுதற் பஞ்ச காரணமூர்த்தி வடிவன் சிவனென்று சிவாகமஞ் செப்புவதேதென்னில்; பயந்திடுஞ் சத்தியாதி பதிதலால் = செனனி ஆரணி ரோதயித்திரி என்கின்ற சிவசத்திகளதிஷ்டித்து அவர்களைக் கொண்டு பஞ்சகிர்த்தியம் பண்ணு வித்தலாலே; படைப்பு மூல முயன்ற னரிவரோயாயாயின் முன்னவ னென்னையென்னில் = சிருட்டி முதலிய பஞ்ச கிர்த்திடம் பண்ணுவதிவராகிற் சிவனேதுக்கு சுற்பனுகவுரவ தோஷம் வருமாதலால் வேண்டுவதன்றென்று நீ சொல்லில்; (அப்படிச் சொல்லவேண்டாம்) முற்று நயந்திடுமவன் = சாம்ப சதாசிவன் சுத்தமாயா கிர்த்தியமஞ்சும் சாக்ஷாத்தானும் அசுத்தமாயை பிரகிருதி கிருத்தியமஞ்சும் அநந்த ஸ்ரீகண்டாதித் துவாரத்தினாலேயும் பண்ணுவன்; இவர்க்கு நண்ணுவது = இவ்வணு சதாசிவ னனந்தேசுரன் ருத்திரன் விஷ்ணு பிரமா இவர்களுக்குப் பொருந்துவதாகிய கிர்த்தியம்; ஒரோ வொன்றுமே = ஒவ்வொன்றுதானே.

இவர்க்குள், அணுசதாசிவனுக்கு அனுக்கிரககிருத்தியமொன்றுமே, ஈசுரனெனு மநந்தேசுரனுக்கும் சுத்தமாயையிற் றிரோதான கிர்த்தியம் நடவாதிருந்தாலும், அசுத்தமாயா கிர்த்தியம் அஞ்சும் நடந்தாலும், திரோதான கிர்த்தியம் பிரதானம்; உருத்திர னென்னுஞ் சீகண்டர்க்கும் பிரகிருதிக்குமேற் சங்காரகிருத்தியம் நடவாதிருந்தாலும் பிரகிருதிகிருத்தி யமைந்தும் நடந்தாலும் சங்கார கிர்த்தியம் பிரதானம். குணநிலய விஷ்ணுவுக்கும் பிரமாண்ட நிலய விஷ்ணுவுக்கும் பிரகிருதிக்கு மேல் திதிகிர்த்தியம் நடவாதிருந்தாலும், பிரகிருதிக்குட் லேசரீர போக்கியப்பொருட் டிதிகிர்த்தியம் பிரதானம்; குண நிலய பிரமாவுக்கும் பிரமாண்ட நிலய பிரமாவுக்கும் பிரகிருதிக்குமேல் சிருஷ்டி கிருத்தியம் நடவாதிருந்தாலும், பிரகிருத்திக்குட் டீல சரீர போக்கியப் பொருட்சிருட்டி கிர்த்திடம் பிரதானம்; ஆதலால், ஒரோ வொன்றென்ற தென

வறிக. சத்திமூன்ருகில், பஞ்சகிர்த்திய மெப்படிப் பண்ணும்? எப்படிப் பண்ணுவிக்கும்? சத்தியந்தானே; ஜநநிக்குச் சிருட்டி கிருத்திய மொன்றுமே, ஆரணிக்குச் சங்கார கிர்த்தியமும் அனுக்கிரகிர்த்தியமும், ரோதயித்திரிக்குத் திதிகிர்த்தியமும் திரோபாவ கிர்த்தியமும் என்பதனுல் விரோதமன்று; ஆரணி ரோதயித்திரி ஜநநி மூன்றும் சத்திசரீர கற்பனையினுலே, சிவனுக்குச் சூக்குமதேகம்; ஈசானி பூரணி ஆர்த்தி வாமை மூர்த்தியெனும் பஞ்ச சத்தியும், அனுக்கிரக முதலஞ்சு கிர்த்தியத்தையும் அடைவிற் பண்ண நின்ற சத்திசரீர கற்பனையினுலே சிவனுக்குத் தூலசரீரம் என்பதறிக. இருதயாதி யாறுமந்திரமும் சரீரகற்பனைக்குள்ள தன்று, சரீரமும் சரீரியும் சம்பந்தமான விடத்துப் பிரபாவ ரூபமாயிருக்கும். (கூ0)

இப்படிச்சத்தியனேகமாகிற சத்திமானு மனேகமா
மென்னுஞ் சங்கைக்குத் தரமுரைக்கின்ருர்.

சத்திதான்பலவோவென்னிற்ருனென்றேயனேகமாக
வைத்திடுங்காரியத்தான்மந்திரியாதிக்கெல்லா
முய்த்திடுமொருவன்சத்திபோலரனுடையதாகிப்
புத்திமுத்திகளையெல்லாம்புரிந்தவனினைந்தவாரும்.

(இ-ள்). (ஞானக்கிரி யேச்சாசத்தி மூன்றனுள் கிரியாசத்தி ஈசானியாதி யஞ்சு, ஆரணி யாதி மூன்று, ஆகச்சத்தி யெட்டா யிருக்கு மென்றதனுல்), சத்திதான் பலவோ வென்னில்; தானென்றே=ஒருசத்திதானே; காரியத்தால்=வியாபார பேதத்தினுல்; அனேகமாக வைத்திடும்=அனந்தமாகச் சொல்லப்படும்; மந்திரியாதிக் கெல்லாம்=மந்திரி சேனபதி ஊர் காவலன் முதலோரிடத்தில்; உய்த்திடு மொருவன் சத்தி போல்=ஒன்ருயிருந்து செலுத்து மிராசாவினது ஆஞ்ஞாசத்தி யொப்ப; அரனுடையதாகி=சிவசம்பந்தியாகி; அவனினைந்தவாறு=அந்தச்சிவன் செலுத்தினபடி; புத்தி முத்திகளை யெல்லாம் புரிந்ததாம்=போக மோட்சங்களைக் கொடுத்திருப்பதாம். (கூக)

ஞானக்கிரியேச்சாரூபி சத்தியென்றீர், அது விருத்தஸ் தடத்தம் முச்சொரூபமாயிராது, இருக்குமென்னில் சத்தியென்ப தெப்படிப் போமென்று மனசி லெண்ணிச் சங்கைபண்ண உத்தர முரைக்கின்ருர்.

சத்திதன்வடிவேதென்னிற்றடையிலாஞானமாகு
முய்த்திடுமிச்சைசெய்தியிவைஞானத்துளவோவென்னி

லெத்திறஞானமுள்ளதத்திறமிச்சைசெய்தி
வைத்தலான்மறைப்பின்ஞானன்மருவிடுங்கிரியையெல்லாம்.

(இ-ள்). சத்தி தன்வடிவே தென்னில்=சத்தியினது ரூப மேதென்று கேட்கிருயானுல்; தடையிலா ஞானமாகும்=மறைப்பில்லாத வறிதற்றொழிலைப் பண்ணுமறிவாகும்; உய்த்திடு மிச்சை சேய்தி யிவை ஞானத்துளவோ வென்னில்=பண்ணுதற் ெறாழிலாகுஞ் சங்கற்ப முத்தியோக மிவைகள் வேற்றுத் தொழிலாதலால் ஞானசத்தியி னுண்டோ வென்று நீ கேட்கில்; எத்திறஞான முள்ளது=இது காரண மிது கரண மிதுகாரிய மிதுபிரயோசன மென்றறிதற் றொழிலால் யாதொரு பிரகாரம் ஞானசத்தித் தொழிலாகிய ஞானமிருந்தது; அத்திறம்= அந்தப் பிரகாரம்; இச்சை=இஃ தின்னதாகக் கடவதெனு மிச்சாசத்தித் தொழிலாகி யுத்தியோகத்திற் பின்னுகி வருஞ் சங்கற்ப ஞான விசேஷமாகவும்; செய்தி=கிரியை; (இதைப் பண்ண நிற்பேனென்றுங் கிரியா சத்தித் தொழிலாகிய சங்கற்பத்தின் முன்னுகவரும் உத்தியோக ஞான விசேஷமாகவும்) வைத்தலால்=சிவாகமம் சொல்லி நிச்சயித்ததனுல்; மறைப்பின்ஞானுல்=தடையற்ற ஞான விசேஷசத்தி சங்கற்பத்தால்; எல்லாம்=காரிய சடபதார்த்த முற்றும்; கிரியை மருவிடும்=உற்பத்தி நாச சலனத் தொழிலோடு பொருந்தும். சலனத் தொழிலுக் கேதுவாயிருக்கும் ஞான விசேஷ நிர்ச்சல நித்தியசத்திய சங்கற்பங் கிரியை யென்றுசொல்லப்படும். (சுஉ)

சத்தி ஒன்று தானே அறிதல் பண்ணுதல் இச்சித்த லென்னும் வியாபார பேதத்தால் மூன்றென்றும், அவாந்தர வியாபார பேதத்தால் லநந்தமென்றும் சொன்னீர்; தன்ம பேதத்தாற் றன்மி பேதிக்குங், காரிய பேதத்தாற் காரணம் பேதிக்கும் என்னும் நியமத்தால் சத்திபேதிக்கும். அனந்தமா யிருக்கின்ற ஞானக்கிரியைகள் சத்திக்குச் சகசதன்மமாய் சகசகாரியமாய் தீபசத்திச்குத் தாகப் பிரகாசம் போலிருத்தலால், ஞானநந்தியங் கிரியாநந்தியமுமில்லை; ஞானமென்றுங் கிரியையென்றும் இரண்டு தொழிலில்லை, ஆதலால், சத்தியொன்றென்னில் ஞானக்கிரியாநந்திய சாங்கரியம்பிரமாதிகளாலுந் தடுக்கப்படாததாய் வந்துசாருமென்று சொல்லச் சாற்றுகின்றூர்.

ஒன்றதாயிச்சாஞானக்கிரியையென்றொருமூன்ருகி
நின்றிடுஞ்சத்தியிச்சையுயிர்க்கருணைசமாகு

நன்றெலாஞானசத்தியானயந்தறிவனுத
னன்றருட்கிரியைதன்னாலாக்குவனகிலமெல்லாம்

(இ-ள்). ஒன்றதா யிச்சாஞானக் கிரியை யென்றொரு மூன்றாகி கின்றிடுஞ் சத்தி=ஞானங் கிரியை யிச்சையென்னுஞ் சத்தித் தொழில்கள் பிரிப்பாய்ப் பேதமா யிருக்குமென்று நாம் பேசவில்லை, அவைகள் மத்தியத்திருக்கு மனந்தஞான மனந்தகிரியை யனந்தவிச்சையெனு மாநந்தியமும் பிரிந்து பின்னமா யிருக்குமென்று நாம் பேசவில்லை, தாகப்பிரகாசங்கள் போலப் பிரிப்பின்றிப் பேதமாயிருக்கும் பிரிப்பைக் குறித் தபேதமாயிருக்கும், ஆகையால் அந்தத் தொழில்களுக்குக் காரணமாகுஞ் சத்தியேகமாய் இச்சாசத்தி யென்றும், ஞானசத்தியென்றும் கிரியாசத்தியென்றும், அனந்தசத்தியென்றும் பிரிப்பின்றிமூன்றனந்த பேதமா யிராநிற்கும். சத்திமானாகிய சிவனும், ஏகனாய், இச்சிதாவென்றும், நாதாவென்றுங், கர்த்தாவென்றும், அநந்தனென்றும் பிரிப்பின்றி மூன்றனந்த பேதமாயிருப்பன்; அந்தச்சத்தி சத்திமான்கள் பண்ணுந் தொழில்களுக்குள்,

இச்சை=நியாமிகை என்னுமிச்சாசத்தி பண்ணுந்தொழில்; உயிர்க்கருணேசமாகும்=இதிப்படியாமிதிப்படியா காதென்பது முதல்நியமித்தற்சிதசித்கிருபையாம்; நாதன்=சிவன்; நன்றெலாம்=கிருத்தியத்துக்கிணங்கும் பொருளெலாம்

(இதுகாரண மிதுகரண மிதுகாரியம் இது பிரயோசனமென்று), ஞானசத்தியால்=ஞானத்தொழிலைப்பண்ணும் ஞானசத்தியால்; நயந்தறிவன்=விரும்பிப்பார்ப்பன்;

(கிரியாசத்தித் தொழில் கிரியையாதலால், இதை நான் பண்ணுகிற்கின்றேனென்றுத் தியோகிப்பன்) அருட்கிரியை தன்னால்=கிரியாசத்தியி னதுத்தர கோடியாயிருக்குஞ் சங்கற்பயித்திரியென்னு மிச்சாசத்தி இதிப்படியாகக் கடவதென்னுஞ் சங்கற்பத்தால்; அகிலமெல்லாம்=செகத்தனைத்தும்; ஆக்குவன்=சிருட்டிப்பன் (கூரு)

முடிந்தபட்சம் ஞானக் கிரியேச்சாவான் செகத்கர்த்தா வென்று சொன்னீர். புருடனும் ஞானக்கிரியேச் சாவானுதலால், அவனே கர்த்தாவாகட்டும்; அப்பிரத்தி யட்சமாயிருக்கு மீசுரன் வேண்டுவ்தில்லையென்று மிமாஞ்சன் சொல்ல மறுத்துணர்த்து கின்றார்.

சீவனுமிச்சாஞானக்கிரியையாற்சிவனையொப்ப
னுவனென்றிடினனுதிமலமிவற்றினைமறைக்குங்

காவலனிவன்செய்கன்மத்தளவினிற்கொடுப்பக்காண்பன்
பாவியாம்புத்திமுத்திபயன்கொளும்பண்பிற்றுகும்.

(இ-ள்). சிவனும் இச்சா ஞானக்கிரியையால்; சிவனை யொப்பனுவ னென்றிடில்=விசுவகர்த்தாவாவ னென்னில்; (விஞ்ஞானகலப்பிரளயா கலாவத்தைகளிலே) அநாதிமலம்; இவற்றினை=இச்சா ஞானக் கிரியை களை; மறைக்கும்=தன்வசமாகப் பண்ணும்; (ஆகையால் அவர் இருவ ருங் கர்த்தாக்களன்று, சகலன் கர்த்தாவென்னில்) காவலன்=சிவன்; அவன்செய்கன்மத் தளவினில்=அந்தச் சகலான்மா பண்ணினகர்மத்துக் கிடாய்ப் பரிமிதமா யிச்சாஞானக் கிரியைகளை; கொடுப்பக்காண்பன் =ஏகதேசத்திற் கலைகொண்டுவிளக்க அந்தப் பராக்காயிருக்குஞ் சிற்சத் தி விர்த்திரூப விச்சாஞானக் கிரியைகளைக்கொண்டு பதார்த்தங்களையும் பிரத்தியக்காய்த்தானிருக்குஞ் சிற்சத்தி விர்த்திரூப இச்சாஞானக்கிரி யைகளைக் கொண்டந்த இச்சாஞானக் கிரியைகளையும் பார்ப்பன்; பாவி யாம் புத்தி முத்திப் பயன் கொளும்பண் பிற்றுகும்=வருவதாம் போக மோக்ஷபலமடையு முறைமையனுவன்.

சத்தியமிஃதிருக்க முத்தான்மா சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்துவ சிவத்துவாபி வியத்தியினுலே, சிவனோடே முற்றுபமனுதலால், அவ ன்போல விசுவகர்த்தாவா கட்டுமென்று சிவசமவாதி அநேகேசுர வாதி முதலோர் செப்புவார்கள் அஃதறிவின்மை,சிவனதுகிருபாசம்சித் த பஞ்ச கிர்த்தியத்தோட பின்னுவர்ச்சநீய சம்சித்தபஞ்சகிருத்தியாதி காரணமுத்தனென்று மேலுத்தரிக்கையால் விசுவகர்த்தாவன்று; சிவ னே விசுவகர்த்தா. (கூச)

சிவசத்திக்கிலயதத்துவம் போகதத்துவம் அதிகாரதத்துவ
முதலியபெயர் வருமாறுரைக்கின்ருர்.

ஞானமேயானபோதுசிவன்றெழின்ஞானமொக்கி
லீனமில்சதாசிவன்பேரீசனுந்தொழிலதேறி
லூனமேற்கிரியைவித்தையுருத்திரனிலயபோக
மானபேரதிகாரத்தோடதிகரணத்தனுமே.

(இ-ள்) ஞானமே யானபோது=சிவனது கிரியாசத்தி மகாமாயை யிலே மகாப்பிரளயத்திலே மகாமாயா காரியமெல்லா மொடுக்கி யொ ழிந்ததாய் ஞானத்தொழில் மாத்திரத்தைப்பண்ணி ஞானசத்தி ரூபியா யிருந்துள்ளளவில்; சிவன்=சிவதத்துவமென்றும் லயதத்துவமென்றும் சத்த தத்துவமென்றும் நிஷ்களா தத்துவமென்றும் பேர்பெற்றுநிற்கும்;

தொழின்ஞானமொக்கில் = திரும்ப மகாமாயாகாரியப் பிரசவாபிமுக யோக்கிய கிர்த்தியத்திலே யுத்தியுத்தையா யிஃதிப்படியா மிஃதிப்படியாகாதுஇதுகாரணமிதுகரண மிதுகாரிய மிதுபிரயோசனமென்னுமிச்சாஞானத்தைப்பண்ணு மிச்சாசத்தி சவிகற்ப ஞானசத்தியிற் பின்னிதைநான்பண்ணு நிற்பேனென்று ஞானக்கிரியாத்தொழிலொத்த கிரியாசத்தித்தொழிலைப்பண்ணிக்கிரியாசத்திரூபியாயிருந்துள்ளளவில்; ஈனமில்சதாசிவன்பேர் = ஒத்த சதாசிவதத்துவமென்றும், போக தத்துவமென்றும், உத்தியுத்ததத்துவமென்றும், சகள நிஷ்களதத்துவமென்றும் பேர்பெற்று நிற்பன்; தொழிலதேறில் = திரும்ப மகாமாயாகாரி யோற்பத்தியிலே பிரவிர்த்தியாய், இப்படியாகக்கடவதென்று கிரியாத்தொழிலேறிஞானத்தொழில்குறைந்த சங்கற்ப விச்சாத்தொழிலைப்பண்ணி யிச்சாசத்திரூபியாயிருந்துள்ளளவில்; ஈசனும் = ஈசுரதத்துவமென்றும், அதிகாரதத்துவமென்றும், பிரவிர்த்திதத்துவமென்றும், சகளதத்துவமென்றும் பேர்பெற்றுநிற்பன; ஊனமேற்கிரியை = அந்தவிச்சைக்குத்தானே ஞானமேறிக்கிரியைகுறைந்ததானால் அந்தவிச்சாசத்திரூபியா யிருந்துள்ளளவில்; வித்தை = வித்தியாதத்துவமென்றும், மூலவீசுரதத்துவம் மூலாதிகாரதத்துவம் மூலப்பிரவிர்த்திதத்துவம் மூலசகளதத்துவமென்றும், பேர்பெற்று நிற்பன்; உருத்திரன் = சிவன்; (இப்படிச் சமவேதசத்தியிற் பிரிப்பின்றிப்பேதமாய்த்தோற்றும்) இலயபோகமானபேரதிகாரத்தோடுகூடி; அதிகரணத்தனும் = சமவேத சத்தியெனுமிருப் புடைனுய்க் கொண் டந்தச்சத்தி யிருப்புத்துவாரத்தினாலே மகாமாயா பரிக்கிரகசத்தியென்று மிருப்புடையனுமே; ஆதலால்,

சிவனுஞ்சிவனென்றும், இலயனென்றும், சத்தனென்றும், நிஷ்களனென்றும், சதாசிவனென்றும், போகனென்றும், உத்தியுக்தனென்றும், சகளநிஷ்களனென்றும், ஈசுரனென்றும், அதிகாரனென்றும் பிரவிர்த்தனென்றும், சகளனென்றும் பன்னிரண்டுபேரும் முறைமையிற்பெற்று நிற்பன். சத்தித்தானமாகிய மகாமாயையும் சிவதத்துவமென்பது முதல் சகளதத்துவமென்பதீறுகச் சத்திபோலப் பன்னிரண்டுபேரு முறைமையிற்பெற்று நிற்குமென்பதறிக. (கூரு)

இப்படிச் சத்திதத்துவத்தைச் சிவதத்துவத்து ளடக்கியிருத்தலாற் காரணசிவதத்துவ மூவைந்துங் காண்பித்துக் காரியசிவதத்துவ மூவைந்துங்காண்பிக்கின்றார்; காண்பிக்குமிடத்துக் காரியசிவதத்துவ மூவைந்துஞ் சிருஷ்டமென்றுஞ் சிருச்சியமென்று மிருவிதமாம்; சி

ருட்டமாவது சிருச்சிய சிவதத்துவ மைந்தையும் பற்றிப் பரிணதி செயற்படப்பண்ணிவந்தாலும், தனதிடத்தில் விர்த்திபரிணதிவிவர்த்தமன்றியதனாற் பிரிப்பில்லா வைந்துபேதமான தனது வியாபாரபேதத்தினாலே யப்படிப்பிரிப்பில்லா வைந்துபேதபின்னமாகிய சிவசத்திபேதமுஞ் சிவபேதமுமாகும். சிருச்சிய சிவதத்துவமாவது வித்தைகள் வித்தையீசரென்ற விருத்தாற்கூறிய மகாமாயாபரிணதி பேதப்பிரிப்புள்ள வைந்துபேதபின்ன சிவதத்துவபேதமாகும்; அந்தச் சிருட்டஞ் சிருச்சிய மிரண்டனுள் சிருச்சியம் வித்தைகள் என்ற விருத்தத்தால் முன்சொல்லப்பட்டபடியால், சிருட்ட சிவதத்துவமாத்திரஞ் செப்பிக்காண்பிக்கின்றார்.

வித்தையோடீசர்சாதாக்கியஞ்சத்திசிவங்களைந்துஞ்
சுத்ததத்துவஞ்சிவன்றன்சுதந்தரவடிவமாகு
நித்தமென்றுரைப்பர்காலநீங்கியநிலைமையாலே
வைத்திலர்முற்பிற்பாடுவெருவித்தார்கருமத்தாலே.

(இ-ள்). வித்தையோடீசர் சாதாக்கியஞ் சத்தி சிவங்களைந்துஞ் சுத்ததத்துவஞ் சிவன்றன் சுதந்தர வடிவமாகும்=இந்தச் சிருஷ்ட சிவதத்துவமைந்துஞ் சமவேத சத்தி ரூபமாதலால் சிவனுக்குச் சிறந்த சரீரமாக வுபசரிக்கப்பட்டது; (முன் சொன்ன சிர்ச்சிய சிவதத்துவம் பரிக்கிரக சத்தி ஸ்வரூபமாதலாற் பொதுச்சரீரமாக உபசரிக்கப்பட்டது, இந்தச்சிருஷ்ட சிவதத்துவமைந்துங்) கால நீங்கிய நிலைமையாலே=விர்த்தி பரிணதிவிவர்த்த ரூபமில்லாமையாற் காலவரையறையைக்கடந்திருத்தலால் (பெரியோர்;) நித்தமென்றுரைப்பர்=நித்தியமென்றுசொல்லுவார்கள்; (அதனால்) முற்பிற்பாடு வைத்திலர்=முன்பின்னென்கின்றது சொல்லார்; (ஆகிற் சொல்லுவானேன்) கருமத்தாலே =சிருச்சிய சிவதத்துவத்தைப் பற்றிய சிவசத்திவியாபாரக் கிரமத்தாலே (சொன்னார்கள்).

இதனாற் சிருச்சிய சிவதத்துவ மகாமாயா பரிணதிரூபமாய்ச் சுத்தகாலவரையறைக் குள்ளாதலால், அநித்தியமென்றும் முன்பின்னென்றும் சொல்லப்பட்டது.

சிருஷ்டம் சிருஷ்டிய மிரண்டுக்கும் பொதுவாகுஞ் சிவதத்துவமுஞ் சத்திதத்துவமுஞ், சிவதத்துவமென்றும், லயதத்துவமென்றும் சத்த தத்துவமென்றும், நிஷ்கள தத்துவமென்றும் காரண சிவதத்துவ சத்திதத்துவப் பேர்பெற்றுக் காரணவிலய போகாதிகாரங்கள் மூன்றினுள் ளிலயத்துக்குக் கற்பிக்கப்பட்டிலயத்தடங்கும்.

சதாசிவதத்துவம், சதாசிவதத்துவமென்றும், போகதத்துவமென்றும், உத்தியுத்ததத்துவமென்றும், சகளநிஷ்கள தத்துவமென்றும், காசப்சதாசிவதத்துவத்துக்குரைத்த பேர்பெற்றுப் போகத்துக்குக் கற்பிக்கப்பட்டுப் போகத்தடங்கும்.

ஈசுரதத்துவஞ் சுத்தவித்தியா தத்துவத்தோடுகூட ஈசுரதத்துவமென்றும் அதிகாரதத்துவமென்றும், பிரவிர்த்த தத்துவமென்றும், சகளதத்துவமென்றும், காரணவீசுர தத்துவத்துக்குரைத்த பேர்பெற்று அதிகாரத்துக்குக் கற்பிக்கப்பட்டதிகாரத்தடங்கும்.

ஸ்ரீமதங்காதிகளிற் சத்திதத்துவம் போகத்திலுஞ் சதாசிவதத்துவமதிகாரத்திலுமடங்குமென்று சொல்லியது மறிக. காரிய சிவனுமித்தோடு பொருந்திச் சிவனென்பதாதியாய்ச் சகளனென்பதந்தமாய்க் காரண சிவனுக்குரைத்த பேர்பெற்றுக் கிரமத்திற் காரணவிலய போகாதிகாரங்களுக்குக்கற்பிக்கப்பட்டுக் காரணவிலயபோகாதி காரங்கட்குள்ளடங்குவன்.

இம்மும்மூன்றுயொன்பதா யிருக்கின்ற காரிய இலயபோகாதிகாரங்கள் காரணுதி காரத்துட்கற்பிக்கப்பட்டதறிக. (சுசு)

இப்படிச் சடபதார்த்தங்களையெல்லாந் தனக்குச் சத்தித்துவாரத்தினுலெ சரீரம்போலப் பண்ணிக்கொண்டு செலுத்தியசைத்து வேற்றுமைப்படுத்திக் காரியப்படுத்தினுலும், சிவனுக்குஞ் சிவசத்திக்குமசைவு வேற்றுமையில்லை யென்றறைகின்ருர்.

ஒருவனேயிராவணுதிபாவகமுற்ருற்போலத்
தருவனிவ்வுருவமெல்லாந்தன்மையுந்திரியானுகும்
வரும்வடிவெல்லாஞ்சத்திசத்திதான்மரமுங்காழ்ப்பு
மிருமையும்போலமன்னிச்சிவத்திறேடியைந்துநிற்கும்.

(இ-ள்). காழ்ப்பு=வயிரம்; (மரமுங் காழ்ப்புமென்றதில்) காழ்ப்பு பிரத்தியக்குரூபம், மரம் பராக்குரூபம், அப்படிச் சிவமுஞ் சத்தியுமென் றிதன்பொருள். மற்றது வெளிப்பொருள். (சுஎ)

மேலிதுவுமது

பொன்மைநீலாதிவன்னம்பொருந்திடப்பளிங்கிவற்றின்
றன்மையாய்நிற்குமாபோற்சத்திதன்பேதமெல்லா
நின்மலன்ருனுய்த்தோன்றிநிலைமையொன்ருயேநிற்பன்
முன்னருடசத்திதன்பான்முகிழ்க்குந்தான்முளையானன்றே.

(இ-ள்). பொன்மை நிலாதிவன்னம் பொருந்திடப் பளிங்கிவற்றின் றன்மையாய் நிற்குமாபோற் சத்திதன் பேதமெல்லாம்=(இஃதெகதேச திட்டாந்தம்) சிருச்சிய சிவதத்துவங்களைந்து முதலான ஞெயகாரியங்கள் சிவசத்தியிலே பிரதிவிம்பித்தாற் சிவசத்தியுஞ் சடமாய்ப் போமாதலால் விம்பப் பிரதி விம்பத்துவம் பரிணத சடங்களுக்கல்லாமற் சித்துக்களுக்கில்லை யென்று பவுஷ்கரத்திற் சொல்லப்பட்டது, அதனுல், ஞானசத்தி ஸ்வரூபமாயிருக்கின்ற சிவசத்திக்குஞ் சிருச்சிய சிவதத்துவ முதலான ஞெயபதார்த்தங் களுக்கும் ஞாப்பிய ஞாபக பாவ சம்பந்தமாத்திரம், கிரியாசத்தி ஸ்வரூபமா யிருக்கின்ற சிவசத்திக்கு மந்தச் சிருச்சிய சிவதத்துவ முதலான காரிய பதார்த்தங்களுக்குஞ் சங்கற்ப சமுத்திரோக விஷய விஷயீபாவ சம்பந்தமாத்திரம், பிரதிவிம்ப சம்யோக சமவாயாதிகள் சித்துக்குச் சடத்தன்மை வருமாதலாற் சொல்லப்படாது, நாஞ் சொல்லிய விரண்டு சம்பந்த மாத்திரத்தினுலே சிவசத்திகட்குப் பிரிப்பில்லா வந்தரங்க வாநந்தியம் இயற்கையாய், நிருபசரிதமாயும் பிரிப்புள்ள வெகிரங்கவாநந்தியஞ் செயற்கையா யுபசரிதமாயு மிருக்கு மென்றப்படியே சிவசத்திக்காநந்தியமென்றுசொல்லப் பட்டவனந்தபேதமறிக;

நின்மலன் தானுய்த்தோன்றி நிலைமையொன்றுயே நிற்பன்= அநந்த சத்தி பேதபேதனு யிருந் தந்தரங்க பேதஞ் சொரூபமாயும் வெகிரங்கபேதந் தடஸ்தமாயு மிருத்தலால், ஏகதேசரூபஸ்வ பாவனுகத்தானுயிருப்பன்; முன்னருட்சத் திதன்பால் முகிழ்க்கும் தான் முளையானன்றே=மகாப்பிரளயமாய்ப் பின்சுவ பாவகாலத்திலே தூலபஞ்ச கிருத்தியத்திலே உதாசீனையாய் நிருவிகற்ப ஞானரூபியாய், இலய சிவனிடத்திலே யிருந்த கிரியாசத்தி, திரும்பிச் சூக்கும பராசத்தி ரூபியாயிருந்து மகாமாயாமாயாசத்தி வியத்தி யோக்கியதை முதலாகிய சூக்கும பஞ்ச கிருத்தியத்தைப் பண்ணுநின்று மகாசிருஷ்டி வருமிடத்து ஸ்தூல பஞ்ச கிர்த்தியம் பண்ணும்படி;

தன்பால்=சிவன்பால்;முன்னருட்சத்தி=முந்தவந்த ஸ்தூல பராசத்தி ரூபியாய்; முகிழ்க்கும்=சிவன்செலுதத இச்சாசத்தி சவிகற்பஞானசத்தி கிரியாசத்தி யாகிய போகரூபியாய்க் கொண்டுத்தியுத்தையாம்; தான்முளையானன்றே=சிவன்சத்தியாலேவப் பட்டுத்தியுத்தனுகான்; சத்தியை யேவியந்த சத்தித் துவாரத்தினுலே யுத்தி யுத்தனுயிருப்பன்;

(பின்னுமிதன்பொருள்) தன்பால்=தற்பொருளறிவாகிய சுத்த சிவனிடத்தில்; முன்னருட்சத்தி=லயபோகாதி காரங்களைக் கடந்த

புறப்பொருளறிவாகிய முந்திய சுத்த சிவசத்தி யானது; முகிழ்க்கும் =திருச்சியமின்றித் திருக்குரூபமாய் ஸ்புரித்துத் தோற்றியறியப்பபடும்; (புறப்பொருளறிவாகிய அந்தச் சிவசத்தியிலே) தான்=சிவன்; முளையானன்றே=தான் ஸ்புரித்துத் தோற்றுன்; தானப்படி ஸ்புரித்துத் தோற்றியறியப்படுவானுயின் புறப்பொருளாய்ப் போவனென்றுமாம்.

உலகினிற் பதார்த்தங்கள் சிலவவயவங்களொத்துஞ் சிலவவயவங்களொவ்வாமலுமிருக்கின்ற வாண் பெண் நீட்சி யுருட்சி முதலிய குணி குணம் இலிங்கம் பீடம் என்கின்ற சடபதார்த்தங்களிலேயுந் தற்பொரு ளறிவு புறப்பொருளறிவு என்கின்ற சிற்குணி குணங்களிலேயும், சிவனுக்குஞ் சத்திக்கும் முறைமையி லதிட்டானங் கற்பித்திருக்கையால், எல்லாஞ் சிவ சிவசத்தி மயமென்று செப்புகின்றார்.

சத்தியுஞ்சிவமுமாயதன்மையிவ்வுலகமெல்லா
மொத்தொவ்வாவாணும்பெண்ணுமுயர்குணகுணியுமாக
வைத்தனனவளால்வந்தவாக்கமிவ்வாழ்க்கையெல்லா
மித்தையுமறியரர்பீட லிங்கத்தினியல்புமோரார்.

(இ-ள்). வெளி. (கூக)

சிவனொருபொருளோடு முவமிக்கப்படா னென்று
செப்புகின்றார்.

சிவனுருவருவுமல்லன்சித்தினோடசித்துமல்லன்
பவமுதற்றொழில்களொன்றும்பண்ணிடுவானுமல்லன்
றவமுதல்யோகபோகந்தரிப்பவனல்லன்றானே
யிவைபெறவியைந்துமொன்றுமியைந்திடாவியல்பினனே.

(இ-ள்). சிவனுருவருவு மல்லன்=சிவன்சத்தியுருவனென்று முதற்சாதித்தலால், மாயாசரீர வுருவனன்று, சத்தியருவனென்று முதற்சாதித்தலால், மாயாவருவனன்று;சித்தினோடசித்துமல்லன்=சிவன்சத்தியுருவனென்று சாதித்தலால், ஆன்மவரு சடவரு வன்று, பவமுதற்றொழில்களொன்றும் பண்ணிடுவானுமல்லன்=சங்கற்பலக்ஷணசந்நிதிமாத்திரத்தால், விகிர்தி விரவாமல் சிருட்டியாதிபஞ்சகிர்த்திய கர்த்தாவென்று சாதித்தலால், குலாலாதிபோற் சரீர கரசலனத்தினாலே சிருட்டி

முதற் கிருத்தியங்களைப்பண்ணுகிறவனன்று; தவமுதல்யோகபோகந் தரிப்பவனல்லன் = ஸ்ரீகண்டதேகதேகியாய்ச்சனகாதிகளுக்குத் தபாபிநயம் யோகாபிநயம் கவுரிகல்யாணம் இவைகளைப்பண்ணுமவனெறு சாதித்தலால் தவம்யோகம்போகம் தானாய்ப்பண்ணுகிறவனன்று; தானே = சிவன்றானே; இவைபெறவியைந்துமொன்று மியைந்திடாவியல்பினானே = முன்சொன்ன முறைமையினாலே சிருஷ்டி முதற் கிருத்தியங்கள் பண்ணப்பொருந்தியும்பொருந்திடாவியற்கையன்றானே. (எ௦)

ஆ திருவிருத்தம் - கூ௬.

முதற்சூத்திரம் முற்றுப்பெற்றது.

---

## இரண்டாஞ் சூத்திரம்.

முதற் சூத்திரத்திற் சிருட்டி திதிசங்கார கிருத்திய கர்த்தா சிவனென்றறிவித்ததனால், மேலனுக்கிரக கர்த்தாவென்றறிவிக்கப் போகின்றபடியால், இப்போது திரோபாவ கிர்த்திய கர்த்தா வென்பதுரைக்கின்றார்.

உலகெலாமாகிவேறாயுடனுமாயொளியாயோங்கி
யலகிலாயுயிர்கள்கன்மத்தாணையினமர்ந்துசெல்லத்
தலைவனாயிவற்றின்றன்மைதனக்கெய்தலின்றித்தானே
நிலவுசீரமலனாகிநின்றனனீங்காதெங்கும்.

(இ-ள்). சிவன்; உலகெலாமாகி = சிதசித் பிரபஞ்ச மெல்லாந் தானாகி; (பிரமந்தானே அஞ்ஞான கலுஷித அவிவேகத்தினால், அசத்தியப் பிரபஞ்சமாய்த் தோன்றி, விவேகத்தினால்) சத்தியப் பிரமமொன்றுமாயே சேஷிக்கு மென்னும் விவர்த்த வேதாந்தியோ நீர்? அதுவன்றிப் பிரமந்தானே சத்தியப் பிரசஞ்சமாய்ப் பரிணமித்துத் தானாயிருக்குமென்னும் பரிணதவேதாந்தியோ நீரொன்ன? நாமிருவகை வேதாந்தியுமன்று சைவசித்தாந்தியென்று சாற்றுகின்றார்;

வேறாய் = சிதசித் பிரபஞ்சத்துக் கெல்லாம் பொருளினால், வேற்றுமையாய், ஆனால், நையாயிகாதிகள் போலப் பேதவாதியோ நீரொன்னப்பேசுகின்றார்;

உடனுமாய் = அசித் பிரபஞ்சத்துக் கெல்லாஞ் சிதசித் பொருட்சொரூபத்தினாலே வேற்றுமையாய், வியாத்தியினாலே யுள்ளடக்கி வேற்றுமையற்றும் பொருள் மாத்திர ஸ்வருபத்தினாலேயும் வேற்று

மையற்றுத் தோற்றிச் சிதசித் பிரபஞ்சத்துக்கெல்லாம், வேற்றுச் சித்தாலும், சித்துருபப் பொருள் மாத்திர ஸ்வரூபத்திலுலேயும், ஒத்த வியாத்திலுலேயும் வேற்றுமையற்று முற்றுமொத்து;

ஒளியாயோங்கி=வியோமவிடாபித் தோத்திரத்திலுளைத்தபடி மலமுதற்பாசம் பாசவாசனை விஷயதாகக் கிரியாசாதகக் கிரியாசத்தியக்கினி அதற்சனனிய வஸ்துப் பிரகாச ஞானசாதக ஞானசத்தி யக்கினிப் பிரகாசப்பெருக்குடையனாய்;

அலகிலாவுயிர்கள்=அளவிறந்த வான்மாக்கள்; கன்மத்தாணையின மர்ந்துசெல்ல=அவரவர்பண்ணின நல்வினை தீவினைக்கேற்ப விதி நிஷேதப்பிரபோதிகையாயிருக்கின்ற தன தாஞ்ஞா சத்தியினாலே நல்லபொல்லாத போக்கியப்பொருள்களி லமிழ்ந்தியதனாலுண்டான சுகதுக்கமோகங்களை யனுபவித்துச் சம்ஸாரம்பண்ணப்பண்ணி;

தலைவனாய்=சிவன் சுவயம் அபின்ன நிமித்தோபாதானங் கேவலமுபாதானமென்று மாயாதடஸ்தத்திற் பரியவசித பரிணதிபடிச்சுருங்குதிஷ்டிவாதங்கட்கிடங்கொடாத நிமித்தகாரணமாத்திரக் குறிக்கர்த்தாவாகி;

அவற்றின்றன்மை=அந்தவான்மாக்களது சுகதுக்கமோகங்கள்; தனக்கெய்தலின்றி=பிறப்பிரிப்பின்றி யுட்பிரிந்துடனாய் நின்றாலும் தனக்கனுபவிக்கப்படுமவைகளன்றி; தானே நிலவுசீரமலனாகி=ஸ்வயம்பிரகாசசத்திஸ்வபாவ நின்மலனாய; நின்றனனீங்காதென்றும்=எங்கும் வியாபித்தொருகாலத்து மிடைவிடாதிருந்தான்.

ஆகையால், நிரூபாதிகான்ம சிவோபயஸ்வரூப மொத்த சித்துருபமே சின்மூலமன்று, பின்னேதோவொன்றென்றுஞ் செப்புவதன்றுனையாயிகன் முதலோர்க்குப்போலச் சடரூபமாய்ப்போம்; சின்மூலமென்பதும் ஏதோவொன்றென்பதுஞ் சித்துக்காணுமென்னில், அநவத்தைவரும் அதனால், சித்துருபந்தானே சித்துருபனானாலும் வேதாந்திகட்குப்போலச்சின்மாத்திரமன்று,பின்னேதோவொன்றென்னும்,அநிர்வசநீயமுமன்றுமாகில், "தத்பதங்கிமபிஸ்திதம்" என்று சிவாகமஞ்செப்பியது சத்தியம்; திருச்சியமன்று, அதிர்ச்சியமுமன்றென்று சொல்லி மெல்லத்திருக்கு ரூபத்தைக்காண்பித்தது பராக்கியைமிருகேந்திரங்களிலே,

சித்ரூப மாத்மநோரூபம், த்ருக்ரியாகுணலக்ஷிதம்,
ஞானரூபஸ்ய தஸ்யாபி, ஸ்வரூபம் த்ருக்ரியாத்மிகம்,
சைதன்யம் த்ருக்ரியாரூபம், ததஸ்த்யாத்ம நிசர்வதா,

சர்வதச்சயதோமுக்தௌ, ஸ்ரூயதேஸர்வ தொமுகம்,
அதாநாதி மலோபேதஸ், ஸர்வக்ருத் ஸர்வவித் சிவஃ

என்று வசன மிருக்கையால், ஞெயகாரிய திருச்சிய திருக்குரூப நிருகந்தர நிர்க்கு ரூபச் சுவநிர்க்குரூப ஸ்வரூப சச்சிதானந்த ஸர்வஞ் ஞத்துவ ஸர்வகர்த்திருத்துவ சிவத்துவைகரூப நிருபாதிகான்ம சிவோ பய பதிரூபஞ் சர்வாபேக்ஷமானாலும், அக்கினிக்குத் தாகப் பிரகாசம் போ லிருவர்க்கு மொன்றுக்கொன்று பரிசியாமலொப்ப விருவருக்கும் சுவரூபலக்ஷணந்தானே தடத்த லக்ஷணமன்று, அஞ்ஞத்துவ அகர்த்தி ருத்துவ லக்ஷணபாச சட தடஸ்தத்திலும் பாசோபாதிக் கிஞ்சிஞ்ஞத்து வ கிஞ்சிற் கர்த்திருத்துவ போக்திருத்துவ லக்ஷண பசுத்துவ சட தடஸ் தத்திலும், அவ்விரு பதிஸ்வரூப மில்லாமையால், ஆதலால் ("கிஞ்சிஞ் ஞத்வந்துகாரணத்") என்னும் வசனத்தினால், கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவபோத்திருத்துவம் அஞ்ஞத்துவம் அகர்த்திருத்துவங்களே ஔபாதிகங்களென்ப தறியாது, கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத் துவம் போக்திருத்துவம் அஞ்ஞத்துவ அகர்த் திருத்துவ மிவை போலே சர்வஞ்ஞத்துவம் சர்வகர்த் திருத்துவ மிரண்டுமௌ பாதிகங்களே தடஸ்த்த லக்ஷணம் ஸ்வரூப லக்ஷண மன்று; சின்மாத்திரமே ஸ்வரூப லக்ஷணமென்று வேதாந்த வியவகார சோரர்களாய், பிரஷ்ட சித்தா ந்த வியவகாரர்களாய், சைவ சித்தாந்தி யாபாசர்களாய் இருக்குஞ் சிலபெயர்கள் சொல்லியது தூரம்போய்த் துச்சமாயிற்று;

திரும்ப விவர்கள் சிவனுக்கு மான்மாவுக்கும், எள்ளுக்குமெண்ணெ ய்க்கும், பழத்துக்கும் ரசத்துச்கும் போல, ஔபச்சிலேஷிக வியாத்தியி னாலே வியாப்பிய வியாபக பாவகம் அதுவு மநாதி சம்யோகம்; அதுவே முத்தியென்று சொல்லியது மப்படியே போயிற்று; ஆகாசாதி யமூர் த்தபதார்த்தங்களும்; அதிலுமத்தியந்தம் அமூர்த்த பதார்த்தங்களும், சமசமயத்திற் சந்திரனிடத்தி லொத்து விழுந்த கண்ணொளிக ளொான் றோடொன்று தட்டாதிருந்தமை போலத் தட்டாதிருக்கு மாதலால், நிருபாதிகான்ம சிவங்கள் சமசமயத்திற் சர்வபதார்த்தங்களி லொத்து விழாது விழுந்து ஒன்றோடொன்று தட்டாம லொன்றொன் றிருக்கு மிடத்தொன்றொன் றிருப்பு விடாதுட்புறம் பென்னுந்தொத்திருத்தலால், அந்த ஆன்ம சிவங்களுக்குச் சம்யோக சமவாய வியாப்பிய வியாபக பாவசம்பந்த முதற் சம்பந்தங்கள் கிட்டா; சாதிர்ச்சிய சாதிசம்பந்த மொன்றுமே சாதாத்திகமாய்க் கொண்டுசம பூச்சியம். ரவுரவவிருத்திக் காரரு மப்படியேசொன்னார். (க)

சிவனு மான்மாவுஞ் சமான சாதியொன்று பிரமமொன்று
மேநாநா சைதன்னியமில்லை யென்னுஞ் சுருதிக்குத்
தாற்பரிய முணர்த்துகின்றார்.

ஒன்றெனமறைகளெல்லாமுரைத்திட வுயிர்களொன்றி
நின்றனனென்றுபன்மைநிகழ்த்துவதென்னையென்னி
லன்றவைபதிதானொன்றென்றறையுமக்கரங்கடோறுஞ்
சென்றிடுமகரம்போலநின்றனன்சிவனுஞ்சேர்ந்தே

(இ-ள்). ஒன்றென மறைகளெல்லா முரைத்திட=வேதங்களெல்லாம் பிரம சைதன்னியமொன்றுமே நாநாசைதன்னிய மில்லையென்று சொல்ல; உயிர்களொன்றி நின்றனனென்று பன்மைநிகழ்த்துவ தென்னையென்னில்=சிவன் ஆன்மாக்களுக்குள் முத்தரிடத்திலே யெங்கு மொக்கச் சிவசத்திக்கொத்துச் சிற்சத்தி விளங்குதலால், சாதிர்ச்சிய சம்பந்த சம்பந்தியாயும் பெத்தரிடத்திலே யேக தேசத்திலே சிவ சத்திக் கொவ்வாமற் சிற்சத்தி விளங்குதலால், அனுக்கிராகியானுக் கிராக சம்பந்தமென்றுஞ் சாற்றப்படும், வியங்கிய வியஞ்சக பாவசம் பந்தத்தோடு வியாப்பிய வியாபக பாவ சம்பந்த சம்பந்தியா யிருப்ப னென்று அநேகான்ம வாதியாய் நீர் சொன்ன தேதென்னில்; அன்றவை பதிதானொன் றென்றறையும்=அந்த வேதங்கள் அநாதி சித்த பதி யென்னுங் கர்த்தா வொருவ னென்றும், ஆதிசித்த பதிகளும் பசுக் களு மனந்த மென்று முரைக்கும்; (அநாதிமுத்த பதி ஆதிமுத்தபதி பசுக்களுக்குப் பின்னப் பிரதேசத்திலே யிருப்பனோ வெனவுத்தரம்); அக்கரங்கடோறுஞ் சென்றிடு மகரம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந் தே=அக்கரங்களுக்கு மகரத்துக்குஞ், சமவாய சம்பந்தத்தினாலே தா தான்மியம்; அநாதி முத்தபதிக்கும் ஆதிமுத்த பதி பசுக்களுக்கும் முன் சொன்னபடி சாதிர்ச்சிய சாதிசம்பந்தத்தினாலேயும், வியாப்பிய வியா பாவ சம்பந்தத்தினாலேயும் தாதான்மிய மில்லாமையா லேகதேசவுவ மை முற்றுவமை யன்றென்ப தறிக. (உ)

சிவனுக்குமான்மாவுக்கு மிப்போதுசொல்லிய சம்பந்தத்தினாலே
யொரு பிரகாரமத்துவைத மறிவிக்கப்பட்டதானாலும் வஸ்து
வினாலே பேதம் புடமென்ப துரைக்கின்றார்.

உருவொடுகருவியெல்லாமுயிர்கொடுநின்றுவேறாய்
வருவதுபோலவீசனுயிர்களின்மருவிவாழ்வன்

றருமுயிரவ்வனையாகாவுயிரவைதானுமாகான்
வருமவனிவைதானாயும்வேறுமாய்மன்னிநின்றே.

(இ-ள்). உயிர்=ஆன்மா; உருவொடு கருவியெல்லாங் கொடு நின்று = தூலதேக சூக்கும தேக பரதேக மிவைகளைக் கொண்டு நின்று; தனது சங்கற்ப ரூப சன்னிதி மாத்திரத்தாற் செலுத்தித் தொழில்களைப் பண்ணுவித்து நின்று; வேறாய்வருவதுபோல=உயிர் வேறு சரீரம் வேறென்று நின்றாற்போல; ஈசனுயிர்களின் மருவிவாழ்வன்= ஆன்மாக்களிடத்துச் சம்பந்தித்துத் தனது சங்கற்ப ரூப சந்நிதிமாத்திரத்தினாலே செலுத்தி நிற்பன்; (அமூர்த்தமாய், வியாபகமாயிருக்கின்ற வான்மாக்களைச் செலுத்தும் வகை யெப்படி யென்னில் சரீரத்தி லவயவங்களை யங்கங்குப் பிரேரித் தான்மாக்களிடத்தி லறிவு தொழில்களை யந்தச் சரீரத்தி லவயவங்களைக் கொண்டு விளக்கிக் காரியம் நிகழப்பண்ணுவதே செலுத்துவதென்றப்படி,;) (ஆதலால்), தருமுயிரவனே யாகாவுயிரவை தானுமாகான்=செலுத்தப்படும் பொருளாகிய ஆன்மாக்களும், செலுத்தும் பொருளாகிய சிவனும் ஒருபொருளாகா; வருமவனிவைதானாயும் வேறுமாய் மன்னிநின்றே=அந்தச் சதாசிவன் (முன் சொல்லிய வியாப்பிய வியாபக சம்பந்தத்தினாலே) இந்த ஆன்மாக்களாயும், வஸ்துவினாலே வேறாய்த்தனித் தொருபொருளாயும் இருப்பன்; முத்தான்மாக்கள் நிரஞ்சனர்க ளாதலாற், சிவன்போலச் சிவப்பிரேரியர்களன்று;

"வச்யோநாவிர்தவீர்யாஸ்ய
ஸ்வதயேவாபிமோக்ஷணாத்"

என்று மோக்ஷ பரியந்தம் சிவனுக்கு வசியனென்னும் பெயர் மிருகேந்திர வசனத்தினாலே காண்க. (௬)

மேல்வினையால் மாறிப்பிறந்து வருமாறு
உணர்த்துகின்றார்.

இருவினையின்பத்துன்பத்திவ்வுயிர்பிறந்திறந்து
வருவதுபோவதாகுமன்னியவினைப்பயன்க
டருமரன்றரணியோடுதராபதிபோலத்தாமே
மருவிடாவடிவுங்கன்மபலன்களுமறுமைக்கண்ணே.

(இ-ள்) தரணியோடு தராபதிபோல=பூமியோடுகூடிய விராசாக் கிருஷியாதிபலங்களை யவரவர் செய்தியறிந்து கொடுப்பதுபோல; அர

ன்=மாயையோடுகூடிய சிவன்; மன்னியவினைப்பயன்கள் தரும்=அவ னவனுக்குப் பொருந்திய சுகதுக்கமோகங்களைக் கொடுப்பன்;

(தரணியாகிய முதற்காரணமின்றித் தராபதிபலன் கொடுக்கமாட் டான். தராபதியன்றித் தரணியறிவின்மையாற் பலன் கொடுக்கமாட் டாது, கிருஷித்தொழிலுமப்படியே) அப்படிச் சிவனும் மாயையும், கன் மமு மென வறிக;(இருவினை யின்பத்துன்பத்தென்றவிடத்து இருவினைக ளாலென விரிக்க;) இன்பதுன்பத்து=சுகதுக்க காரண யோனிகளில், வருவதுபோவது=சுவர்க்க நரகங்களில்; மற்றதுவெளிப்பொருள். (ச)

உலோகாயதன் மதமாசங்கித்துத் தூஷிககின்றார்.

இருவினையென்னையின்பத்துன்பங்களியல்பதென்னி
லொருதன்மையியல்புக்குள்ளதொருவனுக்கிரண்டுசெய்தி
வருவதென்மலருந்தீயுமருவலின்வாசம்வெம்மை
தருவதென்னீரொன்செய்துதானியல்பாகுமன்றே.

(இ-ள்). இருவினையென்னை=பாவபுண்ணியமென்பதேது; பிரத்தி யக்ஷப் பிரமாண மொன்றுக்குமே விஷயமாகக் காண்பித்தீராலும், (நிஷ்பிரயோசனம்);இன்பத்துன்பங்க ளியல்பதென்னில்=சரீரத்தைத் தவிர ஆன்மாவில்லை சரீரான்மாவுக்குச் சுகதுக்கங்களைச் சுபாவமென்று நீசொல்லில்; ஒருதன்மை யியல்புக்குள்ளது=சீதகுணம் ஜலத்துக்கியற் கை; ஒருவனுககிரண்டு செய்திவருவதென்=ஒருபுருஷனுக்குச் சுகதுக் கானுபவமிரண்டு வருவதேது; மலருந் தீயும் மருவலின் வாசம் வெம்மை தருவதென்னீரொன்செய்துதான்=ஜலம், என்ன கன்மத்தைப்பண்ணித் தான், புஷ்பாக்கினிகள் பொருந்தியவிடத்து, மணஞ் சூடு கொடுப்ப தேது? காரணம் இல்லை; இயல்பாகு மன்றே=பொருளி னியற்கை தானே. (ரு)

நீசொன்ன திஷ்டாந்தத்தி லான்மாவுக்குச் சுகதுக்கங்க
ளியற்கை யன்று செயற்கை யென்றுதானே
சித்தித்ததென்று செப்புகின்றார்.

தன்னியல்பொழியப்பூவுந்தழலும்வந்தணையநீரின்
மன்னியதிரண்டுசெய்திவருமிருவினையினாலு
முன்னியவின்பத்துன்பமுறுமுயிருணர்விலாத
துன்னியவசித்தையின்பத்துன்பங்கள்சூழ்ந்திடாவே.

(இ - ள்) . தன்னியல்பொழிய = தனதியற்கைச் சீதகுணமறைய; பூவுந்தழலும்; வந்தணைய = பொருந்த; நீரின் மன்னியதிரண்டுசெய்தி = மணஞ் சூடென்னுஞ் செயற்கைக்குணமிரண்டும் வந்து சேர்ந்தன; அப்படி வரு மிருவினையினாலும் = புத்தியில் பொருந்திய புண்ணிய பாவங்களினாலும்; உன்னிய வின்பத்துன்பம் = உண்டாகிய செயற்கைச் சுக துக்கங்களை; உயிருறும் = ஆன்மா வனுபவிப்பன்; துன்னியவசித்தை யின்பத்துன்பங்கள் சூழ்ந்திடாவே = ஆன்மாவைப்பொருந்திய சரீரேந்திரியாதிகள் அறிவின்மையாதலா லந்தச் சுகதுக்கங்களை யனுபவியாது அசித்தைப் பொருந்தி யிராதென் றுரை பண்ணலாகாது, சுகதுக்கங்கள் புத்தி தத்துவத்தி லுண்டாய்ப் பொருந்தி யிருத்தலால். (சு)

காரணமாகக் காணப்பட்ட பொருளைக் காரணமாக விஃதமையுமென்று கற்பிப்பதே முக்கியங் காணாத காரண கற்பனை நிஷ்பிரயோசனமென்று சங்கிக்கின்றார்.

இம்மையின்முயற்சியாலேபிருநிதியீட்டியின்ப
மிம்மையேநுகர்வர்செய்தியிலாதவர்பொருளுமின்றி
யிம்மையேயிடருழப்பர்வேறிருவினையதுண்டே
லிம்மையின்முயற்சியின்றியெய்திடவேண்டுமிங்கே.

(இ-ள்). வெளிப்பொருள். (எ)

இம்மையின் முயற்சியாற் செய்யுங் கன்மமோரிடத்திற் பலத்தைப் பொருந்தி யோரிடத்தினீங்கி வியபிசாரியாதலால், வியபிசரித்தவிடத்துக் காணாத காரணங் கற்பிக்கவேணுமென்று காண்பிக்கின்றார்.

இருவினைச்செயல்காணிம்மையிரும்பொருளின்பம்வேண்டி
வருவினைசெய்யுங்காலமடிவருமடியுமின்றித்
தருவினையதனிலத்தந்தானறுந்துயரந்தங்கு
மொருவினைசெய்யாதோருமுடையரிவ்வுலகத்துள்ளே.

(இ-ள்). வெளிப்பொருள். (அ)

பிராரத்தம் புசிக்குமிடத் தாகாமிய மேறுமுறைமையும், அது சஞ்சிதத்தோடு கலந்து காலாந்தரத்திற் பலன் கொடுக்கு மென்பதும், பலமாறுண்டென்பதும் படித்தறிவிக்கின்றார்.

பேறிழவின்பமோடுபிணிமூப்புச்சாக்காடென்னு
மாறுமுன்கருவுட்பட்டதவ்விதியனுபவத்தா

லெறிடுமுன்புசெய்தகன்மமிங்கிதனுக்கேது
தேறுநீயினிச்செய்கன்மமேலுடற்சேருமன்றே.

(இ-ள்). பேறு=தனக்கு யோக்கிய போக்கியப் பொருளைப் பொருந்துதல்; இழவு=நியமித்த காலாந்தரத்தி லதைப்பிரிதல்; இன்பமோடுபிணி=சுகதுக்கம்; மூப்பு=நரைதிரை; சாக்காடு=மரணமென்கின்ற; ஆறும்; கருவுட்பட்டது=சரீரத்தடைத்தது; அவ்விதி யனுபவத்தால்=நியமித்தவாறின தனுபூதியால்; ஏறிடும்=ஆகாமிய கன்மம் வந்து பொருந்தும்; முன்பு செய்த கன்ம மிங்கிதனுக்கேது=முன் சென்மங்களிற் பண்ணிச் சஞ்சிதமாய்க் கட்டுப்பட்ட கன்மத்துட் பக்குவமாகிய பிராரத்த கன்ம மிவ்வாறுக்குங் காரணம். (கண்டகாரியானுமானத்தாற் காணாத காரண மனுமிதிக்கப்பட்டது) தேறுநீ=இப்படி யனுமித்தறிநீ; இனிச் செய்கன்ம மேலுடற் சேருமன்றே=இப்போதேறு மாகாமிய கன்மமேற் சஞ்சிதத்தோடு கலந்து சில பக்குவமாய்ப் பிராரத்தகன்மத்தோடுகூடி மேல்வருஞ் சென்மங்களி லெடுக்குஞ் சரீரங்களிற் பேறிழவின்ப முதலாறு பலத்தோடும் பொருந்தும்; கண்ட காரணானுமானத்தாற் காணாதகாரிய மனுமிதிக்கப்பட்டது. (கூ)

சரீரகன்மப்பிரபந்தம் பிரவாகாநாதியென்று
பேசுகின்றார்.

உடற்செயல்கன்மமிந்தவுடல்வந்தவாறேதென்னில்
விடப்படுமுன்னுடம்பின்வினையிந்தவுடல்விளைக்குந் [த்தி
தொடர்ச்சியாலொன்றுக்கொன்று தொன்றுதொட்டநாதிவி
னிடத்தினின்மரம்மரத்தின்வித்தும்வந்திசையுமாபோல்.

(இ-ள்). சரீராந்தரங் கன்மாந்தரம், கன்மாந்தரஞ்சரீராந் தரத்துக்குக் காரணமாதலால், இதரேதராச்சிரய தோஷமு மில்லையென் றிருதயம். வெளிப்பொருள். (கO)

ஆகாமியம்வந்தேறுமாறுகூறுகின்றார்.

முற்செயல்விதியையிந்தமுயற்சியோடனுபவித்தா
லிச்செயல்பலிக்குமாறெனிதமகிதங்கண்முன்ன
ரச்செயலானலிங்குமவைசெயின்மேலைக்காகும்
பிற்செயாதனுபவிப்பதின்றுபின்றுடருஞ்செய்தி.

(இ-ள்). முற்செயல் விதியை = முற்சென்னத்திற் பண்ணின கன்ம பல சுகதுக்கங்களை; இந்த முயற்சியோடு = அந்தச் சுகதுக்கங்களுக்கு முதற் காரணமாகிய போக்கிய கன்ம சுகதுக்கமாய்ப் பரிணமித்தற்கு நிமித்தமாய்ச் செனகந் தாரகமாகியந்த முற்செயலுட்டானேயிருக்கும் போசக கன்ம மிப்பிரயத்தனத்தையுண்டாக்கியதனோடு கூடியுண்டாக்க அந்தச் சுகதுக்கங்களை; அனுபவித்தால் = புசித்தால்; இச்செயல் பலிக்கு மாறென் = இவ்வாகாமியம் வருதற்கு காரணமேது; (முற்செயலெப்படி வந்தது,இதமகிதங்களாலென்னில்)இதமகிதங்கள்;முன்னர் = முன்னாக; அச்செயலானால் = அந்த முற்சென்ம கன்ம முண்டாமானால்;அவைசெயின் = அந்த இதமகிதங்களை யிப்போது பண்ணினால்; மேலைக்காகும் = மறு சென்மத்திற் சுகதுக்க காரணமாகு மாகாமியமேறும், இதமகிதமும் ஏவு தற்கர்த்தாப்பண்ணுவிக்கு முற்கன்மபலமன்றோ, பின்னாகாமியமியற்று தற்கர்த்தாவாயிருக்கு மிவனுக்குண்டாதற்குக் காரணமேது? சத்தியம், விவேகமின்றி நானே பண்ணு நிற்கின்றே னென்னுங் கர்வராகபயாவே சத்தாற் சுதந்தர கன்ம கர்த்தாவாய்ப்பலன்கொள்பவனாகியும், தனக்கு த்தானே தோற்றியிருத்தலால், ஆகாமியமிந்த மூன்று காரணத்தாலே றும்; பிற்செயா தனுபவிப்ப தின்று = முற்பண்ணாதது பின் னனுபவிப்ப தின்று; செய்தி பின் றுடரும் = மனோவாக்குக் காயங்களிற் சமவாய சம்பந்தியாய்வருமிதமகிதமென்கிற வியாபாரதூலகன்மம், (கிருஷிகன் மம்போற்றொழிலாதலால் இங்கே கெட்டதெங்கே போய்ப் பின் வந்து தான் பலந்தரும், கிருஷிகன்மத்தொழில் கெட்டாலும் அதனாற் பூமியி லுண்டாகும் சம்ஸ்காரம்போல, மனோவாக்குக் காயத்தொழிலுடனே கெட்டாலும், கெடு முற்கணத்திற் றொழிலினால் புத்தி தத்துவத்திற் சம வாயசம்பந்தியாய் வைக்கப்பட்டுப் பலபரியந்த மிருக்குஞ் சம்ஸ்கார மாகிய அதிருஷ்டமென்னும் பெயர்ச்சூக்கும கன்மம்; பின்றொடரும் = சொர்க்கநரக பூமிகளிற் சூக்குமதேகத் தேரிலிருந்து போம்வரும். (கக)

ஆகாமியமே சஞ்சிதம் பிராரத்தமாய் வருமென்பதற்குத்
திருஷ்டாந்தம்.

மேலைக்குவித்துமாகிவிளைந்தவையுணவுமாகி
ஞாலத்தில்வருமாபோலநாஞ்செயும்வினைகளெல்லா
மேலத்தான்பலமாய்ச்செய்யுமிதமகிதங்கட்கெல்லா
மூலத்ததாகியென்றும்வந்திடுமுறைமையோடே.

(இ-ள்). விளைந்தவை மேலைக்கு வித்துமாகி யுணவுமாகி வருமாபோ லென்று பொருட்புணர்ச்சி. மற்றைய வெளிப்பொருள். (௬௨)

இதமகிதங்க ளிவையென்பது மதையறிந்து சிவனே
பலங்கொடுப்ப னென்பது முணர்த்துகின்றார்.

இதமகிதங்களென்பதிகன்மனவாக்குகாயத்
திதமுயிர்க்குறுதிசெய்தலகிதமற்றதுசெய்யாமை
இதமகிதங்களெல்லாமிறைவனேயேற்றுக்கொண்டங்
கிதமகிதத்தாலின்பத்துன்பங்களீவனன்றே.

(இ-ள்). இதமகிதங்க ளென்பதே தென்னில்; இகல்=ஒன்றுக்கொன்று மாறுபாடு; (அதற்குள்) இதம்; மனவாக்குக் காய்த்து=மனவாக்குக் காயங்களினாலே; உயிர்க்குறுதி செய்தல்=ஆன்மாக்களுக்கு நன்மை பண்ணுதல்; அகிதமற்றது செய்யாமை=அகிதமாவது நன்மை செய்யாமற் றீமை செய்வது; அவற்றுள் மனத்தினாற் செய்தல் பிரியங் கோபமுதலியன, வாக்கினாற் செய்தல் துதி நிந்தை முதலியன, காயத்தினாற் செய்தல் அடித்தலணைத்தல் முதலியன; இதமகிதங்களெல்லாம்= இதமகிதங்களால் வரும் பாவ புண்ணியங்க ளனைத்தையும்; இறைவனே யேற்றுக்கொண்டு=சிவனே கண்டு கொண்டு; இதமகிதத்தால்=வரும் செனகம் தாரகம் போக்கியமெனு முத்திறவினைகளினாலே; இன்பத் துன்பங்க ளீவனன்றே=சுக துக்கங்களைப் போக்கிய கன்மத்திலே நின்று முண்டாக்கிப் பொசிக்கப் பண்ணுவன்றானே. (௬௩)

மீமாஞ்சனுசங்கிக்க உத்தரமுரைக்கின்றார்.

இறைவனிங்கேற்பதென்னையிதமகிதங்களென்னி
னிறைபரனுயிர்க்குவைத்தநேயத்தினிலைமையாகு
மறமலியிதஞ்செய்வோருக்கனுக்கிரகத்தைச்செய்வன்
மறமலியகிதஞ்செய்யினிக்கிரகத்தைவைப்பன்.

(இ-ள்). இறைவனிங் கேற்பதென்னை=சிவ னபிமானிப்ப தேது; அனுக்கிரகம்=இன்பம்; நிக்கிரகம்=துன்பம்; வைப்பன்=பண்ணுவன்; மற்றதுவெளிப்பொருள். (௬௪)

இதுவுமது.

நிக்கிரகங்கடானும்நேசத்தாலீசன்செய்வ
தக்கிரமத்தாற்குற்றமடித்துத்தீர்த்தச்சம்பண்ணி

யிக்கிரமத்தினலேயீண்டறமியற்றிடென்ப
னெக்கிரமத்தினலுமிறைசெயலருளேயென்றும்.

(இ-ள்). வெளிப்பொருள். (சரு)

இதுவுமது.

தந்தைதாய்பெற்றதத்தம்புதல்வர்கடஞ்சொலாற்றின்
வந்திடாவிடினுறுக்கிவளாரினலடித்துத்தீய
பந்தமுமிடுவரெல்லாம்பார்த்திடிற்பரிவேயாகு
மிந்தநீர்முறைமையன்றேயீசனர்முனிவுமென்னும்.

(இ-ள்). வெளிப்பொருள். (கசு)

மீமாம்சன் கன்மந்தானே கர்த்தாவென்று சொல்ல
மறுத்துணர்த்துகின்றார்.

செயல்களேபலத்தைச்செய்யுந்தெய்வம்வேண்டாவிங்கென்
முயலுமிச்செயல்களிங்கேமுழுவதுமழியுமெங்கே [னின்
பயனளிப்பனவழிந்தேபலன்களைப்பண்ணுங்கெட்டே
வயலிடுந்தழையுந்தின்னுமருந்தும்பின்பலிக்குமாபோல்.

(இ-ள்). செயல்களே பலத்தைச் செய்யும்=அவரவர் பண்ணின கன்மங்களே சுகதுக்கங்களைக் கொடுக்கும்; தெய்வம் வேண்டா விங் கென்னில்=ஒரு கர்த்தா வேண்டுவதில்லை யென்று நீ சொல்லில்; முயலு மிச்செயல்களிங்கே முழுவது மழியும்=பண்ணப்பட்ட விந்தக் கன்மங்களெல்லாம் மனோவாக்குக் காயத்தொழில்க ளாகையாற் பண் ணின விடத்து முற்றுங் கெடும்; எங்கே பயனளிப்பன=சுகதுக்கங் களைக் கொடுப்பதெங்கே; வயலிடுந் தழையும், தின்னு மருந்தும்; கெட் டேபலிக்குமாபோல்=அழிந்தே பலன்களைப் பண்ணும்=கன்மங்களுங் கெட்டே பலத்தைக்கொடுக்கும். (கஎ)

அதுதன்னைத்தானேயனுவதித்துத்தூஷிக்கின்றார்.

செய்க்கிடுந்தழையுந்தின்னுந்திரவியமதுவும்போல
வுய்த்திடுஞ்செய்திகெட்டேயுறுவிக்கும்பலத்தையென்னில்
வைத்திடுஞ்சோறும்பாக்குமருந்தினர்வயிற்றின்மாய்ந்தான்
மெய்த்திடும்பலமுனக்குமலமலால்வேறுமுண்டோ.

(இ-ள்). செய்க்கிடுந்தழையுந்தின்னுந்திரவியமதுவும்போல=தழையும் மருந்துந் தாங்கள்போய்ப்பொருந்தியவிடத்துச்சாரத்தை வைத்துக்கெட்டுச் சாரத்துவாரத்தினாலே, விளைவு வியாதி நீங்கல் முதலிய பலங்களைக்கொடுப்பதுபோல; உய்த்திடுஞ்செய்தி கெட்டேயுறுவிக்கும்பலத்தையென்னில்=பண்ணியகன்மந்தானே போய்ப்பொருந்தியவிடத்துச் சாரத்தைவைத்துக் கெட்டுச் சாரத்து வாரத்தினாலே சுவர்க்க நரக சுகதுக்க பலங்களைக் கொடுக்குமென்னில்; வைத்திடுஞ் சோறும்பாக்கும்=நல்ல பாத்திர மிவர்களென்று குறித்துப் பாத்திரத்திற் படைத்த வியஞ்சன விதத்தோடு கூடிய அன்னமும் பாக்கு வெற்றிலை கர்ப்பூர முதலிய முகவாசகங்களும்; அருந்தினர் வயிற்றில்=பொருந்திய சாரத்தை வைத்துக் கெட்டுச் சாரத்துவாரத்தினாலே; வைத்திடும் பலம்=வரும் பிரயோசனம்; மலமலால் வேறு முண்டோ=சுவர்க்க நரக சுக துக்கங்கள் விளைவு தழை விட்ட பூமியிற் போலவர்கள் வயிற்றி லுண்டாய், நீ பொசிப்பதுண்டோ. (கஅ)

அதுவன்றியுந் திஷ்டாந்தமு விரோதமு முண்டென்று
செப்புகின்றார்.

திரவியமுவமையன்றுசெய்திக்கட்டிரவியங்கள்
விரவியவிடத்தேவீய்ந்துபலந்தருமிம்மையம்மை
பரவிநீபார்நீரங்கிப்பாத்திரத்திட்டவெல்லாங்
கரவிடுமிங்கேயெங்கேபலங்கொளக்கருதினாயே.

(இ-ள்). செய்திக்கண்=இருவினையாகியகுணப்பொருளில்; (செய்க்கிடுந்தழையுந் தின்னு மருந்துமென்று சொல்லிய) திரவியம்=குணிப்பொருள்; உவமையன்று=திருஷ்டாந்தமன்று; (வினையென்றுசொல்லவேண்டியதில்லை) திரவியங்கள்=தழைமருந்து முதலியனவும்; எள்ளு நெய் அன்னம் முதலியனவும்; விரவிய விடத்தே வீய்ந்து=தாங்கள் பொருந்திய விடத்தே கெட்டு; இம்மை அம்மை=பூமியிலும் சுவர்க்க நரகங்களிலும்; பலந்தரும்=பிரயோசனத்தைப் பண்ணும்; பரவி நீ பார்=பண்ணுமென்பது விசாரியாது சொன்னாய், நன்றாய் விசாரித்துப்பார்; நீரங்கி பாத்திரத்திட்டவெல்லாம்=நீரிலிட்ட திலதர்ப்பணமுதலானவும் அங்கியிலிட்ட ஆச்சியவோமாதி, பாத்திரத்திட்ட அன்னபானாதிதானம் இவைமுற்றும்; இங்கே=இந்த லோகத்திலேதானே; கரவிடும்=கெட்டுப்போம்; எங்கே=எப்படி; (சுவர்க்கநரகங்களிலே) பலங்கொளக் கருதினாயே=சுகமனுபவிக்கத்துணிந்தாய். (ககூ)

தன் மதத்திலே வந்து விழப்பண்ணித் தழுவிச் சாற்றுகின்ருர்.

செய்தவர்மனத்தேயெல்லாச்செய்தியுங்கிடந்துபின்ன
ரெய்தவேபலங்களீனுமென்றிடினிருஞ்சுவர்க்கம்
பொய்யர்வாழ்நரகம்பூமிபுந்தியிற்கிடந்துபோந்த
தையனேயழகிதுன்சொலிந்திரசாலமாய்த்தே.

(இ-ள்). எல்லாச் செய்தியும்=கன்மங்க ளெல்லாம்; செய்தவர் மனத்தே கிடந்து=கன்மம் பண்ணினவர்களது புத்தி தத்துவத்திலே தங்களால் வைக்கப்பட்ட சம்ஸ்கார ரூபமா யிருந்து; பின்னரெய்தவே பலங்களீனு மென்றிடில்=பிற்பாடு பொருந்தவே சுவர்க்க நரக பூமி சுக துக்கங்களை முதற் காரணமாய் நின்றுண்டாக்குமெனில்; (சுகதுக்க மோகங்களைப் போசக கன்ம நிமித்தமாக முதற்காரணமாய் போக்கிய கன்மங்க ளுண்டாக்கு மென்பது மாத்திரஞ் சத்தியம், அதுவன்றிப் போசக கன்ம நிமித்தமாய் மாயாகாரிய பூதங்களினுண்டாகும்); இருஞ் சுவர்க்கம் பொய்யர் வாழ் நரகம் பூமி; (இவைகள்) புந்தியிற்கிடந்து போந்த=புத்தி தத்துவத்தி லிவைகளைக் குறித்து நிமித்தகாரணமாகிய சம்ஸ்காரரூப கன்மங்களினின்றும் புறப்பட்டன; (என்னும்) உன்சொல்; ஐயனே=அப்பனே; அழகிது=மிகுதியும் நல்லது; இந்திர சாலமாய்த்தே=கடைசியிற் பொய்யாயிற்று. (உ0)

சத்தியம்; நீருமது வாக்காலும் போசக கன்மம் மாயாகாரிய முண்டாதற்கு நிமித்தகாரணமென்று சொன்னீர் அதனால், கன்மமே கர்த்தா வீசுரனொருவன் வேண்டு மென்ற விக் கற்பனை வேண்டா மென்ன வுத்தரமுரைக்கின்ருர்.

தானஞ்செய்பொருடரித்தோர்செய்தவர்தக்கசெய்தி
யூனம்பின்னுறவேகாண்டும்பலமுறுவிப்பான்வேண்டு
மீனமில்செய்திபிசனிடும்பணியிவைநாஞ்செய்தா
லூனங்களதிகநோக்கிநுகர்விப்பன்வினைநோய்தீர.

(இ-ள்). தானஞ்செய் பொருள் தரித்தோர்=தானத்திரவியம் வாங்கிஞேர்; செய்தவர்=தானத்திரவியங் கொடுத்த பெயரிவர்க ளிருவர்களுக்கு; தக்க செய்தி=யோக்கியமாகிய வாங்குதல் கொடுத்தற் கிரியைகள்; ஊனம்பின்னுறவே காண்டும்=நாசமுறக் காணுநிற்கின்ரும்;

(பின்னென்பது பின்னுங் கூட்டுக) பின்பல முறுவிப்பான் வேண்டும்= கெடுமுன் பலங்கொடுப்ப தில்லாமையினாற் காலாந்தரத்தில் வினைப்பலனாகிய சுகதுக்கங்களைக் கூட்டுவா னொரு கர்த்தா விரும்பப் படுவன்; மனோவாக்குக் காயங்களினாற் பிறக்குந் தூலகன்மங் கெட்டாலும் புத்தி தத்துவத்திற் கெடுமுற்சணம் அவைகளால் வைக்கப்பட்ட சம்ஸ்கார ரூப சூக்கும கன்மங்கள் பலபரியந்த மிருக்கு மவைகள் பலத்தை கொடுக்குமென்று முன் சொன்னோம், சத்தியம், சூக்கும கன்ம மிப்படியிருந்தாலும் அசேதன மாதலால், சுவதந்திரமாய் பலத்தைக்கொடாது; ஈனமில் செய்தி=புண்ணிய கன்மம்; ஈசனிடும்பணி=சிவன் பண்ணென்று கற்பித்தது, அதற்கு மாறுபாடாயிருக்கும் பாவத்தைப்பண்ணாதேயென்று கற்பித்தது;இவைநாஞ்செய்தால்=இந்தக்கிரியைகளை நாம்பண்ணினால்; ஞானங்க ளதிகம் நோக்கி=ஏற்றக் குறைகளைப் பார்த்து; வினைநோய்தீர=அந்த மனோவாக்குக் கிரியைகளால் புத்தி தத்துவத்தி லுண்டாகப்பட்ட வாசனாகார சூக்கும கன்மஞ் சுகதுக்க ரூபமாய்ப் பரிணமித்துப் புசிக்கப்பட்டுக் கெடும்படி; நுகர்விப்பன்=புசிப்பிப்பன். (உக)

கன்மத்துக்குச் சுவதந்திரம் இல்லாதிருந்தால் கன்ம கர்த்தா
வாகியபுருஷன்றானே பொருந்திப் புசிப்பனென்
பதனை மறுத் துணர்த்துகின்றார்.

உலகுடல்கரணங்காலமுறும்பலனியதிசெய்தி
பலவிவைகொண்டுகன்மம்பண்ணுவதுண்பதானு
னிலவிடாவிவைதான்சென்று நினைந்துயிர்நிறுத்திக்கொள்ளா
தலகிலாவறிவனாணையணைந்திடுமருளினாலே.

(இ-ள்). உலகு=புவனம்; உடல்=தூலசரீரம்; கரணம்=சூக்கும சரீரம்; காலம்=நிகழ்காலம்; உறும்பலன்=திரவியமுதலியவும்; சுகதுக்கங்களுமாம்; நியதி=சுகதுக்கங்களையு மிடமுதலியவற்றையும் நியமிக்கும் நியதி தத்துவம்;செய்தி=மனோவாக்குக்காயங்களினதுதொழிலாகிய தூலகன்மம்; பலவிவை கொண்டு=இவ்விடமுதலிய வெகு சாதனங்கள் கொண்டு; கன்மம் பண்ணுவ துண்பதானால்=புத்தி தத்துவத்தில் சம்ஸ்காரரூபசூக்கும கன்மத்தை யுண்டாக்குவது திரும்ப வது சுகதுக்கமாய்ப் பரிணமிக்க வதைப் புசிப்பனாகில்; நிலவிடா விவைதான் சென்று=சுவர்க்க நரகங்களில் போகம் புசிக்கு மிடத்து; இடமுதலிய விவைகள் தாமேயாய், உயிரையுறுது; உயிரும் நினைந்தவை நிறுத்திக்

கொள்ளாது=சங்கற்பித்தவைகளை யுண்டாக்கி அவைகளோடு கூடமாட்டாது; (ஆகையால்) அலகிலா வறிவனாணை யனைத்திடு மருளினாலே=சர்வஞ்ஞனாகிய சிவனது கிரியாசத்தி கிருபையினாலே சிருட்டித்துப் பொருத்தும். (உஉ)

தேவதாப்பிரசாதத்தினாலே சகலமும் வருவ
தென்று சாற்றுகின்றார்.

ஒழுக்கமன்பருளாசாரமுபசாரமுறவுசீலம்
வழுக்கிலாத்தவந்தானங்கள்வந்தித்தல்வணங்கல்வாய் [மை
யழுக்கிலாத்துறவடக்கமறிவொடர்ச்சித்தலாதி
யிழுக்கிலாவறங்களானாலிரங்குவான்பணியறங்கள்.

(இ-ள்). ஒழுக்கம்=அந்தந்தச் சாதியாசாரம் வழுவாது நடத்தல்; அன்பு=மாதா பிதா குரு தேவதாபத்தி; அருள்=சர்வான்மாக்களில் வைத்த விரக்கம்=ஆசாரம் வருணாச்சிரமங்களுக்கேற்ற சௌசாசமனாதிகள்; உபசாரம்=அதிதி சம்ஸ்காரம்; உறவு=ஞாதி முதலான பந்துக்களிடத்திலே சினேகம்; சீலம்=ஒரு நெறிப்பட்டுப் பிறரை யுபரஞ்சிப்பிக்குங் குணம்; வழுக்கிலாத்தவம்=சாந்திராயண முதலிய நியம விரதம்; தானங்கள்=சற்பாத்திரத்திற்றான் றேடிய பொருளைச் செலுத்தல்; வந்தித்தல்=குரு ஜனங்களை நமஸ்கரித்தல்; வணங்கல்=பெரியோரிடத்தில் தாழ்ந்த தன்மை காண்பித்தல்; வாய்மை=உள்ளது சொல்லுதல்; அழுக்கிலாத்துறவு=சர்வசங்கபரித்தியாகம்; அடக்கம்=குலங் கல்வி நிறைவாயிருந்தாலும் கர்வமற்றிருத்தல்; அறிவொடர்ச்சித்தல்=அவரவர் சாத்திர சூத்திரங்களினோதியபடி யவரவர் கொண்ட தேவதையைப் பூசித்தல்; ஆதி=இவை முதலானவை; இழுக்கிலா வறங்களானால்=குற்றமற்ற கன்மங்களாகச் சாத்திரங்கொண்டு நிச்சயிக்கப்படுமானால்; இரங்குவான் பணியறங்கள்=பரமேசுரன் கற்பித்த புண்ணிய கன்மங்கள் இவற்றிற்கு மாறாய் வருவன பாவகன்மங்கள். (உ௩)

ஆகையாலவரவர்கொண்ட தெய்வமே அவரவர் செய்யுங் கன்மங்கட்கு முன்னிலையாய் நின்று பலங்கொடுக்கும்; கன்மந்தானாய்ப் பலங் கொடாதென்று சாற்றுகின்றார்.

மனமதுநினையவாக்குவழுத்தமந்திரங்கள்சொல்ல
வினமலர்கையிற்கொண்டிங்கிச்சித்ததெய்வம்போற்றிச்

சினமுதலகற்றிவாழுஞ்செயலறமானுல்யார்க்கு
முனமொருதெய்வமெங்குஞ்செயற்குமுன்னிலையாமன்றே.

(இ-ள்). வெளிப்பொருள். (உச)

பரமேசுரன் கர்த்தாவென முன்படித்திப் போது பிரமா விஷ்ணு அருக தேவதை பௌத்ததேவதை இந்திரன் சந்திரன் சூரியன் முதலுள்ளோரில் ஓரொரு கர்த்தா ஓரொருவர்க்குக் கன்ம சாக்ஷியாய்க் கன்ம பலத்தைக்கொடுப்பானென்று சொல்லியதேதென ஏவுதற் கர்த்தா இயற்றுதற் கர்த்தாவென்னு முறைமையினுற் சொல்லியதென்று சொல்லுகின்றுர்.

யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியங்கே
மாதொருபாகனுர்தாம்வருவர்மற்றத்தெய்வங்கள்
வேதனைப்படும்பிறக்குமிறக்குமேல்வினையுஞ்செய்யு
மாதலாலிவையிலாதானறிந்தருள்செய்வனன்றே.

(இ-ள்). வேதனைப் படும் பிறக்கு மிறக்கு மேல்வினையுஞ் செய்யும் என்றது, பிரமாதிகளுக்குத் தாங்களிருந்த தானத்துக்கு உளர்த்துவ கதியன்றி யதோகதி யில்லாமையா லவர்க்கு ளற்பதெய்வங்க ளென்று பொருள். மற்றதுவெளிப்பொருள். (உரு)

எல்லாச் செய்திக்கும் சிவனே பரமகாரண
மென்ப துரைக்கின்றுர்.

இங்குநாஞ்சிலர்க்குப்பூசையியற்றினுலிவர்களோவந்
தங்குவான்றருவாரன்றேலத்தெய்வமத்தனைக்கா
ணெங்கும்வாழ்தெய்வமெல்லாமிறைவனுணையினுனிற்ப
தங்குநாஞ்செய்யுஞ்செய்திக்காணைவைப்பாலளிப்பன்.

(இ-ள்). இங்கு=இந்தலோகத்தில்; சிலர்க்கு=சில பிராமணருக்குச் சிலசங்கமர்க்கு; நாம் பூசை யியற்றினுல்=அன்னபான தாம்பூலாதிகள் தானம்பண்ணினுல்; இவர்களோ வந்தங்கு வான்றருவார்=இந்தப்பிராமணர்கள் சங்கமர்களோ சுவர்க்கசிவலோகங்களைத்தருவார்கள்; அன்றேல்=அல்லவாமென்று சொல்லில்; அத்தெய்வ மத்தனைக்காண் =அந்தத் தெய்வங்க ளந்தமரியாதி காண், (அஃதெப்படிச் சொன்னீ ரிவ்வுலகத்தில் ஐயன் துர்க்கை கணங்கள் பூசை கொண்டு பலங்கொடுப்

பதுகண்டோம் அவ்வுலகத்தும் பிரமேந்திராதிகள் பலங் கொடுப்பது கேட்டோம், சத்தியம்;) எங்கும் வாழ் தெய்வமெல்லாம்=இவ்வுலகத்திற் றெய்வங்களெல்லாம்; இறைவனாணையினானிற்பது=சிவனது சத்தியாலேவப்பட்டுக் கொண்டிருக்கும்; (ஆதலால்) அங்கு நாஞ் செய்யுஞ் செய்திக்கு=அந்தத் தெய்வங்களிடத்தில் நாம் பண்ணும் பூசைக்கு; ஆணைவைப்பால்=தனதாஞ்ஞா சத்திசெலுத்த லிசைவித்தலால்; பலங்களை; அளிப்பன் = அந்தத்தேவதைகளைக் கொண்டு கொடுப்பிப்பன். ()

அந்தத் திரமற்ற தேவதா பூஜாபலத்தையுஞ் சிவனே கொடுப்பவனாகையால் சிவ பூஜாபலந் திரமாதலாற் சிவ பூசையே செய்யவேணுமென்று செப்புகின்றார்.

காண்பவன்சிவனேயாகிலவனடிக்கன்புசெய்கை
மாண்பறமரன்றன்பாதமறந்துசெயறங்களெல்லாம்
வீண்செயலிறைவன்சொன்னவிதியறன்விருப்பொன்றில்லான்
பூண்டனன்வேண்டல்செய்யும்பூசனைபுரிந்துகொள்ளே.

(இ-ள்). காண்பவன் = பலமுண்டாக்குமவன்; விருப்பொன்றில்லான் = விருப்பில்லானாயினும்; பூண்டனன் வேண்டல் செயயும் = அனுக்கிரக நிமித்தியம் பூசைக்குட்பட்டவனாய் விருப்பஞ் செய்யும். வெளிப்பொருள். (உஎ)

அருவாகியசிவனைப் பூசிக்கும் வகை
போதிக்கின்றார்.

தாபரசங்கமங்களென்றிரண்டுருவினின்று
மாபரன்பூசைகொண்டுமன்னுயிர்க்கருளைவைப்ப
னீபரன்றன்னைநெஞ்சினினைவையேனிறைந்தபூசை
யாய்பரம்பொருளைநாளுமர்ச்சிநீயன்புசெய்தே.

(இ-ள்). தாபரம்=இலிங்கம்; சங்கமம்=சிவபத்தர்கள்; நீ பரன்றன்னை நெஞ்சினினைவையேல்=இருதயகமலத்திலே மனசை லயம்பண்ணிச் சிவசத்தியால் விளக்கப்பட்ட சிற்சத்தியாகிய மனசினாற் றியானம்பண்ணுமற் றியானம்பண்ணுவையாகில்; (அது) நிறைந்தபூசை=யோகபூசைசமாதியாய் அது ஞானபூசையுமாம்;(அதுவன்றி)ஆய்பரம்பொருளை=சிவாகம வாக்கியங்கொண்டு திரிபதார்த்த விவேகம்பண்ணிப் பசுபாச பதார்த்தத்தினின்றும் விலக்ஷணனாகத் தியான நிமித்த மறி; (அது

வும் நிறைந்தபூசை ஆதலால்) நாளுமர்ச்சி நீ யன்புசெய்தே—பத்தி யோடுங்கூடத் தினந்தோறுஞ் சொன்னபிரகாரங் கிரியாபூசையோக பூசை ஞானபூசைகளினாற் சிவனைப்பூசைபண்ணு. (உஅ)

நிரீச்சுரவாதியா யிருக்கின்ற மீமாம்சன் முதலோர்க்கும் சத்தமுதற் றேவதை கன்மசாக்ஷியாதலால் சிவனைத்தான் கன்மசாக்ஷியாய்ப் பண்ணிக்கொண்டு சிவனுக்கு மாறுபாடு மனசிலினையாமற் சிவனிடத் ததிகாரம்பெற்ற விஷ்ட தேவதாசாக்ஷியாகத் தான் பண்ணிக் கொண்டு பண்ணாத கன்ம பலங்கொடாது அப்படிப்பண்ணின கன்மம் பாவகன்மக்கலப்பானாலும் பலங்கொடுக்கு மென்பதற் குதாரணம்.

அரனடிக்கன்பர்செய்யும்பாவமுமறமதாகும்
பரனடிக்கன்பிலாதார் புண்ணியம்பாவமாகும்
வரமுடைத்தக்கன்செய்தமாவேள்விதீமையாகி
நரரினிற்பாலன்செய்தபாதகநன்மையாய்த்தே.

(இ-ள்). வெளிப்பொருள். (உக)

வேதாகம வாக்கியங்கள் பரம்பரையினாலும் சாக்ஷாத்தாகவும் சிவபணி விதிவாக்கியம் ஆதலால், அந்தப்பணி, விதிவழி நடப்போர்க்கும், நடவாதோர்க்கும் நிக்கிரகமனுக்கிரக மிதுவென்று நிகழ்த்துகின்றார்.

மறைகளீசன்சொல்லச்சொல்வழிவராவுயிரைவைக்குஞ்
சிறைகண்மாநிரயமிட்டபணிசெய்வோர்செல்வத்தோடு
முறையுமாபதிகளும்பருலகங்கள்யோனிக்கெல்லா
மிறைவனாணையினாலின்பத்துன்பங்களிசைவதாகும்.

(இ-ள்). வெளிப்பொருள். (௩0)

மேலதற்குக்காரணம்.

ஆணையாலவனிமன்னனருமறைமுறைசெய்யாரை
யாணையாற்றண்டஞ்செய்துமருஞ்சிறையிட்டுவைப்ப
னாணையின்வழிசெய்வோருக்கரும்பதிசெல்வநல்கி
யாணையும்வைப்பனெங்குமாணையேயாணையேகாண்.

(இ-ள்). ஆணையும் வைப்பன்—சிட்டர்களை அனுக்கிரகம் பண்ணுவோம் துஷ்டர்களை நிக்கிரகம் பண்ணுவோம் என்று தனதிடத்திருக்கு

மாஞ்ஞா சத்தி சாமர்த்தியத்தை யுலகத்துக் கறிவிப்பன் (இப்படி இராஜாவுக்கு நிக்கிரகானுக்கிரக கர்த்திருத்துவம் சொன்னாற் சிவனுக்குச் சர்வகர்த்திருத்துவம் எடுபட்டுப்போம் அது இல்லை) எங்குமாணையே யாணையேகாண்—இராஜாக்கள் முதலோரிடத்திருக்கு மாஞ்ஞாசத்தியே சிவனதாஞ்ஞா சத்தி. மற்றவை வெளிப்பொருள். (ருக)

அஃதேதினா லென்னச் சிவன தாஞ்ஞாசத்தி யவர்களதாஞ்ஞா சத்தியைவிடாது செலுத்திநிற்றலாலென்று செப்புகின்றார்.

அரசனுஞ்செய்வதீசனருள்வழியரும்பாவங்க
டரையுளோர்செய்யிற்றீயதண்டலின்வைத்துத்தண்டத்
துரைசெய்துதீர்ப்பன்பின்புசொல்வழிநடப்பர்தூயோர்
நிரயமுஞ்சேராரந்தநிரயமுநீர்மையீதாம்.

(இ-ள்). தண்டத்துரை—தண்டிக்கு மிடத்துக் குரூரவார்த்தை, (மனுசாத்திராதிவசனமுமாம்); நிரயமும் நீர்மையீதாம்—நரகத்திலுந் தண்டிக்குமுறைமையு மிராசதண்டனைபோல; இராசதண்டனைப் பட்ட பேர்க்கு நரக மில்லாமையால். மற்றதுவெளிப்பொருள். (ருஉ)

பின்னுமுதாகரிக்கின்றார்.

அருளினாலுரைத்தநூலின்வழிவாராதவன்மஞ்செய்யி
னிருளுலாநிரயத்துன்பத்திட்டிரும்பாவந்தீர்ப்பன்
பொருளுலாஞ்சுவர்க்கமாதிபோகத்தாற்புணியந்தீர்ப்பன்
மருளுலாமலங்கடீர்க்குமருந்திவைவைத்தியன்றான்.

(இ-ள்). அருளினாலுரைத்த நூல்—வேதாகமங்கள்; இருளுலா நிரயம்—அந்தகாரம் பொருந்திய நரகம்; மருளுலாமலம—மயக்கம் பொருந்திய பாவபுண்ணி யங்கள்; மருந்து—நரகசுவர்க்கம்; தான்—சிவன்றானே; வைத்தியன்—பண்டிதன். மற்றதுவெளிப்பொருள்.(ருரு)

வைத்தியனென்றதேதினாலென்ன வொப்புரைக்கின்றார்.

மருத்துவனுரைத்தநூலின்வழிவரிற்பிணிகள்வாரா
வருத்திடும்பிணிகடப்பிற்றப்பியவழியுஞ்செய்யத்
திருத்தினன்மருந்துசெய்யாதுறும்பிணிசென்றுந்தீப்ப
னுரைத்தநூற்சிவனுமின்னேயுறுங்கன்மமூட்டித்தீர்ப்பன்.

(இ-ள்). மருத்துவ னுரைத்த நூல்—வைத்தியசாத்திரம்; (தப்பிற் பிணிவருத்திடுமென்று மாறுக) உறுங்கன்மமூட்டித் தீர்ப்பன்—பிராயச்சித்தம் பண்ணுதவிடத்தேறின கன்மத்தைப் புசிப்பித்துத் தொலைப்பன். மற்றது வெளிப்பொருள். (ருச)

இன்பத் துன்ப மூட்டி யிருவினை தொலைத்தற் குதாரணம்.

மண்ணுளேசிலவியாதிமருத்துவனருத்தியோடுந்
திண்ணமாயறுத்துக்கீறித்தீர்த்திடுஞ்சிலநோயெல்லாங்
கண்ணியகட்டிபாலுங்கலந்துடன்கொடுத்துத்தீர்ப்ப
னண்ணலுமின்பத்துன்பமருத்தியேவினையறுப்பன்.

(இ-ள்). வெளிப்பொருள்.

கன்மபலத்தையனுபவிக்கு முறைமையை யறிவிக்கின்றார்.

பூதனாசரீரம்போனாற்புரியட்டதேகந்தானே
யாதனாசரீரமாகவின்பத்துன்பங்களெல்லா
நாதனாராணையுய்க்கநரகொடுசுவர்க்கந்துய்த்துத்
தீதிலாவணுவாயோனிசேர்ந்திடுஞ்சீவனெல்லாம்.

(இ-ள்). பூதனா சரீரம் போனால்—பஞ்சபூத பரிணாம சமுத்பூதமாகிய தூலசரீரம் விட்டால்; புரியட்ட தேகந்தானே—சூக்கும சரீரந்தானே; நாதனாராணையுய்க்க—சிவாஞ்ஞை செலுத்த; யாதனா சரீரமாக—பூதோத்பூத நரக சரீரத்தைத் தான்; பூதசாரசமுத்பூத சுவர்க்க சரீரத்தைத் தான்; பொருந்த—(அவற்றோடு) பொருந்தி; சீவனெல்லாம்—சகலான் மாக்களும்; இன்பத்துன்பங்களெல்லாம்—சுகதுக்கங்களனைத்தும்; நரகொடு சுவர்க்கந்துய்த்து—நரக சுவர்க்கங்களி னனுபவித்துப் பின்னந்த யாதனா சரீரம் விட்டு; தீதிலா வணுவா யோனி சேர்ந்திடும்—குற்றமற்ற சூக்கும தேகியாய்ப் பூலோகத்திற் பூதபரிணாம சமுத்பூத தூல தேகத்தில் வந்து பொருந்தும்;

இப்படியன்றி, யாதனா சரீரமாக வென்கின்ற பாடங் கொள்ளாமல், யாதனா சரீரமாகி யென்று பாடங் கொண்டாற் பொருளிசையாதென்பதறிக; புரியஷ்ட தேகந்தானே யாதனா சரீரமாக வென்பதற்குஞ் சுத்த மாயையில் அசுத்த மாயை தோன்று மென்னுஞ் சைவ

பவுராணிக மதானுசாரியாயிருக்கு மாசாரியர் கருத்துக்கு யாதனு சரீரமாய்ப் பரிணமிக்கவென்று பொருள் கொள்க; சுத்த சைவ சித்தாந்தியாகிய வாசாரியர் கருத்துக்கு யாதனு சரீரத்தைப் பொருத்த வென்று பொருள் கொள்க. (கசு)

சூக்கும தேகத்தோடுங் கூடிய வுயி ருடல்விட் டுடனுட னெடுக்கு மென்றுந் தூல சரீரத்துக் கேற்ற கன்மம் பரிபக்குவ மில்லாதிருந்தாற் சூக்கும சரீரத்தொடுங் கூடி யறிவின்றி யாகாசத்தைப்பற்றி யந்த ரான்மாவாயிருந்து கன்ம பரிபாகத்திற் காலாந்தரத்தி லுடலுறு மென்று முரைக்கின்றார்.

உடல்விடாயோனிபற்றியுதிப்பினுமுதிக்குமொன்றிற்
படர்வுறுதுறும்பாவத்தாற்பாடாணம்போற்கிடந்து
கடனதாங்காலஞ்சென்றுற்கடுநரகதனில்வீழ்ந்தங்
கிடருறுமுருவங்கன்மத்தளவினிலெடுக்குமன்றே.

(இ-ள்). வெளிப்பொருள் (கஎ)

தூலதேகம்விட்டுச் சூக்குமதேகத்தோடு போய்த் தூலதேகாந்தரத்தைப் பொருந்துதற் குவமை யுரைக்கின்றார்.

பன்னகமண்டசங்கள்பரகாயந்தன்னிற்பாய்வோர்
துன்னுதோன்முட்டையாக்கைதுறந்துசெல்வதுவேபோலத்
துன்னியவுயிர்கடூலவுடல்விட்டுவானினூடு
மன்னிடுநனவுமாறிக்கனவினைமருவுமாபோல்.

(இ-ள்). பன்னகம்=பாம்பு; அண்டசங்கள்=பக்ஷிகள்; பரகாயந் தன்னிற் பாய்வோர்=வேறொருவர் சரீரத்திற் பிரவேசிக்கும் யோகிகள், இவர்கட்குப் பொருந்திய தோல் முதலிய மூன்றும் நிரனிறையாகக்கொள்க. மற்றது வெளிப்பொருள். (கஅ)

கன்மசுவரூபங்காண்பிக்கின்றார்.

தன்மமோடதன்மமாகித்தானிருபயனுந்தந்து
நன்மைதீமையினுமின்பத்துன்பினுநாடிக்காண
முன்னமேயான்மாவின்றன்மும்மலத்தொன்றதாகிக்
கன்மமுமூலங்காட்டிக்கான்மியமலமாய்நிற்கும்.

(இ - ள்). தன்மமோடதன்மமாகி=பாவபுண்ணியமென் றிருவிதமாய்; திரும்பச் செனகம் தாரகம் போக்கியமென்று திரிவிதமாய்; திரும்பத் திருஷ்டபோக்கியம் அதிருஷ்டபோக்கியம் அநியதபோக்கியமென்று மூவிதமாய், திரும்ப ஆயுப்பிரதம் போகப்பிரதம் சாதிப்பிரதமென்று மூவிதமாய், திரும்பச் சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியமென்று மூவிதமாய், (பின்னுமனந்தவிதமாயிருக்குங் கன்மமானது); தா னிருபயனுந் தந்து=தான்முனே முதற்காரணமாயும், நிமித்த காரணனுகிய சிவனுக்குத் துணைக்காரணமாகிய நிமித்த காரணமுமாய், சுகதுக்கங்களை யுண்டாக்கித் (தான் பிரத்தியக்ஷமில்லாத பொருளாகையால்); நன்மை தீமையினு மின்பத்துன்பினும் நாடிக்காண=பேறிழவு சுகதுக்கமென்கின்ற காரியானு மனத்தா லனுமிதித்தறிய; முன்னமே யான்மாவின்றன் மும்மலத்தொன்றதாகி=அநாதியே ஆணவம் மாயேயம் கான்மியமென்கின்ற திரிமலத்தொன்றாய்; மூலங்காட்டி=தானு மவைகளைப்போலனுதி யென்பதைத் தோற்றுவித்து; கான்மிய மலமாய் நிற்கும். கன்மமென்கின்ற மலம் கான்மிய மலம். (ருக)

கன்மமானது மலமாயைகள் போலக் கூடத்த நித்திய வநாதியோ
மாயாகாரியம்போலப் பிரவாகா நித்திய வநாதியோவென்று
வினவப் பிரவாகானுதியென்று
பேசுகின்றார்.

இருவினையநாதியாதியியற்றலானுகர்வாலந்தம்
வருமலஞ்சார்ந்துமாயாவுருவுகண்மருவியார்த்துத்
தருசெயன்முறைமையாலேதான்பலபேதங்காட்டி
யருவதாய்நின்றரன்றனணையினமர்ந்துசெல்லும்.

(இ-ள்). இருவினையனுதி=சமுதாயத்தினுலே முற்கோடி பிற்கோடி காணப்படாதபடியினுலே; (கன்மம்) அநாதி; ஆதி இயற்றலால் நுகர்வாலந்தம் வரும்=தனித்தனி பண்ணப்படுகிறபடியினுலுங், புசிக்கப்பட்டுச் சில நாசமாதலானும், விஞ்ஞான கைவல்லிய மடைபவனைக் குறித்தும் முத்தி யடைபவனைக்குறித்தும் முற்றும் நாசமாதலானும், முற்கோடி பிற்கோடி காணலா லாதியுமாம் அந்தமுமாம். (ஆதலாற்பிரவாகானுதி); (அந்தக் கன்மம்) மலஞ்சார்ந்து=ஆணவ மலத்தோடும் பொருந்தி; மாயாவுருவு கண் மருவி யார்த்து=மாயா சரீரங்களை யுண்டாக்கியவைகளோடு பொருந்தி யந்தத் துவாரத்தினு லான்மாக்களைக் கட்டி; தருசெயல் முறைமையாலே=மனவாக்குக் காயங்களாலியற்றப்பட்ட

வியாபாரக் கிரமத்தினாலே; தான் பல பேதங் காட்டி = தா னருவாயிருந்தாலுந் தனது காணப்பட்ட மனாதி காரண பேதத்தினாலேயுந் தனது சுகாதிகாரிய பேதத்தினாலேயுந் தனது வைசித்திரியத்தைக் காண்பித்து; அருவதாய் நின்று = புத்தியி லதிஷ்ட வாசனையாயிருந்து பலத்துக்குப் போம்போது சடமாதலால் சுவதந்திரியப் பிரவிருத்தி யில்லாமையால்; அரன்ற னாணையி லமர்ந்து செல்லும் = சிவாஞ்ஞை செலுத்தப் புத்தியோடு நடக்கும். (௪0)

மேற்றத்துவ வாதி மதத்திலே, நரமிருக பசுபக்ஷி தாபராதிகள் சன்மத்துக் கீடாக வந்தந்த யோனிகளிலே மாறிப் பிறப்பதின்று; மனுஷர் முதலிய சாதிகள் மோக்ஷத்தானமாகிய வைகுண்டத்திலும் மாறாதென்பதை யேழு திருவிருத்தத்தினாலே நிராகரிக்கின்றார். பௌராணிகம் வெளிப்பொரு ளாதலால் அகலிகை கல்ல தானா ளென்ற திருவிருத்த மட்டாய்ப் பொருளாகித் துணர்ந்து கொள்க.

சங்கமந்தாபரங்கடத்தங்கன்மத்துக்கீடா
யங்குருயோனிமாறுமச்சுமாறாதிங்கென்னி
னிங்குமானுடரியற்றும்புண்ணியத்தின்பத்தீட்ட
மங்குவான்சுரர்களாயோநரர்களாயருந்துவாரோ. (௪க)

நரர்களாய்த்துய்ப்பரென்னினரர்பதிசுரருலோகஞ்
சுரர்களாய்த்துய்ப்பரென்னிற்சொன்னவச்சழியுமாகுஞ்
சுரர்களாய்ப்பலங்கடுய்த்துத்தாமிங்குத்தோன்றும்போது
நரர்களாய்ப்பிறப்பர்ஞாலத்தமரராய்நண்ணிடாரோ. (௪உ)

வண்டுகளாகிமாறுமயிர்க்குட்டிமற்றோர்சென்றுப்
பண்டையவுருவந்தானேவேட்டுவனாய்ப்பிறக்குங்
கண்டுகொள்யோனியெல்லாங்கன்மத்தான்மாறுமென்றே
கொண்டனசமயமெல்லாமிச்சொனீகொண்டதெங்கே. (௪௩)

அகலிகைகல்லதானாளரிபலபிறவியானான்
பகலவன்குலத்திற்றோன்றிப்பாரெலாமுழுதுமாண்டு
நிகரிலாவரசனாகுஞ்சிலந்திநீடுலகம்போற்றச்
சகமதிலெலிதானன்றோமாவலியாயினானே. (௪௪)

அகலிகைமுதலோர் சாபத்தாலுருமாறினர் சுபாவத்தினல் அல்லவென்ன வுத்தர முரைக்கின்ருர்.

செப்பிணுய்மாறவேறுசிலர்விதியாலேகன்மால்
வைப்புறும்யோனியெல்லாமாறிவந்திடாவிங்கென்னி
லெப்படியானுஞ்செய்திக்கிறைகரியாவனென்றே
முற்படமொழிந்தேனெல்லாமுதல்வன்றன்விதியேயாகும்.

(இ-ள்). சிலர் விதியாலே = சாபானுக்கிரகம்வல்ல சில பெயர் சாபத்தினுலும் வரத்தினுலு மாறி யோனிகள் பேதிக்க; வேறு செப்பிணுய் = கன்மத்தினுன் மாறுமென்று சொன்னீர்; கன்மால் வைப்புறு மியோனியெல்லாம் மாறிவந்திடா விங்கென்னில் = கன்ம நிமித்தமா யுண்டாகுஞ் சரீரங்களனைத்தும் பேதித்து வாராவென்று நீ சொல்லில்; எப்படியானுஞ் செய்திக்கு = சாபத்தினுலே மாறுதலுக்குங் கன்மத்தினுலே மாறுதலுக்கும்; இறைகரியாவனென்றே முற்பட மொழிந்தேன் = ஈசுவரன் சாட்சியென்று முன்னமேசொன்னேம் (ஈசுவராஞ்ஞையினுற் கன்மவேதுவாகச் சபிக்கும் பேர் சபித்தலால் வரங்கொடுக்கும் பெயர் வரங்கொடுத்தலால்); எல்லாம் = யோனிமாறுதல் முதலனைத்தும்; முதல்வன்றன் விதியேயாகும் = கன்மானு சார வீசுர சங்கற்ப காரியமாமே.()

சிவன் செயலாற் சீவன் கன்ம மிரண்டும் பொருந்தி யுருமாறுதல் முதல் பலத்துக் குபயோகங்களாமென் றுரைக்கின்ருர்.

அவ்வவயோனிதோறுமவ்வவவுலகந்தோறுஞ்
செவ்விதினறிந்துகன்மஞ்சேர்த்திடாசீவன்சேரா
விவ்வகைதம்மிற்சேர்வுமிறைசெயலானுற்செய்த
வெவ்வுருவுந்தன்கன்மாலியற்றுவனிறைவன்ருனே.

(இ-ள்). அவ்வவ வுலகந் தோறும் = பூலோக முதலிய புவனங்கடோறும்; அவ்வவ யோனி தோறும் = அந்தந்தப் புவனத் துதிக்குந் தேகங்க டோறும்; செவ்விதினறிந்து = மாறுபாடின்றிப் புத்திபண்ணி; (கன்ம மறிவின்மையால் சீவனைச்) சேர்த்திடா = சீவனைப் பொருத்தா; (சேர்ந்திடா வென்று பாடமோதிற் கன்மந்தானே போகம் புசிப்பவனுகுஞ் சீவனைப் பொருந்தாது சீவன் சிற்றறி வாகையா லவைகளை யறிந்து) சேரா = பொருந்தா; இவ்வகை தம்மிற் சேர்வும் = (சேர்ந்

திடா வென்ற பாடத்தால்) இந்த முறைமை யொன்றுக் கொன்று சீவ சரீரங்கள் பொருந்துதலுஞ் சீவ கன்மங்கள் பொருந்துதலும் சரீர கன்மங்கள் காரிய காரணமாய்ப் பொருந்துதலும்; இறைசெய லானல் =சிவன் செலுத்த வுண்டாமானல்; செய்த வெவ்வுருவும்= பண்ணப் பட்ட வடிவங்களெல்லாம்; தங்கன்மால்=அவரவர் பண்ணின கன்மத் துக் கிடாக; இயற்றுவ னிறைவன்றனே=சிவன் றனே பண்ணுவன்.()

உருமாறுத லொத்துக்கொண்டு மாறி வருவதற்கு முதற்காரண மேதெ ன்னச் சைவ பவுராணிக மதானுசாரியர்களா யிருக்கின்ற வாசாரி யர்கள் மதத்தினு லுத்தர முரைக்கின்றார்.

மாறியிவ்வுருவமெல்லாம்வருவதெங்கேநின்றென்னிற்
கூறியசூக்குமத்தாமுருவெனிற்குறியொன்றென்னில்
வேறொருகுறியாமாரம்வீரசங்கிலியுமாகுந்
தேறுநீயொருவனலிச்செயலெலாஞ்சிவனலாகும்.

(இ-ள்). மாறி யிவ்வுருவமெல்லாம் வருவதெங்கே நின்றென்னில் =இந்தச் சுரர் நரர் பசு மிருக பக்ஷி ரூபமாயிருக்குந் தூல தேகங்கள் மாறி மாறி வருதற்கு முதற்காரண மேதென்று நீ கேட்கின்றயானல்; கூறிய சூக்குமத்தா முருவெனில்=சொல்லிய சூக்கும தேகத்திலே நின்றும் தூலதேக முண்டா மென்று நீர் சொல்லில்; குறி யொன்றென் னில்=சூக்கும தேகத்தில் வைசித்திரிய மில்லாமையாற் றூல தேகங் களிலும் வைசித்திரிய மில்லாதே போமென்று நீர் சொல்லில்; (பொற் பொருளாகிய வொரு முதற் காரணத்தி னின்று) வேறொரு குறியா மா ரம் வீரசங்கிலியும் ஒருவனு லாகும்=வேறொரு குறியாம் பதக்கமும் வீரசங்கலியுஞ் சரப்பளியு மொருவன லுண்டாகும்; தேறுநீ=தெளிந் தறி; இச்செயலெலாம்=இந்தக் காரிய வைசித்திரியமும்; சிவனு லா கும்= பரமேசுவரனு லுண்டாம். (சஎ)

பால் தயிரானதுபோலச் சூக்குமதேகந் தூலதேகமாய்ப் பரிணமித்துக் கெடுமோவென்னக் கெடாதென் றுணர்த்துகின்றார்.

சூக்குமங்கெட்டுத்தூலந்தோன்றிடாசூக்குமத்தி
னுக்கியோருடல்கிடப்பதின்றுடலாக்குந்தன்மைக்
கோக்கியசத்தியுண்டாயுடறருங்காலமுற்றுங்
நீக்கிடமரம்பின்வேரோர்நீண்மரநிகழ்த்துமாபோல.

(இ-ள்). சூக்குமங்கெட்டுத் தூலந்தோன்றிடா=சூக்கும சரீரம் முற்றுந் திரிந்து தூலசரீரமாகா; சூக்குமத்தினுக்கியோருடல் கிடப்பதின்று=தாய் சரீரத்திற் பிள்ளை சரீரம் போலச் சூக்கும சரீரத்துட் டூல சரீரம் பரிணமித்திருந்துண்டாவதில்லை; உடலாக்குந் தன்மைக்கோக்கிய சத்தியுண்டாயுடறரும்=தூலசரீரமாக்குதற்கருகமாகிய சாமார்த்தியம் சூக்கும சரீரத்துக்குள்ளதாய்ச் சூக்கும சரீரந் தூல சரீரத்தையுண்டாக்கும்; காலமுற்றும்=காலந்தோறும்; நீக்கிட மரம்=விருக்ஷத்தைச் சேதிக்க; பின்வேர்=அந்த விருக்ஷமூலம்; ஓர் நீண்மரம் நிகழ்த்துமாபோல்=மற்றொரு நீண்டமரத்தையுண்டாக்குவது போல.

மேலுமதற்கோர்புறனடை.

விதிப்படிசூக்குமத்தேயுருவரும்வினையாலிங்கே
யுதித்திடாவுருவமாகவுருவருமரங்கள்வித்திற்
கதித்தெழுமரமும்வித்துங்கழியும்பின்னழியுஞ்சூக்க
மதிக்கெழுகலைகள்பொலவருவதுபோவதாமே.

(இ-ள்). விதிப்படி சூக்குமத்தேயுரு வரும் வினையால்=கன்மானுசாரமாய்ச் சிவ சங்கற்பத்தின்படி சூக்கும தேகத்தினின்றுந் தூல சரீரமுண்டாம்; உதித்திடாவுருவமாக=சூக்கும சரீரந்தானே திரிந்து தூல சரீரமாகா; இங்கே யுருவரும் மரங்கள் வித்திற் கதித்தெழும்=இவ்விடத்து வடிவுள்ள விருக்ஷங்கள் பீசத்தி லுண்டாம்; (அந்த) மரமும் வித்துங் கழியும்; (அப்படிச்) சூக்குமம் பின்னழியும்=சூக்கும தேக முருக்குன்றிக் கெட்டுப்போம்; (ஆனு லப்படி யன்று) மதிக்கெழு கலைகள் போல வருவது போவ தாமே=சூக்கும சரீரத்தினின்றும் தூலசரீரங்கள் ஒரு கலையாய்ச் சேடித்த சந்திரனிடத்தே நின்று முதிக்கும் மற்றுள்ள கலைகள் போல உண்டாய்த்தானே கெடும். (சஅ)

காரண பரம்பரை யந்தச் சைவ பவுராணிக மதானுசாரி
யாசாரியர்கள் மதத்தினுற்றுனே
காண்பிக்கின்றுர்.

தூலமாமுருவினுக்குச்சூக்குமமுதலதற்கு
மூலமானதற்குமூலமோகினியதன்முதற்றுன்
மேலதாம்விந்துச்சத்திசிவமிவைமிசையாமெல்லாஞ்
சாலவின்றுகுமான்மாச்சிவத்தினைச்சார்ந்தபோது.

(இ-ள்). தூலமா முருவினுக்குச் சூக்கும முதல்=தூல தேகத்திற்குச் சூக்குமதேகம் முதற்காரணம்; அதற்கு மூலமான்=அந்தச் சூக்குமதேகத்திற்கு முதற்காரணம் பிரகிருதி; (தன்மாத்திரையும் மனம் புத்தி ஆங்காரமுமாக எட்டென்னும் வசனத்துக்குப் பிரகிருதி முதற்காரணம்; எட்டுக் கொத்தென்று கொள்ளு மிடத்துப் பூதக்கொத்து, தன்மாத்திரைக் கொத்து, கன்மேந்திரியக் கொத்து, ஞானேந்திரியக் கொத்து, அந்தக்கரணக்கொத்து, குணக்கொத்து, பிரகிருதிக்கொத்து, கலாதிக் கொத்து ஆக எட்டும் புரியட்டகமென்று கொள்ளுமிடத்துப் பிரகிருதி மாயை இரண்டும் முதற் காரண மென வறிக.) அதற்கு மூலமோகினி=அந்தப்பிரகிருதிக்கு முதற்காரணம் அசுத்த மாயை; அதன் முதற்றான் மேலதாம் விந்து=அந்த அசுத்த மாயைக்கு முதற்காரணம் உபரிவிரியும் சுத்தமாயை; சத்தி சிவ மிவை மிசையாம்=அந்தச் சுத்த மாயையைச் செலுத்தும் பராசத்தியும் பராசத்தியைச் செலுத்தும் பரசிவமும் மேலாய் விரியும்; எல்லாம்=இப்போது சொல்லிய பிரபஞ்ச பிரபஞ்சிகளெல்லாம்; ஆன்மாச் சிவத்தினைச் சார்ந்தபோது=தனது சொரூபமாகிய சிவத்துவாபி வியத்தியைப் பெற்றபோது; சாலவின்றுகும்=பந்திப்பிக்கும் முறைமை விட்டிருக்கும் (மதங்க பரமேசுரத்திற் சிவத்துவம் பெற்ற முத்தான்மாவைக் குறித்துச் சிவன் பிரேரகரல்லர்; சிவனைக்குறித்தவனும் பிரேரிய னல்ல னென்று பேசப்பட்டது.)

"பச்சாத்தத்தேசிவத்வேணோஃ, காரணத்வேநகாரணம்;
நதம்பிரதிகதாசித்ஸ்யாத், ஸோபிகார்யத்வ கோசராத்;
அதீதஃ பரிபூர்ணச்ச ஸ்வதந்திரஸ் ஸர்வதோமுக:" என்று. (௩௦)

சிவன் சத்தியால் மாயாகாரியங்களைக் கொடுத்து மல கன்மங்களைப்
போக்கி யநுக்கிரகம் பண்ணுகின்றதைக்
காண்பிக்கின்றார்.

அரன்விதியருளதென்றேயறைந்தனமதுவுமுன்னே
தராநரகருந்துறக்கந்தனுகரணதியெல்லாம்
வருவதுஞ்செய்தணுதிமலங்களிம்மருந்தாற்றீர்த்துப்
பரகதியதுவுந்தந்துபாதபங்கயமுஞ்சூட்டும்

(இ-ள்). அரன் விதி=பதிபஞ்சகிருத்தியம்; அருள தென்றே முன்னேயறைந்தனம்=அந்தச் சிவனது பஞ்சகிருத்தியம் நிக்கிரக ரூபமாயிருக்கின்றது மநுக்கிரகந்தானே யென்று முன்படலத்திற் பதிபரீக்ஷை

யிற் சொன்னேம்; (அப்படியே) அதுவும்=அந்த வருளுந் தொழிலும்; தரை நரகருந்துறக்கந் தனுகரணாதி யெல்லாம்=தங்களது கலப்பினுலே மல பரிபாகத்தைப் பண்ணுஞ் சூக்கும தேகந் தூலதேக முதலிய மாயா காரியங்களை; வருவதுஞ்செய்து=மாயையினின்று முண்டாக்கி; இம் மருந்தால்=இந்த மாயாகாரியமாகிய அவுடதத்தால்; அனுதி மலங்கள் தீர்த்து=மலமாயா கன்மங்களைப்போக்கி; பரகதி யதுவுந் தந்து=பரத் திலே யோசித்து; பாதபங்கயமுஞ் சூட்டும்=சிவத்துவாபி வியத்தி யையுஞ் செய்வன்.

மாயாகாரியத்தால் மலத்தைப் போக்குமென்ப
தடாதென்ன வடுக்குமென் றுரைகின்றார்.

எழுமுடல்கரணமாதியிவைமலமலமலத்தாற்
கழுவுவனென்றுசொன்னகாரணமென்னையென்னிற்
செழுநவவறுவைசாணியுவர்செறிவித்தழுக்கை
முழுவதுங்கழிப்பன்மாயைகொடுமலமொழிப்பன்முன்னேன்

(இ-ள்). எழுமுடல் கரணமாதி யிவை மலம்—மாயையினுண்டா கிய தனுகரணாதிகளெல்லா மழுக்கு; மலமலத்தாற் கழுவுவனென்று சொன்னகாரணமென்னை யென்னில்—ஆணவமலமாகியவழுக்கைமாயா மலமாகிய வழுக்கினுற் போக்குவனென் றுரைத்த நிமித்த மேதென் னில்; செழுநவ வறுவை சாணி யுவர் செறிவித்து—அழகிய கோடிப் புடைவையிற் சாணியுவர் மண் முதலியவற்றைப் பிசறி; அழுக்கை முழுதுங் கழிப்பன்—புடைவையின் முன்னிருந்த தோஷத்தோ டாகந் துக தோஷம் முற்றுங் காருவனீக்குவன்; (அப்படி) மாயைகொடு—மாயாமலத்தினுல்; முன்னேன்—சிவன்; மலம்—ஆணவமலத்தை; ஒழிப் பன். (ருஉ)

ஆனுல் அசுத்த மாயையினிலக்கணமே
தென்னவிசைக்கின்றார்.

நித்தமாயருவாயேகநிலையதாயகிலத்துக்கோர்
வித்துமாயசித்தாயெங்கும்வியாபியாய்விமலனுக்கோர்
சத்தியாய்ப்புவனபோகந்தனுகரணமுமுயிர்க்காய்
வைத்ததோர்மலமாய்மாயைமயக்கமுஞ்செய்யுமன்றே.

(இ-ள்). நித்தமாய்=காரிய காரணங்களிரண்டும் அநித்தியமென்னும் பௌத்தனுக்குப் போ லநித்தியமின்றி; அருவாய்=உருவாகிய பரமா

னுவே காரணமென்னும் நையாயிகனுக்குப் போலுருவமன்றி; ஏகநிலைய தாய்—மாயை யனந்த மென்றும் சத்தென்றுஞ் சொல்லும் வேதாந் தைகதேசிக்கும் சுத்த வேதாந்திகட்கும் போல முறைமையினனேகமி ன்றியசத்துமின்றி; அகிலத்துக் கோர்வித்துமாய்—சூனியோபாதானம் சூனியம் பிரபஞ்சமென்னும்பவுத்தைகதேசிக்குப்போலச்சூனியமின்றி; அசித்தாய்—சித்பிரமோ பாதானத்தி னின்றும் சடசித் துற்பத்தியா மென்னும் பரிணதவேதாந்திக்கும் நாராயணப்பிரகிருதியினின்றுஞ் சட சித்துண்டாமென்னும் பாஞ்சராத்திரிக்கும் போலச் சித்தன்றி; எங்கும் வியாபியாய்—கண்ணுக்குத் தோற்றிய பூதகாரண மென்னு முலோ காயதனுக்குப்போல அவ்வியாபியன்றி; விமலனுக்கோர் சத்தியாய்— சிவனுக்குச்சமவேத சிற்சத்தியொன்று பரிக்கிரக சடசத்தியிரண்டு ஆக மூன்றினுள்ளொரு பரிக்கிரக சடசத்தியாய்; புவனபோகந்தனுகர ணமு முயிர்க்காய் வைத்ததோர் மலமாய்—புரபோக்கியப் பொருள்க ளையும் தூலசரீரங்களையு மிலக்கணையாலவைகளாலுண்டாகிய சிற்றறி வையுங்கொடுத்த மாயாமலமாய்; மாயைமயக்கமுஞ் செய்யுமன்றே— மாயையானது அந்தச் சிற்றறிவைப்பற்றி நான் துக்கி நான் மோகி யென்று வரும் விபரீதஞானத்தையுமுயிர்க்குப்பண்ணுந்தானே. (ருரு)

மாயையி னின்றும் தத்துவங்களினது தோற்றமுந்
தொழிலு முரைக்கின்றார்.

மாயையிற்காலமோடுநியதிபின்கலாதிதோன்று
மாயவக்காலமூன்றுமாக்கியுமளித்தும்போக்கிக்
காயமோடுலகுக்கெல்லாங்காலசங்கையினைப்பண்ணி
நாயகனாணையாலேநடத்திடுஞ்சகத்தையெல்லாம்.

(இ-ள்). மாயையிற் காலமோடு நியதிபின் கலாதி தோன்றும்= சுத்தமாயையிற் சிவன் சிருஷ்டித்த நாதபந்தத்தின் பின் பந்தமாயனந் தேசுர சத்தி கலக்கிய மாயையி னின்றும் கால தத்துவம் நியதி தத்து வம் கலா தத்துவம் பிறக்கும்; (ஆதி யென்றதனாற் புருட தத்துவமு முண்டாம்; முன் மானதப் பிரத்தியக்ஷப் பிரஸ்தாபத்திலே தத்து வங்களினது வியாபாரக்கிரமம் விஸ்தரிக்கப்பட்டது; இப்போ துற்பத் திக் கிரம மாசாரியர் தானே யுரைக்கின்றார்.) ஆயவக்காலம்=சூக்கும தேகத்துள் ளசாதாரணமாயிருக்குங் கால தத்துவம்; (புறம்பிற் சாதா ரண கால தத்துவத்தினது விர்த்தி துடி முதலிய கலைகளை முன்னிட்டுக் கொண்டு போக்கியப் பொருளிற் போகத்தின் பொருட் டியிலைரச் செ

னுத்தி மகாப் பிரளய பரியந்த மிருக்கும் புறம்பிற் சாதாரண காலம்) மூன்ருயாக்கியு மளித்தும் போக்கி=போகாவதி பரிச்சேதகமாய்த் துடி லவை காட்டாதி காரிய கலா பேதத்தினுலே செல்காலம் வருகால மிரண்டின் மத்தியத்தி னிசழ்கால மாயுஞ் சரீர முதலிய தாத்துவிகப் பொருள்களினது ஈறு தோற்றல் நிற்றல் நிமித்தமாய் நிற்குங் காலதத் துவத்தோற்றத்திலுங் காலம் வேண்டில னவத்தை வருமாதலாற் றத் துவத் தோற்றத்திற் காலம் நிமித்த மன்று. திதியை நியமிக்குங் கால தத்துவம்போலச் சங்காரத்தை நியமிக்குங் கலையித்திரி யென்கின்ற சங்கார சத்தியே தத்துவத் தோற்றத்தில் நிமித்தியமாய்; காயமோ டுலகுக்கெல்லாம்=தனு கரண புவன போகங்கட்கு; காலசங்கையினைப் பண்ணி=ஏகமுதற் பரார்த்த பரியந்த கால வெண்ணிக்கையை யுண் டாக்கி; நாயகனுணையாலே=சிவாஞ்ஞையினு லேவப்பட்ட கால தேவ தையினுலே யதிஷ்டிக்கப்பட்டு; நடத்திடுஞ் சகத்தையெல்லாம்=சட சித்துக்க ளனைத்தையு முற்பத்தி யோக்கியத்தை யுற்பத்தி பண்ணிச் செலுத்தும். (௫௪)

நியதி முதலியவற்றினது தொழிலை நிச்சயிக்கின்ருர்.

நியதிபின்ருேன்றிக்கன்மநிச்சயம்பண்ணிநிற்கு
மயர்விலாக்கலைபின்ருேன்றியாணவமொதுக்கிச்சித்தின்
செயல்புரிகிரியாசத்திதெரிவிக்குஞ்சிறிதேவித்தை
யுயர்கலையதனிற்ருேன்றியறிவினையுதிக்கப்பண்ணும்.

(இ-ள்). நியதி பின்ருேன்றி=பின்பு மாயையி னின்றும் நியதி தத் துவ முண்டாய்; கன்ம நிச்சயம்பண்ணி நிற்கும்=தனது கன்ம பலமா கிய சுகதுக்கங்களை பிறர் நியதி சம்பந்திப் பிறர் புசியாமற் பிற ரவை களைத் தனது சம்பந்தியா யிருக்கின்ற வான்மாப் புசியாமல் வரையறை பண்ணி நிற்கும்; அயர்விலாக் கலைபின்ருேன்றி யாணவ மொதுக்கிச் சித் தின் செயல் புரி கிரியா சத்தி தெரிவிக்கும்=பின்பு பிரகாசமான கலா தத்துவம் மாயையி னுண்டாய் ஒரு பிரதேசத்திலே மலசத்தி வியாபா ரத்தை மறைத்து ஆன்மாவினது புறப்பொரு ளறிவாகிய ஞானக்கிரியா திக்கமாய்ச் சற்றே விளக்கித் திரும்பித் தற்பொரு ளறிவாகிய சத்திமத் கர்த்தாவைப் பொருந்திக் கர்த்திரு காரக மென்று பேர் பெற்று நிற் கும்; வித்தை யுயர் கலை யதனிற்ருேன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும் =பின்பு வித்தியா தத்துவங் கலா தத்துவத்தி லுண்டாய்க் கலையினு லொரு பிரகாரம் விளக்கப்பட்ட ஞான சத்தி வியாபாரத்தை மலவாச

ளை போக்கி விளக்கிப் புறப்பொருளறிவாகிய சத்தி கரணத்தைப் பொருந்திக் கரண காரக மென்று பெயர் பெற்று நிற்கும். (ருரு)

இராக தத்துவத்தினது சமுற்பத்தி வியாபாரம் விளம்புகின்றார்.

விச்சையிலிராகந்தோன்றிவினைவழிபோகத்தின்க
ணிச்சையைப்பண்ணிநிற்குந்தொழிலறிவிச்சைமூன்றும்
வச்சபோதிச்சாஞானக்கிரியைமுன்மருவியான்மா
நிச்சயபுருடனுகிப்பொதுமையினிற்பனன்றே.

(இ-ள்) விச்சையிலிராகந்தோன்றி=கலாதத்துவத்திலே நின்றுந் தானே வித்தியா தத்துவத்தோ டொத் தேக காலத்தி லிராக தத்துவ முண்டாய்; வினைவழி=கன்மத்தை முன்னிட்டு; போகத்தின் கணிச்சையைப்பண்ணி நிற்கும்=போக்கியப் பொருள்களிலே சிறப்பு விருப்பத்தைப் புத்திக்கே தாரகம் பண்ணு மாதலாற் பொதுவிருப்பமாகிய விச்சாசத்தி வியாபாரத்தை விளக்கிக் கரண காரக மென்று பெயர்பெற்று நிற்கும்; தொழிலறிவிச்சை மூன்றும்=கிரியைமுதலாகிய மூன்று வியாபாரங்களையுங் கலைமுதலிய மூன்று தத்துவமும்; வச்சபோது=விளக்கினவிடத்து; இச்சாஞானக்கிரியை முன் மருவி=காலமுதலிராக முடிவாகிய பஞ்சகஞ்சுகனாய் அவித்தை அஸ்மித இராகம் துவேஷம் அபிநிவேச மென்கின்ற பும்ஸ்துவ மலசித்த மலப்பெயர்ப் பஞ்சக்கிலேசியாய்; ஆன்மாநிச்சய புருடனுகிப் பொதுமையி னிற்பனன்றே= போத்தாவாய்ப் போகோன் முகனாய்ப் புருடதத்துவ மென்று பெயர் பெற்று நிற்பன்; (முன்சொன்னகால நியதி தத்துவங்களினது வியாபார மிராகதத்துவ வியாபாரத்தின் பின்னெனவறிக) அவ்விரண்டும் பிரதானமாதலால் கர்த்திருகாரகமென் றுபசரிக்கப்படும். (ருசு)

பிரகிருதி தத்துவோற்பத்தியைப் பேசுகின்றார்.

வருங்குணவடிவாய்மூலப்பிரகிருதிகலையிற்றோன்றித்
தருங்குணமூன்றாயொன்றிற்றான்மூன்றாய்மும்மூன்றாகு
மிருங்குணரூபமாகியிசைந்திடுமெங்குமான்மாப்
பெருங்குணவடிவாய்ப்போகசாதனப்பெத்தமாமே.

(இ-ள்). வருங்குணவடிவாய்மூலப் பிரகிருதி கலையிற் றோன்றி= தனதிடத்தி லபிவியத்தமா யுண்டாகு மனபிவியத்த குண ரூபமாய்க்

கலாதத்துவத்திலுண்டாய்; தருங்குணம்=குணதத்துவத்தை யுண்டாக்கு மந்தக்குணம்; மூன்ருய்=சாத்துவிக ராசத தாமத மென்று மூன்று பிரகாரமாய்; (திரும்ப) ஒன்றிற்ருன் மூன்ருய் மும்மூன்ருகும்=சாத்துவிகத்திற் சாத்துவிகம், சாத்துவிகத்தி லிராசதம், சத்துவிகத்திற்ருமதம், இம்முறைமையி லொன்பதாகி; இருங்குண ரூபமாகி யிசைந்திடு மெங்குமான்மா=எவ்விடத்தும்போக்கியப் பொருள்களிற் பிரவிர்த்தி மாணுகிய வான்மாப் பெரிதாகிய குணவடிவாகிப் போக்கியப் பொருள்களோடு பொருந்தும்; (அப்படி) பெருங்குண வடிவாய்ப் போக சாதனப் பெத்தமாமே=கலைமுதற் பூதாந்தமான போகோபாயங்களினுற் கட்டப்படும்; சாத்துவிசகுண வியாபாரம் பிரகாச முதலியன; இராசதகுண வியாபாரம் பிரவிர்த்தி முதலியன. தாமதகுண வியாபாரம் நியமமென்கின்ற நிவிர்த்தி முதலியன. இவைகளை ஸ்ரீமன். மதங்க முதலிய வாகமங்களிற் கேட்டறிக. (ருள)

சித்த தத்துவம் புத்திதத்துவ மிரண்டினது மற்பத்தி
வியாபாரங்களை உரைக்கின்ருர்.

சித்தமாயவ்வியத்தஞ்சிந்தனையதுவுஞ்செய்யும்
புத்தியவ்வியத்திற்ருேன்றிப்புண்ணியபாவஞ்சார்ந்து
வத்துநிச்சயமும்பண்ணிவருஞ்சுகதுக்கமோகப்
பித்தினின்மயங்கிஞானக்கிரியையும்பேணிநிற்கும்.

(இ-ள்). சித்தமாயவ் வியத்தம் சிந்தனை யதுவுஞ்செய்யும்=குணத்துவாரத்தினுலே பிரகிருதி மனசினதவஸ்தா விசேஷமாகிய சித்தமாய் வித்தையினுல் இந்திரியத்துவாரத்தால் திருஷ்டமாயிருக்கின்ற போக்கியப்பொருள்களிலொன்றைத் தூக்கி மனத்துக்குச்சங்கற்பிக்கும் பொருட்டுக்கொடுக்கும், மனசு சங்கற்பித்து ஆங்காரத்தைக்கொண் டபிமானிப்பித்துப் புத்தியைக்கொண்டு நிச்சயம்பண்ணிவிக்குமாதலாற் பிரகிருதி குணத்துவாரத்தினுற் சித்தமாய்ப் பரிணமித்து ஒருபொருளைத்தூக்கிச் சிந்திக்கும், மனசு வகங்காரத்தினுலுண்டாகியதானுலு மகங்காரத்தின தபிமானத்துக்கும் புத்தியினது நிச்சயத்துக்கு முந்த விஃதின்னதாகவேண்டுமென்று சங்கற்பிக்கும்; புத்தியவ்வித்திற்ருேன்றி=புத்தி தத்துவம் பிரகிருதியினுண்டான குணதத்துவத்திலுண்டாய்; புண்ணிய பாவஞ்சார்ந்து=பாவபுண்ணியத்துக்கேற்ப; வத்து நிச்சயமும் பண்ணி=மாலை சந்தனம் மசளிர் பாம்பு முள்ளு நஞ்சுதிரமுதலிய பொருள்

களை யகங்கார விருத்திக்குப் பின்னாறுதியிட்டு; வருஞ்சுகதுக்கமோகப் பித்தினின்மயங்கி=அந்தப்போக்கியப் பொருள்களுக்கேற்ப வுண்டாஞ் சுகதுக்க மோக ரூபத்தினாலே பரிணமித்து; ஞானக்கிரியையும் பேணி நிற்கும்—வித்தியா தத்துவத்தினால் விளக்கப்பட்ட சிற்சத்தியினது ஞானரூபபோகக் கிரியானுபவத்துக்கு விஷயமாயனுபவிக்கப்பட்டிருக்கும். (ருஅ)

ஆங்காரத் தோற்றந்தொழில்களை யறிவிக்கின்றார்.

ஆங்காரம்புத்தியின்கணுதித்தகந்தைக்குவித்தா
யீங்கார்தானென்னோடொப்பாரொன்றியானென்னதென்றே
நீங்காதேநிற்குந்தானுமூன்றதாய்நிகழுமென்பர்
பாங்கார்பூதாதிவைகாரிகந்தைசதந்தானென்றே.

(இ-ள்). ஆங்காரம் புத்தியின்கணுதித்து—ஆங்காரதத்துவஞ்சாத்துவீசகுணாதிக்கமா யிருக்கின்ற புத்தியினின்று மிராசத குணாதிக்கமாயுற்பவித்து; அகந்தைக்குவித்தாய்—விஷயபராமரிச புத்திபோதத்துக்கு வேறாகிய ஆன்ம பராமரிசபோதகாரணமாய்; ஈங்கார்தானென்னோடொப்பாரொன்றியானென்னதென்றே நீங்காதே நிற்கும்—(இது லோகஞ்சொல்லும் வியாபாரம்; போகத்துக் குபபோகமாகிய வியாபாரம்) வித்தியாதத்துவம்பொருந்து மிந்திரியங்களினாலேவந்த நிருவிகற்ப ஞானாலோசிதமாய் மனச்சங்கற்பிதமாய்ச் சந்தித்தமாயிருக்கின்ற வஸ்துவில் நானிச்சியம் பண்ணுவேனென்றும் நிருமிப்பேனென்றுங் கர்வ சங்ரம்ப ஞானக் கிரியா வியாபாரத்தைப்பண்ணி நிற்கும்; தானும்=அந்த வகங்காரமும்:—மனசோடுகூடிய ஞானேந்திரிய காரணக்கொத்து, கன்மேந்திரிய காரணக்கொத்து, தன்மாத்திராகாரணக் கொத்து; என்று மூன்றதாய் நிகழுமென்பர்; (கிரமத்திலே கொத்துக்கள்); பாங்கார் பூதாதிவைகாரிகந் தைசதந்தானென்றே—அக்கிரமத்திலே தாமத மிராசதஞ் சாத்துவிகமென்று பெயர்பெற்றுநிற்கும். (ருக)

அகங்காரத்தினின்று மனமுதலியபதினாறு தத்துவந்
தோன்றுமென்று சொல்வாராய் மனத்தோடு
ஞானேந்திரியங் கன்மேந்திரியத்தோற்ற
முரைக்கின்றார்.

மனமதுதைசதத்தின்வந்தொருபொருளைப்பற்றி
நினைவதுஞ்செய்தங்கையநிலைமையினிற்குமாங்கே

யினமலிசோத்திராதிகன்மவிந்திரியமெல்லா
முனமுறைசெய்தவைகாரிகந்தருமென்பர்முன்னோர்.

(இ-ள்). மனமதுதைசதத்தின்வந்து=மனதத்துவஞ் சாத்துவிகாங் காரத்திலுண்டாய்; ஒருபொருளைப்பற்றி நினைவதுஞ்செய்தங்கைய நிலைமையினிற்கும்=வித்தியாதத்துவத்தோடு கோத்த ஞானேந்திரிய மொன்றினால் விளங்கிய சிற்சத்தியிற் செனித்த நிர்விகற்ப ஞானவிஷயப் பொருள்களிலே யொருபொருளைச் சித்தமாய்ப்பொருந்தித் தூக்கி யிதின்னதாக வேண்டுமென்று சங்கற்பித்ததிற் சந்தேகித்துநிற்கும்; ஆங்கே=அந்தச்சாத்துவிகாங்காரத்திலேதானே; இனமலிசோத்திராதி=வர்க்கமிகுந்த ஞானேந்திரிய மைந்துந்தோன்றிச் சிற்சத்தி வித்தியாதத்துவத்தோடு கூடி யிராகதத்துவங் கலக்க மனச்சங்கற்பத்துக்குமுன்பொருளைப்பார்க்கும்; கன்ம விந்திரிய மெல்லாம்=கன்மேந்திரியங்களைந்தையும்; முன முறை செய்தவை காரிகந் தருமென்பர் முன்னோர்=முந்தச்சொல்லிய விராசதாங்காரமுண்டாக்குமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். (சுO)

ஞானேந்திரியம் பார்க்கும் பொருளைப்பகர்கின்றார்.

நற்செவிதுவக்குக்கண்ணுநாசியைந்தினையுநல்லோர்
புத்தியிந்திரியமென்றுபுகன்றனரிவைதனக்குச்
சத்தநற்பரிசரூபவிரதகந்தங்களைந்தும்
வைத்தனர்விடயமாகவடைவினின்மருவுமன்றே.

(இ-ள்). கட்டில் கூப்பிட்டதென்றவிடத்துச் சகசலக்ஷணையினாலே கட்டிலிலிருக்கும் புருடனென்பதுபோலச் செவிமுதலியவற்றிலிருக்குமிந்திரியங்கள் செவிமுதலாகச் சொல்லப்பட்டன. வெளிப்பொருள்.

கன்மவிந்திரியவியாபாரத்தை விளம்புகின்றார்.

வாக்கொடுபாதம்பாணிபாயுவோடுபத்தமைந்தும்
நீக்கினர்முன்னேகன்மேந்திரியங்களெனநினைந்தே
யாக்கியவசனகமனதானமும்விசர்க்கானந்த
மூக்கமாரைந்துமைந்தின்றொழிலெனவோதினாரே.

(இ-ள்). முன்சொன்ன முறைமைகளிலிருக்கு மிந்திரியங்கள் வாக்காதியாகச் சொல்லப்பட்டன, மனச்சங்கற்பத்தாற் செலுத்தப்பட்டு

ஞானேந்திரியம் ஞானசத்தியை விளக்ினபோது, கன்மேந்திரிய மகங் காரத்தோடு கோத்துக் கிரியா சத்தியை விளக்க, கிரியாசத்தி சம்ரம் பத்தோ டகங்காரங்கிளம்பி, உதானாதி வாயுச்சேட்டையைப் பண்ண வசனாதித்தொழில்வரும். வெளிப்பொருள். (கூஉ)

அந்தரங்கபகிரங்கமறிவிக்கின்றார்.

வாயாதிசோத்திராதிபுறத்துவாழ்கருவியாகு
மோயாதமனாதிகாயத்துணருமுட்கருவியாகு
மாய்வார்கட்கராகமாதியவற்றினுட்கருவியாகு
மாயாடன்வயிற்றிவற்றாற்றொடக்குண்டுவாழுமான்மா.

(இ-ள்). மனாதி=மனம் புத்தியகங்காரஞ் சித்தம்; இராகமாதி= காலநியதிகள் ஒரு பிரகாரத்தாற் கர்த்திரு காரக மானாலும், கரண காரகமாகிய கருவியென்று சொல்லப்படாதாதலால்; கலை வித்தை யிரா கம். வெளிப்பொருள். (கூ௩)

தன்மாத்திராசமுற்பத்தியைச் சாற்றுகின்றார்.

ஓசைநற்பரிசரூபவிரதகந்தங்களென்று
பேசுமாத்திரைகளைந்தும்பிறக்கும்பூதாதிகத்தி
னேசவிந்திரியங்கட்குநிகழறிவிதனாற்காண்டு
மாசைசேர்மனாதிதன்மாத்திரைபுரியட்டகந்தான்.

(இ-ள்). ஓசை நற்பரிச ரூப விரத கந்தங்களென்று பேசுமாத்தி ரைகளைந்தும் பிறக்கும் பூதாதிகத்தில்=தீவிரதராதி பேத பின்ன சத்த குணமொன்று முடையது சத்ததன்மாத்திரை, சத்த பரிசகுண மிரண்டு முடையது பரிசதன்மாத்திரை, சத்தபரிச ரூபகுண மூன்று முடையது ரூபதன்மாத்திரை, சத்த பரிச ரூப ரசகுண நான்குமுடையது இரசத ன்மாத்திரை, சத்தபரிச ரூப ரச கந்தகுண மைந்து முடையது கந் ததன்மாத்திரையென்று சொல்லப்படும். பஞ்சதன்மாத்திரைகள் தாம தாங்காரத்தி லுண்டாம்;

நேசவிந்திரியங்கட்கு நிகழறி விதனாற்காண்டும்=பற்றுற்ற விரு வகை யிந்திரியங்களுக் கிந்தப் பஞ்சபூதத்தோடு கூடிய பஞ்சதன் மாத் திரைகளால் ஞானசத்தி கிரியாசத்திகளை விளக்குமறிவென் றுபசரிக்க ப்படும் சாமர்த்திய முற்பத்தியாம்; அவை வருமாறு:—

சத்ததன் மாத்திரையு மாகாசமுங் கூடித்தேரிற் றேராழி போல முறைமையிற் சுரோத்திரேந்திரியத்துக்கும் வாக்கிந்திரியத்துக்கு மிடமாயிருக்கும்; பரிசதன்மாத்திரையும் வாயுவுங்கூடித் தொக்கேந்திரியத்துக்கும் பாதேந்திரியத்துக்கு முன் சொல்லிய முறைமையிலிடமாயிருக்கும்; உருபதன்மாத்திரையு மக்கினியுங்கூடி நேத்திரி ரேந்திரியத்துக்கும் பாணியிந்திரியத்துக்கு முன் சொன்ன முறைமையிலிடமாயிருக்கும்; இரச தன்மாத்திரையு மப்புவுங் கூடிச் சிகுவேந்திரியத்துக்கும் பாயுவேந்திரியத்துக்கு முன் சொன்ன முறைமையிலிடமாயிருக்கும்; கந்த தன்மாத்திரையும் பிருதிவியுங் கூடிக் கிராணேந்திரியத்துக்கு முபத்தேந்திரியத்துக்கு முன் சொன்ன முறைமையினிட மாயிருக்கும்;

ஆசைசேர் மனுதி தன் மாத்திரை புரியட்டகந்தான் = இச்சை பொருந்திய மனம் புத்தி யகங்காரந் தன் மாத்திரை யைந்தும் சூக்குமதேகம்.

புரி = சூக்குமதேகத்திலே, அஷ்டகம் = எட்டுக்கொத்தென்று பண்ணிப் பூதக்கொத்து, தன்மாத்திரைக்கொத்து, கன்மேந்திரியக்கொத்து, ஞானேந்திரியக்கொத்து, அந்தக் கரணக்கொத்து, குணக்கொத்து, பிரகிருதிக் கொத்து, கலாதிக்கொத்து இவைகளைத் தன்மாத்திரை அந்தக் கரணங்களாகிய வெட்டினுளடக்கி முப்பது தத்துவம் புரியட்டகம்; முன்னுங் காண்பித்தோம். முன்சொல்லிய முறைமையில் குண முடைத் திரவியங்களாய்ப் பூதகாரணங்களாய், பிரத்தியக்ஷங்களாயிருக்கின்ற தன்மாத்திரைகளைப் பஞ்சேந்திரிய விஷயப் பிரத்தியக்ஷ காரிய பூதகுணங்களாகச் சில தத்துவக்கட்டளை முதலியவற்றிற் சொல்லிய தறியாமையாலெனவறிக. (சுச)

பூதோற்பத்தி புகல்கின்றார்.

சாற்றியபஞ்சதன்மாத்திரைகளிற்சத்தமுன்னுத் [ங்
தோற்றும்வான்வளிதீநீர்மண்டுடக்கியேயொன்றுக்கொன்று
கேற்றமாமோசையாதியிருங்குணமிசைந்துநிற்கு
மாற்றவேவிடயம்பூதமங்காங்கிபாவத்தாமே.

(இ-ள்). சாற்றிய பஞ்சதன்மாத்திரைகளிற் சத்தமுன்னுத் தோற்றும் = சத்ததன்மாத்திரைக் கிரமத்திலே வான்வளி தீ நீர் மண் உண்டாம்; துடக்கியே ஒன்றுக்கொன்றங் கேற்ற மாமோசையாதி யிருங் குணமிசைந்து நிற்கும் = ஆகாச மாதியாகத் தொட்டோவ்வொன்றுக் கோவ்வொன் றதிகமாஞ் சத்தபரிச ரூப ரச கந்த குணங்கள் பொருந்தியிருக்கும்; அவை வருமாறு:—

ஆகாசத்துக்குச் சத்தகுணம், வாயுவுக்குச் சத்தஸ்பரிச குணம், தேயுவுக்குச் சத்தஸ் பரிச ரூபகுணம், அப்புவுக்கு சத்தஸ் பரிச ரூபரச குணம், பிருதிவிக்குச் சத்த ஸ்பரிச ரூப ரச கந்த குணம்;

ஆற்றவே விடயம் பூத மங்காங்கிபாவத்தாமே=(சத்தாதி விடய குணங்கட் காதாரமாகையால் ஆகுபெயர், விடயமென்றது பூதகாரணசத்தாதி தன்மாத்திரைகளை ஞானேந்திரிய விஷயமாகிய சத்தாதி பூதகுணங்களையன்று) கடமும் கடத்தினது பூச்சுப்போலத் தன்மாத்திரையும் பூதமு மங்காங்கி பாவமாயிருக்கும்;

பூதங்கள் முறைமையிற் சூக்குமம் ஆந்தரம் வாகிய மென்று மூன்றுபிரகாரமாம்; இவற்றுள், சூக்குமம் சூக்குமதேகத்திருந்து இந்திரிய வாதாரமாம்; ஆந்தரம் தூலதேகத்திருந்து சரீரத்தை வளர்த்துள்ளிடங் கொடுத்தல் முதலிய தொழிலை யியற்றும்; வாகியம் அண்டபுவன போக்கியப் பொருளாதாரமாயிடங்கொடுத்தல் முதலிய தொழிலையியற்றும். (கூ௫)

ஆந்தர வாகிய வாகாசமுதலிய பூதமைந்திற்குந் தொழில், ஆகிருதி, வன்னம், பீசாக்கரம், அடையாளம், தேவதை முதலியவற்றை முறைமையில் மூன்று திருவிருத்தத்தாலறைகின்றார்.

இரந்தரமாகிவான்றானிடங்கொடுத்திடுஞ்சலித்தே
பரந்தவைதிரட்டுங்காறிசுட்டொன்றுவித்தல்பண்ணு
நிரந்தரங்குளிர்ந்துநின்றுபதஞ்செயுநீர்மண்டானு
முரந்தருங்கடினமாகித்தரித்திடுமுணர்ந்துகொள்ளே. ()

மண்புனலனல்கால்வான்பால்வடிவுநாற்கோணமாகுந்
தண்பிறைமூன்றுகோணந்தருமறுகோணம்வட்டம்
வண்பொன்மைவெண்மைசெம்மைகறுப்பொடுதூமம்வன்ன
மெண்டருமெழுத்துத்தானுமிலவரயவ்வவாமே. (கூ௭)

குறிகள்வச்சிரத்திேைடுகோகநதஞ்சுவத்தி
யறுபுள்ளியமுதவிந்துவதிதெய்வமயன்மாலாதி
செறிபுகழீசனேடுசதாசிவம்பூததெய்வம்
நெறிதருகலையைந்திற்குநிகழ்த்துவரிந்தநீர்மை.

(இ-ள்). சாந்தியாதீதாதி பஞ்ச கலைகளுக்கும் பஞ்சபூதத்துக்குப் போலாகிருதி முதலியன வறிக. மற்றைய வெளிப்பொருள். (கூ௮)

இப்படித் தத்துவங்கண் முறைமை சொல்லித்
தொகுக்கின்றார்.

சுத்ததத்துவங்களென்றுமுன்னமேசொன்னவைந்து
மித்தகைமையினியம்புமிவைமுப்பத்தொன்றுமாகத்
தத்துவமுப்பத்தாறுஞ்சைதன்னியங்களைந்துஞ்
சித்தசித்தான்மாவொன்றுமுப்பதுமசித்தேசெப்பில்.

(இ-ள்). சைதன்னியங்களைந்தும்=சிருஷ்ட சிவதத்துவமைந்துஞ் சிவசத்திரூபமாதலாற் சாக்ஷாத் சைதன்னியம், சிருச்சிய சிவதத்துவமைந்தும் மாயாரூபமாய்ச் சைதனிய வியஞ்ச கோபகாரத்தின லுபசார சைதனியம்; சித்த சித்தான்மா வொன்றும்=புருஷதத்துவ மொன்றுங் கலாதி பஞ்ச கஞ்சுகாவித்தியாதி பஞ்சக்கிலேசகலுஷிதமாதலாலியற்கையாற் சித்தா யிருந்தாலுஞ் செயற்கையாற் சித்தசித்து; முப்பது மசித்தே செப்பில்=சொல்லுமிடத்துக் கலாதி சற்றே சைதன்னிய வியஞ்சகமாதலாற் சித்தசித்தென்று சொல்லப்பட்டாலும் மோகபோக போதகமாதலா லியற்கையாற் கலாதி முப்பது மசித்தே. மற்றைய வெளிப்பொருள். (சுகூ)

தத்துவங்களினது ஸ்வரூபஞ் சொல்லுகின்றார்.

ஐந்துசுத்தத்தின்கீழேழ்சுத்தாசுத்தமசுத்தந்
தந்திடும்புமான்கீழெண்மூன்றாயதத்துவஞ்சீவற்கு
வந்திடும்பிரேரகாண்டமருவுபோசயித்திரியத்தோ
டந்தமிலணுக்களுக்குப்போக்கியகாண்டமாமே.

(இ-ள்). ஐந்து சுத்தம் (என வருவித்துக்கொள்க)=சிவதத்துவமைந்தும் தங்களிடத் திருப்போர்க்கு மிங்கு மியோகிகட்கு மொரு பிரகாரம் சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திரு ரூப சிவதத்துவ விளக்காதலால் பவித்திரம்; சுத்தத்தின் கீழேழ்=கலாதி பிரகிருதி அந்தம் வித்தியாதத்துவமேழுங்கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவ மோகக விளக்காதலால்; சுத்தா சுத்தம்=பவித்திராபவித்திரம்; (வித்தியாதத்துவத்தில் மாயையைக் கூட்டிப்பிரகிருதியை விட்டுரைப்பாருமுளர், அப்படிச் சொல்லில் காரண தத்துவ காரியதத்துவ சாங்கிரியம் வரும்) அசுத்தந் தந்திடும் புமான்கீழெண் மூன்றாய தத்துவம்=புருஷ தத்துவம் பொருந்திய பிரகிருதி தத்துவத்துக்குச்கீழ் ஆன்மதத்துவ மிருப்பதினாலுங் கிஞ்சித்போதக மானாலும் வெகு மோககமாதலால் அசுத்தம்; மூவர்க்கத்துட் சிவ

தத்துவ மைந்தும்; சீவற்கு = ஆன்மாவுக்கு; பிரேர காண்டம் வந்திடும் = பிரணவ கலாபஞ்சக வாக்குபஞ்சக ஸ்வரூபமாயிருந்து, அசுத்த தத்துவங்களை முறைமையிற் செலுத்துங் கொத்தாகப்பொருந்தும்; (வித்தியா தத்துவமேழும் ஆன்ம தத்துவ மிருபத்தினாலும்); மருவு போசயித்திரியத்தோடந்த மிலணுக்களுக்குப் போக்கிய காண்டமாமே = நாசமில்லாத வான்மாக்களுக்கு முறைமையிற் பொருந்தும் போசயித்திரு வென்று சொல்லப்பட்ட புசிப்பிக்கின்ற கொத்து, அதனோடு போக்கிய மென்று சொல்லப்பட்ட புசிக்கப்படுகின்ற கொத்தென்றுந்தானேயாம். ()

காரணப்பொருள் காரியப்பொருளிரண்டினுந் தத்துவச்சொல்லு நடக்குமென்று சாற்றுகின்றார்.

தத்துவரூபமாகுந்தருமருவுருவமெல்லாந்
தத்துவந்தூலசூக்கபரங்களுமாகிநிற்குந்
தத்துவந்தன்னிற்சாருமணுக்கள்சாதாக்கியத்திற்
றத்துவசத்தஞ்சாருஞ்சகலமுந்தத்துவந்தான்.

(இ-ள்). உருவம் = காரியப்பொருள்; அருவம் = காரணப் பொருள்; (இவைக ளெல்லாம்) தத்துவ ரூபமாகும், ஸ்ரீமன் மதங்காதிகளிற் சொன்னபடி தத்துவ லக்ஷணத்தை யுடையனவாம்; தத்துவந் தூலசூக்க பரங்களு மாகி நிற்கும் = அவற்றுள் பாசதத்துவந்தூலம், பசு தத்துவஞ் சூக்குமம்; மகாமாயா பாச தத்துவத்தைக் குறித்துப் பசுதத்துவம் தூலம், பரமல வாசனை மணப்புற்ற சின்மாத்திர பசுதத்துவத்தைக்குறித்து மகாமாயா பாசதத்துவம் தூலம், பதிதத்துவம் பரம், மலம் பசுதத்துவத்துட் படுத்திப் பசுதத்துவமென்று பகரப்படும், கன்மம் பாச தத்துவத்துட்படுத்திப் பாசதத்துவமென்று பகரப்படும், திரோதானசத்தியு மப்படிப் படுத்தியப்படிப் பகரப்படும், அனுக்கிரகசத்தி பதிதத்துவத்துட்படுத்திப் பதிதத்துவ மென்று பகரப்படும்; இந்நான்கும் சுவதந்திரத்துவங்களாய்ச் சொல்லப்படா.

பின்னந்தத் தத்துவங்களும் காரணகாரிய ரூபங்களாயிருக்கும். அவற்றுள், நிமித்த காரணரூப பதியாகிய வனாதிமுத்த ஆதிமுத்த சிவத்துவ விருமுப்பேத தத்துவத்துக்குள் அதிகார சிவதத்துவம் தூலம்,போக சிவ தத்துவம் சூக்குமம், இலய சிவதத்துவம்பரம்; முதற்காரணமாகிய மகாமாயா தத்துவத்திலுந் தூல சூக்கும பரங்க ளப்படியே அதிகார முதலிலயாந்த பேதகாரியப் பிரகுதிப் பிரவிர்த்தி, பிரவிர்த்தி நிவிர்த்திக் குறிகளா லறிக.

திரும்ப முதற்காரண மூன்றனுள், பிரகிருதி தத்துவம் தூலம், மாயாதத்துவம் சூக்குமம், மாமாயாதத்துவம் பரம்.

காரிய தத்துவங்களுக்குள், ஆன்ம தத்துவந் தூலம், வித்தியாதத்துவஞ் சூக்குமம், சிவதத்துவம் பரம்.

பசு தத்துவங்களுக்குள், சகல பசு தத்துவம் தூலம், பிரளயா கலா பசு தத்துவஞ் சூக்குமம், விஞ்ஞான கலா பசு தத்துவம் பரம்.

பதிதத்துவம் மூன்றினுள், அபர முத்த பதி தத்துவந் தூலம், ஆதி முத்த பதி தத்துவம் சூக்குமம், அநாதி முத்த பதி தத்துவம் பரம், அந்தரங்க விசாரத்தினு லாதி முத்த பதி தத்துவமும் பரம்.

ஆதலால், அபர முத்த பதி தத்துவத்துக்குள், மந்திரமகேஸ்வர தத்துவம் தூலம், அணு சதாசிவ தத்துவம் சூக்குமம், அநாதிமுத்த ஆதி முத்தபதி தத்துவ மிரண்டும் பரம்.

தத்துவ தாத்துவிக சரீரம் மூன்றினுள், பவுதிக சரீரம் தூலம், அசுத்த புரி யட்டக சரீரம் சூக்குமம், சுத்த புரி யஷ்டக சரீரம் பரம்.

தத்துவந் தன்னிற்சாரு மணுக்கள் சாதாக்கியத்திற் றத்துவஞ்சத் தஞ்சாரும=மந்திர முதலிய நாலத்துவாவும் தத்துவாத்துவாவைப் பொருந்தும் (சதாசிவ தத்துவத்திலிருக்கு மீசானுதி மந்திரங்களும் தத்துவமென்று பெயர் பெறும்); சகலமுந் தத்துவங்காண்=இப்படி எல்லாப் பொருளும் தத்துவ தாத்துவிகங்களா யிருப்பது காண்பாயாக. (எக)

சைவபுராணிக மதானு சாரியர் மதத்தினுற் சுத்தமாயையில் அசுத்த மாயையொடுங்கு மென்று சொன்னதல்லாமல், மற்றவை சுத்த சைவசித்தாந்திகட்கு மொத்திருக்கும், தத்துவங்களின தொடுக்கஞ் சாற்றுகின்றார்.

தத்துவமெண்மூன்றுஞ்சென்றான்மதத்துவத்தொடுங்கும்
வித்தையிலொடுங்குமாறுசிவத்தினிலொடுங்குமூன்று
நித்ததத்துவமிம்மூன்றுமென்பர்களிரண்டுநின்ற
சுத்தமாஞ்சிவத்தொடுங்குந்தோற்றமுமிதுபோலர்கும்.

(இ-ள்). தத்துவ மெண்மூன்றுஞ் சென்றான்ம தத்துவத் தொடுங்கும்=ஆன்மதத்துவ மிருபத்தினான்கும் புருஷதத்துவத்தோடு புணர்ந்த பிரகிருதி யெனு மான்ம தத்துவத்திற் பிரளயமாம்; வித்தையிலொடுங்கு மாறு=கலாதி புருஷ தத்துவாந்த வான்ம தத்துவ மாறு

மாயையிற் பிரளயமாம்; சிவத்தினி லொடுங்கு மூன்று=சுத்த வித்தையீசுர சாதாக்கிய மென்கின்ற தத்துவ மூன்றுஞ் சுத்த மாயையிற் பிரளயமாம்; நித்த தத்துவ மிம்மூன்று மென்பர்க ளிரண்டுநின்ற சுத்தமாஞ் சிவத்தொடுங்குந் தோற்றமு மிதுபோலாகும்.

சைவபவுராணிக மதானுசாரியர் மதத்துப் பொருள் முதலுரைப்பாம்.

பிரகிருதி அசுத்தமாயை சுத்தமாயை நித்தியமென்று சாங்கியன் முதலோர்கள் சொல்லுவார்கள்; அது நமது மதமன்று.

இரண்டும்=பிரகிருதியும் அசுத்தமாயையும் முறைமையிற் சுத்த மாயையிற் பிரளயமாம்; உற்பத்தியு மொடுக்கம்போல விந்துவின் மாயையாகி மாயையினவ் வியத்தம் வந்திடுமென்று முன்சொன்ன படியாம்; சுத்த சைவ சித்தாந்தா சாரியர் மதத்துப் பொருளினி யுரைப்பாம்; சுத்த வித்தை யீசுரஞ் சாத்தாகிய மென்கின்ற தத்துவ மூன்றும் நித்தியமென்று சைவருட் சில பெயர் சாற்றுவார்களது நமதுமத மன்று.

இம்மூன்றும் இரண்டும்=சத்திதத்துவம் காரிய சிவதத்துவம் ஆக வைந்தும்; காரண சுத்த சிவ தத்துவ மென்று சொல்லப்பட்ட சுத்த மாயையிற் பிரளயமாம், உற்பத்தியுமொடுக்கம் போல "ஞானமே யான போது" சிவனென்பது முன்சொன்னபடியாம். (எஉ)

### மறு சமயிகள் முத்தித்தானங்களை வகுத்துணர்த்துகின்றார்.

மொய்தருபூதமாதிமோகினியந்தமாகப்
பொய்தருஞ்சமயமெல்லாம்புக்குநின்றிடும்புகன்ற
மெய்தருசைவமாதியிருமூன்றும்வித்தையாதி
யெய்துதத்துவங்களேயுமொன்றுமின்றெம்மிறைக்கே.

(இ-ள்). மொய்தரு பூதமாதி மோகினியந்தமாக=கூட்டமாயிருக்கின்ற பிருதிவி முதலிய பூதங்கள் முதலாகக் காரிய லக்ஷணயி னாலே மோகினி யென்று சொல்லப் பட்ட புருஷதத்துவ முடிவாக; பொய்தரு சமயங்கட்கு; (புருஷ தத்துவத்துக்கு மேற் பிரவேச மில்லாமையால் மாயைமட்டென்றால் மாறுபடும்) பொய் தருஞ் சமயமெல்லாம் புக்குநின்றிடும்=உலோகாயதமத முதல் விவர்த்த வேதாந்த மீறுகு முத்திப்போலிப் புறச்சமய மெல்லாம் பிரவேசித்திருக்கும்; மெய்தருஞ் சைவமாதி யிருமூன்றும்=சிவனே தெய்வமென்று கொள்ளலாற் சத்

தியமாகுஞ் சைவம் பாசுபதம் மகாவிரதம் வாமம் காளாமுகம் வயிர வமென்கின்ற வுட்சமயங்களு மதிற் பேதங்களும்; வித்தையாதியெய்து தத்துவங்க ளேயும்=சுத்தவித்தை முதலிராக தத்துவாந்தம் மத்திய தீபகமாதலால், திரும்ப வெடுத்துச் சுத்த வித்தையாதி சிவாந்தமாயிருக்கின்ற தத்துவங்களில் மகாவிரதி முதலாய்ப் பொருந்துவர்கள்; ஒன்றுமின் றெம்மிறைக்கே=எமது சர்த்தாவினது சைவசித்தாந்த மார்க்கத்துக்கு,

"சகளே நிஷ்களே சைவஸர்வத்ராவஸமாநதா,
ஸாயுஜ்யமிதி தத்புரோக்தம், ஸாரூப்யமூர்த்திதுல்யதா."

என்று சிந்திய விசுவ சாதாக்கிய வசனமிருக்கையால், சகள சகளாகள நிஷ்கள நிஷ்களாதீத சிவசமான ஸ்வரூப மொன்றுமே மோக்ஷமல்லாமல், சடதத்துவங்களினது சம்பந்த மொன்றுமில்லை யாமே; இப்படி முற்றெப்புச் சிவசாமியமாகிற் சிவனிலய போக வதிகாராவஸ்தைகளை யடையும்போது வர்ச்சிக்கப் படாதாகையால், முத்தி சிவான்மாவு மடைய வேண்டுமாதலால் பஞ்சகிர்த்தியம் பண்ண வேண்டும்; பண்ணுவனென்றற் பண்ணுனென்றும் வெகு வசன விரோதம்; சத்தியம், நீசாற்றியது; விரோத மில்லாமல் விளம்புவோங் கேள்; முத்தான்ம சிவனிடத்திற் கிரமத்திற் கர்த்திரு சத்தியில்லையென்றால்,

"சித்வ்யக்த்யாசர்வகர்த்ர்த்வம்சித்தாநாமீச்வரோர்ய்தா,
அந்யதாகர்த்ருதாநஸ்யாதீச்வரஸ்யாபிஸித்தவத்"

இதி மோக்ஷகாரிகா வசநத்தினலே, கர்த்திருத்துவஞ் சிவனுக்குமில்லையாய் ஸ்வரூபாங்கக் குறைவருமாதலாற் கர்த்திரு சத்தியுண்டு; அது சர்வகர்த்திரு சத்தி யல்லவென்னிற் சிவனது கர்த்திரு சத்தியுஞ் சர்வகர்த்திரு சத்தியல்லவா மென்று சர்வகிர்த்திய மில்லாதே போம்; ஆகையால், முத்த சிவான்மாவினிடத்திலுஞ் சர்வகர்த்திரு சத்தியுண்டு. அப்படி நீருண்டென்று சொல்லில், சிவனு லேவப்படா னென்றுகொண்டு, சிவனுக்குச் சர்வகர்த்திருத்துவ பங்கம் வரும்; 'முத்தானுன்பாதி' என்னும் வசன விரோதமும் வரும்; அதில்லை; ஏவ யோக்கியனே யேவாதிருந்தாற் சர்வகர்த்திருத்துவ பங்கம்; மலமில்லாமையால், முத்தான்மா வேவயோக்கிய னல்லாமையாலது வில்லை; ஏவயோக்கிய மல்லானையேவினுற் சிருட்டி முதற் கிருத்திய மவனைக் குறித்து வருமென்றதனுற் சிவனுக்குச் சர்வஞ்ஞத்துவ பங்கம் வரும்; அதனுல், சர்வகர்த்திருத்துவ பங்கமுந்தானே வரும்; "முத்தானுன்பாதி" யென்பதற்கும், பொருள்

அபரமுத்தர்களை ரக்ஷிப்பனென்று பொருளாதலால், வசனவிரோதமுமில்லை; ஆகையால், முத்த சிவான்மாவுக்குஞ் சர்வ கர்த்திருத்துவ சத்தியுண்டு, சிவனுக்குப்போல வுண்டாகிலும் வியத்தமாகாதென்னில், முத்தனுக்கும் பெத்தனுக்கும் விசேஷமில்லாதேபோம்;சத்தி நிரம்சமாதலால் ஞானபாகத்தி லபிவியத்தியுங் கிரியாபாகத்தி லனபிவியத்தி யென்று சொல்லவும்படாது; ஆகிலும், முன்சொன்ன விருவருக்கும் விசேடமில்லையாமாதலால், அபிவியத்த சர்வகர்த்திரு சத்தி சிவனிடத்திற்போல முத்த சிவான்மாவினிடத்துண்டு; சர்வகர்த்திரு சத்திக் கபிவியத்தியும் சர்வகிர்த்தியத்திற்பண்ணுதலாகிய விழுதலால், வியத்தமானாலும் வியத்தமல்லாததுபோலப் பண்ணுமற் சும்மா விருக்குமென்பதடாது; பண்ணுமென்றால், பின்ன சங்கற்பமில்லாமையால், அநேகேசுவர வாதம் வருவதுமின்று; பின்னைப் பண்ணட்டுமென்றால், சிவத்துவாபிவியத்தி லக்ஷணஸ்வப் பிரயோசனஞ் சித்தித்துப் போதலால் தனக்குப் பிரயோசனத்தின்பொருட்டுப் பிரவிர்த்திமானுகான், எக்காலத்து மிழைப்பற்றிருக்கும் சிவனெங்கும் வியாபித்து எக்காலமுமிடைவிடாமற் பிறர் பிரயோசனம்பண்ணி வருதலாற் பிறர் பிரயோசனத்தின் பொருட்டுப் பிரவிர்த்தி மானுகான்; சர்வ கர்த்திரு சத்திக்கபிவியத்தியுஞ் சர்வகிருத்தியத்திலுஞ் சங்கற்பமென்கின்ற விழுதலென்று முன் சாற்றினேம்; திரும்ப வது சிவசங்கற்பத்தினின்றுங் குறைத்துச் சுருக்கப்படாதாகையால், சிவனுக்குக் கிருபா சம்சித்த பஞ்சகிருத்தியம் முத்த சிவான்மாவுக்குப் பிரிந்த பின்னகிருத்திய பலமின்றிப் பின்னபலவர்ச்சநீய சஞ்சித்த பஞ்சகிர்த்தியமாகையால், விரோதவேற்றுமைகளின்று. இதற்குச் சிந்திய விசுவசாதாக்கிய முதலாகமங்களில் வசனங் கேட்டறிக. (எரு)

சிவபேத மணுபேதமெனப் பிரமாதி நவபேத மிருபேதமாம்; அதில் அணுபேதஞ் சத்தியலோக முதற் புவனாதிபதியாய் வாஸ்தவபேத தேகியாயிருக்கும். சிவபேத மணுபேதத்தை யதிஷ்டித்துக் காற்பனிகபேததேகியாயிருக்கும்; அதிற் சிவபேதத்தைத் தரிசிப்பிக்கின்றார்.

சிவஞ்சத்திநாதம்விந்துசதாசிவன்றிகழுமீச
னுவந்தருளுருத்திரன்றன்மாலயனென்றினென்றாய்ப்
பவந்தருமருவநாலிங்குருவநாலுபயமொன்று
நவந்தருபேதமேகநாதனேநடிப்பனென்பர்.

(இ-ள்). சிவம்=அதிக்கிராந்த விந்துக பரசிவம்; சத்தி=அதிக்கிராந்த விந்துக பராசத்தி; நாதம்=பரநாதம்; விந்து=பரவிந்து.

பரநாதமென்பது உன்மனுகலாதி சாந்தியதீதகலாந்தகாரிய சிவகலா சத்தியையும், சமநாதி அபரவிந்து நிவிர்த்தியந்த காரியசத்தி கலாசத்தியையும், சமாகாராத்மகமாயுள்ள காரணசாந்தியதீத கலாரூப மாகா மாயை. அபரவிந்து என்பது உன்மனு கலாதி காரியப் பிரபஞ்ச மொருபிரதேசத்துண்டா யொடுங்கின மகாமாயையினதோரிடம்.

ஆகையால், மகாமாயையினது பரநாதப் பிரதேசத்தை யதிஷ்டிக்கும் அனதிக்கிராந்த விந்துக பரசிவம் நவபேத விருத்தத்தில் நாதமென்று சொல்லப்பட்டது. பரவிந்துவை யதிஷ்டிக்கும் அனதிக்கிராந்த விந்துக பராசத்தி விந்து வென்று சொல்லப்பட்டது.

மகாமாயா காரிய பரநாத பரவிந்துக்கள் மகா மாயா காரிய அபர நாத அபர விந்துக்கள் காண்பிக்கப்படாநின்றன; உன்மனே, பராற்பரநாதம், சமனே, பராற்பரவிந்து, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை யென்கின்ற பஞ்சகலா கர்ப்ப சத்த ரூப அர்த்த ரூப சிவகலைகளும், அர்த்த ரூப மாத்திர பஞ்ச சிவ கலா புவனங்களும், பரசிவ தத்துவமென்கின்ற பரநாதம்; சூக்குமை, அதிசூக்குமை, அமிர்தை, அமிர்தாமிர்தை, வியாபினி யென்கின்ற பஞ்சகலா கர்ப்ப சத்த ரூப அர்த்த ரூப சத்திகலைகளும், அர்த்த ரூப மாத்திர சத்திகலா புவனங்களும், பராசத்தி தத்துவ மென்கின்ற பரவிந்து. இவைகள் யோகியினுடையவும் மகாவிராட் புருட னுடையவும் பிரம ரந்திரத்திற்கு மேல் முறைமையில் சத்த ரூப மாத்திரங்களாகவும், சத்த ரூப அர்த்த ரூபங்களாகவும் அறியப்படும்.

பிரமரந்திரத்துக்குள், இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை யென்கின்ற பஞ்ச கலா கர்ப்ப சத்த ரூப அர்த்த ரூப சிவகலைகளும், அர்த்த ரூப மாத்திர சிவகலாபுவனங்களும் அபர சிவ தத்துவ மென்கின்ற நாத, நாதாந்த, அபரநாதமாக அறியப்படும்.

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை யென்கின்ற பஞ்சகலா கர்ப்ப சத்த ரூப அர்த்த ரூப சத்தி கலைகளும், அர்த்த ரூப மாத்திர சத்தி கலா புவனங்களும், அபர சத்தி தத்துவ மென்கின்ற அபர விந்துவாக அறியப்படும்.

உன்மநாதி யபரவிந்து அந்தம் கிரமத்திற் பரசிவ பராசத்தித் தானமாக ஊகித்தறிக; சத்த ரூப அர்த்த ரூப பஞ்ச பஞ்சகலைகள் அர்த்த ரூப

மாத்திர பஞ்ச பஞ்சா கலா புவனங்கள் பகுப்பாயிருக்கும்; அர்த்த சந்திரன் நிரோதி யிரண்டும் அபரவிந்துவி லடங்கும்.

மகார உகார ஔகாரங்கள் கிரமத்திற் சாதாக்கிய தத்துவ ஈசுர தத்துவ சுத்த வித்தியா தத்துவ மென்கின்ற அபரவிந்துகோடிக்குள்ளாகும்.

அபரநாத அபரவிந்து அபரநாதங்கள் சதாசிவ ஈசுவர வித்தியாதிபதி ருத்திராதிஷ்டானங்களாகவும் அறியப்படும்.

கீழே கீழே நிவிர்த்தியாதி கலாரூபமாக வியாபித்த ஔகாராதி நாதாந்தம் பிரமாதி பஞ்ச தேவதாஸ்தானமுமாம்.

சதாசிவன் திகழு மீசனு வந்தருளு ருத்திரன்றன் மாலய னென்றிவனென்றாய்; பவந்தரும்=சென்மிக்கும்.

அணுபேதத்திற் சென்ம முபசாரமா யாரோபித்துச் சம்பு பக்ஷத்துக்குக் கற்பிக்கப்படும்; இங்குச் சிவாதி பிரமாந்த நவபேதத்துள், அருவ நாலும் காரண மாகாமாயாவஸ்தா சாக்ஷா ததிஷ்டானமாதலால்,

சிவாதி நான்கும் நிஷ்களம்; உருவம் நாலும் காரியாதிஷ்டான மாதலால், ஈசன் முதலிய நான்கும் சகளம்; உபயமொன்றும்=சதாசிவம் காரணத்தைத்தொட்டு உன்மனாதி சதாக்கியாந்த காரியாதிஷ்டானமாகையால் சகள நிஷ்களம்.

நவந்தருபேத மேகநாதனே நடிப்ப னென்பர்=சிவபேத மென்கின்ற நவபேதத்தை யொரு பொருளாகிய சிவன்தானே அதிஷ்டேயபேதத்தையொட்டி அபிநயித்துத் தடஸ்த கற்பனையினாலே காண்பிப்பன்; அணுபேத மென்கின்ற நவபேதத்தை அணுப்பிரமாதி அணுபர சிவாந்த அனேகேசுரர்கள் சுவரூபத்தினாற் காண்பிப்பர். சிவம், சத்தி, நாதம், விந்து என்பதும் சாந்தி முதல் நாற்கலை யென்பதும் ஒரு பொருளாைத் திருப்ப துணர்க. (எச)

சிவபேத முணர்த்தி அணுசத்தி பேதமானது கொடுக்குஞ் சத்திபேத முணர்த்துகின்றார்.

சத்தியாய்விந்துச்சத்தியாய்மனோன்மனிதானாகி
யொத்துறுமகேசையாகியுமைதிருவாணியாகி
வைத்துறுஞ்சிவாதிக்கிங்ஙன்வருஞ்சத்தியொருத்தியாகு
மெத்திறநின்றானீசனத்திறமவளுநிற்பள்.

(இ-ள்) சத்தியாய்=அதிக் கிராந்தவிந்துக பரசிவத்திற்கு அதிக்கிராந்தவிந்துக பராசத்தியாய்; விந்துச் சத்தியாய்=நாதரூபியா யிருக்

கின்ற அனதிக் கிராந்தவிந்துக பரசிவத்திற்கு அனதிக்கிராந்த விந்துக பராசத்தியாய்; மனோன்மனி தானுகி=சதாசிவத்திற்கு மனோன்மனி தேவியாய்; ஒத்துறு மகேசையாகி=மகேசுவரனுக்கு இணங்கிய மகேசுவரி தேவியாகி; உமை திருவாணியாகி=உருத்திரனுக் குமாதேவியாகி; மாலுக்கு மகாலக்ஷ்மி தேவியாகிப் பிரமாவுக்குச் சரசுவதி தேவியாகி; வைத்துறுஞ் சிவாதிக்கிங்ஙன் வருஞ் சத்தி ஒருத்தியாகும்=சிவமுதல் நவபேதத்துக்கு மிவ்விடத்து நவபேதமாய்த் தோற்றும் சத்தியொன்ரும்; எத்திறம் நின்ருனீசனத்திற மவளும் நிற்பள்= சிவன் கற்பித நவபேதமா யாதொரு பிரகாரமிருந்தான் சத்தியுங் கற்பித நவபேதமாய் அந்தப் பிரகார மிருக்கும்.

சத்திபேத மேழென்று சொல்லியிருக்கச் சிவபேத நவபேத மென்றது விரோதம்; சிவபேத நவபேத மென்று சொல்லியிருக்கச் சத்திபேத மெழுபேத மென்றது விரோதம்; இப்படியாகில், விரோத பரிகாரமெப்படி? ஒரு பிரகாரஞ் சொல்லுவோங்கேள்:—

அநாசிருதை முதல் சிவ கலா சாதீய வியாபினியீருகும் பஞ்ச கலா புஞ்ச வடிவுற்றுச் சிவ கலா சாதீய உன்மநா நோக்கந் தாக்கும் பரநாதமென்றும், சத்தி கலா சாதீய வியாபினி முதற் சூக்குமை யீருகும் பஞ்சகலா புஞ்ச வடிவுற்றுச் சத்தி கலா சாதீய சமநா நோக்கம் தாக்கும் பரவிந்து வென்றும், ஊர்த்துவகை முதல் இந்திகை யீருகும் பஞ்ச கலா புஞ்ச வடிவுற்றுச் சிவ கலா சாதீய வியாபினி நோக்கம் தாக்கும் அபரநாதவென்றும், சாந்திய தீதை முதல் நிவிர்த்தி யீருகும் பஞ்சகலா புஞ்ச வடிவுற்றுச் சத்தி கலா சாதீய சூக்குமை நோக்கம் தாக்கும் அபர விந்து என்றும் இருக்கும்;

பராபர சிவ தத்துவம் பராபர சத்தி தத்துவ வர்க்கம் நான்கின் பேர் மாறியும் மாருதும் தனித்தனி யிருக்கும் சாந்தியதீதகலை; அக்கலை மணப்புற்று அத்தன்மை பெற்று அப்பெயர் பெறும் உன்மனு கலை யாகும் பரசிவ மூர்த்தியாம் சிவகலையு மதி லடங்கும்;

அப்படி நான்கினு மிருக்கும் வித்தை பிரதிஷ்டை நிவிர்த்தி யுள்ளடங்கும் சாந்திகலை; அக்கலை மணப்புற்று அத்தன்மைபெற்று அப்பெயர் பெறுஞ்சமனு கலையாகு மநாகத சிவமூர்த்தியாஞ் சத்திகலையு மதிலடங்கும்;

ஆக நாலிரண்டெட்டுச் சட சிவகலை சட சத்திகலை; சற்காரிய கர்ப்ப மகா மாயையினது தாத்துவிகப் பிரளயத்து எண்கலை பிரியாப் பிரிவு குறித்துப் பொதித் துபசரிக்கும் பிரியாப்பிரிவுச் சிற்சிவகலை சிற்சத்தி கலை சற்காரிய கர்ப்ப வஸ்துக்களாம்;

பரசிவம் பராசத்தி, அனதிக் கிராந்த விந்துக பரசிவனெனும் பர நாதம் பரவிந்து; இவை நான்குந் தனித்தனி சிவ பேதம் சத்தி பேதம் இருபேத முற்றிரு நான்கு பேதமாயிருத்தலால், சிவபேதம் நான்கோடு சதாசிவ முதற்பிரமா வீருகுஞ் சிவபேதமைந்துங் கூட்டிச் சிவபேதம் நவபேதம். அச் சத்திபேதம் நான்கோடு மனோன்மணிமுதற் சரசுவதி ஈருகும் சத்திபேத மைந்துங் கூட்டிச் சத்திபேதம் நவபேத மென்றுங் கருத்திற் கருதி நவந்தருபேதமேக நாதனே நடிப்பனென்றும், எத்திற நின்றுனீச னத்திற மவளும் நிற்பள் என்றும் ஆசாரியர் சொல்லிய தே தென் றெருசொற் றேஷமுமில்லை. (எரு)

சத்தியாதி யெண் பேதங்களுக்குப் பரசிவமூலம்
நாதாதி யெழுபேதங்களுக்குப் பராசத்தி மூல
மென்பது ।।கர்கின்றூர்.

சத்திதானுதமாதிதானுகுஞ்சிவமுமந்தச்
சத்திதானுதியாகுந்தரும்வடிவானவெல்லாஞ்
சத்திபுஞ்சிவமுமாகுஞ்சத்திதான்சத்தனுக்குச்
சத்தியாஞ்சத்தன்வேண்டிற்றெல்லாமாஞ்சத்திதானே.

(இ-ள்). சத்தன்=பரசிவன்; சத்தி=பராசத்தி; வேண்டிற்றெல் லாம்=நாதாதி பேதமனைத்தும்; மற்றவைவெளிப்பொருள். (எசு)

முன்சொன்ன முறைமையிற் பேதப்
பிரபஞ்சம் பேசுகின்றூர்.

சிவஞ்சத்திதன்னையீன்றுஞ்சத்திதான்சிவத்தையீன்று
முவந்திருவரும்புணர்ந்திங்குலகுயிரெல்லாமீன்றும்
பவன்பிரமசாரியாகும்பான்மொழிகன்னியாகுந்
தவந்தருஞானத்தோர்க்கித்தன்மைதான்றெரியுமன்றே.

(இ-ள்). சிவஞ் சத்தி தன்னை ஈன்றுஞ் சத்திதான் சிவத்தையீன் றும்=சுத்த சிவசோதி மத்தியசோதி நிஷ்கள நிருத்த சிவத்தினின்றுந் தோற்றிய அதிக்கிராந்த விந்துக பரசிவம், அதிக்கிராந்த விந்துக பரா சத்தியைத் தோற்றுவித்தும், அந்த அதிக்கிராந்த விந்துக பராசத்தி அனதிக்கிராந்த விந்துக பரசிவமென்னும் அபரநாதத்தைத் தோற்றுவித் தும், அந்த அபரநாதம் அனதிக்கிராந்தவிந்துக பராசத்தி யென்னும் அபரவிந்துவைத் தோற்றுவித்தும், அந்த அபரவிந்து வாகிய பராசத்தி

ஆதிசத்தி முதல் நாலுசத்திகளைத் தோற்றுவித்துத் தன்னோடு பஞ்சசத்திகளிற் பஞ்ச சாதாக்கியங்களையும், பஞ்ச மூர்த்திகளையும் தோற்றுவித்தும், பஞ்சசாதாக்கிய பஞ்சமூர்த்தி மூர்த்திகலப்பிற் பஞ்சப் பிரமங்களையும் வியட்டி சமட்டிச் சதாசிவமாய்த் தோற்றுவித்தும், சதாசிவன் மனோன்மனியைத் தோற்றுவித்தும், மனோன்மனி மகேசுவரனைத் தோற்றுவித்தும், மகேசுவரன் மகேசுவரியைத் தோற்றுவித்தும், மகேசுவரி உருத்திரனைத் தோற்றுவித்தும், உருத்திரன் உமையைத் தோற்று வித்தும், உமை மாலைத்தோற்றுவித்தும், மால் மகாலட்சுமியைத் தோற்றுவித்தும், மகாலட்சுமி பிரமாவைத் தோற்றுவித்தும், பிரமா சரசுவதியைத் தோற்றுவித்தும்;

இப்படிச் சிவநவபேதம் சத்திநவபேதமாகும்; சிவஞ் சத்தியிருவரும் மகாமாயோபாதி புவனோபாதி மணந்து, பரவாகீசுவரி பரவாகீசுவரர்களாயும், அனந்தேசுவரத்துவாரத்தினாலே மாயோபாதி புவனோபாதி மணந்து, அபரவாகீசுவரி அபரவாகீசுவரர்களாயும், கேவலமாயாதேசோபாதிமணந்து மாதாபிதாக்களாயும்,

உவந்து புணர்ந்து = மருவிமணந்து; அங்கு = சுத்தமார்க்கத்தில்; இங்கும் = அசுத்தமார்க்கத்தில்; உலகுயி ரெல்லாமீன்றும் = தனுகரண புவனபோகங்கள்; அணு நவசிவபேதம், அணு நவசத்திபேதமாம். முத்தான்மசிவன் முத்தான்மசத்தி, சிவமூர்த்தி சத்திமூர்த்தி, ஈசான ஈசானி முதற்கிரம சதாசிவ மனோன்மனி முதல் நிரஞ்சனப் பிரமாசரசுவதியீருகவும், சாஞ்சனப் பிரமாதி ஸ்தம்ப பரியந்தமாகவும் எண்ணிறந்த ஆன்ம வர்க்கமனைத்தும் தோற்றுவித்தும்;

பவன் பிரமசாரியாகும் பான் மொழி கன்னியாகும்; = (சம்புபக்ஷ நவசிவபேத சத்திபக்ஷ நவசத்திபேதத் தோற்ற மொடுக்கங் கிரியாசத்திப் பிரவிர்த்தி நிவிர்த்தி வைசித்திரியமாத்திரமாதலானும், உவந்து புணர்ந்தென்பது உத்தியோகித்துச் சங்கற்பித்து என்று பொருள் போதித்தலானும்) சிவன் நித்தியப்பிரமசாரி சத்தி நித்திய கன்னிகையாம்; இத்தன்மை = இந்த ரகசியம் தான்; தவந்தரு ஞானத்தோர்க்கு = சமாதி கொடுக்குஞ் சாக்ஷாத் காரவான்களுக்கு; தெரியுமன்றே = காணப்படுந்தானே. (எ௭)

தவந்தருஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியு
மென்றதனுல் ஞானவானிலக்கணங்
கூறுகின்றார்.

தனுகரணபுவனயோகந்தற்பரம்பந்தம்வீடென்
றனுவினோடெல்லாமாகியடைந்திடுந்தத்துவங்க

ளினிதறிந்திவைநிவிர்த்திமுதற்கலையிடத்தேநீக்கி
நனிபரமுணர்ந்தோனந்தத்தத்துவஞானியாவன்.

(இ-ள்). தனு=தூலதேகம்; கரணம்=சூக்குமதேகம்; புவனம்= உலகம்; போகம்=சந்தனம் மாலை மகளிர் முதலிய போக்கியப்பொருள் (இவைகள் அசுத்தமாயாகாரியம்); தற்பரம்=அதற்கு மேலாகிய தனு கரண புவன போகமா யிருக்கின்ற சுத்தமாயாகாரியம்; (நிரனிறையே) பந்தம்=அசுத்த மாயாகாரியம்; வீடு=அபர முத்தித் தான மாதலால் சுத்தமாயா காரியம்; (என்றிவைகளெல்லாம்) அணுவினோடடைந்திடுந் தத்துவங்கள்=ஆன்மாவினோடு பொருந்தும் தத்துவதாத்துவிகங்கள்; (இவைகளை) இனிதறிந்து=உத்தேச லக்ஷண பரீக்ஷைகளினாலே நன் குணர்ந்து; (இது பரோக்ஷஞானம் ஆதலால் அபரோக்ஷ ஞானம் வரும் பொருட்டு ஆறத்துவா வாகப் பகுத்த முறைமையின்) நிவிர்த்தி முதற் கலையிடத்தே நீக்கி=நிவிர்த்தி பிரதிஷ்டை வித்தைசாந்தி சாந்தியதீதை யென்கின்ற கலைகளிடத்துத் தள்ளி; நனிபர முணர்ந்தோன்=தான் சின் மாத்திரமாய்ச் சேஷித்து நின்று சிவனையுஞ் சின்மாத்திரமாகச் சிந்தித் துத் தற்பர சிவபரங்களை யைக்கியம்பண்ணித் தியானம் பண்ணினவன்; தத்துவ ஞானியாவன்=முறைமையிற் சமாதி ஞானவானுய்ப்பின் அப ரோக்ஷ சாக்ஷாத்கார சிவசிவ தற்சிவஞானவானுவன். (எஅ)

தனு கரணுதிக ளுயிரொடு சாரக் காரண மேதென்னக்
காரணங் காண்பிக்கின்ருர்.

எல்லாமாய்த்தத்துவங்களியைந்ததென்னணுவுக்கென்னிற்
ருெல்லாயகன்மமெல்லாந்துய்ப்பித்துத்துடைத்தற்கும்பி
னில்லாமைமுற்றுவித்துநீக்கவுங்கூடிநின்ற
பொல்லாதவாணவத்தைப்போக்கவும்புகுந்தவன்றே.

(இ-ள்). எல்லாமாய்த் தத்துவங்களியைந்த தென்னணுவுக்கென்னி ல்=தத்துவங்க ளெல்லாம் மாயையினுண்டாயுயிரை வந்து பொருந்திய தேதுக்கென்னில்; தொல்லாய கன்மமெல்லாந் துய்ப்பித்துத் துடைத் தற்கும்=மலபரி பக்குவத்தைப்பண்ணிச் சத்தி பதிவித்துத் தீக்ஷை செய் வித்துச் சஞ்சித கன்ம மெல்லாம் புசிப்பித்துத் தள்ளுதற்கும்; பின்னில் லாமை முற்றுவித்து நீக்கவும்=பிராரத்தம் புசிக்குமிடத்துத் தியான பூசை முதல் அனுஷ்டானங்களால் ஆகாமியஞ் சேஷித்து நில்லாமற் கெ டுத்துப் போக்கவும் கூடி நின்ற பொல்லாத ஆணவத்தைப் போக்கவும்

புகுந்தவன்றே=சிவத்துவ விரோதியாகிய மூலமலத்தை முடிக்கவும் அடுத்த வன்றே.

தனுகரணாதிகள் மலபரிபாகத்துக்குக் காரணமாகில் விஞ்ஞானகலர்க்குத் தனு கரணாதி யில்லாமையால் மலபரிபாகம் வரக் காரணமில்லை. சத்தியம் நீ சாற்றியது; சகலராய் முன்னிருந்தபோது தனுகரணாதிகளால் மலத்தில் வைத்த வாசனையால் மலபரிபாகம் வரும். (எகூ)

மலத்தினதிலக்கணம் வாசிக்கின்றார்.

ஒன்றதாயனேகசத்தியுடையதாயுடனாயாதி
யன்றதாயான்மாவின்றனறிவொடுதொழிலையார்த்து
நின்றுபோத்திருத்துவத்தைநிகழ்த்திச்செம்பினிற்களிம்பேய்ந்
தென்றுமஞ்ஞானங்காட்டுமாணவமிசைந்துநின்றே.

(இ-ள்). ஒன்றதாய்=ஏகமாய்; (அனேகமாய், அசேதனமுமாகில் அநித்தியமுமாய் மகாப்பிரளயத்திற் சகலான்மாக்களும் முத்தராக வேண்டும்); அநேக சத்தியுடையதாய்=(மலமேகமாதலால், மலந்தானே மறைத்து நீங்கு மென்னில், ஒருவன் முத்தனாங் காலத்தெல்லாரும் முத்தராகவேண்டுமாதலால், அவரவரை மறைத்து முறைமையிற் பரிபக்குவம் வர நீங்கும்) அநந்த சாமர்த்திய முள்ளதாய்; உடனாயாதி யன்றதாய்=சகசநித்தியமாய்; ஆன்மாவின்றனறிவொடு தொழிலை யார்த்து நின்று=ஆவாரக சத்தியினாலான்மாவினது சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவ ரூப சிவத்துவத்தை மறைத்திருந்து; போத்திருத்துவத்தை நிகழ்த்தி=அதோநியாமிகா சத்தியினாலே போக்கியா சத்தியைப்பண்ணி; செம்பினிற் களிம்பேய்ந்தென்று மஞ்ஞானங்காட்டு மாணவ மிசைந்து நின்றே=தாமிரத்திற் காளிதம்போல மூல மலம் பொருந்தி நின்றே யெக்காலமு மறியாமையைப்பண்ணும். (அ௦)

மாயாகாரிய விசேஷமே மலம் வேறில்லை யென்னும் பாசுபதி முதலோரையும் பிரகிருதி காரிய விசேஷமே மலம் வேறில்லை யென்னும் சாங்கியன் முதலோரையு மறுத்துரைக்கின்றார்.

மலமெனவேறொன்றில்லைமாயாகாரியமதென்னி
லிலகுயிர்க்கிச்சாஞானக்கிரியைகளெழுப்புமாயை
விலகிடுமலமிவற்றைவேறுமன்றதுவேறாகி
யுலகுடல்கரணமாகியுதித்திடுமுணர்ந்துகொள்ளே.

(இ-ள்). மலமென வேறென்றில்லை மாயாகாரியமதென்னில்; இலகுயிர்க்கிச்சாஞானக் கிரியைகளெழுப்புமாயை=சித்துருபப் பிரகாசஞகிய ஆன்மாவினதிச்சா ஞானக்கிரியைகளை மாயை காரியத் துவாரத்தினலே விளக்கும்; விலகிடு மலமிவற்றை=மாயாகாரிய கலாதி யில்லாத போது பிரளயகலாவத்தையி லிச்சா ஞானக்கிரியைகளைச் சிற்றறிவுமில்லாதபடி மறைக்கும்; வேறுமன்று=அந்த மலம் அறிவோடு வேறின்றி முத்திபரியந்தம் பிரிவின்றிநிற்கும்; அதுவேருகி=அந்த மாயாகாரியம் பிரிந்து கூடும் பந்தமாகி; உலகுடல் சரணமாகி யுதித்திடும்=புவன தூலதேக சூக்குமதேக முதலிய பொருளா யுற்பவிக்கும்; உணர்ந்துகொள்ளே. (அக)

பின் திருட்டாந்த பூர்வமாகத் திரஸ்கரிக்கின்றார்.

மாயையேயான்மஞானக்கிரியையைமறைத்துநிற்குந்
தூயவெம்பருதிதன்னைச்சுடர்முகின்மறைத்தாற்போலப்
போய்முகிலகலச்சோதிபுரிந்திடுமதுவேபோலக்
காயமுமகலஞானந்தொழில்பிரகாசமாமே.

(இ-ள்). தொழில்=கிரியை; மற்றவைவெளிப்பொருள். (அஉ)

இது பூருவபட்சம் இனி சித்தாந்தம் வருமாறு.

பருதியைமுகின்மறைப்பப்பாயொளிபதுங்கினுற்போ
லுருவுயிர்மறைக்கஞானக்கிரியைகளொளிக்குமாகுங்
கருதிடுமிச்சாஞானகாரியங்காயம்பெற்றன்
மருவிடுமுயிர்க்குக்காயம்வந்திடாவிடின்மறைப்பே.

வெளிப்பொருள். (அ௩)

மலம் அனுமானத்தாலறியப்படு மென்ப
தறைகின்றார்.

போதகாரியமறைத்துநின்றதுபுகன்மலங்கா
ணேதலாங்குணமுமாகவுயிரினுள்விரவலாலே
காதலாலவித்தைசிந்தத்தருங்கலையாதிமாயை
யாதலாலிரண்டுஞ்சோதியிருளெனவேறுமன்றே.

(இ-ள்). போதகாரியம்=அறிதற்றொழில்;

இச்சை கிரியையி லடங்குமாறுபோலக் கிரியை ஞானத்தி லடங்கும், மலந் திரவிய மானும் பிரிப்பின்றி நிற்றலால் குணமாக உபசரிக்

கப்படும். ஆதலால், அஞ்ஞானந்தானே மலமென்னும் வேதாந்தியும் சைவரி லொருவருந் தள்ளப்பட்டனர். மலந்திரவியம், இது பிரதிஞ் ஞை; அனேக சத்திமத்தாதலால் இது ஏது. மல முண்டென்பதற்குப் பிரமாணமுண்டோ? பிரத்தியட்சமன்று; ஆதலால், உண்டில்லையென்று சந்தேகமிருத்தலால், ஆகமசித்தமானாலும், அனுமானமே பிரமாணம்.

ஆன்மா மலவசீகிருத சத்திமான், இது பிரதிஞ்ஞை; சிவன்போல் சர்வஞ்ஞனாயிருந்தாலும் கிஞ்சிஞ்ஞனாய்க் காணப்படுதலால், இது ஏது. யாவனொருவன் மலவசீகிருத சத்திமானல்லன், அவன் கிஞ்சிஞ்ஞனல் லன், சிவன்போல இது திருட்டாந்தம், இது கேவல வெதிரேகி அனு மானமாதலால்.

அவித்தை சிந்தத் தருங்கலையாதி மாயை=மாயையானது மலமொ ரு பிரதேசத்திற் சிதறக் கலை முதலிய தத்துவங்களைத் தோற்று விக்கும். மற்றவை வெளிப்பொருள். (அச)

சடமாகிய மலஞ் சித்தாகிய புருடனுக்குக் குண
மென்று சொல்லிற் புருஷனுஞ் சடமாவ
னென்று செப்புகின்றார்.

புருடன்றன்குணமவித்தையெனிற்சடம்புருடனாகுங்
குருடன்றன்கண்ணிற்குற்றங்கண்ணின்றன்குணமோகூறாய்
மருடன்றன்குணமதாகிமலமசித்தாகிநிற்குந்
தெருடன்றன்குணமதாகிச்சித்தெனநிற்குஞ்சீவன்.

(இ-ள்). அவித்தையென்பது=அஞ்ஞானமலம்; கண்ணிற் குற்றம் =காணாமை படலகுணம்; மருள்=அஞ்ஞானம்; தெருள்=ஞானம்; மற் றவை வெளிப்பொருள். (அரு)

கன்ம மாயை மலங்கள் நிற்கும் முறைமையும் செய்யும் பிரதான கிர்த்
தியங்களையும் சேஷபாசங்களையும் செப்புகின்றார்.

மும்மலநெல்லினுக்குமுளையோடுதவிடுமிப்போன்
மம்மர்செய்தணுவினுண்மைவடிவினைமறைத்துநின்று
பொய்மைசெய்போகபந்தம்போத்திருத்துவங்கள்பண்ணு
மிம்மலமூன்றினோடுமிருமலமிசைப்பனின்னும்.

(இ-ள்). மம்மர்=மயக்கம்; உண்மைவடிவு=சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவ ரூப சிவத்துவம்; மாயையும் கன்மமும் கிஞ்சிஞ்ஞத்துவ

கிஞ்சித்கர்த்திருத்துவப் பிரதமானுலும் நிரதிசய சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவ விரோதிகளென்பது சாற்றப்பட்டது; (கன்மகாரியம்) போகம்=போக வேதனவிடயசுகதுக்க மோகம்; (மாயாகாரியம்) பந்தம்=கலாதி; (மலகாரியம்) போத்திருத்துவம்=போகக் கிரியாகர்த்திருத்துவம்; போகா சத்தி கர்த்திருத்துவமுமாம். மற்றவை வெளிப்பொருள் (அசு)

இருமலமுண்டென்பதிசைக்கின்றார்.

மாயையின்காரியத்தைமாயேயமலமதென்று
மேயுமும்மலங்கடத்தந்தொழிலினையியற்றவேவுந்
தூயவன்றனதோர்சத்திதிரோதானகரியதென்று
மாய்வரிம்மலங்களைந்துமணுக்களையணைந்துநிற்கும்.

(இ-ள்). மாயையின்காரியத்தை=மாயாகாரியக் கூட்டத்தை; மாயேய மலமதென்றும்=மாயேயமலமதென்று பேர்பெற்ற மலமொன்றென்றும்; ஏயு மும்மலங்கடத்தந் தொழிலினை யியற்ற வேவுந் தூயவன் றனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்=பாசங்களைத் தத்தங் கிர்த்தியங்களிற் செலுத்துந் திரோதானசத்தியென்று பேர்பெற்ற சிவனது சத்தியாகிய மலமொன்றென்றும்; ஆய்வர்=விசாரிப்பார்கள்; மாயாகாரியக் கூட்டத்தை மாயையினடக்கி மகாமாயையைக் கூட்டிப் பஞ்சமல மென்றும் வெகு வசனமுண்டு. அதுவு மறிக. (இம்மலங்களைந்தும்) அணுக்களை=ஆன்மாக்களை; அணைந்து நிற்கும்=பொருந்தியிருக்கும். (அஎ)

இப்படி யான்மாப் பஞ்ச மலத்தோடு பொருந்திச்
சம்சாரத்திற் பிரமிப்பனென்று
பேசுகின்றார்.

மலமாயைகன்மமாயேயந்திரோதாயிமன்னிச்
சலமாரும்பிறப்பிறப்பிற்றங்கியித்தரைகீழ்மேலும்
நிலையாதகொள்ளிவட்டங்கறங்கெனநிமிடத்தின்க
ணலமாருமிறைவனாணையாலுயிர்நடக்குமன்றே.

வெளிப்பொருள். (அஅ)

சூக்குமதேகத்திற் றூல தேக முண்டாமென்று சொல்லுஞ் சைவ பவுராணிக மதானு சாரியாசாரியர்கள் மதம் பூர்வபக்ஷமாக மறுத்துச் சாதாரண புவன விகாரத்திற் சூக்குமதேக நிமித்தமாக வுண்

டாந் தூலதேகமென்னுஞ் சுத்தசைவ சித்தாந்தியாசாரியர் மதம் உத்தரபக்ஷமாக வுத்தரிக்கின்றார்.

அண்டசஞ்சுவேதசங்களுற்பிச்சஞ்சராயுசத்தோ
டெண்டருநாலெண்பத்துநான்குநூறுயிரத்தா
லுண்டுபல்யோனியெல்லாமொழித்துமானிடத்துதித்தல்
கண்டிடிற்கடலைக்கையானீந்தினன்காரியங்காண்.

(இ-ள்). அண்டசம்=முட்டையிலுண்டாகும்பக்ஷி முதலியன; சுவேதசம்=வேர்வையி லுண்டாகும் மின்மினிமுதலியன; உற்பிச்சம்=விதைகளைமேற் பிளந்துண்டாகும் மரம் முதலியன; சராயுசம்=கருப்பையிலுண்டாகும் மானுடர்முதலியன; நீந்தினன்காரியங்காண்=கடந்தவன் செய்திபோல. மற்றைய வெளிப்பொருள். (அகூ)

மனுடர் சென்மிக்கும் பூமியில் வந்து பிறந்தாலும் வேதாகம மார்க்கமில்லாத தேசத்துப் பிறவாது உள்ள தேசத்து உற்பவிப்பது மிகுந்த அறம்; அதிலுந் தாழ்ந்த சாதியை விட்டு வேதாதி மார்க்கிகளாய்ப் பிறந்து பாஷண்ட மதங்களிற் பரிசயம் பண்ணாத புண்ணியம் பண்ணுதல் அரிதென்று பாஷிக்கின்றார்.

நரர்பயிறேசந்தன்னினுன்மறைபயிலாநாட்டில்
விரவுதலொழிந்துதோன்றன்மிக்கபுண்ணியந்தானுகுந்
தரைதனிற்கீழைவிட்டுத்தவஞ்செய்சாதியினில்வந்து
பரசமயங்கட்செல்லாப்பாக்கியம்பண்ணொணதே.

வெளிப்பொருள். (கூ0)

வேதவிரோத மதங்களைத் தப்பி வேதாதிக்கருகமாய் வந்து பிறந்தாலும் வேதசார சைவசமயஞ் சாருத லரிதென்று சாற்றிச் சார்ந்தவர்களுக்குச் சிவசமாதி ஞானபூசையினுலே சிவனைப் பூசிப்போர் சதுர்த்த சிவதீக்ஷாவான்களென்று சாற்றுகின்றார்.

வாழ்வெனுமையல்விட்டுவறுமையாஞ்சிறுமைதப்பித்
தாழ்வெனுந்தன்மையோடுசைவமாஞ்சமயஞ்சாரு
மூழ்பெறலரிதுசாலவுயர்சிவஞானத்தாலே
போழிளமதியினுனைப்போற்றுவாரருள்பெற்றாரே.

வெளிப்பொருள். (கூக)

மனுடசென்ம மெடுத்தும் சிவனைப் பூசைபண்ணுதிருந்தால்
நிஷ்பலமென்று நிகழ்த்துகின்றார்.

மானுடப்பிறவிதானும்வருத்ததுமனவாக்காயத்
தானிடத்தைந்துமாடுமரன்பணிக்காகவன்றே
வானிடத்தவருமண்மேல்வந்தரன்றனையர்ச்சிப்ப
ரூனெடுத்துழலுமூமரொன்றையுமுணரார்ந்தோ.

வெளிப்பொருள். (கூஉ)

சரீரம் நிலையன்றென்று சாற்றுகின்றார்.

கருவினிலழிவதாயுங்கழிந்திடாதழிவதாயும்
பரிணமித்தழிவதாயும்பாலனாயழிவதாயுந்
தருணனாயழிவதாயுந்தானரைத்தழிவதாயு
முருவமேயழிவேயானாலுள்ளபோதேபாருய்ய.

(இ-ள்), கழிந்திடாதழிவதாயும்=ஜன்மிக்குமவதரத்தில் செத்துப் பிறக்கின்றதாயும்; உருவமேயழிவேயானால்=சரீரமப்படிச் சாவதானால்; உள்ளபோதேபாருய்ய=சரீரமிருக்குங் காலத்திலே பிழைக்கும் வகைதேடு. மற்றவை வெளிப்பொருள். (கூங)

மேலிதுவுமது.

ஒருபுலனுகரும்போதங்கொன்றிலையொன்றின்பாலும்
வருபயன்மாறிமாறிவந்திடுமெல்லாமாயு
மொருபொழுதுணரிலுண்டாயில்லதிவ்வல்லல்வாழ்க்கை
மருள்கனவதுவும்போலமாயும்பின்மாயுமன்றே.

(இ-ள்). ஒருபுலனுகரும் போதங்கொன்றிலை=சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களுக்குள் ஓரிந்திரியத்தால் ஒரு விஷயத்தைப் புசிக்குங்காலத்து வேறோ ரிந்திரியம் வேறோரிந்திரியத்தினாற் புசிக்கப்படாது; ஒன்றின் பாலும் வருபயன்=ஓரிந்திரியத்தினிடமாகச் சத்தாதிவிஷயங்களிலொன்றைப் பொருந்துமிடத்து விருப்பு வெறுப்புக்களினால் வருஞ் சுகதுக்க மோகங்கள்; மாறிமாறிவந்திடும்; (கேவலத்தில்) எல்லாமாயும்; இவ்வல்லல் வாழ்க்கை=இந்தச்சம்சாரம்; உணரில்=விசாரிக்கில்; ஒரு பொழுதுண்டாம் (ஒருபோது) இல்லது; மருள்கனவதுவும்போல=உருவெளி சொப்பனங்கள் போல; மாயும்=கெடும்; பின்பு மாயுமன்றே=அசத்தியம்போலத்தோற்றி அநித்தியமாம். (கூச)

இராசபோக மஞ்ஞான காரணமென்
றறைகின்றார்.

அரிசன்மபூசிமாலையணிந்துபொன்னுடைசாத்திப்
பரிசனம்பின்புசெல்லப்பாரகர்பரிக்கக்கொட்ட
வரிசின்னமூதத்தொங்கல்வந்திட வுணர்வுமாண்டு
பெரியவர்பேச்சுமின்றிக்கிடத்தலாற்பிணத்தோடொப்பார்.

வெளிப்பொருள். (கரு)

இராசசேவகமு மிம்மரியாதி யென்
றிசைக்கின்றார்.

பிணத்தினையொத்துவாழ்வோர்பின்னடைப்பிணங்களாகி
யுணக்கியேயுழல்வீருங்களுடலுயிருணர்வுமெல்லாங்
கணத்திடைத்தோற்றிமாயுங்காயமென்றறிந்தொருக்கால்
வணக்குநீரரனை யென்றும்வானவர் வணங்கவைப்பன்.

(இ-ள்). பிணத்தினை யொத்துவாழ்வோர் பின்=முன் சொன்ன பிணத்துக்கொத்த பிரபுக்கள் பிறகே; நடைப்பிணங்கள் போல=செல்லும் பிரேதங்களொப்ப; உடல்=தூலசரீரம்; உணர்வுயிர்; எல்லாம்=கருவிக்கிருப்பாகிய கண் செவி நாக்கு மூக்கு முதலிய தான மிவைகளெல்லாம்; உணக்கியே யுழல்வீர்=வாட்டியேதிரிவீர்; (இது கொண்டொருபயனுமில்லை) கணத்திடைத் தோற்றிமாயுங் காயமென் றறிந்தொருக்கால்=நிமிடத்திலுண்டாய் மடியுஞ் சரீரமென்று சிந்தித்தொருபோதாகிலும்; வணக்குநீரரனை=சிவனை வந்திக்கக்கடவீர் (சிவலோகங் கொடுத்து); என்றும் வானவர் வணங்கவைப்பன்=எக்காலத்தும் தேவர்கள் வந்திக்கத்தாபிப்பன்.

இந்த விருத்தத்திற்கு கணத்திடைத்தோன்றிநின்று கழியுமென்றறிந்து என்றும் பாடபேத முண்டு. (கசு)

## இரண்டாஞ் சூத்திரம்

முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஅக.

# மூன்றுஞ் சூத்திரம்.

*பதி பதார்த்தத்தை யிரண்டு சூத்திரத்தாற் பரீக்ஷித்துப்
பசு பதார்த்தத்தைப் பரீக்ஷிக்கின்றார்.*

உயிரெனப்படுவதிந்தவுடலின்வேறுளதாயுற்றுச்
செயிருறுமிச்சாஞானச்செய்திகளுடையதாகிப்
பயில்வுறுமின்பத்துன்பப்பலங்களுநுகரும்பார்க்கிற்
றுயிலொடுமஞ்சவத்தைப்படுமுண்மைதுரியாதீதம்.

(இ-ள்). (உண்டெனும்பொருளே யில்லதென்பது மாதலால்) உடலின்வேறுயிர்; (நீ இல்லையென்று சொல்லுதலால்); உயிரெனப் படுவதிந்த உடலின் வேறுளதாய்=ஆன்மாவென்னும் பொருள் இந்தச் சரீரத்துக் கன்னியமாயுண்டாய்;

அதெப்படிச் சொன்னீர்? முக்காலத்து மில்லாத முயற்கொம்பு இல்லையென்று தள்ளப்பட்டதில்லையோ? சத்தியம், நீ சாற்றியது; முயலினது கொம்பு முயற்கொம்பென்று ஆறும் வேற்றுமைத் தொகைபண்ணி இல்லை யென்று தள்ளியதன்று; முயலிற் கோ முதலானவற்றிற் காணப்பட்ட கொம்பில்லை யென்று தள்ளியதாதலால், இல்லையென்று சொல்லுதலால் அப்படி யான்மா வுண்டாய்;

உற்று=சம்யோக சமவாய சம்பந்தங்கள் சாற்றப்படாவாகையால், போக்கிய போத்திருவத்துவ சம்பத்தியாய்ப் பொருந்தி; செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகி=மலத்தினால் மலினமாகப் பண்ணப்பட்ட முத்தொழி லுடையதாகி; பயில்வுறு மின்பத்துன்பப் பலன்களும் நுகரும்=பழகிய சுகதுக்கங்களையு மனுபவிக்கும்; பார்க்கில்=விசாரிக்கில்; துயிலொடு மஞ்சவத்தைப்படும்=நித்திரைப்பண்ணுமிடத்து (இனிமேல் விஸ்தரித்துச் சொல்லப்படும்) அஞ்சவத்தைகளைப் பொருந்தும்; உண்மை துரியாதீதம்= உயிரினதி லட்சணம் பசுத்துவ முற்றறியாமை, சிவத்துவம் முற்றறிகை. (க)

பரமதசங்கையு முத்தரமுமாய்ப் படிக்கின்றார்.

உடலின்வேறுயிரோணிந்தவுடலன்றோவுணர்வதென்னி
லுடல்சவமானபோதுமுடலினுக்குணர்வுண்டாகு
முடலினுள்வாயுப்போனலுணர்ச்சியின்றுடலுக்கென்னி
லுடலினுள்வாயுப்போகாதுறகத்துமுணர்வதின்றே.

வெளிப்பொருள். (உ)

திருச்சியமாயிருக்கின்ற சரீரமான்மா வென்பதடாது; திருக்கு ரூபமாயிருக்கின்ற இந்திரியங்களே ஆன்மா வென்று லோகாயத விசேடனு யிருக்கின்ற ஒருவன் சொல்ல மறுத் துணர்த்துகின்றார்.

அறிவதைம்பொறியேயென்னிலுறக்கத்தினறியாவாகு
மறிவதுமொன்றென்றாகவொன்றென்றாயறியுமென்னி
னறிவுகளொன்றையொன்றங்கறிந்திடாவைந்தையுங்கொண்
டறிவதொன்றுண்டதான்மாவைம்பொறியறிந்திடாவே.

(இ-ள்) அறிவதைம் பொறியே யென்னில்=ஆன்மா வென்று நீர் சொல்லிய பொருளின தறிதற் றொழிலை யிந்திரியங்கள் தானே பண்ணுவது போல எங்களுக்குத் தோற்றுதலால் இந்திரியந் தானே யான்மா வென்று நீ சொல்லில்; உறக்கத்தி லறியாவாகும்=நித்தையி லிந்திரியங்க ளறியாவாகும்; (ஆதலினால், இந்திரியங்க ளான்மா வன்று, இந்திரியத்துக்கு வேறாய் நீர் சொல்லுமான்மா நித்திரையி லறியா திருப்பானேன்? மல தோஷத்தா லென்பீராகில், எங்களிந்திரிய வான்மாவும் தாமதகுண தோஷத்தால் என்று சமாதானம் நீ சொல்லில்); அறிவது மொன்றொன்றாக=பஞ்சேந்திரியங்களான்மா வென்றாலும் அவைக ளறிவதோ ரிந்திரியம்; சத்தாதி விஷயத்தில் ஒரு விஷயமாக அந்தச்சமயத்தில் அந்த விஷயத்திலே நாலு மான்மா வல்லாதேபோம்; ஒன்றொன்று யறியு மென்னில்=(வரகோஷ்டி நியாயத்தால்) ஓரிந்திரிய மொரு விஷயமாயறியும், அதனால் ஐந்துங் கூடி யான்மா வென்னில், ஒரூரி லைந்தூரவர்கள் போல ஒருகாலத்து மாறுபடுதலாலும்; ஒன்றை யொன்றங் கறிந்திடா; ஆதலானும் ஐந்தையுங் கருவியாகக் கொண்டறிவதோ ரறிவுண்டு, அந்த வறிவான்மா; ஐம்பொறி யறிந்திடாவே=பஞ்சேந்திரியங்களும் கருவியாதலால் கர்த்தாவாக அறியா.

கடசடக நியாயத்தினால் சரீரத்துக்குப்பிராண வாயுவே யான்மா வென்னுங் கௌள கன்ம யோகியை மறுத் துணர்த்துகின்றார்.

அறிந்திடும்பிராணவாயுவடங்குதல்விடுதல்செய்தா
லறிந்திடாவுடலுறக்கத்தறிவின்மைகரணமின்மை
யறிந்திடுமுதலியாகிலதுநிற்கக்கரணம்போகா
வறிந்திடும்பிராணன்றன்னையடக்கியும்விட்டுமான்மா.

(இ-ள்). பிராணவாயுவடங்குதல் விடுதல்செய்து=உச்சுவாசநிச்சு வாசங்களைப் பண்ணி; (அறிந்திடுமதனு லதுவேயான்மா) அறிந்திடாதுட லுறக்கத்து=சரீரத் துபாதியுற்ற நித்திரையிற் சுருங்கி விரிந்து தோற்று ம் பிராணவாயு உணராது; அறிவின்மை கரணமின்மை=இந்திரியவொ ழிவினுலுணராதென்று நீ சொல்லில்; அறிந்திடு முதலியாகி லது நிற்கக் கரணம் போகா=பிராணவாயுவறிதற் கர்த்தவாகில் அது வியாத்தமாய் நிற்கக் கருவிபோகாது; (அதற்கன்னியமாகு மான்மா)பிராணன்றன்னை =பிராணவாயுவை;அடக்கியும் விட்டும்=சுருச்கியும் விரித்தும் தோற்று வித்து; அறிந்திடும்=புலப்படுத்தும்; (அதனுற் புலமாய்) அறியப்படும் பொருள் அறியும் பொருளாகாது. (ஆல்-அசை). (ச)

மூன்ருஞ்சூத்திரம் முற்றுப்பெற்றது.

ஆ_ திருவிருத்தம்-கககை.

# நான்காஞ் சூத்திரம்.

சித்தாம்ச மனசுதானே யான்மாவென்னு முலோகாயதர்க்கு ளொரு வனையும், அகங்காரான்ம வாதியாகும் வைசேடிகனையும், புத்தி யான்ம வாதியாகும் நையாயிகனையும்; புத்தி விருத்தியான்ம வாதி யாகும் பவுத்தனையும் மறுத்துணர்த்து கின்ருர்.

உணர்வனகரணமென்னிலொன்றையொன்றுணராவெவ்வே
றணைதருஞ்செயல்களுன்குமறிந்தவையடக்கியாக்கிப்
புணருமுட்கரணமாக்கிப்புறக்கருவியினும்போக்கி
யிணைதருமிவற்றின்வேருயானெனதென்பதான்மா.

(இ-ள்). உணர்வனகரண மென்னில்=அறிதற் ருெழிலைப் பண்ணு வது அந்தக் கரணமென் கின்ருயானுல்; ஒன்றையொன் றுணரா=ஓரந் தக்கரணத்தை ஓரந்தகரணமுணர்ந்து ஒன்ருேடொன்று கூடி ஓரந் தக்கரணத்தின் ருெழிலை யோரந்தக் கரணம் பண்ணுது; வெவ்வே றணைதருஞ் செயல்களுன்கும்=சிந்தித்து விகற்பித்தல் சங்கற்பித்தல் அபிமானித்தல், நிச்சயித்தல், என்கின்ற நான்கு வியாபாரங்களையும், கர்த்தாவாகிய ஆன்மா வேவச் சிற்சத்தியாகிய கரணத்தோடு பொருந் தித் தனித்தனி கரணமாய்ச் சம்பந்திக்கும்; (கரணங்கர்த்தாவாகாது) அறிந்தவை யடக்கி யாக்கிப்புணரு முட் கரணமாக்கிப் புறக்கருவியினும் போக்கி யிணைதருமிவற்றின் வேருயானென தென்பதான்மா=யாதொ

ன்று அந்த அந்தக்கரணங்களை யறிந்து சுருக்கி விரித்துப் பொருந்துமுட் கருவியாகப் பண்ணிச் சுகதுக்கங்களை யுள்ளனுபவித்து அச் சுகதுக்கங்களை மேன்மேல்வரும்படி வெகிரிந்திரியங்களிலே விட்டு மாலை சந்தனம் வனிதைகளோடு பொருந்தப் பண்ணும் இந்த வந்தக் கரணங்கட் கன்னியமாய்த் தற்பொருளறிவினால் யானென்றும், புறப்பொரு ளறிவினாலெனது சித்தம், எனதுமனம், எனதகங்காரம் எனது புத்தி என்பததுவேயுயிர். (ச)

பாசஞானத்தை நீங்கி நின்ற இடம் பசுஞானமென்றும்
பசுஞானத்தை நீங்கி நின்றவிடம் பதிஞானம்
என்றும் பகர்கின்றார்.

கருவியாமனமும்புத்தியாங்காரஞ்சித்தநான்கு
மருவியான்மாவேயென்னவருந்தீபமெனத்தெரிந்தங்
கொருவியான்மாவினுண்மையுணர்ந்தவர்தமையுணர்ந்தோர்
தருமிதுபசுஞானம்பின்சிவஞானந்தனக்குமேலாம்.

(இ-ள்). கருவியாமனமும் புத்தியாங்காரஞ் சித்தநான்கும்; (அவற்றிற்கு மந்தக் கரணங்களாய் நிற்குங் கலாதிகளும்); மருவி = ஆன்மாவினோடு பொருந்திப் பிரிக்கப்படாது; ஆன்மாவே யென்னவரும் = ஆன்மாவைப்போலத் தோற்றும்; (அவைகளை) தீபமெனத்தெரிந்து = சுத்தவித்தையினால் விவேகித்து வியஞ்சகமாகக்கண்டு; ஒருவி = நீங்கினபோலப்பாவித்து; ஆன்மாவினுண்மை யுணர்ந்தவர் தமையுணர்ந்தோர் = உயிரினது சின்மாத்திரலக்ஷணத்தை யறிந்தவர்கள் ஸ்வஸ்வரூபத்தை யறிந்தவர்கள்.

வருமிது பசுஞானம் = ஆன்மரூபத்தை யறியும் இந்தஞானம் பசுஞானம், அஃதெப்படிச் சொன்னீர்? இருதயத்திருக்கும் நாதத்திற் பிரகாசித்த சுத்தவித்தையோடு தொட்டு நின்று, மணியானது பிரபையினாற்போல வியாபாரத்துவாரத்தால் மேலெழுந்து சுத்த விஷயமாய்ப் போய்ப் பதிஞானம் கொடுத்து நீங்குதலாற் பாசஞான மென்கின்ற மனசு முதலிய பாசஞானமும் அதனால் விளங்கப்பட்ட பசுஞானமும் ஒரு பிரகாரத்தாற் பதிஞானமென்று சொல்லப்படு மாதலானும், மனசு கூடிய சமனை நீங்கியவிடத்தில் உயிர் ஆன்மாவென்று சொல்லப்படும்; சுத்தவித்தைக்குக் கீழ் மலம் நீங்கலால் பசுவென்று சொல்லப்படாது; ஆகையால், பாசஞானம் விளங்குதலாற் பசுவை விஷயீகரித்தலாற் பசுஞானமென்று இருவிதத்தினாலும் சமனாதீத ஆன்மஞானம்

பசுஞானமென்று சொல்லப்படாது; சத்தியம் நீ சாற்றியது; மாயைக்கு மேற் சுத்தவித்தைக்குக்கீழ் மலமற்றாலும் மலவாசனை தாக்கி நிற்கும் சிற்சத்தியினால் அவ்வாசனை தாக்கிய ஆன்மாவையறியுமறிவு கேவலம் ஆன்மஞானமானாலும் ஒரு பிரகாரம் பசுஞானமென்றுஞ் சொல்லப்படும்.

சிவஞானந் தனக்குமேலாம்=சிவசத்தியால் விளங்கப்பட்டுச் சிவசத்தி ரூபமாயிருக்கின்ற ஆன்மாவைச் சிவனாகப்பண்ணி அவனைச் சிவனோடு கூடச் சிவனாக அறியும் அறிவாதலாலும், பதிஞான மென்னும் சிவஞானமும் முன்சொல்லிய ஆன்ம ஞானமூலத்து முளைத்து உபரி விரியும்.

(உ)

சுத்த தத்துவங்கள் அந்தக்கரணங்களையும் புருடனையும் பிரேரிக்கு முறைமை யறிவிக்கின்றார்.

அவ்வுடனுவ்வுமவ்வுமனம்புத்தியாங்காரங்கள்
செவ்வியவிந்துநாதஞ்சித்தமோடுள்ளமாகு
மொவ்வெனுமெழுத்தாமைந்துமுணர்வுதித்தொடுங்குமாறு
பவ்வமுந்திரையும்போலும்பார்க்கிலிப்பண்புதோன்றும்.

(இ-ள்). அவ்வுடனுவ்வு மவ்வு மனம்புத்தி யாங்காரங்கள்=பஞ்சப் பிரணவ கலைக்குள் வைகரிவாக்குக்கு மூலமாகும் அகாரமாகிய சுத்த வித்தை மனசைச் செலுத்தும், மத்திமை வாக்குக்கு மூலமாகும் உகார மாகிய வீசுரம் புத்தியைச் செலுத்தும், பைசந்தி வாக்குக்கு மூலமாகும் மகாரமாகிய சாதாக்கியம் அகங்காரத்தைச் செலுத்தும்; செவ்விய விந்துநாதஞ் சித்தமோ டுள்ளமாகும்=சூக்குமை வாக்குக்கு மூலமாகும் விந்துவாகிய சத்தி சித்தத்தைச் செலுத்தும், அதிசூக்கும வாக்குக்கு மூலமாகும் நாதமாகிய சிவம் புருடனைச் செலுத்தும்; ஒவ்வெனு மெழுத்தாமைந்தும்=பிரித்துப் பார்க்குமிடத்து ஐந்தாகும் பிரணவகலைகள் கூட்டி யுச்சரித்தா லோங்காரமாம்; உணர் வுதித்தொடுங்குமாறு=பவ்வமும் திரையும்போலும்=பிரணவத்தில் அகாரமுள் வைத் திரேசகமாய் இடையி லெழுந்த உச்சுவாச ரூப மகா சகல மத்தியத்த நித்திய சகல முண்டாய்ப் பிரணவத்தி னுகாரமுள் வைத்துப் பூரகமாய்ப் பிங்கலையிற் புகுந்து நிச்சுவாச ரூப மகா சகல மத்தியத்த நித்திய கேவலமா முறைமை சமுத்திரமுந் தரங்கமு மொப்பாகும்; பார்க்கில்=(யோகமார்க்கத்தினால்) அந்தச் சகல கேவல மிரண்டையுந் தடுத்துச் சுழு முனை திறந்து கும்பித்து நோக்கில்; இப்பண்புந் தோன்றும்=மகாரமொற்றுமயமாம்;

சித்தமுண்டாம்=சுத்த தத்துவங்களுள் மன முதலியவற்றைக் கலாதித் துவாரத்திஞலே செலுத்து மென்பது காண்பிப்பாம்.

இச்சாசத்தி காரியம் ஈசுர தத்துவம், ஞானசத்தி காரியம் சுத்தவித்தியாதத்துவம், கிரியா சத்திகாரியம் சத்திதத்துவம், ஈசுரதத்துவம் இராகதத்துவத்தைச் செலுத்தும், சுத்தவித்தியாதத்துவம் வித்தியாதத்துவத்தைச் செலுத்தும், சத்திதத்துவங் கலாதத்துவத்தைச் செலுத்தும், இராகதத்துவம் மனதத்துவத்தைச் செலுத்தும், வித்தியாதத்துவம் புத்திதத்துவத்தைச்செலுத்தும், கலாதத்துவம் அகங்கார தத்துவத்தைச்செலுத்தும், மனோபுத்தி யாங்காரங்களாற் புருஷதத்துவ வியாபாரமுண்டாம்.

காலத்தையும் நியதியையுஞ் சத்திதத்துவம் செலுத்தும்; வித்தையைச் சுத்தவித்தை செலுத்தும்; இராகத்தை ஈசுரதத்துவஞ் செலுத்தும்; குணதத்துவத்தைச் சிவதத்துவஞ் செலுத்தும்;புருஷ தத்துவத்தைச் சாதாக்கிய தத்துவஞ் செலுத்தும் என்றுஞ் சிலவசனம். (௩)

சுத்த தத்துவ மைந்துஞ் சடமாதலால் சுவதந்திரமாய்ச் சேட்டியா தாகையாற் றேவதானுட்டானத்திஞலே சேட்டிக்கு மென்பது தரிசிப்பிக்கின்றார்.

அயனரியரனுமீசர்சதாசிவமதிதெய்வங்க
ளுயவருமவ்வோடெவ்வுமவ்விந்துநாதங்கட்குப்
பயனுறுமஞ்சிலான்மாப்பரவிடிலசித்தாம்பார்க்கிற்
சயமுறுவளியிரண்டுந்தவிர்த்துறிற்றுனுந்தோன்றும்.

(இ-ள்). உயவருமவ்வோ டெவ்வுமவ் விந்துநாதங்கட்கு அதிதெய்வங்கள் அயனரி யரனு மீசர் சதாசிவம் பயனுறுமஞ் சிலான்மாப் பரவிடி லசித்தாம் பார்க்கில்=இச்சாஞானக் கிரியாபலங்களை மனுதித்துவாரத்திஞலே விளக்கும் அகாரமுதலிய வைந்தில் ஆன்மாப் பொருந்திச்காணுமிடத்துச்சடமாம்; சயமுறு வளியிரண்டுந் தவிர்த்துறிற்றுனுந் தோன்றும்=இடைபிங்கலையி லெழுந்தொடுங்கும் அகார சரீர ரேசகம், உகார சரீர பூரகம் இவை யிரண்டினையும் நிறுத்தில் வாயுவை வெல்லும் கும்பக சரீர அசபாமந்திர மத்தியபீச விந்து விழுங்கிய மகாரந் தோன்றும், அப்போது சர்வபாசமுங் கழன்று சிவத்தோடு சேர்ந்து சிவத்துவத்துக் கருகமாகிய சின்மாத்திரமாச் சேஷித்து ஆன்மாச் சுவசம் வேதனுப் பிரத்தியட்சத்திற் பிரதிபாசிப்பன். (௪)

மேற்பஞ்ச கந்தக் கொத்துக் கூட்டமே யான்மாவென்கின்ற
பவுத்தன்மதம் பராகரிக்கின்றார்.

ஆன்மாவின்வடிவுதானுமனேகார்த்தகூட்டமென்னிற்
பார்ப்பார்கட்கான்மாவின்றாய்ப்பலபொருளுண்மையாகுஞ்
சேர்ப்பாயபலவேயுண்மையென்றிடிற்சென்றிவற்றை [மே.
யோர்ப்பான்வேறுணர்வோர்க்கெல்லாமுணர்பொருள்வேறதா

(இ-ள்). ஆன்மாவின் வடிதானு மனேகார்த்த கூட்டமென்னில்= ஞானசந்ததியாகிய விஞ்ஞான கந்தம், வாசனு சமூகமாகிய சம்ஸ்கார கந்தம், சுகபுத்தி துக்கபுத்தி உபேட்சா புத்திகளாகிய வேதனுகந்தம், சத்த சமூகமாகிய சம்ஞாகந்தம், மூர்த்தபூத சமூகமாகிய ரூப கந்தம் என்னு மிவ்வைந்து கொத்தினும் அக்கொத்துக் கபின்னமாகி வரும் ஞான சமுதாயபுத்தியே யான்மா வென்னில்; பார்ப்பார்கட் கான்மா வின்றாய்ப் பல பொருளுண்மை யாகும்=பஞ்சகந்த விவேகம் பண்ணி ஆன்மதரிசனம் பண்ணும் பேர்க்கு உயிரென்ப தொன்றின்றிப் பஞ்ச கந்த பதார்த்தமாத்திரமே யுள்ள பொருளாம் (சமுதாய மென்றொரு வஸ்து சமுதாயியை விட்டொன்றில்லாத படியாலே); சேர்ப்பாயபல வேயுண்மை யென்றிடில்=கூட்ட மென்றொன் றில்லாதபடியினாலே கூடிய பலபொருளே யான்மாவென்னில்; சென்றி வற்றை யோர்ப் பான்வேறுணர்வோர்க் கெல்லா முணர் பொருள் வேறதாமே=அனு ன்ம வான்ம விவேகதரிசனம் பண்ணும் பேராகிய சகலர்க்கும் பஞ்ச கந்தத்தைப் பொருந்திப் பார்ப்பவ னான்மா பின்னப்பொருள், பார்க் கப்படும் பஞ்சகந்தமும் பின்னப் பொருளேயாம். (௩)

சிவாத்துவைதிமதந்தரிசிப்பித்துத்
திரஸ்கரிக்கின்றார்.

அறிவிச்சைசெயல்களெல்லாமடைந்தனல்வெம்மையும்போ
றாறியுற்றங்கனேகானேககுணகுணிபாவமாகி [ற்
நெறியுற்றுநிற்குமென்னினிகழ்புலன்கரணமெல்லாஞ்
செறிவுற்றங்கறிவுகொள்ளவேண்டுமோசிவனார்க்கே

(இ-ள்). அறிவிச்சை செயல்களெல்லா மடைந்தனல் வெம்மையு ம்போல்=அக்கினி யேகமாயிருந்து அனேகமாயங்கங் குட்டண குண ததைப் பொருந்திநின்றாற் போலச் சிவன் ஒன்றே யனேகமாய் ஞா

னேச்சாக்கிரியைகளை யங்கங்குப்பொருந்தி; குறியுற்று=அடையாள முடைத்தாய்; அனேகானேக குணகுணிபாவமாகி=அனந்த குணத் தன்மை யநந்தகுணித்தன்மையாகி; நெறியுற்று நிற்கு மென்னில்= விஷயமார்க்கத்தைப் பொருந்தியிருக்குமென்னில்; சிவனுர்க்கே=பே ரறிவாகுஞ் சிவமாகு முயிர்க்குத்தானே; நிகழ்புலன் கரணமெல்லாஞ் செறிவுற்றங்கறிவு கொள்ளவேண்டுமோ=விளங்காநிற்கும்விடயேந்தி ரியங்கள் முதலியவற்றைப் பொருந்திச் சிற்றறிவைச் செறியவேண்டு மோ. (கூ)

சாங்கியன்மதந்தழுவித்தள்ளுகின்றார்.

குணங்களையின்றியொன்றுங்குறியுடைத்தான்மாவென்னி
னிணங்கிடாவிச்சாஞானக்கிரியைகளிவையுடற்கட்
பிணங்கிடுஞ்சன்னிதிக்கணெனிற்பிணத்துறக்கத்தின்று
முணங்கிடுங்கரணமென்னிற்சன்னிதியொழிந்ததன்றே.

(இ-ள்). குணங்களையின்றி ஒன்றுங்குறியுடைத்து ஆன்மாவென் னில்=ஞானேச்சாக் கிரியா சத்திகளாகிய குணங்களைத்தவிர வேக சின் மாத்திரமுயிரென்று நீ சொல்லில்; இணங்கிடா விச்சாஞானக்கிரியை கள்=சுவசம்வேதனுப்பிரத்தியக்ஷ சித்தமாகிய இச்சாஞானக்கிரியாகா ரியம் சத்திகாரணமன்றிப் பொருந்தா; இவையுடற்கட்பிணங்கிடுஞ் சன் னிதிக்கணெனில்=இந்த ஞானேச்சாப்பிரயத்தினங்கள் ஆன்ம சன்னி தான மாத்திரத்தில்; உடற்கண்=சூக்குமதேகமாயிருக்கும் புத்திமனோ கங்காரங்கள் பொருந்திய தூலதேகத்திலுண்டாமென்னில்; பிணத்துறக் கத்தின்றும்=சவமானகாலத்தும் நித்திரைபண்ணுங்காலத்தும் சரீரமிரு ந்தபடியிருக்கவும் ஞானமுதலிய காரணங்காணுது; உணங்கிடுங் கரண மென்னில்=மனோபுத்தி யகங்காரங்கள் வாடு மதனுற் காணுதென்னில்; சந்நிதி யொழிந்த தன்றே=ஆன்மாவினது சந்நிதானம் விபுவாகையா லற்றதில்லை, அதனுற் பிரதிஞ்ஞாபங்கமென்னும் நிக்கிரகத்தானம்வரும்.

மேலிதுவுமது.

சன்னிதிகுணமதாகுந்தானென்போலென்னிற்காந்த
முன்னிரும்பென்றுயிர்க்குமுறைமையுண்டகற்றலின்று
முன்னுதலொடுங்கலோடலிருத்தலேகிடத்தனிற்ற
லென்னுமித்தொழில்கண்மற்றுமியற்றுவதான்மாவென்னே.

சன்னிதிகுணமதாகும்=சன்னிதானமுண்டாயிருக்கவுங் காரியங் காணுமென்று நீர்சொல்லிய துண்மைதானே, ஒருவஸ்துவுக்கு ஒரு

வஸ்து இருக்குமிடத்துள்ளமை மாத்திரம் இவ்விடத்துச் சன்னிதி யென்றுசற்பாவத்தோடுகாரிய சாமர்த்திய சத்தி சம்பந்தியாயிருத்தல், அதுதா னென்போ லென்னில்,

காந்தமு னிரும்பென்ருய்=காந்தசத்தி இரும்பு சம்பந்தம்போ லென்று சொன்னுய்; ஈர்க்கு முறைமையுண்டு=அந்தக் காந்தத்திற்கு இரும்பை யிழுக்குஞ் சத்தியுண்டு; அகற்றலின்ருமம=விடுஞ்சத்தி இல்லை;

ஆகிலும், அதனுற் கர்த்திருத்துவங் காந்தத்துக்குக் காணப்பட்டது; காந்தத்துக்கு நீர் சொல்லிய கர்த்திருத்துவமில்லை; இருவருக்குஞ் சம்மதமான சத்திமாத்திரமே; இரும்புக்கே யசைதற்கிரியாவேசமாகிய கர்த்திருத்துவம், அப்படி யான்மாவுக்குச் சத்திமாத்திரமே; அப்படிச் சரீரத்துக்கே கர்த்திருத்துவம்; சரீரமே ஞானேச்சாக்கிரியா காரியங்களைத் தனது தொழில்களாகத்தானே பண்ணும், அது நன்றன்று; சிற்பதார்த்தங்கட்கு அசிற் பதார்த்தங்களினது அசைதற்கிரியா கன்ம காரியத்தைப் பண்ணும், இச்சசாஞானக் கிரியாத்தொழில்களைத் தனதாக ஸ்வசம்வேதனமாகப்பண்ணும் சிற்சத்தியே கர்த்திருத்துவம் ஆகையால் சித்துக்கே கர்த்திருத்துவம் சடத்துக்குக் கன்மத்துவமன்றிக் கர்த்திருத்துவமில்லை; ஆகிற் காந்தத்துக்குக் கர்த்திருத்துவ மெப்படிச் சொன்னீர்? உள்ளது, சித்தாகிய கர்த்தாவினுடையவுஞ் சிற்சத்தியாகிய கரணத்தினுடையவும் சம்பந்தத்தினுலேசடத்துக்குக் கர்த்திருத்துவமும் கரணத்துவமுஞ் செயற்கையாக உபசரிக்கப்படும்; கன்மத்துவ மாத்திர மியற்கையாய் வாஸ்தவமாயிருக்கும், ஆதலால்;

உன்னுத லொடுங்கலோட விருத்தலே கிடத்தல் நிற்றல்; என்னுமித் தொழில்கண் மற்றும்=இவைமுதலாஞ் சரீரத்தினது அசைதற்கிரியைகளை; இயற்றுவ தான்மாவென்னே=தனது சிற்சத்தியினது ஞானேத்தியோகக் கிரியா சங்கற்பேச்சைகளினுலே பண்ணுவதுயிரே. (அ)

உயி ருருவாயிருக்குமென்னும் பவுராணிக மதம்படித்துப் பராகரிக்கின்ருர்.

உருவுயிரென்னிலிந்தவுடலினிற்காணவேண்டும்
வருவதுபரிணுமத்தாயனித்தமாம்பூதமாகுங்
கருவினினுமழையுமாறுங்காட்டிடவேண்டுங்கண்ணின்
மருவிடாதென்னினுன்றன்வாயினுலுருவன்றென்னே.
வெளிப்பொருள். (கூ)

பரமாணு முதற் பதார்த்தம் போலச் சூக்கும வுருவாய்
நேத்திரத்திற் றேன்றுதிருக்குமென்ன
மறுத் துணர்த்துகினறூர்.

சூக்குமவுருவதென்னிற்றூலகாரணமதாகு
மாக்கியமனுதிதன்மாத்திரைவடிவசேதனம்பின்
னீக்கமில்சூக்குமத்தேநிற்பதோருருவுண்டென்னி
லாக்கிடுமுருவுமெல்லாமசித்துமாயனித்தமாமே.

(இ-ள்). சூக்கும வுருவதென்னில்=சூக்குமசரீரந்தானே யான்மாவென்னில்; (முன்சொல்லிய சிலவாசிரியர் மதத்தினுல்); தூல காரணமதாகும்=தூலசரீரத்துக்கு முதற்காரணமாம்; ஆக்கிய மனுதி தன் மாத்திரைவடிவ சேதனம்=சூக்கும தேகமாகப் பண்ணப்பட்ட கலை முதற் பிருதிவி முடிவாகிய தத்துவங்களைத் தங்களுள் வைத்த அந்தக் கரணங்கள் தன்மாத்திரைகள் சடம்; (ஆன்மாவாகா); பின்னீக்கமில் சூக்குமத்தே நிற்பதோ ருருவுண்டென்னில்=இப்போ தான்மா வல்லவென்று தள்ளிய சூக்கும சரீரத்துக்கு ளிருக்குமொரு வடிவுண்டு அதுவே ஆன்மாவென்று நீ சொல்லில்; (அதுவிசாரிக்கு மிடத்தில்) ஆக்கிடுமுருவும்=சிவதத்துவ பஞ்சகரூப பரதேகமாம்; அதெல்லா மசித்துமாயநித்தமாமே=சிவதத்துவமுற்றும் சடமாய் நாசமாமே; ஆன்மசத்தத்துக்கு விபு நித்தியசித்தென்று பொருளாதலாற் பரதேக மெப்படி யான்மாவாம், ஆகாதுதானே. (கo)

உயிரருவுருவென்று கௌளகன் சொல்ல
மறுத்துணர்த்துகின்றூர்.

அருவுருவென்னிலான்மாவருவுருவாவதின்று
முருவருவாகாதாகுமொருபொருட்கிரண்டுதன்மை
வருவதுமில்லைகாட்டவன்னிபோன்மருவுமென்னி
லுருவமுங்காணவேண்டுமுண்மையுமொழிந்துபோமே.

(இ-ள்). அருவுருவென்னிலான்மா=உயிரருவமாயுமுருவமாயுமிருக்குமென்று நீசொல்லில்; அருவுருவாவதின்றும்=நிஷ்களமாயிருக்கின்ற பொருள் தானே தற்காலத்துச் சொரூபத்தினுலே சகளமாகாது (அப்படி) உருவருவாகாதாகும்=சகள நிஷ்களமாகாது; (விருத்ததன்மமாகையால்) ஒருபொருட் கிரண்டு தன்மை வருவது மில்லை=எக்காலத்து மொருபொருட்கு விருத்த தன்மங்கள் இரண்டுண்டாகா;

அப்படியாகிற் சிவனுக்குச் சகள நிஷ்களத்துவ மெப்படிச் சொல்லப்படும்? உள்ளது, நிஷ்களத்தைக் குறித்துச் சகளமென்றும், சகளத்தைக்குறித்து நிஷ்களமென்றும் உத்தியுத்த சிவத்திலுரைக்கப்பட்டது; உதாசீன சத்த சிவத்தில் இருக்கும் நிஷ்களத்துவமும் பிரவிர்த்தசிவத்தில் இருக்கும் சகளத்துவமும் தற்காலத்திருக்குமென்று பொருளன்று; பிரவிர்த்தசிவத்திலும் அட்டத்திரிம்சத் சத்திகலா சாகித்திய மாத்திரத்தைக்குறித்துச் சகளத்துவம், மாயாகலா ராகித்திய மாத்திரத்தைக் குறித்துப் பரமார்த்தமா யிருக்கும் நிஷ்களத்துவம்;

காட்டவன்னி போன்மருவு மென்னில்=காட்டமும் வன்னியும் ஏகபதார்த்தமன்று, அப்படி அங்கீகரித்தாலும்; உருவமுங் காணவேண்டு முண்மையு மழிந்து போமே=காட்டப் பகுப்புக் கண்ணிஞற் காணப்படுவதுபோல, உயிரினது உருவப் பகுப்புத் திருட்டிக்குத் தரிசனப்பட வேண்டும், அநித்திய மாயும் விடும். (சக)

வேறுகாரணமெடுத்துரைக்க மறுத்
துணர்த்துகின்ருர்.

சந்திரன்வடிவம்போலத்தானருவுருவமென்னில்
வந்துநங்கண்ணிற்ருேன்றும்வடிவுளதாமுயிர்க்கு
மிந்தவூனுருவந்தாஞயெழுவதுமுயிரோயென்னிற்
பந்தமாயசித்தாயான்மாப்பவுதிகமாகுமன்றே.

(இ-ள்). சந்திரன் வடிவம்போலத் தானருவுருவ மென்னில்= அமாவாசை பூரணைகளிலே சந்திரன்வடிவு போல உயிர் அருவுருவமென்று நீ சொல்லில்; (பூரணையிலே சந்திரனுக்குப் போல) வந்து நங்கண்ணிற் ருேன்றும் வடிவுளதா முயிர்க்கும் இந்த ஊனுருவந்தாஞ யெழுவது முயிரோ யென்னில்=இப்போது காணப்படுஞ் சடகாரியமாய்ப் பரிணமிப்பது அருவாகிய ஆன்மாவாதலால் உயிர் அருவுரு வென்று நீ சொல்லில்; பந்தமா யசித்தாயான்மாப் பவுதிகமாகு மன்றே=உயிர் பந்தமாய்ச் சடமாய்ப் பூதோற் பத்தி மத்தாமே. (கஉ)

சேசுவர சாங்கியன்மதம்பாஷித்துப்
பராகரிக்கின்ருர்.

அருவவிகாரியான்மாவாகாயம்போலவென்னி
லுருவினைக்கட்டியாட்டியோட்டிமீட்டிலாவப்பண்ணி
மருவிநிற்பித்திருத்திக்கிடத்திமண்புரட்டிமற்றும்
பெருவிகாரங்களெல்லாந்தருவதென்பேசிடாயே.

(இ-ள்). அருவவிகாரி யான்மாவாகாயம் போலவென்னில்=ஆகாயம்போ லுயிருருவிலி திருவிலியென்று நீ சொல்லில் (சரீரத்தின்கண் பெருவிகாரமென்றுகூட்டுக). மற்றவை வெளிப்பொருள்.

இதனது தாற்பரியம் சிற்சத்தியினது சங்கற்ப ரூபமாய்த் திரிவற்ற அசைவற்ற விகாரத்தினாலே திரிவுற்ற வசைவுற்ற கட்டுதலாடுதல் ஓடுதன்முதலிய விகாரங்களைச் சரீரத்திற்பண்ணுமென்பதாம். (கங)

ஆன்மா அசித்தாய்ச்சித்தாய்ச் சிரயமாயிருப்பனென்னு
நையாயிக மீமாம்சமதம் நிதரிசித்து
நிராகரிக்கின்றார்.

அசித்தெனிலுணராதான்மாவசித்துச்சித்தாகுமென்னி
லசித்துச்சித்தாகாதாகுஞ்சித்தசித்தாவதில்லை
யசித்தொருபுறமாயொன்றிச்சித்தொருபுறமாய்நில்லா
தசித்துருச்சித்தேயென்னிலசித்தடைந்தறிவதின்றாம்.

(இ-ள்). சித்தெனில்=சிவனைப்போல நிருமலசித்தென்னில்; அசித்தறிந்தடைவ தின்றாம்=புறக்கரண முட்கரணங்களைப் பொருந்தி நின்றுணர்வதின்றாம்; மற்றவை வெளிப்பொருள். (கச)

உயிரணுரூபமென்னும் பாஞ்சராத்திரமதம் பாஷித்துத்
தூஷிக்கின்றார்.

உயிரினையணுவதென்னிலுடல்பலதுவாரமோடும்
பயில்வுறக்கட்டுணாதுபாரமும்பரித்துச்செல்லா
தயர்வுறுமசித்தாய்ப்பூதவணுக்களினொன்றதாகு
மியல்புறுமவயவத்தாலணுவுருவிறக்குமன்றே.

(இ-ள்). உயிரினை யணுவதென்னி லுடல்பல துவாரமோடும்=ஆன்மா அணுரூபியென்று நீ சொல்லில் சரீரங்களில் நவத்துவாரங்கள் ஒன்றில் நின்றும் புறப்பட்டுப் போம்; பயில் வுறக் கட்டுணாது=கிலேசசம்சாரம் பண்ணத் தங்கி நில்லாது; பாரமும் பரித்துச் செல்லாது=சரீரத்திற் சர்வாங்கமும்கலந்து நிற்றல் கூடாதாகையாற் சுமை தரித்துச் சரியாது; அயர் வுறுமசித்தாய்=அஞ்ஞானம் பொருந்திய சடமாய்; பூதவணுக்களி னொன்றதாகும்=பிருதிவிப்பரமாணு அப்புப்பரமாணு அக்கினிப்பரமாணு வாயுப்பரமாணுக்களிலே யாதாமொன்றாம்; அணுவுரு=அந்த அணுரூபி வஸ்து; இயல்புறு மயவவத்தால்=மூர்த்தத் தன்

மையாலெனும் ஏதுவாற் சித்தித் தியற்கை பொருந்திய சாம்சத் தன்மையாற் காண்பிக்கப்பட்ட காரியத்தன்மையால்; இறக்கு மன்றே= கெட்டுப்போம். (சரு)

பின்னுமவன் கருத்துரைத்து நிராகரிக்கின்றார்.

உடலினிலேகதேசியுயிரெனிலுருவாய்மாயும்
படர்வுறுமறிவின்றெங்குஞ்சுடரொளிப்பண்பதென்னிற்
சுடர்தொடிற்சுடுவெதெங்குந்தொட்டிடமறிவின்றாகு
மடர்புலனிடத்துமொக்கவறிவெழவேண்டுமென்றே.

வெளிப்பொருள். (கசு)

சங்கோசவிகா சதன்மியான்மா வென்னு மருகன்
மதமிசைத்தசைக்கின்றார்.

உருவினினிறைந்துநின்றங்குணர்ந்திடுமுயிரதென்னின்
மருவிடாதுறக்கம்வாயிலறிவொக்கவழங்கவேண்டும்
பெருகிடுஞ்சுருங்கும்போதம்பேருடற்சிற்றுடற்கண்
வருமுடற்குறைக்கவொக்கக்குறைந்துபின்மாயுமன்றே.

(இ-ள்). உருவினி னிறைந்து நின்றங் குணர்ந்திடு முயிர தென்னில் =சரீரத்துள் ளுயிரிருந்து சரீரமெங்கும் பூரித்தறியு மென்று நீ சொல்லில்; மருவிடாதுறக்கம்=அறிவற்ற நித்திரையைப் பொருந்தாது; (அதுவன்றியும்) வாயிலறிவொக்க வழங்கவேண்டும்= பஞ்சேந்திரியங்களுங் கிரமத்தி லுண்டாஞ் சத்தஞானம், பரிசஞானம், உருவஞானம், இரசஞானம், கந்தஞானம் ஐந்தையும் ஒருமிக்க உண்டாக்கவேண்டும் (முறுக்குப் பணியாரம் புசிக்குமிடத்து வேறிடத்துப் பிஞ்சுபிஞ்சு வருமஞ்சறிவுகளும் புஞ்சமாய்வருவது கண்டோமென்னில்) அங்கும் முறைமையி லறிதருனே நூறுதாமரையிதழூசியாற் குத்தினேனென்பது போலப் பகுத்தறித லரிதாதலால் ஒருமிக்கப்போலே தோன்றினது); அதுவன்றியும்

பேருடற் சிற்றுடற் கண்பெருகிடுஞ் சுருங்கும் போதம்=பெரிய காயத்தி லறிவு மலரும் சிறியகாயத்தில் அறிவு குவியும், அப்படி யாகட்டுமென்னில், சிலவிடத்திற் பேருடலுடையானுக்குச் சிற்றறிவும், சிற்றுட லுடையானுக்குப் பேரறிவும்; காணப்படுதலால் சங்கோசவிகாசஞ் சொல்லும் சமணமதம் சார மற்றதாதலால் அப்படிச் சாற்றப்படாது; அதுவன்றியும்

வருமுடற் குறைக்க வொக்கக் குறைந்து பின்மாயுமன்றே=தான் வந்து பொருந்துஞ் சரீரத்தைச் சிறிது சேதிக்க அந்தச் சரீரத்தோடு தானுஞ் சிறிது குறைந்து முற்றுஞ் சேதிக்கத் தானும் முற்றுங்குறைந்து நாசமாமே. (கஎ)

பட்டபாஸ்கரன்மதம் பராகரிக்கின்றார்.

எங்குந்தான்வியாபியாய்நின்றுணருமிவ்வான்வாவென்னிற்
றங்கிடுமவத்தைபோக்குவரவுகள்சாற்றவேண்டும்
பங்கமில்புலனென்றென்றாய்ப்பார்த்திடல்பகர்தல்வேண்டு
மிங்கெலாமொழிந்தானிற்பதெங்ஙனமியம்பவேண்டும்.

(இ-ள்) இவ்வான்மா=இந்தவுயிர்; எங்குந்தான் விபாபியாயுணருமென்னில்=எவ்விடத்தும் விபுவாய் மறைப்பற்று விரிந்து விளங்கிய அறிவுடையவனாகி யறிவனென்னில்; தங்கிடுமவத்தை போக்கு வரவுகள் சாற்றவேண்டும்=அறிவு குன்றிக் குன்றிப் போய் மறையுஞ் சாக்கிர முதலிய பஞ்சாவத்தைப் படுவானேன் சொல்லவேண்டும்; ஓரிடத்தே இருந்தறியுந் தன்மை பண்ணுந் தன்மை யிருக்கப் போதல் வருதல்கள் புரிவானேன் சொல்லவேண்டும்; பங்கமார் புலனென்றென்றாய்ப் பார்த்திடல் பகர்தல்வேண்டும்=கேடுநிறைந்த சத்த பரிச ரூப ரசகந்தங்களை யொருமிக்க அறியாமல் ஒவ்வொன்றாய்க் காண்பது கழறவேண்டும்; இங்கெலா மொழிந்தானிற்ப தெங்ஙனமியம்ப வேண்டும்=இவ்வுலகத்துச் சரீரமுதலிய சம்சாரமுற்றும் நீங்கினால் நிற்குமிடம் நிகழ்த்தல் வேண்டும்;

சர்வசங்காரத்துப் பிரளய கேவலியாயிருப்ப தின்றித் தீட்சாதி சாதனங்களைச் சாராது முத்தனாய் விடுவனென்பது தாற்பரியம். (கஅ)

நீர் சொல்லு மல மறைப் பில்லாதிருந்தாலும் மறைப்புண்டதனால் அவத்தை முதலியன வருமென்றுரைக்க மறுத்துரைக்கின்றார்.

சுத்தமாமான்மசித்தைத்துசழுடன்மறைத்ததென்னில்
வைத்துறு துடற்கண்வாயில்கரணங்கள்வழியான்ஞான
மொத்துறுமலமற்றாலுமுறுமலம்விடுமின்றும்
பெத்தமுமடையான்முத்தனாய்ப்பிரகாசனாமே.

(இ-ள்). சுத்தமாமான்ம சித்தைத் துசழுடன் மறைத்த தென்னில்=நின்மலமாகிய உயிரினது சிற்சத்தியை அழுக்குறுமாக்கை மூடிற்றென்று நீ சொல்லில்; வைத்துறு துடற்கண் வாயில் கரணங்கள் வழி

யான் ஞானம்=புறக் கரண முட்கரண மார்க்கத்தினுல் சரீரத்திற் பிரகாசிக்கக் கண்டிருக்கிற ஞானம் பிரகாசியாமலே போம்; ஒத்துருமல மற்ருனு முறுமலம் வீடு மின்ரும்=ஆன்மாவுடன் அநாதி சித்தமல்லாத வுடன்மலம் முத்தியின் பொருட்டுப் போனுலும் திரும்பவந்து பொருந்தும்; முன் நின்மலனிடத்து நிருகேதுகமாய் வந்தபடியினுலே யானை குழித்தல்போலத் திரும்ப திரும்ப அழுக்குவரும் ஆதலால், முத்தியில்லையாம், உடன்மலம் திரும்பவுருதெனில்;

பேத்தமுமடையான் முத்தனுய்ப் பிரகாசனுமே=அப்போது அனுதிநின்மலனுகிய ஆன்மாவொருக்காலும் பந்தமுடையனல்லனும், முத்திவியத்திமானுவான். (சகூ)

ஆனு லும்முடைய வுயிரினிலக்கணக் கொள்கை
யெப்படி யெனக் கூறுகின்ருர்.

அசித்தருவியாபகம்போல்வியாபகமருவமின்ருய்
வசித்திடவரும்வியாபியெனும்வழக்குடையனுகி
நசித்திடாஞானச்செய்தியனுதியேமறைத்துநிற்கும்
பசுத்துவமுடையனுகிப்பசுவெனநிற்குமான்மா.

(இ-ள்) அசித்தரு வியாபகம்போல் வியாபகமருவ மின்ருய்=சடமா முருவிலி விபுப்பொருளொப்ப விபுவுருவிலி யன்றி; வசித்திடவரும் வியாபியெனும் வழக்குடையனுகி=முத்தியில் சித்தருவியாபக வஸ்துவையுள்ளடக்கி அதற்குள்ளுமாய், வசீகரணம்பண்ணிப் பிரேரிக்க விரியும் விபு வென்னும் நீதிமானுய்ப், பெத்தத்தின்மலம் மூடாமற் றன்வசமாகமாத்திரம் பண்ணப்பட்டு முத்தியிலே விரியும் விபுவென்னும் நீதிமானுய்; நசித்திடா ஞானச்செய்தி யனுதியே மறைத்து நிற்கும் பசுத்துவமுடையனுகிப் பசுவென நிற்குமான்மா=கெடாதனுதி சித்தமாயிருக்கிற சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ ரூப சிவத்துவத்தை யறியாமை பண்ணுமையென்னும் பசுத்துவமாக்கும் பசுத்துவமென்னும் நாமத்தையுடைய மலசம்பந்தியாகி சிவனுயிருப்பவனுனுலும் பசுவென்னும் பெயர்பெற்று நிற்பன. (உ0)

விஞ்ஞானப்பிரளயகேவலங்களில் அசர்வஞ்ஞத்துவம் அசர்வகர்த்திருத்துவம் இரண்டுக்கு முபாதியுரைத்து சகலத்துக் கிஞ்சிஞ்ஞத்துவம் கிஞ்சித்கர்த்திருத்துவ மிரண்டுக்கு முபாதி யுரைக்கின்ருர்.

மாயையின்வயிற்றுண்மன்னிவருஞ்செயன்ஞானமிச்சை
யேயுமக்கலாதிமூன்ருலேகதேசத்தனேய்ந்தங்

காயுமுக்குணங்களந்தக்கரணங்களாதியெல்லாங்
காயபெத்தங்களாகிக்கலந்துடனிற்குமான்மா.

(இ-ள்). மாயையின் வயிற்றுண்மன்னி=சர்வவியாபியா யிருந்தாலும் மலமறைத்த அறிவு தொழிலுடையனுய்ச் சூக்குமதேகத்தினுற் சிற்றறிவு தொழில் விளங்கலாற் சூக்கும தேகோபாதியினுலே மாயோதரத்தில் வசித்து; வருஞ்செயல் ஞானமிச்சை யேயுமக் கலாதி மூன்று லேகதேசத்தினேய்ந்து=தன்னேடு பொருந்திய கலை வித்தை யிராகங்களினுல் முறைமையிற் ருெழிலறிவு விருப்பங்களை அந்தகாரத்திற்றீபத்தினுற் கண்ணெளியைப்போல் ஒரு பிரதேசத்திற் பொருந்தி; ஆயுமுக்குணங்கள் என்பது முதலியன வெளிப்பொருள். (உக)

இப்படித் தூலசூக்கும தேகங்களோடு கூடிப் போகம்
புசிக்குமுறைமை புகல்கின்ருர்.

சூக்குமதேகியாகித்தூலதேகத்தின்மன்னிச்
சாக்கிரமுதலாயுள்ளவவத்தைபுட்டங்கியெங்கும்
போக்கொடுவரவுமெல்லாம்புரிந்துபுண்ணியங்கள்பாவ
மாக்கியும்பலங்களெல்லாமருந்தியுநிற்குமான்மா.

வெளிப்பொருள். (உஉ)

பஞ்சகோசங்களி லொவ்வொரு கோசமான்மா
என்பவர்களை மறுத்துணர்த்துகின்ருர்.

மருவானந்தம்விஞ்ஞானமனேபிராணனன்னமய [மாய்
முருவாந்தன்மையுண்டாய்ப்பின்ஞென்றுக்கொன்றுசூக்கும
வருமாமன்னமயம்பற்றிமாயைமுதற்காரணமாகு
மருவாமான்மாவைங்கோசத்தார்ப்புண்டவற்றினகம்புறமாம்.

(இ-ள்). வேதாந்திகள் காரண சரீரமென்னு மவித்தையாகிய ஆனந்தமய கோசமய ஞன்மா வென்பர்கள்; புத்தர் விஞ்ஞானமயகோசமய ஞன்மாவென்பர்கள்; அகங்கார வாதிகள் மனேமய கோசமய ஞன்மா வென்பர்கள்; அருகர் பிராணமய கோசமய ஞன்மா வென்பர்கள்; உலோகாயதர் அன்னமய கோசமய ஞன்மாவென்பர்கள்; நமக்குப் பஞ்சகோசமும் மாயோபாதானமா யிருக்கும் தூலசரீரத்தும் சூக்கும சரீரத்து மடங்கும். மற்றவை வெளிப்பொருள். (உங)

பஞ்சகோசத்துக்கு ஆன்மா அன்னியனுய்ப் பஞ்சகோ
சத்தைப் பிரேரிப்பனென்பது படிக்கின்ருர்.

தோற்பாவைக்கூத்துந்தொல்லைமரப்பாவையியக்கமுஞ்சேர்த்[ம்
தேர்ப்பாலிற்செலவும்வேருய்ச்செலுத்துவோர்செய்திதானு
பார்ப்பாயவேடங்கட்டியாடுவோர்பரிசும்போலு
மார்ப்பாயகாயந்தன்னையான்மாநின்ருட்டுமாறே.

வெளிப்பொருள். (உச)

பஞ்சகோசங்களான்மாவுக் குடைமைப்பொருளாகப்
படுத்தப்படுமாதலாற் பின்னப் பொருள்க
ளென்று பேசுகின்ருர்.

என்னுடல்பொறிபிராணன்கரணமென்னுணர்வென்றக்காற்
றன்னின்வேருகுநீயென்றன்மனையென்றவெல்லா
நின்னின்வேருகுமென்னினீங்கிடாவிவையிங்கென்னி
னுன்னினவாகுநீயாமுகிர்மயிருகவுங்காண்டி.

(இ-ள்). இவை=சரீராதிகள்; உன்னினவாகுநீயாம்=உன்னுடைய
வாகி நீ நானென் றபிமானித்ததாகும்; உகவும்=நீங்கவும்; மற்றவை
வெளிப்பொருள். (உரு)

இதுவுமது.

பொன்னணியாடைமாலைபோதுமேலானபோதிங்
கென்னணியானென்றுன்னியிருந்தனைபிரிந்தபோது
நின்னணிநீயுமல்லவாயினைகாயநின்னி
லன்னியமாகுமுன்னையறிந்துநீபிறிந்துபாரோ.

(இ-ள்). சுவசம்வேதனப் பிரத்தியக்ஷத்தில் உன்னைச் சித்துரூபனுக
வறிந்து பிறிந்து சரீரத்தைச் சடமாகப்பார். மற்றவை வெளிப்பொருள்.

மேலதையே வற்புறுத்தி யுணர்த்துகின்ருர்.

உடலியானல்லேனிந்தவுணர்வியானல்லவான
கடனியாதென்னில்வேறுகண்டுணர்வென்னதென்கை
யிடரிலாவென்றனுன்மாவென்றபோதான்மாவேருே
திடனதாயுயிராவேறுகண்டிடார்செப்பலேகாண்.

(இ-ள்). உடலியானல்லேன் = நீர் சொல்லிய முறைமையிற் சரீரேந்திரியம் நானன்று; உணர்வு யானல்ல வானகடனியாதென்னில் = அறிவு இருவிதம் நிருவிகற்பமென்றும் சவிகற்பமென்றும், அவற்றுள்:—

நிருவிகற்பம் ஆன்ம சிற்சத்தியினதறிதற்றொழிலாய்ப் பின்னமின்றி யிருப்பதிதொன்று, நிருவிகற்பமுள் வைத்த புத்தி விருத்தி பின்னமாயிருப்பதிதொன்று, சவிகற்பமுள் வைத்த புத்தி விருத்தி பின்னமின்றி யிருப்பதிதொன்று, புத்தி விருத்திஞானஞ் சிற்சத்தி விருத்தியிற் பிரிந்து நானல்லாதிருந்தாலும் சிற்சத்தி விர்த்தியாகிய ஞானம் நானல்லவாகிய முறைமையேதென்று நீசொல்லில்,

வேறுகண்டு = உடைமை யுடையன் என்னும் பிரிவு கருதி; உணர்வென்ன தென்கை = அறிவென்னதென்பது; ஆதலால், அறிவு நானென்பது கூடாது, சத்தி சத்திமத்தொழிற் பேதம் பிரிப்பின்றி யுள்ளுண்டென்று சான்றோர் சாற்றுதலால், இப்படி நீர் சொல்லில்,

இடரிலாவென்ற ஞன்மாவென்றபோ தான்மாவேறே; வேறன்று, அதுபோல் அறிவு வேறன்று,சத்தியம் நீ சாற்றியது,வேறல்லவென்பது,

திடனதா யுயிரை வேறு கண்டிடார் செப்பலே காண் = நிச்சிதமாய்த் தற்பொரு ளறிவாய்த் தன்மியாகிய ஆன்மாவைப் பிறப்பொரு ளறிவாய்த் தன்மமாகிய சத்தியி னின்றும் பிரிவின்றிப் பிரித்தறியாதார் அபேதமாய்ப் பேசுவதேகாண்;

'என்றன்' என்பதற்குப் பொருள்—பிறப்பொருளறிவாகிய சிற்சத்திரூப தன்மமாகில், 'ஆன்மா' வென்பதற்குப்பொருள் தற்பொருளறிவாகிய சத்திமத்துருப தன்மி;'என்றன்' என்பதற்குப் பொருள்—தன்மிலக்கியமாகில், ஆன்மா வென்பதற்குப் பொருள் தன் மலக்கணம்; தற்பொருளறிவாகிய தன்மியும், பிறப்பொருளறிவாகிய தன்மமும் ஒன்றுக்கொன்று அதுதானே யிது தானும், இதுதானே யதுதானும் இருத்தலாற் புறம்பிற் பிரிக்கும் பேதமில்லாம லிருந்தாலும், உள்ளே பிரியாமற் பிரிக்கும் பேதமுண்டென்று பெரியோர் பேசுவார்கள். (உஎ)

அதுவன்றியு மவ்விடத் தான்மா வென்றது இலக்கணயினலே பின்னப் பொருளுமாமென்று பேசுகின்றார்.

புந்தியைமனமதென்றுமனமதுபுந்தியென்றுஞ்
சிந்தையைச்சீவனென்றுஞ்சிவனேச்சிந்தையென்று
முந்தனையான்மாவென்றுமான்மாவைமுந்தனென்றும்
வந்திடுமென்றனன்மாவென்றதுமற்றென்றைக்காண்.

(இ-ள்). புந்தியை மனமதென்றும்=காரியலக்கணையினாலே புத்தியை மனமென்றும்; மனமது புந்தி யென்றும்=காரணலக்கணையினாலே மனத்தைப் புத்தியென்றும்; சிந்தையைச் சீவனென்றும்=உபகார லக்கணையினாலே சித்தத்தை யான்மா வென்றும்; சீவனைச் சிந்தையென்றும்=சமீப லக்கணையினாலே ஆன்மாவைச் சித்தமென்றும்; முந்தனை யான்மா வென்றும்=உபகாரலக்கணையினாலே சிவனைச் சீவனென்றும்; ஆன்மாவை முந்தனென்றும்=தன்மானுகிருதி லக்கணையினாலே சீவனைச் சிவனென்றும்; வந்திடும்=(இலக்கணைகளினாலே) பொருளாக்கப்படும்; (ஆதலால்); என்ற ஞான்மாவென்றது; மற்றென்றைக்காண்=ஆன்மோபகாரகராயிருக்கின்ற சிவனைக்காண். (உஅ)

திரும்ப உபகாரி யோபகாரகா தேயாதார லக்கணையினாலே அறிவு முதலாகியவை யான்மாவென்று சொல்லப் படுமென்று சொல்லுகின்றார்.

அறிவுடல்சிந்தையான்மாவணைதலாலான்மாவென்ப
வெறிசுடர்விளக்கிருக்குமிடத்தையும்விளக்கென்றாற்போற்
பொறிபுலன்கரணமெல்லாம்புலப்படும்பேதமாகிப்
பிறிதராதறிவதான்மாவறிபொருள்பின்னமாமே.

(இ-ள்). அறிவு=இந்திரியம் (புத்தி விர்த்திப்பிரகாசமுமாம்); உடல்=தூலசரீரம்; சிந்தை=சித்தம் (அதனாற் காண்பிக்கப்படு மகங்காராதிகளுமாம்); (இவைகளை)ஆன்மா; அணைதலால்=பொருந்துதலால்; (அவைகளை ஆதாரலக்கணையினாலே ஆன்மாவென்பர்); அதென்போலவென்னில்;

எறிசுடர் விளக்கிருக்கு மிடத்தையும்=தகளியையும்; விளக்கென்றாற்போல்; பொறிபுலன் கரணமெல்லாம்=புறக்கரணமாகிய விந்திரியங்கள், கன்மமாகிய சத்தாதிவிடயங்கள், அந்தக்கரணமாகிய மனம் புத்தி யகங்காரங்கள் முற்றும்;

புலப்படும்பேதமாகி=ஆன்மாவுக்கனனியமாயும் ஒன்றுக்கொன்று வேறாயுமறியப்படும்; பிறிதராதறிவதான்மா=வியாபித்து அறியப்படும் பொருளைக்காண்பது உயிர்; அறிபொருள் பின்னமாமே=அறியப்படும் பொருள் முதலியன கன்ம மாதலால்; வித்தை காரணமாக அறியுங் கர்த்தாவுக்கு வேறுதானே. (உகூ)

பெத்தான்மா முத்தான்மாவாக முந்திக்கருவிகளைக்
கொண்டு சிவன் காண்பிக்கக் காண்பனென்று
காண்பிக்கின்றார்.

கண்டுணர்புருடன்வேறுகனவுகண்டொடுங்கிக்காய
முண்டியும்வினையுமின்றிக்கிடந்துயிர்த்திடவுணர்ந்து
கண்டிடுங்கனவுஞ்சொல்லியொடுக்கமுங்கருதிவேறா
யுண்டியும்வினையுமுற்றிங்குணர்த்திடவுணராநிற்கும்.

(இ-ள்). கண்டுணர்புருடன்=சாக்கிராவத்தையிற் சத்தாதிபுலன்களையுமுள்ளபடி யறிந்து ஆன்மா; வேறுகனவுகண்டு=சொப்பனாவத்தையில் நித்திராவசத்தினாலே அதுவென்றறியும் பொருளிது வென்று தோற்ற அப்படிமயங்கி யறிந்து; ஒடுங்கி=சுழுத்தியவத்தையிற் புறப்பொருளறிவின்றி ஆந்தர தேகமாத்திர வறிவாய்; காயமுண்டியும் வினையுமின்றிக்கிடந்து உயிர்த்திட=துரியாவத்தையிற் பிராணவாயுமாத்திர மியங்கிடச் சரீரம் புசிப்புத் தொழில்களின்றித் துயின்று சூக்குமவறிவாய்; உணர்ந்து=திரும்பச் சாக்கிரத்திற் சுகமாய் நான் நித்திரை பண்ணினேன் என்று துரியாதீதத்திற் சுகானுபவ ரூப வதிசூக்குமவறிவைச் சூசிப்பித்து அறிந்து; கண்டிடுங் கனவுஞ்சொல்லி=சொப்பனத்திற் றோற்றிய நடப்பைப் பிறர்க்குப்போதித்து; ஒடுக்கமுங்கருதி=புற நினைவொன்றுமின்றிச் சுகமாய் நித்திரைபண்ணினேனென்று சுழுத்தி துரியந் துரியாதீதங்களைத் தூல சூக்கும சூக்கும தமப்பிரகாரத்தினாலே சூசிப்பித்து; வேறாயுண்டியும் வினையுமுற்று=சொப்பனத்திற் றோற்றிய புசிப்புத்தொழில்களுக் கன்னியமாய்ப் புசிப்புத் தொழில்களைப்பெற்று; இங்குணர்த்திட வுணரா நிற்கும்=சாக்கிரத்திற் சிவன் தத்துவாதீத தேவதாத்துவாரத்தினாலே தத்துவங்களைச் சேட்டித் தறிவிக்க வறியாநிற்பன். (கூ0)

புருடன்றானே யறிவனறிவிக்க வேண்டுவதில்லை யென்றவிசாரவாதி
பேச நிராகரிக்கின்றார்.

புருடனேயறிவனாகிற்பொறிபுலனாதிபோதந்
தருவதென்னறிவுமாயாதனுகரணாதிபற்றி
வருவதிங்கனாதியாகமலத்தினின்மறைந்துநிற்ப
னருவனாயிவற்றொடாளுமமைச்சருமரசும்போல்வன்.

(இ-ள்). புருடனேயறிவனாகில்=ஆன்மாவேதசுதந்திர வறிவனாயறியப்படும் பொருளை யறிவனென்று நீ சொல்லில்; பொறிபுலனாதிபோதந்

தருவதென் = இந்திரியங்கள் சத்தப் பரிசரூபரசகந்த முதற் பொருள்களினது ஞானத்தையுண்டாச்குவதேது; (அதற்கொரு காரணம்வேண்டும் சொல்லுவோங் கேட்பாயாக, அந்தப்புருடன்) அணுதியாக மலத்தினின் மறைந்து நிற்பனருவனுய் = உருவிலியாய்த்தொன்று தொட்டு ஆணவத்திஞலறியாதிருப்பன்; (அதனுல் அவனுக்கு) அறிவு = ஞானம்; இங்கு = பெத்தனுயிருக்குமிடத்து; மாயாதனுகரணுதிபற்றிவருவது; (மாயையினின்றும் சிவனுண்டாக்கிக்கூட்டிய தூலசரீரஞ்சூக்குமசரீரங்களோடு பொருந்திவிளங்கும், முத்தனுமவசர மாத்திரத்திற் சிவசத்தி மாத்திரத்தோடு பொருந்தி விளங்கி எங்கும் விரிந்து வியஞ்சகத்தைத் திரும்ப விரும்பாமல் இருக்கும் அப்போது); (இப்போது) இவற்ருேடாளு மமைச்சரு மரசும்போல்வன் = இந்தப்பொறி முதலியவற்ருேடு மந்திரியு மிராசாவு மொப்ப பொருந்தி வாழ்வன். (ருக)

அப்படியிருந்தாலும் புருடனுக்கே முதன்மை யென்பது போதிக்கின்ருர்.

படைகொடுபவனிபோதும்பார்மன்னன்புகும்போதில்லிற்
கடைதொறும்விட்டுவிட்டுக்காவலுமிட்டுப்பின்னை
யடைதருந்தனியேயந்தப்புரத்தினிலதுபோலான்மா
வுடலினிலவத்தையைந்துமூறுமுயிர்காவலாக.

(இ-ள்) உயிர்காவலாக = பிராணவாயு சரீரக்காப்பாக; மற்றவை வெளிப்பொருள். (ருஉ)

இராசாத் தனது பரிசாரசனங்களைப்போல ஆன்மாத்தத்துவ தாத்துவிகங்களை நிறுத்துந் தான முணர்த்துகின்ருர்.

சாக்கிரமுப்பத்தைந்துநுதலினிற்கனவுதன்னி
லாக்கியவிருபத்தைந்துகளத்தினிற்சுழுனைமூன்று
நீக்கியவிதயந்தன்னிற்றுரியத்திலிரண்டுநாபி
நோக்கியதுரியாதீதநுவலின்மூலத்திஞென்றே.

(இ-ள்). இதற்குவகை சூத்திர முடிவி லவத்தை விஸ்தாரத்தி லறியப் பண்ணுகின்ருேம். (ருரு)

கீழாலவத்தைசொல்லி மத்தியாலவத்தையைச் சொல்லா நின்று சுத்தாவத்தைத் தோற்றரவு முறைக்கின்ருர்.

அறிதருமுதலவத்தையடைதருமிடத்தேயைந்துஞ்
செறிதருங்கரணந்தன்னிற்செயற்ருறுங்கண்டுகொண்ணீ

பிறிவிலாஞானத்தோரும்பிறப்பறவருளாலாங்கே
குறியொடுமெஞ்சவத்தைகூடுவர்வீடுகூட.

(இ-ள்). அறிதருமுதலவத்தை=சகலாவத்தை அதினிடத்து மத்தியாலவத்தைதோற்றும்; பொருள் வித்தரிக்குமிடத்து வித்தரிக்கின்றோம். (கூச)

சுத்தாவத்தை ஸ்வரூபஞ் சொல்லுகின்றார்.

ஐந்துசாக்கிரத்தினான்குகனவினிற்சுழுனைமூன்று
வந்திடுந்துரியந்தன்னிலிரண்டொன்றுதுரியாதீதந்
தந்திடுஞ்சாக்கிராதியவத்தைகடானந்தோறு
முந்திடுங்கரணந்தன்னிற்செயறொறுமுணர்ந்துகொண்ணீ.

(இ-ள்). அந்தக்கரணாதி பிரேரக பிரணவபஞ்ச கலாரூபிகளா யிருதயத்திருக்கும் சுத்த தத்துவமைந்தையும் பற்றி இருதய முதற் பிரமரந்திர முடிவாக வருஞ் சாக்கிராதிகளைந்து மகாராதி யைந்துந் தொடங்கி மேல் கீழ் முறைமையில் ஒவ்வொன்று குறைந்துவரு மகாராதி ரூப சுத்த வித்தையாதி சிவதத்துவ மைந்தையும் முறைமையி னுடைத்தாம். வித்தரிக்கு மிடத்து வித்தரிக்கின்றோம். (கூரு)

சொல்லிய கீழாலவத்தை மேலாலவத்தை யிரண்டினது
செய்தி யிசைக்கின்றார்.

இருவகைச்சாக்கிராதியவத்தைகளியல்புதானு
மொருவகைகீழேநோக்கியுற்பவங்காட்டுமொன்று
பெருகமேனோக்கித்தீயபிறப்பறுத்திடுமியோகிற்
றருவதோர்சமாதிதானுந்தாழ்ந்துபின்சனனஞ்சாரும்.

(இ-ள்). யோகிற் றருவதோர் சமாதி=சாலம்ப சிவயோக சமாதி; சனனம்=அபிமத புவனே சுரசாரூபம்; மற்றவை வெளிப்பொருள். ()

முன்சொல்லிய கீழாலவத்தை மத்தியாலவத்தை
மேலால வத்தைகட்குக் காரணாவத்தைகளைத்
தொகுத்து வகுத் துரைக்கின்றார்.

கேவலசகலசுத்தமென்றுமூன்றவத்தையான்மா
மேவுவன்கேவலந்தன்னுண்மைமெய்ப்பொறிகளெல்லாங்
காவலன்கொடுத்தபோதுசகலனாமலங்களெல்லா
மோவினபோதுசுத்தமுடையனுற்பவந்துடைத்தே.

(இ-ள்). உண்மை=பசுத்தன்மை; மற்றவைவெளிப்பொருள். (கூஎ)

கேவலாவத்தையி லான்மாவினது சுவரூபலக்கணந் தோய்ந்த தடத்த லக்கணஞ் சாற்றுகின்றார்.

அறிவிலனமூர்த்தனித்தனராகாதிகுணங்களோடுஞ்
செறிவிலன்கலாதியோடுஞ்சேர்விலன்செயல்களில்லான்
குறியிலன்கர்த்தாவல்லன்போகத்துக்கொள்கையில்லான்
பிறிவிலன்மலத்தினோடும்வியாபிகேவலத்திலான்மா

வெளிப்பொருள். (௬௮)

சகலாவத்தை யிலான்மாவின திலக்கணஞ் சாற்றுகின்றார்.

உருவினைக்கொண்டுபோகபோக்கியத்துன்னல்செப்பல்
வருசெயன்மருவிச்சத்தமாதியாம்விடயந்தன்னிற்
புரிவதுஞ்செய்தங்கெல்லாயோனியும்புக்குழன்று
திரிதருஞ்சகலமானவவத்தையிற்சீவன்சென்றே.

(இ-ள்). புரிவதுஞ்செய்து = விரும்புவதுஞ்செய்து; மற்றவை வெளிப்பொருள். (௬௯)

சுத்தாவத்தையிலான்மாவின திலக்கணஞ் சொல்லுகின்றார்.

இருவினைச்செயல்களொப்பிலீசன்றன்சத்திதோயக்
குருவருள்பெற்றுஞானயோகத்தைக்குறுகிமுன்னைத்
திரிமலமறுத்துப்பண்டைச்சிற்றறிவொழிந்துஞானம்
பெருகிநாயகன்றன்பாதம்பெறுவதுசுத்தமாமே.

(இ-ள்). இருவினைச் செயல்களொப்பில் = மலபரிபாகாதிக்கத்தினாலே புண்ணியபாவ பலோபகாராபகாரங்களிலே சமபுத்திவந் துள்ளளவில்; ஈசன்றன் சத்திதோய = சிவனது சத்திநிபாதம்வர; குருவருள்பெற்று = தேசிகனது தீக்ஷானுக்கிரகத்தை யடைந்து; ஞான யோகத்தைக் குறுகி = சுப்பிரபேதத்துச்சொல்லியபடிக்குச் சமாதியானங்களை முன்பின்னாகப்பொருந்தி,(சிவதருமோத்தரத்திற் சொல்லியபடிக்குச்சாத்திர முகமாய்ச் சிவனைப்பரோக்ஷ ஞானமாய்ப் பார்த்தல் தியானித்தல்களைப் பண்ணி யென்றுமாம்); முன்னைத்திரிமலமறுத்து = அநாதிமலமாயாகன்மங்களைவிட்டு; பண்டைச் சிற்றறிவொழிந்து = மலமாயா கன்மங்களாற் பண்ணப்பட்டுத் தொண்டுதொட்டுவரும் கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்

திருத்துவத்தை நீங்கி; ஞானம்பெருகி=சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவரூப சிவத்துவம் விரிந்து; நாயகன்றன்பாதம் பெறுவது=சிவசத்தி சமான சிற்சத்தியைப் பொருந்தல்; சுத்தமாமே=சுத்தாவத்தையாகும்.

அவத்தைகளின் முறைமையறைகின்றும்.

கிரமத்திற் கேவலாவத்தை யென்றும், சகலாவத்தை யென்றும், சுத்தாவத்தையென்றும் காரணவத்தை மூன்றுபிரகாரம், அந்த மூன்றினுள்:—

சகலாவத்தையிற் றத்துவ தாத்துவிகங்களை மேல்விடுதல் முறைமையிற் கேவலாவத்தையைக் கீழ்த்தீண்டி முறைமையிற்செல்வது கீழாலவத்தை.

கேவலாவத்தையைக் கீழ்முறைமையிற் சகலாவத்தையை மேற்றீண்டி முறைமையிற்செல்வது மேலாலவத்தை.

கேவலாவத்தை சகலாவத்தை யிரண்டையும் தீண்டி மத்தியமாயிருப்பது மத்தியாலவத்தை.

கேவலாவத்தையைத்தீண்டாது சகலாவத்தைமாத்திரத்தைத்தீண்டி நிற்பது பிரேரகாவத்தை.

கேவலாவத்தை சகலாவத்தைக ளிரண்டையும் கீழ்முறைமையில் விட்டுச் சுத்தாவத்தையை மேன்முறைமையிற்றீண்டி முச்சிவத்துவாபிவியத்தி முறைமையிலுண்டாம் பொருட்டு, இதயத்தினின்றும் புருவமத்திய நுனி மட்டில், கண்டத்தி னின்றும் பிரமரந்திர நுனிமட்டில், புருவமத்தியினின்றும் துவாதசாந்த நுனிமட்டில் ஓரொட்டாக இதயத்தினின்றும் துவாதசாந்த நுனிமட்டிற்றன், இவைகளிற்போய்த் தங்குவது நின்மலாவத்தையென்று பேர்பெற்ற மேலாலவத்தை.

இப்படிக்காரணவத்தை மூன்றும் காரியாவத்தை யைந்துங்கூட்டி எட்டுப்பிரகாரமாம்; எட்டினுள் முறைமையில் கேவலாவத்தாலக்கணங் காண்பிப்பாம்:—

விஞ்ஞான கைவல்லியத்திற்றன், பிரளய கைவல்லியத்திற்றன், நித்திய நித்திரா கைவல்லியத்திற்றன், சிவதத்துவத் தானமாயிருக்கும் பிரணவபஞ்சகலாவிர்ப்பூத வதிசூக்குமை முதலிய ஐந்து வாக்கொடு கலை முதற் பிருதிவி முடிவாகிய முப்பது கலைகள் மாயை மகாமாயையி னொடுங்கத்தான், தொழிலற்றிருக்கத்தான், மலசகலுஷிதனுய்த்தான், மலகன்ம கலுஷிதனுய்த்தான், நித்திரா முத்திரித தத்துவதாத்துவிகமல கன்மமோக கலுஷிதனுய்த்தான், சும்மாவிருத்தல். சகலாவத்தாலக்ஷணங் காண்பிப்பாம்:—

இரும்பச் சுத்தாசுத்தகலைகள் கூடச் சுத்த பெத்தமுத்தனும், அசுத்த பெத்தனும், சுத்தமாயாபுவனங்களிலேயும், அசுத்த மாயா புவனங்களிலேயும், போகத்தைப் புசித்திருத்தல், நித்திய பெத்த மத்திய நித்திரா கேவல நீங்க அப்போ தப்போது போகத்தைப் புசித்தலு மாம். சுத்தாவத்தா லக்கணம் காண்பிப்பாம்:—

சுத்தசகலத்துவ மென்று முன்சொல்லிய அபர முத்தியும், பரமுத்தியும், அந்த விரு முத்தியின்பொருட்டு பாசனையுமாம். கீழாலவத்தாலக்கணங்காண்பிப்பாம்:—

நித்திய நித்திராகேவலப்படு முறைமையிற் பூதமைந்தும், தன்மாத்திரை ஐந்தும், சீவியாதிருப்பத் தூலசரீர சம்பந்த தாத்துவிகமாயிருக்கும் வாயுக்கள் பத்தும், சூக்கும சரீர சம்பந்த தத்துவமாயிருக்கும் வாக்காதி நான்கு மிந்திரிய மைந்தும், கிரியா சத்தியோடுங் கூடிய கன்மேந்திரிய தாத்துவிகக்கிரியை யென்கின்ற வசனுதி யைந்தும், சூக்கும சரீர சம்பந்த தத்துவ மென்கின்ற ஞானேந்திரிய மைந்தும், ஞானசத்தியோடுங் கூடிய ஞானேந்திரிய தாத்துவிகஞானத்துக்கு விடயமாகிய தாத்துவிக சத்தாதியைந்தும், தத்துவமென்கின்ற அந்தக்கரணங்களுலும், புருடதத்துவ மொன்றுமாக முப்பத்தைந்தும் கேளாமற் கேட்டு, தொடாது தொட்டுப், பாராமற் பார்த்து, ரசியாது ரசித்து, மணவாது மணந்து லலாடத்திற் சீவித்து நிற்றல்கீழாலவத்தையிற் சாக்கிரம்;

இந்திரியம் பத்துஞ்சீவியாதிருப்பவாயுப்பத்தும், வசனுதியைந்தும் சத்தாதியைந்தும், மனமுத லந்தக் கரணநுலும், புருடதத்துவமொன்றும் ஆக இருபத்தைந்தும் நித்திராமயக்கத்தினுலே அது வென்பதை இதுவென்று ஆபாசமாயறிந்து கண்டத்திற் சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் சொப்பனம்;

வாயுவொன்பதும், வசனுதியைந்தும், சத்தாதியைந்தும், மனமுத லந்தக்கரண மூன்றும், சீவியாதிருப்பப் பிராணவாயுவும் மனோவஸ்தா விசேஷ சித்தமும்,புருஷதத்துவமுமாக மூன்று மினிமேல்வருஞ்சாக்கிரத்தில் வசனிக்கப்படாத வஸ்து சிந்தனத்தைப் பண்ணி, இருதயத்திற் சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் சுழுத்தி;

சித்தஞ் சீவியாதிருப்பப் பிராணவாயு புருடதத்துவ மிரண்டுஞ் சரீரக் காப்புச் சூக்கும சிந்தனங்காண்பித்து நாபியிற்சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் றுரியம்;

பிராணவாயுச்சீவியாதிருப்பப்புருட தத்துவமொன்றும் இனிமேல் வரும் சாக்கிரத்திற் சுகமாய் நான் நித்திரை பண்ணினே னென்பதனுற்

ருசிக்கப்பட்டு ஆந்தர சரீர தமோ மாத்திரத்தை விஷயீகரித்து மவுட்டியத்துண் மூழ்கி வேதனத்தை யொழிந் தொழியாம லிருக்கும் சிவதத்துவ கர்ப்பநாதம்மணந்த கலாதிகலுஷிதமாய்ப் பண்ணி லிங்கத்திற் சீவித்து நிற்றல் கீழாலவத்தையிற் றுரியாதீதம். மேலாலவத்தா லக்கணங் காண்பிப்பாம்:—

கலாதிபஞ்சகஞ்சுக புருஷன் பிரணவ கலைகளைந்தினுட் போதமூலாவதி சூக்குமைக்குக் காரணமாகிய சிவதத்துவமென்கின்ற நாதத்தோடு கூடி லிங்கத்தில் மலத்தோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற் றுரியாதீதம்;

நிருவிகற்ப ஞானமூல சூக்குமைக்குக் காரணமாகிய சத்திதத்துவமென்கின்ற விந்துவோடு கூடி நாபியில் மாயையோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற்றுரியம்;

சவிகற்ப ஞானமாதலுக்கு யத்தினமாகா நிற்கும் நிருவிகற்ப ஞானமூல பைசந்திக்குக்காணமாகிய சதாசிவதத்துவ மென்கின்ற மகாரத்தோடுகூடி இருதயத்திற் சித்த மூலப்பிரகிருதியோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற் சுழுத்தி;

சவிகற்ப ஞானமூல மத்திமைக்குக்காரண வீசுரதத்துவமென்கின்ற வுகாரத்தோடுகூடிக் கண்டத்தில் அந்தக்கரணத்தோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற் சொப்பனம்;

பிறனுடைய செவிக்குட் போய்ச் சொல்லிய முறைமையிற் சவிகற்ப ஞானத்தை யுண்டாக்கும் வைகரி வாக்குக் காரணமாகிய சுத்த வித்தியாதத்துவ மென்கின்ற அகாரத்தோடுகூடி லலாடத் தானத்திற் புறக்கரணத்தோடு மணந்து சீவியா நிற்றல் மேலாலவத்தையிற் சாக்கிரம். மத்தியாலவத்தா லக்கணம் காண்பிப்பாம்:—

முன்கண்ட புருஷனைத்தூரத்திற்கண்டு நாமசாதிகளினது மறதி மத்தியாலவத்தையிற் சாக்கிராதீதம்;

பெருமூச்செறிந்துவிசாரித்தறிவோமென்பது மத்தியாலவத்தையிற் சாக்கிரதுரியம்;

முன்கண்ட விடமாத்திரந் தோற்றுதல் மத்தியாலவத்தையிற் சாக்கிர சுழுத்தி;

முன்னவ்விடத்திற்கண்ட புருடனிவனென்பது மத்தியாலவத்தையிற் சாக்கிர சொப்பனம்;

சந்தோஷத்தோடு பார்த்துத்தழுவிக்கொள்ளுதல் மத்தியாலவத்தையிற் சாக்கிர சாக்கிரம். பிரேரகாவத்தை லக்ஷணங் காண்பிப்பாம்:—

பிரணவ பஞ்சகலா ரூபமா யிருதயத்திருக்கின்ற சிவதத்துவமைந் துங் கலைமுதல் வித்தியா தத்துவ மேழும், ஆத்மதத்துவத்துக்குள் அந்தக்கரணம் நாலும், புறக்கரணமைந்தினுள் ரூபாதிக் குசிதமாயிருக்கின்ற வொன்றும், தன்மாத்திரைகளோ டொற்றுமை யுடைமையாயிருக்கும் பூதங்களைந்தினுள் நேத்திராதிக் குசிதமாயிருக்கின்ற வொன்றும், ஆகப் பதினெட்டுத் தத்துவமுஞ்சீவியா நிற்பது பிரேரகாவத்தை.

அந்தப் பிரேரகாவத்தையிற் றத்துவங்களின்றொழின் முறைமைமானதப் பிரத்தியக்ஷப் பிரசங்கத்திலே காண்பித்தோங் கண்டு கொள்க.

அந்தப் பிரேரகாவத்தையில் ஒரு பொருளைக் கண்டது சாக்கிரம்;

நிச்சயித்தது சொப்பனம்; கலந்தது சுழுத்தி; அதிலாவேசந் துரியம்; அதிலவசம துரியாதீதம். நின்மலாவத்தை யென்கின்ற மேலாலவத்தையி லக்கணங்காண்பிப்பாம்:—

அது வெகு பிரகாரமாயிருக்கும், அதிலொரு பிரகாரங்காண்பிப்பாம்:

புறக்கரண முட்கரணங்களோடு கூடத் தன்னைக் காண்பது சாக்கிரம், புறக்கரணம் நீங்கி யுட்கரண விர்த்தி மாத்திரத்தோடு தன்னைக் காண்பது சொப்பனம், உட்கரணம் நீங்கிச் சொல்லுதற் கரிதாயுமறிதற் கரிதாயுந் தன்னைக் காண்பது சுழுத்தி, சின் மாத்திரமாய்த் தன்னைக் காண்பது துரியம், சிவனுக் கொப்பச் சிவத்து வாபிவியத்திமானுகத் தன்னைக் காண்பது துரியாதீதம். திரும்ப அதிலொருப்பிரகாரங் காண்பிப்பாம்:

(பிண்டத்து மண்டத்தும் உள்ளும்புறம்பும் அபரநாதம், அபரவிந்து, பரநாதம், பரவிந்து ரூபமாய்ச் சத்தார்த்தமாயிருக்கின்ற சிவதத்துவ முதற் சுத்த வித்தை யீறுகுஞ் சிவதத்துவ பஞ்சக ரூபியாகும் பிராசாத சோடசகலைகளைப் பற்றி வருவதோர் அவத்தை ஞான சித்தியிற் சொல்லப்பட்டது;)

மூலாதாரத்தைத்தொட்டு இருதயத்திற் பிராசாதமந்திரத்தினதுற்பத்தி சாக்கிரம், கண்ட முதற்றானம் பற்றிச் சமனாந்தமாகச் சின்மாத்திரான்மா மணப்ப மந்திரம் நடப்பது சொப்பனம், உன்மனரூபமாய் மந்திரம் மகாமாயையி லயித்தல் சுழுத்தி, உன் மனசூனியம் துரியம், உன் மனமூல சுழுத்தித்தானத்துச் சின்மாத்திரான்மாவாகிய ஆன்ம தத்துவமாயிருந்து உன்மனியந்த துரியத்தானத்துப் பரமென்கின்ற

பரமான்மாவாகிய வித்தியா தத்துவமாயிருந்து சிவத்துவாபிவியத்தி பொருந்திச் சிவமென்கின்ற சிவான்மாவாகிய சிவதத்துவமாய் மாந்திரீகனதிருத்தல் துரியாதீதம். திரும்ப அதிலொரு பிரகாரங்காண்பிப்பாம்:

பிராசாத கலைகள் போலமுன்சொன்ன பிரகாரம் சிவதத்துவ பஞ்சக ரூபியாய்ப் பிராசாத கலாகர்ப்பங்களாயிருக்கின்ற அகாராதி நாதாந்த பிரணவ பஞ்ச கலைகளைத்தொட்டிருதயமுதற்றுவாதசாந்தவியாபகப்பிரமரந்திர முடிவாகிய பஞ்சாதாரத்துச் செல்லுந்தன்னையுஞ்சிவனையும் சாக்கிராதி துரியாதீதாந்த சாட்சிரூப பிரமாதி சதாசிவாந்ததேவதாகாரமாய்க்கண்டு, அந்தஅவத்தையைந்தும் விட்டுக்கடந்து போமிடத்துச் சமனாந்தத்தில் தற்காண்டல் சாக்கிரம், தற்பரம்பார்த்தல் சொப்பனம், தற்பிரசமாவேசம் சுழுத்தி, தற்பரகோடியிற்றூக்குதல் துரியம், தானதுவானது துரியாதீதம். திரும்ப ஒருபிரகாரங் காண்பிப்பாம்:

(ஞானசித்தியிற் சொல்லியமூலாவத்தைக்குட் காண்பிக்கப்படும் அவாந்தரவத்தா பேதம் ரவுரவாதிகளிற் காண்பிக்கப்பட்டது) அவை வருமாறு:—

சாக்கிர சாக்கிரம், சாக்கிரசொப்பனம், சாக்கிரசுழுத்தி, சாக்கிரதுரியம், காலபரம், அதீதம், பரதரிசனம், விசுவக்கிராசம், உபசாந்தம், சிவதரிசனம், சாயுச்சியம் என்னும் பேதத்தினாலே இந்த மேலாலவத்தை பதினொருபேதம்; சாக்கிர சாக்கிர முதற்காலபராந்தம் ஆன்மசாக்கிர முதல் ஆன்ம துரியாதீதாந்தமாகிய ஆன்மாவின் தஞ்சவத்தை; சாக்கிர துரிய முதல் விசுவக்கிராசாந்தம் பரசாக்கிர முதற் பரதுரியா தீதாந்தமாகிய பரன தஞ்சவத்தை; சிவதரிசனமுதற் சாயுச்சியாந்தம் சிவசாக்கிர முதற் சிவதுரியா தீதாந்தமாகிய சிவன தஞ்சவத்தை; சாயுச்சிய கோடிக்குட் டசதுரிய முதற்றுரிய கற்பனைகள் விழுந்திருக்கும் மேற்போகா;

அவற்றுள் ஆன்மசக்கிரம் காரியவிசுவவியாத்தி யென்கின்ற காரியவிசுவரூபம், ஆன்ம சொப்பனம் காரிய விசுவக் கிராசம், ஆன்மசுழுத்தி காரிய விசுவோபசாந்தி, ஆன்மதுரியம் ஆன்மதரிசனம், ஆன்மதுரியாதீதம் ஆன்மசாயுச்சியம்.

பரசாக்கிரம் காரண விசுவ வியாத்தி யென்கின்ற காரணவிசுவரூபம், பரசொப்பனம் காரண விசுவக்கிராசம், பரசுழுத்தி காரணவிசுவோப சாந்தி, பரதுரியம்பரதரிசனம், பரதுரியாதீதம் பரசாயுச்சியம்.

சிவசாக்கிரம் வாசனா விசுவவியாத்தி யென்கின்ற வாசனாவிசுவரூபம், சிவசொப்பனம் விஸ்வக்கிராசம், சிவசுழுத்தி வாசனாவிசுவோபசாந்தி, சிவதுரியம் சிவதரிசனம், சிவதுரியாதீதம் சிவசாயுச்சியம்.

சிவசாயுச்சியஞ் சித்திக்கும்பொருட்டு ஆன்மசுழுத்தி முதற்கால பராந்தந் தியானத்தானம்; அதீதமுதல் விசுக்கிரா சாந்தம் சமாதித்தானம்; உபசாந்தமுதற் சாயுச்சியாந்தம் சாக்ஷாத்காரத்தானம்.

திரும்பவிதிற் பிரமாதி பரநாதாந்தமாகிய வஸ்துக்களிலே பார்த்தல், கிருகித்தல், தழுவுதல், ஆவேசித்தல், அவசமாதல் அஞ்சும் ஒவ்வொன்றுக்கு அஞ்சவத்தையா யறியப்படும்.

திரும்பமுன் சொல்லிய இந்தப் பதினோரவத்தைகளைத் தனக்குள் வைத்த ஞானசித்தியில் மூலாவத்தை அஞ்சினுட்லே சிவத்துவாபி வியத்தி சூக்குமசிவத்துவாபி வியத்தி பரசிவத்து வாபி வியத்திகள் கிரமத்திலே வரும்பொருட்டு மூவைந்து பதினைந்தவத்தைகள் காண்பிப்பாம்:

இதயத்துச் சிவபாவனை பண்ணுமிடத்துக் குவிந்து, இதயமுதல் இதயாக்கிராந்த துவாதசாந்தத்திற் சிவபாவனை பண்ணுமிடத்தில் விரிந்து, இதய முதற் றுவாதசாந்தம் வியாபித்திருக்கும் பூதான்ம அந்தரான்ம தத்துவான்ம சீவான்ம மந்திரான்ம சாலம்ப சிவ யோகங்களினொன்றினற் பூதான்மாதி மந்திரான்மாந்த ஆன்மாக்களினைந்தில் மற்றை நாலு முள்வைத்த ஒன்றைச் சயம் பண்ணி நிராலம்ப சிவ யோகம் பண்ணுமிடத்து, இதயமுதற் புருவமத்தியாந்த மட்டாகத் தூல சாக்கிராதி தூல துரியாதீதாந்த மாகிய வைந்தவத்தை தூலான்ம தூல பர தூல சிவத் தோற்ற முன்னாகத் தூல சிவத்து வாபி வியத்தி தோன்றும் பொருட்டுக் காணப்படும்.

கண்ட முதற் பிரமரந்திராந்த மட்டாகச் சூக்கும சாக்கிராதி சூக்கும துரியாதீதாந்த மாகிய வைந்தவத்தை சூக்குமான்ம சூக்குமபர சூக்குமசிவத் தோற்ற முன்னாகச் சூக்குமசிவத்து வாபியத்தி தோற்றும் பொருட்டுக் காணப்படும்.

புருவமத்தியமுதற்றுவாத சாந்தமட்டாகப் பரசாக்கிராதி பரதுரியாதீ தாந்தமாகிய பரனதஞ்சவத்தை; பரான்ம பராபர சிவத்தோற்ற பர முன்னாகப் பரசிவத்துவாபி வியத்தி தோற்றும் பொருட்டுக் காணப்படும்.

திரும்ப இதுதானே ஒரொட்டாக முன் சொல்லிய மூலாவத்தையினதக்கிரமுமாம். பின்னொருபிரகாரங் காண்பிப்பாம்:—

இதய முதற்றுவாதசாந்தமாக, முன்சொல்லிய இந்தப் பதினைஞ்சவத்தைகளைத் தனக்குள் வைத்த மூலாவத்தையில் இதய முதற்றுவாதசாந்தந் தொட்ட பிரமரந்திராந்தமாக, பூதான்மா வென்கின்ற

பஞ்சபூதங்களோடு கோத்த பஞ்சகலைகளோடு கோத்தஞ்சுபகுப்பாய்த் தத்துவான்மா வென்கின்ற தத்துவங்களிலேதான் காண்க;

பஞ்ச கலைகளோடு கோத்த அந்த ரான்மா வென்கின்ற அதிசூக்கு மாதி வைகரியந்தமாகிய பஞ்ச வாக்குகளிலேதான் காண்க;

பஞ்சகலைகளோடு கோத்த தூலதர தூலசூக்கும சூக்குமதர சூக்கு மதம சிவான்மா வேன்கின்ற அகங்காரங்களிலேதான் காண்க;

(பஞ்சகலைகளோடு கோத்த மந்திரான்மாவென்கின்ற மந்திரகலைக ளிலே மூலாவத்தை ஞானசித்தி வசனப்படி முன்புதானே காண்பித் தோம்.)

இப்படிக்காண்பித்த சுத்தாவத்தா பேதங்களெல்லாஞ் சாக்கிராதி துரியா தீதாந்தமாய் முன்சொல்லிய அசுத்தமாகிய கீழாலவத்தை ஐந் தையும் முறைமையிற் சயம்பண்ணும் பிரத்தியாகாரம், தாரணை, தியா னம், சமாதி, சாட்சாத்காரம் என்கின்ற அங்காங்கியோக ரூபமாகுஞ் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீதமென்கின்ற அவத் தை யைந்தாய் ஒன்றாயிருக்கிற சுத்தாவத்தை யொன்றிலே சுருக்கப் படும். (சO)

நான்காஞ் சூத்திரம்
முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-உகக.

---

# ஐந்தாஞ் சூத்திரம்.

இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார
முணர்த்துகின்றார்.

பொறிபுலன்கரணமெல்லாம்புருடனாலறிந்தான்மாவை
யறிதராவவையேபோலவான்மாக்களனைத்துமெங்குஞ்
செறிதருஞ்சிவன்றனாலேயறிந்திடுஞ்சிவனைக்காணு
வறிதருஞ்சிவனேயெல்லாமறிந்தறிவித்துநிற்பன்.

(இ-ள்) பொறி=பஞ்சேந்திரியங்களாகிய புறக்கரணங்கள்; கர ணம்=மனாதி நான்காகிய உட்கரணங்கள்; புலன்=விடயங்கள்; புரு டனால்=ஆன்மாவால்; அறிந்து; (சிற்சத்தியோடு புணர்ந்துணர்தலால் அறிந்தென் றுபசரிக்கப்பட்டது); ஆன்மாவை=பிரேரகனாகிய புருடனை; அறிதரா=காணா; அவையே போல=அந்த இருவகைக் கரணங்கள்

போல; ஆன்மாக்கள்; அனைத்தும்=எல்லா விஷயங்களையும்; எங்குஞ் செறிதருஞ் சிவன்றன்னாலே=எவ்விடத்தும் பரிபூரணனாயிருக்கு மீசுவரனாலே; அறிந்திடும்=தூல சூக்கும பரசரீரங்களைப் புணர்த்திப் போதிப்பவுணரும்; சிவனைக் காணா=பிரேரகனாய் நிற்கு மீசுவரனைப் பாரா; அறிதருஞ் சிவனே=சுவதந்திர வறிவனாகிய வீசுவரனே; எல்லாமறிந் தறிவித்து நிற்பன்=முன் சொன்ன முறைமையிற் சகலமுமுணர்ந்துணர்த்தியிருப்பன். (க)

அருகன் ஈசுவரனறிவிப்பானாகில் அறிவு அனைவர்க்கு மொரு படித்தாக வேண்டு மென்ன மறுத்துரைக்கின்றார்.

இறைவனேயறிவிப்பானேலீண்டறிவெவர்க்குமொக்குங்
குறைவதிகங்கடத்தங்கன்மமேற்கோமான்வேண்டா
முறைதருஞ்செயற்குப்பாருமுளரிகட்கிரவியும்போ
லறைதருந்தத்தங்கன்மத்தளவினுக்களிப்பனாதி.

(இ-ள்) இறைவனே யறிவிப்பானேல்=சிவனே போதிப்பனாகில்: ஈண்டறிவெவர்க்கு மொக்கும்=இவ்விடத் துணர்வு எல்லார்க்கு மேருது குறையாது ஒத்திருக்க வேண்டும்; குறைவதிகங்கடத்தங் கன்மமேல்=அறிவின துயர்ச்சி தாழ்ச்சி புண்ணியபாக தாரதம்மியத்தாலென்று நீர் சொல்லில்; கோமான் வேண்டா=ஒரு காரியத்துக் கிரு காரணங் கற்பிப்பது கற்பனா கௌரவ மென்னுந் தோஷம் வருமாதலால் ஈசுவரனறிவிப்பா னென்பது சொல்ல வேண்டுவதில்லை; (சத்தியம் நீ சொல்லியது அநேகாந்திகனாயிற்று, அதெப்படி? ) முறைதருஞ் செயற்குப்பாரும்=மந்த தீவிராதி தொழிற்கு மந்த தீவிராதி பலம் பலிக்கும் பொருட்டு வேறு காரணமாகிய பூமியும்; முளரிகட்கு=பக்குவ முறைமை தப்பாத லருந்தாமரைப் பூவுக்கு; இரவியும் போல் =சூரியனு மொப்ப; அறை தருந் தத்தங் கன்மத்தளவினுக்கு அளிப்பன்=சொல்லப்பட்ட பலவித பக்குவ சககாரிகன்மங்களைப் பின்சென்று உயிர்களைப் போதிப்பன். (உ)

கருத்தாவறிவிக்க வேண்டியதில்லைக் கன்மத்துக் கீடாக ஆன்மாவே யறிவானென்ன மறுத்துணர்த்துகின்றார்.

அறிந்திடுமான்மாவொன்றைமற்றென்றனறிதலானு
மறிந்தவைமறத்தலானுமறிவிக்கவறிதலானு

மறிந்திடுந்தன்னையுந்தானறியாமையானுந்தானே
யறிந்திடுமறிவனன்றுமறிவிக்கவறிவனன்றே.

(இ-ள்). அறிந்திடுமான்மா=அறியுந்தன்மையை யுடைய உயிர்; ஒன்றை=சத்தமுதலிய விடயங்களி லொரு விடையத்தை; மற்றொன்றால்=சோத்திரமுதலிய விந்திரியங்களி லோரிந்திரியத்தால்; அறிதலானும்=உணர்தலானும்; அறிந்தவை மறத்தலானும்=உணர்ந்த சத்தமுதலிய விடயங்களை மலத்தோடு தமோகுண மருவ நினைவறுதலானும்; அறிவிக்க வறிதலானும்=அறிந்தவன் போதிக்க வறிதலானும்; அறிந்திடுந் தன்னையுந் தானறியாமை யானும்=தன்னை நானென்று சுவசம்வேதனுப் பிரத்தியட்சத்தினாற் கிஞ்சிஞ்ஞ கிஞ்சித் கர்த்தாவாகி யறிந்தாலும், சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவாயும் சிவனைப்போ லிருக்குந் தன்னை யுள்ளபடி யுணரா திருத்தலானும்; தானே யறிந்திடுமறிவனன்றும்=மலம் சிற்சத்தியை மறைத்தலால் மறைப்பில்லாத முத்தியிற் சுவதந்திர வறிவனானும் பெத்தத்திற் சுவதந்திரவறிவனல்லனும்; அறிவிக்கவறிவனன்றே=சிவன் பரதேகஞ் சூக்குமதேகந் தூலதேகமாகுந் திரிதேகங்களைக்கூட்டிப் போதிப்பக் கிஞ்சிஞ்ஞனுயிருப்பன்றானே. (ரு)

சிவன்போதிக்கு முறைமையைப் போதிக்கின்றார்.

கருவியாற்பொருளாற்காட்டாற்காலத்தாற்கருமந்தன்னா
லுருவினாலளவானூலாலொருவனாலுணர்த்தலானு
மருவனாயுண்மைதன்னிலறியாமனிற்றலானு
மொருவனேயெல்லாத்தானுமுணர்த்துவனருளினாலே.

(இ-ள்). கருவியால்=பிரகிருதி குணதத்துவ நீங்கலாகக் கலாதத்துவ முதல் இந்திரிய மீறாகுங் கரணங்களால்; பொருளால்=பூததன்மாத்திரை முதலிய தத்துவத் துதித்த மாலை சந்தனம் மகளிர் முதலிய போக்கிய வஸ்துவினால்; காட்டால்=சூரியப்பிரகாச முதலிய வொளியால்; காலத்தால்=நியதி துணையாகுஞ் சூக்குமகால தத்துவப்பிரேரண சகாய தூலகால தத்துவ காரியமாகிய செல்கால நிகழ்காலம் வருங்கால மென்கின்ற காலத்தால்; கருமந்தன்னால்=புண்ணியபாவ மென்கிற வதிஷ்டத்தால்; உருவினால்=(கருவியாலென்பது சூக்கும தேகத்தாலென்றுபொருளாதலால், உருவினாலென்றது) தூலசரீரத்தால்; அளவால்=(முன் கருவியா லென்றது கொண்டு பொருள் மறைப்புப் பொருந்தாத கருவி கலக்குஞ் சிற்சத்திப் பிரத்தியட்சஞ்சித்தித்தலால், இவ்

விடத்து அளவாலென்றது) பொருள் மறைப்புப் பொருந்திய கருவிகல க்கு மிலிங்கஞ் சேர்ந்த சிற்சத்தி யனுமானத்தால்; நூலால்=பொருள் மறைப்பு பொருந்திய கருவிகலக்குஞ் சத்தஞ் சார்ந்த சிற்சத்தி யாகு மாகமத்தால்; ஒருவனல்=ஆகமத் தடங்கும் உலோகவாதத்தால்; உண ர்த்தலானும்=போதித்தலானும்; உண்மைதன்னி லருவனு யறியாமனி ற்றலானும்=கேவலத்துத் தூல சூக்குமபரதேகங்க ளில்லாதிருக்கவுஞ் சுவதந்திர வறிவனுய்த் தோற்றுதிருந்தாலும்;

(சிவன் முத்திவியத்தி பண்ணுமிடத்துக் கருவியின் மறையாது பண்ணி உணர்த்தி நிற்றலானும் என்றும் பொருள்) ஒருவனே=ஒப்பற் ற சிவனே; எல்லாத்தானும்=சொல்லிய கருவி முதலியவற்றால்; உணர் த்துவன்=போதிப்பன். (ச)

சிவன் கலாதத்துவாதி கருவி விளக்குக் கலப்பின்றி நின்மல சிற்சத்தி மாத்திரத்தாற் சுவ தந்திர வறிவனுயிருப்ப னென்பது தோற்றுவிக்கின்றார்.

கருவியும்பொருளுங்காட்டுங்காலமுங்கன்மந்தானு
முருவமுமளவுநூலுமொருவருமுணர்த்தலின்றி
யருவனுயகிலமெல்லாமறிந்தவையாக்கிவேறு
யொருவனேயுயிர்கட்கெல்லாமுயிருமாயுணர்த்திநிற்பன்.

வெளிப்பொருள். (ரு)

(இ-ள்). சிவன் சித்தசித்துக்களைச்சேட்டித்தாலும்மாயை முதலிய சடபதார்த்தத்தோடு விகாரதோஷமு மசேதனதோஷமும் வருமாத லாற் சம்யோகசம்பந்தியாயிரான்;மாயைமுதலிய வஸ்துவும் அவனிடத் தசேதன தோஷம் வருமாதலாற் சமவாய சம்பந்தியாயிரா; விகார தோஷமும் ஏகான்மப்பிரசங்கமு முறைமையில் வருமாதலால் ஆன்மா க்களிடத்து மவ்விருவகைச் சம்பந்தியாயிரான்; காந்தஞ் சன்னிதி மாத் திரத்தால், இரும்பிற்போற் சித்த சித்துக்களைத் தோடாது சங்கற்ப ரூப சத்தி விஷயீகரித்தலாகிய தனது சன்னிதிமாத்திரத்தாற் சித்த சித்துக் களிற் காரியங்காணு மென்று செப்புகின்றார்.

இறைவன்றன்சன்னிதிக்கணுலகின்றன்சேட்டையென்னு
மறைகளுமறந்தாய்மாயைமருவிடான்சிவனவன்க
ணுறைதராதசேதனத்தாலுருவுடையுயிர்கட்கெல்லா
நிறைபரன்சன்னிதிக்கணீடுணர்வுதிக்குமன்றே.

வெளிப்பொருள். (சு)

சரீரிகட்கே கர்த்திருத்துவங் காணப்படுதலாற் சரீரமில்லாத பரமசிவனூற் பிரபஞ்சங் காரியப்படு முறைமை யெப்படி யென்ன, ஆன்மாவினது சங்கற்ப மாத்திர சன்னிதானத்தாற்றனது சரீரத்தில் நடத்தல் இருத்தல் முதலியகாரியங் காணப்படும்; இது சிவனது சங்கற்பமாத்திர சன்னிதானத்தாற் றனது சரீரமாக வுபசரிக்கப் பட்ட பிரபஞ்சத்திற் சிருட்டி முதலிய காரியங் காணப்படும் என்றும் பின்னந்தச் சிருட்டி முதலிய கிருத்தியஞ் சிவனிடத் தசைதலில்லாமற் பிரபஞ்சத்தி லசைத்தலாய்த்தோற்றுமதே நடனமென்றுஞ் சொல்லுகின்ருர்.

உலகமேயுருவமாகயோனிகளுறுப்பதாக
விலகுபேரிச்சாஞானக்கிரியையுட்கரணமாக
வலகிலாவுயிர்கட்கெல்லாமிருபயனுகவைந்து
நலமிகுதொழில்களோடுநாடகநடிப்பனுதன்.

(இ-ள்) உலகமே யுருவமாக=தாத்துவிக சூக்குமதேகதத்துவ புவன பௌவன தேகச்சிறப்பு பொது பொதுச்சிறப்புப் பிரபஞ்சமே உபசார கற்பனை காட்டிய தூலசரீரமாக; (அல்லது) அந்தப் பிரபஞ்சத்திற் பரநாதப் பிரதேசத்திருக்கும் இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை ரூப மாகத் திவ்விய லிங்கத்திலிருக்கும் நாதாந்த சூக்குமாதி சத்திகலா கர்ப்ப வபரநாத பஞ்சகலா புஞ்சமேதா னுபசார கற்பனை காட்டிய தூல சரீரமாக; (அல்லது) அந்தவிரு சரீரோ பாதியுற்ற ஈசாணி பூரணி ஆர்த்தி வாமை மூர்த்தியென்கின்ற அஷ்டத்திரிம்சத்கலாபேத பஞ்சத்திகலையேதான் உபசார கற்பனை காட்டிய தூல சரீரமாக;

யோனிக ளுறுப்பதாக=தேவ நரமிருக பசுபட்சி முதலியவற்றிற் றூல சரீரங்களுபசார கற்பனை காட்டிய புறவுறுப் பவயவங்களாக; (அல்லது) அவ்வுறுப்பு பாதியுற்ற அனந்த சத்திகளேதா னுபசரர கற்பனை காட்டிய புறவுறுப்பவயவங்களாக; வியாபினி, வியோமரூபை, அனந்தை, அனுதை, அனுசிருதை ஆகிய திவ்வியலிங்கத்துச்சத்திருக்கும் பரநாத பஞ்சகலா புஞ்சமுபசார கற்பனை காட்டிய புறக் கரணங்களாக; (அல்லது) அந்த விந்திரிய வுபாதியுற்ற ஆரணி சனனி ரோதயித்திரி என்கின்ற திரி சத்திகலைகளே தான் உபசார கற்பனை காட்டிய புறக்கரணங்களாக;

இலகு பேரிச்சா ஞானக் கிரியையுட் கரணமாக=திவ்வியலிங்கத்துச்சந்தாக்கியிருக்குஞ் சமனுகலை உபசார கற்பனை காட்டிய அந்தக் கர

ணமாக; (அல்லது) அந்தச் சமனுகலை யுபாதியுற்ற ஆதி சத்தி முன் பின்னுகப் பிரகாசித்துப் பெரிதாகிய இச்சாசத்திஞானசத்தி கிரியாசத்தித் திரிகலா புஞ்சந்தான் உபசார கற்பனை காட்டிய அந்தக்கரணமாக;

புறக்கரண முட்கரண மிரண்டுஞ் சூக்கும தேக மாதலால், உன்மனை யுபசார கற்பனை காட்டிய பரதேகமாக; அல்லது அந்த உன்மனை யுபாதியுற்ற பரா சத்தி தான் உபசார கற்பனை காட்டிய பரதேகமாக; இப்படி விசுவசரீர, வயிந்தவசரீர, சாத்தசரீரத் திரிசரீரத்தினுல்,

அலகிலாவுயிர்கட் கெல்லாம் மிருபயனுக = எண்ணிறந்த ஆன்மாக்களுக் கெல்லாம் பக்குவா பக்குவம் பார்த்துப் புத்தி முத்திகளுண்டாகும் பொருட்டு; ஐந்து நலமிகு தொழில்களோடு நாடக நடிப்பனுதன் = சிவன் பஞ்ச கிருத்திய மாகிய நிருத்தம் பண்ணுவன். (எ)

சிவன் அவ்வான்ம வர்க்கத்துக்கு மலத்தின் பக்குவம் அபக்குவம் பார்த்து முறைமையிற் சிற்றறிவு பேரறிவு சிற்சத்தியில் விளங்கப்பண்ணி முறைமையிற் போகமோக்ஷங்களைப் புணர்த்துவனென் றுணர்த்துகின்றூர்.

தெரிந்துகொண்டொரோவொன்ருகச் சென்றைந்துபுலனும்ப
புரிந்திடுமுணர்விஞேடுபோகமுங்கொடுத்தியோனி [ற்றிப்
திரிந்திடுமதுவுஞ்செய்துசெய்திகண்டுயிர்கட்கெல்லாம்
விரிந்திடுமறிவுங்காட்டிவீட்டையுமளிப்பன்மேலோன்.

(இ-ள்). ஒரோவொன்ருக = ஒவ்வொன்ருக; தெரிந்துகொண்டு = விசாரித்து ஐயந்திரிவற்ற அறிவிக்குக் கிருகிக்கப்படும்படி பண்ணி; சென்றைந்து புலனும்பற்றி = பஞ்சேந்திரிய வழியறிவு விளங்கச் சத்தப் பரிசரூப ரசகந்தங்களோடு சம்பந்தித்து; புரிந்திடுமுணர்விஞேடும் = மாலையிது, சந்தனமிது, வனிதையிவள், பாம்பிது, தேளிது, முள்ளிது, விஷமிது, சிங்கநாதமிது, உதிரமிது வென்றென்றென்றிப் பண்ணிடும் புத்தியத்தியவசாயத்தினது அசிதம்ஸ புத்தி விருத்தி, சிதம்ஸ சிற்சத்தி விருத்தி மிச்சிர சிற்றறிவோடு; போகமுங்கொடுத்து = திரும்பவதனுற் புத்தியில் மாலை முதலானவற்றில் ஒவ்வொரு வஸ்துப் பிரதிவிம்பத்தாற் பரிணமித்த சுகதுக்க மோகங்களிற் சுகமிது துக்கமிது மோகமிது வென்றுட் சுக துக்க மோகமயமாய்வரும் உள்ளத்தியவசாயத்தினது சிதம்ஸ சிற்சத்திவிருத்தி அசிதம்ஸ புத்தி விருத்தியில் அமிழ்ந்தி வித்தியாதத்துவ மாத்திரத்தோடு கிளம்பியதின் மேல் விழுந்து பிரிக்கரிதாய் விளங்குஞ்

சிற்சத்தி விருத்தி விளங்குதலாகிய போகத்தையுங் கொடுத்து; விரிந்திடு மறிவுங்காட்டி=சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ லட்சண சிவத்துவரூப சிற்சத்தி விருத்தி யென்கின்ற பேரறிவு பெருந்தொழில்களை விளக்கி; வீட்டையு மளிப்பன்=தனக்கொப்பாகிய மோட்சத்தையுங் கொடுப்பன்; மற்றவை வெளிப்பொருள். (அ)

கடகாரியம் பண்ணுமிடத்துக் குலாலனுக்குத்தண்ட சக்கராதிபோலச் சிவனுக்குப் போக மோட்சகாரியம் பண்ணுமிடத்துப் பின்ன காரணமில்லை சகசத்தியே காரணமென்று சாற்றுகின்றார்.

அருளதுசத்தியாகுமரன்றனக்கருளையின்றித்
தெருள்சிவமில்லையந்தச்சிவமின்றிச்சத்தியில்லை
மருளினையருளால்வாட்டிமன்னுயிர்க்களிப்பன்கண்கட்
கிருளினையொளியாலோட்டுமிரவியைப்போலவீசன்.

(இ-ள்). அருளது=மலமுத்தி சிவத்துவ வியத்திருபவனுக்கிரக கிருத்தியமாவது; சத்தியாகும்=சிவனது சாமர்த்தியமாம்; (சத்தியினதருளாகிய தொழில் சத்தியாகாதலால் ஆகுபெயராக்கி அருளை அனுக்கிரக கிருத்தியத்தை பண்ணுவது சத்தியென்று தொகைப்பொருள் விரித்துப் பொருள்கொள்க).

அருளையின்றித் தெருள்சிவமில்லை=பிறப் பொருட் பிரகாசமாகிய தீப சத்தியே தற்பொருட் பிரகாசமாகிய தீபமாயுமிருத்தல் போலத் தாதான்மிய சமவாய சம்பந்தினியாய்ப் புறப் பொருளறிவாகிய சத்தியே தற்பொருளறிவாகிய சிவமுமாயிருத்தலால், அவ்வனுக்கிரகத்தைப் பண்ணுஞ் சத்தியினின்றும் பிரித்துப் பக்குவான்ம சிற்சத்தியினதறிவு தொழில்களைத் தனது சத்தியாகிய கரணத்தால் அலர்த்துஞ் சிவ மெனுமொரு பொருள் தரிசிப்பதின்று;

அந்தச் சிவமின்றி சத்தியில்லை=தற்பொருட் பிரகாசமாகிய தீபமே பிறப் பொருட் பிரகாசமாகிய தீபசத்தியுமாயிருத்தல் போற் றாதான்மிய சமவாய சம்பந்தியாய்த் தற்பொருளறிவாகிய சிவமே பிறப் பொருளறிவாகிய சத்தியாயுமிருத்தலால் அந்தச் சிவத்தினின்றும் பிரித்துச் சத்தியெனு மொரு பொருள் சாதிப்பதின்று; (இப்படி யிருக்குஞ் சத்தியே கரணமென்று சாதித்திருத்தலால்;)

கண்கட்கிருளினை யொளியா லோட்டுமிரவியைப் போல; ஈசன்=சிவன்; மன்னுயிர்க்கு=நிலைபெற்ற பக்குவான்மாவினது சிற்சத்தியாகிய

திருஷ்டிக்கு; அருளால் = அநுக்கிரகசத்தியால்; மருளினைவாட்டி = மறைக்கு முறைமையுடைய மலசத்தியைத் திரும்பு முறைமையுடையதாகச்செய்து; (இருணீக்கத்தாற் கண்ணொளி காண்பதே போலென்பதே தேசவுவமை வியத்தி கிருத்திய மின்றி யொளி காணப்படுதலால், என்றதில் விருப்பமின்றிப் படலமுத்தி கிருத்திய மாத்திரத்தாற் காணுதிருந்து, பின்பு வாசனு முத்தி தேசோபி வியத்திகளை முறைமையி லுண்டாக்கும் அஞ்சன சேவோத்தேசன கிருத்தியத்தாற் கண்ணொளி காணப்படுதல் போல வென்பதே முற்றுவமை யென்றெண்ணி, மலமுத்தி மாத்திரத்தாற் காணுதிருந்து, மலவாசனு முத்தி சிவத்துவாபிவியத்திகளைச் சர்ப்ப கஞ்சுகமுத்தி சர்ப்ப சரீர வியத்திபோற் சடுதி முறைமையி லுண்டாகும் யோசனுகுதியோடு தத்தவியத்தியாகுதி கிருத்தியத்தாற் சிவத்துவம் விளங்கிக் காணுமென்று கழறுகின்றார்);

அளிப்பன் = (விரிந்திடு முணர்வுங் காட்டி வீட்டையு மளிப்பன் என்று முன் சொல்லியபடி) மலமுத்தி கிருத்தியத்திற் பின் வாசனு முத்தி சிவத்துவாபி வியத்திகளைத் தூல சூக்கும பர தாரதம்மியக்கிரம கிருத்தியத்தால் பெருந்தொழில் பிரியாத பேரறிவு பெருக்கிச் சிவத்துவ விளக்கஞ் செய்வன். (கூ)

ஐந்தாஞ்சூத்திரம் முற்றிற்று.

ஆ_திருவிருத்தம்-உசஉ.

---

# ஆறுஞ் சூத்திரம்.

இப்படி யுபகரிக்குஞ் சிவம் அறியப்படும் பொருளோ அன்றோவென இரண்டு பக்ஷமு மிசையா தென்றிசைக்கின்றார்.

அறிவுறும்பொருளோவீசனறிவுறுதவனேவென்னி
லறிபொருளசித்தசத்தாமறியாததின்றுமெங்குஞ்
செறிசிவமிரண்டுமின்றிச்சித்தொடுசத்தாய்நிற்கு
நெறிதருசத்தின்முன்னரசத்தெல்லாநின்றிடாவே.

(இ-ள்) ஈசன் = சிவன்; அறிவுறும் பொருளோ = சாத்திய சிவயோகியாகுஞ் சிவாகமிக்கு அப்பிரத்தியக்ஷக் குறிப் பரோக்ஷ லக்ஷண ஞானத்தால், சித்தசிவ யோகிக்குப் பிரத்தியக்ஷக் குறியபரோக்ஷ லக்ஷண சாக்ஷாத்கார ஞானத்தால் அறியப்படும் பதார்த்தமோ;

அறிவுருதவனே=அறியப்படும் பொருளல்லவோ; என்னில்=என்று வினவில்; (இவ்விரண்டு பக்ஷத்துள்) அறிபொருள்=அறியப்படும் பொருள்; அசித்தசத்தாம்=அசித்தாம் சடமாம்; (அசத்தாம்—அசுத்தமாயை சுத்த மாயையினது காரிய மென்கின்ற காரண காரியப் பொருள் சுத்த மென்று சொல்லப்படுமாயினும், சித்தைக் குறித்ததுவும் அசுத்தமாதலால் அசுத்தமாம், அசத்தென்பதற்கு இவ்விடத் தசுத்தமென்று பொருளுரையாது அசத்திய மென்று பொருளுரைக்கில், வேதாந்தமாய்விடும்; அநித்தியமென்று பொருளுரைக்கில் அறியப்படும் பொருளாகிய மாயை மலம் மகாமாயையெனும் பரமகாரணப் பொருளறியப்படுதலால் அநித்தியமாய்விடும்);

அறியாததின்ரும்=அறியப்படாத பொருள் முக்காலத்திலில்லாத முயற்கோடு போல அசத்தியமாம்; எங்குஞ் செறிசிவம்=எல்லாப் பொருளினுள்ளும் புறம்பும் வியாபித்திருக்கும் நிருபாதிகான்ம வர்க்கமாகும் சிவம் சிவமாகுஞ் சிவம்; (வியத்தியத்துவைதத்தா லிரு சிவம் ஒப்பாகுஞ் சாத்தியத்துவைதத்தா லொரு சிவம்) இரண்டு மின்றி=அறியப்படும் பொருளறியப்படாத பொருளன்றி; சித்தொடு சத்தாய் நிற்கும்; (நிற்குணமென்ப தறியப்படு மென்று பொருள்);

சிவயோகியல்லா வுலகத்தாரிடத்தில் மல கன்ம மாயாகாரிய கலாபுத்தியாதி கலோபாதி மகா மாயாகாரிய வாக்குக் கலோபாதி பற்றி அது கங்கை, இது காவேரி அறிபவனது விதுவல்லா நான் தேவதத்தன் என்பது முதலாயுதிக்கும் சவிகற்ப ஞானமெனுஞ் செயற்கைச் சிற்றுச் சுட்டறிவிற் சற்றுந் தோன்ருதிருந்தாலும், சித்தசிவ யோகிபோற் சித்தசிவ யோகியாய்ச் சர்வபதார்த்தமும் சாக்ஷாத்கரித்துப் பார்க்க இச்சிக்குஞ் சாத்தியசிவ யோகியிடத்திற் கண்ணெளி முதலிய கரண முதற் புறக்கருவிப் பிரத்தியக்ஷ மிசையாது சிவாகம வெழுத்துக் கண்ணிசைவு பற்றி மலவிருண் மறைப்பைச் சற்றே சிந்துங்கலை விளக்கு முதலிய வுட்கருவி பொருந்திச் சிவசத்தித் தித்தழற் சிவாகம வாக்கியப் பொருள் வழி செல்லுஞ் சிவசத்தி விளக்கிய சிவப்பிரமாண சிற்சத்தியினது செயலாயுந் தனது செயற்கைச் சிற்றுச் சுட்டறிவினு ளற்றற்றுச் சுட்டு விட்டுச் சுருங்கி விரிந்துதிப்பதாயும், பிரத்தியக்ஷ மில்லாப் பரோக்ஷ மென்று வடமொழிபடிக்கும் படர்க்கைச் செயற்கைப் பேரறிவாயும் நாதப் பிரகிருதிச் சுத்த வித்தை சுத்த கலைகளை யுள்ளுறை சோதியாய் வைத்த புத்தி யகங்காரங்களினது போதகர்வப் பிரவாகந் தோய்ந்து சவிகற்பமாயிருக்கு மறிவிற் பசிதாக மண முதலிய பொருள்போல

அது விது நானென்றுதிக்குஞ் சிற்றுச் சுட்டறிவினாற் சுட்டிறியறியப்படாதாகிலும் அந்தப் பசிதாக மண முதலிய பொருளில் இது பசி இது தாகம் இதுமணம் என்றொரு பிரகாரம் ஸ்புரித்தறியாம லறியப்படும்;

அதுபோல் அதுசிவம் நான்சிவம் என்றொரு பிரகாரம் ஸ்புரித்தறியப்படும் பொருளை யறிபொருளாய்ப் பரோட்சமாய்க் குருபோதிக்கக் கேட்டுச் சிந்தித்தறியாம லறியப்படும் சித்த சிவயோகிக்குச் சிவசத்தி மனத்துணைச் சிற்சத்தி சாத்தியத்தியான முற்றிய சமாதி முகிழ்க்குஞ் சாட்சாத்காரத்தில் அப்படித் திரிச்சிய மின்றிச் சித்திருக் கிர்த்துருபமாயறியப்படும்;

நீர் சொல்லியவெல்லாம் நற்பொருள் தானே; சூக்கும விசாரத்தினாலூகிக்கப்பட்டது; அதில், முத்தான்மாக்களுக்குச் சிவசம சாமர்த்தியஞ் சித்தித்திருத்தலால் பஞ்சகிருத்திய கர்த்திருத்துவங் காணப்பட்டது; இப்படிச் சகத்துக்கீசுரர் அநேகராய் அநேகான்ம வாதியானீர்; சத்தியமே நீ சாற்றியது; சிவனிலய போகவதிகார சத்தி சாமர்த்தியங்களைக் கிரமத்தில் பிரத்தியக்காயும் பராக்காயுமடையு மிடத்து முத்தான்மாக்களாலு மடையாதிருக்கப்படாது;

சிவனடைந்து பஞ்சகிருத்தியம் பண்ணுமிடத்து முத்தான்மாக்களுக்குஞ் சங்கோச மில்லாச் சிவ சம சாமர்த்திய! சங்கற்பங்க ளிருத்தலாற் றங்கள் தங்கள் சத்தி சாமர்த்திய சங்கற்பங்களைச் சுருக்கி யொதுக்கி வர்ச்சிக்கப்படா தாகையாற் பண்ணுவார்கள்;

அதில்விசேஷமே தென்னில், முத்தான்மாக்களுக்குச் சித்திக்குங் கிருத்திய கர்த்திருத்துவம் அவர்ச்சனீய சம்சித்தபஞ்ச கிருத்திய கர்த்திருத்துவஞ் சிவனுக்குக் கிருபாசம்சித்தபஞ்சகிருத்திய கர்த்திருத்துவம் அவ்விரு கர்த்திருத்துவங்களும் ஒத்துப் பொருந்தாது பொருந்திப் பிரதக்குப் பிரத்தான பின்ன விஷமசங்கற் பாதி காரியத்துவங் களின்றி இது இப்படியாகக் கடவதென்று அப்பிரதக்குத் துல்லியசங்கற் பாதிகாரியத்துவங்களாகி யேகீபாவமாகாது, ஏகீபாவங்களாயிருக்கும்;

அதனால் நவ மிதுவாகக்கடவது புராண மிதுவாகக்கடவதென்று பின்ன சங்கற்ப மில்லாமையால், அநேகேசுர வாதத்துக்கு ஆஸ்பதமே யில்லை; சகத்கர்த்தாச் சிவனொருவனே முத்தான்மாக்கள் சகத்கர்த்தாக் காளா யிருந்தாலும் பின்னசங்கற்பப்பிரவிருத்தி யில்லாமையால் சகத் கர்த்தாக்க ளன்றென்று சிந்திக்கப்படும்;

ஆரணவுருவாந்தில்லையம்பலங்காணப்பெற்றோ
ரோருணர்வாவரென்றுமொன்றலரொன்றாரல்லர்

காரணராகாரொத்தகருத்தினர்நிருத்தவின்பப்
பூரணரவர்கள்வாழும்புவனமும்பொதுவாமன்றே.

என்றுகோவிற்புராணத்தும், "எம்மையொத்திடுஞ் சிவானுபூதி முத்தி யம்பலத்தே யுண்டாம்" என்று திருவாதவூரர் புராணத்துஞ் சொல்லப்பட்டது; (சித்தொடுசத்தாய் நிற்கும் என்பதற்குச் செப்பிய வுரை விரிவமையும் மேலுரைப்பாம்);

நெறிதருஞ் சத்திமுன்னர்=முத்திவழி காட்டுஞ் சிவசன்னிதானத்திலே; அசித்தெல்லாம்=அசுத்த சுத்தப்பிரபஞ்ச மனைத்தும்; நின்றிடாவே=சிவனைக்குறித்துச் சொரூபமாத்திரமாயும், உபாதியுற்ற வுயிர்களைக் குறித்துப் போக்கியமாயும், போசகமாகியும், சிவனாலே பிரபஞ்சத்திற் சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியம் பண்ணும் பொருட் டறியப்படாதது பண்ணப்படாதாகையால், அறியப் பட்டிருந்தாலும் சிவனைக் குறித்துப் போக்கியமாயும், போசகமாயும், சிருட்டிமுதலிய கிருத்திய பாத்திரமாயு மறியப்படாது; இப்படிப் பொருளுரைப்பதன்றிச் சிவசன்னிதானத்திலே நில்லாது ஒருபிரகாரத்தினாலேயுஞ் சிவனா லறியவும் படாதென்று பொருளுரைத்தாற் சிவனுக்குப் பஞ்சகிருத்திய கர்த்திருத்துவமாகிய சகத்கர்த்திருத்துவம் அதனால் நிருபாதிக சொரூபமாய்ச் சித்திக்குமதனால் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ மிரண்டுமின்றிச் சடபதார்தத்துக்கொத்துச் சிவமெனும் பதார்த்தஞ் சூனியமாய்ச் சர்வசாத்திரவிவகாரங்களும் சமித்துப்போம். (க)

அறிபொருள் சித்தாதலால் அறியப்படும் பொருள் அசித்தென்றிசைக்கின்றார்.

ஆவதாயழிவதாகிவருதலாலறிவுதானுந்
தாவலாலுலகுபோகந்தனுகரணதியாகி
மேவலான்மலங்களாகிவிரவலால்வேறுமாகி
யோவலாலசித்தாஞ்சுட்டியுணர்பொருளானவெல்லாம்.

(இ-ள்). அறிவுதானும் தாவலால்=உணர்வு விட்டுப் போதலால் (விஷயீ கரித்த லென்றுமாம்.;) உலகு=புவனம்; போகம்=போக்கிய பதார்த்தம்; தனு=தூல தேகம்; கரணம்=சூக்குமதேகம்; மலங்களாகி=மாயா மலங்களாகி; மற்றவை வெளிப்பொருள். (உ)

மண்டனில்வாழ்வும்வானத்தரசயன்மாலார்வாழ்வு
மெண்டருபூதபேதயோனிகளியாவுமெல்லாங்
கண்டவிந்திரசாலங்கள்கனக்கழுதிரதங்காட்டி
யுண்டுபோலின்றாம்பண்பினுலகினையசத்துமென்பர்.

(இ-ள்) கழுதிரதம்=கானல்; இந்திர சால முதலியவை தங்கள் தங்கள் சுவரூபங்களை யுண்டு போற் காட்சி; இன்றாம் பண்பின்=பொய்யாந்தன்மை போல்; மண்டனில் வாழ்வுமுதலிய வெல்லாம்; உண்டு போலின்றாம்பிண்பின்=உற்பவித்தெப்போது நிலை பெற்றிருப்பது போலிருந்து சடுதி நாசமாதலால்; (பொய் போற் புரிப்பது மாத்திர மெய்யே யென்று விவேகித்தறியாத வேதாந்திகள்) உலகினை யசத்துமென்பர், (சைவ சித்தாந்திகள்) இயற்கையாற் சத்துச் சத்திய மென்றும் பிரபஞ்சத்தை அசத்தசத்திய மென்றுஞ்சொல்வார்கள். (ரு)

சிவமொரு பிரகாரத்தினுலு மறியப்படாத பொருளென்றுரைப்ப மறுத்துரைக்கின்ருர்.

உணராதபொருள்சத்தென்னிலொருபயனில்லைத்தானும்
புணராதுநாமுஞ்சென்றுபொருந்துவதின்றுமென்றுந்
தணவாதகருமமொன்றுந்தருவதுமில்லைவானத்
திணரார்பூந்தொடையுமாமைக்கெழுமயிர்க்கயிறும்போலும்.

(இ-ள்). உணராத பொருள் சத்தென்னில்=சிவமறியப்படும் பொருளன்றென்று சொல்லில்; ஒருபயனில்லை=போக மோக்ஷங்கள் வந்து பொருந்துவதின்று; தானும் புணராது நாமுஞ் சென்று பொருந்துவதின்றும்=சிவந்தானும் தமக்கொத்த சிவசாதியாகக் கடவாரென்று சங்கற்பிப்பது மின்று நாமுமொத்தொரு சிவசாதியாவதின்று; தணவாத கரும மொன்றுந் தருவதுமில்லை=நித்திய கன்மானுஷ்டானங்களைக் கற்பிப்பதுமின்றி இடைவிடாது பஞ்ச கிர்த்தியம் பண்ணுவதுமின்று; ஆகாசப்பூமாலை ஆமை மயிர்க்கயிறு போற் சூனியப் பொருளாம் (ச)

வேதாந்தி விசேஷர் பிரமமநிர்வசநீய மென்று சொல்ல மறுத்துணர்த்துகின்ருர்.

தத்துவஞ்சத்தசத்துச்சதசத்துமன்றென்றுலென்
னுய்த்துணர்ந்துண்டோவின்றேவென்றவர்க்குண்டென்றே
வைத்திடுஞ்சத்தேயாகிமனத்தோடுவாக்கிறந்த [தில்
சித்துருவதுவசித்தாமனத்தினுற்றேர்வதெல்லாம்.

(இ-ள்). தத்துவம்=பிரமம்; சத்தசத்துச் சதசத்து மன்றென்றுலென்=நீர் சத்தென்று சொல்லுஞ் சிவமுமன்று, அசத்தென்று சொல்லும் பிரபஞ்சமுமன்று, சதசத்தென்று சொல்லுமான்மாவு மன்றென்

றநிர் வசனீயமாய்ச் சொல்லிற் குற்றமேது, அப்படி அநிர்வசனீயமாய் அப்பிரயோசனமாய் ஒரு பொருளிராது; உய்த்துணர்ந்து=விசாரித்துப்பார்த்து; உண்டோவின்றேவென்றவர்க்கு=அந்த அநிர்வசனீயமாகும் பிரம முள்ள பொருளோவில்லாத பொருளோ வென்று கேட்டவர்க்கு;உண்டென்றேதில்=(இல்லையென்றால் முயற்கொம்பொக்குமென்று) உள்ள பொருளென்றுரைக்கில்;வைத்திடுஞ் சத்தேயாக=சத்தாகியசிவமதுவென்று சாற்றப்படும்;(அச்சிவமிந்திரியப் பிரத்தியக்ஷமல்லாதிருந்தாலு மானதப் பிரத்தியக்ஷ மாகாதோ வென்ன ஆகாதென்றறைகின்றார்); சித்துருவது=முன்சொல்லிய பிரகாரத்தாற் சிவசத்தி விளக்கு விளக்குஞ் சிற் சத்திப் பிரத்தியக்ஷமாமந்தச் சிவமுதலிய சிற் பொருள் சிற்சுவரூபம்; மனத்தினுற் றோர்வதெல்லாம்=சமூலப் பிரபஞ்சம்; அசித்தாம்=சடரூபமாம். (௫)

முன் செப்பியது தன்னைத்தானே சிறிது சிறப்பித்துச் செப்புகின்றார்.

அறிபொருளசத்தாய்வேறுமறிவுறுப்பொருள்சத்தென்னி
லறிபவனறியானாகிலதுவின்றுபயனுமில்லை
யறிபவனருளினாலேயனனியமாகக்காண்ப
னறிபொருளறிவாய்வேறுயறிவருளுருவாய்நிற்கும்.

(இ-ள்) அறிபொரு ளசத்தாய் வேறும்=அறியப்படும் பொருள் அசுத்தமாய், அசித்தாம்; அறிவுறுப் பொருள்=அறியப்படாத பொருள்; சத்தெனில்=சுத்தசித்துச் சிவமென்னில்; அறிபவனறியானாகில்=சாத்திய சிவயோகி சித்தசிவ யோகியாய் அறியுந்தன்மையுடைய ஆன்மாச் சிவத்தை யறியாதானால்; அதுவின்று=அச்சிவ மாகாயப் பூப்போற் போம்; பயனுமில்லை=அச்சிவங் கொண்டு பெறும் போக மோக்ஷங்களும் முயற்கோடுகொண்டுழுத பூமியிற் பயிர்ப் பலம்போற் போம்; அறிபவன் காரண கலாபமிது வென்று கைக்கொண்டு போக மோக்ஷங்களைச்சாதிக்கும் புருஷன்; அருளினாலே=(இலக்ஷணையினாலிசைத்தலால்ஆகமாதியில் வியத்தமாயும் மந்திர கலாப மார்க்க மனோபுத்தி யகங்கார விருத்தியில் வியத்தமாயும் புல்லிற் பற்றிய தீபம்போல மேல் நிராலம்பமாயும்)சிவசத்தி விளக்கு விளக்கும் தனது சிற்சத்தியினால்; அனனியமாகக்காண்பன்=சாதிர்ச்சிய மென்கின்ற சைவ சாதி சம்பந்தியாக முன் முதல் விருத்தத்துச் சொல்லிய ஞானத்தியான சமாதி சாக்ஷாத் காரக் கிரமத்திலறிந்து தியானித்துச் சாமாதித்துச் சாக்ஷாத் கரிப்பன்;

அறிவு=அப்படிக்காணுமான்மா; அறிபொருளறிவாய்வேருய்=அறியப் படும்பொருளை அறி சிவப்பொருளை யறியும்வேற்றுச் சித்தாய்; அருளுரு வாய் நிற்கும்=தத்துவா தீதமாகிய சிவனைச் சாக்ஷாத் கரிக்குமிடத் துப் பாச வாசனை தாக்காதபடிக்குச் சொல்லிய முறைமையிற் சிவசத்தி வியஞ்சகவியங்கியத் தன்மைச் சம்பந்தியாய் நின்று சாக்ஷாத் கரிக்கும்.

விதேகபரமுத்தி சாக்ஷாத்காரகாரண சதேக சீவன் முத்திசாக்ஷாத்கார சித்தியுபாயத்தியான சாமாதி ஸ்வரூபஞ் சாற்றுகின்ருர்.

பாவிப்பதென்னிற்பாவம்பாவகங்கடக்கிற்பாவம்
பாவிக்குமதுநானென்னிற்பாவகம்பாவங்கெட்டுப்
பாவிப்பதென்னிற்பாவம்பாவனையிறந்துநின்று
பாவிக்கப்படுவதாகும்பரம்பரனருளினுலே.

(இ-ள்). பரம்=சிவஸ்வரூபம்; பாவிப்பதென்னில்=பாசஞானவி ளக்கு விளக்கிக் கலக்கும் பசுஞானத்தாற் றியானிப்பதென்று செப்பு கில்; பாவம்=தடத்தலக்ஷண சிவப்பொருளாய்ச் சுட்டுப் புத்திபோத விஷயமாய்ப்போம்; பாவகங்கடக்கில்=பாவனுதீதமென்று பார்க்கில்; பாவம்=தியான மாத்திர மதுவென்னு ஞானத்துக் கிலக்காகிலும் அது விது அதுநானென்னுந் தியானத்துக் கிலக்காகாது;

பாவிக்கு மதுநானென்னில்=பாவிக்கப்படாத தூரத்துப் பாவிக் கப்படும் சமீபத்திது நானென்று தியானிக்கில்; சூக்குமபுத்திமான் கட்கு வாச்சியார்த்தத் தியாச்சியத்தால் இலக்கியார்த்தமாய் வாய்க்கு மாகிலும் மந்தமதிமான்கட்குப்பாவகம் பாவிக்கும் பாசாங்குமாத்திரம், அப்பிரத்தியக்ஷ போதம் பிரத்தியக்ஷ போதம் இரண்டும் அண்டாதா கையால்,

பாவங்கெட்டுப் பாவிப்பதென்னில்=மனச்சங்கற்ப முன்னுக வுதி க்கும் புத்திபோதம்போக்கித் தியானம் பண்ணப்படு மென்னில்; பாவம்=பாவிப்பதென்று சொல்லுதலால் கெட்டது போகப் பின்னு மீதொரு புத்தி போதந்தானே பின்னை யெப்படித் தியானிப்பது,

பரனருளினுலே=இலக்ஷணையா லிசைத்தலாற் சிவசத்திவிளக்குஞ் சிற்சத்திச் சித்துமனச் சங்கற்பத்தால்; பாவனையிறந்து நின்று=மனோ புத்தியகங்கார சங்கற்ப போத கர்வப் பிரவாகங்களைக் கீழ்ப்படுத்திக் கிடத்திக் கடந்து சிவசத்தி தாரகமாய்த் தரித்த சிற்சத்திச் சித்துமனச்

சங்கற்ப முன்னாகச் சிவசத்திக்குறிப் பதிஞானவிளக்கு விளக்குஞ் சிற்சத்திக்குறிப் பதிஞானச் சித்துப் புத்திச் சித்தகங்கார வியாபார போதகர் வக்குறிப் பதிஞான் நிரந்தரப் பிரவாகங் களினால்; பாவிக்கப் படுவதாகும்=சிவமிது நானென்று தியானம் பண்ணப்படும். (எ)

பாச ஞானம் விளக்கிக் கலக்கும் பசுஞானத்தாலறிந்து
பாவித்துப் பார்க்கப்பட்டான் பரனென்று
பாஷிக்கின்றார்.

அன்னியமிலாமையானுமறிவினுணிற்றலானு
முன்னியவெல்லாமுண்ணின்றுணர்த்துவனாதலானு
மென்னதுயானென்றேதுமிருஞ்செருக்கறுத்தலானுந்
தன்னறிவதனாற்காணுந்தகைமையனல்லனீசன்.

(இ-ள்) அன்னிய மில்லாமையானும்=பிரியாது பிரித்தாகித்துப் பார்க்குமிடத் தான்மாவுக்குச் சிற்றறிவு சிற்றுதத் தொழில் முதலிய வேற்றுப் பசுக்குறிமித்தையாய்ப் பேரறிவு பெருந்தொழின் முதலிய ஒப்புச் சிவக்குறியுள்ளதா யொரு சிவசாதியாதலானும்; அறிவினுணிற்றலானும்=காண்பவனுக்கு முன் கண்டித்திராது, அகண்டமாய் இவனது சிற்றுச் சுட்டறிவுக்கு மட்டுப்படாது அதினுள்ளும் புறம்பும் உருவி யிருத்தலானும்; உன்னிய வெல்லாம்=குறித்த வெல்லாம்; உண்ணின் றுணர்த்துவனாதலானும்=சாக்ஷாத் தனது சத்தியால் விளக்கினாற் பெத்தாவத்தைப் பேதித்துக் காண்பவனது சிற்சத்தி பேரறிவாய்ப் பெருகி மோக்ஷ சிவசாக்ஷாத்கார முத்தியவத்தையாய்ப் போம்;

அதற்கருக மல்லாமையாற் சுலிவித்தை புத்தி முதற் கரணங்களில் மறையாது மறைந்து உள்ளுறை கலை முதற் கரண கஞ்சுக கலுஷித மாயிருக்குங் காண்பவன்கட் சிற்சத்தியறிதற் குறிவிர்த்தியைச் சிறிது சிற்றறிவாய் விளக்கிப் போதித்தலானும்; என்னது யானென் றேது மிருஞ் செருக்சறுத்தலானும்=புத்தியகங்கார விர்த்திச் சிற்றுச் சுட்டறிவுச் சுட்டுவிட்டுச் சிட்டமாய்ச் சிவ சத்திமாத்திர சகாயமாய்த் தனித்த சிற்சத்தியிற் சிவந்தாக்கும் நோக்கந் தூக்கியிருத்தலானும்;

தன்னறிவதனாற் காணுந்தகையனல்லனீசன்=கலைபுத்தி முதற் கரணக்குறிப் பாசஞானவிளக்கு விளக்க விர்த்திக் குறிப்பாச ஞானம் விளக்கும் பரிமித சிற்சத்திக் கரணக் குறிப் பசுஞானக் கட்பார்வை விர்த்திக்குறிப் பசுஞானத்தால் ஈசன் பார்க்கப்படுங் குறியுடையனன்று;

கலைபுத்தி முதற் பாசஞானங்களை மேற்கிளம்பாமற் கிளம்பிக் கீழ்ப்படுத்துஞ் சிவனது சத்திகரணக் குறிப் பதிஞான விளக்கு விளக்க விர்த்திக் குறிப் பதிஞானம் விளக்கும் பார்ப்பவனது சிற்சத்திக் கரணக்குறிப்பதிஞானக் கட்பார்வை விர்த்திக் குறிப் பதிஞானத்தா லீசன் பார்க்கப்படுங் குறியுடையனென்று பரமசித்தாந்தம்;

போகத்தின் பொருட்டாம் மாலை சந்தன மகளிர் முதற் போக்கியக் குறிப்பொருளையும் மோக்ஷத்தின் பொருட்டுப் போக்கியக் குறி பொருந்தாச் சிவப்பொருளையும் பார்ப்பவனுக்கு அவனது கரணக்குறிச் சிற்சத்தியை விளக்குங் கலைமுதற் றத்துவங்களுந் தாத்துவிக விளக்க விர்த்திகளும் சிவனைக்குறித்து இயற்கைக் கரணபலங்களாயிருக்குஞ் சிவசத்தியும் சிவசத்தி விளக்கவிர்த்தியும் பார்ப்பவனது சிற்சத்திக் கரணத்தை விளக்குதலாற் செயற்கைக்கரணங்களென்று செப்பப்பட்டிருந்தாலும் இயற்கைக்கரணங்களாகா, இயற்கை செயற்கைப் பலங்களாகா;

அப்படித்தான் சிவனைப் பார்ப்பவனைக் குறித்துச் சிவசத்தி யியற்கைக் கரண மென்றிசைக்கின்ற தற்பொருளறிவு சிவம், புறப்பொருளறிவு சிவசத்தியாதலால், தற்பொருளறிவாகிய சிவக்குறிச் சிற்சத்தியால் ஈரறிவு நடுப்பொதுவறிவுப் பிரமாதிரு ரூபமாயிருந்து, சிவன் புறப்பொருளறிவாகிய சிவசத்திரூப ஸ்வரூப தற்பொருளைப் பார்ப்பன்;

சிவசத்தியாற் சிவன் பார்க்கப்படான்; பார்க்கபபடுவனுகிற் புறப்பொரு ளறிவாதலாற் சிவசத்திக்கும் சிவன் புறப் பொருளாய்ப் போவன்; பிரமிதி பலமும் பார்ப்பவனுக் கின்றிச் சிவனதாம்; ஆதலினுல்; ஆதித்தனது கிரணத்தால் விளக்கப்பட்ட கண்போலச் சிவசத்தியால் விளக்கப்பட்ட பார்ப்பவன் சிற்சத்தியாற் சிவன் சத்தி முதலிய பொருள்களுடன் கூடப் பார்ப்பவனுற் பார்க்சப் படுவனென்பது பரம சித்தாந்தம்; பிரமாணப் பிரஸ்தாபத்திலேயும் பிர தரிசிப்பித்தோ மொத்துக் காண்க. (அ)

வேதாந்தி விவேகித்தறியாது சித்தேகமென்று செப்பினு னென்று செப்புகின்ருர்.

ஒன்றெனுமதனுலொன்றென்றுரைப்பதுண்டாதலாலே
நின்றனன் வேருய்த்தன்னினீங்கிடாநிலைமையாலே
பின்றியவுணர்வுக்கெட்டாப்பெருமையனறிவினுள்ளே
யென்றுநின்றிடுதலாலேயிவனவனென்னலாமே.

(இ-ன்). நீ யொன்றென்றோதும் பிரமம் அறிந்து சொல்லப்படும் பொருளோ அப்படியாகிற் சொல்லியபின் வேறொருவனாற் கேட்டு மறியவும்படுமோ அப்படியெல்லாமன்றோ அன்றெனில், முயற்கொம் பொத்து நிஷ்பிரமாணமாம்; சுயம் பிரகாசமாய்த் தன் மாத்திரத்துக் குச் சத்தா மாத்திரமா யிருக்குமென்னில், பிரமஞானம் சாதகனுக்கு முத்தி சாதனமென்பதுங் கேட்டு, நிஷ்பிரயோசனமாம்; அந்தப் பிரமம் அடக்கமாய்ப் பண்ணி உனக்குத்தானே உபயோகமாயிருக்கப்பண்ணிக்கொள்; இங்கு வேண்டுவதில்லை; அப்படி ஏன் சொன்னீர்? அந்தப்பிரமம் அறியாமலறியப்படும், சொல்லாமற் சொல்லப்படும், கேளாமற் கேட்கப்படும், அப்படியே நீ,

ஒன்றெனுமதனால்=அந்தப்பிரமத்தை யொருபொருளென்றறிந்து பிறர்க்கறியச் சொல்லுதலால்; ஒன்றென் றுரைப்பதுண்டு=பிரமமொன்றென்றோதும் நீ முதலிய பொருள் ஓதப்படும் பிரமத்துக்கு வேறாயுள்ளதாம்; ஆதலாலே,

நின்றனன் வேறாய்=அறிபவனாகிய பிரமாதா, அறிந்து சொல்பவனாகிய வத்தா, சொல்லக் கேட்பனாகிய சுரோதா—அறிதல் சொல்லுதல் கேட்டற்கிரியைக் கருவியாகும் பிரமாணம், வாக்கு, சுரோத்திரம்—அறிதல் சொல்லுதல் கேட்டற் கிரியையாகும் பிரமிதி, வசனம், சிரவணம்—அறியப்படுமது, சொல்லப்படுமது, கேட்கப்படுமதாகிய பிரமேயம், அபிதேயம், சுரோதவ்வியம்—என்று நான் மூன்று பன்னிரண்டு பேதமாய்ப் பொருள்கள் பார்க்கப்படுதலால், சொல்லப்படும் பிரமமென்னுஞ் சிவன் சொல்பவனுக்கன்னியமாய் நின்றானதலால், நீ ஒன்றென்று சொல்லியது என்மாதாமலடி யென்பதற்கொக்கும்; சத்தியமே நீர் சொல்லியது; ஒன்றுதானே இரண்டாமதில்லாதது; பிரமமென்ற சுருதிச் சொல் சொல்லுக்கு முந்திய முத்திமானதலால் முத்தான்மாக்கள் சிவனுக்கு ஒப்பாவர்களென்றோதப்படுவர்கள்; சிவன் முத்தான்மாக்களுக்கு ஒப்பாவனென்று ஓதப்படான்; ஆதலால் ஒப்பற்றதென்று பொருள்; நன்று நீ சொல்லியது; முந்திமுத்தி பிந்திமுத்தி யென்பதும் விசாரிக்குமிடத்திற் சிவனுக்கு பந்தமேயில்லாமையால், முத்தியே யில்லையென்பதும் மலத்தைக்குறித்து வந்த செயற்கைவார்த்தை மலத்தைக் குறியாமல் அவனுக் கொப் பிவர்கள் இவர்களுக் கொப்பு அவன் என்பது இயற்கை வார்த்தை; இயற்கையால், இரு சிவமாயொத்தொரு சிவசாதுயாய் ஒரு சிவமாகியிருக்கும்; சிவப்பிரமம் வேற்றுச் சாதிப்ப பொருளோ டொப்ப தன்றென்று பொருள்;

பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமையன்=பாசஞானம் விளக்கிக்கலக்கும் தூல சவிகற்பச் சிற்றுச் சுட்டறிவுச் சிற்சத்தி விர்த்திப்பசு ஞானத்துக்கு மட்டுப்படாத மகிமையையுடையன் சிவன்; தன்னின்= சிவசத்தி ரூபக் கருவிப் பதிஞானவிர்த்திப் பதிஞானம் விளக்கித் தெளிக்கும் சூக்கும சவிகற்பச் சுட்டாது சுட்டுப் பேரறிவுத் தன் சிற்சத்தி ரூபக்கருவிப் பதிஞானபதிவிஷய விர்த்திப்பதிஞானத்தில்;

நீங்கிடா நிலைமையாலே=வியாபித்து மேன்மிஞ்சிப் போகாதபடியினுலேயும்; அறிவினுள்ளே யென்று நின்றிடுதலாலே=அந்தத் தன் பதிஞானக் கோடிக்குட் குறையா தொத்து வியாபித்துக் கலவாது சலந்து ஒரு சிவசாதியாய் நிற்றலாலும்; இவனவ னென்னலாமே=அவனிவனென்று மாறிக் குருசங்கமாதியில் அவனிவனென்றும் அதுவன்றி இவனவ னென்பதி லக்ஷணே யென்றெண்ணி அவனுனென்றும், அத்தி அஸ்மி அந்தத் திசைத்துச் சோயஞ் சோகம் இவைகாட்டும் சிவோயம் சிவோகம் என்று ஒன்றை யொன்ருகரிஷிக்கு மிரண்டு பாவனே யியற்றலாமே.

இவ்விரு சிவத்தியானத்திற் சிவசாதி குறியாது சிவப்பொருள் மாத்திரங் குறித்த சிவத்தியானம் பொய்யாகிலும் கருடமாந்திரிக தாதான்மியபாவனேபோல் சத்திய பலங்கொடாது விடாது; அரதத்தாசாரியர் சதுர் வேததாற்பரியத்தில், "அளிகம் சிவதாதாத்ம்யபாவநம் ததாபி விஷம்ப்ரமார்ஷ்டிஃ" என் றிப்பாவனேயைத்தானே படித்தார்; ஸ்வரூப சிவதாதாத்மிய சிவத்தியான மதனுண்முகிழ்க்குஞ் சிவசாதி விசிஷ்ட சிவத்தியான மிரண்டும் சத்தியபலமும் அப்படிப்பலிக்கும்.

ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி, ஸ்ரீமந் மாணிக்கவாசர், ஸ்ரீமத் அருணகிரிநாதர் என்னு மிவர்கள் தேவாரத்தும், திருவாசகத்தும், அலங்காரத்தும் "வழித்தலேப்படுவான் முயல்கின்றே னுன்னேப் போலென்னேப் பாவிக்க மாட்டேன்" என்றும் "ஆனந்தவார்கழலே யொப்பாக வொப்பிவித்த வுள்ளத்தாருள் ளிருக்கும்" என்றும், "என்னே யுன்னி லொன்ருய் விதித்து" என்றும் இப்பாவனேயைத்தானே படித்தார்கள். (கூ)

ஆறுஞ் சூத்திரம்

முற்றிற்று.

ஆூ திருவிருத்தம்-உடுக.

---

# ஏழாஞ் சூத்திரம்.

முதற் சூத்திர முடிவிற் கூறிய பொருளைத் தானே வற்புறுத்துகின்றார்.

அனைத்துஞ்சத்தென்னிலொன்றையறிந்திடாவசத்தாலென்னின்
முனைத்திடாவசத்துச்சத்தின்முன்னிருளிரவிமுன்போ
னினைப்பதிங்கசத்தேயென்னிற்சத்தின்முனிலாமையானுந்
தனைக்கொடொன்றுணர்தலானுந்தானசத்துணராதன்றே.

(இ-ள்). அனைத்துஞ் சத்தென்னிலொன்றை யறிந்திடா=சித்த சித்துக்களெல்லாஞ் சிவமென்று நீ சொல்லில், அச்சிவம் சித்த சித்துப் பிரபஞ்சத்தொரு பொருளையானு சிருட்டிக்கத் திதிக்கச் சங்கரிக்சத் திரோபவிக்க அனுக்கிரகிக்க வேணுமென் றறியாது;

தன்னைத்தவிர வேறொன்றில்லாமையால் தன்னைத்தானே சிருட்டிக்கும் திதிக்கும் என்பது முதல் மாறுபடும் வார்த்தை வருமாதலால், விபரீதமாய்ச் சுகதுக்க வேதனுபோகமுஞ் சிவாத்துவைதியும் வேதாந்தியும் சிவனுக்கும் பிரமத்துக்குஞ் செப்பவேணும்; பிரமவியதிரித்தஞ் சர்வமித்தையென்று சொல்லுதலால் அவ்வேதனையும் மித்தையாமே; அப்போது மித்தையென்று சொல்லியது மித்தையாமே; அப்போது சித்துப் பிரபஞ்சமுஞ் சிவனு மொன்ருதலால் அவ்வேதனை சிவனுக்கு,

அசத்தாலென்னில்=அசித்துப் பிரபஞ்ச சங்கத்தாலென்னில்; இரவிமுன்னிருள்போற் சத்தி முன்னசத்து முனைத்திடா=சிவத்தின் முன் அசித்துப்பிரபஞ்சம் பிறர் பிரயோசனம் பிறர் போக்கியம் பிறர் போசகம் ஸ்வதிருச்சியம் இவை முதலியவாய்த் தோற்றினும் ஸ்வப்பிரயோசனமா யப்படித் தோற்ருது (சிவனுக்குச் சொரூப மாத்திரமாய்த் தோற்றுமென்பது கருத்து); இங்கசித்தே=அசிற்பிரபஞ்சத்திற் சில வந்தக் கரணமுதலியதே சற்சன்னிதானத்திலே; நினைப்பதென்னில்=புறப்பொருளை யறிந்த தற்கருகமாகு முட்சுகதுக்க மோகங்களை யனுபவிப்பதென்று நீ சொல்லில்; அசத்து=அந்தக் கரண முதலியன; சத்தின் முனிலாமையானும்=சிவத்தின் முன்னின்ற தானும் அது கோடு முதலான தற்குப் போலோ ரறிவிலாமையானும்; தனைக்கொடொன் றுணர்தலானும்=விளக்கை விளக்காகக் கொண்டு கண் காண்பது போலத் தன்னைக் காட்டாகக் கூட்டிச் சிற்சிவத்துக் கன்னியமாய் ஒரு சதசத்தான்ம சித்

துப் போக்கியப் பொருளைப் புசித்தலானும்; தானசத்துணராதன்றே= புசியாது தானே. (க)

சத்த சத்துக்களைத் தற்பிரயோசனமாய் விரும்பி யறிவது சதசத்தென்று சாற்றுகின்றார்.

சத்தசத்தறிவதான்மாத்தான்சத்துமசத்துமன்று
நித்தமாய்ச்சதசத்தாகிநின்றிடுமிரண்டின்பாலு
மொத்துடனுதித்துநில்லாதுதியாதுநின்றிடாது
வைத்திடுந்தோற்றநாற்றமலரினில்வருதல்போலும்.

(இ-ள்). சத்த சத்தறிவதான்மா=மோக்ஷ போகக்குறிச் சுவப் பிரயோசன காரணமாக முறைமையிற் சிவப்பிரபஞ்சங்களை வாஞ்சித்தறிவதுயிர்; தான்=அந்த வான்மா; சத்துமசத்துமன்று=சிவமும் அசித்தாய்ப் பிரபஞ்சமுமல்ல; நித்தமாய்=நித்தியப்பொருளாய்; சத்த சத்தாகி நின்றிடு மிரண்டின் பாலும்=சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ ரூப சிவத்துவத்தையும் அசர்வஞ்ஞத்துவ அசர்வகர்த்துருத்துவ ரூப பசுத்துவத்தையு முடையனுகி அந்த சிவத்துவ பசுத்துவ வியற்கைச் செயற்கையிரு தன்மங்களிலே இயற்கை செயற்கை தன்மியாயிருக்கும்; ஒத்துடனுதித்து நில்லாது=இருளோ டொளிபோற் பசுத்துவத்தோடு சிவத்துவம் ஒத்து ஒருகாலத்துதயமாகாது, அப்போது அப்பொருளாகாசப் பூவாம். அப்படிச்சொல்ல வேண்டா;

வைத்திடுந்தோற்ற நாற்ற மலரினில் வருதல்போலும்=அரும்பிற் சூக்குமித்திருந்து பூவின்மணம் ஆவிர்ப்பவித்தற் கொக்கும்; மலம் நீங்குமுன் மலமடக்கியிருத்துஞ் சிவத்வத்தினதுதயம் "சீவனுக்குள்ளே சீவமணம் பூத்தது" என்று திருமந்திரத்திருப்பது முணர்க; அப்படியாகிற் சிவத்துவங் காரணகார சத்தி ரூபபிராக் பாவமாயிருந்து காரியாகார வியதத்திரூப சத்தியோசாதமாய்த்திரிந்து பரிணமித்தலால், அதில் விகாரித்துவம் அனித்தியத்துவம் சடத்துவம் முறைமையில் வந்து விழும்; அப்படி நீ சொல்லிய தூஷணமிங்கிசையாது; ஆன்மாவிற் சிவத்துவம் அப்போதப்பிரவர்த்தி ரூப வனபிவியத்தி யெனுஞ்சத்தி ரூபமாயிருந்து இப்போது பிரவிர்த்திரூப வியத்திரூபமானதன்று;

பின்னெப்படியாவது அப்படி யப்போ திப்போ தெப்போதும்வியத்திரூபமாயேயிருக்கும்; அப்போதில்லை யெனும்பொருட்பிராகபாவப் பெயர் சூக்கும பாவரூபசத்திபூதமாயும், இப்போதுள்ளதெனும் பொருள்

அதுநா பாவப்பெயர் பெறுங்ூல பாவரூப வியத்தி பூதமாயுமிருந்து, வந்ததென்பது மலோபாதி வருவித்தது; அப்படித் திருமந்திரத்துஞ் சொல்லப்பட்டது:

அணுதிசிவரூபமாகியவான்மாத்
தணுதிமலத்தாற்றடைப்பட்டுநின்றது
தணுதிமலமுந்தடையற்றபோதே
யணுதிசிவரூபமாகியவாறே.

ஆதலால் மலம் ஆவிர்தி நிவிர்த்திச்சொற் சொல்லும்மறைத்தல் திரும்புதலென்னுந் துவிரேக சுவபாவசத்தி மத்தாதலால், மலசத்தியினது ஆவிர்தி ரூபத்தைத்தீக்ஷாகன்மத்துச் செய்யுமுத்தியாகுதியாற் பகுப்பற்றுப்பிரித்தற் கரிதாகிய அந்தரங்கநிவிர்த்தி ரூபஸ்வரூப சத்துவ பரிணமத்தால் மலமுத்தி பண்ணிச் செவ்வரத்தம்பூச்சிவப்புபாதியைப் போக்கிப் பின்னுபாதி நீங்கின படிக வெண்மை விளக்கத்தையிருந்தபடி யிருத்துவதுபோலத்திக்ஷா கன்மத்துச் செய்யும் வியத்தியாகுதியால்,மலத்தினுல் மகாமாயையில் வைத்த மாமாயாகாரியமலவாசனுமுத்தியை மகாமாயையிலீனமாய் வாசனையிருப்பதாய் முறைமையிற்பண்ணிச்சத்திசாமர்த்தியப் பெயர்பெறும் சிவத்துவத்தின்து சர்வார்த்தக்கிரியா வினுபூத சர்வார்த்த ஞானவிர்த்தியினது இயற்கை யபிவியத்தியை யிருந்தபடி யிருத்துவதே; இப்போது புதிதாய்ச் சிவத்துவாபிவியத்தியைப் பண்ணுவதென்பது;

ஆகையாற் கரணீயமெல்லாம் மலவாசனுவதி மாத்திரத்தில் மாறுதலாற் றிரிவின்றி இயற்கையால் விகிர்தி விட்டிருந்தபடி யிருத்துஞ் சிவத்துவாபி வியத்தியிலெங்கே நீ சொல்லும் அநித்தியத்துவம் வந்தெய்தும்? இல்லைத்தானே; ஆகையாற் சர்வார்த்தக்கிரியாவினுபூத சர்வார்த்த ஞானம் இருந்தபடியிருத்தலால் அந்தச்சர்வார்த்தக்கிரியா வினுபூத சர்வார்த்த ஞானுபாவமெனும் அஞ்ஞானம் மலத்திடத் தியற்கை ஞானுத்தியந்தா பாவரூப மோகவஸ்துவாயிருந்து ஆன்மாவில் ஞானம் பிராகபாவம் போலாபாசித்தலால் ஆன்மாவில் ஞானப்பிராகபாவஞ் செயற்கை யாதலால்;

உபசரித மென்றாகித்தலால் ஞானம் வியத்திமத்தாயிருந்தபடி யிருத்தலால் அந்த ஞானுபாவம் இயற்கையாலில்லை யென்று அஞ்ஞானம் ஆன்மாவில் வஸ்துவன்று; மலத்தில் மெய் வஸ்து; ஆன்மாவிற் பொய்யே; அப்பொய்யைப் போக்க வேறு சாதனம் வேண்டுவதில்லை; அப்பொய்யை மெய்யென்று பண்ணு மலசத்தி முத்தி மலசத்தி வாசனு

த்தி பண்ணியிருந்தபடி யிருக்கும் சிவத்து வாபிவியத்தி காண்பிக்கு முத்தி வியத்தி சாதனமே சாதனம்; அந்த வியத்தியே அஞ்ஞான நிவிர்த்தி வேறென்றில்லை; மணிமந்திரம் பொருந்தும் விரும்பு மொரு சத்தியால் ரோக சத்திமுத்தியானது தனது மாரண விருத்தியினது நிவிர்த்தி ரூபஸ்வரூப சத்துவ பரிணா மத்தாற் பண்ணப் படுவதுபோலத் தீக்ஷா லக்ஷண சிவமந்திர சத்தியால் மலசத்திமுத்தியுந் தனதாவிர்தி நிவிர்த்தியினது நிவிர்த்தி ரூபஸ்வ ரூபசத்துவ பரிணாமத்தாற்பண்ணப்படுமாதலால், ஆவிர்தி நிவர்த்திச் சுவ விர்த்தியோடு நித்தியமல தன்மி தன்ம சத்திக்கு அனித்தியத்துவமே யில்லை;

ஆன்மாக்களுக்கு மலமேகமாறுனு மல சத்திக ளவரவர்க்கு வேறு வேறுதலால் அசேதனமநேகமாதலால் மல சத்திகள் அனித்தியங்களாமென்னில் அனித்தியங்களன்று, நித்திய மலதன்மிதன்மங்களாதலால்; அப்படியாகில் தன்மதன்மிகளுக்கு வியாக பேதமாதலாற் றன்மிக்கு மனித்தியத்துவப் பிரசங்கம் வரும்; ஆதலால் அசேதன மநேகம் அனித்திய மென்றது தன்மியைக் குறித்துச் சொல்லியது தன்மத்தைக் குறித்துச் சொல்லியதன்று; அப்படியாகில் நமது பார்வையாற் பின்ன சாதியாதலால், ஏகம் ஏகமாயிருந்தாலும் பரனது பார்வையாற் சத்தி சமூக மாத்திரமாய் அசேதனமாய் அநேகமாயிருக்கும் மாயை மகா மாயைகள் அநித்தியங்களாய்விடும்; மாயா சத்திகள் மல சத்தி போல ஸ்வரூப சத்துவ மின்றித் திரிந்து பரிணமித்தலால் மாயை மாமாயைகளனித்தியமாமே, அநித்தியங்களன்று; பால் தயிரானது போற் சத்திகள் முற்றும் பரிணமியாமற் கிருதகாடின்னியம் போல ஏகதேசத்திற் பரிணமித்தலால்; அப்போது ஏகதேசத்திறுசமாகட்டும், அதுவுமில்லை; ஏகதேசத்திற்பரிணமித்த சத்திகள் வியத்திரூபங்களாயிருத்தலால், வியத்திரூப காரியங்களும் முன்சத்திரூபமாயிருத்தலாற் காரணகாரியங்களும் முன்சத்திரூபமாயிருத்தலாற் காரணகாரிய மிரண்டும் நித்தியமே;

அப்போது மலசத்திகள் அநித்தியங்கள்; மாயா சத்திக ளேகதேசத்திலநித்தியங்களென்பதென்னை? ஸ்வரூப சத்துவ ஸ்வரூபத் திரிபுபரிணாம பேதத்தாற் படித்துச் சொன்ன மாத்திரம் பாரமார்த்தத்தா லெல்லாம் நித்தியங்களே; வைத்திடுந் தோற்ற நாற்ற மலரினில் வருதல் போலும் என்பதனாற் சிவனோடு கூடிச் சிவனும் பாசத்தோடு கூடிப் பசுவாயும் இருப்பனென்ப திசையாதென்பதறிக. (உ)

மலசத்தி பண்ணும் அஞ்ஞான தோஷ மான்மாவுக்கே சிவனுக்கில்லை யென்று செப்புகின்றார்.

சுத்தமெய்ஞ்ஞானமேனிச்சோதிபாலசத்தஞ்ஞான
மொத்துறுகுற்றமெல்லாமுற்றிடுமுயிரின்கண்ணே
சத்துளபோதேவேறுஞ்சதசத்துமசத்துமெல்லாம்
வைத்திடுமனாதியாகவாரிநீர்லவணம்போல.

(இ-ள்). சுத்த மெய்ஞ்ஞானமேனிச் சோதிபால்=சத்துச் சித்து ரூப சிவன்கண்; அசத்தஞ்ஞானமொத்துறு=அசுத்தமல மாரோபிக்கும் ஞானாபாவமூர்ச்சா மோகம் பொருந்தா; உயிரின்கண்ணே=பசுக்களிடத்தில்; குற்றமெல்லாமுற்றிடும்=மூர்ச்சா மோகம் பிரஞ்ஞா மோக முதலிய தோஷமெல்லாம் பொருந்திடும்; சத்துளபோதே வேறும்=சிவசங்கற்ப சாந்நித்திய முண்டாக நீங்கும்; சதசத்துமச்சத்து மெல்லாம்= பசுவர்க்கம் பாசவர்க்கம் பதிவர்க்க மிம்மூன்றும்; வாரி=நீருக்கிடங் கொடுக்குமாகாயம்; நீர்=அவ்விடத்தினிறையும் நீர்; லவணம்=ஆகாயத் திற்றோயாது சலத்திற்றோயு முப்பு; (இவைகள்) போல;

(வாரிக்கொப்புப் பதி, நீருக்கொப்புப் பசு, லவணத்துக்கொப்புப் பாசம்); அனாதியாக வைத்திடும்=நித்தியமாய் நிச்சயிக்கப்படும். (௩)

ஆன்மாச் சிவன்போற் சச்சிதானந்த ரூபியென்பது சாற்றுகின்றார்.

அறிவிக்கவறிதலானுமழிவின்றிநிற்றலானுங்
குறிபெற்றசத்துஞ்சித்துங்கூறுவதுயிருக்கீச
னெறிநித்தமுத்தசுத்தசித்தெனநிற்பனன்றே
பிறிவிப்பன்மலங்களெல்லாம்பின்னுயிர்க்கருளினாலே.

(இ-ள்). அறிவிக்கவறிதலானும்=சிவன்சகலாவத்தையிலே கலாதி தத்துவங்களில் தத்துவ தேவதாபாரம்பரியமாய் வந்து மறைந்து நின்று அவைகளைச்செலுத்தி அவரவர்பருவமருகமாசப்போதிக்கஉணர்தலானும்;

உம்மையினாற் சுத்தாவத்தையிலே சாக்ஷாத்தீக்ஷா லக்ஷணத்தினது சத்தியால் சிவன்முன்போலமுறைமையில் முற்றும் மலமுத்தி மலவாசனாமுத்தி சிவத்துவவியத்திபண்ணி அறிவிக்கத் திரும்பத் திரும்பச் சிவசத்தியினைக்கு விரும்பாதுவிட்டு ஸ்வயம் பிரகாசமாய்ப் பதி

முதலிய சர்வபதார்த்தங்களைப்போக்கிய போத்திருத்துவத் தன்மை விட்டு இடைவிடாது எப்போதுமுள்ளமைமாத்திரமாய்ப் பார்த்திருத்தலானும்;

அழிவின்றி நிற்றலானும்=நித்திய சத்தியமாதலானும்; குறிபெற்றசத்துஞ் சித்துங் கூறுவருயிருக்கு=(ஒரு மொழி யொழிதனினங் கொளற்குரித்தே என்பதனால்) தன திலக்ஷணமாக அடைந்த சச்சிதானந்த ரூபமுயிருக்குப் பெரியோர்பேசுவர்; அறிவின்றி நிற்றலானுமென்றுபாடங் கொண்டாற்குறிபெற்றவசத்துஞ் சத்துமென்றுபாடங்கொண்டு சத்த சத்தென்பதற்குக் காரணமாய்க்கேவலாவஸ்தையிலே பிரஞ்ஞாமோகமின்றி மூர்ச்சாமோகியாயிருத்தலானும்; குறிபெற்றவசத்துஞ் சித்துங்கூறுவர்=தனதுசெயற்கைலக்ஷணமும் இயற்கைலக்ஷணமுமாகவடைந்த பசுத்துவ சிவத்துவமு மான்மாவுக்குப் பெரியோர் படிப்பார்கள்; ஈசனெறிநித்தமுத்தசுத்த சித்தெனநிற்பனன்றே; (சித்தென்பதனை நாலிடத்துங்கூட்டுக) பிறிவிப்பன்மலங்களெல்லாம் பின்னுயிர்க்கருளினாலே=முன் சொல்லிய பிரகாரம் அருளினாலே மலமுத்தி சிவத்துவ வியத்திபண்ணுவன். (௪)

ஏழாஞ்சூத்திரம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-உ௫௫.

---

## எட்டாஞ் சூத்திரம்.

ஆகமங்களின் ஞானபாதப் பொருள் போதித்துச் சில கலப்புப் பகுப்பாய்ப் பொதுச்சிறப்பாக யோகபாத முதல் முப்பாதப் பொருள் போதிப்பதற்கு முயலுகின்றார்.

மன்னவன்றன்மகன்வேட ரிடத்தேதங்கி
வளர்ந்தவனையறியாதுமயங்கிநிற்பப்
பின்னவனுமென்மகனீயென்றவரிற்பிரித்துப்
பெருமையுடன்றானாக்கிப்பேணுமாபோற்
றுன்னியவைம்புலவேடர்சுழலிற்பட்டுத்
துணைவனையுமறியாதுதுயருறுந்தொல்லுயிரை
மன்னுமருட்குருவாகிவந்தவரினீக்கி
மலமகற்றித்தானாக்கிமலரடிக்கீழ்வைப்பன்.

(இ-ள்). இராஜா நீயென்று ராஜா ராஜபுத்திரனுக்கு ராஜகுலம்போதித்ததுபோலச் சிவன் குருக்குறி கொண்டு தீக்ஷைபண்ணித் தீக்ஷாங்கமாகுஞ் சித்தாந்த மகாவாக்கியஞ் செப்பிச் சிவகுலம் போதித்துத் தியானிப்பித்துப் பசுத்துவம் பறித்துச் சிவத்துவங் கொடுத்து; தானாக்கி=(இவ்விடத்துச் சொல்லிருந்தபடி பொருளுரைத்தால் சிவாத்துவைதி ஒருபிரகாரத்தாற் சிவாவேசவாதி யிருவருஞ் செயிப்பார்களாதலால் கருதரன் போனிற்ப னென்று மேற் காட்டும்படிக்குத்) தன்னைப்போலாக்கி; மலரடிக்கீழ்வைப்பன்=மலரடியின் கீழே வைப்பன்;

(இங்கு மிருந்தபடி பொரு ளுரைக்கிற் றடத்த லக்ஷணந் தாக்கும்; இலக்ஷணையினல் அடி சிவசத்தி யென் றுரைக்கில் ஆன்மாவில் சடத்தன்மை விடாத வியாப்பியத்துவம் சங்கிராந்தவாதந் தான் சாரும்; ஆதலால், மலரடியென்பது மலருமடி, மலராநின்றவடி, மலர்ந்தவடி என்று விரியும் வினைத்தொகையாதலாற் றனது சத்திபோற் பிறப்பொருட் பிரமேய மாத்திரத்தில் அறிதற் றொழில் பண்ணி மலர்ந்த தற்பொருட் பிரமேயமாகிய எதிர்முக சிற்சத்தி மாத்திரத்தி லறிதற் றொழில் பண்ணி, மலர்ந்த திரும்பியமுக சிற்சத்திரூபியாகச் செய்வன்; மலரடி வியத்த சிற்சத்தி யென்று தாற்பரியம்; சத்த ஸ்பரிச முதலைம்புலத்தை விஷயீகரிக்கு மைம்பொறியை ஐம்புலமென்றுருகுபெயராற் சொல்லியது, சுழல் என்றது தன் வழிக்கிழுக்கு மொப்பால்) துணைவன்=சிவன் (தனது வியாபகத்து ளடங்க வியாப்பியமாய் வைப்பனென்று சிலர் பொருளுரைத்தார்கள்; அவர்கள் வியாப்பியனானல் ஆன்மா சடமாவனென்றும் ஏன் செப்பாதிருந்தார்கள்; திரும்ப வியாப்பியத்தினுற் சிவனோடனனியத்துவஞ் சொல்லுமவர்கள் வியாப்பிய வியாபக லக்ஷணத்தால் வேற்றுமை வரும் ஐக்கியமேயில்லை என்பது ஏன் அறியாதிருந்தார்கள்; ஆதலால் ஒப்பு ஒரு சாதியைக்கியமே யனனியத்துவம்). (க)

சகலனுக்குமாத்திரம் அனுக்கிரகமென்றெண்ணவேண்டாம் மூவருக்குமுண்டென்னு முறைமை யுரைக்கின்றார்.

உரைதருமிப்பசுவர்க்கமுணரின்மூன்று
முயருமவிஞ்ஞானகலர்பிரளயாகலர்சகலர்
நிரையின்மலமலங்கன்மமலங்கன்மமாயை
நிற்குமுதலிருவர்க்குநிராதாரமாகிக்
கரையிலருட்பரன்றுவிதாசத்திநிபாதத்தாற்
கழிப்பன்மலஞ்சகலர்க்குக்கன்மவொப்பிற்

றரையிலாசான்மூர்த்தியாதாரமாகித்
தரித்தொழிப்பன்மலஞ்சதுர்த்தாசத்திநிபாதத்தால்.

(இ-ள்). நிராதாரமாகி = நிரதிகரணாய்நின்று; துவிதா சத்தி நிபாதத்தால் = தீவிரதரசத்திவிழுதலாற் றீவிரதரத்தாற் பரமுத்தி தீவிரத்தால் அபரமுத்தி; (தீவிரத்துள்ளும் மந்த மந்தரசத்திநிபாதமுண்டு அபரமுத்தியனந்தவிதமாதலால்; நிரதிகரணனுக்கிரகஞ் சகலர்க்கு மேகதேசத்திற்சாற்றியதுண்டு); ஆசான்மூர்த்தி; ஆதாரமாகித்தரித்து = சாதிகரணாயிருந்து; சதுர்த்தாசத்திநிபாதத்தால் = மந்ததராதியால்; மலங்கழிப்பன் = மலத்தையொழிப்பன்; ஒழிப்பனென்பதற்குப்பின் சிவத்துவாபிவியத்தியும் செய்வனென்பது செப்புக; விஞ்ஞானகலரென்பது தலைக்குறையாதலால் விஞ்ஞானகலரென நின்றது.

விஞ்ஞானத்தால் மாயாபுருஷவிவேகஞானத்தால் கலைமுதல் முப்பது தத்துவத்தால் மூடப்பட்ட சூக்குமதேகமில்லாமையாற் சில பெயர்க்கவர்கள் விஞ்ஞானகலர்கள் பிரளயத்தக்கலை நீங்கின பெயர் பிரளயாகலராதலால், இருவர்க்கத்துக்கும் நிரதிகரணனுக்கிரகம் சிலபெயர் அனந்தாதி யணுசதாசிவாதி யரிவர்களை விஞ்ஞானகலர்க ளென்றும், அபரமந்திரேசுவரர்களாகிய ஸ்ரீகண்டாதியர்களைப் பிரளயாகலரென்றும் பேசுவார்கள்; அவர்கள் மலமலகன்ம முத்தராய்ப் பதிபதார்த்தத்துள் அந்தர்ப்பவித்து மலமாத்திரகலுஷித விஞ்ஞானகலக்குறி, மலகன்மமாத்திர கலுஷித பிரளயாகலக் குறி பிரியாது தரியாமையால் அப்படிப் பேசுதல் அறியாமையா லென வறிக.

பெரியோர் சிலவிடத் தப்படிப் பேசியதேது? முன்னிருப்பைக் குறித்துக் கூறிய தெனக் குறித்தறிக. பிரளயாகலர்க்குத் தேவகுருவாயனுக்கிரகம் பண்ணுவனென்று சிலர் பேசிய தேது? தேகமிலாப் பிரளயாகலர்க்குத் தேவகுருவாய் வந்தனுக்கிரகம் பண்ணுவ னென்பது செய்தி தெரியாது செப்பியது. இருவர்க்கும் நிராதாரமாகி யெனுமாசிரியர் வசனத்துக்கும் சிவாகமத்துக்கும் விரோதச் சொல்லுமாம்.

ஆன்மதத்துவ மிருபத்திநான்கிற்கு மேல் பிரகிருதி முத்தராய்பிராகாதி கலாந்தமாகிய தத்துவங்களி னிரஞ்சனர் தவிரச் சாஞ்சனராயிருப்போர்கள் பிரளயாகலர்களென்று சிலர் பேசிய தேது? ஸ்ரீமத் காமிகாகமத்தில் ஏகதேசத்தில் அப்படியிருத்தலால், இசைத்தார்கள். அச்சகல விசேஷ. பிரளயாகலனைக் குறித்து உருத்திர தேவர்களிற் றேவ

குரு வென்பது கூடும்; தேகமில்லாப் பிரளயா கலர்க்குத் தேவ குரு வென்பது கூடாது; மற்றது பிரசித்தப் பொருள்.

விஞ்ஞானகலர்கள் பரிபக்குவ மலர்கள் அபரிபக்குவ மலர்கள் என்றிருவகையர். அந்த இருவகையருக்குட் பரிபக்குவ மலர்கள் சிவானுக்கிரகம்பெற்றுப் பதிபார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் அணு சதாசிவர் அநந்தாதிகள் மந்திரர்கள் புவனவாசிகள் என்னும் அபர முத்த சிவன்களாயும்போயிருப்பார்கள். அபரிபக்குவமலர்கள்மாயைக்குமேற்சுத்த வித்தைக்குக் கீழ்மலமாத்திர கலுஷிதர்களாய்ப் பசுபதார்த்தங்களாயிருப்பார்கள்; பிரளயாகலர்பரிபக்குவமலர்அபரிபக்குவ மலரொன விருவகையர். அவ்விருவகையருள் பரிபக்குவமலர்கள் சிவானுக்கிரகம் பெற்றுப் பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் ஸ்ரீகண்ட வீரபத்திரர் முதலியஅபரமந்திரேசுவரர்கள்புவனவாசிகளென்னும் அபரமுத்த சிவங்களாயும் போயிருப்பார்கள். அபரிபக்குவமலர்கள் சிருஷ்டிகாலத்திலே சகலராவார்கள்.

சகலர்கள் திரிபந்திகளென்றும் விஞ்ஞானதிகளினாலே கன்மநாசம் வந்து விஞ்ஞான கைவல்லியம் வருமளவும் துவிபந்திகளென்றும் இருவிதமாயிருப்பார்கள்; அந்தவிருவிதமாயிருக்குஞ் சகலர்கள் தூலதேகிகளென்றும், அப்பிராத்தவாகிய சரீரிகளென்றும், பிரசுட்டவாகிய சரீரிகளென்று சொல்லப்படுந் தூலவிதேகிகளாயும் இருப்பார்கள்; திரும்ப அந்தநால்வகையோருந்தனித்தனி பக்குவமலர்களென்றும் அபரிபக்குவ மலர்களென்றும் எண்வகையர்; அவருள், பரிபக்குவ மலர்கள் என்னும் நால்வகையினரும் சிவானுக்கிரகம்பெற்றுப்பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் நானுபத முத்தராயிருக்கும் அபர முத்த சிவன்களாயும் போயிருப்பார்கள். அபரிபக்குவ மலர்களெனும் நால்வகையோரும் சம்சாரிகளாயிருப்பார்கள். ஆக மூவகையோரும் பன்னிருவகையரென்பது பார்த்தறிக. சகலானுக்கிரகங் குருத்திருமேனி குறித்திருக்குஞ் சிவன் பண்ணுவது. (உ)

பலபிரகாரமென்பது படிக்கின்றார்.

பலவிதமாசான்பாசமோசனந்தான்பண்ணும்
படிநயனத்தருள்பரிசவாசகமானதமு
மலகில்சாத்திரம்யோகமௌத்திரியாதி
யனேகமுளவவற்றினவுத்திரியிரண்டுதிறமா
மிலகுஞானங்கிரியையெனஞானமனத்தா
லியற்றுவதுகிரியையெழிற்குண்டமண்டலாதி

நிலவுவித்துச்செய்தல்கிரியாவதிதானின்னு
நிர்ப்பிசஞ்சபீசமெனநின்றிரண்டாய்நிகழும்.

(இ-ள்). ஆசான்=குருக்குறி குறித்துக்கொள்ளுஞ் சிவன்; பாச மோசனம் பண்ணும் படிதான்=அனுக்கிரகஞ் செய்யும் பிரகாரம்; பல விதம்=வெகுபிரகாரம்;

நயனத்தருள்=அத்துவாமார்க்கங் குறியாது குறித்துச் சுருக்கிப் பாசங்கழலப் பார்த்தல் சாக்ஷுஷீயென்னுந் தீக்ஷை; பரிசம்=அப்படிக் குறித்துச் சிவ அத்தம்வைத்தல் பரிசதீக்ஷை; வாசகம்=அப்படிக் குறித்துப் பதினொரு மந்திரத்தோடு பஞ்சாக்ஷர முபதேசித்தல் வாசகதீக்ஷை; மானதம்=அப்படிக்குறித்து யோகமார்க்கத்தால் சீஷனது இருதயம் பிரவேசித்துச் சிந்தித்தல்மானசதீக்ஷை; சாத்திரம்=அப்படிக்குறித்து ஆகமப்பொருளைச் சுருக்கி யுபதேசித்தல் சாத்திரதீக்ஷை; யோகம்=அப்படிக் குறித்து யோகமார்க்கத்தால் சீஷனது இருதயகமலத்திற் பிரவேசித்து நக்ஷத்திரம்போ லிருக்கின்ற சீவனைப் பாசம்பறியப் பார்த்துத் துவாதசாந்தத்திற் சிவனிடத்திலே யோசித்தல் யோகதீக்ஷை;

(இவ்வறுவகைத்தீக்ஷையும் அவுத்திரி தீக்ஷைக் கருகமல்லாத பெயர்க்குப் பண்ணுவதெனவும் அவுத்திரிக்கங்க மெனவுமறிக) அவுத்திரியாதி =அவுத்திரிபிரதானமா யிப்படித் தீக்ஷைகள்; அநேகமுள=வெகுபேத முண்டு; அவற்றில் அவுத்திரி; இலகுஞானம்=விளங்கும் ஞானவுத்திரி என்றும்; கிரியை=கிரியாவுத்திரி என்றும்; இரண்டு திறமாம்=இருவகையாம்; (அவற்றுள்) ஞானம்=ஞானதீக்ஷை; (அது சாத்தி சாம்பவி யென்றிருவகை; அதில் சாத்தி=யோகதீக்ஷை; சாம்பவி=ஞானதீக்ஷை) (அதில் சாத்தி); மனத்தா லியற்றுவது=புறம்பேபோற் குண்டமண்டலாதிமனச்சிறப்புச் சங்கற்பத்தாற் குறித்துப் பண்ணுவது; (சாம்பவி); மநோதீதசிற்சத்தி மனச் சங்கற்பபூர்வ சிற்சத்திக்கட் சிறப்புப் பார்வையாற் பாசம் முறைமையிற் பறியப்பார்த்துப் பண்ணுவது; கிரியாதீக்ஷை கிரியை=எழிற் குண்டமண்டலாதி நிலவுவித்துச் செய்தல்; கிரியாவதி தானின்னும் நிர்ப்பீசஞ்சபீச மென நின்று இரண்டாய்; நிகழும்=விளங்கும். (௩)

இருவகை தீக்ஷைக்கு மருகளை முறைமையி லிசைக்கின்றாராய்
நிர்ப்பீசத்தருகளை நிகழ்த்துகின்றார்.

பாலரொடுவாலீசர்விருத்தர்பணிமொழியார்
பல்போகத்தவர்வியாதிப்பட்டவர்க்குப்பண்ணுஞ்

சீலமதுநிர்ப்பீசஞ்சமயாசாரந்திகழ்சுத்தி
சமயிபுத்திரற்குநித்தத்
தேலுமதிகாரத்தையியற்றித்தானு
மெழினிரதிகாரையெனநின்றிரண்டாய்விளங்குஞ்
சாலநிகழ்தேகபாதத்தினோடு
சத்தியநிர்வாணமெனச்சாற்றுங்காலே.

(இ-ள்). பாலர் சத்திநிபாத லக்ஷணங்காண்பிக்குஞ் சாமர்த்திய முடையராய்ச் சமயாசார மனுஷ்டிக்குஞ் சாமர்த்தியமிலராய் நிரம்ப ஓதி யுணராதவர்களாய்ப் பதினாறு வயதுட்பட்டவர்; அவர்களோடு வாலீசர்=(வாலீசரென நீட்டியவாறு) சத்திநிபாத சின்னர்களாயும் ஓதி யுணராதார்; விருத்தர்=சத்திநிபாத சின்னர்களாய் ஓதியுணர்ந்தாலும் அனுஷ்டானத்தில் அசத்தரா யெழுபது வயதுக்கு மேற்பட்டார்; பணிமொழியார்=உள்ளபடி யோதியுணர்ந்து சமயச்செய்தி சாங்கமாயனுஷ்டிக்குஞ் சாமர்த்தியமில்லாதாராய்ச் சத்திநிபாத சின்னிகளாய்ச் சஞ்சரிக்கும் மகளிர்; பல்போகத்தவர்=சாத்திர பாத்திரராய்ச் சத்திநிபாத சின்னந்தாக்கித் தூக்கவும் போகவாஞ்சை போக்கு மூக்கமில்லாதார்; வியாதிப்பட்டவர்=உரைத்தவை யெல்லாமுடையராயினு முரோகத்தர் இவர்கட்கு; பண்ணுஞ்சீலமது=செய்யுஞ் செயற்கையை யுடைய தீக்ஷை; சமயாசாரந்திகழ் சுத்தி; (பீசச்சொற் சொல்லுஞ் சைவசங்கேதானுஷ்டானப் பொருளில் விளங்கும் நிர்ச்சொற் சொல்லுஞ் சோதனைப்பொருள்; நிர்ப்பீச தீக்ஷை சாதகர் ஆசாரியர் இருவர்க்குந் தகாதாதலால்); சமயி புத்திரர்க்கு=புத்திரரொன்று நிருவாண தீக்ஷிதர்க்கும் பேயர் பேசுதலாற் சமயவிசேஷ சாதகாபிடேக நைமித்திகாதிகாரமில்லா நிருவாணிகளில் நித்திய கிருத்திய மாத்திரத்திற் சாமர்த்தியவான்கள் ஒரு பிரகாரஞ் சாதிகாரிகளானாலும் அவருள் நித்திய முற்றும் பண்ணுஞ் சாமர்த்தியமில்லாப் பாலர் முதற் சமயி விசேஷிசாதகாபிடேக நைமித்திகாதிகாரமில்லா நிருவாணிகட்கு;

நித்தத்தேலுமதிகாரத்தை யியற்றி=முழுகுதல், தர்ப்பித்தல், செபித்தல், குருக்குறிப்பேவல், பூசித்தல், ஓமித்தல் கேட்டுச் சிந்தித்துத்தெளிந்து தியானித்தல், சமாதித்தல், சாக்ஷாத்கரித்தல் முதலிய நித்திய கன்மத்திற் குருக்குறிப்பேவலால்நைமித்திக கன்மத்துஞ் சிறிதிற்காமியத்துஞ் சிறிதிற்சமர்த்த சமயிமுதலோர் பண்ணும் கிருத்தியத்தில் இயன்றகிருத்தியத்தைப்பண்ண, அது கூடாதிருந்தாற் குருக்குறிப்பேவல் மாத்திரம்

பண்ண அதுவும் கூடாதிருந்தாற் புத்திராதிகளாற் பொருள் சொடுத்து வேண்டிக்கொண்டாதல் பிறராற்முன் பேணக் குருவைக் கொண்டு கற் பிக்கப்பண்ணி;

தானும்=அந்த நிர்ப்பீசதீக்ஷையும்; எழினிரதிகாரையென நின்று= வடிவுறு நிர்ப்பீசை தீக்ஷையென்றிருந்தும்; இரண்டாய் விளங்கும்= ஏலுங்கிருத்தியம் ஏலாக்கிருத்தியம் குறித்துச் சாதிகாரையாயும் நிரதி காரையாயும் இருத்தலாற் சபீசையாயும் நிர்ப்பீசையாயும் இருவிதமாய் ஒருவகை சாற்றத்தோற்றும்; (சாலநிகழ் தேகபாதத்திேனுடு பண்ணு மென்று தொக்குதலால் பண்ணுங்காலே யெனப் பண்ணுக) சபீசதீக்ஷா யோக்கியர்க்குள் இயற்கையாற் சரீரவைராக்கிய முடையோர்க்கும், நிர்ப்பீச தீக்ஷாயோக்கியர்க்குள்ளும் வியாதி முதிர்ச்சி விருத்தத் தன்மை மிகுதி முதலியவற்முற் சரீரவயிராக்கிய முடையோர்க்கும், சஞ்சரிக்கு ங்காயமுடன் முற்றுங் கழியப்பண்ணும் நிர்ப்பீச தீக்ஷைதானே; சத்தி யோநிர்வாணமெனச்சாற்றும்=முத்திவிரும்பினர்க்கு நயிஷ்டிகீதீக்ஷை யென்று நாட்டப்படுந் தீக்ஷை சத்தியோ முத்திப் பிரதமானுற் சத்தியோ நிர்வாண தீக்ஷையென்று பேர் பேசப்படும்; சிலவிட்டத்திற் சித்தி விரும் பினர்க்குப் பவுதிகிதீக்ஷை யென்றுபார்க்கப்படுந்தீக்ஷை சத்தியோ புத் திப் பிரதமானுற் சத்தியோ போக தீக்ஷை யென்று பேர் சாற்றப்படும்; விதேக விஞ்ஞானகலர்க்கும் விதேகப்பிரளயாகலர்க்குங்குருதேக தேகி யல்லாச் சிவனுல் நிர்ப்பீச தீக்ஷையாய்ப் பண்ணு முன் சொல்லிய நிரா தார தீக்ஷையென்னும் நிரதிகரண தீக்ஷையும் இவ்விருவகைப் பெயர் பெறுமென்பதறிக. தேகபாதமில்லாமற் செய்யும் நிர்ப்பீசதீக்ஷையும் சபீசதீக்ஷையும் அசத்தியோ நிர்வாணதீக்ஷை யென்பதறிக. (ச)

சபீசத்தருகளைச் சாற்றுகின்முர்.

ஓதியுணர்ந்தொழுக்கநெறியிழுக்காநல்ல
வுத்தமர்க்குச்செய்வதுயர்பீசமிவர்தம்மை
நீதியினுனித்தியநைமித்தியகாமியத்தினிறுத்தி
நிரம்பதிகாரநிகழ்த்துவதுஞ்செய்து
சாதகாசாரியருமாக்கிவீடுதருவிக்கு
முலோகசிவதன்மிணியென்றிரண்டா
மாதலினுலதிகாரையாஞ்சமயவிசேட
நிருவாணமபிடேகமிவற்றடங்குமன்றே.

(இ-ள்). ஓதியுணர்ந்தொழுக்க நெறியிழுக்கா நல்லவுத்தமர்க்கு=சபீசதீக்ஷை படிப்பிக்கபண்ணும் விசேஷவித்தையாகிய சிவாகமங்களைப் படித்துப் பார்த்துப் பதார்த்தங்களைப் பகுத்தறிந்து அச்சமயாசார மார்க்க நடக்கை தப்பாதனுஷ்டிக்குஞ் சாமர்த்தியங் காண்பிக்குஞ் சாமானிய வித்தையாகிய தர்க்க சத்தவேத வேதாந்த மீமாம்ச புராண முதலிய முற்று முற்றருகமா மிவைகளில் ஒவ்வொன்றைத்தான் படித்துப் பார்த்துப் பதார்த்தங்களைப் பகுத்தறிந்து அச்சமயாசாரமார்க்க நடக்கை தப்பாதனுட்டியானின்று காண்பிக்குஞ் சாமர்த்தியமுடையராய்ச் சத்துத்தமாகாரிகளாகுஞ் சமயிவிசேஷி நிருவாணி சாதகராசாரியர்களா மருகர்க்கு;

செய்வது=பண்ணுவது; உயர்பீசம்=(தலைகடை குறைதலால்) முக்கிய சபீசதீக்ஷை; இவர் தம்மை=இவ்வைவரையும்; நீதியினால்=அவரவர்க்கு அருகமாக நித்திய நைமித்தியகாமியத்தில் நிறுத்தி=சமயி விசேஷி நிருவாணி மூவரையும் நீர்முழுகுதல், தர்ப்பித்தல், செபித்தல், கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து தியானித்தல், சமாதித்தல், சாக்ஷாத்கரித்தல் முதலிய அவரவர்க்கருகமான கன்மங்களை விதிப்படி விடாது செய் நித்தியாதிகாரத்திற் பிரதானமாய் நிற்பித்துக் குருக் குறிப்பேவலாற் சிறிதியன்ற நைமித்திகாதிகாரத்திலும், சிகாச்சேதவாணாகிய நிருவாணிகட்கு விசேஷித்து நைமித்திகத்தி லதிகார முண்டென்று காமிக முதலிய சிவாகமஞ் செப்புதலாற் குரு கற்பனையாற் சகல நைமித்திகாதிகாரத்திலும், சிறிது விரும்பிற் குருகற்பனையாற் சிறிது காமியாதிகாரத்திலும் நிற்பித்துச் சாதகாபிஷேகம் பண்ணிச் சாதகனாகக்குறித்து அவனைச் சாதகாபிஷேகம்பண்ணிச் சாத்திய மந்திர செப பூசை யோம முதலிய காமியாதிகாரத்திற் பிரதானமாய் நிற்பித்து நித்தியாதிகாரத்திலும், குருவாஞ்ஞையினாற் சகல நைமித்திகாதிகாரத்திலும் நிற்பித்து ஆசாரியாபிஷேகம் பண்ண ஆசாரியனாகக் குறித் தவனை யாசாரியாபிஷேகம் பண்ணி, தீக்ஷை பிரதிஷ்டை சிவாகம போதனை முதலிய நைமித்திகாதிகாரத்திற் பிரதானமாய் நிற்பித்து நித்தியாதி காரத்திலும் பரார்த்தம் சிறிது சுவார்த்தமாகவும் சிறிது காமியாதி காரத்திலும் நிற்பித்து;

நிரம்பவதிகாரம் நிகழ்த்துவதுஞ்செய்து=நிர்ப்பீச தீக்ஷை போல் ஏலுமதிகார மாத்திரமாய் ஏலாவதிகாரக் குறையாய் இயற்றுவிப்பதின்றி, இப்போது சொல்லிய நித்தியாதிகாரி காமிகாதிகாரி நைமித்திகாதிகாரி மூவர்க்கும் அவரவர்க் கருகமாய் நிறைய வதிகாரம் பண்ணுவது

பண்ணுவித்து, (அவர்க்குள் ளிருவரை); சாதகா சாரியருமாக்கி=சாதகா சாரியர்களாலுஞ் சிகாச் சேத மாத்திரஞ் செய்த நிருவாணியாலு மோரிருவர் முறையில் ஸ்வதந்திரர்களாயுங் குருவாஞ்ஞையினாலும் பண்ணப்பட்டதனுல்; வீடு தருவிக்கும்=மோக்ஷங் கொடுப்பிக்கும் மூவருள் ஆசாரியன் ஸ்வதந்திரமாய்ச் சர்வாதி காரியாதலாற் சர்வசம்பூரண சபீச சாதிகாரதீக்ஷாவானுதலா லவனுக்கே சாதிகார தீக்ஷையென்பதியல்பினுற் செல்லும்;

(திரும்ப அந்தச் சபீசதீக்ஷை); உலோகசிவதன்மிணி யென்றிரண்டாம்=உலோகதன்மிணிதீக்ஷை சிவதன்மிணிதீக்ஷை யென் றிருவிதமாம்; ஆதலினுல்=சொல்லிய நீதியினுல், சபீசதீக்ஷா பேதமெல்லாம் நிர்ப்பீச தீக்ஷையில் நிரதிகாரையாய் முன் சொல்லிய சமய விசேஷ நிருவாண தீக்ஷைகளை நீக்கி (அதிகாரையாம் என்பது தலைகடை குறைதலாற்) சாதிகார தீக்ஷையாம்; சமய விசேஷ நிருவாணமபிடேகமிவற் றடங்குமன்றே; உலோக சிவதன்மிணி யென்ற விடத்துச் சிறிதிசையாதது விசேஷித்திசைப்பாம்; முறைமையிற் சபீசதீக்ஷாபேதமாகுஞ் சிவதன்மிணி தீக்ஷை உலோகத்ன்மிணி தீக்ஷை யிரண்டிற்குள் சிவதன்மிணி தீக்ஷை பரையென்றுரைக்கும் நயிஷ்டிகீதீக்ஷை யென்றும் அபரையென் றுரைக்கும் பவுதிகீதீக்ஷை யென்று மிருவிதமாம்; அவற்றுள், பரம்பரையாயும் சாக்ஷாத்தாயும் நிரதிசயசர்வஞ்ஞுதாதி சிவ குணமணப்புற்ற முத்திமாத்திர காமிகாராயுஞ் சாதககாரிய காமிய சிவதன்ம லோகதன்ம கன்மானுஷ்டான பலப் பற்றற்றவர்களாயும் அவரவர்க்கருகமாஞ் சாமானிய விசேஷ சரியை கிரியை ஜபசாலம்ப சிவயோக நிராலம்ப சிவ யோக ஞான திரிபதார்த்த ஞான சிவத்துவ பசுத்துவ விவேக ஞானவான்களாயும், அந்தச் சிவதன்மானுஷ்டான சீலர்களாயுஞ் சிகொண்டாதி சதாசிவாந்த சாலோக சாமீப சாரூப சமபலத் தியான சமாதி சாத்திய சமபல மூர்த்தி சாயுச்சியங்களையும் சதாசிவ தத்துவத்திற்குமேற் சத்தி சிவதத்துவ கலாபுவன சாதார நிராதாரங்களிற் பரசிவலோக சாமீப சாரூப சத்துச் சமபெல தடஸ்த மூர்த்தி சாயுச்சிய முற்றுப் பெற்று மூர்த்தி முத்தஸ்வ ரூப சாயுச்சியங்களையும் அவ்வவர்க்கருகமாய்ச் சாருதற்கருகர்களாயுமிருக்கும் சமயிபுத்திரர்கள் புத்திரவிசேஷ நிரபிஷேக நிரதிகார நிருவாணிகள் சாபிஷேக சாதிகாராசாரியர்களிவர்கட்கு யோக்கிய மறிந்து சர்வசிவ புண்ணிய பசு புண்ணியபாவ சஞ்சித கன்ம சுத்தி மதிடாகவும் அதில்லாதாகவும் அஷ்டாங்குல மட்டு

விட்டிறுக்குஞ் சிகாச்சேத வதியாகவும் அதில்லாதாகவும் பண்ணுமது நயிஷ்டிகீ சிவதன்மிணீ தீக்ஷை.

கூடவுதிக்குமாயேயமகாமாயேயபுத்திகுண வணிமாதி குணஞ் சிற்றுப் பலமாகத்தான், அதிக பலமாகத்தான் அதிக பலமாக வுதிக்குஞ் சரீர நிரவதிக சாதிசய சர்வஞ்ஞு தாதி சிவகுண மணப்புற்ற போக போகாந்த மோக்ஷ காமிகளாயும் மகாப்பிரளய பரியந்த மிந்தச் சரீரத்தைத் தானே மரண மடாதபடி அதிமார்க்க மாந்திர சாத்திரப் பிரசித்த விசேஷ சிவதீர்த்த மருந்து மந்திர யோக முதலிய சிவதன்ம விசேஷானுஷ்டானத்தாற் சித்தி பண்ணிக் கொண்டு தாமிருக்கும் புவனமது விட்டு முட்டின்றி விரும்பிப்போம் புவனங்கட் கிணங்க வேஷந் திரித்து வடிவு விரித்து மாயாவதி சரிக்கும் சாமர்த்திய வாஞ்சாவான்களாயுஞ் சரீரம் விட்டு விரும்பும் வேறு சரீரம் பரித்து மகாமாயாவதி சரிப்ப விருப்பந் தரிப்பவராயுங் காமிய சிவஞானத்தியான ஜப பூசா சேவாதி சகாமாராதனே; அல்ல தணுபக்ஷப் பிரமாதி நாற் சிவமூர்த்தி ஆன்மாரூட சம்புபக்ஷப் பிரமாதி நாற் சிவமூர்த்தி சம்பு பக்ஷ மாத்திர சதாசிவ மூர்த்தி யாகப் பஞ்ச பஞ்சகலேசுவர மூர்த்திகளுள் அவரவர்க்கிஷ்ட பலார்க கலார்க கலேசுவர மூர்த்தி ஞானத் தியான ஜப பூசா சேவாதி சகாமாராதனே; அல்லது அப்படிச் சிந்திக்கப்படும் காலாக்கினியாதி அனுசிருதாந்த புவனேசுவரர்களுள் அவரவர்க்கிஷ்டபலார்க புவனார்க புவனேசுவர ஞானத் தியான ஜப பூசாசேவாதி சகாமாராதனே யென்கின்ற அதிமார்க்க மாந்திர சாஸ்திரப் பிரசித்த சிவதன்மானுஷ்டான வாஞ்சா வான்களாயு மிருக்குஞ் சாதகர்க்குத் தீக்ஷானந்தர மனுஷ்டிக்குஞ் சிவபுண்ணியத்துக் கொத்து மாறின்றிச் சேரும் முன்செய்த சிவபுண்ணிய மாத்திரம் அந்தந்தச் சாதகரடையும் பலார்க கலார்கங்களாய் அந்தந்தக் கலாமரியாதியிற் சேஷித்து நிற்கச் சர்வ பசுபுண்ணிய பாவ சஞ்சித கன்ம சுத்திமதியாகவும் துவாதசாங்குல மட்டுவிட்டறுக்குஞ் சிகாச்சேதவதியாகவும் பண்ணுமது பௌதிகீசிவதன்மிணிதீக்ஷை.

மாயாவதிமட்டு முட்டும் பிரஞ்ஞாப் பெருக்குத் தனது தனதுவசதி அவதி சுருக்கும் பின் கூடவுதிக்குந்தான் சிற்றுப்பலமாக அதிக பலமாக வதிக்கும் சாதிசய சர்வஞ்ஞுதாதி சிவகுண மணப்புற்று மாயாமண்டலத்திருந்தாலும் சிலரிடத்துப் பிரஞ்ஞாப்பெருக்குமாயோபரி அபரிமிதமாக விரிக்கும் மாயேயபுத்தி அணிமாதிகுணமணப்புற்றும் அதுவன்றி வைதிகாத்தியான்மிக சாத்திரப் பிரசித்த யாகாதி பசுதன்மந் தன் கோ

டிக்கு எடக்கும் லௌகிக சாத்திரப் பிரசித்த தண்ணீர்ப்பந்தர் தடாக முதலிய லோகதன்மந் தழுவியொழுகியும் லோகதன்ம சிவதன்மதுலா கோடிகளுக்குட் சிறிதொருதலைபற்றி முன்சொல்லிய அதிமார்க்க மாந்திர சாத்திரப்பிரசித்த சிவ தன்மதுலா கோடிகொழுவி அச் சிவதன்மானுஷ்டானத்தால், மகாமாயாபூதி விரும்பில் தன்னோடு கூடவுதிக்கும் மகாமயேய புத்திகுண அணிமாமுதலிய குணபலம் சிற்றுப் பலமாகத் தான் அதிகபலமாக வுதிக்குஞ் சாதிசய சர்வஞ்ஞதாதி குணமணப்புற்று முதிக்கும் போகபோகாந்த மோக்ஷகாமிகளாயும், மகாப்பிரளய பரியந்தஞ் சிவதன்மிணி பவுதிகீதீக்ஷையில் சொல்லிய இருவகை முறைமையிற் சரீரந் தரித்துச் சரிப்ப விருப்பந் தரிப்பவராயும் சிவதன்ம மணப்புற்ற லோகதன்மம் உலோக தன்ம மணப்புற்ற சிவதன்மம் இருதன்மானுஷ்டான சீலர்களாயுமிருக்கும் சாதகர்க்கு அந்தந்தச் சாதகர் பொருந்த விரும்பும் அந்தந்தப் பலார்க கலார்கங்களாய் அந்தந்தக் கலாமரியாதியிற் பசுபுண்ணியங்கள் சிவபுண்ணியங்கள் பரிசேஷித்து நிற்கப் பாவ கன்மங்கள் அந்தந்தக் கலாமரியாதியிற் பரிசேஷியாது பரிசுத்தியாக அப் பரிசுத்தி மதியாகவும் அந்தந்தச் சாதகருக்குட் சதாசிவதத்துவோபரிசத்தி சிவதத்துவ போக காமிகட்குத் துவாத சாங்குலமட்டு விட்டறுக்குஞ் சிகாச் சேதவதியாகவும் பிருதிவித் தத்துவாதி சதாசிவ தத்துவாந்த போக காமிகட்குச் சிகாச்சேதவதியன்றியும் பவாயாகவுமபவாயாகவும் பண்ணுமது உலோக தன்மிணி பவுதிகீதீக்ஷை.

ஸ்ரீமதகோர சிவாசாரியர் பத்ததி முதற் சிலபத்ததிகளிற் பவுதிகீ சிவதன்மிணி தீக்ஷை பவுதிகிலோகதன்மிணி தீக்ஷை இரண்டிற்கும் இருதீக்ஷா பலார்க கலார்கங்களாய்ப் பசு புண்ணிய சிவபுண்ணிய தன்ம கன்மங்கள் பரிசேஷித்து நிற்கப் பாவகன்மங்கள் மாத்திரம் பரிசேஷியாது பரிசுத்தியாசப் பஞ்சகலாசுத்தி யொருமிக்கப்பண்ணி விரும்பிய விரும்பிய புவனபோக போகாந்தத்துப் புநர்த்தீக்ஷாபேக்ஷை யுபேக்ஷித்துச் சாக்ஷான்மோக்ஷம் சாரும்படிக்குச் சிவனிடத்திலே யோசனை செப்பியிருப்பது சிந்தித் தறிக.

நீர் தீக்ஷா பரீக்ஷை பண்ணியது நுண்ணியதுதானே; கிருகஸ்தாசாரியர் விரத்தாசாரியர் என்று விசேஷியாமலாசாரியர்கட்கு நயிஷ்டிகீதீக்ஷையென்று முன்சமுதாயத்திற் சாற்றினீர்; அது காலோத்தராதியில் நயிஷ்டிகாசாரியர் நயிஷ்டிகர்க்கும் கிரகத்தர்க்குந் தீக்ஷைபண்ணுக, பவுதிகாசாரியர் பவுதிகர்க்குமாத்திரம் தீக்ஷை பண்ணுகவென்னும் பாடத்தாற் கிருகஸ்தாசாரியர்க்கு நயிஷ்டிகீதீக்ஷை நாட்டப்படாதென்று

நாட்டப்பட்டது; நீ சொல்லிய துள்ளது; ஆசாரியர்கட்கு நயிஷ்டிகீ திக்ஷை யென்னுஞ் சர்வஞ்ஞானோத்தர சமானிய வசனத்தினாலும் நயிஷ்டிகா சாரியர் நயிஷ்டிகருக்கு மாத்திரம் கிருகத்தாசாரியர் நயிஷ்டிகர்க்கும் பவுதிகர்க்கும் பண்ணுக வென்னு மாசமாந்தரவிசேஷ வசனத்தாலும் நயிஷ்டிகீ திக்ஷையினாலே தீக்ஷிதனாயிருக்கும் கிரகத்தனும் விரத்தனும் வர்ச்சிக்கப்படாது வாஞ்சிக்கும் பிராரத்தகன்ம பலபோக வாஞ்சை மாத்திரத்தினாலே தான் மணிமந்திர மருந்து முதலிய சாதன மாத்திர சாத்தியகாமிக போகவாஞ்சை மாத்திரத்தினாலேதான் மல பரிபாக தாரதம்மியத்தால் நையிஷ்டிகீதீக்ஷா வைசித்திரிய மாத்திரத்தால் இங்கிருந்து வாஞ்சியாதிருக்கவும் சரீராந்தத்திற்றானே வரும் பராபர புத்தி யபரபுத்தி போகவாஞ்சை மாத்திரத்தினாலேயுந் தான் சாதக சாத்திய பவுதிக திட்சா பல புவன பதி பூதி வாஞ்சையில்லாமை யாற் பவுதிகனன்று நயிஷ்டிகன்றானே யென்றுஞ் சோமசம்பு விருத்தி வசனத்தாலும் கிரகத்தாசாரியர்கட்கு நயிஷ்டிகீதீக்ஷை நன்றாக நாட்டப்படாதென்று நாட்டப்பட்டது.

நீரப்படிச் சொல்லில் பவுதிகா சாரியர் பவுதிகர்க்குத் தீக்ஷை பண்ணக் கடவர்களென்னும் வசனத்தினாலும் நிஷ்பலமாய் அப்பிராமாண்ணியத் தானமாய்ப் போகாதோ? நீயப்படிப் போமென்று சொல்லியதெப்படி? போகாது. சபலமாகத்தானே சோம சம்பு பத்ததி வியாக்கியானத்திற் சுருக்கி யுரைத்திருப்பது விரித்துரைப்பாம்:—

முறைமையில் நிஷ்டை யென்று மொக்ஷத்திற்கும் சமாதிக்கும் விரத முதலியவற்றிற்கும் பெயராதலால், பாலியவயது தொடுத்து மரணந்தம் விரதம் நியமித்துத் துறவிகளாயிருக்கும் நயிஷ்டி ப் பிரம சாரிக ளென்றும் கன்னிகா கல்யாண காலா வதி விரதம் நி த்துத் துறவிகளாயிருக்கும் பவுதிகப் பிரம சாரிகளென்றும் இருவகையரா யிருப்பர்; விரத்தாசாரிகளும் கிரகத்தா சாரிகளும் தனித்தனி சரீராந்தத்தில் வரும் மோக்ஷ விருப்பத்தினாலும் அவரவர்க்கிட்ட புவன பதி பூதி விருப்பத்தினாலும் அவ்விருப்பத்துக் கருகமாய் நயிட்டிகீ திக்ஷை பவுதிகீதிக்ஷை பண்ணு வித்துக்கொண்டு மூன்று பகுப்பார்க்கும் தனித்தனி அட்டாங்குல சிகாச்சேதமுடைய நயிட்டிகாசாரியர்களென்றும் துவாத சாங்குல சிகாச் சேத முடைய பவுதிகா சாரியர்களென்றும் இருவிதமாயிருப்பார்கள்; ஆதலால், கிர்கத்தா சாரியர்கள் நயிட்டிகா சாரியர்களாயும் பவுதிகா சாரியர்களாயும் குருத்துவம் பரிப்பார்களென்பது பசுமரத்தாணி போற் பதித்து நாட்டுதலானும் வசனங்

கள் சபலங்கள் தானே; அஃதப்படியாகட்டும். ஸ்ரீகாமிகாகமத்திலே நாலாம் வருணத்து நயிட்டிகர்கட்கு நைமித்திக கன்ம கர்த்திருத்துவ குருத்துவம்; கிரகத்தருக்கு நித்திய காமிய கன்ம கர்த்திருத்துவ சமயி புத்திர சாதகத்துவ மாத்திரம், குருத்துவ மில்லையென்று கூறியதேது? அது உள்ளது; ஆமர்த்தக மடம் முதல் மடகுரு மனக்குறிப்புப் பிரிப்பினுல் மடப் பகுப் பாகமங்களிற் கூறியது. காலோத்தராதியில்,

> க்ருஹஸ்தஸ்ஸர்வவர்ணேஷுபூஜ்யோகுருருதாஹ்ருதః
> நைஷ்டிகஸ்த்வதமோஞ்ஞேயோபௌதிகந்துவிசேஷிதః
> சதுர்ணுமபிவர்ணுநாம்லிம்கிநாம்க்ருஹிணுமபி
> ஆசார்யத்துவம்சிவெநாஸ்மிந்ஸித்தாந்தேப்ரதிபாதிதம்

என்று கூறுதலானும், கிரணுகமத்தில் பிராமணுசாரியர்முதல் ஆசாரியர்நால்வர்க்கும் முறைமையில் நான்கு மூன்று இரண்டு ஒரு வர்ணங்களிலே கல்யாணம் விதித்திருத்தலானும், சர்வாகமங்களும் அப்படிச் சாற்ருவாம். ஓராகமத்திற் றள்ளியது கொண்டு தள்ளினுல், பிராமணனே குரு மற்றை வருணத்தார் சாதகர் புத்திரர் சமயிகள் மாத்திரமாயிருப்பார்களென்றும், பிராமணன் பிராமணன் முதல் நால்வர்க்குங் குருவென்றும், அரசன் அரசன்முதல் மூவர்க்குங் குருவென்றும், வணிகன் வணிகன் முதலிருவர்க்குங் குருவென்றும், சூத்திரன் சூத்திரர்க்குக் குருவென்றும் மேருதந்திரத்திலும் காமிகம் பராக்கியை முதலிய ஆகமங்களிலும் முறைமையில் நிசேஷித்தும் விதித்தும் இருத்தலால் ஒரு வசனத்தைப் பிடித்துப் பிராமணன் தானே குரு மற்றவ ரல்லரொன்று பேசவேண்டும், அப்படியாகட்டுமென்று நீ சொல்லில் மற்றையர்களுங் குருவென்னும் அநேகாகமவசனங்களுக்கும் அப்பிராமணியப் பிரசங்கம் வரும்.

பிராமணனிற் பிரஞ்ஞாவான்களில்லாதிருந்தால், அரசன் முதலோர்க் கரசன்குரு, அரசரிற் பிரஞ்ஞாவான்க ளில்லாதிருந்தால் வணிகன் முதலோர்க்கு வணிகன் குரு, வணிகரிற் பிரஞ்ஞாவான்க ளில்லாதிருந்தால் சூத்திரர்க்குச் சூத்திரன் குருவென்னும் வசனங்களுக்குப் பிராமாண்ணியம் சொல்லலாமென்று நீ சொல்லில், நாலாம் வருணத்து நயிட்டிகரிற் பிரஞ்ஞாவான்கள் இல்லாதிருந்தாற் கிரகத்தன் குருவென்னும் வசனத்துக்கும் பிராமாண்ணியம் நாம் பேசுவோம்; அப்படித்தான் சொல்லுமென்று நீ சொல்லில் அதுவுங்கூடாது; கிரகத்தன் சர்வவர்ணங்களிலும் பூச்சியனுகிய குருவென்று கூறுதலால் நாலாம் வருணத்து நயிட்

டிகர் பிரஞ்ஞாவான்களாயிருந்தாலும் கிரகத்தரும் பிரஞ்ஞாவான்களாயிருந்தால், இருவகையாருங் குருவென்று கூறுவோம்;

அப்படித்தானுகட்டுமென்று நீ சொல்லில் அதுவுங் கூடாது; மந்தப் பிரஞ்ஞாவானுயிருந்தாலும், பிரவாக சந்ததிப் பிரசித்தப்பிரசூதிமானுயிருக்கின்ற குருபுத்திரனைத் தியாச்சியம் பண்ணலாகாதென்று சிவாகமஞ் செப்புதலால் ஒன்றுங் குறியாமற் பிரஞ்ஞாவான்களாயிருக்கிற சீஷர்களுதவியாக அவனே குருவென்று கூறுவோம்; இப்போது சொல்லிவந்த வசனங்களாலே விரதிகளில் பிரமசாரியும் கிரகத்தனும் குருவானப்பிரத்தனுஞ் சந்நியாசியுங் குருவல்லரென்று கூறப்பட்டது;

ஸ்ரீகாமிகாமத்தில் சன்னியாசிக்கும் குருத்துவமுண்டென்று கூறியதேது? உள்ளது. சாத்திரதீட்சைமாத்திரத்திலென்று சமாதானம்; சாட்சாத்கிர்த சிவாதிபதார்த்த சித்த சிவயோகியாகில் சாம்பவதீக்ஷைமாத்திரத்திலென்று சமாதானமாம்; நாலாம்வருணத்தார்க்குப் பிரணவமாகாதென்று பிராமணர் முதலோர் பேசுவதேது? உள்ளது. குருத்துவம் விதித்திருத்தலாற் பிரணவ பூர்வப்பிராசாதமறியாதவன் குருவல்லனென்று கூறுதலானும், ஸ்ரீமகுடாகமத்தில்; "நிர்வாணதீக்ஷிதே சூத்ரேப்ரணவஞ்சநியோஜயேத்" என்றிருத்தலானும், காமிகத்திலு மப்படியிருத்தலானும் பிரணவமாமென்று பேசுவோம்;

சோம சம்புபத்ததி முதற்பத்ததி கர்த்தாக்கள் நிஷேதியாதபடியினாலே விசிஷ்ட சமயி முதலோர்க்கும் பிராமாண்ணியங் கொடுத்திருத்தலானும் ஆமென்பது சூசிக்கப்பட்டது; பிரஞ்ஞையில்லாப் பிராமணர் சிலர் நாலாம் வருணத்திற் சந்நியாசி இல்லையென்று சாற்றுவார்கள்; அது நயிட்டிகப் பிரம சாரிக்குள்ளடக்கிப் பிராயச் சித்தாதி விதித்தலாலேயும், சிந்தியவிசுவசாதாக்கியத்தில் பிராமணர் முதற் பத்துச் சாதிக்கும் பிரம சரிய முதலிய நான் காச் சிரமமு முண்டென்று விதித்தலால் சைவத்திற் பிரசித்தம்;

ராமாயணத்தில் கிருதாதியுகக் கிரமத்தில் பிராமணர் முதல் நால்வர்க்கும் தபோமுக்கியஞ் சாற்றுவது போலப் பிரமாண்ட புராணத்தில் கிருதயுகத்திற்குப் பிராமண சந்நியாசி முக்கியன், திரேதாயுகத்திற்கு க்ஷத்திரிய சந்நியாசி முக்கியன், துவாபர யுகத்திற்கு வைசிய சந்நியாசி முக்கியன், கலியுகத்திற்குச் சூத்திர சந்நியாசி முக்கியன் என்னும் வசன முதல் வசனங்களால் பிரசிந்தந்தானே; சிகாச்சேத மில்லார்க்கு ஆசாரியாபிடேகமாகாதாதலால் கிரகத்தரிலும் விரத்தரிலும் நயிட்டிகதீட்சாவான்களாய் நயிட்டிகா சாரியர்கள் உண்டென்று நாமுன் நாட்

டுதலால்" அவ்விருவகை நால் வருணத்தும் நயிட்டிகாசாரியர்களே சாற்றிய மரியாதியில் சைவத்திற் சந்நியாசங் கொடுக்க வேண்டும் வைதிகத்துக்குப் போலக் குருத்துவமில்லாத சந்நியாசங் கொடுப்பதின்று; பஞ்சரிஷி கோத்திரத்தில் சிவப்பிராமணர் சர்வாதிகாரிகளென்று காமிகத்திற் சாற்றுதலால் அவர்களிடத்திற் சிவனிடத்திற் போல நயிட்டிசாசாரியர் பவுதிகா சாரியரென்னும் பரியாலோசனை சந்நியாசாதி பரிக்கிரகம் பண்ணும் பொருட்டுப் பண்ணுவதின்றென்று சமபுத்தி பண்ணுவதே சால்பு; அமையு மினி யப்பால் நடப்போம். (ரு)

மேற்கிரியாவதி தீக்ஷையினாலேதான் சாம்பவி தீக்ஷையோடு சாத்தியென்று சாற்றும் ஞானவதி தீக்ஷையினாலேதான் சடத்துவ சுத்தி பண்ணி முத்திவியத்தி பண்ணும் பொருட்டு அறியுஞ் சடத்துவாக்கள் கீழ்மேற் செல்லுங் கிரமத்திலே யொன்றி னொன்று வியாத்தியை யுடையதாகி வியாப்பிய வியாபகங்களாய்ப் போய்த் தங்களை வியாபிக்குஞ் சிவசத்தியோடு கூடச் சர்வவியாபக சிவனுக்கு வியாப்பியங்களா யிருக்குமென்று விளம்புகின்றார்.

அழிவிலாக்கிரியையினாலாதல்சத்திமத்தா
லாதலத்துவாசுத்திபண்ணிமலமகற்றி
யொழிவிலாச்சிவம்பிரகாசிக்குஞான
முதிபித்துற்பவந்துடைப்பனரனொருமூவர்க்கும்
வழுவிலாவழியாறுமந்திரங்கள்பதங்கள்
வன்னங்கள்புவனங்கடத்துவங்கள்கலைகள்
கழிவிலாதுரைத்தமுறையொன்றினொன்றுவியாத்தி
கருதுகலைசத்தியின்கண்சத்திசிவன்கண்ணும்.

(இ-ள்). மலமகற்றி என்பதனால் முத்தி செய் தீக்ஷாலக்ஷண சிவசத்தியாற்பாசமுத்தி சொல்லப்பட்டது; சிவம்பிரகாசிக்கும் ஞான முதிப்பித்தென்பதனால், வியத்திசெய் தீக்ஷாலக்ஷண சிவசத்தியாற் சிவசாக்ஷாத் காரோத்திரேக காரண தீக்ஷித சிவத்துவ லக்ஷண சிற்சத்தியினது விர்த்தி ரூப சர்வபதார்த்த கர்ப்ப சிவ சாக்ஷாத்கார சமுத்திரேக ரூப வியத்தி சொல்லப்பட்டது; உற்பவந்துடைப்பனென்பதனால், மீளத்திரும்புதலில்லை யென்பது விளம்பப்பட்டது; சிவனுக்குச் சிவசத்தி வியாப்பிய மென்றது சிவசமவேதையாற் செலுத்தப்பட்டிருத்தலாலுபசாரம். மற்றையவெளிப்பொருள். (சு)

ஆறத்துவாக்களுக்குள் மந்திர முதலைந்துங் கலையைந்தின் வியாத்தியை யுடைய தாதலினால், வியாபகமாயிருக்குங் கலைகளுக்கு வியாப்பிய மென்றுஞ் சூசிப்பித்துச் சடத்து வாவில் மந்திரத்துட் பஞ்சப் பிர மங்களுக்குச் சங்காரக் கிரமம் சத்தியோஜாதாதி யீசானந்தம்; நே த்திரம் விட்டுச் சடங்கங்களுக்குச் சங்காரக்கிரமம் இருதயாதி அத் திராந்தம்; பதங்களுக்கு ஓமாதியோமாந்தம்;வன்னங்களுச்குக்ஷகா ராதி அகாரந்தம்; புவனங்களுக்குக் காலாக்கினியாதி யஞசிருதா ந்தம்;தத்துவங்களுக்குப் பிருதிவியாதி சிவதத்துவாந்தம்; கலைகளு க்கு நிவிர்த்தியாதி சாந்திய தீதையந்தமென்று சிந்தித்துக்கொண்டு சங்காரக் கிரமத்தில் மந்திரமுதலைந்துங் கலையைந்தினிற்கு முறை மை மூன்று திருவிருத்தத்தால் வகுத்துரைக்கின்றார்.

மந்திரங்கண்முதலைந்துங்கலையைந்தின்வியாத்தி
 மருவுமந்திரமிரண்டுபதங்களுலே
ழுந்தனிலையெழுத்தொன்றுபுவனநூற்றெட்
 டவனிதத்துவமொன்றுநிவிர்த்தியயன்றெய்வம்
வந்திடுமந்திரமிரண்டுபதங்கண்மூவேழ்
 வன்னங்களுலாறுபுரமைம்பத்தாறு
தந்திடுந்தத்துவங்களிருபத்துமூன்று
 தரும்பிறதிட்டாகலைமாலதிதெய்வந்தானும். (எ)

வித்தையின்மந்திரமிரண்டுபதநாலைந்து
 விரவுமெழுத்தேழுபுரமிருபத்தேழு
தத்துவமுமோரேழுதங்குமதிதெய்வந்
 தாவிலுருத்திரனுகுஞ்சாந்திதன்னில்
வைத்தனமந்திரமிரண்டுபதங்கள்பதினென்று
 வன்னமொருமூன்றுபுரம்பதினெட்டாகு
முத்தமமாந்தத்துவமுமொருமூன்றுகு
 முணரிலதிதேவதையுமுயரீசனுமே. (அ)

சாந்தியாதீதகலைதன்னின்மந்திரங்க
 டான்மூன்றுபதமொன்றக்கரங்கள்பதினறு
வாய்ந்தபுரமூவைந்துதத்துவங்களிரண்டு
 மருவுமதிதேவதையுமன்னுசதாசிவமா

மேய்ந்தமுறைமந்திரங்கள்பதினொன்றுபதங்க
ளெண்பத்தொன்றக்கரகளேமபத்தொன்றுகு
மாய்ந்தவிருநூற்றெழுபத்துநாலா
மறிதருதத்துவமுப்பத்தாறுகலையைந்தே.

பொருள் பதத்ததிகங்ளிற் பிரசித்தம். (சு)

குருவதிகரணனாயிருக்குஞ் சிவன் தத்துவசோதனை பண்ணு
முறைமை யறைகின்றார்.

மூன்றுதிறத்தணுக்கள்செய்யுங்கன்மங்கட்கு
முன்னிலையாமூவிரண்டாமத்துவாவி
னான்றமுறையவையருத்தியறுத்துமலமுதிர்வித்
தரும்பருவமடைதலுமேயாசானாகித்
தோன்றிநுகராதவகைமுற்செய்கன்மத்
துகளறுத்தங்கத்துவாத்துடக்கறவேசோதித்
தேன்றவுடற்கன்மமனுபவத்தினாலறுத்திங்
கினிச்செய்கன்மமூலமலஞானத்தாலிடிப்பன்.

(இ-ள்). மூன்று திறத்தணுக்கள் செய்யுங் கன்மங்கட்கு=ஆன்மாக்கள் மனோவாக்குக் காயங்களினது வியாபாரப் பிரகாரத்தாற் புத்தியில் வாசனையாய்ப் புகுத்திப் பண்ணுங் கன்மங்களுக்கு;முன்னிலையா மூவிரண்டா மத்துவாவின்=சஞ்சிதமாய்க் குறித்துப் பகுத்தமைக்குத்தானமா மூவிரண்டா மத்துவாவின்; ஆன்றமுறையவையருத்தியறுத்து=அந்தச் சஞ்சித கன்மங்களை யபக்குவங்களை விட்டுப் பக்குவங்களைப் பிராரத்த கன்மமாக்கிப் புசித்துத் தொலைத்து; மலமுதிர்வித்து=அந்தக் கன்ம போக தேகசம்பந்தத்தினாலே மலசத்தியை வளர்த்தந்த முதிர்ச்சியினாலே யந்த மலசத்தி; அரும்பருவமடைதலுமே=பழுத்துப் பக்குவமாயுள்ளளவில்; ஆசானாகி=சிவன் குருவதிகரணனாகி; தோன்றி=பிரசன்னனாய்; (தோன்றி யென்பது நடு நிலைத்தீபகமாதலால்)

தோன்றி நுகராதபடி=திரும்பச் சென்மித்துப் புசியாதபடி; முன்செய் கன்மத்துகளறுத்து=மலபரிபாகத்தினது தீவிரத்தன்மையாற் பக்குவங்களாயும் மாந்தியத்தினால் அபக்குவங்களாயிருந்தாலுந் தீக்ஷாமந்திர சம்ஸ்காரத்தாற் பக்குவங்களாயுமிருக்கின்ற சஞ்சித கன்ம மலத்தைக் கலைகளிற் பகுத்துத் தீட்சா பாலார்க கலார்கங்களாய்ச் சேஷித்து நிற்கவும் நில்லாமலும் சுத்தி பண்ணி;

அத்துவாத்துடக்கறவே சோதித்து=சடத்துவக் கட்டுவிடச் சுத்தி பண்ணி; (சடத்துவா விற்பகுத்துப் பதித்துச் சஞ்சித கன்ம போசனமாகும் சுத்தியே அத்துவ சுத்தியென்று தாற்பரியம்) ஏன்ற உடற் கன்மம்=பிராரத்த கன்ம மலத்தை; அனுபவத்தினலறுத்துப் புசிப்பினற் போக்கி; இனிச் செய்கன்மம்=தீக்ஷைக்குப் பின் பிராரத்தம் புசிக்குமிடத் தபிமானத்தினலேறும் வைதிகாதி சாத்திர மாத்திரப் பிரசித்த காமிய கன்ம மலம்

சிவதன்மிணி தீட்சா சுத்தனிடத்தி லுவர்த்தரையில் விதைத்த விதைபோலுக்கிப் போம்; ஆதலால், சிவசாத்திர மாத்திரத்தில் விதித்த கன்மம் பண்ணுதல் விடுதல் நிஷித்த கன்மம் விடுதல் பண்ணுதலெனுஞ் சுத்தாசுத்த மனேவாக்குக் காய வியாபாரத்தால் சுத்தா சுத்த புத்தியிற் புகுத்தும் புண்ணியா புண்ணிய காமிய கன்ம மலத்தையும்; மூலமலம்=தீட்சையிற் சேஷித்த ஆணவ மலத்தையும் தீட்சா பலார்க கலார்கங்களாய்ப் பரிசேஷித்தும் பரிசேஷியாது மிருப்ப;

ஞானத்தாலிடிப்பன்=தானே கற்பித்த சாலம்ப நிராலம்ப புவன பதி விஷய திரி பதார்த்த கர்ப்ப சிவ விஷய ஞானத்தியான காரிய சாக்ஷாத்கார காரணமாகுஞ் சாலம்ப நிராலம்ப புவனபதிவிஷய சமாதி சிவவிஷய சமாதியிருவித சமாதியினலயிப்பிப்பன். (௧0)

சிவசமாதிசித்தாந்தத்தன்றிச் சேரப்படாதென்று
செப்புகின்றர்.

புறச்சமயநெறிநின்றுமகச்சமயம்புக்கும்
  புகன்மிருதிவழியுழன்றும்புகலுமாச்சிரம
வறத்துறைகளவையடைந்துமருந்தவங்கள்புரிந்து
  மருங்கலைகள்பலதெரிந்துமாரணங்கள்படித்துஞ்
சிறப்புடையபுராணங்களுணர்ந்தும்வேதச்
  சிரப்பொருளைமிகத்தெளிந்துஞ்சென்றற்சைவத்
திறத்தடைவரிதிற்சரியைகிரியாயோகஞ்
  செலுத்தியபின்ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்.

(இ-ள்). புறச்சமய நெறி நின்றும்=உலோகாயதம் பவுத்தம் அருகம் மீமாம்சம் மாயாவாதம் பாஞ்சராத்திரம் என்னும் புறச்சமயங்களினின்றும்; புகன்மிருதி வழியுழன்றும் எனப்பொருள் வழிபொருத்திட்

போய், வேதச்சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றால், (அகச்சமயம்) சைவம் பாசுபதம் வாமம் வயிரவம் மகாவிரதம் காளாமுகம் என்னுமுள்ளாறு சமயம் புக்கும்; பின் சைவத்திறத்தடைவர்=சைவ சித்தாந்தத்திற் பிரவேசிப்பர்; இதிலெனப் பொருள் வழி பொருத்திப் பொருளுரைக்க, பதக்கிரமத்திற்பொருளுரைத்தாற் சமயக்கிரமம் மாறுபடும்; ஞானத்தால்=சிவ தீக்ஷாங்க நிராலம்ப சிவ சமாதியினால்; சிவனடியைச் சேர்வர்=சிவசத்தி சமானமாய்த் தமது சிற்சத்தி விரிவு திருத்தி யிருப்பார்கள். போகமாத்திரத்தை நிமித்தீகரித்துவரு மலபரிபாகத்திற்கும், மலபரிபாகமாத்திரத்தை நோக்கிவருஞ் சிவ சத்திநிபாதத்துக்கும், சிவதீக்ஷானுக்கிரகத்திற்கும் ஞானத்தியான சமாதி சீவன்முத்தி சாட்சாத்காரக்குறித் திட்சாங்கத்துக்கும், மோக்ஷத்துக்குஞ் சாதிக்கிரம மாச்சிரமக் கிரமஞ் சமயக்கிரமங் காலதேசக்கிரமங் கருதி வருத லில்லாமையாற் சமயக்கிரமத்தினின்று சைவத்திறத் தடைவரொன்பது தந்திரமன்று; சகல சமயிகளுக்குமிலிங் கோத்தாரஞ் சைவத்திற் சொல்லுதலால், சைவத்து வந்தல்லது பரமுத்தி சித்தியில்லை, பதமுத்தி யென்று தாற்பரியம்; மற்றைய வெளிப்பொருள். (கக)

ஆதலால் லோகாயதன் முதலோர் முத்தி முத்திப்போலி யென்பதுந்
தெரிவித்துச் சித்தாந்த முத்தித்திறனுஞ்
செப்புகின்றார்.

இம்மையேயீரொட்டாண்டெய்தியெழிலாரு
மேந்திழையார்முத்தியென்றுமிருஞ்சுவர்க்கமுத்தி
யம்மையேயென்றுமுத்தியைந்துகந்தமறக்
கெடுகையென்றுமட்டகுணமுத்தியென்று
மெய்ம்மையேபாடாணம்போல்கைமுத்தியென்றும்
விவேகமுத்தியென்றுந்தன்மெய்வாடிவாஞ்சிவத்தைச்
செம்மையேபெறுகைமுத்தியென்றுஞ்செப்புவர்கள்
சிவனடியைச்சேருமுத்திசெப்புவதிங்கியாமே.

(இ-ள்) இம்மையே யீரோட்டாண் டெய்தி யெழி லாரு மேந்திழையார் முத்தி யென்றும்=முழுகுதல் புசித்தல் பூசுதல் முடித்தல் முதற்சுகமே சுவர்க்கம், அந்தச் சுகமில்லாமை நரகம், மகளிரை மணத்தலிம்மையே முத்தி யென்று லோகாயதன் சொல்லுவன்; இருஞ் சுவர்க்கமம்மையே முத்தி யென்றும் பூர்வமீமாம்சன் சொல்லுவன்;

உருவம் வேதனை குறிப்புப் பாவனை விஞ்ஞான மென்கின்ற கந்த மைந்து மறக் கெடுகை முத்தி யென்றும் புத்தரிற் பிரதீப நிருவாண வாதி பேசுவன்;

அனந்தஞான மனந்ததரிசன மனந்த வீரியமனந்தசுகம் நிர்நாமம் நிர்க்கோத்திரம் நிராயுஷ்யம் சகல சம்மியக் பாவ மெனு மட்டகுண முத்தி யென்று மருகனிசைப்பன்;

ஞான முதலிய செயற்கைக் குணங்கள் கெட்டியற்கை யஞ்ஞான மே குணமாய்ப் பாடாணம் போல்கை முத்தி யென்றுந் தார்க்கிகன் சாற்றுவன்;

பிரகிருதி புருஷ விவேக மாகிய விவேக முத்தி யென்றுஞ் சாங்கி யனுரைப்பன்;

தன் மெய் வடி வாஞ் சிவத்தை=தனதிந்த வடிவு போசாகார சிவ மூர்த்தி சாரூப சிவா காரத்தை; செம்மையே பெறுகை=பரமுத்தியா கப் பரிப்பது முத்தியென்றுஞ் சிவசமவாதி செப்புவன்; இப்படி வாதி கள் செப்புவார்கள்;

சிவனடியைச் சேருமுத்தி=சிவசத்திக் கொத்து விரிக்குஞ் சாட் குண்ணிய சிற்சத்தி நாம சிவத்துவாபி வியத்தியா முத்தி; யாம் இங்குச் செப்புவதே.

சில ஆதுநிக சைவாசாரியர் யாஞ் சொல்லு மிந்த முத்தியைச் சாரூப முத்தி சாற்றுஞ் சிவசமவாதி முத்தியாய்த் திருப்பி நமது சிவசித்தாந்த சித்த சிவ சாதிர்ச்சிய சிவசாத்திரியைக்கிய சிவசுத்தாத்துவைத முத்தித் துவேஷிகளாய் வேதாந்த விசேஷ விசிஷ்டாத்துவைத கோடி கொளு விச் சிவ வியத்தி யத்துவைத விசிஷ்டாத்துவைதப்போலி முத்தி விளம்பி விப்பிரலம்பராய் விட்டார்கள்; வாதிகளுடையும் பதமுத்திக் கிரமப் பகு ப்பு வகுப்பாம்:—

பூதான்ம ஞானோபாய முபதேசிக்கு முலோகாயத்தனுக்கும், பூத விசேஷப் பிராணான்ம ஞானோபாய முபதேசிக்கும் கவுளகனுக்கும், விஞ்ஞானகந்த விச்சிஞ்ஞானோபாய முபதேசிக்கும் பிரதீப நிருவாண வாதிக்கும், கன்மேசுவர ஞானோபாய முபதேசிக்கு மீமாம்சனுக்குஞ் சோதிரான்ம ஞானோபாய முபதேசிக்குஞ் சோதிசாத்திர வித்துக்களுக் கும், சூரியாக்கினி சமாத்ம ஞானோபாய முபதேசிக்குஞ் சூரியாக்கினி சாமியவாதிகட்கும், அவரவர்க்கருகமான பாஞ்சபூதபுவனப் பிராப்தி தானே மோட்சம்;

பூதாண்டகாரணப் பிரம ஞானோபாய முபதேசிக்கும் ஸ்மார்த்தர்க் குத் தன்மாத்திர புவனப் பிராப்தி தானே மோட்சம்;

இந்திரியான்ம ஞானோபாய முபதேசிக்கு முலோகாயதனுக்குளொருவனுக்கு இந்திரியபுவனப் பிராப்திதானே மோட்சம்;

மனாத்ம ஞானோபாய முபதேசிக்கு முலோகாயதற்கு ளொருவனுக்கு மனோ புவனப்பிராப்திதானே மோட்சம்;

அகங்கா ரான்ம ஞானோபாய முபதேசிக்கும் வைசேஷிகனுக்கு அகங்கார புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

புத்தியான்ம ஞானோபாய முபதேசிக்கும் நையாயிகனுக்கும் புத்திவிர்த்தியான்ம ஞானோபாய முபதேசிக்கும் புத்தனுக்கும் புத்தி புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

சலஞ்சல சதசற்குணான்ம ஞானோபாய முபதேசிக்கு மருகனுக்குக் குணபுவனப் பிராப்திதானே மோக்ஷம்;

பிரமகாரியான்ம ஞானோபாய முபதேசிக்கும் பரிணத வேதாந்திக்கும் நாராயணப் பிரகிருதி காரியான்ம ஞானோபாய முபதேசிக்கும் பாஞ்சராத்திரிக்கும் பிரகிருதி புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

சத்தப்பிரம கிரீடாப்பிரம சித்திரப் பிரமவாதிப் பிரமுகர்க்கும் பிரகிருதி புவனப்பிராப்திதானே மோட்சம்;

யோகோபாய முபசேசிக்கும் பாதஞ்சலனுக்கும் பிரகிருதி புருஷவிவேக ஞானோபாய முபதேசிக்குஞ் சாங்கியனுக்குஞ் சந்நியா சோபாய முபதேசிக்கும் விவர்த்த வேதாந்திக்கு மான்ம வாதிகளாதலால் புருஷபுவனப் பிராப்திதானே மோக்ஷம்;

சிவ தீக்ஷாங்கியங்க சிவஞானோப கிருத சாகார சிவாத்ம பாவனோபாய முபதேசிக்குஞ் சிவவாதிகளாகுஞ் சைவரிற் சைவ பவுராணிகர்க்கிராக புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

சாகார நிராகார சிவபாவனா பரசோம சித்தாந்திகட்குக் கலார்ககர்ப்ப வித்தியா புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

சிவாவேச வாதியாகுங் காபாலர்க்குக் கலாபுவனப் பிராப்திதானே மோக்ஷம்;

காலே சுவரவாதிகட்குக் காலதத்துவப் பிராப்திதானே மோக்ஷம்;

சங்கிராந்த வாதியாகிய சைவ பாசுபதர் வைதிக பாசுபதர்க்குஞ் சமுற் பத்திவாதி மாவிரத விசேஷர்க்கும் மாயா புவனப்பிராப்திதானே மோக்ஷம்;

கலாதத்துவாந்த சோதினியாகிய தீட்சாவான்களுக்கு விஞ்ஞான கைவல்லியந்தானே மோக்ஷம்;

சர்வஞ்ஞத்துவ மாத்திரவாதி மகாவிரதர்க்குச் சுத்த வித்தியா புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

பிரயோச்சிய கர்த்திருத்துவ வாதிகளுக்கும் பிரவாகேச் சுவரவாதிகட்கும் ஈசுவர புவனப் பிராத்திதானே மோக்ஷம்;

சதாசிவ சாமிய வாதியாகிய சிவசமவாதிகளுக்குச் சதாசிவ புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

சுத்தசாத்தர்க்குச் சத்தி புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

வாமதக்ஷிண காருட பூததாந்திரிகர்க்குச் சத்திகலா புவனப் பிராப்தி தானே மோக்ஷம்;

சிவ தீக்ஷா சாகல்லிய சுத்தராயிருந்துஞ் சிவவியத்தியைக்கியஞ் செப்புமிப்போதுள்ள சைவர்க்குச் "சதுஷ் கலந்து ஜாநீயாத் புருஷம் லோகபாவநம்" என்னும் வசனத்திஞற் சத்தி புவனப்பிராப்தி தானே மோக்ஷம்;

தீக்ஷாவை கல்லிய வான்களாகில் முற்சொல்லிய புருஷ புவனப் பிராப்தி தானே அல்லது சிவலோகப்பிராப்திதானே மோக்ஷமென்று சிந்திக்கப்படும்;

சிவனுக்கு வைந்தவ சரீரம் வாஸ்தவ மென்னுஞ் சாமானிய சைவர்க்குச் சிவதத்துவ புவனப் பிராப்திதானே மோக்ஷம்;

உலோகாயதாதி வேதாந்தியந்த ஆன்மவாதிகளுக்கு மான்மவிவேகப்பிரவிர்த்தி மான்களாகையாற் சிவவாதிகள் பண்ணுஞ் சிவவிவேகத்திற்கு மான்ம விவேகமடிப்படையாதலான் அவ்வான்ம விவேகிகட்கு மலபரிபாக நோக்குஞ் சிவசமான பரமுத்தி பார்க்கும் பாத்திரமாங் கால மெண்ணிக்கைக் கிசையுமாதலா லவரவர் முத்தி சாதனங்கள் சபலங்கள்தானே நிஷ்பலங்களன்று. (௧௨)

மேற்சாமான்னிய வேதவிசிஷ்ட விசேஷவேத சிவசிந்தாந்தமே சிறப்புடைத்தென்று செப்புகின்ருர்.

ஓதுசமயங்கள்பொருளுணருநூல்க
ளொன்ருேடொன்ருெவ்வாமலுளபலவுமிவற்றுள்
யாதுசமயம்பொருணூலியாதிங்கென்னி
லிதுவாகுமதுவல்லவெனும்பிணக்கதின்றி
நீதியினுலிவையெல்லாமோரிடத்தேகாண
நிற்பதுயாதொருசமயமதுசமயம்பொருணூ
லாதலினுலிவையெல்லாமருமறையாகமத்தே
யடங்கியிடுமவையிரண்டுமரனடிக்கீழடங்கும்.

(இ-ள்). பொருள்=அந்த அந்தச் சமயத்திற்குச் சொல்லும் பதார்த்தங்கள்; நூல்=அப்பொருளைச் சொல்லுஞ் சாத்திரம்; பிணக்கதின்றி=சந்தேகமற்று; ஓரிடத்தே=ஒருசமயத்திலே; காண=அடங்க; வேதத்திற் சாவதியடங்கும் சிவாகமத்திலே நிரவதியடங்கும்; அரனடிக் கீழடங்கும்=அபரஞானமாதலால் வேதஞ் சிவாகமத்தடங்கும், சிவாகமம் வேதத்தைக் குறித்துப் பரஞானமானாலும் சிவசத்தி சின்ன சிவாகமத்தைக் குறித்து அபரஞான மாதலால் சிவசத்தியாகுஞ்சேதன பரஞானசிவாகமத்தடங்கும்; மற்றைய வெளிப்பொருள்.

முதனூல்வழிநூல் சார்புநூலிதுவென்று
சாற்றுகின்றார்.

அருமறையாகமமுதனூலனைத்துமுரைக்கையினு
லளப்பரிதாமப்பொருளையரனருளாலணுக்க
டருவர்கள்பின்றனித்தனியேதாமறிந்தவளவிற்
றருக்கமொடுத்தரங்களினாற்சமயஞ்சாதித்து
மிருதிபுராணங்கலைகண்மற்றுமெல்லா
மெய்ந்நூலின்வழிபுடையாறங்கம்வேதாங்கஞ்
சுருதிசிவாகமமொழியச்சொல்லுவதொன்றில்லை
சொல்லுவார்தமக்கறையோசொல்லொணாதே.

(இ-ள்). அணுக்கள்=ஆன்மவர்க்கங்களாகிய மனு முதலிய மிருதி கர்த்தாக்கள் வியாதர் முதலிய புராணகலை கர்த்தாக்கள் பண்ணின மிருதி முதலியன வேதமாகிய முதனூலுக்கு வழிநூல்; ஆறங்கம்; புடை= சார்புநூல்; (முதனூலாகிய சிவாகமத்துக் குபாகமங்கள் வழிநூல், பிரகரண முதலியன சார்புநூல்) சுருதி சிவாகம மொழியச் சொல்லுவ தொன்றில்லை=வேதத்துஞ் சிவாகமத்தும் புறச்சமயமுட் சமய மடங்குதலாலஃதவற்றிற்கு வியாபகமாய்க் கொண்டு புறம்பாயொரு சாஸ்திரமில்லை; அறை=உத்தரம்;

ஒன்றில்லை யென்பதற்குப் புறச்சமய முட்சமய சாஸ்திரங்களும் பிரமாணங்களாய்க் கொண்டு இல்லையென்று பேசவேண்டாம், தமதுதிப் பிரமாணங்களென்று பவுஷ்கராதிகளினும் ஸ்ரீ ராமகண்ட குருபண்ணின சர்வாகமப் பிராமாண்ணியத்துஞ் சாதித்திருத்தலால். (கஎ)

அப்படிச் சமய சாத்திரங்களெல்லாம்வேதாகமங்களிற் சுருக்கிச் குறிப்பித்திருக்கும்; அவைகளையுருத்திரர் தேவரிஷிகள் தனித்தனி விரி

துட் சமய புறச்சமய சாத்திரங்களாகப் பண்ணினார்களென் றுமப் படியாகில், வேதமென்று மாகமமென்றுஞ் சாத்திரமிரண்டு வருவானேனென்ன, பிரகரண விரோதங்களிருந்தாலும் வியாகரணாதியிற் சாமானிய விசேஷசூத்திரங்கள் போற் பொதுச்சிறப்புச் சாத்திரங்களாயிருக்குமென்று மப்படி வைதிக சம்பந்தமாய் விருத்தாசலபுராணாதியிலு மாகமத்திலு மிருப்பதறிந்து குறித் துரைக்கின்றார்.

வேதநூல்சைவநூலென் றிரண்டேநூல்கள்
வேறுரைத்தநூலிவற்றின்விரிந்தநூல்க
ளாதிநூலநாதியமலன்றருநூலிரண்டு
மாரணநூல்பொதுச்சைவமருஞ்சிறப்புநூலா
நீதியினாலுலகர்க்குஞ்சத்திநிபாதர்க்கு
நிகழ்த்தியதுநீண்மறையினொழிபொருள்வேதாந்தத்
தீதில்பொருள்கொண்டுரைக்குநூல்சைவம்பிறநூ
றிகழ்பூர்வஞ்சிவாகமங்கள்சித்தாந்தமாகும்.

(இ-ள்). வேத மூலகர்க் கென்றது லௌகிகம், வைதிகம், அத்தியான்மிக மென்கின்ற முச்சாத்திரப் பிரசித்த வுலோக தன்ம வருணச் சிரமவழி வழுவாமை முத லியாகாதி வைதிகப் பிரமவிசாராதிகளிற் பரபுத்தி பண்ணி யொழுகு மலபரிபாக மில்லா மாந்தர்க்கென்று பொருள்; சிவாகமஞ் சத்திநிபாதர்க்கென்ற ததிமார்க்க மாந்திரமென்கிற விருசாத்திரப் பிரசித்தமாய் லோகதன்மாதி விடாதும் விட்டு மிருக்குஞ் சிவதீக்ஷா வான்களாய்ச் சிவதன்ம திரிபதார்த்த ஞானத்தியான சமாதியுபாயஞ் சம்பாதிக்கு மிச்சாவான்களுக்கென்றும் பொருள்.

நீண்மறையி னொழிபொருள் = வேதத்திற் கெட்டாப் பொருள்; வேதாந்தத்தீதில் பொருள் = சித்தாந்தத்துக் கொத்து விரோதியாத வேதாந்தப்பொருள்; கொண்டு = அங்கீகரித்து; பிறநூல் திகழ் பூர்வம் = வேதவேதாந்த முதலிய சாஸ்திரங்கள் பூர்வபட்சம்; மற்றையவெளிப் பொருள். (கரு)

சித்தாந்தத்தின் சிறப்புணர்த்து கின்றார்.

சித்தாந்தத்தேசிவன்றன் றிருக்கடைக்கண்சேர்த்திச்
செனனமொன்றிலேசீவன்முத்தராக
வைத்தாண்டுமலங்கழுவிஞானவாரி
மடுத்தானந்தம்பொழிந்துவரும்பிறப்பையறுத்து

முந்தாந்தப்பாதமலர்க்கீழ்வைப்பனென்று
மொழிந்திடவுமுலகரொல்லாமூர்க்கராகிப்
பித்தாந்தப்பெரும்பிதற்றுப்பிதற்றிப்பாவப்
பெருங்குழியில்வீழ்ந்திடுவரிதுவென்னபிராந்தே.

(இ-ள்). சித்தாந்தத்தே=சிவாகமாசார வான்களிடத்திலே; திருக்கடைக்கண் சேர்த்தி=தனது தீட்சா ரூபக்கிரியா சத்தி சங்கற்பம் பண்ணி; ஞானவாரி மடுத்தானந்தம் பொழிந்து=சிவத்துவக்குறிச் சிற்சத்தி சமுத்திரத் தழுத்திச் சிவத்துவாபி வியத்திலட்சண சிவானந்த மனுபவித்து; முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன்=நின்மல நிரதிசய தன் சத்திசமான சத்திமானர்களாக்குவன்; இதுவென்னபிராந்தே=இதுவேதுமயக்கம். மற்றைய வெளிப்பொருள். (கசு)

சிவன் சர்வஞ்ஞன் சர்வகர்த்தா சர்வானுக் கிரகன்
என்று சாற்றுகின்றூர்.

இறைவனுவான்ஞானமெல்லாமெல்லா
முதன்மையனுக்கிரகமெலாமியல்புடையானியம்பு
மறையாகமங்களினுலறிவெலாந்தோற்றும்
வரைவின்வழிவருவோர்க்கும்வாராதோர்க்கு
முறைமையினுலின்பத்துன்பங்கொடுத்தலாலே
முதன்மையெல்லாமறிந்துமுயங்கிரண்டுபோகத்
திறமதனுல்வினையறுக்குஞ்செய்தியாலே
சேருமனுக்கிரகமெலாங்காணுநாஞ்சிவற்கே.

(இ-ள்). எல்லாஞானம் = சர்வஞ்ஞத்துவம்; எல்லாமுதன்மை= சர்வ கர்த்திருத்துவம்; எல்லா மனுக்கிரகம்=சர்வானுக்கிரகத்துவம்;(இம் மூன்றும்) இயல்புடையான்=வேதாந்திகள் சைவரிற் சிலர் சாற்றுந் தடத்த லக்ஷணமன்றித் சுத்த சைவ சித்தாந்திகள் சொல்லுஞ் சொரூப லக்ஷணமாகவுடையன்;இறைவனுவான்=சர்வசெகத்கர்த்தாவானவன்; இயம்புமறை யாகமங்களினுல்; அறிவெல்லாந் தோற்றும்=சர்வஞ்ஞத்துவ மனுமிதிக்கப்படும்; வரைவின் வழிவருவோர்க்கும் வாராதோர்க்கும்=விதி நிஷேதப்படி நடப்போர்க்கும்; நடவாதோர்க்கும் முறைமையினு லின்பத்துன்பங் கொடுத்தலாலே; முதன்மை யெல்லா மறிந்தும்=சர்வகர்த்திருத்துவ மனுமிதித்தேம்; முயங்கிரண்டு போகத்

திறமதனால்=அனுபவிக்கப்படு மிருசுகதுக்க வேதனையினாலே; வினையறுக்குஞ் செய்தியாலே=புண்ணியபாவங்களைப் போக்கும் பரிசினால்; சிவற்கே=சிவனுக்கே; சேரு மனுக்கிரக மெல்லாம்=பொருந்துஞ் சர்வானுக்கிரகம்; காணுதுநாம்=அனுமானித்தறிவோம். (கஎ)

புறச்சமயமெனும் விருத்தத்திற் சரியா கிரியா யோகஞ்செலுத்தியபின் ஞானத்தாலென்று செப்பிய நாலுபாயத்தின் செய்தி சிங்கநோக்காற் செப்புகின்றார்.

சன்மார்க்கஞ்சகமார்க்கஞ்சற்புத்திரமார்க்கந்
தாதமார்க்கமென்றுசங்கரனையடையும்
நன்மார்க்கநாலிவைதான்ஞானயோக
நற்கிரியாசரியையெனநவிற்றுவதுஞ்செய்வர்
சன்மார்க்கமுத்திகள்சாலோக்கியசாமீப்பிய
சாரூப்பியசாயுச்சியங்களென்றுசதுர்விதமா
முன்மார்க்கஞானத்தாலெய்துமுத்தி
முடிவென்பர்மூன்றினுக்குமுத்திபதமென்பர்.

(இ - ள்). ஞானயோகாதிகளுக்குச் சன்மார்க்க சகமார்க்காதிப் பேருஞ் சாற்றப்படுமென்று பொருள். சன்மார்க்கச் சொரூபஞ் சொல்லுவாம்:—

சிவசாஸ்திர சமுற்பன்ன நிராலம்ப சிவபரோக்ஷ ஞானோப காரோப கிருதமாயும், அஃதன்றி நிராலம்ப சிவசாக்ஷாற் காரமென்றும் நிராலம்ப சிவாபரோக்ஷ ஞானமென்றுஞ் சாற்றப்படும் நிராலம்பாங்கி சிவயோகத்திற்கு அங்கசிவ யோகமாகவு மிருக்குஞ் சாத்த மனச்சங்கற்பக் கிரியையுண் மணக்கும் அபரோக்ஷம்போ லபிநயக்குறிச் சாத்த பவுத்த சிவஞானச் சிறப்புப் பிரவாக லக்ஷண நிராலம்ப சிவத்தியான மூலத்தின் முளைத்த தியானத்தின தசைவறுதற்குறி நிராலம்ப சிவசமாதியே சன்மார்க்கம். சகமார்க்கச் சொரூபஞ் சொல்லுவாம்:—

சிவசாஸ்திர சமுற்பன்ன சாலம்ப சிவபரோக்ஷ ஞானோபகாரோப கிருதமாயு மதன்றிச் சாலம்ப சிவ சாக்ஷாத்காரமென்றுஞ் சாலம்ப சிவாபரோக்ஷ ஞானமென்றுஞ் சொல்லப்படுஞ் சாலம்பாங்கி சிவயோகத்திற்கங்க சிவயோகமாயுமிருக்கும் பிராகிருத மனச்சங்கற்பக் கிரியையுண்மணக்கு மபரோக்ஷம்போ லபிநயக் குறிப் பிராகிருத பவுத்த சிவஞானச் சிறப்புப் பிரவாகலக்ஷண சாலம்ப சிவசமாதிமூல சாலம்ப சிவத்

தியானமே யோக மெனுஞ் சகமார்க்கம்; சற்புத்திர மார்க்கம்=சிவபூசாதி; தாதமார்க்கம்=சிவசேவாதி; சன்மார்க்கமுத்திகள்=நல்லமார்க்க முத்திகள்; சதுர்விதம்=நான்கு வகை; முன்மார்க்க ஞானத்தால்=சன்மார்க்கசமாதியால்; முடிவென்பர்=பரமுத்தியென்பர். மற்றைய வெளிப்பொருள்.

சன்மார்க்க முதலிய நான்கினும் பொதுச் சிறப்பாகச் சன்மார்க்கத்திற் சன்மார்க்கம் என்றிப்படிச் சன்மார்க்க முதலிய நான்குந் தனித்தனி நான்காதலால், நான்கின் பலமாகிய சாலோக்கியாதி நான்குந் தனித்தனி ஸ்ரீகண்டநாத அனந்தேசுர சதாசிவ சாலோக்கியாதி அவரவர் சமபல சாயுச்சியாந்த முத்திகளாயுஞ் சதாசிவ தத்துவத்துக்கு மேற் சத்தி தத்துவத்தான சிவதத்துவத்தான தத்துவாதீதமாகிய பரசிவத்தான முத்தானங்களிலே பரசிவ சாலோக்கியாதி சர்வத்திர பரசிவ சமபல பரசிவ சாயுச்சியாந்த முத்திகளாயிருக்கும் நயிஷ்டிகி தீக்ஷாமுத்திகளாயுங் காலாக்கினியாதி யனுசிருதாந்த புவனபதி சாலோக்கியாதி புவனபதி சமபலபுவனபதி சாயுச்சியாந்த முத்திகளாயிருக்கும் பவுதிகி தீக்ஷாமுத்திகளாயும் அனந்த விதமாயிருக்கு மெனவறிக. (௧அ)

தாதமார்க்க முத லொன்கினது ஸ்வரூபம் நான்கு திருவிருத்தத்தாற் சொல்லுகின்றார்.

தாதமார்க்கஞ்சாற்றிற்சங்கரன்றன்கோயிற்
றலமலகிட்டிலகுதிருமெழுக்குஞ்சாத்திப்
போதுகளுங்கொய்து பூந்தார்மாலைகண்ணி
புனிதற்குப்பலசமைத்துப்புகழ்ந்துபாடித்
தீதிறிருவிளக்கிட்டுத்திருநந்தவனமுஞ்
செய்துதிருவேடங்கண்டாலடியேன்செய்வ
தியாதுபணியீரென்றுபணிந்தவர்தம்பணியு
மியற்றுவதிச்சரியைசெய்வோரீசனுலகிருப்பர். (௧௯)
புத்திரமார்க்கம்புகலிற்புதியவிரைப்போது
புகையொளிமஞ்சனமமுதுமுதல்கொண்டைந்து
சுத்திசெய்தாசனமூர்த்திமூர்த்திமானுஞ்
சோதியையும்பாவித்தாவாகித்துச்சுத்த
பத்தியினுலர்ச்சித்துப்பரவிப்போற்றி
பரிவினெடுமெரியில்வருகாரியமும்பண்ணி
நித்தலுமிக்கிரியையினையியற்றுவோர்க
ணின்மலன்றனருகிருப்பர்நிகழ்த்துங்காலே.

(இ-ள்) விரைப்போது=மணம் பொருந்திய புஷ்பம்; புகை ஒளி =தூபதீபம்; ஐந்து சுத்தி=ஆன்மஸ்தான திரவிய மந்திர லிங்க சுத்தி; ஆசனம்=சத்தியாதி சத்திபரியந்த பத்ம ரூபவிந்து; மூர்த்தி=விந்து மத்தியத் தெழுந்து தண்டா கிருதியாய்த் திரும்ப வித்தியா தேக ரூப வியாபகமாயிருக்கும் நாதம்; மூர்த்திமானுஞ் சோதி=வித்தியா தேகத்துக்குச் சீவனும் பர சிவ தேஜஸ்; மற்றைய வெளிப்பொருள். (உ௦)

சகமார்க்கம்புலனொடுக்கித்தடுத்துவளியிரண்டுஞ்
சலிப்பற்றுமுச்சதுரமுதலாதாரங்க
ளகமார்க்கமறிந்தவற்றினரும்பொருள்களுணர்ந்தங்
கணைந்துபோய்மேலேறியலர்மதிமண்டலத்தின்
முகமார்க்கவமுதுடலமுட்டத்தேக்கி
முழுச்சோதிநினைந்திருத்தன்முதலாகவினைக
ளுகமார்க்கவட்டாங்கயோகமுற்று
முழத்தலுழந்தவர்சிவன்றனுருவத்தைப்பெறுவர்.

(இ-ள்). புலனொடுக்கி=பிராணயாமப் பிரத்தியா சாரங்களினு லிந்திரியங்களை நிறுத்தி; தடுத்து வளியிரண்டும்=பிராணன திடை பிங்கலைகளினியக்கம் மடக்கி; முச்சதுர முதலாதாரமக மார்க்கம்=சுழுமுனைநாடி வழி பொருந்திய பதுமாதி தேவதை முதலியன; அலர்மதி மண்டலம்=புருவமத்தியம்; முழுச் சோதி நினைந்திருத்தல்=அந்தப் புருவ மத்திய பதுமத்தில் விந்து நாத ரூப மாயிருக்குந் தேஜோலிங்க சகள நிஷ்கள சிவத்தை, இதயத்திற்ச தா சிவ முதலிய சகள சிவத்தைத் தான் றியானித்துச் சமாதித்தல்; முதலாக=சங்காரக்கிரமத்தா தியாகச் சிருஷ்டிக் கிரமத்தந்தமாக; அஷ்டாங்க யோகம்=இயமநியம ஆசனப் பிராணயாமப் பிரத்தியாகார தாரணை தியான சமாதி யென்னு மெட்டங்கமுடைய சகள சகளாகள சிவ சாக்ஷாத்கார ரூப அங்கிசிவ யோகத்தை; முற்றும்=அங்கவீன மின்றி; உழத்தலுழந்தவர்=அந்த வட்டாங்கங்களினுற் சாதித்தலைப் பண்ணினவர். மற்றைய வெளிப்பொருள் (உக)

சன்மார்க்கஞ்சகலகலைபுராணவேத
சாத்திரங்கள்சமயங்கடாம்பலவுமுணர்ந்து
பன்மார்க்கப்பொருள்பலவுங்கீழாகமேலாம்
பதிபசுபாசந்தெரித்துப்பரசிவனைக்காட்டு

நன்மார்க்கஞானத்தானடிஞான
ஞேயமொடுஞாதிருவுநாடாவண்ணம்
பின்மார்க்கச்சிவனுடனும்பெற்றிஞானப்
பெருமையுடையோர்சிவனைப்பெறுவர்காணே.

(இ-ள்). நன்மார்க்க ஞானத்தால்=சிவாகமத்திரிவழி சரிக்குஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய சிற்சத்தி மூலத்தில் முளைத்து வாயிற்காட்சி கடந்து யோகக்காட்சி தொடர்ந்து நடு நிற்குமறிவினால் (சிவனை); நாடி=அதுவிதுவல்லா வதுவென்றறிந்து ரூப தரிசனமுற்றுப் பின் மகா மந்திரத்திரிவழிபற்றி முற்றும் போய் மேனிராலம் பினியாஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிப் போய்ச் சமனை கடந்துன்மனை பற்றி விசேஷித்து ரூப தெரிசன முற்று மகா வாக்கியப்பொருளுன்னித் தியானமுமிழ்த் துபரி விரியுஞ் சிற்சத்திப் புத்தி வித்தின் முளைத்துக் காட்சிபோற் காட்டி நடிக்கு ஞானச்சிறப்புக்குறித் தியானக் குறியாய்ச் சிற்சத்தி மனச் சங்கற்பக் கிரியை மணந்து பின் சோத்த சிற்போதத்தாற் றியானித்து; ஞானஞேய மொடு ஞாதிருவு நாடாவண்ணம்=தியானிக்குமான்மா, தியானம் பண்ணப்படும்பரம், தியான முபலக்ஷிக்குஞ் சிவ மிம்மூன்றெனுஞ் சித்தாந்த வாக்கியார்த்தங்களொரு நெறியானுந் தோற்றுதென்னில் நித்திரை முத்திரை நிலைபெறுமாதலாற், சிற்சத்திப் புத்தி வித்துமிழ்க்குஞ் சூக்ஷ்ம யோசன விகற்ப சாந்தர சசல சதரங்க போதப் பிரவாகக்குறித் தியானத்தின துறைப்புக்குறி நிர்வியோசன நிர்விகற்ப நிரந்தர நிர்ச்சல நிஸ்தரங்க போதப் பிரவாக சமாதியிலும் "ஸ்வரூப சூந்யமிவஸமாதி" எனும் பதஞ்சலி வசனத்தாலொரு நெறி யேகமாய் முச்சூனியம் போல முப்பொருள் விள்ளாது விண்டு தோற்றாது தோற்ற நோக்காது நோக்கி; பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப் பெருமை யுடையோர்=முன்பின் சொன்ன சன்மார்க்க நிராலம்ப சிவயோக சிவசமாதி யுறைப்புற்ற சத்துக்கள்; சிவனைப் பெறுவர்காணே=சிவனோடு சமமாய் மலத்தால் மறைந்திருந்து, மலமுத்தியால் வியத்தியாய் விரிந்து விளங்குஞ் சிவத்துவத்தை ஸ்வரூப லக்ஷணமாகச் சாக்ஷாத்கரித்திருப்பர். மற்றைய வெளிப்பொருள். (உஉ)

சிவசித்தாந்த சாஸ்திர ஞானமு மறிந்தே தியானசமாதி பண்ணப்படுமாதலால், சாக்ஷாத்கார சாதன சாக்ஷாத் சன்மார்க்க ஞானபூசையாகு நிராலம்ப சிவத்தியான சமாதி முதலிய வற்றைச் சாதிப்பிக்குமாதலால், சன்மார்க்க ஞான பூசையா மென்று சாற்றுகின்றார்.

ஞானநூறனையோதலோதுவித்தனற்பொருளைக்
கேட்பித்தருன்கேட்டனன்று
வினமிலாப்பொருளதனைச்சிந்தித்தலைந்து
மிறைவனடியடைவிக்குமெழின்ஞானபூசை
யூனமிலாக்கன்மங்கடபஞ்செபங்கடியான
மொன்றுக்கொன்றுயருமிவையூட்டுவதுபோக
மானமையான்மேலானஞானத்தாலரனை
யர்ச்சிப்பர்வீடெய்தவறிந்தோரெல்லாம்.

(இ-ள்). (சிந்தித்தலுக்குப்பின் தெளிதல் என்பதைக்கூட்டி ஆறென்று பண்ணுக) சாலம்ப சிவ சக மார்க்க ஞானசாத்திய சாலம்ப சகமார்க்கத் தியான சமாதி முதலியவற்றைக் குறித்து நிராலம்ப சிவசன்மார்க்க சாஸ்திரஞான முயர்ந்தது, நிராலம்ப சிவசன்மார்க்கத் தியான சமாதி முதலியவற்றைக் குறித்துத் தாழ்ந்த தென்பதறிக;

அப்படிச்சிவாகமஞ் செப்பியது காண்பிப்பாம்: கிரியாவான்கள் பத்துப் பெயர்க்கதிகன் சாந்திராயண முதற்ற பவிரதி; தபவிரதிகள் நூறு பெயர்க் கதிகன் செபசீலன்; செபசீலர்க ளாயிரம் பெயர்க் கதிகன் சிவ ஞானி; சிவஞானிகளில் லக்ஷம்பெயர்க்கதிகன் சிவத்தியானி; சிவத்தியானிகள் கோடிபெயர்க்கதிகன் சிவசமாதிமான்; சிவசமாதிமான்க ளனந்தம் பெயர்க்கதிகன் சிவசாக்ஷாத்காரவான்.

சிவத் தியானம் சிவ சமாதி சிவ சாக்ஷாத் காரங்களுங் கிரியோத்திரேக விசிஷ்டச் சிறப்பு ஞானங்கள்தாமே. (உ௩)

சர்வாதிக்க நிராலம்ப சிவ சாக்ஷாத்கார சாதன நிராலம்ப சிவ சமாதி முன் சொல்லிய ஞானத்தினு முக்கிய மென்பது ஆசாரியரு மறிவிப்பிக்கின்றார்.

கேட்டலுடன்சிந்தித்தறெளிதனிட்டை
கிளத்தலெனவீரிரண்டாங்கிளக்கின்ஞான
வீட்டையடைந்திடுவர்நிட்டைமேவினோர்கள்
மேவாதுதப்பினவர்மேலானபதங்கட்
கீட்டியபுண்ணியநாதராகியின்ப
மினிதுநுகர்ந்தருளினாலிந்தப்பார்மே
னாட்டியநற்குலத்தினில்வந்தவதரித்துக்குருவான்
ஞானநிஷ்டையடைந்தடைவர்நாதன்றாளே.

(இ-ள்). கிளத்தல்=பண்ணுதல்; இந்தப்பார்மே லென்பது நியம மன்று "புவநே புவநே குரவக" என்று சிவாகம வித்துக்கள் செப்புவார்களாதலால்,போய்ப் பொருந்திய புவனத்திருந்தபடி பூமியிற்றிரும்பாது ஸ்ரீமத் ஸ்ரீசண்டருத்திரகுரு சதாசிவகுரு முதலோரால் நிரீக்ஷிதர்களாய்க் கொண்டும் பரமுத்திமான்களாவார்கள். மற்றையவெளிப் பொருள். (உச)

அப்படியே ஸ்ரீமத் ஸ்ரீகண்ட தேசிகாதியர்களால் நிரீக்ஷிக்கப் படாதிருந்து சிலர் மகாப்பிரளய முடிவில் சிவநிரீக்ஷணத்தால் பரமுத்திமான்களாவார்கள், ஸ்ரீமத் ஸ்ரீகண்டாதி நிரீக்ஷணம்போல சிவ நிரீக்ஷணமுமில்லாதார் மற்றைய மகாசிருஷ்டியிற் பூமியிற் புவனங்களிற்றான் ஜன்மித்துப் புவன குரு குலங்களாற் றீக்ஷிக்கப்பட்டுச் சிவசமாதி பண்ணிப் பரமுத்திமான்க ளாவார்க ளென்று பாஷிக்கின்றார்.

தான்மியாகந்தீர்த்தமாச்சிரமந்தவங்கள்
　சாந்திவிரதங்கன்மயோகங்கள்சரித்தோ
ரீனமிலாச்சுவர்க்கம்பெற்றிமைப்பளவின்மீளவ
　ரீசன்யோகக்கிரியாசரியைதனினின்றோ
ரூனமிலாமுத்திபதம்பெற்றுலகமெல்லா
　மொடுங்கும்போதரன்முன்னில்லாதொழியிலுற்பவித்து
ஞானநெறியடைந்தடைவர்சிவனையங்கு
　நாதனேமுன்னிற்கினணுகுவர்நற்றாளே.

(இ-ள்). இமைப்பளவில்=நித்திய நிலையின்றி; ஈசன் யோகமென்றது சாலம்ப சிவயோகமாதலால் ஈசன் யோகக்கிரியா சரியைதனினின்றோர் நிராலம்ப சிவசமாதி நிலைகெட்டு நிலை பெறு தோரு மென்று வருவித்துக்கூட்டுக;முத்தி=பதமுத்தி; மற்றையவெளிப்பொருள்.(உரு)

நிஷ்பிரபஞ்ச சமாதி நிலைபெற்றோர் பெருமை
நிகழ்த்துகின்றார்.

சிவஞானச்செயலுடையோர்கையிற்றானந்
　திலமளவேசெய்திடினுநிலமலைபோற்றிகழ்ந்து
பவமாயக்கடலிலழுந்தாதவகையெடுத்துப்
　பரபோகந்துய்ப்பித்துப்பாசத்தையறுத்துத்
தவமாரும்பிறப்பொன்றிற்சாரப்பண்ணிச்
　சரியைகிரியாயோகந்தன்னிலுஞ்சாராமே

நவமாருந்தத்துவஞானத்தைநல்கி
நாதனடிக்கமலங்கணனுகுவிக்குந்தானே.

(இ - ள்). சிவஞானச் செயலுடையோர் = நிராலம்ப சிவயோக சமாதிமான்கள்; தத்துவஞானத்தை = நிராலம்ப சிவயோக சமாதியை; நல்கி = சொடுத்து; நாதனடிக்கமலங்கள் = நாதனது ஞானக்கிரியா சத்தி சமானசத்தி லக்ஷண சிவத்துவத்தை; மற்றைய வெளிப்பொருள். (உசு)

ஜடகன்மத்தால் முத்தியென்று மீமாம்சன் விளம்ப மறுத்துச்
சிற்கன்மத்தாலே மூத்தியென்று
செப்புகின்றூர்.

ஞானத்தால்விடென்றேநான்மறைகள்புராண
நல்லவாகமஞ்சொல்லவல்லவாமென்னு
மூனத்தாரென்கடவாரஞ்ஞானத்தா
லுறுவதுதான்பந்தமுயர்மெய்ஞ்ஞானந்தா
ஞனத்தாலதுபோவதலர்கதிர்முன்னிருள்போ
லஞ்ஞானமறப்பந்தமறுமுத்தியாகு
மீனத்தார்ஞானங்களல்லாஞான
மிறைவனடிஞானமேஞானமென்பர்.

(இ ள்). ஞானத்தால் வீடென்றே = நிராதார தீக்ஷையிற் றிரிபாதார்த்த கர்ப்ப தீக்ஷாகலா கலாபமறிந்து பண்ணவேண்டு மாதலால்; சிவனது ஞானசத்தி கிர்த்தியக்குறித் தீக்ஷாங்க ஞானமும் ஞானம்;

பின்னவனது தீக்ஷாக்குறிக் கிரியா சத்திச்சிறப்பிருப்பிச்சாசத்தி கிர்த்தியக்குறிச் சங்கற்ப சிற்கன்மமு ஞானம்;

அதுவன்றிச் சாதார தீக்ஷையில் திறிபதார்த்த கர்ப்பதீக்ஷா கலா கலாப மறிந்து பண்ணவேண்டு மாதலாற் குருவினது ஞானசத்திக் கிர்த்தியக்குறிச் சிவாகம சிரவண மனனத்தெழுந் தெளிதற் செய்கைத் தீக்ஷாங்க யோகாங்க ஞானமும் ஞானம்;

பின்னவனது காயிக வாசிக மானசிக தீக்ஷா கன்மமியற்றுங் காய வாக்மனத்தசைவு பண்ணுந் தீக்ஷாக் குறிக் கிரியா சத்திச் சிறப்பிருப்பிச் சாசத்தி கிர்த்திய சங்கற்பக்குறிச் சிற்கன்மமு ஞானம்;

அதுவன்றிச் சாதாரவ சத்தியோ நிருவாணதீக்ஷையிற் சேஷனது திரி பதார்த்த கர்ப்ப யோக கலாகலாப மறிந்து பண்ணவேண்டு மாதலாற்

சிஷனது ஞானசத்தி கிர்த்தியக்குறிச் சிவாகம சிரவண மனனத்தெழுந் தெளிதற் செயற்கைத் தீக்ஷாங்க யோகாங்க ஞானமு ஞானம்;

பின்னவனது யோகக்குறிக் கிரியா சத்திச் சிறப்பிருப்பிச்சாசத்தி கிர்த்தியக்குறிச் சங்கற்பசிற்கன்ம மணந்த ஞானசத்தி கிர்த்தியக்குறிச் சிறப்பு ஞானப்பிரவாக தீக்ஷாங்க யோகாங்க தியானமும் ஞானம்;

தியானத்தசை வறுதற்குறித் தியான சாத்திய தீக்ஷாங்க யோகாங்க சமாதியும் ஞானம்;

சமாதி சாத்திய திருக் கிரியாக்குறி யோகப் பேர்விதேக பரமுத்தி சாக்ஷாத்கார சாதன தீக்ஷாங்க சதேக சீவன் முத்தி சாக்ஷாத்காரமும் ஞானம்;

இஞ்ஞானங்களிற் சிறிதிற் றுதான்மியமாயுஞ் சிறிதி லாரூடமாயு மனுசரிக்குஞ் சாக்ஷான் மோக்ஷமுங் கிடைப்பிக்கும் சங்கற்ப தீக்ஷண நிரீக்ஷணம் பண்ணுஞ் சிவக்கிரியா சத்திச் சிறப்பிருப் பிச்சாசத்தி லக்ஷண தீக்ஷையும் ஞானம்;

அப்படிச் சுப்பிர பேதம், சுவாயம்புவம், பவுஷ்கர முதற் சிவாகமங்களிற் சிறப்பித்திருத்தலால் தீக்ஷையும் ஞான மென்பது சிவாகமப் பிரசித்தம்;

விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரெனு மவரவர்க் கருகமாய் விட்டுக் கூட்டி விதிக்கும் அநேக வித ஞானத்தால் மோக்ஷ மென்றே பொதுச் சிறப்பாய்; நான் மறைகள் புராண நல்லவாகமஞ் சொல்ல வல்லவா மென்னு மூனத்தாரொன்கடவார்=பிராகிருத காயிக வாசிக மானசிக ஜடபந்த கன்மத்தால் முத்தி யென்று செப்பும் ஞான வீனராகும் கன்ம மீமாம்சர் முதலோரோது பிரயோஜனத்திற் கருகர் நிஷ்பிரயோஜனர்களே;

அஞ்ஞானத்தால்=அஞ்ஞான மூலவஞ்ஞானப் பெயராணவமலமாரோபித விபரீத ஞானரூப போகக் கிரியாகர்த்திருத்துவக் குறிபோக்திருத்துவத்தால்; உறுவது தான் பந்தம்=மாயா கன்ம தேகபோகக் கட்டுப் பொருந்தும்; உயர் மெய்ஞ்ஞானந் தானனத்தால்=சொல்லிய வந்தச் சிவ தீக்ஷா சிவஞான சிவயோக சிவ சரியாங்கி யங்கஞானத்தால்;

அதுபோவது=அந்தப் பந்தம் நீங்குவது; காரண மிருக்கக் காரிய மெப்படிப் போம்?

அலர்கதிர் முன்னிருள் போல்=சூரிய கிரண சந்நிதானத்தி லந்தகார மொப்ப; அஞ்ஞான மறப் பந்தமறும்=மலம் நீங்க மாயா கன்மக் கட்டு விடும்; முத்தியாகும்=பின் சிவத்துவாபிவியத்தி சித்திக்கும்;

சொல்லிய அங்காங்கி ஞானங்களு ளங்கி ஞான முக்கிய மென்ப தறைகின்றார்:—

ஈனத்தார் ஞானங்களல்லா ஞானம்=சிவ தீக்ஷா சிவஞான சிவ யோக ஞானபாத்திரர்களல்லாச் சாங்கியன் வேதாந்தி முதலோர் சொல்லும் பிரகிருதி புருஷ விவேகப் பிரம விவேகபவுருஷ ஞானங்கள் சைவைக தேசிகள் சொல்லுஞ் சீவ சிவ ஐக்கிய விஷய சிவசத்திப் பிர மாணிக பவுருஷப் பிரமிதிக் குறித் தீக்ஷாங் காங்கி ஞானம்;

இவைகளல்லா ஞானம் சங்கற்ப சிற்கன்ம கிர்த்திய ஞானகரண ஞானம்:—

இறைவனடி ஞானமே=சிவக் கிரியா சத்திச் சிறப்பிருப்பிச் சாசத்திலக்கண சிவதீக்ஷையே; ஞானமென்பர்=ஞானச் சிறப்பென்று சிவ சிந்தாதிகள் செப்புவார்கள். சைவ சிந்தாந்திப் பேரில் மறைந்து சாங்கிய வேதாந்தி மதத்தா பாசர்களாய்ச் சஞ்சரிக்குஞ் சிலர் தியான சமாதிச் சிற்கன்மச் சிறப்பு ஞானமுஞ் செப்பாது ஞானத்தியான சமா தி சீவன் முத்தி சாக்ஷாத்கார சர்வாங்காங்கியாயிருக்கும் தீக்ஷையை ஞானத்துக் கங்கமென்று மாறிக்கொண்டு சீவ சிவ ஐக்கிய விஷய சிவ சத்தி கரண நைமித்திக பவுருஷ பொது ஞான மாத்திரமே இறைவனடி ஞானம், அதுவே சமாதி, அதுவே ஞானமென்பர்;

அவர்கள் முன்னுசாரியர் தீக்ஷையே மோக்ஷ சாதன மென்றனே கந் திருவிருத்தத்தில் வித்தரித்த வாக்கியங்களுக்கு முன் பினவிரோத மாய்ப் பொருள்கொள்ளாது தங்கள் மனக்கொள்கைக் கிணங்கப் பொ ருள் கொண்டு முன் பின் விரோதிக்கப்பண்ணி யச்குருவாக்கியங்களைப் பிராந்தவாக்கியங்களாகவும் விப்பிரலம்ப வாக்கியங்களாகவும் பண் ணிப்பேசும் பேயர்களோடு பேச்சே திருக்கின்றது?

ஏதிப்போ நீர் நீதி தப்பிச் செப்பிற்றென்று நிகழ்த்தியது? மலங்கு ண மது அஞ்ஞானமே, அஞ்ஞானங்குண குணிதிரவியமன்று, மலமாகு மந்த வஞ்ஞானமுஞ் சிப்பி வெள்ளி ஞானம் போல ஞான மாத்திரத்தா னீங்கும்;

நன்று நீ சொல்லியது; மலங்குணம் அஞ்ஞானமாகிலதற்குக் குணி யொன்று கூறவேண்டும்; ஆன்மாவென்னின் பாஷாணம் போல அஞ் ஞானமான்மா வென்னும் நையாயிக வைசேஷிக மதமாம்; ஆன்மாவுக் கன்னிய மக்குணி யென்னிலதுவே மலம்; அஞ்ஞானமென்றது மலகுண மென் றுமக்கபிமத ஞானுத்தியந்தா பாவ லக்ஷணம் மவுட்டியமாகும்,

அஞ்ஞானமன்று; குற்றி கொல்லோ மகன் கொல்லோ வென்னுமைய ஞானம் போலைய ஞானமாகு மஞ்ஞானமே;

அல்ல திது வெள்ளியெனுஞ் சிப்பி வெள்ளி விபரீய ஞானம் போற் சவிகற்ப விபரிய ஞானமாகுமஞ்ஞானமே தான், நன்றிது வன்று; குணி யொன்று குறிக்குமிடத்துச் சாகங்கார புத்தி தத்துவமாதலால், புத்தி தத்துவமுதற் றத்துவப்பிரளயத்து முத்திப் பிரசங்கம் வரும்;அப்போது இருசந்திரனென்னும் விபரிய ஞானம்போற் புத்திபொருந்தாது; சரீர நா னென்று சற்றே தோற்று நிர் விகற்ப விபரிய ஞானமாகு மஞ்ஞானமே;

அதுவும் நன்றன்று, ஞாணும் சத்திற்குச் சித்தும் விபரியாம் சத்தி ற்கு மலகலை மணந்து கலந்த வித்தையுங் குணியாதலால்; இயற்கைக் குணி மாறிமயங்கிச்செயற்கைக் கலை கலந்த வித்தியா தத்துவ முதற்றத் துவப் பிரளயத்து முத்திப் பிரசங்கம் வரும்;

அதுவன்றி, யிரு சந்திர ஞானமாகுமஞ் ஞான மொரு சந்திர னெ னு முண்மை ஞானத்தா லுண்ணீக்க முற்றுலும் ஒப்பு மாத்திரத் துதிக் குஞ் சிப்பி வெள்ளி ஞானமாகு மஞ்ஞானஞ் சிப்பி யெனு முண்மை ஞானத்தா லுண்ணீக்கம் புற நீக்க முற்றுமுற்றும்போலுற்போல நேத்தி ரபடல திரவிய நீக்கமன்றிப் புற நீக்க முருதது போலச் சரீர நானென் னுஞ் சரீரான்ம ஞானமாகு மஞ்ஞானமுஞ் சரீரத்துக் கன்னிய மான்மா நானெனு முண்மை ஞானத்தா லுண்ணீக்க முற்றுலு மொரு மலத் திர விய நீக்கமன்றிப் புற நீக்க முருது மல திரவியமும் படல மென்றீ தொரு திரவியப் பொருளெனு முண்மை ஞான மாத்திரத்தாற் படலம் போல மல மென் றீதொரு திர வியப் பொருளெனு முண்மை ஞான மாத்திரத்தால் நீங்காது;

நேத்திர படல திரவியம் படல நீக்கு முபாய ஞானத்துணையுடைய வைத்திய சத்தி சத்திர கன்மத்தால்,நேத்திர விபரீத விர்த்தி நிமித்தாங் திய விர்த்தியோடு நீங்குவது போல், மல திரவியமு மல நீக்கு முபாய ஞானத்துணையுடைய சிவ தீக்ஷாக் குறிக்கிரியா சத்திச் சிறப்பிருப்பிச் சாசத்தி கிர்த்தியக் குறிச் சங்கற்ப சிற்கன் மத்தாற் கலை கலந்த வித்தி யா தத்துவ விபரீத விர்த்தி நிமித்த மவுட்டிய விர்த்தியோடு நீங்குமாத லால்,

சாங்கியர் போற் சொல்லுஞ் ஸ்வதந்திர ஞானத்தால்,பாதஞ் சலர் போற் சொல்லுஞ் ஸ்வதந்திர யோகத்தால், வேதாந்திகள் போற் சொல் லுஞ் ஸ்வ தந்திர சந்நியாசத்தால், மீமாஞ்சர் போற் சோல்லுஞ் சுவதந் திர கன்மத்தால், மோக்ஷமில்லை;

சேஷபவுருஷ சிவஞானாதிகளும் சேஷபவுருஷ சிவயோகாதிகளும், சாதார வசத்தியோ நிர்வாண தீக்ஷாங்கி மாத்திராங்கங்கள் குரு சிவஞானாதிகுரு சிவ யோகாதிகளும், சிவ சிவ ஞானாதி சிவ சிவ யோகாதிகளு முறைமையிற் சதார நிராதாரசத்தியோ நிருவாண தீக்ஷாங்க மாத்திராங்கங்கள்; சேஷ பவுருஷ சிவ ஞானாதி சிவ யோகாதிகள் மோக்ஷகாரிய முற்று மொத்துச் செல்லாது ஓரிடத்தில் வியபிசாரிகளாதலான்,

மோக்ஷ காரிய முற்று மொத்துச் செல்லுஞ் சொல்லிய சிவ சத்தி லக்ஷண தீக்ஷையாற்றானே மோக்ஷ மென்று சுவ தந்திர தீக்ஷா சிற்கன் மத்தால் மோக்ஷம் சுவ தந்திர மல்லா ஞான கோடிகள் தீக்ஷாங்கசங்களன்றிச் சுவ தந்திரங்களாய்ச் சூழ்ந்தாலு மோக்ஷமில்லையாம்; ஆதலாற் சொல்லிய சிவ தீக்ஷா சத்தி சங்கற்ப சிற்கன்மத்தாற்றானே மோக்ஷ மென்று சித்தாந்தம். (உ௭)

அப்படிக் குரு ஞானாதிசாங்க சாதார சத்தியோ நிருவாண தீக்ஷையினால் விதேக பரமுத்தி சாக்ஷாத்காரஞ் சடிதி விளங்கு மென்றுஞ் சேஷ ஞானாதி சாங்கசாதார வசத்தியோ நிருவாண தீக்ஷையினால் சதேக சீவன் முத்தி சாக்ஷாத் கார மெல்ல விளங்கு மென்றுஞ் சமாதி நடுவொரு திரு விருத்தத்தால் நாட்டி யிரு திரு விருத்தத்தாலிசைக்கின்றார்.

சூரியகாந்தக்கல்லினிடத்தேசெய்ய
சுடர்தோன்றியிடச்சோதிதோன்றுமாபோ
லாரியனுமாசான்வந்தருளாற்றோன்ற
வடிஞானமான்மாவிற்றோன்றுந்தோன்றத்
தூரியனுஞ்சிவந்தோன்றுந்தானுந்தோன்றுந்
தொல்லுலகமெல்லாந்தன்னுள்ளேதோன்று
நேரியனுப்பரியனுமாயுயிர்க்குயிராயெங்கு
நின்றநிலையெல்லாமுநிகழ்ந்துதோன்றும். (உ௮)

மிக்கதொருபக்குவத்தின்மிகுசத்திநிபாத
மேவுதலுஞானம்விளைந்தோர்குருவினருளாற்
புக்கனுட்டித்தேநிட்டைபுரிந்துளோர்கள்
பூதலத்தேபுகழ்சீவன்முத்தராகித்

தக்கபிரியாப்பிரியமின்றியோட்டிற்
றமணியத்திற்சமபுத்திபண்ணிச்சங்கரனே
டொக்கவுறைந்திவரவனையவனிவரைவிடாதே
யுடந்தையாய்ச்சிவன்றேற்றமொன்றுமேகாண்பர்.

அறியாமையறிவகற்றியறிவினுள்ளே
யறிவுதனையருளினலறியாதேயறிந்து
குறியாதேகுறித்தந்தக்கரணங்களோடுங்
கூடாதேவாடாதேகுழைந்திருப்பையாகிற்
பிறியாதசிவன்றானேபிரிந்துதோன்றிப்
பிரபஞ்சபேதமெலாந்தானுய்த்தோன்றி
நெறியாலேயிவையெல்லாமல்லவாகி
நின்றென்றுந்தோன்றிடுவனிராதாரனுயே.

(இ-ள்). சூரியக்காந்தக் கல்லினிடத்தே; செய்ய சுடர் தோன்றியிட =சூரிய சன்னிதானமாக நெருப்பிருந் தெழுந்தது போல்; ஆரியனுமா சன் வந்து தோன்ற=பூச்சியனுகிய குருப்பருவங் கருதி விரும்பி வெளி யாக; அருளால்=அக்குருபண்ணிய செயற்கைத் தீக்ஷாக்குறிக் கன்மத் தாவிர்ப்பவித் தியற்கைத் தீக்ஷாக்குறியுற்ற சிவக்கிரியா சுத்திச் சிறப்பி ருப் பிச்சா சத்தி கிருத்தியக் குறிச் சங்கற்ப சிற்கன்மத்தால்;

ஆன்மாவிலடி ஞானந்தோன்றும்=உயிரின்கண்ணே யென்று படி த்துபசரிக்கப்படுங் கரணக்குறி ஞானக்கிரியாலக்ஷணன்மதன்ம சின்ன முன்னுள்ள சிற்சத்தியின தறிதல் பண்ணுதல் கிருத்தியாகிருதி சாக்ஷா த்காரஞ் சடிதிமல முத்தமாய் வியத்தமாம்;

தோன்ற=அப்படியாவிர்ப்பவிக்க; ஆரியனுஞ் சிவந்தோன்றும்= மலசத்தியால் முத்தமாகுமுன் சிற்சத்திக் கண்மறையப் பிரத்தியக்ஷ மன்றியிருந்த சிவன் பிறப்பொருளறிவி னுதித்த சாக்ஷத்காரத்திற் பிரத் தியக்ஷமாவன்;

தானுந்தோன்றும்=அப்படி முன்னிருந்த ஆன்மாவுந் தற்பொருள றிவினுதித்த சாக்ஷாத்காரத்திற் சிவனுக்கு ஒத்தறு முருவனுய்ப் பிரத்தி யக்ஷமாவன்; தொல்லுலகமெல்லாந் தன்னுள்ளே தோன்றும்=அனதி சித்த சட சித்துப் பிரபஞ்ச மெல்லா மொத்த வியாபகமாயு மொவ்வா வியாப்பியமாயும் பிரத்தியக்ஷமாம்;

நேரியனாய்ப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு நின்ற நிலையெல்லாமும் நிகழ்ந்து தோன்றும்=பிரத்தியக்ஷமாகிய சிவனுஞ் சிறப்பாயணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய்ப் பசுவர்க்கப்பிரேரகனாய் முத்தான்ம மித்திரனாயிருக்கு முறைமை முற்றுஞ்சாட்சாத்காரமாம்.(உஅ)

மிக்கதொரு பக்குவத்தில்=தீவிரதர பக்குவ மல காலத்தில்; மிகு சத்தி நிபாத மேவுதலும்=பாஷாண பதனபயம் பண்ணுதல்போலனுக்கிரக சத்தியினது சம்சார பயம் பண்ணுஞ் சங்கற்பம் பொருந்துதலும், சம்சார பயஞ் சிறிது ஒரு பிரகாரம் பரோக்ஷ சிவ புத்தியும் பிறக்கத் தீக்ஷித சிவ சுவ ரூபத்தைச் சிவ சாத்திரத்தாற் பரோக்ஷ ரூப தரிசனப் படித்தித் தியானிப்பித்துச் சமாதிப்பித்துப் பின் சிவனைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டுங் குருவைத் தேடி யோடித் திகைக்கச் சிவனவனைக் காட்டிக் கூட்டக்கூடிய; ஓர் குருவினருளால்=கடாக்ஷித்தவன் பண்ணுந் தீக்ஷா கன்மா ரூட சாக்ஷாத் தீக்ஷா லக்ஷண சிவசத்தி சங்கற்ப சிற்சன்மத்தால்;

(சிவாகமக் கேள்விக்கருகர்களாய்) புக்கனுட்டித்தே=கேட்டுச் சிந்தித்துப் பரோக்ஷ சிவ நிச்சியம் பண்ணிப் பின்ன பரோக்ஷம்போ லபிநயித்து நடிக்கும் தியானஞ் செய்தே; நிட்டை புரிந்துள்ளோர்கள்=தியானத்துறைப்பு ரூப சமாதி சாதித்தோர்கள்; பூதலத்தே புகழ் சீவன் முத்தராகி=சதேக சீவன் முத்தி சாக்ஷாத் காரவான்களாகுகைக்குக் கீர்த்திக்கும் யோக்கியர்களாய்; தக்க பிரியாப் பிரியமின்றி=விருப்பு வெறுப்பு மின்றி; ஓட்டிற்றமனியத்திற் சம புத்தி பண்ணி=ஓடுஞ் செம்பொன்னு மொப்ப நோக்கி; சங்கரனோடொக்க வுறைந்து=சிவ சத்தி வியாத்திக் கொப்பத் தங்கள் சிற்சத்தி விரிவு சிந்தித்து;

அவனிவனா யிவரவனை விடாதே யுடந்தையாய்=நிரந்தர நினைப்புற்று நிரந்தர நினைப்பு நீங்காதே; சிவன் வேறொன்றுமே காண்பர்=சமாதி முகிழ்க்குஞ் சாக்ஷாத் காரத்திற் சிவன் முதற் சித்த சித்து வஸ்து முற்றுங் கைத்தலத்து நெல்லிக்கனி கண்ணோக்கத்திற் போலுற்று விளங்குமாறனுஞ் சமாதியிலேசாக்கிர மாத்திர மாதலாற் சிவனிற்கு நிலைமாத்திரஞ் சிந்திப்பார்கள்;

பிரத்தியக்ஷமாய்ப் பார்ப்பார்க ளென்று பேசவேண்டாம்; சிவசித்தாந்திகட்குப் பாதஞ்சலர் முதலோர்க்குப் போற் சமாதி யோகமன்று; சாக்ஷாத்காரமாகு மங்கியோகத்திற்கு அங்கமாதலால், "ஸர்வார்த்த பாஸகம் ஞானம் சிவயோகந்து சாச்வதம்" என்றிருத்தலானுஞ் சாக்ஷாத்

காரமாகும் சிவயோகத்துக் கங்கம் சாக்ஷாத் கார யோகமே; தியானம் சமாதி யோக மென்பன வங்கமாகையா லுபசாரம்.

தியானம் ஞானத்துதிக்கு முறைமையும், சமாதி தியானத்துதிக்கு முறைமையும், சதேகசீவன் முத்தி சாட்சாத்காரஞ் சமாதியின் முகிழ்க்கு முறைமையும் சாற்றுகின்றது.

அறியாமை யறிவகற்றி யென்பன முதலியன ஸ்ரீகுருத் திருவாய் மலர்ந்துபதேசிக்கு மொரு வார்த்தை யென்றுலகுரைக்கும் வசிமாற்றீருருப் பீற்றிரு சுழியொரு மொழியிற் "கோவாமமகிம்" என்னும் வடமொழி வினுவில் உத்தரமொப்புச் செப்புதலாகுமயமத்தியாதி படர்க்கை முன்னிலை தன்மை முக்குறி மூவாக்கியம் மும்முப்பதம் மும்முப்பத மொட்டு மூவெழுத்து மும்முப்பதத்தில் மூவெழுத்திற் குறிக்கும் வாச்சிய லக்கிய விருமுப்பொருள்; அவ்விருமுப்பொருளில் இலக்கியப் பொருளாகும்ஆன்ம பரசிவமுக்குறி முப்பொருள்களின் முதற்பொருண் முறைமையிற் ருச்குஞ் சுழுத்தி துரியம் துரியாதீதம் முக்குறி மூவவத்தை சாக்கிரஞ் சொப்பனந் தாக்குஞ் சமனை மட்டு முட்டுஞ் சகித கும்பகோப சாந்திமேல் உன்மனை மூலாந் தோபரியுபாந்தங்களில் அப்படி யப்பொருள் தாக்கிப் பண்ணப்படுங் கேவல கும்பக சூனிய கும்பக சூனியாந்த கும்பக முக்குறி முக்கும்பகஞ் சாம்பவி கேசரி சாக்கிரஞ் சொப்பனந் தாக்கிய தாதலால்,

அப்படி யப்பொருள் தாச்குஞ் சின்முத்திரை மவுன முத்திரை மவுனந்தமுத்திரை முக்குறி மும்முத்திரை, அப்படியப்பொருள் தாக்குந் தியானஞ் சமாதி சாட்சாத்கார முக்குறி மூவறிவு முன்சொல்லிய மும்முப்பதங்களினு மும்முப்பத மொட்டு மூவெழுத்துக்களினும்,

நடுப்பத நடுவெழுத்துக்களுக்கு வாச்சியப்பொருள் அணுபட்ச ஸ்வரூப சிவயோகங்குறித்தால், பூதான்ம தத்துவான்ம அந்தரான்ம சீவான்ம மந்திரான்ம பஞ்சான்மா; சம்பு பட்ச சிவரூப சிவயோகங் குறித்தாற் குருலிங்க சங்கமாதி; இலச்கியப்பொருள் முறைமையினுன் மனையுற்ற சின்மாத்திரான்மா. அனதிக் கிராந்த விந்துக சின்மாத்திர பரசிவம்.

முதற்பத முதலெழுத்துக்களுக்கு வாச்சியப்பொருள் பிரமாதி பரசிவமூர்த்தி ஈசான மூர்த்தி பரியந்த அணுபட்ச சம்புபட்ச அபரசிவம்; நாதத்துள் ளெழுந்தொளிருஞ் சுத்த பூதாதி யுபாதியுற்ற பஞ்சான்மாவுஞ் சூக்கும பரசிவ ரூபியாயிருந்தாலு மொருபிரகார மீசானமூர்த்தி முதல் அணு பட்ச அபரசிவ ரூபியாதல்லாலப் பொருளாம்; இலச்கியப்

பொருள் அதிக்கிராந்த விந்துக பர சிவமாகு மணுபட்ச சம்புபட்ச இரு பரம்.

முடிவிற் புதமுடி வெழுத்துகளுக்கு வாச்சியப்பொருள் தியான சமாதியுபாதித்தியாச்சியத்தினுற் சுவரூபலக்ஷண சிவசோடிக்குட் குதிக்கும் தியான சமாதியுபாதியுற்ற அணுபட்ச சம்புபட்ச சின்மாத்திரான்ம பரங்கள். இலக்ஷியப்பொருள் சுத்த சிவமாகு மணுபட்ச சம்புபட்ச இரு சிவம்.

ஆன்மாத் தியானத்தானம், பரஞ் சமாதித்தானம், சிவம் சாட்சாத் காரத்தானம். பின்னொரு பகுப்புமிது போலிரு சிவத்தியானங் குறித்துச் செப்பப்படும்; அது செப்புவாம்:—

சிவ சத்தி யநந்தேசுர சத்தியாதித் றுவாரத்தினுலே பசு சாத்திரா லோகாதியா ரூடமாட சுத்த ராக அசுத்த கலை யசுத்த வித்தை யிவற்றின் மறைந்து விளக்கினதினுற் செயற்கைப் பசுகரண மென்றும் பசுப்பிர மாண மென்றும் படிக்கப்படுந் தற்பொருளறிவு பிறப்பொருளறிவுச் சிற்சத்திகளைப் பொதுச் சிறப்பாய் மணந்ததினுலு மியற்கையினுலு மசுத்தப்பிராகிருத மனோகங்கார புத்திகள் பசுகரணங்களென்றும் பசுப் பிரமாணங்களென்றும் படிக்கப்படும்;

சிவசத்தி சாட்சாத் சிவாகமா ரூடமாயுஞ் சிவமந்திரா ரூடமாயும் நாதத்து ளெழுந்தொளிருஞ் சுத்த மனோகங்கார புத்தி சர்ப்பமாயிருக்குஞ் சுத்த ராகஞ் சுத்தகலை சுத்தவித்தை யிவற்றின் மறைந்து விளக்கினதினுலு மியற்கையினுலுஞ் சிவகரணமென்றும் பதிப்பிரமாண மென்றும் படிக்கப்படும்;

தற்பொருளறிவு பிறப்பொருளறிவுச் சிற்சத்திகளைப் பொதுச்சிறப்பாய் மணந்ததினுற் செயற்கையினுற் சிவகரணங்களென்றும் பதிப்பிரமாணங்களென்று மந்தமுந்தச்சொன்ன மனோகங்கார புத்திகள் படிக்கப்படும்;

முறையில் அதிற் சிவாகம வழிச்செல்லு மனோகங் கார புத்தியிற் படிப்பவனது பசுத்துவ சிவதத்துவ விவேகத் திறிபதார்த்த விவேக பரோக்ஷ தீக்ஷாயோகாங்க விகற்ப சங்கற்ப சர்வ போத ஞான விசேஷங்களைப் பண்ணும்; சிவ மந்திர வழிச் செல்லு மனோகங்கார புத்திகள் காலாக்கினியாதி யனுசிருதாந்த புவனத் துதிக்கும் அபர சித்தி பராபரசித்தி பரசித்தி முச்சித்திகள் விருப்பம் முறைமையிற் சித்திக்கும் பொருட்டும் முடிவின் முத்தி சிக்கும்பொருட்டும் பிருதிவி முதற் குணமீறுகும் அசுத்த கோடி பிரகிருதி முதற் கால மீறுகுஞ் சுத்தா சுத்த கோடி சுத்த வித்தை முதற் சிவ மீறுகுஞ் சுத்தகோடி முக் கோடிகளிற்

சாட்சாத் தாங்களாயு மணிப் பிரபை போலுபரி விரியும் வியாபாரத்து வாரத்தினாலும் பூதான்மாதி மந்திரான்மாந்த பஞ்சான்ம சாலம்ப சிவ யோக பஞ்ச மார்க்கங்களி லொரு வழியிற் பிரவேசித்து விகற்ப சங்கற்ப சர்வ போத வியாபாரங்களையும் பல விதமாய்ப் பண்ணும் அந்த விகற்ப சங்கற்ப சர்வ போதங்களால்;

(அறியாமையறிவகற்றி - அறிவகற்றி அறியாமை யகற்றி யெனமாறுக) அறிவகற்றி யென்பது தத்துவசுத்தித்துவாரத்தினாலே ஆன்ம சுத்தி பண்ணப்பட்டதாகிலும் தத்துவசுத்திபிரதானமாகையால் தத்துவசுத்தி பண்ணியென்றே சாற்றப்படும்; அறியாமை அகற்றியென்பது மலமல-வாசனா சுத்தித்துவாரத்தினாலே யான்ம சுத்தி பண்ணப்பட்டதினாலும் ஆன்மா பசுத்துவ மென்னும் மலோபாதியாற் பசுத்துவ மென்று படிக்கப்படுமாதலால் மலம் பசுதத்துவத்தோடு பசுதத்துவ மென்று படிக்கப்படும்; மலதத்துவ மென்று வேறு தத்துவமாய் மதிக்கப்பட்ட தில்லையாதலாலும் ஆன்ம சுத்தி பிரதான மாகையா லான்ம சுத்தி பண்ணி யென்றே யறையப்படும். இது தொகைப் பொருள்;

அறியாமை யசுத்த தத்துவமென்றும் அறிவு சுத்த தத்துமென்றுஞ் சொல்வாருமுளர்; வகைப்பொருள் விரிவுப்பொருள் ஒருமிக்க வகுத்துரைப்பாம்:—

அறிவகற்றி = நிருவிகற்பம் புணர்ந்தத்திலுதிக்குஞ் சவிகற்பமாய்த் தேவர் நரர் முதற் பசுவர்கக மாயா சகல வர்க்கத்திற் காணப்படுஞ் சிற்றறிதல் சிற்றுச் செயற்றொழில்களையும் விபரீத வேதன விக்கிரக போகங்களையும்பண்ணும்படி சிறிது மலஞ்சிந்தும் அசுத்தகலாதிகஞ்சுக கலாவச்சியத்துவ தௌரிந்திரியக்குறி யசுத்தசகலத்துவ முற்றுக்கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சிற்கர்த்திருத்துவ லட்சண சித்துவ சின்ன அசுத்த போகக் கிரியா சர்த்திருத்துவமாகிய வசுத்த போத் திருத்துவ மாத்திர பொதுக் குறித் தூலபுருஷத்துவத்தினது புத்திரப் போலிப் போக்கிய போத்திருத்துவ போகோப போத்திருத்துவச் சிறப்புக்குறித்தூல சீவத்துவமேகம்;

நிர்விகற்பம் புணர்ந்ததிலுதிக்குஞ் சவிகற்மாய் மந்திரேசுவர மாயா சுத்த சகலபதி வர்க்கத்திலும் மந்திர மந்திரமகேசுவர மகாமாயா சுத்தசகல பதிவர்க்கத்திலுங் காணப்படுஞ் சாதிசயப் பேரறிதல் பெருஞ் செயற் றொழில்களையு மற்ப விபரீத வேதன விக்கிரக போகங்களையும் பண்ணும்படி மரியாதியில் மலவாசனை துடைக்குங் கலாதி கஞ்சுக முற்றுக் கலாவசியத்துவ வைதுரியக்குறிச் சுத்த சகலத்துவ முற்றுச் சாதிசய சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த் திருத்துவலக்ஷண தூல சிவத்துவ

சின்னசுத்தபோகக் கிரியா கர்த்திருத்துவமாகிய சுத்த போத்திருத்துவ மாத்திரப் பொதுக் குறிச்சூக்கும புருஷத்துவத்தினது புத்திரப்போலிபோக்கிய போத் திருத்துவ போகோப போத்திருத்துவச் சிறப்புக் குறிச் சூக்கும சீவத்துவமேகம்;

இம்மந்திர மகேசுவராதியபரபதிவர்க்கத்துக் கூறிய குறியுட் கூடிய சுத்த சகலத்துவ முதற் பொதுக்குறிச் சிறிது சின்னமுஞ் சூக்கும சிவத்துவ விளக்கு விக்கிரக விசிஷ்ட சகலத்துவ முதற் சிறப்புக்குறிச் சிறிது சின்னமுமுடைய வணுசதாசிவ வணுவங்கபதி வர்க்கத்தின்முன் சொல்லிய பொதுக்குறிப் பரபுருடத்துவத்தினது புத்திரப் போலி போக்கிய போத்திருத்துவ போகோப போத்திருத்துவச் சிறப்புக் குறிப் பரசீவத்துவமேகம்;

இம் முப்புருடத்துவப் புத்திரப் போலி முச்சீவத்துவமு முபாதிச் சித்துவமும் தூல சிவத்துவமுஞ் சூக்குமசிவத்துவமும் நிரதிசயபர சிவத்துவ சொரூப லக்ஷண சிவசம சுத்தசிவனுயிருக்கின்ற நமச்குச் சொரூபலக்ஷணமன்று; தடஸ்தலக்ஷணமேயென்று மகாவாக்கிய நடு முதலிரு பதங்களுக்கு வாச்சியார்த்த தடத்த லக்ஷணுன்மத்துவ தடஸ்த லக்ஷண சிவத்துவ சுத்திக்குறி முப்புருஷத்துவப் புத்திரப் போலி முச்சீவத்துவசுத்தி தத்துவசுத்தி பண்ணத்தானே வேறியத்தனமின்றிப் பண்ணப்படுமாதலால் முச்சீவத்துவ தடஸ்த வறிவுவிளக்காதலா லறிவென்று பசரிக்கப்படுந் தத்துவங்களாதலா லறிவகற்றியென்பதற் கர்த்த மிதுவாகத் தத்துவசுத்திபண்ணி இதிம் முறைபண்ண வென்ப திசைக்கின்றும்:—

சாதக சாமர்த்தியத்துக்குத் தக்க சிவஞானத்துணைச் சித்த சிவ கன்மயோகி பண்ணுந் தத்துவ தடஸ்த ஆன்ம தடஸ்த சிவ முப்பதார்த்தங் களினதி லக்ஷண வபரோக்ஷ நிரீக்ஷணக் குறித் திரிரூபம்;

ஒன்றுக்கொன்று தத்துவ முதற்றிரி பதார்த்த லக்ஷண விலக்ஷண பரோக்ஷ பரீக்ஷா ரூப நிரீக்ஷணக் குறித் திரிதெரிசனம்;

மனோ விகற்ப சங்கற்ப பிரவிர்த்தமாய்ச் சிவோகஞ் சிவோயஞ் சிவ சிவ வென்பது முதற் பலவிதவகங்கார புத்தி விர்த்திப் பிரவாக சின்னதியானக்குறி தியானசித்தி சின்னசமாதிக்குறி திரியோகஞ்சமாதி சித்தி சின்ன சாக்ஷாத்காரக் குறித் திரிபோகம்;

மூலமந்திர முச்சரித்துள்ளிருக்குஞ் சுரிகாஸ்திர மதித்துத் தொடுத் திருதயாந்தந் தொட்டுத் துவாதசாந்தங் குறித்துச் சமனந்த மட்டு முட்ட முறைமையிற் போய்ப்போய்த் தான் தேசகால சத்திக்குத்தக்க

திருதயத்திருந்துதான் சூனியப் பிராசாத முச்சரித் துள்ளிருக்குஞ் சுரிகாத்திர மதித்துத்தொடுத்து தத்துவங்களையு மான்மாவிலுஞ் சிவனிடத்தினுந் தத்துவ தடஸ்தத்தினுல் வைத்த தடஸ்தத் தன்மைகளையு மறுத்துக் காரணத் தடைவிலொடுக்கி யகண்டிதங்களாகப் பண்ணப்பட்டன போலடக்கித் தனது தத்துவ வசியத்துவத் தியாச்சியம் பண்ணித் தத்துவங்கள் தனக்கு வசியங்களாகத் தான் வசியாயிருத்தலாகுந் திரிசுத்தி இவைகளைத்தான் பண்ணிச் சிவஞானத் துணைச் சாத்திய சிவகன்ம யோகிபண்ணுஞ் சொல்லிய குறிப்பரோக்ஷ ரூபந் தரிசனம் யோகங் கூடிய மரியாதி மனோவாயு ஜய வசமாத்திரத்தினுலே யொரு பிரகாரந் தன் வசமாக்குதலாகும் திரிசுத்தி யிவைகளைத்தான் பண்ணி யோக சாமர்த்திய மில்லாதிருந்தால்,

நேதி நேதி லக்ஷண சிவ கன்ம மாத்திரத்துணைச் சாத்திய சிவஞான யோகி பண்ணுஞ் சொல்லிய குறிப் பரோக்ஷ ரூபந் தரிசனமநாத் மந்பாத் மாபிமானத் தியாக மாகுந் திரிசுத்தி யிவைகளைத் தான் பண்ணி;

அதிமல பரிபக்குவத்தாலாவிர்ப் பவிக்கு மதி மோக்ஷ வாஞ்சையினதாவே சத்தாற்முன் அது வன்றித் தேசகால சத்தி சங்கடத்திற்முன் வித்தார சுத்தி விருப்ப மில்லையேல் மமகார வகங்கார மாத்திரத்தியாச்சிய மாத்திரமாகுஞ் சுத்தி தான் பண்ணி;

அல்ல திலகுவாய்த் தத்துவ தாத்துவிகப் பிரபஞ்ச மனைத்து நிராகார நிராலம்ப மாயா மாகா மாயாத் தோற்ற மாதலாலப்படி யகண்டிதமாய்க் காரணு கார நிராதார நிராலம்ப நிஷ்பிரபஞ்ச சிந்தனை மாத்திரமாகுஞ் சுத்தி தான் பண்ணி;

இப்படிச் சுத்தி பண்ணு மிடத்துச் சுத்தி மார்க்க பேத முண்டது சொல்லுவாம்:

முத்தி மாத்திரம் விரும்பின் நிராலம்ப சிவ யோகம் பண்ணும் பொருட்டுக் குரு போதிப்பச் சிவாகமஞ்சிவாகமார்த்த மாத்திரஞ் செப்புங் குரு வாக்கிய மாத்திரந்தான் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து இருதய முதற் றுவாதசாந்த வியாபியாயிருக்கும் பிரமந்திர முடிவாகும் பஞ்சாதாரங்களிற் தங்கித் தங்கிக் கமல முடிச்சுக் கதவுதிறந்து திறந்து தத்துவ முதலிய முப்பதார்த்த ரூப தரிசன முதலிய பண்ணிப்பண்ணிப் பழகிப் பழகிப் பின்முனங்களிற் றங்காது சடுதி சற்றே தாக்கித் தாக்கி முன் சாத்திய முறைமையின் முச்சிவ யோகிகள் பண்ணுமுப்பகுப்புத் தத்துவ முதலிய முப்பதார்த்த முச்சுத்தி பண்ணிப் பண்ணுமிடத்து,

பிரமாதி பரசிவ மூர்த் தீசான மூர்த்தி பரியந்த சிவ மூர்த்தி பதங்களில் விரும்பிய சிவ மூர்த்தி பத முத்தி யெனும் பர முத்திக் குறிச் சித்திகுறித்து முச்சிவயோகிகள் பண்ணு முறைமையிற் சுவாவதி சுத்தியோடு விரும்பிய தத்துவ தத்துவாருகான்மசிவமூர்த்திசிவ சிவமூர்த்தி திரிரூப தரிசன யோக போகங்களைப் பண்ணுமிடத்தும் சித்திக்குப்பின் முத்தி விரும்பின் முத்திவழி பழகச்சுத்தியோடு பண்டுமிடத்தும் பவுதிக தேகாதிக்குறிப் பூதாதி மந்திரான்மாந்த வைம்பொருள்கட்குந் தத்துவங்க ளென்று பெயர் சாற்றப்படுமாதலாற் பூதான்ம தத்துவான்ம வந்தரான்ம சீவான்ம மந்திரான்ம சாலம்ப சிவ யோகமார்க்கங்களிற் பழகியவொரு வழிவைத்துப் பின் வழி யடக்கிச் சுத்த பூதாதி தொட்டுச் சமனுந்த மட்டு முட்டும் பூதான்ம சித்துபாதித் தூல தேகக் குறிப் பூதங்களிற்றுன் றத்துவான்ம சித்துபாதிச் சூக்கும தேகக்குறி தத்துவங்களிற்றுன் அந்தரான்ம சித்துபாதி பரதேசக்குறி யந்தரத்திற்றுன் சீவான்ம சித்துபாதி யகங்கார மாத்திரக் குறிச் சீவனிற்றுன் மந்திரான்ம சித்துபாதிக் குறிப் பிராசாத முதலிய மந்திரத்திற்றுன் ரூப தரிசன யோகபோக சுத்திகள் பண்ணப்படும்.

(அறிவகற்றி யென்பதற் கர்த்த மிவ்வளவமைந்தது). அறியாமையகற்றி=மாயா சகல பசுவர்க்கத்திற் காணப்படுஞ் சரீரம் நான், இது சுகம், இது துக்கம், இது மோகம், நான் சுகி, நான் துக்கி, நான் மோகி யென்பன முதற் பிரஞ்ஞா மோக வஞ்ஞான மூல பசுத்துவ மலத்தினதோ நியாமிகா சத்தி வைத்தபோத்திருத்துவக் குறிப் புருஷத்துவ ரூபமாய்ப் போதலாற் றத்துவ சுத்தி யான்மசுத்தியாமாதலால் மலத்தினதாவாரக சத்தி வைத்த நித்திய கேவல நித்திரா முத்திரித கிஞ்சிஞ்ஞானக் கிரியா சூனிய வறியாமைக் குறி மூர்ச்சா மோக மூல சித்துவ சூனியக்குறி யறியாமைப் பேரசித்துவ தூலதர பசுத்துவத்தைச் சொல்லிய பிருதிவி முதற் கலாந்த தத்துவ சுத்தி நடுநடுவே தத்துவ சுத்திப்படி முச்சிவ யோகிகள் பண்ணு முறைமையிற் சிறிது மலசுத்தித் துவாரத்தினுலே சுத்தி பண்ணி;

பிரளயாகல விஞ்ஞானகல மூட பசுவர்க்கத்திற் காணப்படுந் தூல சாதிசய சர்வஞ்ஞானக் கிரியா சூனியக் குறி மூர்ச்சாமோக மூல தூல சிவத்துவ சூனியக்குறி யறியாமைப் பெயரசிவத்துவ தூல பசுத்துவத்தை மாயா தத்துவ சுத்தியினு மாயா தத்துவ சுத்தி சுத்த வித்தியா தத்துவ சுத்திக்கு நடுவினுந் தத்துவ சுத்திப்படி முச்சிவ யோகிகள் பண்ணு முறைமையின் முற்று மல சுத்தித் துவாரத்தினுலே சுத்தி பண்ணி;

பின் மந்திரே சுவர மந்திர மந்திர மகேசுவர மாயா சகல பதி வர்க்கத்திற் காணப்படுஞ் சூக்கும சாதிசய சர்வஞ்ஞானக் கிரியா சூன் யக் குறியாகிச் சுத்த போகோப போகப் பிரஞ்ஞா மோகத்திலழுந்திய மூர்ச்சா மோக மூல சூக்கும சிவத்துவ சூனியக் குறியறியாமைப் பேர சிவத்துவ சூக்கும பசுத்துவத்தைச் சுத்த வித்தியா தத்துவ வீசுர தத்துவ சுத்திக்குட் டத்துவ சுத்திப்படி முச்சிவ யோகிகள் பண் ணு முறைமையிற் றூலாதிகார மலமூல தூல மல வாசனு சுத்தித் துவாரத்தினாலே சுத்தி பண்ணி;

பின் னணுசதாசிவ வணுப் பிரமாங்ச மகாமாயா சகல பதிவர்க் கத்திற் காணப்படும் பர நிரதிசய சர்வ ஞானக் கிரியாசூனியக் குறிச் சுத்த போகோப போகப் பிரஞ்ஞா மோகத் தமிழ்ந்திய மூர்ச்சாமோக மூல பரசிவத்துவ சூனியக்குறி யறியாமைப் பேர சிவத்துவ பரபசுத் துவத்தைச் சதாசிவதத்துவ முதல் முத்தத்துவ சுத்திக்குட்டத்துவ சுத் திப்படி சிகாரூப திரோதான சுத்தி சுத்தியோடு முச்சிவ யோகிகள் பண்ணு முறைமையிற் சூக்குமாதிகார மல மூல சூக்கும மலவாசனு சுத்தித் துவாரத்தினாலே சுத்திபண்ணி;

அறியாமை யகற்றி யென்பதற்கு இவ்வளவு பொருளமைந்தது.

அறிவினுள்ளே = தூலசூக்கும பரமுச்சின் மாத்தி ரான்ம தத்துவ மும்மூல முளைத்த தூல சூக்கும பர முப்பர வித்தியாதத்துவ மும்மரம் பழுத்த தூல சூக்கும பர முச்சிவ சிவதத்துவ முப்பழங்கள் விரும்பப் படுமாதலாற் சமனைக்குக் கீழிரு பகுப்பான்ம பரசிவ தத்துவத் தியாச் சியத்தினாலே சமனு சுத்திக்குமே லுன்மனாந்தாவதி பரசிவத்துவாபி வியத்தி சித்திக்குமளவும் தாக்கிப் பரமல வாசனை யாபாசிக்கு மாதலா லுன்மனு மூலாந்தம் ஸ்வச்சந்த சர்வஞ்ஞானோத்தர சுருதிப்படி சிவசத் தித் துணையாய்ச் சென்று திரோதான சத்தி நிக்ரக கிர்த்திய பரா சத்தி யனுக்கிரக கிர்த்திய மத்தியஸ்த சிவ சின்மாத்தி ரான்மாவினுங் கூடச் செல்லுதலாற் செல்லுஞ் சிவசின்மாத்திரான் மாவினும்;

அறிவுதனை = முறைமையிலணு பரசிவங்கள் சிவபர சிவங்களெனு நாலுசித்துகளையும்; அருளினால் = சமனைமட்டு முட்டும் பிராகிருத மனோ கங்கார புத்திகளில் மறைந்து சாலம்பித் தன்மனையுற்றுபரி நிராலம் பிக்குஞ் சிவசத்திவிளக்கு விளக்கிய சிற்சாத்த மனோகங்கார புத்தி விகற்ப சங்கற்ப சிற்றுவிகற்ப சவிகற்ப கர்வபோத நிருவிகற்ப ஞானங் களால்;

அறியாதே யறிந்து=திருச்சியமாய் நோக்காதே தடத்தலக்ஷண நிர்முக்த ஸ்வ சிவரூப லக்ஷண சர்வதிருக் கர்த்திரு ரூப லக்ஷண பரோக்ஷ நிரீட்சண சிவக்குறிச் சிவரூபம் தடத்த லட்சண விலட்சண ஸ்வரூப லட்சண பரோட்ச நிரீட்சணரூபசாஸ்திரீயபரீட்சா விலட்சண சூக்கும பரீட்சாக் குறிச்சிவ தரிசனமெனுந் தச காரியத்திரு காரியம் படுத்திப் பார்த்து,

குறியாதேகுறித்து=முன்சொல்லிய சாத்தமனச்சங்கற்ப முன்னுகச் சாத்தாகங்கார புத்திப் பிரவாகச் சிறப்புக் கர்வ போதஞானங்களா லியற்கையினு லனு பட்ச தற்பொருட் சிவக்குறிப்பினுற்முன்;

சம்பு பட்சப்பிறப் பொருட் சிவசாதி விசிஷ்ட்ட தற்பொருட் சிவக்குறிப்பினுற்முன்,

செயற்கையினு லாரோபித சம்புபட்ச பிறப்பொருட் சிவக்குறிப் பினுற்முன்,

திருச்சியமன்றிச் சர்வதிர்க் கர்த்திரு ரூபமாயபரோட்சம் போல பிரயித்துச் சிவோக மென்றுதான் இயற்கையினுற் சம்பு பட்ச வேற்றுமைச் சிவக்குறிப்பினு லப்படிச் சிவோய மென்று தான் சிவசிவ வென்று தானென்றின் மற்றது மொக்க ஸ்புரிக்க அத்தியஸ்மி யருக மருவப்பொருத்திப் பண்ணும் சிவத்தியானக்குறித் தசகாரியத் தொருசாரிய சிவயோகம்பண்ணி,

அந்தக்கரணங்களோடுங்கூடாதே=இடுக்குக் கொடுத்து விடுத்துத் தொடுத்துச் சிவத்திற் சிறப்படுத்துஞ் சிவத்தியானத்திற் சிறிதிடங் கண்டு தாக்கிச் சமனேயிற் சுருங்கிச் சூனியப் போலியாய்ப் போனமனசைத் திரும்ப வெழுப்பித் திருப்பி விஷயத்தில் வீழ்த்துஞ் சகலத்தன்மை தொட்டுவிட்டுத் தட்டாதே; வாடாதே=திரும்பத் திருப்பி யோக நித்திரா முத்திரித மனத்தைப் பிராகிருத நித்திரையில் முழுகுவிக்குங் கேவலத்தன்மை தாக்காதே;

குழைந்திருப்பையாகில்=தியானத்தினதுற்சர்ஷாவஸ்தாரூபமாய் ஞாதிரு ஞாணஞேயச் சிறப்புத் தியாதிரு தியான தேயசூனியப் போலியாய் ஞேயத்தழுந்தி யத்தேய மாத்திரத்தி லங்கு ஞானச் சிறப்புத் தியான விசேஷ சமாதி பண்ணி யிருப்பையாகில்;

பிறியாத சிவன்முனே=கூடுதல் பிரிதல் குறிக்கிற குற்றமுண்டாதலா லனுதி தொட்டுப் பிரேரகப் பிரேரியத் தன்மைச் சம்பந்தியா யிருந்த வீசுரன் முனே;

பிரிந்து தோன்றி=அந்தச் சம்பந்தம் விட்டுச் சாதிருச்சிய மாத்திர மித்திர சம்பந்தியாய்ச் சாட்சாத் கரிக்கப்பட்டு; (அதுவன்றி) பிர

பஞ்ச பேத மெல்லாந் தானாய்த் தோன்றி=சித்த சித்துச் சிதசித்துச் சித்திரப் பொருள்கட் கெல்லாம் வியாபகமாய்த் தாரகமாய்ச் சாட்சாத் கரிக்கப்பட்டு; நெறியாலே=திருக்குத் திருசியக் குறிக் குறிப்பினாலே; அவையெல்லா மல்லவாகி=அந்தத் திருக்குத் திருசியப் பொருள்களி னொன்றன்றி; நின்றென்றுந்தோன்றிடுவனிராதாரனாயே=தனக்கொரு தாரக மன்றி நிராதாரனா யிருந்தும் சமாதி சாமர்த்தியத்தினா லுதிக்குஞ் சாட்சாத் காரத்தினால் சாட்சாத்கரிக்கப் படுவன்.

பரார்த்த ஸ்வார்த்தார்த்தப் பிரத்தியர்த்தச் சர்வார்த்த சீவன் முத்தி சிவ சாட்சாத் காரஞ் சமாதி சாமர்த்தியத்தினாற் சித்திக்கு மென்று தாற்பரியம்.

இப்படி யசத்தியோ நிருவாண தீட்சாவானாய்ப் பின் சிவாகமக் கேள்வி முதலிய வற்றான் முறைமையில் முப்பதார்த்த விவேக பசுத்துவ சிவத்துவ விவேக சிவ ஞான வானாய்ப் பின் சிவத்தியான வானாய்ப் பின் சிவ சமாதி மானாய்ப் பின் சீவன் முத்தி சிவ சாட்சாத்கார வானாய்ச் சாமர்த்திய வானல்லாதிருந்தால், மரியாதி மதித்துக் கடாக்ஷிக்குஞ் சிவ தீட்சா ரூப சிவ சத்தி பதிந்த ஞானாதி மூன்றி னொன்றிரண்டு மூன்று முறைமையினுடையனாய்த் தானிருந்தவன் சரீராந்தத்திற் சத்தியோ நிருவாண தீட்சாவான் போலப் பர முத்தி சிவ சாட்சாத்கார சிவ சாதிருச்சிய சிவ சாயுச்சிய வானா வனென்று சாற்றுகின்றார்.

புண்ணியமேனோக்குவிக்கும்பாவங்கீழ்நூக்கும்
புண்ணியனைப்பூசித்தபுண்ணியத்தினாலே
நண்ணியஞானத்தினாலிரண்டினையுமறுத்து
ஞாலமொடுகீழ்மேலுநண்ணானாகி
யெண்ணுமிகலோகத்தேமுத்திபெறுமிவன்றா
னெங்கெழுகோஞாயிறெமக்கென்றுகுறைவின்றிக்
கண்ணுதறனிறைவதனிற்கலந்துகாயங்
கழிந்தக்காலெங்குமாய்க்கருதரன்போனிற்பன்.

(இ-ள்). புண்ணிய மேனோக்குவிக்கும் பாவங் கீழ் நூக்கும் புண்ணியனை; பூசித்த புண்ணியத்தினாலே=கிரியாபூசையினாலேதான் தீக்ஷா மாத்திரத்தினாலேதான்; நண்ணிய ஞானத்தினால்=முன்சொல்லிய முறைமையிலடைந்த ஞானத்தியான சமாதி சீவன் முத்தி சாக்ஷாத்காரக்

கூட்டப்பிரிவு ஞானபூசையினல்; இரண்டினையுமறுத்து = புண்ணிய பாவங்களை மலத்தோடு பிரதி தினம் மரியாதியிற்போக்கி; எங்கொழு கோ ஞாயிறெமக்கென்று எண்ணும்; இகலோகத்தே முத்திபெறுமிவன் ருன் = மதிக்கப்படுஞ் சீவன்முத்தனுனவன்; காயங்கழிந்தக்கால்; குறை வின்றிக் கண்ணுதறன் னிறைவதனிற்கலந்து = சிவசத்தி பரிபூரணத்தி லொத்து வியாபித்து; ஞாலமொடுகீழ் மேலும் நண்ணுகி; எங்குமாய்க் கருதரன்போனிற்பன் = எங்கும் வியாபியாய்த் தான்றியானித்த சிவ னுக்கொத் தெங்கும் வியாபித்துச் சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திரு ரூப சிவனுயிருப்பன்; அப்படித் திருமந்திரத்துஞ் சொல்லப்பட்டது:—

முப்பதுமாறும்படிமுத்தியேணியா
யொப்பிலாப்பேரண்டத்துள்ளொளிபுக்குச்
செப்பவரியசிவங்கண்டுநின்றவ
ரப்பரிசர்கியமர்ந்துநின்ருரே.

இப்படிப் பிறப்பொருட் சிவசாதி விசிஷ்டாத்துவைத விசிஷ்ட தற் சிவ வியத்திச் சுத்தாத்துவைதஞ் சொல்லியிருக்கவும் பிரமித்துச் சிறிதி டத்து மதாந்தரப் போலிவசனந் தூக்கி யெடுத்துக்கொண்டு பிறப்பொ ருட் சிவ வியத்திச் சுத்தாத்துவைதம் பிறப்பொருட் சிவ வியத்தி விசி ஷ்டாத்துவைதந்தான் விளம்புவோர் வேதாந்தி ராமானுஜவேஷங்கொ ண்டு வேற்றுச் சமயிகளாவார்கள்;

சிவ சாயுச்சியச் சொற்செப்புவது நிருப சரித வைச்கியமன்று ஏகான்மப் பிரசங்கம் வருமாதலால்; சிவ சம்யோகமுமன்று விகாரப்பி ரசங்கம் வருமாதலால்; சிவ சமவாயமுமன்று ஏகான்மப்பிரசங்கத்திற் கிடங்கொடுக்குமாதலால்; சிவ தாதான்மியமுமன்று சமவாயத்திற்குச் சொல்லிய தூஷணம் வருமாதலால் (சிவத்துவ ரூபம்போ லிருப்பது சிவ தாதான்மிய மென்னிற் சித்த சாதனமாம்); சிவ லயமுமன்று துல் லியப்பொருள் கொள்ளாதிருந்தால் விஞசப்பிரசங்கம் வருமாதலால்; சிவா னனனியமுமன்று துல்லியப்பொருள் கொள்ளா திருந்தால் வேதாந்த மதாந்தரமாமாதலால்; சிவ சாங்கரியமு மன்று பரிணத வேதாந்த பாஞ்சராத்திரி மதாந்தரமாமாதலால்; சிவ ஸ்வஸ்வாமி த்துவமுமன்று பரமுத்தி பங்கம் வருமாதலால்; சிவப் பிரேரக பிரே ரித்தியத்துவமுமன்று ஸ்வஸ்வாமித்துவத்துக்குச் சொன்ன தோஷம் வருமாதலால்; சிவ காரண காரியத்துவமுமன்று காரண காரியத்துவம் பிரேரகபிரேரியத்துவமென்றுபொருளாதலால், ஸ்வஸ்வாமித்துவத்துக் குச்சொல்லிய தோஷந்தானே வருமாதலால்; சிவமேலிடக்கீழ்ப்படுதலு

மன்று விநாசதுல்லியமா மாதலால்; அருக்கன்கண்களுக்குப் போற் சிவ வியங்கியத்துவமு மன்று பிரதிபந்தப் பிரசங்கம் வருமாதலால்; சிவ வியாபகவியாப்பியத்துவமுமன்று ஜடத்துவா நித்தியத்துவப் பிரசங்கம் வருமாதலால்; சிவப் பிரதிவிம்பமுமன்று மேற்சொல்லிய தூஷணம் வருமாதலால்; சிவகுண சங்கிராந்தியுமன்று திருஷ்டாந்தமில்லை யாதலால்; சிவா வேசமுமன்று சுவாதந்திரியசூனியம் வருமாதலால்; சிவகுண சமுற்பத்தியுமன்று அநித்தியத்துவப் பிரசங்கம் வருமாதலால்; சிவாநுக்கிராகி யாநுக்கிராககத்துவமுமன்று அது வியங்கிய வியஞ்சகத்துவமாதலா லிது பிரதிபந்தப்பிரசங்கம் வருமென்று முன்றள்ளப்பட்டபடியால்; சிவ போக்கிய போத்திருத்துவமுமன்று ஜடப்பிரசங்கம் வருமாதலால; சிவ ஞாப்பிய ஞாபகத்வமு மன்று அப்படி திருச்சியமாகில் ஜடத்துவப்பிரசங்கம் வருமாதலால்; ஸ்வஸம் வித்புரஞாநு பாவியாநுபவி திருத்துவமுமன்று ஏகான்மப் பிரசங்கம் வருமாதலால்; பரஸம்வித்புரஞோகியோகி திருத்துவமு மன்று சர்வபதார்த்த சாயுச்சியப் பிரசங்கம் வருமாதலால்; சிவ சாநித்தியமு மன்று ஒன்றுக்கொன்று சாக்ஷாத்காரமே சாநித்தியமாதலால்; அப்போது சிவ சாக்ஷாத்காரந்தானே யாகட்டும்; "ஸர்வார்த்தபாசகம் ஞாநம்சிவ யோகந்து சாச்வதம்" என்னும் வசனத்தினு லதுவு மொருதிக்கினுலாகும்;

ஆனுல் முடிந்த பக்ஷமேது சிவ சாதியென்று செப்பப்படுஞ் சிவ சாதிருச்சியமே சிவ சாயுச்சியம்; ஆதிமுத்தன் அனுதிமுத்தன் என்னுஞ் சிறிது வைசாதிருச்சிய மிருத்தலான் முற்றுஞ் சிவ சாதிருச்சியஞ் சிவ சாயுச்சியமென்று செப்பப்படாது! அப்படிச் சொல்லப்படாது, ஆதிமுத்தனுதி முத்தனெனும் சிறிது வைசாதிருச்சிய வார்த்தைமலோபாதி தொட்டுவந்த வெகிரங்கவார்த்தை யென்றும், முத்தனுக்கு அவர்சநீயசஞ்சித்த கிர்த்தியம் சிவனுக்குக் கிருபாசம்சித்தகிர்த்தியமென்னுஞ் சிறிது வேற்றுமை வார்த்தையும் வேறு கரணியமில்லாமையா லென்றும், முற்றுஞ்சிவ சாதிர்ச்சியமென்பதே யந்தரங்க வார்த்தையென்று முடிதலான் முற்றுஞ் சிவசாதிருச்சியமே சிவ சாயுச்சிய மென்று சித்தாந்தஞ் சித்தித்தது.

ஆகையா லெல்லாம் நல்லதுதானே, சிவ முற்றுவமை; சிவைக்கியமென்று சிலர் செப்புவதேது? சத்தியம். அது நிருபசரிதவைக்கியமன்று பசரித வைக்கிய மப்படிச் சுருதி சொல்லியதென்று காந்தபுராணங் கழறுதலால்; சிவா னன்னியத்துவமே சிவ சாயுச்சியமென்று சில சிவ சித்தாந்திகள் செப்பியதேது? அது பரீக்ஷை பண்ணுறுபடித்தது, சிவ

னோடு அனன்னியத்துவமென்னுமிடத்து அன்னென்பது அன்னியப்பொருள் விருத்தப்பொருள் அபாவப்பொருளாக முப்பொருட் சொல்லாதலால்; முப்பொருளுள் சிவனுக் கன்னியமாய் முத்தான்மாவில்லை யாதலாற் சிவா னன்னியனென்றபாவப்பொருட் டொகை விரித் தருத்தஞ் சொல்லில் விவர்த்த வேதாந்தமாம்.

சிவனுக் கன்னிய மல மாயா கன்மங்கட்கு விருத்தனுதலால் சிவானனனியனென்று விருத்தப் பொருட்டொகை விரித்தர்த்தஞ்சொல்லில் சிவனுமப்படி யென்று சிவ சதிர்சியனைச் செப்பப்படுவன். சிவனுக்கு அன்னிய மலமாயா கன்மங்கட் கன்னியன் விசதிருசனுதலால் சிவானனனியனென்று அன்னியப்பொருட்டொகை விரித்தர்த்தஞ்சொல்லில் சிவனுமப்படியென்று சிவ சதிருச்சியனைச் செப்பப்படுவன்; இப்படி அவர்கட் கிட்ட விகாதம் பண்ணுஞ் சிவா னன்னியச் சொற் சொல்லியேது பிரயோசனம் விசேடித்துக் கட்டிக்கொண்டது? ஒன்றுமில்லை. சகளசதாசிவ சாதிருச்சியமாத்திரஞ் சிவ சமவாதி மதம்; அது சித்தாந்தமன்றென் றறிந்து முற்றுஞ் சிவ சாதிர்ச்சியமே சிவ சாயுச்சியமென்று சிவ சித்தாந்தம் பண்ணிச் சுகியாயிரு. (கூ)

தியானமூலத்து முளைத்து மந்தமாயுந் தீவிரமாயுஞ் சீவன்முத்தி சாக்ஷாத்கார பரமுத்தி சாக்ஷாத்காரப் பழம்பழுக்குஞ் சமாதிவிருக்ஷம் வளர்த்தவன் மகிமை யிருவிருத்தால் வகுத்துரைக்கின்றார்.

ஞாலமதின்ஞானநிட்டையுடையோருக்கு
நன்மையொடுதீமையில்லைநாடுவதொன்றில்லை
சீலமில்லைதவமில்லைவிரதமொடாச்சிரமச்
செயலில்லைதியானமில்லைசித்தமலமில்லை
கோலமில்லைபுலனில்லைகரணமில்லை
குணமில்லைகுறியில்லைகுலமுமில்லை
பாலருடனுன்மத்தர்பசாசர்குணமருவிப்
பாடலினோடாடலிவைபயின்றிடினும்பயில்வர். (கூஉ)

தேசமிடங்காலந்திக்காசனங்களின்றிச்
செய்வதொன்றுபோற்செய்யாச்செயலதனைச்செய்தங்
கூசல்படுமனமின்றியுலாவனிற்ற
லுறக்கமுணர்வுண்டிபட்டினியிருத்தல்கிடத்தன்

மாசதனிற்றூய்மையினில்வறுமைவாழ்வில்
வருத்தத்திற்றிருத்தத்தின்மைதுனத்திற்சினத்தி
லாசையினில்வெறுப்பிலிவையல்லாதுமெல்லா
மடைந்தாலுஞானிகடாமரனடியையகலார் (௩௩)

(இ-ள்). தேச மிடங்காலந் திக் காசனங்கள் முதலியவை தியானத் திச்சிக்கப்படுவன, சமாதியில் வேண்டுவதன்றென்று பொருள்; மற்றைய வெளிப்பொருள். (௩௩)

நிராகாரத் தியானசமாதி சாமர்த்திய மில்லாதான் குரு கற்பித்த சதாசிவாதி சாகாரத் தியான சமாதிபண்ணச் சாலம்ப சிவ சமாதி சாக்ஷாத்கார பூர்த்திச் சுகானுபூதி முன்னாக, நிகழும் நிராலம்ப சிவ சமாதிமானது பரசம்வித் சிற்சத்தியில் முறைமையின் முகிழ்க்கும் நிராலம்ப சிவ சமாதிச் சிற்றுப்பூர்த்திச் சுகமும் நிராலம்ப சிவ சாக்ஷாத்கார முற்றுப் பூர்த்திச் சுகமுஞ் சுவ சம்வித்சிற்சத்தியின் முகுழ்க்குஞ் சுவானுபூதியினாலனுபவிக்கப் படுமென்றறைகின்றார்.

இந்நிலைதானில்லையேலெல்லாமீசனிடத்தினினு
மீசனெல்லாவிடத்தினுநின்ற
வந்நிலையையறிந்தந்தக்கரணங்களடக்கி
யறிவதொருகுறிகுருவினருளினாலறிந்து
மன்னுசிவன்றனையடைந்துநின்றவன்றனாலே
மருவுபசுகரணங்கள்சிவகரணமாகத்
துன்னியசாக்கிரமதனிற்றுரியாதீதந்
தோன்றமுயல்சிவானுபவஞ்சுவானுபூதிகமாம்.

(இ-ள்). இந்நிலை தானில்லையேல்=நிராலம்ப சிவயோக நிலை நிற்கச்சத்தி போதாதிருந்தால்; எல்லா மீசனிடத்தினினு மீசனெல்லாவிடத்தினு நின்றவந் நிலையைக் குருவினருளாலறிந்து=ஒருபிரகாரம் அகண்டித சகலவியாபக சிவரூபங் குருச் சொல்ல இது தத்துவாதீத சிற்சத்தி விஷயம் புத்தி கோசரமன்றென்பது அறிந்து; அறிவதொரு குறி (குருவினாலறிந்து)=புத்தியினாற் றியானிக்கப்படு மொரு சிவ விக்கிரகமக்குரு கிருபையினாற்கற்பிக்கவறிந்து; அந்தக்கரணங்களடக்கி=விஷயத்தில் விழாது மேலெழுப்பி யச்சகள சிவ முகமாக்கி; மன்னு சிவன்றனை

யடைந்து நின்று; மருவு பசுகரங்கள்=அந்தவந்தக்கரணங்கள்; அவன் தன்னாலே=முற்சொல்லிய முறைமையிற் சுத்தவித்தை முதலியவற் றோடு கூடிச் சிவகரணமாகித் தியானித்துச் சமாதித்துச் சாக்ஷாத்கரித் திருப்பச்சாக்கிர சாக்கிராதிக்கிரமத்தில்; துன்னிய சாக்கிரமதனிற் றுரி திதந் தோன்ற முயல்சிவாநுபவம்=நிஷ்கள சிவ சாக்ஷாத்கார முற்றுப் பூர்த்தி ஸ்புரிக்க பண்ணுந் துரிய சமாதிச் சிற்றுப்பூர்த்தி; சுவாநுபூதிக மாம்=ஸ்வாநுபவாநு பாவியமாம். (௯௪)

சீவன் முத்தி சாக்ஷாத்கார சித்தி மான் முத்தித் தடைத டுப்பனென்று சாற்றுகின்றார்.

சாக்கிரத்தேயதீதத்தைபுரிந்தவர்களுலகிற்
சர்வசங்கநிவிர்த்திவந்ததபோதனர்களவர்கள்
பாக்கியத்தைப்பகர்வதுவெனிம்மையிலேயுயிரின்
பற்றறுத்துப்பரத்தையடைபராவுசிவரன்றே
வாக்குமுடிகவித்தரசாண்டவர்களரிவையரோ
டனுபவித்திங்கிருந்திடினுமகப்பற்றற்றிருப்பர்
நோக்கியிதுபுரியாதோர்புறப்பற்றற்றாலு
நுழைவர்பிறப்பினில்வினைகணுங்கிடாவே.

வெளிப்பொருள். (௯௫)

பசுகரணங் கழன்ற விடத்துஞ் சிவசத்தி விளக்கு விளக்கிய சிற்சத்திக் குறிச் சிவ கரணத்தினாற் சிவனையுந் தன்னையும் சிவசரணத்தினுதிக் குஞ் சிவ சாக்ஷாத்கார பூர்த்திரசத்தையு மறிந்தனுபவிப்பன்; புத்தி போதத்தா லன்றென்று போதிக்கின்றார்.

கருவிகழிந்தாற்காணரொன்றுமெனிற்காணார்
காணாதார்கன்னிகைதான்காமரதங்காணண்
மருவியிருவரும்புணரவந்தவின்பம்
வாயினாற்பேசரிதுமணந்தவர்தாமுணர்வ
ருருவினுயிர்வடிவதுவுமுணர்ந்திலைகாண்சிவனை
யுணராதாருணர்வினாலுணர்வதுகற்பனைகா
ணருள்பெறிலவ்விருவரையுமறிவிறந்தங்கறிவ
ரறியாரோற்பிறப்புமறாதாணவமுமறாதே.

(இள்). காணாதார்=சிவகரணத்தால் நோக்காதார்; காணார்=பசுபகரணத்தாற் சிவரூப சிவசமாதி சிவ சாக்ஷாத்கார சிற்றுப் பூர்த்தி முற்றுப் பூர்த்திச் சுக முதலியவற்றை யுணர்ந்தனுபவியார்; உணர்வினாலுணர்வது=சுத்தவித்தை பொருந்திய சுத்த தத்துவ புத்திபோதத்தாலறிவது; கற்பனைகாண்=கிலுப்த சரீர சதாசிவாதி மூர்த்தி தானன்றே; அறிவிறந்தங்கறிவர்=சாலம்ப சிவயோக மார்க்கத்துப்போய்ப் புத்திபோதங்கடந்து சிவனைச் சாக்ஷாத் சிவசத்தி வியத்தி சிற்சத்தி யுணர்வினாலுணர்வர் சிவாகமானுமானாரூட சிவசத்தி வியத்தி பூமிபூத சிவகரண புத்தி போதானுவித்த சிற்சத்தி யுணர்வினாற் பரோக்ஷமாய்ப் பரம்பரையாய்ப் பார்ப்பர். மற்றைய வெளிப்பொருள். (௫௬)

சிவஞானத்துணைச் சிவகன்ம யோகிகளல்லாச் சில சிவநியதி கன்மத்துணைச் சிவஞான யோகிகள் பண்ணும் பசுத்துவ சிவத்துவ விவேகத்தை யிருந்து மனமடக்கிப் பலப்படப்பண்ணுமவனும் பாசமுத்தி சிவத்துவாபி வியத்தி மானாய்ச் சிவனோடொத்துத் திரும்பானென்று செப்புகின்றார்.

பன்னிறங்களவைகாட்டும்படிகம்போலுள்ளம்
பலபுலன்கணிறங்காட்டும்பரிசும்பார்த்திட்
டிந்நிறங்களென்னிறமன்றென்றுதன்ற
னெழினிறங்கண்டருளினாலிந்நிறத்தின்வேறாப்
பொய்ந்நிறவைம்புலனிறங்கள்பொய்யெனமெய்கண்டான்
பொருந்திடுவன்சிவத்தினொடும்போதானபின்னை
முன்னிறைநீர்சிறைமுறியமுடுகியோடி
முந்நீர்சேர்ந்தந்நீராய்ப்பின்னீங்காமுறைபோல்.

(இ-ள்). பன்னிறங்களவை காட்டும் படிகம்போல்=செவ்வரத்தம்பூ முதலிய தடஸ்த லக்ஷண சிவப்பு முதலிய தன்மங்களைத் தனது ஸ்வரூப லக்ஷண சுக்கில முதலிய தன்மங்கள் போற்றன்னிடத்திற் காண்பிக்கும்படிகக்கற்போல்; உள்ளம்=ஆன்மாத்தான்; பலபுலன்கணிறங் காட்டும் பரிசும் பார்த்திட்டு=(பலபுலன்களென்பது மல முதலியவற்றைக் காண்பிக்குங் குறிப்பு மொழியாதலான்) மல முதலிய தடஸ்த லக்ஷண பசுத்துவ சிவத்துவ முதலிய தன்மங்களைத் தனது ஸ்வரூப லக்ஷணசிவத்துவ முதலியதன்மங்கள் போலத்தன்னிடத்திற்காண்பிக்குமுறையுங் கண்டு;

இந்நிறங்க ளென்னிற மன்றென்று=இப்பசுத்துவ சீவத்துவமு தலிய தடஸ்த லக்ஷணங்க ளெனது ஸ்வரூப லக்ஷணங்களன்றென்று; அருளினால்=சிவ சத்தி வியத்த சிற்சத்தியால் விவேகித்து; தன்றனெழி னிறங்கண்டு=தனது ஸ்வரூப லக்ஷண சிவத்துவ தரிசனம் பண்ணி: இந்நிறத்தின் வேறாய்=இச் சிவத்துவ லக்ஷணவிலக்ஷணமாய்;

பொய்ந்நிற வைம் புலனிறங்க ளென்பதற் கசத்திய வைம்புல குணங்களென்று பொருளுரைக்கில் மாயாவாத மதமாமாதலால் ஆன் மாவுக்குத் தடத்த லக்ஷண மாதலால் சிவத்துவம்போற் சுவரூபலக்ஷண மாயுள்ளனவன்றி மல முதலிய பாசங்கட்குச் சுவரூப லக்ஷணமாயுள் ள பசுத்துவ சீவத்துவ முதலிய தன்மங்கள்;

பொய் யென மெய்கண்டான்=தனக்குச் செயற்கைக் குணங்களா யுள்ளனவாகிலு மியற்கைக் குணங்களாயுள்ளனவன் றென்று மல முத லியவற்றிற் கியற்கைக் குணங்களாயுள்ளமை யுணர்ந்தான்; (சிவத்துவ விவேகியென்றுமாம்); முன்னிறை நீர்; சிறை முறிய=கட்டுவிட; முடுகி யோடி=விரைந்து சென்று; முந்நீர் சேர்ந்தந் நீராய்=சமுத்திரத்தடை ந்துப்பு நீராய்; பின்னீங்காமுறைபோல=திரும்பத் திரும்பாத செய்தி போல; பொருந்திடுவன் சிவத்தினோடு=அமூர்த்தவிபுப் பதார்த்தங் கட்குப் பொருந்துதல் பிரிதல் கலத்தல் போதிப்பது நீதியன் றாதலால் சிவத்தினோடு தாதான்மிய சம்பந்தத்தால் தனது சிவ தத்துவத்தோடு சாதிருச்சிய சம்பந்தத்தால் சிவனோடு சம்பந்திப்பன்; போதான பின்னை =(பசுத்துவ சீவத்துவ முதலுபாதிப்படான்; நீருப்புச் சோபாதி, சிவத் துவம் நிருபாதி, நீர்போ யுப்பும் பொருந்துஞ் சித்திருந்தபடியிருந்து சிவத்துவ மிசையுமாதலால், முற்றுவமையன்று) திரும்பத் திரும்பானெ ன்று திட்டாந்தம். (௬௭)

ஆசாரியரு முன்வாக்கில் வாசனையாற் புறப்படும் பொருந்திடுவன் சிவ த்தினோ டென்பது பெறுது சுவாயம் புவத்திற் சொல்லியபடி பசுத்தன்மை மறையத் தன்பதித் தன்மை விளக்கத்தோடு பதிவெ ளியா யறிவில் விளங்குவதே பொருந்துவதென்றுபோதிக்கின்றார்.

எங்குந்தானென்னினுமெய்தவேண்டா
மெங்குமிலனென்னில்வேறிறையுமல்ல
னங்கஞ்சேருயிர்போல்வனெங்குமங்கத்
தவயவங்கள்கண்போலக்காணுவான்மா

விங்குநாமியம்புந்தத்துவங்களின்வைத்தறித
லிறைஞானந்தந்துதாளீதல்சுடரிழந்த
துங்கவிழிச்சோதியுமுட்சோதியும்பெற்றாற்போற்
சோதிக்குட்சோதியாய்த்தோன்றிடுவன்காணே.

(இ-ள்). எங்குந்தானென்னில்=சிவன் சித்த சித்துப் பிரபஞ்சமெல்லாம் வியாபியாயிருப்ப னென்னில்;நாமெய்தவேண்டாம்=ஆற்றினீர் சமுத்திரத்திற் சென்று கூடுவதுபோ லவனை நாஞ்சென்று கூடவேண்டுவதில்லை; வேறெங்கு மிலனென்னில்=சர்வத்தையு மறிதல் பண்ணுதல் கூடாதாகையால்; இறையுமல்லன்=சர்வ ஜகத் கர்த்தாவு மல்லனாகிவிடுவன்; (உம்மையால் சர்வகர்த்திருத்துவ மில்லாமையாற் சர்வஞ்ஞனு மல்லாதேபோவன்).

பின்னவனை யடைவதில்லையெனில் அறிவது தியானிப்பது சமாதிப்பது சாக்ஷாத்கரிப்ப தெப்படி யென்னில், அந்தச் சிவனெங்கும் தனக்குச் சரீரம்போ லுபசரிக்கப்படுஞ் சித்த சித்துப் பிரபஞ்சமெல்லாவற்றினும்,

அங்கஞ் சேருயிர் போல்வன்=இயற்கையாற் சர்வவியாபியாயிருந்தாலு மலவிருளு பாதிச் செயற்கையினாற் றனது சரீரவிளக்குப் பொருந்திய வவ்வளவில் ஞானமுண்டாகையால் அவ்வளவு வியாபகனென்றுபசரிக்கப்பட்ட ஆன்மா வொப்பன்; அங்கத் தவயவங்கள்=அந்த ஆன்மாப்பொருந்திய சரீரத்துறுப்புக்கள்; கண்போல=நேத்திரமாகிய வுறுப்புப்போல; காணாவாகும்=கண்ணே காணும்; (அப்படியே சிவன்பொருந்திய சித்த சித்துப் பிரபஞ்சமாகிய சரீரத் துறுப்புக்கள் ஆன்ம சிற்சத்திக்குறி பொறித்த சிற்கண் ணுறுப்புப்போ லறியாவாகும், ஆன்ம சிற்சத்திக்குறி பொறித்த சிற்கண் ணுறுப்பே காணும்; ஆகையா லான்மாக்குறிப்பு மொழியாதலா லான்ம சிற்சத்திக்குறி பொறித்த சிற்கண்ணானது,

இங்குநாமியம்புந் தத்துவங்களின் வைத்தறிதல்=இந்தச் சாத்திரத்தில் நாம் முன்சொல்லிய போக்கியப் பொருளை யறியும்போது பசுகரணமா யிருந்தாலுஞ் சகள சிவனை யறியும்போது சிவகரணமா யிருக்கின்ற புத்தி முதலிய தத்துவங்கள் காட்டாகப் பண்ணும் பதி ஞானக்குறி பொறித்த வோருணர்தல் (ஈதொரு சோதி); தாள்=தத்துவாதீதமாகிய சிவசத்தி; இறை ஞானந்தந்து=(கருவிப் பதிஞானக்குறி பொறித்த)சிற்சத்தியை விளக்கி; ஈதல்=தொழிற்பதிஞானச்குறி பொறித்துக்

கொடுக்க அறிதல் (ஈதொரு சோதி); (இந்த இரு சோதியும் பெற்றது) சுடரிழந்த துங்கவிழி=ஒளிமறைந்த பொறியாசுக்கண்; சோதிய முட் சோதியும் பெற்றாற்போல=புற வொளியு முள்ளொளியுமுற்ற தொ ப்ப; சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே=(சோதிக்குள் உட்சோதிக் கென்று மாறுக) சொல்லிய ஆன்மசிற்சத்தியி னந்தரங்க நிருபாதிக சோதிக்குட் சோதியாய் நிஷ்களனாக; தோன்றிடுவன் காணே=திருச்சியமன்றித் திருக்குருபியாய திருசியன்றனேயாவன்.

சோதிக்குள்=சிவசத்திக்குள்; தோன்றிடுவன்=விளங்குவன்(என்று சிலபெயருரைப்பர்); பராக்குருபியாகிய சிவசத்தியில் சிவன் தோன்றுவனாகில் சிவசத்திக் கன்னியனாய் விடுவனென்பது முதற் றூஷணம் பிரமாணப் பிரசங்கத்திற் பேசியதறிக. அதுவன்றி யெடுத்தல் முடித்தல் இசையாது பகைக்கும், பார்ப்பவன் பலப்பிரமிதியன்றிப் பிறர் பிரமாணப் பிரமிதி பலமுமாம். (௲அ)

ஞானத் தியான சமாதி சஞ்சல சீவன் முத்தி சாட்சாத்கார சமயமாத்திரத்தில் மலமுதலிய பாசம் பறியும்; அவைகுலையிற் பரக்குமென்றுபாஷிக்கின்றார்.

பாசிப்படுகுட்டத்திற்கல்லினைவிட்டெறியப்
படும்பொழுதுநீங்கியதுவிடும்பொழுதிற்பரக்கு
மாசுபடுமலமாயையருங்கன்மமனைத்து
மரனடியையுணரும்போதகலும்பின்னணையு
நேசமொடுந்திருவடிக்கீழ்நீங்காதேதூங்கு
நினைவுடையோர்நின்றிடுவர்நிலையிதுவேயாகு
மாசையொடுமங்குமிங்குமாகியலம்வருவோ
ரரும்பாசமறுக்கும்வகையருளின்வழியுரைப்பாம்.

(இ-ள்). அருளின் வழியென்பது=அருள்தரு மாகமமார்க்கத்தால். மற்றவை வெளிப்பொருள். (௲௧)

எட்டாஞ்சூத்திரம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-உ௱௪.

# ஒன்பதாஞ் சூத்திரம்.

முன்சொல்லிய சமாதி நிலைகுலைந்தாற் பின்
கூடுமுபாயங் கூறுகின்றார்.

பாசஞானத்தாலும்பசுஞானத்தாலும்
பார்ப்பரியபரம்பரனைப்பதிஞானத்தாலே
நேசமொடுமுள்ளத்தேநாடிப்பாத
நீழற்கீழ்நில்லாதேநீங்கிப்போதி
ஞசைதருமுலகமெல்லாமலகைத்தேராமென்
றறிந்தகலவந்நிலையேயாகும்பின்னு
மோசைதருமஞ்செழுத்தைவிதிப்படியுச்சரிக்க
வுள்ளத்தேபுகுந்தளிப்பனூனமெலாமோட.

(இ-ள்). பாசஞானத்தாலும்=புத்தியாதி தத்துவதாத்துவிக விர்த்தி ஞானத்தினாலும்; பசு ஞானத்தாலும்=பாசவிர்த்தி விளக்கிய ஆன்மசிற்சத்தி விர்த்தி ஞானத்தினாலும், பிரமம் நானென்னாது நான் பிரமமென்னும்பசுவாசனை தாக்கும் விபரீத தியான ஞானத்தினாலும்; பார்ப்பரிய பரம்பரனை=காணுதற்கரிய செயற்கைச் சிவகரண மாகிய பாசஞானவிஷய சகள சதாசிவா தீத நிஷ்களபர சிவனை; பதிஞானத்தாலே நேசமொடு முள்ளத்தே நாடிப்பாத நீழற்கீழ் நில்லாதே நீங்கிப்போதில்=ஆன்மாவிற் சாக்ஷாத் சிவசத்தியால் விளங்கிய சிற்சத்தி விர்த்திப் பதிஞானத்தால் சாமர்த்திய மரியாதியி லறிந்து தியானித்துச் சமாதித்துச் சாக்ஷாத்கரித்துச் சிவசத்திப் பிரபை தாரகமா யிராது விட்டுப்போதில்; ஆசைதருமுலக மெல்லா மலகைத்தேரா மென்றறிந்த கல வந்நிலையேயாகும்=பிரதிபந்தமாயிருக்கும் பிரபஞ்ச மனைத்தும் கானல் போற் பொய்போலத தோற்று மாயாகார நிராகாரமாய் நோக்கத்திரும்பச் சமாதி நிலைதானேயாம்; (அதுவன்றியும்) ஓசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க=சிவமுதல் நமவீறாகச் செபிக்க; ஊனமெலாமோட=நமப்பதார்த்தபாசம் பறிய; (மிஞ்சிநின்ற) உள்ளத்தே =சுத்தபஞ்சாக்கர நடுவெழுத் துணாக்குஞ் சின்மாத்தி ரான்மாவிலே; புகுந்து=முதலெழுத்துணாக்கும் பரத்தைப் பதித்து; அளிப்பன்=ஈற்றெழுத்துணாக்குஞ் சிவத்தையிணக்குவன். (௧)

சிவப்பிரமாணமாய்ச் சுத்த கோடியிற் பிரவேசிக்கும் சிவாகம மந்தமாஞ் சாஸ்திரங்களும், பிராசாத மந்திர மந்தமா மந்திரங்களும், சிவ தத்துவ மந்தமாந் தத்துவங்களும், தத்துவ முதலியவற்றின் விருத்திகளும் பாச ஞானமென்றும், நான் பிரமமென்பது முதலிய ஞானம் பசு ஞானமென்றும் படிக்கின்றார்.

வேதசாத்திரமிருதிபுராணகலைஞானம்
விரும்பசவைவைகரியாதித்திறங்கண்மேலா
நாதமுடிவானவெலாம்பாசஞானம்
நணுகியான்மாவிவைகிழ்நாடலாலே
காதலினானின்பிரமமென்னுஞானங்
கருதுபசுஞானமிவனுடலிற்கட்டுண்
டோதியுணர்ந்தொன்றென்றுவுணர்ந்திடலாற்பசுவா
மொன்றாகச்சிவனியல்பினுணர்ந்திடுவன்காணே

(இ-ள்). (இவை நணுகியான்மாக்கீழென மாறுக, அந்தப் பசுவானவன்) சிவனியல்பின் = சிவத்துவம் பெற்ற காலத்தில்; (பதியாய் ஒன்றாக உள்ளபடி யொருமிக்க எல்லாப் பொருள்களையும்) உணர்ந்திடுவன் காணே = அறிவன் (சிவனென்றாக வியல்பி னுணர்ந்திடுவனென வுரைக்கலுமாம்). மற்றைய வெளிப்பொருள். (உ)

அந்தக் கரண விர்த்தி சமூல நிவிர்த்தியே சமாதியும் முத்தியும் தற்பொருளறிவு பிறப்பொருளறிவு முகிழ்க்கும் ஸ்வஸம்வேதன சிவ வேதனாநிவியத்தி வேண்டியதில்லை யெனும் பாஷாண வாதி முதலோர் மதம் பாஷித்துத் தூஷிக்கின்றார்.

கரணங்கள்கெடவிருக்கைமுத்தியாமென்னிற்
கதியாகுஞ்சிலைமுட்டைகருமரத்தினுயிர்கண்
மரணங்கொண்டிடவுறங்கமயங்கிமூர்ச்சிக்க
வாயுத்தம்பனைபண்ணவல்விடத்தையடையச்
சரணங்கள்புகுநிழல்போற்றனையடையுஞ்சமாதி
த்விராதுமலமிதுவும்பசுஞானமாகு
மரணங்களெரித்தவன்றனடியையறிவிறந்தங்
கறிந்திடார்செறிந்ததுகளகற்றிடரோ.

வெளிப்பொருள். (௩)

சாக்ஷாத் சிவசத்தி விளக்கு விளக்கிய சிற்சத்திக் குறிப்பதிஞானத்தாற் சிவான்ம ரூபந்தெரியு மென்று செப்புகின்றார்.

சிவனையவன்றிருவடிஞானத்தாற்சேரச்
 செப்புவதுசெயல்வாக்குச்சிந்தையெல்லா
மவனையணுகாவென்றுமாதலானு
 மவனடியவ்வொளிஞானமாதலானு
மிவனுமியான்றுவக்குதிரமிறைச்சிமேதை
 யென்புமச்சைசுக்கிலமோவிந்திரியக்கொத்தோ
வவமகலவெனையறியேனெனுமையமகல
 வடிகாட்டியான்மாவைக்காட்டலானும்.

(இ-ள்). அடுத்தடுத்துச் சொல்லியது சொல்லிற் கூறியது கூறலெ ன்னுங் குற்றம் வராதோ? வராது, சமாதிதிடம் பிறக்கும்படி சாற்றிய தாதலால். (ச)

மேற்சொல்லிய பதி ஞானமே சிவ முதலிய திரிபத்தார்தங் காணுங்கண்; கண் முதலியவற்றிற்குக் கண்ணென்பது கண்ணுக்குபசாரம் பண்ணுதலாற் கண்ணென் றுபசரிக்கசப்பட்டதென்று காண்பிக்கின்றார்.

கண்டிடுங்கண்டனைக்காணுகரணங்காணு
 கரணங்கடமைக்காணுவுயிருங்காணு
வுண்டியமருயிர்தானுந்தன்னைக்காணு
 துயிர்க்குயிராமொருவனையுங்காணுதாகுங்
கண்டசிவன்றனைக்காட்டியுயிருங்காட்டிக்
 கண்ணுகிக்கரணங்கள்காணுநிற்பன்
கொண்டரனையுளத்திற்கண்டடிகூடிற்பாசங்
 கூடாதுகூடிடினுங்குறித்தடியினிறுத்தே.

(இ-ள்). கரணங்காணு=கரணங்களைக்காணு; உயிருங்காணு=உயிரையுங்காணு; கண்டசிவன்=இவை யெல்லாவற்றையும் பிரத்தியக்ஷமாகப் பார்க்குஞ் சிவன்; தனைக்காட்டி=தனக்கியற்கைக் கண்ணுகி உயிர்க்குச் செயற்கைக் கண்ணுகிய தனது சத்தியினுல் உயிர்க்கு இயற்கைக் கண்ணுகிய சிற்சத்தியை விளக்கித் தனது ஸ்வரூபத்தை யுயிர்க்குக் காண்பித்து; உயிருங் காட்டி=உயிர்க்குயிர்ச் சுவரூபத்தையுங் கா

ண்பித்து; சண்ணுகி=உயிர்க்கியற்கைக் கண்ணுகிய சிற்சத்தி வியஞ்சக தன் சத்தி சமவாய சம்பந்தத்தா லுயிரைக் குறித்துபசரித செயற்கைக் கண்ணுகி; காணு=காணுமல்; அடிகூடில்=சிவசத்திக் கொப்பச் சிற்சத்திக் கண்ணைத்திறந் தொளி பரப்பித் தியானிக்கில்; குறித்தடியினிறுத்தே=திரும்பப் பாசம் நீங்கும்படி சிவ சிந்தனைபண்ணிச் செப்பியபடி சிவ சத்தி தாரகமாகத் தானேநில்; மற்றைய வெளிப்பொருள். (ரு)

அப்படித் தியானம் பண்ணிச் சிவசத்தி தாரகமாய் நின்று செய்வ துரைக்கின்றுர்.

குறித்தடியினின்றட்டகுணமெட்டுச்சித்தி
கோகநதன்முதல்வாழ்வுகுலவுபதமெல்லாம்
வெறுத்துநெறியறுவகையுமேலொடுகீழடங்க
வெறும்பொய்யெனநினைந்திருக்கமேலொடுகீழில்லா
னிறுத்துவதோர்குணமில்லான்றன்மையொருவருக்கும்
நினைப்பரியானென்றுமிலானேர்படவந்துள்ளே
பொறுப்பரியபேரன்பையருளியதன்வழியே
புகுந்திடுவனெங்குமிலாப்போகத்தைப்புரிந்தே.

(இ-ள்). நெறியறுவகையும்=ஆறத்துவாவும்;வெறும் பொய்யென=அசத்தியம் போற்காணுங் கண்டிதமாக;புகுந்து=விளங்கி;போகத்தை=சிவத்துவ விளக்கமாகுஞ் சிவானந்தப் பெயர்ச் சிவபோகத்தை. மற்றைய வெளிப்பொருள். (சு)

சிவபோக நிமித்தமாகுங் குலைந்த சிவசமாதிகூடும் பொருட்டுப் பிரபஞ்சம் பொய் யென நினைந்திருத்தன் மாத்திரம் போதுமோ வென்னச் சித்தாந்த சிவோகம் பாவனைத்தீவக வேதாந்த சோகம் பாவனை வேண்டுமென்று விளம்புகின்றுர்.

கண்டவிவையல்லேனுனென்றகன்றுகாணுக்
கழிபரமுநானல்லேனெனக்கருதிக்கசிந்த
தொண்டினுடுமுளத்தவன்றுனின்றகலப்பாலே
சோகமெனப்பாவிக்கத்தோன்றுவன்வேறின்றி
விண்டகலுமலங்களெல்லாங்கருடதியானத்தால்
விடமொழியுமதுபோலவிமலதையுமடையும்

பண்டைமறைகளுமதுநானேனென்று
பாவிக்கச்சொல்லுவதிப்பாவகத்தைக்காணே.

(இ-ள்). கண்டவிவை = தேகாதிப் பிரபஞ்சந் தாக்கி வாச்சியப்பொருளாய் மயங்கி யிருக்குங் குருலிங்க சங்கமாதிசள்; அல்லேனுன் = நித்திய நிலையங் குலையுங் கண்டித வடிவ தடத்த லக்ஷண முற்ற வயமிதம் பதவாச்சியப் பொருளாய்ச் சாலம்ப சிவ யோக விஷயமாய்த் தடத்த லக்ஷண சிவபதவாச்சியப்பொருட் சிவக்குறி பொறிக்குமிடமாதலானும் வாச்சியப்பொருள் விட்டிலக்கியப் பொருட் சுவ ரூப லக்ஷண சிற்பரமிரண்டுமெடுத்துத் தொடுத் துரைத்தாலுஞ் சிவோயஞ் சிவமிதமென்று படர்க்கைப்பொருட் சுவரூப லக்ஷண சிவப்பொருளாய்ப் பாவிக்கப் பட்டு,

சிவோகமென்று தன்மைப் பொருட் சிவப்பொருளாய்த் தியானிக்கக் கிட்டித்தட்டாததலானும் அகம்பத்தில் வாச்சியப்பொருட் டடத்த லக்ஷணத் தன்மைப் பொருட் பூதான்மாதி மந்திரான்மாந்த பஞ்சான்மக் குறிதாண்டிச் சிட்டவிலக்கியப் பொருட்சுவரூப லக்ஷணத்தன்மைப் பொருட் சின்மாத்திரான்மாவாய்ச் சிவபதத்தில் வாச்சியப் பொருட்டடத்த லக்ஷணத் தன்மைப் பொருட் பிரமாதி சாங்கசதா சிவாந்த பஞ்சேசுவரக் குறிதாண்டிச் சிட்ட விலக்கியப் பொருட் சுவரூப லக்ஷணத் தன்மைப் பொருட் பரக்குறி பதித்துப் பின்னஸ்மிபதத்தில் வாச்சியப் பொருட்டடத்த லக்ஷணத்தன்மைப் பொருட்டியான சமாதியுபாதியுற்ற சின்மாத்திரான்மாக்குறி பரக்குறி யிருகுறி தாண்டிச் சிஷ்ட விலக்கியப் பொருட் சுவரூப லக்ஷணத் தன்மைப் பொருட் சிவக்குறி பொறிக்கப் பாத்திரவானுகையால் நானன்றென் றகன்று பஞ்சவித சாலம்ப சிவயோக மார்க்கத் தொரு மார்க்கத்தால் முப்பத வாச்சியப் பொருள் கடந்துன்மனியுற்று;

காணுக்கழிபரமும் = பரோக்ஷ வநாதிமுத்த பரசிவமும்; (நானல்லேன் படர்க்கைப் பொருளாதலாற் றன்மைப்பொருளாகிய நானல்லேன்); எனக் கருதி = சிவோயஞ் சிவமிதமென்று சிந்திக்கலாஞ் சிவோகமென்று சிந்திக்கப்படாது ஆரோபிதமா யப்படியுஞ் சிந்திக்கலாமென்றுஞ் சிந்தித்து; கசிந்த; உளத்து = ஆன்மாவில்; தொண்டினொடும் = சமயதீட்சையிற் சைவர் செயற்கையாய்ப் பாவிக்கு மியற்கையாய் வைஷ்ணவரெப்போதும் பாவிக்கும் தாசோகம் பாவனு வாசனையோடு; அவன்றான் = சிவன்றான்; நின்ற கலப்பாலே = நிலைபெற்ற சாங்கரியத்தாலே;

சிவோகமென்று சிறப்பித்துச் சிந்திக்கப்படான். (ஏவப்படுந் தாசத்தன்மையுமேவுஞ் சிவத்தன்மையும் என்மாதா மலடியென்பதுபோற் பகைத்தேகிபவித்துப் பாவிக்கப்படாதாகையால், (ஆகிலெப்படி?) சோகமெனப்பாவிக்க=இரண்டுங் கெட்ட வைஷ்ணவ தாசோகம் பாவநு வாசனைதுடைத்துச் சித்தாந்தச் சிறப்புச் சிவோகம் பாவனைத் தீபக வேதாந்தப் பொதுச்சோகம் பாவனை யஸ்மியந்தத் தனைத்துச் சோகமென்று பண்ண;

தோன்றுவன் வேறின்றி=தாசோகம் பாவநு வாசனை தள்ளி யந்தத் தஸ்மியனைத்துச் சிந்தாந்தச் சிறப்புச் சிவோகம் பாவனை பண்ணப் பண்ணிக் குறியொப்பித்து வேற்றுக் குறியின்றி;

சிவன் முத்தியிற் சமாதி முற்றிச் சாட்சாத் கரிக்கப்படுவேன். நீரிப்போது செப்பியது செப்பமன்று; ஸ்வரூப சிவபாவனை சத்தியமானதுபோலாரோபித சிவரூப சிவபாவனை சத்தியமன் றசத்தியமே; அசத்தியமெப்படிப் பலங்கொடுக்கும்? சத்தியம், நீ சாற்றியது; முத்திசெய் சிவாவிர்ப்பாவ பாத்திர பாவனையாகலாற் சத்திய சிவபாவனையினாற்போல அசத்திய சிவபாவனையினாலும்,

கருட தியானத்தால் விடமொழியு மதுபோல மலங்களெல்லாம்; விண்டகலும்=பிரியாது பிரிந்து நீங்காது நீங்கும்; விமலதையு மடையும்=சிவத்துவாபி வியத்தியும் ஸ்திதஸ்தாபிதமாம்;

விண்டகலு மென்பதனால் முத்திபலமும், விமலதையு மென்பதனால் வியத்திபலமும், விளம்பப்பட்டன; தொண்டினொ டென்பதனை நின்ற கலப்பாலென்பதோடு விசேஷியாமற் சிலர் பாவிக்க வென்பதோடு படுத்தி விசேஷித்தார்கள்; சிவோகந் தாசனென்று சிந்திப்பார்களாய் மன்மாதா வந்தியையென்றும் வழக்குரைப்பார்கள்;

பண்டை மறைகளும்=பிரவாகா நாதிச்சுருதிகளும், (உம்மையினாற்சில விடத்து சிவாகமங்களும்) அது நானானே னென்று பாவிக்கச் சொல்லுவ துத்தமமென்று தியானிக்கச் செப்புவது, இப்பாவகத்தைக் காணே=இச் சிவோகம பாவனைத் தீபக சோகம்பாவனையைத் தானே; சோகமென்பது பரோக்ஷாபரோக்ஷப் பகைப்பொருள் அயிக்கியப் பிராந்தியாகையால்.

தாஸோஹமிதிஸம்மோஹம்ஸோஹமேவபரிப்ரமஃ
அஹமேவபரிப்ராந்திதஸ்மாத்ரீணிபரித்யஜேத்.

என்று சில சிவாகமத்திற் றள்ளி யிருத்தலால் அப்படிச் சிவோகம் பாவனையே பகையாமற் பாவிக்கப் படுமென்று படித்திருந்தாலுஞ் சோ

யம் தேவதத்த னென்பதுபோற் சுருதிச்சொற் சித்த விவேகத்தினுற் சிவோகம் பாவனைத் தீபகமாகச் சோகமென்று மொருவழிசொல்லலா மென்று தாற்பரியம். (எ)

இந்நிலையுங் கூடாதோர்க்குச் சுத்த பஞ்சாக்ஷரத் துவாரத்தினுற் சிவோகம் பாவனைத் தீபகமா மஞ்செழுத்துச் செப மறைகின்றுர்.

அஞ்செழுத்தாலான்மாவுமரனுடையபரிசு
மரனுருவுமஞ்செழுத்தாலமைந்தமையுமறிந்திட்
டஞ்செழுத்தாலங்ககரநியாசம்பண்ணி
யான்மாவினஞ்செழுத்தாலிதயத்தர்ச்சித்
தஞ்செழுத்தாற்குண்டலியினனலையோம்பி
யணுவரியகோதண்டமணைந்தருளின்வழிநின்
றஞ்செழுத்தைவிதிப்படியுச்சரிக்கமதியருக்க
னணையரவம்போற்றேன்றுமான்மாவிலரனே.

(இ-ள்). அஞ்செழுத்தா லான்மாவு மரனுடைய பரிசும்=(மறைஞான தேசிகர் விரித்துரைத்தபடி) யகாரமான்மா சிகாரம் சிவம் என்பன முதன்முறையும்;அரனுருவுமஞ்செழுத்தா லமைந்தமையும்=சிகாரமகோரமென்பது முதன் முறைமையிற் சதா சிவாதி ரூபமுற்றதும்; அறிந்திட்டு; அஞ்செழுத்தாலங்க கரநியாசம்பண்ணி=கனிஷ்டாதி யங்குஷ்டாந்தங்களில் யகாராதியாகக் கரநியாசமும் பாதாதி மூர்த்தாந்தங்களில் நகாராதியாக வங்க நியாசமும்பண்ணி; குண்டலியில்=நாபித்தானத்தில்; கோதண்டம்=புருவமத்தியம்; மற்றைய வெளிப்பொருள்.

இதயத்தர்ச்சனுப் பிரகார மறைகின்றுர்.

நாட்டுமிதயந்தானுநாபியினிலடியாய்
ஞாலமுதற்றத்துவத்தாலெண்விரனுளத்தாய்
மூட்டுமோகினிசுத்தவித்தைமலரொட்டாய்
முழுவிதமெட்டக்கரங்கண்முறைமையினினுடைத்தாய்க்
காட்டுகமலாசனமேலீசர்சதாசிவமுங்
கலாமூர்த்தமாமிவற்றின்கண்ணுகுஞ்சத்தி
வீட்டையருள்சிவன்மூர்த்திமானுகிச்சத்தி
மேலாகிநிற்பனிந்தவினைவறிந்துபோற்றே.

(இ-ள்). நாட்டுமிதயந்தானும்=இருதய கமலமும்; நாபியினில்; அடியாய்=கந்தமாய்; ஞாலமுதற் றத்துவத்தா லெண்விரனுளத்தாய்; மூட்டு மோகினி=புறவிதழ் முடிச்சுமாயை; சுத்தவித்தைமலர்=சுத்த வித்தியா தத்துவ முட்பது மாசனம்); (ஈசுவரதத்துவமாகிய) முழுவித ழெட்டாய்; (ஓம் நமசிவாய நமவென்னு) மெட்டக்கரங்கள்; முறை மையினி லுடைத்தாய்; காட்டுகமலாசனமேல்=காண்பிக்கப்பட்ட பது மாசனப் பொகுட்டில்;

சாந்தியாதி நிவிர்த்தியந்த சதுஷ்கலாசத்தி மண்டலத்திற் சாந்திய தீத கலாரூப சிவமண்டல மந்தர்ப்பவிக்கு மாதலால்,

ஈசர் சதாசிவங்கள்=அனந்தாதி யதிஷ்டிதாக்களாஞ் சம்பு வீசுரர் கள் உருத்திர சதாசிவ ரொருவருமே யிலிங்கத்திற் பூச்சியராதலாற் கலேசுர சதாசிவமுதற் சதாசிவர்களு மாசனத் தந்தர்ப்பவிப்பர்கள்; அவற்றின் கண்ணுகுஞ் சத்தி=சிவாசனத்திடத்துச் சாந்தி யதீத கலாக் கொழுந்தாமிந்திகாதி நாத கலா சமஷ்டிலிங்கா திஷ்டாயக ஈசானி முதல் மூர்த்தி யீருகுஞ் சத்தி சமஷ்டிக்குறிச் சத்தி;

கலாமூர்த்தமாம்=அஷ்டத்திரிம்சத் கலாகர்ப்பித சதாசிவதேக மாம்; வீட்டையருள் சிவன்=அதிகாராவஸ்தாரூட பரசிவம்; மூர்த்தி மாகுகி=தேகியாகி; சத்திமேலாகி=தேகத்துக்குட் சீவனாய்; நிற்பன்= இருப்பன்; இந்தவிளை வறிந்து போற்றே=இச்செய்தியுணர்ந்து பூசிப்பா யாக. (௬)

இவ்வந்தரியாகமும் ஒருவழி யான்மசுத்திமுன்னுகப் பின் பண்ணப்பட் டுச் சாலம்ப சிவயோக மூலமாதலாற் சாலம்ப சிவயோக மார்க் கத்தாற் சமனுந்தம் போய்ச் சமனுந்த முற்றுப் பாச முத்தி நிரா லம்ப சிவயோக பாத்திர சின்மாத்திரான்ம சித்திக் குறி யான்ம சுத்தியாமதனுற் சாலம்ப சிவயோகமவலம்பித் தந்தத்து நிரா லம்பித்து நிராலம்ப சிவயோகம் பண்ணப் பரமுத்தியாமென்று பகர்கின்றார்.

அந்தரியாகந்தன்னை முத்திசாதனமா
வறைந்திடுவரதுதானுமான்மசுத்தியாகுங்
கந்தமலர்புகையொளிமஞ்சனமமுதுமுதலாக்
கண்டனவெலாமனத்தாற்கருதிக்கொண்டு
சிந்தையினிற்பூசித்துச்சிவனைஞானத்தாற்
சிந்திக்கச்சிந்திக்கத்தர்ப்பணத்தைவிளக்க

வந்திடுமவ்வொளிபோலமருவியரனுளத்தே
வரவரவந்திடுவன்பின்மலமானதறுமே.

(இ-ள்). ஞானத்தால்=முன்சொல்லியபடி இருதயத்திருந்து நிராலம்பித்துப் பண்ணும் நிராலம்ப சிவத்தியானத்தால்; சிந்திக்கச் சிந்திக்க =தியானிக்கத் தியானிக்க (தியானமுற்றுஞ் சிவ சமாதியால்); மருவி யரனுளத்தே வரவர=சிவன் ஆன்மசிற் சத்தியின்கண் சாநித்தியனுகச் சாநித்தியனுக; மலமானதறுமே=மலமுத்திவருமே; பின் தருப்பணத்தை விளக்க வந்திடுமவ்வொளிபோல் ஆன்மா; வந்திடுவன்=சிவத்துவாபி வியத்திமானுவன்; வந்திடுமவ்வொளிபோல ஒளி வரவர மருவி யரன் வந்திடுவன்; மலாமன தறுமெனவுரை யுரைத்தாற் காரியமுந்துதலும் காரணம் பிந்துதலுமாய வியத்தி முந்துதலும் முத்தி பிந்துதலுமாய் முறைமைத் தப்பு வரும்; வந்திடு மவ்வொளிபோல மருவியரன் வந்திடுவனென்ருலும் திஷ்டாந்த விரோதமா மாதலாலு மப்படியுரைப்பதன்று. மற்றைய வெளிப்பொருள். (௪0)

சதா சமாதி நிஷ்டனுக்குச் சமாதி குலைந்து மனச் சஞ்சலம் வந்த காலத்துப் புறப் பூசையும் பூசிக்கவேண்டியதென்று புகல்கின்ருர்.

புறம்பேயுமரன்கழல்கள்பூசிக்கவேண்டிற்
பூமரத்தின்கீழுதிர்ந்தபோதுகளுங்கொண்டு
சிறந்தாருஞ்சீர்ச்சிவனைஞானத்தாலங்குச்
சிந்திக்கும்படியிங்குச்சிந்தித்துப்போற்றி
யறம்பாவங்கட்குநாமென்கடவேமென்று
மாண்டவனைக்கண்டக்காலகம்புறமென்ருதே
திறம்பாதேபணிசெய்துநிற்கையன்ரே
சீரடியார்தம்முடையசெய்திதானே.

(இ-ள்). ஞானத்தால்=நிராலம்ப சிவத்தியானத்தால்; அங்கு=நிராலம்ப சிவயோகத்தில்; இங்கு=முன்சொல்லிய சலாமூர்த்தமாகக் கற்பிக்கப்பட்ட சிவலிங்கத்திலும்; (நிராகாரமா யுயிர்க்குயிராய்ச்) சிந்தித்துப் போற்றி=தியானித்துப் பூசித்து; ஆண்டவனை என்றது பூசாகாலத்திற் பூச்சிய பூசகத்தன்மையா லுரைத்தது; சமாதிகாலத்திற் சுவதந்திரமா யொப்பாக வொப்பிக்கும் நிராலம்ப சிவத்தியானத்தின் முளைக்குஞ் சமாதியிற் சாற்றப்படாது;

"நாஸ்திபூஜாநமஸ்காரோ நஜபோத்யாநமேவச
கேவலம்ஞேயமித்யுக்தம் வேதிதவ்யம்நகிஞ்சந."

என்று தேவிகாலோத்தரத்திருத்தலால்; மற்றைய வெளிப்பொருள். தேவிகாலோத்தரத்துரைத்த ஞானசார முற்று முற்று முலோகாசாரப்பற்று முற்று மற்றவர்க்கே பஞ்சாக்ஷர மாத்திரத்தா லங்ககர நியாசமதனு லந்தரியாக மதனுற் பூமரத்தின்கீழ் விழுந்தபூப் புறப் பூசை, இம் முக்குறி பொறிக்குஞ் சிற்குறி ஞானபூசை, உலோகா சாரமு ஞானு சாரமு மொத்து மேறியுங் குறைந்து மிருக்கு மவர்க்கு பத்ததிப்படிக்குப் பலகுறிக் கிரியாபூசை, சிவத்தியான வுயிரியற்கைச் சிவஞான பூசையினுற் சிவன் சீக்கரஞ் சாநித்தியமாய்ச் சிவத்துவாபிவியத்தி செய்வனென்று செப்புகின்றூர்.

இந்தனத்தினெரிபாலினெய்பழத்தினிரத
மெள்ளின்கணெண்ணெயும்போலெங்குமுளனிறைவன்
வந்தனைசெய்தெவ்விடத்தும்வழிபடவேயருளு
மலமறுப்போரான்மாவின்மலரடிஞானத்தாற்
சிந்தனைசெய்தர்ச்சிக்கச்சிவனுளத்தேதோன்றித்
தீயிரும்பைச்செய்வதுபோற்சீவன்றன்னைப்
பந்தனையையறுத்துத்தானுக்கித்தன்னுருவப்
பரப்பையெல்லாங்கொடுபுகுந்துபதிப்பனிவன்பாலே.

(இ-ள்). இந்தனத்தினெரி யென்பது முதல் உவமை முற்றுவமையன்று பிரபஞ்சமாத்திரத்தி லேகதேச வுவமை; முற்றுவமையாக்கிப் பொருளுரைக்கில்,

இந்தனத்தி னெரி யென்பதனுற் காஷ்டத்தினதவயவமாய்க் காஷ்டத்திருக்கு மக்கினிப் பரமாணுவுக்கும், அப்படியிருக்கும் பிருதிவிப் பரமாணு அப்புப் பரமாணு வாயுப் பரமாணுக்களுக்கும் சம்யோக சம்பந்தம்; அந்த இந்தனத்துக்கு மெல்லாப் பரமாணுக்களுக்குஞ் சமவாய சம்பந்தம்; அக்கினிப் பரமாணுவுக்கு மெரிக்கும் சமவாயசம்பந்தம்; அன்னிய பரமாணுக்களுக்கு மெரிக்கும் சம்யோக சம்பந்தம் சொல்லப்படும்; பாலினெய் யென்பதினுலும் எள்ளின்க ணெண்ணெ யென்பதனுலுமப்படி யூகித்துச் சம்யோக சம்பந்தமும் சமவாய சம்பந்தமும் சொல்லப்படும்; பழத்திலிரத மென்பதனுற் கேவலஞ் சமவாயசம்பந்தஞ் சாற்றப்படு மாதலாற் பிரபஞ்சத்திற்குஞ் சிவனுக்கும் இச்சம்பந்தமெல்லாஞ் சாற்றப்பட்டுச் சிவன் விகாரியாய்ச் சடமாயுமேசான்மவாதத்திற் கிருப்புமாவன்; ஆத

லா விச் சம்பந்தங்களை விட்டுச் சித்த சித்துப் பிரபஞ்சமுற்றும் வியா பித்து;

எங்குமுளனிறைவன; (அதனாலே) எவ்விடத்தும்=இலிங்க சித்திரா தியில்; வந்தனை செய்து வழிபடவே=கிரியாபூசை நமஸ்காரங்கள் செய்து போற்ற; அருளும்=(பதமுத்தி கொடுத்துப் பரபோகந்துய்ப்பி த்து) மகாப்பிரளயத்திற் பரமுத்தியும் பலிப்பிக்கும்; (திரிகாலத்திற் பர முத்தி துல்லபமானாலும்) மலமறுப்போர்=உத்தரோத்தர சுத்தபோக மாத்திர முற்று நடுவே கீழ்நழுவாதபடி ஒத்தமல பரிபாகத்தால் மகாப் பிரளயத்து மதிதுல்லபமாய் வருமிகுந்த மலபரிபாக தாரதம்மியத்தால் நிரதிகரண சிவ தீக்ஷை சாதிகரண சத்தியோ நிருவாண சிவ தீக்ஷை யிர ண்டிற்கு மருகர் சிலர் தவிர வசத்தியோ நிருவாண தீக்ஷை மாத்திரத் தருகராய்த் தானங்களிற் றங்காது சரீராந்தத்துச் சிவத்துவந் தடையின்றி யடையும் பொருட்டுத் திக்ஷையிற் பிராரத்த கன்ம போகந் தகைந்த சிஷ்ட மலமுத்தி விரும்புவோர்;

ஆன்மாவின் மலரடி ஞானத்தால்=சிவசத்தி விளக்கில் விளங்கிய சிற் சத்தியால்; சிந்தனை செய் தர்ச்சிக்க=சிவோசம் பாவனாத்தியான பூசை பண்ண;சிவனுளத்தே தோன்றி=ஆன்மாவில் மலக்ஷயகர சங்கற்ப சாநித்தியனாய்ச் சீவன் முத்தி சிவ சாக்ஷாத்காரந்தான் பரமுத்தி சிவ சாக்ஷாத்கார கோடி பரிசிக்கு முத்தம சிவசமாதி மாத்திரந்தா னுதிக்சப் பண்ணிச் சரீராந்தத்தில்;

தீயிரும்பைச் செய்வதுபோல; முற்றுவமையன்றிதுவும்; ஒத்த சிவத்துவப் பிரகாச மாத்திரத்தி லேகதேச திஷ்டாந்தம்; முற்றுவமை யுன்னில் சிவாவேச காபால மதமாம்; அது சித்தாந்த மன்று தடத்தலக்ஷ ண மாதலால்; அதைச் சொரூப லக்ஷண மோக்ஷ சுருதி துரத்தும்; ஆகை யா லவ்வள வொப்பினால்,

சிவன்றன்னைப் பந்தனையை யறுத்துத் தானாக்கி=அச்சேஷித்த மல த்தினை மாற்றித் தன்னைப் போற் றற்பொருளறிவிற் சிவனாக்கி; தன்னுரு வப் பரப்பையெல்லாங் கொடு புகுந்து பதிப்பனிவன்பாலே=(இவ்விடத் தும் லக்ஷணையாற் பொருளுரையாதிருந்தபடி யுரைத்தாற் சங்கிராந்தவாதி பாசுபதி மதமாமது சித்தாந்த மன்று; பூரணப் பொருளைக் கொடுபுகுந்து பதிப்ப னென்பது கூடாது) சிவனாகிய ஆன்மாவிலே தனது சத்திக் கொத்த பிறப்பொருளறிவுச் சிற்சத்திக் குறிச்சிவத்துவ பூரண முற்றும் பிரகாசிப்பிப்பன்; சிவப் பிரகாசமுதற் சிவ சாத்திரங்களிலே திரிமலமு மகல வுயிரருள் சேர்முத்தி யென்பது முதல் வசனங்களுக்கு மிலக்ஷணை

யினூற் பொருளிப்படித்தானே பண்ணவேண்டும்; சொற் பொருளிருந்த படி பொருளுரைக்கிற் பாசுபதி முதலோர் மதமாம்; அது சிவசித்தாந்த மன்றென்று செப்பி யப்பொருள் தள்ளிய தாகையா லிப்பொருள் நற்பொருள். (கஉ)

ஒன்பதாஞ்சூத்திரம் முற்றுப்பெற்றது.

ஆ_திருவிருத்தம்-கூ0சு.

## பத்தாஞ் சூத்திரம்.

இப்படி யெட்டாஞ்சூத்திரத்து மொன்பதாஞ்சூத்திரத்து முத்தி சாதன சிவயோக மனேக பிரகாரமா யறைந்து சிவயோகபல சிவபோக சிவ சாக்ஷாத்காரமுஞ் சிறிது சிறிது நடுவே செப்பி வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்திற்குனே செப்பி யிருத்தலாற் சிவ சாத்திர மாத்திர சாத்திய சிவ யோகாங்கக் குறித் திரிபதார்த்த சிவத்துவ பசுத்துவ விவேக பரோக்ஷ பொது ஞானமுஞ் சிவபோக சாதன சிவோகம் பாவக சிவ சமாதிக் குறிச் சிவயோகமுஞ் சிவயோக பல வபரோக்ஷ சாக்ஷாத்காரச் சிறப்பு ஞானக்குறிச் சிவபோகமும் சிவயோகி மகிமையுஞ் செப்புகின்றாரா யொன்பதாஞ் சூத்திரத் தந் தத் துரைத்த சமாதிமான் மகிமை சாற்றுகின்றார்.

இவனுலகிலிதமகிதஞ்செய்தவெல்லா
மிதமகிதமிவனுக்குச்செய்தார்பாலிசையு
மவனிவனாய்நின்றமுறையேகனாகி
யரன்பணியினின்றிடவுமகலுங்குற்றஞ்
சிவனுமிவன்செய்தியெலாமென்செய்தியென்றுஞ்
செய்ததெனக்கிவனுக்குச்செய்ததென்றும்
பவமகலவுடனாகிநின்றுகொள்வன்பரிவாற்
பாதகத்தைச்செய்திடினும்பணியாக்கிவிடுமே.

(இ-ள). இவனுலகிலித மகிதஞ் செய்தவெல்லாம்=பூமியின் கண்ணிச் சமாதிமான் செய்யுமித மகித முன்னைப் புத்தியின் மூளைக்கும் புண்ணிய பாவங்கள் முற்று முவர்த்தனையில் விதைத்த வித்துப் போற் பலியா; இதமகித மிவனுக்குச் செய்தார் பாலிசையும்=இவனுக்குச் செய்த வித மகித முன்னைகப் புண்ணியபாவங்கள் செய்தவர்கள் புத்தி

யிற் பொள்ளெனப் பெரிதாய் முளைக்குமது கொண்டவை வருமென் றுபசரிக்கப்பட்டது. அதுவன்றியவை வருமென் றுரைத்தால் முத்தான்மாவிற் சிவசத்தி சங்கிராந்திக்கும், திஷ்டாந்த மில்லாமற் றேடும் சங்கிராந்த வாதி திருஷ்டாந்தமாகப் பண்ணிச் சித்தாந்தியைச் செயிப்பன்; ஒருவனது புண்ணிய பாவ மொருவனிடத்திற் போகாது; அவனைக் குறித்துப் பண்ணினு லவனது புத்தியின் முளைக்கும்; அவனிவனுய் நின்ற முறையேகனுகி=சோகம் பாவித்திருப்பது போலொத்த சிவக்குறி யுள்ளூதிப் புன்னிச் சிவன் முன்னுகப் பின்னுனென்று சிந்தித்து அரன்பணியினின்றிடவும்,

"ஸமாதி ஸமதாவஸ்தா ஜீவாத்மாபரமாத்மனோ"

என்னுஞ் சிவ வசனத்தால் சிவசம சிவா வஸ்தாவேச வசனுகிச் சீவித்திருக்க அப்படிச் சிவன் விதித்த சிவ சமாதி யனுஷ்டானத்தில் நிற்கத் தானவனுதலால்; சமயி பண்ணுந் தாசானுஷ்டானத்தினின்று தன் செயலற்றுத் தான் கெட்டு நிற்க வென்று பொருளுரைப்பது நன்றன்று; சமாதியினும் நானென்பது அகங்கார விர்த்தி யுபாதி விர்த்தி மாத்திரம் விட்டு ஸ்வதந்திர புத்தியோடு தோற்றுமற் றூேற்றி நிற்கு மாதலால்;

அகலுங்குற்றம்=பாச முத்தி சிவத்துவாபி வியத்தி பலிக்கும்; பணியாக்கி விடுமே=நிஷிதானுஷ்டான மானுலுஞ் சண்டேச்சுரன் முதலோர்க்குப்போல விதிதானுஷ்டான மாக்கி விடும்.

மற்றைய வெளிப்பொருள். (க)

சிவபோகஞ் சிவயோகத்தாற் சேருமென்று
செப்புகின்றூர்.

யான்செய்தேன்பிறர்செய்தாரென்னதியானென்னு
மிக்கோணைஞானவெரியால்வெதுப்பிநிமிர்த்துத்
தான்செவ்வேநின்றிடவத்தத்துவன்றுனேரோ
தனையளித்துமுன்னிற்கும்வினையொளித்திட்டோடு
நான்செய்தேனெனுமவர்க்குத்தானங்கின்றி
நண்ணுவிக்கும்போகத்தைப்பண்ணுவிக்குங்கன்ம
மூன்செய்யாஞானந்தானுதிப்பினல்லா
லொருவருக்கும்யானெனதிங்கொழியாதன்றே.

(இ-ள்). யான் செய்தேன் பிறர் செய்தாரென்ன தியானென்னு மிக்கோணை=உபகாராபகாராபிமானத்திருக்காகு மஞ்ஞானத்தை; ஞான

வெரியால்=சிவசாத்திர மாத்திர சாத்திய சிவாதித் திரிபதார்த்த சிவத்துவ பசுத்துவ விவேக பரோக்ஷ பொது ஞானக்கினியினல்; வெதுப்பி நிமிர்த்து=வாட்டி மேலறிவை நீட்டி; தான் செவ்வே நின்றிட=சிவயோகியானவன் தியான சமாதிக் குறிச் சிவ யோகத்திருக்க; தத்துவன்றானே=சிவனெதிராய்; தனையளித்து முன்னிற்கும் தன்னைச் சிவ யோகியைக் கொண்டு சாக்ஷாத் கரிப்பிக்கச் சத்தி சங்கற்ப சாநித்தியனவன்; வினையொழித்திட்டோடும்=முத்தி முர்திவியத்தி பிந்தி வருதல் முறைமையாதலால் முன் பாச முத்தியாம் பின்சாக்ஷாத் காரக் குறிச் சிவத்துவ வியத்தியாம்; ஊன் செய்யா ஞானம்=சிறப்பு ஞானச் சிவ யோகத்துக்கு மூலமாய் முன் சொல்லிய பொது ஞானம். மற்றைய வெளிப்பொருள். (உ)

சிவனைச் சிந்தித்துச் சிவ சத்தி துணைச் சிற் சத்திப் பிரத்தியாகார வியாபாரத்தாலிந் திரியங்களை விஷய விமுகங்களாகப் பண்ணிச் சமாதி பண்ணித் தான் செய்யுங் கிருத்தியங்களைச் சிவாதீன மாக்கி நிற்கப் பாச முத்தி சிவத்துவ வியத்தி பலிக்குமென்று படிக்கின்றார்.

இந்திரியமெனைப்பற்றிநின்றேயென்வசத்தி
  னிசையாதேதன்வசத்தேயெனையீர்ப்பதிவற்றை
தந்தவன்றனணைவழிநின்றிடலாலென்று
  தானறிந்திட்டிவற்றினெடுந்தனையுடையான்றாள்கள்
வந்தனைசெய்திவற்றின்வலியருளினல்வாட்டி
  வாட்டமின்றியிருந்திடவும்வருஞ்செயல்களுண்டேன்
முந்தனுடைச்செயலென்றுமுடித்தொழுகவினைகண்
  மூளாவங்காளாகிமீளானன்றே.

(இ - ள்). ஆளாகி=சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவ முற்றுச் சமர்த்தனுகி; தாசனுகி யென்றுரை யுரைப்பதன்று, அதிமோகமென்று முன் மறுத்திருத்தலால். மற்றைய வெளிப்பொருள். (௩)

கன்மங்கன்ம பலன்க ளிரண்டினையுஞ் சிவனிடத்திற் சமர்ப்பித்துச் சமபுத்தியாய் நிருவிகற்ப சமாதியாய்ச் சிவனைச் சிந்தியாது சிந்தித்திருப்பவர்க் கிருவினை யிசையா தென்றிசைக்கின்றார்.

சலமிலனய்ஞானத்தாற்றனையடைந்தார்தம்மைத்
  தானக்கித்தலைவனவர்தாஞ்செய்வினைதன்ன

னலமுடனேபிறர்செய்வினையூட்டியொழிப்பானுய்
நணுகாமல்வினையவனைநாடிக்காப்ப
னுலகினிலென்செயலெல்லாமுன்விதியேநீயே
யுண்ணின்றுஞ்செய்வித்துஞ்செய்கின்றுயென்று
நிலவுவதோர்செயலெனக்கின்றுன்செயலேயென்று
நினைவார்க்குவினைகளெலாநீங்குந்தானே.

வெளிப்பொருள். (ச)

சிவசாக்ஷாத்கார சித்தியினுற் சித்த சிவ யோகிக்குஞ் சிவப்பிரத்தியக்ஷ சாக்ஷாத்காரத் துன்முக சிவசமாதிசித்தியினுற் சித்த சமாதி சாத்திய சிவயோகிக்குஞ் சிவப்பிரத்தியக்ஷ விஷய விருப்ப மிருந்தாலு மவர்கள் சரீராந்தத்திற் பாசமுத்தியடைந்து மல சத்திவிர்த்தி விரியாது குவித்த சிவசத்தி கர்ப்ப சிற்சத்தியை விரித்துச் சிவனைச் சாக்ஷாத்கரிப்பார்க ளென்றுஞ் சரீர மிருக்குங் காலத்து மாகாமிய மேறு தென்றும் பிராரத்த கன்மமும் பெலங்குன்றி வாசனைமாத்திர மாய்த் தாக்காமற் றுக்கும் போகம் புசிப்பிக்குமென்று மிருதிரு விருத்தத்தாலிசைக்கின்றுர்.

நாடுகளிற்புக்குழன்றுங்காடுகளிற்சரித்து
நாகமுழைபுக்கிருந்துந்தாகமுதறவிர்ந்து
நீடுபலகாலங்கணித்தராயிருந்து
நின்மலஞானத்தையிலார்நிகழ்ந்திடுவர்பிறப்பி
னேடுதருமலர்க்குழலார்முலைத்தலைக்கேயிடைக்கே
யெறிவிழியின்படுகடைக்கேகிடந்துமிறைஞானங்
கூடுமவர்கூடரியவீடுங்கூடிக்
குஞ்சித்தசேவடியுங்கும்பிட்டேயிருப்பர்.

வெளிப்பொருள். (ரு)

அங்கித்தம்பனைவல்லார்க்கனல்சுடாதாகு
மௌடதமந்திரமுடையார்க்கருவிடங்களேறு
வெங்கித்தைக்கன்மமெலாஞ்செய்தாலுஞானிக்
கிருவினைகள்சென்றணையாமுற்செய்வினையிங்குத்
தங்கிப்போம்பாத்திரமுங்குலாலன்வினைதவிர்ந்த
சக்கரமுங்கந்தித்துச்சுழலுமாபோன்

மங்கிப்போய்வாதனையாலுழல்விக்குமெல்லா
மலங்களும்பின்காயமொடுமாயுமன்றே.

(இ-ள்). பிராரத்தம் சுபத்தமென்றும் மந்தமென்றும் தீவிர மென்றும் மூன்றுவிதம், அவற்றுள் சுபத்தஞ்சிவ தன்மத்தொருப் பட்டிருப்பவரை வாதியாது; மந்தஞ் சிவ ஞானிகளை வாதியாது; தீவிர மெல்லாரையும் வாதிக்கு மாறுலும் சிவஞானிகளை மிகுதியும் வாதியாது, ஆகாமியமு மேறுது; பதப்பொருள் வெளிப்பொருள். (சு)

இப் பத்தாஞ்சூத்திரத்து முன்பின் சில விடங்களிலேயு மிகுந்து கூறியது கூறலைக் குறித்துந் திரிபதார்த்தஞ் சூக்கும ஸ்வரூப பரீக்ஷை பண்ணுது லோகச் சொற் சுட்டு மட்டுக் கட்டு விட்டு முட்டத் தொட்டுப் பரீக்ஷை பண்ணுதலானும் உரை விரித்துரையாத துணர்ந்து கொள்க.

பத்தாஞ் சூத்திரம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௧உ.

---

## பதினோராஞ்சூத்திரம்.

சிவனது பகார முணர்த்துகின்றார்.

காயமொழிந்தாற்சுத்தனுகியான்மாக்
காட்டக்கண்டிடுந்தன்மையுடையகண்ணுக்
கேயுமுயிர்காட்டிக்கண்டிடுமோபோல
வீசனுயிர்க்குக்காட்டக்கண்டிடுவனித்தை
யாயுமறிவுடையனுயன்புசெய்ய
வந்நிலைமையிந்நிலையினடைந்தமுறையாலே
மாயமெலாநீங்கியரன்மலரடிக்கீழிருப்பன்
மாறுதசிவானுபவமருவிக்கொண்டே.

(இ - ள்). காயமொழிந்தால் = பிராரத்தகன்மம் பிடித்திருத்துஞ் சரீரமதுமாயும் மாயந்தால் (சரீராவதி மறைக்குஞ் சாமர்த்திய மாத்திரமாய் மாயத் திரும்பத் தீக்ஷையிற் சேஷிப்பித்த மலமுமாயாது மாய); சுத்தனுகி யான்மா = ஆன்மா மலமுத்தி மானுய்ச் சிவத்து வாருக சின்மாத்திரனுய் (நிற்ப); காட்டக் கண்டிடுந் தன்மையுடைய கண்ணுக்கு = (சடமாதலானுங் கண்காணுமென்ப துபகாரோபசாரம், முத்தியில் மலமறைப்பு

நீங்கினாற் காட்டு நாடாது)ஸ்வதந்திரமாய்க் காணுந் தன்மையுடையதானாலும் பெத்தத்தில் மலமறைப்பினால் காட்டக் கண்டிடுந் தன்மையுடைய சீவான்ம சிற்சத்திக்கு; ஏயுமுயிர் காட்டக் கண்டிடுமா போல=பொருந்திய வான்மா மனசை யேவ மனசு கண்ணை யேவக் கண் சிற்சத்தியை விளக்கச் சிற்சத்தி காண்பது போல;

ஈச னுயிர்க்குக் காட்டக் கண்டிடுவன்=பரிபூரணமாய்ப் பண்ணப்பட்டதற்குத் திரும்பத் திரும்பப் பண்ணவேண்டுவது நீதியில் நின்று பார்த்தாலில்லையா மாதலால் காட்டுத் திரும்ப விரும்பாதபடி சிவத்துவாபிவியத்தி பண்ணத் தனக்குப் போசகபோக்கியமின்றி யுள்ளமை மாத்திரமாய்ப் பிறர்க்குப் போச போக்கியமாய்ச் சாத்த சற்றுச் சவிகற்ப நிருவிகற்ப சாக்ஷாத்காரத்தாற் பதி முதலிய முப்பதார்த்தங்களைச் சாக்ஷாத் கரிப்பன்; இத்தை யாயுமறிவுடையனாய்=அப்போதுவரு மிச்செய்தியை யிப்போது சிவாகமக் கேள்வி சிந்தித்தலினால் வருந்தெளி வென்றுரைக்கும் பதிமுதல் முப்பதார்த்த சிவத்துவ பசுத்துவ விவேக பரோக்ஷ ஞானமுடையனாய்ப் பின்ன பரோக்ஷம்போ லபிநயத் தியானவானாய்ச் சிவமாத்திரதேய ஞேயத் தழுந்திச் சூனியப் போலிச் சிந்தனைச் சமாதிமானுமாய்ச் சமாதி சிவ சாக்ஷாத்கார பலஞ் சடுதி கொடுக்கும் பொருட்டு அன்பு செய்ய, கூடிய மரியாதி சிவபூசை பண்ண;

அந்நிலைமை யிந்நிலையி னடைந்த முறையாலே=சொல்லிய விதேக பரமுத்தி சிவ சாட்சாத்காரஞ் சதேக சீவன் முத்தியிலொருபடி சார்ந்த செய்தியாலே; (அதுவன்றியும் அந்நிலைமை பிறர் பசிதாகம்போல் ஒரு பிரகாரம் திருச்சியமானாலுஞ் சர்வதிருக் கர்த்திரு ரூபமாயது சிவமென்று வரு மாகம பரோக்ஷ ஞானத்தை);

இந்நிலையினடைந்த முறையாலே=தன் பசிதாகம்போ லிது சிவமென்று வரும் சீவன்முத்தி சிவ சாக்ஷாத்கார ரூபத்தினாற்சார்ந்த தன்மையினாலே; மாயமெலா நீங்கி=மலமுதற் பாச மோசித்து; மாறுத சிவானுபவ மருவிக்கொண்டே=தனது பிறப் பொருளறிவுச் சிற்சத்தியில் விளங்கித் தோன்றிப் பிரிவற்ற பிரபஞ்ச கர்ப்ப பிறப்பொருட் சிவ சாக்ஷாத்கார பூர்த்திக் கீர்த்திச் சிவானந்தத்தைத் தனது தற்பொருளறிவுச் சிற்சத்தியில் விளக்கித் தோற்றிப் பிரிவற்ற தற்பொருட் சிவ சாக்ஷாத்காரத்தாற் சாக்ஷாத்கரித்தனுபவித்துக் கொண்டு;

அரன் மலரடிக் கீழிருப்பன்=அப்படிப் புறப் பொருட் சிவசத்திக்கொத்து விரிந்து சித்த சித்துப் பிரபஞ்ச கர்ப்ப பிறப் பொருட் சிவனைச் சிருச்சியப் பிரபஞ்ச விலக்ஷண திருக்குருப்ப் பிரபஞ்ச லக்ஷண ச"

வதிருக்கிருத்து ரூபமாய்ப்பராக்காய்ப் பார்க்கும்பராக்குரூபப் பிறப்பொருட் பிறமாணரூப தற்பொருட் பிரமேய ரூப பிறப் பொருளறிவுச் சிற்சத்திச் சேர்மையில் பிறத்தியக் காய் வீழ்ந்து பதிமுதல் முப்பதார்த்தப் பிறப் பொருட் பிரமேய சேர்மையிற் றீண்டாத சிற்சத்தி மாத்திரத்தைப் பிரத்தியக் காய்ப் பார்க்கும் பிரத்தியக்கு ரூப பிறப் பொருட் பிரமாணரூப தற்பொருளறிவுச் சிற்சத்திக் குறிக் கிரமிகமாகச் சத்திமத்துரூபியாயுந் தற்பொருட் பிரமாதிரு ரூப சித்து ரூப மாத்திரதற் பொருளறிவனாகிய வந்தரான்ம ரூப சிற்சத்திக் குறிச் சிவ மாத்திர ரூபியாயுமிருப்பன். (க)

அபரோக்ஷப் போலிப் பரோக்ஷமாய்ப் பாஸிக்குஞ் சிவ மாத்திர தேய நிர்விகற்ப சமாதியிற் சாத்த மனோகங்கார புத்தி சங்கற்ப கர்வ போத சிற்றுச் சவிகற்ப நிர்விகற்ப சாத்த மாத்திர சர்வார்த்த சிவ சாக்ஷாத்காரத்திற் போலப்பதார்த்தங்கள் தோற்ற; தோற்றுமானாலந்தஞானம் பிறவி பெருக்கும் பிராகிருத மனோகங்கார புத்தி சங்கற்பகர்வபோத தூல சவிகற்ப ஞானந் துஷ்டஞ்சுத்தமன்றென்று சொல்லுகின்றார்.

பரஞானத்தாற்பரத்தைத்தரிசித்தார்பரமே
பார்த்திருப்பர்பதார்த்தங்கள்பாரார்பார்க்க
வருஞானம்பல்ஞானமஞ்ஞானவிகற்பம்
வாச்சியவாசகஞானம்வைந்தவந்தின்கலக்கந்
தருஞானம்போகஞாதிருஞானஞேயந்
தங்கியஞானஞ்சங்கற்பனைஞானமாகுந்
திருஞானமிவையெலாங்கடந்தசிவஞான
மாதலாற்சீவன்முத்தர்சிவமேகண்டிருப்பர்.

(இ-ள்). பதார்த்தங்கள் பாரா ரென்பது பாமுத்தி லென்று சிலர் படித்துப் பேசுவார்கள்; சர்வ பதார்த்த கர்ப்ப சிவ சாக்ஷாத் கார பூர்த்திப் பர முத்தியில் அவர்கள் தாழ்ந்த சமாதி நிலையைச் சாற்றுத லஞ்ஞான மதுவன்றித் தூரியனுஞ் சிவந் தோன்றுந் தானுந் தோன்றுந் தொல்லுக மெல்லாந் தன்னுள்ளே தோன்று மென்பது முதலிய வசன விரோதமுமா மென்பதறிக. (உ)

சாரூப முதலிய பத முத்திபர முத்தியன்றென்பது படிக்கின்றார்.

அநாதியுடலொன்றினைவிட்டொன்றுபற்றிக்கன்மா
லாயழிந்துவருதலாலந்தமில்லை
பினாதியருள்பெற்றவர்கணித்தவுருவத்தைப்
பெற்றிருக்கைமுத்தியெனிற்பெறும்பதமேயிதுவு
மினாதுநிலையிதுதானுங்காயமுண்டே
லிருங்கன்மமாயைமலமெல்லாமுண்டா
மனாதிதருமுடலாதிகாரியத்தாலநாதி
மலமறுக்குமருந்தற்றாலுடன்மாயுங்காணே.

(இ-ள்). அநாதிதருமுடல்=சிவனுமாயையுங் கொடுக்குஞ் சரீரம். மற்றையவெளிப்பொருள். (௩)

சமாதி சித்தித்தா லொருபிரகாரம் மலம் நீங்கிச் சீவன்முத்தி சிவ சாக்ஷாத்காரஞ் சித்திக்குஞ் சித்திக்கப் பின்பு சரீராந்தத்தின் மலமாவிர்தி நிவிர்த்திச் சுவபாவமாயிருக்கு மழியாதென்றிசைக்கின்றார்.

தெரிவரியமெய்ஞ்ஞானஞ்சேர்ந்தவாறே
சிவம்பிரகாசிக்குமிங்கேசீவன்முத்தனாகு
முரியமலமௌடதத்தாற்றடுப்புண்டவிடமு
மொள்ளெரியினொளிமுன்னிருளுந்தேற்றின்
வருபரல்சேர்நீர்மருவுகலங்கலும்போலாகி
மாயாதேதன்சத்திமாய்ந்துகாயந்
திரியுமளவும்முளதாய்ப்பின்புகாயஞ்
சேராதவகைதானுந்தேயுமன்றே.

வெளிப்பொருள். (௪)

மலத்திற்கு ஆவிர்தி நிவிர்த்தித் திரிபுவருமாகி லான்மாவுக்கு மந்தவிகார வருமென்றறைய மறுத்துணர்த்து கின்றார்.

ஆணவந்தானாதியந்தமடையாதாகு
மடையினந்தவான்மாவுமழியுமெனிற்செம்பிற்
காணலுறுங்களிம்பிரதகுளிகைபரிசிக்கக்
கழியுஞ்செம்புருநிற்கக்கண்டோமன்றே

தாணுவின்றன்கழலணையத்தவிருமலந்தவிர்ந்தாற்
றான்சுத்தனுவிருக்கைமுத்தியரன்றாளைப்
பூணவேண்டுவதொன்றுமில்லையெனினருக்கன்
புகுதவிருள்போமடியிற்பொருந்தமலம்போமே.

(இ-ள்). அப்படியாணவ மல மாவிர்தி நிவிர்த்தி ஸ்வபாவ லக்ஷண மாய்க் கெடாது நீங்காமல் நீங்குமாகில்; தாணு வின்றன் கழலணையத் தவிருமலம்=முத்தி கிர்த்திய தீக்ஷா கன்மத்தில் விளங்கிச் சாக்ஷாத் தீக்ஷா நாமந் தரித்த சிவக் கிரியா சத்தி சங்கற்ப சம்பந்தியாக மலம் அப் படி நீங்கும்; தவிர்ந்தால்=நீங்கினால்; தான் சுத்தனு விருக்கை முத்தி =தான் நின்மலனாய் நிற்றல் மாத்திரமே மோக்ஷம்; அரன்றாளைப் பூண வேண்டுவ தொன்றுமில்லை யெனில்=திரும்ப அந்தத் தீக்ஷா லக்ஷண சிவ சத்தி சங்கற்ப சம்பந்தஞ் சார வேண்டுவதில்லை யென்று மலம்போ முத்தி வாதியாயிருந்து நீ சொல்லில்; (மல முத்தி மாத்திர முத்தியன்று மல சிவத்துவங்களினது முத்தி வியத்தி யிரண்டு மோக்ஷமென்று முந்தி நாஞ் சொல்லுதலால்); அருக்கன் புகுத விருள்போம்; (அப்படி) அடியிற் பொருந்த மலம் போமே=வியத்தி கிர்த்திய தீக்ஷா கன்மத்தில் விளங் கிய சிவக்கிரியா சத்தி சங்கற்பத்திற் சம்பந்திக்க முன் சொல்லிய முத்தி கிர்த்திய தீக்ஷா கன்மத்தில் விளங்கிய சிவக்கிரியா சத்தி சங்கற்ப சம் பந்தத்தால் மலம் போயும் மகா மாயையில் மலம் வைத்த மல வாசனை சிவத்துவ தம்பனம் பண்ணிக் கொண்டு மாறுதிருக்கு மந்த மல வா சனை மகா மாயை யிலயமாந்தானே;

நன்றிதுவாகினு மிதினாலு முத்தியே சொல்லப்பட்டது; வியத்தி விளங்கச் சொல்லப்பட்டதில்லை; சத்தியமே சாற்றியது; மல வாசனு முத்தி கிர்த்தியமே செவ்வரத்தம்பூச் சிவப்பு பாதியுற்ற படிக வெண்மை விளக்கம் போல; மல வாசனே பாதியுற்றுத் திரிவின்றி யிருந்தபடி யிரு க்குஞ் சிவத்துவாபி வியத்தியை வியஞ் சகந் திரும்ப விரும்பாமல் விகி ர்தி விட்டிருந்த படி யிருத்துஞ் சிவத்துவாபி வியத்தி கிர்த்தியம் விகா ரம் வருமாதலால் வேறென்றன்று. (ரு)

அனாதி பாச பந்த மகலுமா றெப்படி யென்ன வுத்தர முரைக்கின்றார்,

நெல்லினுக்குத்தவிடுமிகளனாதியாய
நெல்லைவிட்டுநீங்கியவைநின்றநிலைநிகழ்த்திர்

சொல்லியிடிற்றுகளற்றவரிசியின்பாலில்லேத்
　　தொக்கிருந்துமற்ரெருநெற்ரேற்றிடாவா
மெல்லவிவைவிடுமறவேயவைபோலவணுவை
　　மேவுமலமுடல்கன்மமனுதிவிட்டேகீங்கும்
நல்லசிவமுத்தியின்கட்பெத்தான்மாவை
　　நணுகிநிற்குமாதலினுஞசமுமின்ருமே.

பெத்தான்மாக்களுக்குச் சிவாதீனமே சுவாதந்திரிய
மில்லே யென்று பேசுகின்ருர்.

எவ்விடத்துமிறையடியையின்றியமைந்தொன்றையறிந்
　　தியற்றிடாவுயிர்களீசன்ருனுஞ்
செவ்விதினினுளம்புகுந்துசெய்தியெல்லாமுணர்ந்து
　　சேட்டிப்பித்தெங்குமாய்ச்செறிந்துநிற்ப
னிவ்வுயிர்கடோற்றும்போதவனேயின்றித்தோற்ரு
　　விவற்றினுக்கம்முதலெழுத்துக்கெல்லாநிற்கு
மவ்வுயிர்போனின்றிடுவனுதலாறு
　　மரனடியையகன்றுநிற்பதெங்கேயாமே.

(இ-ள்). பெத்தான்மாவைக் குறித் துரைத்திருக்க விவ்விடத்துச் சிலர் முத்தான்மாவையுங் குறித் துரைத்ததென்று கொண்டு முத்தான்மாவுக்குச் சிவனேடொத்து வியாபித் தொருசிவசாதியாய் நிற்றலே சிவனேடகலாமல் நிற்பனென்பதுங் கலப்பாய் நிற்பதென்பதும் நாஞ்சொல்லுஞ் சுத்தாத்துவைத சிவசித்தாந்த மென்பதை யறியாமல் அரனடியையகன்று நிற்பதெங்கேயாமே என்பதற்குப் பிரிந்து நிற்பதென்று சொல்லுவார்களென் றெண்ணிக் கொண்டு விசிட்டாத்துவைதமாய் வேறறக்கலந்து நிற்பனென்று பரிகரித்தார்களது அனுதிமுத்த சிவனுக்கு மான்வுக்குஞ் சமவியாபகத்துவ மிருக்கிறபடியினுலே அப்படிப் பிரிந்திருக்குமென்று சொல்லுவார்களில்லே. பிரியாதிருந்தாலும் அமூர்த்த வஸ்துவுககுப் பரிசகலப் பென்பதில்லே;

　　ஸர்வவஸ்துஷ்வநுஸ்ஸூத மஸ்வயம்ஸர்வவஸ்துபிঃ
　　ஸர்வம்வ்யாப்யாவதிஷ்டேத நசஸம்யுஜ்யதெப்ரபுঃ

என்றுசிவாகம வசனமிருக்கையால் சிவசமவாதி சொல்லுஞ் சாமியத்துச்கு வேருய் சித்தாந்தி சொல்லும் சிவாத்துவைத சிவ சாமியம்

சிவன் சொன்னதாதலால் அதிற் சொல்லும் தூஷணம் சிவதூஷண மென்பதறியாமற் சிலர் சொன்னார்; அவர்க்குப் பிராயச்சித்தம் சிவனே பண்ணுவர். (எ)

அசிவ யோகிக்கு அப்ரத்தியக்ஷன் சிவ தெத்த சிவ சாக்ஷாத் கார நிஷ்கள நிராலம்ப சித்த சிவ யோகிகளுக்குச் சிவன் பிரத்தியக்ஷனென்று பேசுகின்றார்.

எங்குந்தானிறைந்துசிவனின்றானகி
லெல்லாருங்காணவேவேண்டுந்தானென்னி
லிங்குந்தானந்தகருக்கிரவியிருளாகு
மீசனருட்கண்ணில்லார்க்கொளியாயேயிருளாம்
பங்கந்தானெழும்பதுமம்பக்குவத்தையடையப்
பரிதியலர்த்திடுவதுபோற்பருவஞ்சேருயிர்க்குத்
துங்கவரன்ஞானக்கண்கொடுத்தருளினாலே
சோதிக்குட்சோதியாய்த்தோன்றிடுவன்காணே.

(இ-ள்). கொடுத்து=விளக்கி; சோதிக்குட் சோதியாய்=பராக்குரூப சத்திக்குட் பிரத்தியக்கு ரூப சத்திமானாய். மற்றைய வெளிப்பொருள். (அ)

வாதிகள் கருத்து மறுத்துணர்த்துகின்றார்.

சென்றணையுநிழல்போலச்சிவனிற்பனென்னிற்
சென்றணையுமவன்முதலிசிவத்தையணைந்தொன்றாய்
நின்றவுயிர்கெட்டதெனிற்கெட்டதணைவின்றாம்
நின்றதேற்கேடில்லையணைந்துகெட்டதென்னிற்
பொன்றினதென்முத்தியினைப்பெற்றவரார்புகனீ
பொன்றுகையேமுத்தியெனிற்புருடனித்தனன்றா
மொன்றியிடுநீரொடுநீர்சேர்ந்தாற்போலென்னி
லொருபொருளாமதிபதியோடுயிர்பொருளொன்றன்றே.

வினாவுத்தர மறுப்பு; பொருள் வெளிப்பொருள். (க)

முத்தியினிற் சிவனு முத்தான்மாவும் பொன்னும் பொன்னும் போற் புணர்ந்தொரு பொருளா யிருப்பார்க ளென்றுசிவாத்துவைதிப் போலிப் புருஷனொருவன் புகல மறுத்துரைக்கின்றார்.

செம்பிரதகுளிகையினாற்களிம்பற்றுப்பொன்னாய்ச்
செம்பொனுடன்சேருமலஞ்சிதைந்தாற்சிவ

னம்பனுடன்கூடுமெனிற்பொன்போலல்ல
னற்குளிகைபோலவரனணுகுமலம்போக்கி
யம்பொனடிக்கீழ்வைப்பனருங்களங்கமறுக்கு
மக்குளிகைதானும்பொன்னாகாதாகு
மும்பர்பிரானுற்பத்தியாதிகளுக்குரிய
னுயிர்தானுஞ்சிவானுபவமொன்றினுக்குமுரித்தே.

(இ-ள்). செம்பிரத குளிகையினாற் களிம்பற்றுப் பொன்னாய்ச் செம்பொனுடன் சேரும்=அப்படி மலம் சிதைந்தால் முத்திமானாய்; சீவனம்பனுடன் கூடுமெனில்=சிவனோ டயிக்கிய மாமென்று செப்பில்; சிவன் பொன்போ லல்லன்; (பொன்னுக்கு மொருபொருள் போல்பவன் ஆகையால் நற்குளிகை போல்வன்); சீவனுக்கு நணுகுமலம் போக்கி (ஒருபுடை யொப்புவமை யாதலால்) அம்பொ னடிக்கீழ் வைப்பன்=(குளிகையும் பொன்னும்போற் றனக்கு வேற்றுச் சாதியாகாமற் குளிகை பொன்னொளிப் பிரகாசம் பண்ணுவதுபோற் சிவத்துவப் பிரகாசஞ் செய்தொத்த சிவசாதியாக்கித்) தனது சத்திக் கொத்து விரிந்து அந்தச் சத்தி பதார்த்தம் பார்த் தொத்துப் போய்ப் பராக்காய்ப் பதி முதற் பதார்த்தம் பார்க்கும் பராக்குரூப சீவசிற்சத்தியைப் பதி முதற்பதார்த்தம் பாராது பிறத்தியக்காய்ப் பார்க்கும் பிறத்தியக்குரூபசிற்சத்திக் குறிச்சிவனாகச் சீவனைப்பண்ணுவன்; அருங்களங்க மறுக்கு மக்குளிகை தானும் பொன்னாகாதாகும்=குளிகையாக வுபமிக்கப்பட்ட சிவனிப் பொன்னாக வுபமிக்கப்பட்ட சீவனாகான்;

ஒரு பொருளல்லாதிருந்தாலு மொரு சிவசாதியா யொத்த பொருளாமென் றுரைத்தலால் பஞ்சகிர்த்திய முத்தசிவன்பண்ண வேண்டுமென்பதற்குத்தரம்.

உம்பர் பிரானுற்பத்தி யாதிகளுக் குரியன்=சிவன்சிருஷ்டி முதலிய பஞ்சகிர்த்திய கிருபா கிர்த்துக் கருகன்; உயிர்தான்=முத்தசிவன்தான்; சிவாநுபவ மொன்றினுக்கு முரித்தே=சிவ சங்கற்பத்திற்கு வேற்றுச் சங்கற்பம் வேற்றுப் பலம் விட்ட பிரதக்கவர்ச்சநீய சங்கற்ப சம்சித்த பஞ்ச கிர்த்திய கிர்த்தானாலும் சிவன்போற் கிருபா சங்கற்ப சம்சித்த கிர்த்திய கிர்த்தல்லாமையாற் றனது பராக்குரூப சிற்சத்தி விர்த்திக்குறி கர்வார்த்த சிவசாக்ஷாத் காரபூர்த்திக் கிர்த்திச் சிவானந்த நாம சிவபோகத்துக்கருக பிரத்தியக்குரூப சிற்சத்திலிங்கச் சிறப்புச்

சிதந்தரான்ம பொதுச் சித்துர்குறி கரண கர்த்திரு ரூப வநுபவா நுபவி திருக் ஸ்வரூபீ யாகாநிற்கும். (௧௦)

சிவனும் சீவனுஞ் சித்தொரு சாதி யிருசித்துப் பொருளா யிருக்குமென்ப திசையா தொரு சித்துப் பொருளொன்றுரைக்க மறுத் துணர்த்துகின்றார்.

சிவன்சீவனென்றிரண்டுஞ்சித்தொன்றாமென்னிற்
சிவனருட்சித்திவனருளைச்சேருஞ்சித்தவன்றான்
பவங்கேடுபுத்திமுத்திபண்ணுஞ்சித்தவற்றிற்
படியுஞ்சித்தறிவிக்கப்படுஞ்சித்துமிவன்றா
னவன்றானெயறியுஞ்சித்தாதலினாலிரண்டு
மணைந்தாலுமொன்றாகாதனனியமாயிருக்கு
மிவன்றானும்புத்தியுஞ்சித்திவனாமோபுத்தி
யிதுவசித்தென்றிடிலவனுக்கிவனுமசித்தாமே.

(இ-ள்). சிவன் சீவனென்றிரண்டுஞ் சித்து; சிற்பொருள் விபுப் பொருளு மாதலால் ஒன்றை விட்டொன்றிருக்குந் தானமுமில்லை (அதனால்); ஒன்றாம்=ஐக்கியமாம்; என்னில்=அமூர்த்த விபுப் பொருளொன்றுக்கொன்று தட்டா துள்ளும் புறம்பு மொத்திருக்கு மஃதிருக்க அந்தச் சீவ சிவைக்கியம் ஆதியானா னனித்தியம், அனாதியானால் வேற்றுமைக்குறி விளம்பப்படாது; (வேற்றுமைக் குறி சண்டோங் கேட்டோமாகி யிருவர்க்கும் வைக்கப்படும்; அந்த வேற்றுமைக் குறியாதோ வென்னில்); சிவனருட் சித்து=சீவனுக்குப் பரமுத்தி வியத்திக் குறியனுக்கிரகம் பண்ணுஞ் சித்து; இவன்; சிவனருளைச் சேருஞ் சித்து=அந்தச் சிவானுக்கிரகத்தைச் சிவனிடத்தினின்றும் பெறுஞ் சித்து; அவன்றான்=சிவன்றான்; பவங் கேடு புத்தி முத்தி பண்ணுஞ் சித்து=சிருட்டி திதி சங்கார திரோபாவ பத முத்தி யனுக் கிரகங்களைப் பண்ணுஞ் சித்து; அவற்றிற் படியுஞ் சித்து=அந்தப் பஞ்ச கிர்த்திய பரதந்திரத்தி லகப்பட்டுக் சட்டுண்ணுஞ் சித்து; அறிவிக்கப்படுஞ் சித்துமிவன்றான்=புத்தி முத்திக் கிரமத்திற் சாபேட்ச சிற்றறிவு நிரபேட்ச பேரறிவுகளினா லுணர்த்து விக்க யோக்கியமாகுஞ் சித்துஞ் சீவன்றான்; அவன்றானே யறிவுஞ் சித்து=சிவன் சுவதந்திரவறிவன்; ஆதலினாலிரண்டு மணைந்தாலும்=முத்தியிற் சாயுச்சியமானாலும்; ஒன்றாகாது=ஒரு பொருளாகாது; அனனியமாயிருக்கும்=அனனிய சாயுச்சிய முதற் சம்பந்தச்சொ லிவ்விடத்துச் சாதிர்ச்சியப்

பொருட்சொல்லாதலா லொத்திருக்கும்; (பந்தத்தில்)இவன்ருனுஞ்சித்து புத்தியுஞ் சித்து; (சித்தெனும் வசன மாத்திரத்தினாலே சித்தை விளக்குதலால், சித்தென் றுபசரிக்கப்படும்; புத்தியிவனுமோ; (ஆகாது); இது வசித்தென்றிடில்=புத்திச டமென்னில்; அவனுக்கு=சிவனுக்கு; இவனும்=சீவனும்; அசித்தாமே=(ஏகாரத் தெடுப்பினாலே யுபாதி தள்ளி ஸ்வரூப லக்ஷணத்தினாலே), சிவனுக்கொத்த சித்துத்தானே அசித்தன்று;

ஸ்வரூப லக்ஷணத்தினால் சித்துப்புத்தி தடத்த லக்ஷணத்தினாற் சித்தென் றுபசரிக்கப்பட்டதுபோலப் பசுத்துவ மிருத்தலாற் றடத்த லக்ஷணத்தினாலே யசித்தென் றுபசரிக்கப்பட்டது; முத்தியிலொத்த சித்தே. (கக)

சிவன் சீவனுக்குப் பரமுத்தி பண்ணும் பரிசு பகர்கின்றார்.

இரும்பைக்காந்தம்வலித்தாற்போலியைந்தங்குயிரை
யெரியிரும்பைச்செய்வதுபோலிவனைத்தானாக்கி
யரும்பித்திந்தனத்தையனலழிப்பதுபோன்மலத்தை
யறுத்தமலனப்பணைந்தவுப்பேபோலணைந்து
விரும்பிப்பொன்னினைக்குளிகையொளிப்பதுபோலடக்கி
மேளித்துத்தானெல்லாம்வேதிப்பானாகிக்
கரும்பைத்தேனைப்பாகைக்கனியமுதைக்கண்டைக்
கட்டியையொத்திருப்பனந்தமுத்தியினிற்கலந்தே.

(இ-ள்). நல்ல துமதாசாரியர் படல பாடன வாசனா மார்ச்சன மாத்ரத்தினால் வைத்தியனாகிய நிமித்த கர்த்தாவால் கண்ணொளி விளங்குவதுபோல மல பாடன வாசனா மார்ச்சன மாத்திரத்தினாற் சிவனாகிய நிமித்த கர்த்தாவாற் சிவத்துவம் விளங்கு மென்று பிறர் மதம் பிடுங்குமொரு சுத்தாத்துவைத சித்தாந்த திருட்டாந்த வார்த்தை செப்பாது பிறர் மத திருட்டாந்தப் பேச்சுப் பேசிய தேது? அஃதாவது இரும்பைக் காந்தம் வலித்தாற் போலிசைந் தங்குயிரை யென்றது முத்தியிலுஞ் சுதந்தரிய மில்லை யெனும் பிரயோச்சிய கர்த்திருத்துவ வாதி மததிருட்டாந்தமாம்;

எரி யிரும்பைச் செய்வது போலிவனைத் தானாக்கி யென்றது சிவாவேசஞ் செப்புங் காபாலமத திருட்டாந்தமாம்; அரும்பித் திந்தனத்தை யனலழிப்பது போல் மலத்தை யழித்தென்றது சாட்டத்தால் மறைப்

புண்டு கடைய முகிழ்த் தெரியிந்தனத்தை யெரித்தழித்தலால் மலமழிக்குஞ்சிவனுக்கு மறைப்பில்லாமையாற் கடைபவனுக் கொப்புச் சிவன், காட்டத்தில் மறைந்திருந் துதித்த வன்னி போல் மலத்தில் மறைந்திருந் துதிக்கு முயிர் சிவத்துவ மாகையால் விஷம திருட்டாந்தமாம்; அல்ல தான்ம்ஞானத்தால் முத்தியை முயலும் விவர்த்த வேதாந்திமதம் மலம் போமுத்திவாதிமத மிருவர் மததிருட்டாந்தமாம்;

அப்பணைந்தவுப்பே போலணைந் தென்றது விசிட்டாத்துவைதம் விளம்பும் ராமாநுஜமத திருட்டாந்தமாம்; விரும்பிப் பொன்னினைக் குளிகை யொழிப்பதுபோ லடக்கி யென்றது நாராயணப் பிரகிர்த் யிலயவாதி பாஞ்சராத்திரி மததிருட்டாந்தமாம்; மேளித்துத் தானெல்லாம் வேதிப்பானுதி யென்றது சிவகுண சங்கிராந்தி சொல்லும் பாசுபத மத திருட்டாந்தாபாசமாம்;

சரும்பை தேனைப் பாகைக் கனி யமுதைக் கண்டைக் கட்டியை யொத்திருப்பனென்றது சாங்கியைகதேசி சத்துவ சமபோகவாதி மததிருட்டாந்தமாம்; முத்தியினிற் கலந்தே யென்றது கண்டைக் கட்டியை யொத்தென்பதை யிங்கு மிசைத்துக் கலந்தே யிருப்ப னென்பது பரிணத வேதாந்தமத திருட்டாந்தமாம்; இப்படியிருக்க எப்படிச் சிவ சித்தாந்தப்பொருளுணை நீருணைப்பீர்? சத்தியம் நீ சாற்றியது. நம தாசாரியர் முற்றுவமை யுன்னிச் சொன்னவரன்று; ஒருபுடை யொப்புருவகங் கருதி யுணைத்தாராதலால்; மலவசமாகி மயங்கு முயிணைத் தன்வசமாக்கி மல முத்தி பண்ணிச் சிவத்துவாபி வியத்தி விளைத்துத் தனக்கொப்பு வித்தேவுத லியற்றுதற் றன்மைச் சம்பந்தஞ் சற்று முற்றிராது முற்றுமறுத்துச் சித்துச் சிவசாதியாக்கி யொத்தொரு மித்திர சித்துச் சிவசாதிக் கலப்பாயிருப்பானென் றிசைய வினிதாய்ப் பொரு ளிசைவிப்பேம்.

குளிகை=பொன்னைத் தனக்குட் கரக்குமிரத குளிகை; மேளித்து= மிச்சிரமித்து; வேதிப்பானுகி=தன்மய மாக்குவானுகி; மற்றைய வெளிப்பொருள்.

இதனுற் கரும்பைத் தேனை யென்பன முதலியவும் மதங்கத்திற் சொல்லிய வெழுவகை முத்திக்குத் திருட்டாந்தமா மென்றுஞ் சீவனுக் கியற்கையாய்ச் சிவத்துவ மில்லைச் சிவ வியத்திக் கலப்பினுற் செயற்கைச் சிவத்துவஞ் சித்திக்குமென்று முணை யுணைக்குஞ் சிலர் மதந் திக் கற்றுப்போயின. (கஉ)

பதிரேொாஞ்சூத்திரம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩உ௩.

## பன்னிரண்டாஞ் சூத்திரம்.

சமாதி கூடியிருக்குஞ் சமயத்துச் சிவோகம் பாவனுபுத்தி பண்ணிப் பூசா நமஸ்கார காரிய புத்தி பண்ணுதிருந்தாலுஞ் சமாதி சலனம் வந்த காலத்துச் சரியானுட்டானந் தாக்கித் தாக்கிச் சமாதியிலே சாரவேணுமென்று பன்னிரண்டாஞ் சூத்திரத்திற் படுத்திச் சரியை படித்து முடிக்கின்றார்.

செங்கமலத்தாளிணைகள்சேரவொட்டாத்
திரிமலங்களறுத்தீசனேசரொடுஞ்செறிந்திட்
டங்கவர்தந்திருவேடமாலயங்களெல்லா
மரனெனவேதொழுதிறைஞ்சியாடிப்பாடி
யெங்குமியாமொருவர்க்குமெளியோமல்லோ
மியாவர்க்குமேலானேமென்றிறுமாப்பெய்தித்
திங்கண்முடியாரடியாரடியோமென்று
திரிந்திடுவர்சிவஞானச்செய்தியுடையோரே.

(இ-ள்). செங்க மலத்தாளிணைகள் = ஞானக் கிரியா சத்திக் குறிச் சிவத்துவத்தை; திரிமலங்க ளறுத்து = தேசத்தி னிமித்தஞ் சிறிது சேஷித்து நிற்சத் தீட்சா சுத்தி பண்ணிக் கொண்டு; சிவ ஞானச் செய்தியுடையோர் = நிர் விகற்ப சமாதி நீங்கிச் சவிகற்ப சமாதி சேர்ந்தோர்; மற்றைய வெளிப்பொருள்.

இதுவுமது.

ஈசனுக்கன்பில்லாரடியவர்க்கன்பில்லா
ரெவ்வுயிர்க்குமன்பில்லார்தமக்குமன்பில்லார்
பேசுவதென்னறிவிலாப்பிணங்களைநாமிணங்கிற்
பிறப்பினினுமிறப்பினினும்பிணங்கிடுவர்விடுநீ
யாசையொடுமரனடியாரடியாரையடைந்திட்
டவர்கருமமுன்கருமமாகச்செய்து
கூசிமொழிந்தருண்ஞானக்குறியினின்று
கும்பிட்டுத்தட்டமிட்டுக்கூத்தாடித்திரியே.

(இ-ள்): ஞானக் குறியினின்று தாசோகம் பாவனை தாக்கச் சரியை சரிக்குமிடத்துஞ் சிவோகம் பாவனை ஞானஞ் சரித்துத் தரிப்பவ னென்று தாற்பரியம்; மற்றைய வெளிப்பொருள். (உ)

சிவோகம் பாவனை பண்ணு மவர்க்குத் தாசோகம் பாவனை சத்தருவாகு லும் பராக்குற்ற பொது பாவனை பலிக்கு முபாயம் பண்ணலா மென்று படிக்கின்றார்.

அறிவரியான்றனையறியயாக்கைபாக்கி
யங்கங்கேயுயிர்க்குயிராயறிவுகொடுத்தருளாற்
செறிதலினற்றிருவேடஞ்சிவனுருவேயாகுஞ்
சிவோகம்பாவிக்குமத்தாற்சிவனுமாவர்
குறியதனலிதயத்தேயரனைக்கூடுங்
கொள்கையினுலரனவர்குறியொடுதாமழியு
நெறியதனற்சிவமேயாய்நின்றிடுவரென்று
னேசத்தாற்றெழுதிடுநீபாசத்தார்விடவே.

(இ-ள்). சிவோகம பாவிக்குமத்தால்=(அறியாமை யறிவகற்றி யெனுந் திருவிருத்த முதலியவற்றிற் செப்பியபடி) சிவோகம் பாவனை பண்ணுதலால்; சிவனுமாவர்; (பாவனு சாமர்த்திய மில்லாதபோது) குறியதனலிதயத்தேயரனைக் கூடுங் கொள்கையினுல்=இருதய கமலத்திற் றீபா கிருதி நாதா கிருதி சதாசிவா கிருதி முதற் சகள நிட்கள சகள சாகாரத் தன்மையினுற் சிவனைத் தியானிக்குஞ் செய்தியினலே; அவனவர்=சிவசாமான சாதிச் சிவனவர்; குறியொடு தாமழியும் நெறியதனல்=நிராகார சிவ சமாதியில்; சிவனேயாய் நின்றிடுவர்=சிவனைப் போற் சிவனவர். மற்றைய வெளிப்பொருள். (௬)

யோக சாமர்த்திய மில்லார்க்குத் தியானோ பாய முரைக்கின்றார்.

திருக்கோயிலுள்ளிருக்குந்திருமேனிதன்னைச்
சிவனெனவேகண்டவர்க்குச்சிவனுறைவனங்கே
யுருக்கோலிமந்திரத்தாலேநினையுமவர்க்கு
முளனெங்குமிலனிங்குமுளனென்பார்க்கு
மிருப்பாயவடிவாகியிந்தனத்தினெரிபோன்
மந்திரத்தின்வந்துதித்துமிருஞ்சுரபிக்கெங்கு
முருக்காணவொண்ணுதபான்முலைப்பால்விம்மி
யொழுகுவதுபோல்வெளிப்பட்டருளுவனன்பர்க்கே.

(இ-ள்). ஸ்ரீகண்ட தேகதேகியாய்த் தரிசனங்கொடுப்ப னென்று சித்தாந்தம். மற்றைய வெளிப்பொருள். (ச)

ஆகையால் நிராலம்ப சிவயோக சமாதிமானாகிய ஞானி நிராலம்ப சிவ யோகமாகு ஞானநுட்டானத்தோடு சாலம்ப சிவ யோகமாகும் யோகக்கிரியா சரியானுட்டான மூன்றிற் குரியன்; மற்றையர் மூவருந் தங்கள் தங்கள் மரியாதிக்குரிய ரென்று மதனால் நிராலம்ப சிவயோக குருவே குரு வென்று நிகழ்த்துகின்றார்.

ஞானயோகக்கிரியைசரியைநாலு
நாதனறன்பணிஞானிநாலினுக்குமுரிய
னூனமிலாயோகமுதன்மூன்றினுக்குமுரியன்
யோகிகிரியாவான்றனெண்கிரியையாதி
யானவிரண்டிக்குரியன்சரியையினின்றோ
னச்சரியைக்கேயுரியனாதலினாலியார்க்கு
மீனமிலாஞானகுருவேகுருவுமிவனே
யீசனிவன்றானென்றுமிறைஞ்சியேத்தே.

வெளிப்பொருள். (ரு)

மந்திரத்தாற் சாலம்பயோக முதலிய தந்திரத்தாற் சாவதிச் சுவாவதித் திரிகால ஞான முதலிய பல முண்டாம்; நிராலம்ப சிவ யோக குருப தேசத்தாற் சிவத்துவம் பொருந்தும்; நிராலம்ப சிவ யோகப் பொருட் சித்தாந்த மகா வாக்கிய ஞானம் வரும்; மற்றொன்றால் வாரா தென்றுரைக்கின்றார்.

மந்திரத்தான்மருந்துகளால்வாய்த்தவியோகத்தான்
மணியிரதகுளிகைகளான்மற்றுமற்றுந்
தந்திரத்தேசொன்னபடிசெய்யவேத
சகலகலைஞானங்கடிரிகாலஞான
மந்தமிலாவணிமாதிஞானங்களெல்லா
மடைந்திடுமாசானருளாலடிசேர்ஞானம்
வந்திடுமன்றொன்றாலும்வாராதாகு
மற்றவைபுமவனருளான்மருவுமன்றே.

வெளிப்பொருள். (சு)

குருவினது பெருமை கூறுகின்றார்.

பரம்பிரமமிவனென்றும்பரசிவன்றானென்றும்
பரஞானமிவனென்றும்பராபரன்றானென்று
மரன்றருஞ்சீர்நிலையெல்லாமிவனேயென்று
மருட்குருவைவழிபடவேயவனிவன்றானாயே
யிரங்கியவாரணமாமைமீனண்டஞ்சினையை
யியல்பினொடும்பரிசித்துநினைந்தும்பார்த்தும்
பரிந்திவைதாமாக்குவபோற்சிவமேயாக்கும்
பரிசித்துஞ்சிந்தித்தும்பார்த்துந்தானே.

(இ-ள்). பரம்=சுத்த சிவன்றா னென்றும்; பிரமம்=சுத்த சிவ மத்திய நிர்த்த சிவ மிவன்றா னென்றும்; பரசிவன்றானென்றும்=இரு பரசிவனெனு மிலய சிவன்றா னென்றும்; பராபரன் றானென்றும்=அனுகத சிவ னென்னும் போக சிவன்றா னென்றும்; பரஞான மிவ னென்றும் =ஞானக் கிரியாப் பிரவிர்த்தி மானாகிய சதாசிவ னென்னு மதிகார சிவன்றா னென்றும்; அரன் றருஞ் சீர் நிலை யெல்லாம்=மகேசுரன் உருத்திரன் மால் பிரமன் முதற் சிவ பேத மனைத்தும்; இவன்றா னென்றும்; (ஆரோபிதசிவாத்துவிதத்தினாலே); அருட் குருவை வழிபடவே=அந்தச் சிவனிந்தக் குருதேகத்தி லாவேசித்திந்தக் குருவாயே கிருபா சமுத்திரனாகிய தேசிகனைப் பாவனைப்பண்ண; அவனிவன்றானாயே=அந்தச் சிவன் இந்தக் குருதேகத்தில் ஆவேசித் திந்தக் குருவாய். இரங்கிய வாரண முதற் பதப் பொருள் வெளிப்பொருள். இம் முத்திருட்டாந்த தாட்டாந்திகப் பொருளுணர்ந் துரைக்கு மிடத்துயிர்க்கியற்கையாய் மலத்தின் மறைந்த சிவத்துவஞ் சிவனால் விளங்கு மெனும் பொருள் விளங்கிற்று.

பன்னிரண்டாஞ் சூத்திர முற்றுப்பெற்றது.

ஆ திருவிருத்தம் கூகூ0

---

சொல்லினாவிற்றுரிசறுஞ்சோத்திரத்
தொல்லுமேற்சிவஞானமுதித்திடுஞ்
செல்லுமெய்யருணந்திசெய்சித்திக்கு
நல்லஞானப்ரகாசனவிற்றுணை.

# அருஞ்பதப்பொருள்.

சிரவணம்-கேட்டல்
திருச்சியம்-திருட்டிக்கப்படுவது
திருஷ்டம்-திருச்சியமாகாதது
சுட்கம்-வரட்சி
பின்னம்-வேறுதல்
சுரோதா-கேட்கிறவன்
சுவத்தி-மங்கலம்
லீனம்-இலயித்தல்
சுவேதம்-வெண்மை
சூசனம்-குறிப்பு
சூத்திரம்-நூல்
சைதன்னியம்-அறிவு
தாரகம்-துணை
தியாச்சியம்-தள்ளத்தக்கது
ஸ்திரம்-உறுதி
திருத்தி-பூரணம்
திருக்கு-ஞானம்
தீபகம்-விளக்கு
துல்லபம்-அரிது
தேஜசு-ஒளி
நிக்கிரகத்தானம்-தோல்வித்தானம்
நிஷேதம்-விலக்கு
நிச்சுவாசம்-சுவாசமின்மை
நிபாதம்-விழுதல்
ஆலம்பம்-பற்றுக்கோடு
நூனம்-குறைவு
நேதி-இப்படியன்றெனல்
பகிரங்கம்-வெளி
கஞ்சுகம்-சட்டை
புஞ்சம்-கூட்டம்
பராமர்சம்-பழக்கம்
பாவம்-பாவகம்; உள்ளது
பரோக்ஷம்-அப்பிரத்தியக்ஷம்
அபரோக்ஷம்-பிரத்தியக்ஷம்
பரிக்கிரகம்-எடுக்கதக்க
பிரஸ்தானம்-பிரயாணம்
பிரத்தியக்கு-வேறு
பிரசன்னம்-வெளிப்படுதல்
பிரபஞ்சம்-விரிவு, உலகம்
பிரதி-வேறானது
பிரகிருதி-பகுதி
பிரபாவம்-கீர்த்தி
பிரபிருதி-முதலிய
பிரபோதம்-நல்லஞானம்
பிரயோகம்-செலுத்தல்
பிரசாதம்-கோவில்
பிராந்தி-மயக்கம்
பிரதிஞ்ஞை-மேற்கோள்
புரித்தல்-தோற்றல்
புடம்-விளக்கம்
பும்-புருடன்
அருகம்-சமீபம், யோக்கியதை
பூச்சியம்-பூசிக்கத்தக்கது
பௌத்தம்-புத்திசம்பந்தம்
போத்திருத்துவம்-அனுபவத்துவம்
மவுட்டியம்-மூடம்
லிபி-எழுத்து
அலேகம்-எழுதாதது
பிரதமர்-முதலானவர்
கர்த்திருத்துவம்-தொழிலுடைமை
களங்கம்-சுத்தமின்மை
காரணம்-காரியத்தின்முனுள்ளது
இதம்-பற்று
கிருத்து-செய்தல்
அகிலம் } முழுதும்
நிகிலம் }
அகசு-பகல்
ராத்திரம்-இரவு
கிரமம்-ஒழுங்கு
அக்கிரம்-நுனி
கிராந்தம்-கடந்த
நியாசம்-துறத்தல், நியசித்தல்
ஆகசு-குற்றம்
ஈனம்-குற்றம்
அங்கி-நெருப்பு, அங்கமுடையது
அங்கம்-உறுப்பு
அங்குரம்-முளை
அங்குலம்-விரல்
சங்கற்பம்-கற்பனை
சத்தியம் } மெய்
தத்துவம் }
நிர்வாணம்-முத்தி
சத்திய-உடனே
அசலம்-அசைவற்றது
சித்து-அறிவு, ஞானம்
சாதாரணம்-பொது

அசிந்தன்-சிவன்
சேதனம்-அறிவு
ஸ்மிதம்-மகிழ்ச்சி
அஞ்சனம்-மலம், மை
உத்தேசனம்-விளக்கம்
ஞத்துவம்-அறிவு
அஞ்ஞானம்-ஞானமின்மை
அணு-ஆன்மா, பரமாணு
தன்மம்-குணம்
தன்மி-குணி
அதிகரணம்-இடமாக்கல்
அதிகாரம்-தொழில்
அதிசயம்-முன்காணாமை
சூக்குமம்-நுண்மை
அதிஷ்டம்-காணாமை
அதிஷ்டானம்-இடமாயிருத்தல்
அதிஷ்டேயம்-இடப்பொருள்
அதிதி-முன்னாளிற்காணாதவன்
திருசியம்-காணுதல் [பவம்
திருஷ்டபோக்கியம் - தெரிந்த அனு
திருஷ்டவாசனை-பிரத்தியட்ச பழக்
அதம்-கீழ் [கம்
நியாமிகை-நியமிக்கை
மார்க்கம்-வழி
மோகம்-மயக்கம்
அத்தியந்தம்-முழுதும்
அவசம்-வசமாதல்
ஆன்மிகம்-உள்ளது
அத்துவா-வழி
துவிதம்-இரண்டு
பந்தம்-கட்டு
துவைதம்-இரட்டித்தல்
ஆசதம்-கேடு
நியதம்-நிச்சயம்
வசனீயம்-சொல்லப்படுதல்
அந்தர்-உள்
பரம்-முன்
அபரம்-பின்
முதிதம்-சந்தோஷம்
அவசிதம்-முடிந்தது
அபாவம்-முன்னில்லாமை
பரிமிதம்-அளவு
லௌகிகம்-உலகசம்பந்தம்
தாத்துவிகம்-தத்துவசம்பந்தம்

உதாசீனம்-சேர்க்கப்படாதது
சோடி-நுனி
உத்தரோத்தரம் - ஒன்றின்பின்னொ
உத்தரம்-பிரதிவசனம் [ன்று
உத்தியோகம்-முயற்சி
உத்திரேசம்-ஆரம்பம்
உபகிருதம்-உதவிசெய்யப்பட்ட
உபக்கிரமம்-தொடங்கல்
உபநயம்-பஞ்சாவயத்தொன்று
ரஞ்சிபபித்தல்-ஆசையுண்டாக்கல்
உபரி-மேல்
உற்கருஷம்-மேல்
உன்முகம்-மேன்முகம்
ஏகதேசம்-ஓரிடம்
ஐதிகம்-கேள்வி
ஓதனம்-அன்னம்
ஔபச்சிலேஷிகம் - ஒன்றுக்கொன்
றுபமித்தல், ஆதார ஆதேய சம்பந்
ஔபாதிகம்-உபாதி [தம்
கலாபம்-கூட்டம்
கலுஷித-சலந்த [னை
கற்பனாகவுரவம் - சற்பனைக்குக்கறப
காரகம்-வினைகொண்டுமுடிதல்
கிராசம்-சவளீகரித்தல்
காருகன்-வண்ணான்
காற்பனீகம்-சற்பிப்பது
தது-அது
கிமபி-எப்படியும்
திதம்-இருத்தல்
கிரது-யாகம் [வன்
கிரத்தியகிர்த்து-கிர்த்தியஞ்செய்கிற
கிர்த்து-செய்தல்
உபலட்சியம்-அனுமானிக்கத்தக்கது
சம்பம்-அசைவு
கணனை-கணித்தல்
சம்பரம்பம்-துவக்கம்
சங்கிராந்தம்-ஒன்றைவிட்டு மற்றொ
ன்றிற் போதல்
சதா } எப்போதும்
சர்வதா }
சத்தசாமர்த்தியம்-வாக்குச்சாமர்த்தி
சத்திய-உடனே [யம்
சாதம்-ஜனித்தல்
சம்ஸ்காரம்-சுத்திசெய்தல்

சமவாயசம்பந்தம்-பிரிபடாதசம்பந்தம்
சதுஷ்டயம்-நான்காயுள்ளது
சமவேத-பிரியாதது
சமுதாயம்-கூட்டம்
சமுதாயி-கூட்டத்தையுடையது
சமுத்தரித்தல்-சொல்லுதல்
சமுத்திரேகம்-முயற்சி
உற்பத்தி-உற்பவம்
சம்பவம்-உற்பவம்
சம்பிரதாயம்-பாரம்பரியம்
சம்மேளனம்-கலப்பு
சலம்-அசைவு
அசலம்-அசையாணம்
சற்காரியம்-உள்ளகாரியம்
சாங்கரியம்-கலப்பு
சாக்ஷாற்காரம்-பிரத்தியக்ஷம், ஒப்பு.
சாதகம்-துணைக்கருவி
சாத்தம்-சூக்குமம்
சாத்திரீயம்-சாத்திர ஒழுங்கு
சாநித்தியம்-சந்நிதிப்படுதல்
சிட்டம்-மேலானது
அபிமதம்-சம்மதம்
மானம்-அளவு
அபிமானம்-பற்றுதல்
வியத்தம்-விளக்கம்
அபேட்சை-ஆசை
பிரஞ்ஞை-அறிவு
பிரத்தியக்ஷம்-காண்டல்
பிரமாணம்-அளவு
மேயம்-அளக்கத்தக்கது
வாகியம்-புறம்
பிரப்தம்-அடையப்பட்ட
மிர்தம்-அழிந்த
கலை-அம்சம்
மூர்த்தம்-உறுப்பு
மோகம்-பிராந்தி
அருத்தம்-பொருள்
அருத்தி-ஆசை
ஊத்த-குறைந்த
அவதி-எல்லை
அவஸ்தை-நிலை
வர்ச்சநீயம்-தள்ளத்தக்கது
அவாந்தரம்-இடையிலுள்ள

விபாசம்-பிரிவின்மை
விகாரம்-விகிர்தி
அளவை-அளவு
அனந்தம்-முடிவற்றது
அனந்தல்-நித்திரை
வீரியம்-சத்தி
அனவஸ்தை-முடிவின்மை
அனுக்கிராகி-அருளுடையோன்
அனுவதித்தல்-பின்னுஞ்சொல்லுதல்
அனுமித்தல்-அனுமானத்தல், நிச்சயித்தல்
ஆகந்துகம்-இடையில்வருதல்
ஆகரிஷித்தல்-இழுத்தல்
சங்கித்தல்-ஆக்ஷேபித்தல்
ஆசத்தி-வன்மை
ஆசிரயம்-பற்றுதல்
ஆதுநிகம்-இப்போதுள்ளது
ஆந்தரம்-உள்
ஆரூடம்-ஏறுதல்
உபேக்ஷை-வெறுப்பு
அபேக்ஷை-விருப்பு
ஆனி-கேடு
உபாதானம்-முதற்காரணம்
ஆதிக்கம்-தலைமை
ஆபாசம்-போலி
ஆப்தவாக்கியம்-ஈசுரவாக்கியம்
பிரதம்-கொடுப்பது
ஆரியன-சிவன்
ஆரோபம்-கற்பிதம்
ஆஸ்பதம்-இடம்
ஆவாரகம்-மறைப்பு
ஆவிர்தி-மறைப்பு
ஆவிர்ப்பவித்தல்-தோற்றுதல்
ஆனந்தியம்-அனேகம்
இகலோகம்-இவ்வுலகம்
பரலோகம்-மறுலோகம்
இரந்தரம்-இடைவெளி
இராகித்தியம்-இல்லாமை
சாகித்தியம்-கூட
இலக்கியம்-குறி

இலவை }
துடி } காலநுட்பம்
காட்டை }

# பாட்டுப் பக்கக் குறிப்பகராதி.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அசலியை | ௧௧௭ | அறிவிலன | ௧௭௩ | உடலினி | ௧௬௩ |
| அங்கித்தம் | ௨௭௩ | அறிவுடல் | ௧௬௯ | உடலின் | ௧௫௧ |
| அசித்தரு | ௧௬௫ | அறிவுறும் | ௧௮௭ | உடல்விடா | ௧௪௫ |
| அசித்தெனி | ௧௬௨ | அறுவகை | ௧௧ | உடற்செய | ௪௦௨ |
| அஞ்செழுத் | ௨௬௫ | அனைத்து | ௪௯௮ | உணராத | ௧௯௧ |
| அண்டசஞ் | ௧௪௮ | அன்னியசா | ௨௧ | உணர்வன | ௪௫௩ |
| அத்துவாமூ | ௮௨ | அன்னியமி | ௪௯௪ | உதிப்பது | ௪௨ |
| அநாதியுட | ௨௭௭ | ஆங்கார | ௧௨௭ | உயிரவை | ௬௪ |
| அநாதியே | ௩௬ | ஆணவந் | ௨௭௭ | உயிரினை | ௧௬௨ |
| அந்தரி | ௨௬௬ | ஆணையால | ௧௧௨ | உயிரினே | ௨௩ |
| அயனரி | ௧௫௬ | ஆதிநடு | ௪ | உயிரொன | ௧௫௧ |
| அயன்றனை | ௮௫ | ஆரண | ௭௫ | உருமேனி | ௮௧ |
| அரசனுஞ் | ௧௧௩ | ஆவதா | ௪௯௦ | உருவருள் | ௭௬ |
| அரனடி | ௧௧௨ | ஆன்மா | ௪௫௭ | உருவினி | ௧௬௩ |
| அரன்விதி | ௧௨௧ | இங்குநா | ௧௧௦ | உருவினை | ௧௭௩ |
| அரிசனம் | ௪௫௦ | இதமகி | ௧௦௪ | உருவுயி | ௧௫௯ |
| அருந்தி | ௩௦ | இந்தன் | ௨௬௮ | உருவொடு | ௯௮ |
| அருமறை-மங்க | ௧௦ | இந்திரிய | ௨௭௨ | உரைதரு | ௨௦௪ |
| அருமறை-முதனூ | ௨௨௫ | இந்நிலை | ௨௫௩ | உரைத்த | ௬௭ |
| அருவமோ | ௭௦ | இம்மையி | ௪௦௧ | உலகமேயு | ௧௮௪ |
| அருவவிகா | ௧௬௧ | இம்மையே | ௨௨௧ | உலகினி | ௭௪ |
| அருவினினு | ௬௦ | இயல்புகா | ௪௩ | உலகினை | ௭௮ |
| அருவருவீ | ௬௧ | இரந்தர | ௧௩௧ | உலகுடல் | ௪௦௮ |
| அருவுருவெ | ௧௬௦ | இரும்பை | ௨௮௩ | உலசெலா | ௯௫ |
| அருளதுச | ௧௮௬ | இருவகை | ௧௭௨ | உள்ளது | ௪௫ |
| அருளினலா | ௧௭ | இருவினைச்செயல்க | ௧௭௩ | உள்ளுண | ௫௫ |
| அருளினனு | ௧௧௩ | | | எங்குந்தான் | ௨௮௦ |
| அவ்வ | ௧௧௮ | இருவினைச்செயல்காணி | ௪௦௧ | எங்குந்தானெ | ௨௫௬ |
| அவ்வுடனு | ௧௫௫ | | | எங்குந்தான் | ௧௬௪ |
| அழிந்தபி | ௪௮ | இருவினைய | ௧௧௬ | எல்லாமாய் | ௧௪௩ |
| அழிப்பிளை | ௬௬ | இருவினையின் | ௯௯ | எவ்விடத்து | ௨௭௯ |
| அழிவிலா | ௨௧௭ | இருவினையெ | ௪௦௦ | எழுமுடல் | ௧௨௨ |
| அளவை | ௧௮ | இவனுலகி | ௨௭௦ | என்னுடல் | ௧௬௭ |
| அறிதருமு | ௧௭௧ | இறதியாங் | ௬௯ | என்னையிப் | ௪௨ |
| அறிந்திடுமா | ௧௮௧ | இறைவனு | ௨௨௭ | ஏதுமுன் | ௩௩ |
| அறிந்திடும் | ௧௫௨ | இறைவனிங் | ௧௦௪ | ஐந்துசாக் | ௧௭௨ |
| அறிபொரு | ௧௯௨ | இறைவனே | ௧௮௧ | ஐந்துசுத் | ௧௩௨ |
| அறியாமை | ௨௩௯ | இறைவன் | ௧௮௩ | ஒருகோட் | ௩ |
| அறிவதைம் | ௧௫௨ | ஈசனுக்க | ௨௮௫ | ஒருபுல | ௧௪௯ |
| அறிவரியா | ௨௮௬ | ஈசனரு | ௬ | ஒருபொரு | ௪௬ |
| அறிவிக்க | ௨௦௨ | ஈண்டுபக் | ௩௬ | ஒருவனே | ௯௨ |
| அறிவிச் | ௪௫௭ | உடலியா | ௧௬௭ | ஒருவனே | ௪௦ |

| | |
|---|---|
| ஒழுக்க | ௧௦௯ |
| ஒன்றதாய | ௧௪௪ |
| ஒன்றதாயி | ௮௭ |
| ஒன்றென | ௯௮ |
| ஒன்றெறு | ௧௯௫ |
| ஒன்று | ௭௯ |
| ஓசைநற் | ௧௨௯ |
| ஓதியுண | ௨௦௯ |
| ஓதுச | ௨௨௪ |
| ஓரிடம | ௪௭ |
| கண்டபொருளை | ௨௦ |
| கண்டவிவை | ௨௬௨ |
| கண்டிடுங் | ௨௬௧ |
| கண்டுணர் | ௧௭௦ |
| கண்ணுத | ௭௯ |
| கரணங்க | ௨௬௦ |
| கருதுகாரண | ௫௧ |
| கருவிகழிந் | ௨௫௪ |
| கருவியாம் | ௧௫௪ |
| கருவியாற் | ௧௮௨ |
| கருவியும் | ௧௮௩ |
| கருவினி | ௧௪௯ |
| கற்றநூற் | ௬௩ |
| காண்டல்வாயில் | ௨௧ |
| காண்பவன் | ௧௧௧ |
| காயத்தினழிவு | ௪௬ |
| காயமொழி | ௨௭௪ |
| காரணவனு | ௪௮ |
| காரியகாரண | ௫௨ |
| காரியமென்ப | ௪௯ |
| காலமேகடவு | ௪௭ |
| குணங்களை | ௧௫௮ |
| குறிகள்வ | ௧௩௧ |
| குறித்தடி | ௨௬௨ |
| குறித்ததொ | ௭௫ |
| கேட்டலு | ௨௩௨ |
| கேவலசகல | ௧௭௨ |
| சகமார் | ௨௩௦ |
| சங்கமங் | ௧௪௭ |
| சத்தசத்த | ௧௯௯ |
| சத்திதன்வடி | ௮௬ |
| சத்திதானுத | ௧௪௧ |
| சத்திதான்ப | ௮௬ |
| சத்தியாய் | ௧௩௯ |
| சத்தியுஞ் | ௯௪ |
| சத்தியேவடி | ௭௩ |
| சந்திரன்வ | ௧௬௧ |
| சந்நிதிகு | ௧௫௮ |
| சலமில | ௨௭௨ |
| சன்மார்க்கஞ் சகமா | ௨௨௮ |
| சன்மார்க்கஞ் சகலசலை | ௨௩௦ |
| சாக்கிரத் | ௨௫௪ |
| சாக்கிரமு | ௧௭௧ |
| சாந்தியா | ௨௧௮ |
| சார்பினிற் | ௪௫ |
| சாற்றியப | ௧௩௦ |
| சித்தமா | ௧௨௬ |
| சித்தாந்த | ௨௨௯ |
| சிவஞானச் | ௨௩௩ |
| சிவஞ்சத்தித | ௧௪௧ |
| சிவஞ்சத்திநா | ௧௩௭ |
| சிவனருவுரு | ௯௪ |
| சிவனையவ | ௨௬௧ |
| சிவன்சீவ | ௨௮௨ |
| சீலமோவு | ௬௨ |
| சீவனுமிச் | ௮௮ |
| சுத்ததத் | ௧௩௨ |
| சுத்தமாமா | ௧௬௪ |
| சுத்தமாம் | ௮௩ |
| சுத்தமெய் | ௨௦௨ |
| சூக்குமங் | ௧௧௯ |
| சூக்குமதே | ௧௬௬ |
| சூக்குமைவா | ௫௬ |
| சூக்குமவு | ௧௬௦ |
| சூரியகாந் | ௨௩௮ |
| செங்கமல | ௨௮௫ |
| செப்பிறுய் | ௧௧௮ |
| செம்பிரத | ௨௮௦ |
| செயல்களே | ௧௦௫ |
| செய்க்கிடுந் | ௧௦௫ |
| செய்தவர் | ௧௦௭ |
| சென்றணை | ௨௮௦ |
| சொன்னவி | ௬௬ |
| ஞாலமதின் | ௨௫௨ |
| ஞானத்தா | ௨௩௪ |
| ஞானநூற | ௨௩௨ |
| ஞானமேயா | ௮௯ |
| ஞானயோ | ௨௮௭ |
| தத்துவஞ் | ௧௯௧ |
| தத்துவமே | ௧௩௪ |
| தத்துவரூப | ௧௩௩ |
| தந்தைதாய் | ௧௦௫ |
| தனுசரண | ௧௪௨ |
| தன்மமோ | ௧௧௫ |
| தன்னியல் | ௧௦௦ |
| தாதமார் | ௨௨௯ |
| தாபரசங் | ௧௧௧ |
| தானஞ்செ | ௧௦௭ |
| தானமியா | ௨௩௩ |
| திரவியமு | ௧௦௬ |
| திருக்கோயி | ௨௮௬ |
| தூலமாமு | ௧௨௦ |
| தெரிந்து | ௧௮௫ |
| தெரிவரிய | ௨௭௭ |
| தேசமிட | ௨௫௨ |
| தேவரிலொ | ௭௮ |
| தோற்பா | ௧௬௭ |
| தோற்றமு | ௪௯ |
| தோற்று | ௬௫ |
| நண்ணிடு | ௭௧ |
| நரர்களாய் | ௧௧௭ |
| நரர்பயி | ௧௪௮ |
| நற்செவி | ௧௨௮ |
| நாடுகளி | ௨௭௩ |
| நாட்டுமி | ௨௬௫ |
| நாயகன் | ௭௯ |
| நிகழ்ந்திடு | ௫௮ |
| நிக்கிரகங் | ௧௦௪ |
| நித்தமா | ௧௨௨ |
| நியதிபின் | ௧௨௪ |
| நிலம்புன | ௪௪ |
| நெல்லி | ௨௭௮ |
| பக்ஷமூன்றின் | ௩௧ |
| படைகொ | ௧௭௧ |
| படைப்பா | ௮௦ |
| பண்டைநற் | ௧௪ |
| பந்தமும் | ௭௪ |
| பரஞான | ௨௭௬ |
| பரம்பிரம | ௨௮௮ |
| பரிதியை | ௧௪௫ |

| | |
|---|---|
| பலவிதமா | ௨0௬ |
| பன்னக | ௧௪௫ |
| பன்னிற | ௨௫௫ |
| பாசஞா | ௨௫௯ |
| பாசிபடு | ௨௫௮ |
| பாலரொடு | ௨0௭ |
| பாவிப்ப | ௧௯௩ |
| பிணத்தினை | ௪௫0 |
| புகையா | ௩௪ |
| புண்ணிய | ௨௪௯ |
| புத்திமற் | ௫௧ |
| புத்திரமார் | ௨௨௩ |
| புந்தியை | ௧௬௮ |
| புருடனே | ௧௭0 |
| புருடன்ற | ௧௪௬ |
| புறச்சமய | ௨௨0 |
| புறம்பே | ௨௬௭ |
| பூதஞசரீ | ௧௧௪ |
| பேறிழ | ௧0௧ |
| பொறிபுலன் | ௧௮0 |
| பொன்மை | ௯௨ |
| பொன்னணி | ௧௬௭ |
| போகியா | ௭௯ |
| போதகாரி | ௧௪௫ |
| போதுநா | ௩௫ |
| மண்டனில் | ௧௯0 |
| மண்ணினிற் | ௬௨ |
| மண்ணுளே | ௧௧௪ |
| மண்புன | ௧௩௧ |
| மந்திரங் | ௨௧௮ |
| மந்திரத் | ௨௮௭ |
| மந்திரமத | ௮௪ |
| மந்திரமத் | ௮௩ |
| மருத்துவ | ௧௧௩ |
| மருவானந் | ௧௬௬ |
| மலமாயை | ௧௪௭ |
| மலமென | ௧௪௪ |
| மறைகளீ | ௧௧௨ |
| மறையிஞ | ௧௬ |
| மனமதுதை | ௧௨௭ |
| மனமதுநி | ௧0௯ |
| மன்னவன் | ௨0௩ |
| மாசறுகா | ௪௯ |
| மாயைதான் | ௭௨ |
| மாயையிற் | ௧௨௩ |
| மாயையினு | ௫0 |
| மாயையின்கா | ௧௪௭ |
| மாயையின்வ | ௧௬௫ |
| மாயையே | ௧௪௫ |
| மாறியிவ் | ௧௧௯ |
| மானுடப் | ௧௪௯ |
| மிக்கதொ | ௨௩௮ |
| மும்மலநெ | ௧௪௬ |
| முற்செயல் | ௪0௨ |
| மூவகைய | ௫௯ |
| மூன்றுதி | ௨௧௯ |
| மூன்றுபக் | ௩௨ |
| மேலைக்கு | ௧0௩ |
| மொய்தரு | ௧௩௫ |
| யாதொரு | ௧௧0 |
| யான்செ | ௨௭௧ |
| வண்டுக | ௧௧௭ |
| வருங்கு | ௧௨௫ |
| வாக்சொ | ௪௨௮ |
| வாயாதி | ௧௨௯ |
| வாழ்வெ | ௧௪௮ |
| விச்சையி | ௪௨௫ |
| விதிப்படி | ௧௨0 |
| வித்தக | ௭௨ |
| வித்தைகள் | ௫௮ |
| வித்தையி | ௨௧௮ |
| வித்தையோ | ௯௧ |
| விந்துவின் | ௫௩ |
| வேதசாத் | ௨௬0 |
| வேதநூல் | ௨௨௬ |
| வேற்றுமைப் | ௫௫ |
| வைகரிசெ | ௫௪ |


பாட்டுப் பக்கக் குறிப்பகராதி

முற்றிற்று.